உ

கடவுள் துணை.

தனிப்பாடற்றிரட்டு

முதற்பாகம்.

இதில்
பலவித்வான்களாற் பாடப்பட்ட மூலமும்
மகாவித்வான் காஞ்சிபுரம்
இராமசாமி நாயுடவர்களால்
செய்யப்பட்ட உரையும்
அடங்கியிருக்கின்றன.

சென்னை-இட்டா,
பார்த்தசாரதி நாயுடு
அவர்களால்
சக்கரவர்த்தி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1915

காபி ரைட் ரிஜிஸ்டர்.

நெ-13. நம்புலையர் தெருவு,— மதருஸ்.

அறிக்கை.

இம் முதற்பாகத்தி லடங்கிய பாடல்களைப் பாடிய புலவர்களின்பெயரும் பாடல்களின் தொகையும் வருமாறு:—

		செய்யுட்டொகை.	பக்கம்.
1	காளமேகப்புலவர்	௧௭0	௧௧௪
2	ஔவையார்	௭0	௯௯
3	ஔவையார், உப்பைமுதலிய எழுவர்	௭	௧௨௮
4	திருவள்ளுவர்	௯	௧௩0
5	கம்பர்	௬௪	௧௩௪
6	ஏகம்பவாணன் மனைவிமுதலியோர்	௭	௧௬௪
7	ஒட்டக்கூத்தப்புலவரும் புகழேந்திப்புலவரும்	௩௫	௧௬௭
8	பொய்யாமொழிப்புலவர்	௬	௧௮௫
9	அந்தக்கவிவீரராகவமுதலியார்	௧௬	௧௮௮
10	சிவப்பிரகாசரும், அவர்சகோதரரும் தந்தையும்	௧௯	௧௯௭
11	சத்திமுத்தப்புலவர்	௨	௨0௭
12	வரதுங்கபாண்டியரும், அவர்மனைவியும்	௨	௨0௮
13	திருவள்ளுவர், ஔவையார், இடைக்காடர், சங்கத்தார்	௪	௨௧0
14	மதுரைச்சொக்கநாதர் முதலியோர்	௭	௨௧௨
15	இரட்டையர்	௧௨	௨௧௮
16	சொக்கநாதப்புலவர்	௪0	௨௨௩
17	பொற்களந்தை படிக்காசுத்தம்பிரான்	௨௧	௨௪௧
18	சவ்வாதுப்புலவர்	௫	௨௫0
19	நமச்சிவாயப்புலவர்	௨௩	௨௫௨
20	சுப்ரமணியப்புலவர்	௧	௨௬௫
21	நையாண்டிப்புலவர்	௪	௨௬௬
22	எல்லிஸ்துரைபாடல்	௧	௨௬௮
23	இராமச்சந்திர கவிராயர்	௨௭	௨௭௯
24	மதுரகவிராயர்	௧௩	௨௮௯
25	ஒப்பிலாமணிப்புலவர்	௨௭	௨௯௭
26	காளிமுத்துப்புலவர்	௭	௩0௮
27	ஷை புலவர் பாண்டியன்மீதுபாடியது	௧௩	௩௧௧
28	கடிகைமுத்துப்புலவர்	௧௧௧	௩௧௭
29	நாகூர் முத்துப்புலவர்	௫0	௩௪௮
30	பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்	௬௪	௩௬௩

ஆக செய்யுள்-830.

கடவுள் துணை.

தனிப்பாடற்றிரட்டு

மூலமும் - உரையும்.

ஸ்ரீ அகிலாண்டநாயகியார் வரப்ரசாதியாகிய

காளமேகப்புலவர்

அவ்வவ்வமயங்களிற்பாடியவை.

———:*:———

காப்பு.

ஏரானைக்காவிலுறையென்னானைக்கன்றளித்த
போரானைக்கன்றுதனைப்போற்றினால்-வாராத
புத்திவரும்பத்திவரும்புத்திரவுற்பத்திவரும்
சத்திவருஞ்சித்திவருந்தான்.

இ-ள். ஏர்-அழகுபொருந்திய, ஆனைக்காவில் உறை - திருவானைக்காவில் வசிக்கின்ற, ஆனைக்கு அன்று அளித்த - யானைக்கு அந்நாளில் முத்தி கொடுத்தருளின, போர்-போர்த்தொழிலில்வல்ல, என் ஆனைக்கன்றுதனை - என்யானையாகிய சிவபெருமானது புதல்வனாகிய விநாயகக்கடவுளை, போற்றினால்-முக்கரணங்களாலும் வழிபட்டால், வாராத - உண்டாதற்கரிய, புத்திவரும்-நல்லறிவுண்டாகும்-பத்திவரும்-(அவ்வறிவின்பயனாகிய) ஈசுவரபக்தி யுண்டாகும், புத்திர உற்பத்திவரும் - நன்மக்கட் பேறுண்டாகும், சத்திவரும் - (நினைத்த கருமங்களை முடிக்கவல்ல) போற்ற லுண்டாகும், சித்திவரும் - (எல்லாக்காரிய) சித்தியுமுண்டாகும். எ-று.

தான் - அசை. யானைக்கு முத்திகொடுத்தது திருவானைக்காவில் இதனை அத்தலபுராணத்தில் விரிவாய்க்காணலாம், சிவபெருமானை யானையென்றதற்கும் விநாயகமூர்த்தி யானைமுகத்தோடு அவதரித்ததற்கும் உதாரணம் அடியில்வருவது; "அரம்பையர்வாழ்த்த வமளியிற் றுயில் கொண், டரம்பயில் கதிரோ னுதயஞ்செய்தபின், விண்ணோர்க்கெல்லாம் விடைகொடுத்தருளிப், பண்ணேர் மொழிமடப் பாவையைநோக்கி, ஓத நீர் வேலிகு ழுஞ்சையம்பதிபுகப், போதுகவென்று போகியவந்நாள், இள மதியணிசடை யெந்தை தன்னருளால், வளமுடன்வழியின் மரச்சாரலி லோர், களிறும் பிடியுங் கலந்ததுகாணு, ஒளிர்மதிச் சடையோ னுமை

முகநோக்கி, ஓர்வழியன்றி மற்றோர் திசைதன்னைப், பாராதேவர் பனிமொழியாயென, வாரார்முலையாள் மற்றுமுண்டோவென, மெல்லியலுமையவள் விரும்பினள்பார்த்தே, அல்லிசேர்குதலா ளரன்முகம்பாரா, இவ்வகையாக வேண்டுமீங்கென, அவ்வகையாலுமழற்குடம்பட்டு, மதகரிபுரித்தோன் மதகளிறாகவும், மதர்விழி யுமைபிடிவடிவமாகவும், கூடிய கலவியிற் குவலயம்விளங்க,நீடியவானோர் நெடுநிலைபோற்றத், தங்குவெண்ணீறுந் தருமமுந்தழைப்பத், திங்கள்மும்மழை யெங்கணும்பெருக, முண்டகமலர்போன் முழுதுஞ்சிவந்த, தண்டையுஞ்சதங்கையு மலம்புதாளிணையும், குண்டலவண்டியுந் தண்டரளமாலையும், மண்டொளிதழைத்த புண்டரநுதலும், முடிவுகண்டறியா முப்புரிநூலும், சுடர்விடுங் கனகத் தோளொருநான்கும், சோதிவண்டரளத் தொடைபுனை கழுத்தும், பூதலம் புரக்கும் பொற்கரிமுகமும், தவளக்கிம்புரி தருமருப்பிரண்டும், பவளத்தொளிவாய் பைந்துவரிதழும், இமையாமுக்கணு மிருதழைசெவியும், அமையாநிலவுமிதழவிர்சடைமுடியும், அந்திவண்ணமு மங்குசபாசமும், உந்திச்சுழிமே லுதரபந்தமுடன், ஐங்கரக்கரிமுகன் வந்தவதரித்தலும், பொங்கரவணிந்தோன் புதல்வனைநோக்கி, வானோர் மண்ணோர் வந்து வழிபட, ஆனோர்வல்வினை யாசறவகற்றித், தண்டுளவோனயன் சதமகன் முதலோர்க், கின்றுமுதலிறையா யிருத்தியென்றருளித், தெய்வநாயகியாந் திருந்திழையுமையுடன், மைவளர்சோலை மாநகரம்புகுந், தமையாக்கூட்டத் தநேகங்காலம், இமையாமுக்கண் ணிறையிருந்தருளினன்" இது அகத்திய முனிவர் அருளிச்செய்தது. போர் ஆன் ஐ கன்று எனப்பிரித்து போரில்வல்ல இடபத்துக்குத் தலைவனாகிய சிவபெருமானுக்குப்புதல்வன் என் றுரைப்பினு மமையும். இவ்வாறன்றி, ஆனைக்கன்றளித்த ஆனைக்கன்றுதனை, என்பதற்கு ஆனைக்கன்றாகிய சிவபெருமான் ஈன்ற ஆனைக்கன்றாகிய விநாயகக்கடவுளை என்றுரைப்பினுமாம். விநாயகக்கடவுளின் அவதாரத்தைப்பற்றி இன்னும் வேறுவகையாகிய கதைகளுமுண்டு.

—:*:—

செய்யுளகராதி.

—0—

பாட்டு.	பக்கம்.
அ	
அக்குவடம்புனை	
அங்கம்வளர்க்க	213
அங்காவித்தாரா	368
அச்சங்கபாணி	355
அச்சுதனளிப்பனில	200
அஞ்சக்கஞ்சனங்	376
அஞ்சம்பிறு	295
அஞ்சவென்ற	208
அடகெடுவாய்	241
அடல்கொண்டெழுகுலப்ப	276
அடிசிற்கினியாளே	134
அடிதங்கச்சி	382
அடிநந்தி	25
அடிபட்டீர்	226
அடுத்துவருந்தொண்டனுக்	202
அட்டாவதானமுந்	230
அண்டத்தமரர்	409
அதிமதுரமென்றே	580
அந்தன்கண்ணுக்கு	374
அத்திக்குதையன்	356
அத்திதனையூர்	359
அத்திமுதலெறு	128
அத்திரம்வேலாவலய	283
அந்தங்கரும்பள்ளி	413
அந்தநாள்வந்திலை	297
அந்தராசல	377
அந்திக்கார்வந்து	236
அந்திராமனமு	346
அந்திவெடிமுல்லை	290
அப்பனிரந்துண்ணி	47
அப்பாகுமரகோட்	37
அப்பிலேதோய்த்தி	307
அப்பூருஞ்செஞ்சடை	41
அம்பமாமுனி	392
அம்பலவாவின்னொரு	239
அம்பிகையான்	199
அம்பேந்துகையானவன்	55
அயிலமர்பொற்	285
அரகதத்தை	382
அரகரதிருச்சிற்றம்பல	34
அரகராசலம்	385
அரசனகளங்க	147
அரமியஞ்சே	334
அரவங்கரந்ததோ	301
அரனவனிடத்திலே	198
அராவுக்கேகணை	388
அரிசிராவணத்தா	380
அரிமருகாகருணாலயனே	287
,,	284
,,	285
அரியதுகேட்கின்	122
அருந்திறனண்டமெலா	87
அரும்பாக்கி	419
அரும்பாலகாமுனம்	410
அரைத்தசந்தனம்பொ	334
அரையின்முடியி	36
அலங்கலணிமார்	142
அல்லையான்கவடுபடா	251
அல்லிமலர்ப்பண்ண	206
அல்லைமாலைமரு	389
அவிசெட்டிவாங்கு	252
அழகிசக்கதேவி	366
அற்பீன்றதாயென்று	401
அற்றதலைபோக	104
அனங்கலக்கணம்	328
அனங்கனம்பனந்	383
அன்றையிலும்	149
அன்னவயல்சூழ்	75
அன்னைவயிற்றி	129
ஆ	
ஆகத்திலே	395
ஆசுகவியால்	220
ஆடல்புரிந்தா	35
ஆரோடேபின்னை	49
ஆடிக்குடத்தடையும்	18
ஆடுங்கடைமணி	171
ஆடுந்தியாகரே	54
ஆடெரிபடர்ந்த	297
ஆட்டுக்கிசைந்தவர்	78
ஆணிவரையுறலா	23
ஆண்டதனாலெனை	205
ஆயனுக்குக்கண்மூன்று	70
ஆயன்பதியில்	110

பாட்டு.	பக்கம்.
ஆய்முத்துப்பந்தலில்	398
ஆரசந்திரணத்து	343
ஆரணனே	285
,,	285
ஆராயமுத்தமிழா	83
ஆரார்தலைவனை	138
ஆரிச்சந்தரயம்	354
ஆர்க்குங்குளிரும்	312
ஆர்த்தசபை	117
ஆலங்கிடக்கு	235
ஆலங்குடியானை	61
ஆலெங்கேயெங்கே	417
ஆலைப்பலாவாக்க	125
ஆவினமழைபொழிய	279
ஆழியானுழி	146
ஆழியான்பள்ளி	136
ஆழிவாய்ச்சத்தம்	301
ஆளுக்கேயழகனெங்கள்	327
ஆறும்பதினாறுமா	49
ஆறுபேருக்கற்றடி	229
ஆனாரிலையே	58
ஆனைகுதிரைதரு	74
ஆனையுரித்து	397
இ	
இக்கோடிவளைப்ப	340
இடவோர்சிறி	300
இட்டங்கட்டிய	391
இட்டடிநோவ	154
இட்டமுடனென்	128
இத்தரமேசத்துணிவார்	124
இந்தக்காவனம்	371
இந்தவிடைநிற்	239
இந்திரச்செல்வன்	358
இந்திரன்கலையா	228
இந்தமுடிக்குஞ்சடை	97
இந்தோதிலகநுதல்	34
இந்நாளிதுவிளையும்	157
,,	149
இப்பாளப்	342
இம்பர்வானெல்லை	188
இம்மென்னுமுன்னே	10
இரவலனேயுனக்கில்லாத	278
இரவலாளரேபெருந்திரு	184
இருதனங்கனி	384
இருந்தவளைப்போன	145
இருந்தாரைகேள்க	82
இருந்துமுகந்தி	103
இருபந்தந்தமெ	371
இருப்போமென்றாலு	236
இருமிருமென்றசொன்	133
இருளையிருள்விழுங்கி	156
இலகுபுகழாறை	165
இலக்கணக்கவிஞர்	111
இலக்காரமணியாள்	342
இல்லெனுஞ்சொல்லறியாத	189
இழையொன்றிரண்டு	174
இனியதுகேட்கின்	121
இன்றெக்கவேண்டி	199
இன்னங்கலிங்கத்	171
இன்னங்கலைமகள்	196
ஈ	
ஈதலறந்தீவினைவிட்	124
ஈயாதபுல்லரிருந்	243
உ	
உங்களிலேயாரொருவன்	186
உடுத்ததுவு	26
உத்திரத்துக்கோர்நா	60
உபையராசியை	375
உமையாளுநீயுமொ	144
உம்பரைவாழ்	234
உருகியுடல்கருகி	155
உரைக்கத்தத்துவத்து	352
உரையேனுன்பேரை	404
உலங்கொண்ட	292
உலைக்குரியபண்ட	139
உள்ளக்கவலையெலாம்	408
உள்ளங்கால்வெள்ள	71
உள்ளவழக்கிருக்க	117
உனக்கின்றியான்	411
உன்னக்காவடி	353
உன்னுயிருமென்னுயிரு	340
ஊ	
ஊரைச்சுடுமோ	418
எ	
எங்கண்மடத்துக்	86
எடுத்தசனனங்க	396
எடுத்துவரிமுறத்தி	336
எட்டெ[illegible]	181

பாட்டு.	பக்கம்.
எட்டேகாலட்சண	105
எட்டொருமா	45
எண்ணாயிரத்தாண்டு	119
எண்ணீர்மைனா	314
எந்தவூரென்றி	132
எப்படியெப்படி	408
எல்லப்பனம்மை	226
எவ்வுயிருங்காக்க	130
எழுத்தாணிதுபெண்	86
எனக்குடந்தையான்	328
என்கவிகை	141
என்றுபெறுவே	177
என்னவாவிதுரா	366
என்னிலங்குச்சல	438
என்னுடையபேரும்	322
என்னைக்கொடு	48
ஏ	
ஏகாம்பரரிடப்பேர்	366
ஏசியிடவினியா	113
ஏதிலேவறியவர்க்	371
ஏமிராவோரியென்பாள்	67
ஏய்ந்ததனங்க	92
ஏராட்டும்பூந்தொங்கன்	416
ஏரானைக்காவி	1
ஏவைக்குங்கூன்	412
ஏழாளையடித்தபுலி	65
ஏழேழுசங்கத்	259
ஏறுகட்டியகொட்டி	97
ஐ	
ஐம்பொருளுநா	210
ஐயநின்சென்னிமிசை	197
ஐயரென்றுரைத்	131
ஒ	
ஒட்டாகவொட்டியும்	416
ஒருகொம்பிருசெவி	107
ஒருபாதிமால்கொள	409
ஒருவர்க்கிடமாயுக	238
ஒருவாணுதல்	3,6
ஒன்றிரண்டுமூன்று	16
ஓ	
ஓகாமாவீதேர	25
ஓங்கியராமாமதி	329
ஓடுஞ்சுழிசுத்த	21
ஓடுமிருக்கு	20
ஓராராவுண்டுமி	347
ஓரானைவனத்தே	275

பாட்டு.	பக்கம்.
ஓர்தட்டிலேபொன்னு	242
க	
கஞ்சமுகையுங்	57
கஞ்சரஞ்சப்பெடை	3-5
கஞ்சிகுடியாளே	367
கட்கரிக்குமதனை	369
கடந்தூங்கும்வேழ	315
கடல்கிழக்குத்தெற்கு	134
கடம்பவனச்சொக்க	73
கடம்பற்கொ	89
கடியுண்டநெடு	214
கடுக்கைமுடியானே	89
கட்டியடிக்கையா	22
கணிகண்ணன்போ	216
கண்டக்காற்கிட்டும்	68
கண்டாயோபார்	161
கண்டீரோகாணம்	156
கண்டீரோபெண்	52
கண்ணபுரங்கோயிற்	70
கண்ணணிடுங்கறி	69
கண்ணுழையாக்காட்	129
கத்துகடல்சூழ்	44
கந்தமலர்ப்பிரமன்	185
கந்தரப்புயருஞ்	377
கம்பத்தானைகடை	76
கம்பமதகடகளி	84
கம்மாளனங்கி	71
கயக்காவிநாறுங்	281
கயல்வாய்த்தகண்ணி	206
காஞ்சொன்னங்கண்	409
காண்டகண்டத்	169
கராமடியச்சக்கரந்	317
கரிவாய்பொரி	40
கரியதனையே	40
கரியாய்ப்பரியா	113
கரியொன்றுபொன்	82
கருக்கோட்டை	319
கருங்காலிக்கட்டை	120
கருங்குளவிகுரை	118
கருணையாலிந்த	108
கருத்தவாவிலை	350
கருந்தலைசெந்தலை	96
கருப்பைக்குள்	128
கரைக்குவடக்கிரு	158
கலக்கைவாளியை	344
கலக்கடமானத்	222

பாட்டு.	பக்கம்.
கலங்கற்	62
கலவளைக்குண்டிகள்	356
கலையான்முலை	166
கலைவாணிநீயு	167
கல்லங்காடுதனி	152
கல்லடிக்குமுனி	249
கல்லாதவொருவனை	278
கல்லாலயமாய்	283
கல்லைத்தான்மண்	280
கல்வியுடையீர்	127
கவளவளைக்கு	358
கல்விகரைகண்ட	364
கவியாகுமாதினைப்	415
கவுரிகமலா	201
கழியுந்தியகடலுப்பென்று	9
கள்ளிக்கேன்முள்வேலி	281
கற்றதுகைமண்	114
கற்றனயின்னுவதென	327
கனகனங்கம்பிள	369
கனதனந்தன	370
கனத்துவரைபோர்	329
கன்றுதொட்டு	818
கன்னபுரமாலே	73
கன்னன்வெங்கடேச	363
கன்னியுன்றன்	332
கா	
காக்கைக்காகாகூகை	87
காசினியிற்பிள்ளை	124
காணக்கண்கூசு	103
காணாமல்வேணதெல்லா	101
காதமிருபத்து	149
காப்பிட்டபிள்ளை	234
காம்புவனம்புக்க	315
காய்ந்துசிவந்தது	243
காரொன்றுபேர்	66
கார்படைத்த	293
காலப்புயனிகர்	158
காலனையுங்காமனை	46
காலாற்படியளக்கு	72
காலயரவிந்தங்	419
காலையிலும்வேலை	66
காலையிலொன்றுவர்	114
காவலனெங்கள்	61
காவொன்றுங்கை	260
காளத்திகண்டத்தே	240
காளைமுகிற்குல	312
காணொர்தேணொந்தேன்	99
கான்றெண்டனிட்ட	400
கி	
கிட்டாதபெண்குடிமார்	262
கிளையாளன்சேதுபதி	250
கு	
குடகர்குணகடலென்பர்	162
குடக்கோடுவானெ	203
குட்டுதற்கோபிள்	250
குண்டைக்கொருத்த	413
குதியானமனை	398
குமிண்டியும்பண்	150
குரங்கனலின்வீழ்ந்	42
குரங்கிக்காய்ந்திளந்தெ	341
குருவடியைவணங்கும்	332
குழற்காலரவிந்த	303
குறுமுனிவன்முத்தமிழும்	210
குறையுளாரெங்கி	162
குன்றுங்குழியும்	229
கூ	
கூடல்புனைவாயில்	67
கூத்தாள்விழி	48
கூரம்பொறுத்த	313
கூறியவாளா	102
கூவராயன்றியாகங்	222
கூழைப்பலாத்த	103
கூற்றுவளைவின்ம	97
கூன்கலைநிலாவின்குளிர்	264
கெ	
கெஞ்சுமாதங்கமும்	341
கொ	
கொக்குப்பறக்கும்	293
கொங்குதேர்வாழ்	212
கொங்குலவுந்தென்றில்லை	53
கொங்கைகும்பகோண	361
கொடிக்கத்தத்தும்மலே	346
கொடியதுகேட்கின்	120
கொட்டமிமருவலர்	324
கொட்டைப்பாக்கு	39
கொம்பிலையேதீனி	22

பாட்டு.	பக்கம்.
சொற்கையான்மாறன்	138
கொன்றைமலர்	70
கோ	
கோக்கண்டுமென்னர்	178
கோரத்துக்கொப்போ	169
கோலெடுத்துக்கோத்	263
கோளரவேந்துலகிலிந்த	193
கோளரிருக்குமூர்	75
ச	
சங்கதாதரளங்கால்	375
சங்கநிதியென்ன	364
சங்கரர்க்குமாறுதலை	31
சங்கராவையகமும்	348
சங்கறுப்பதெங்கள்	213
சங்குதீர்த்தம்	37
சடங்கலாமகட்கி	831
சடம்பழுக்கும்	316
சட்டியிலேபாதி	51
சண்டப்பைக்	129
சண்டாளி	104
சதுராங்கர்	67
சத்தம்பயிலும்	172
சத்தியைந்தையும்	80
சத்திக்கும்பணி	390
சந்தனத்தைவிடுக்கு	348
சந்தானமேநிகர்க்கு	320
சந்திரனுக்குடனூனம்	230
சம்புதைக்குங்கரு	354
சரந்தராதரங்	387
சராஜசம்புவை	311
சருக்கரையமுதுகனி	338
சலமேதோசங்கந்தா	274
சற்றேபருத்த	154
சா	
சாதியிலேதொண்ணூற்	132
சாரங்கபாணியா	76
சி	
சித்திரமாமண்ட	290
சித்திரமுங்கைப்பழக்கம்	100
சிந்தாமணிசங்கு	236
சிரப்பான்மணி	110
சிரம்பார்த்தான்	137
சிரித்துப்புரமெரித்	60
சிறுமையின்மதி	283
சிறுவனளைபயறு	15
சின்னஞ்சிறுபிள்ளை	247
சீ	
சீதமாரம்பனந்தன்	380
சீதாரவிந்தபுயன்	307
சீமானுநாமகள்	304
சீரங்கத்தாரும்	59
சீராடையற்ற	194
சீரிலங்குமாடகூட	274
சீர்கறுத்தமுகில்	223
சு	
சுண்ணாம்புதீட்ட	411
சுத்தபாற்கடலினடு	16
சுரதந்தனிலிளைத்த	101
சுருக்கவிழ்ந்த	42
சுரும்பேய்க்கும்	313
சுற்றுங்கருங்குளவி	116
செ	
செகத்தாயெனவந்த	402
செகமதின்மிக்க	403
செங்கைவரிசிலை	267
செட்டிமக்கள்வாசல்	150
செந்தமிழ்ச்செல்வ	268
செந்திற்குமாரன்	299
செப்பத்திலுன்னை	408
செம்மான்கரத்தன்	115
செய்யாதசெய்த	76
செய்யுட்கிடைமறி	33
செருத்தாக்குமதப்புலி	386
செருப்புக்குவீரர்களை	23
செல்லப்பன்கச்சி	252
செல்லாரும்பொழி	226
செல்லுக்குமல்லுக்கும்	357
செல்லன்புதல்வன்	178
செற்றலரைவென்ற	37
சென்றலந்தார்சேர்	361
சென்னிமுகமாறுள	27
சே	
சேதுபதிகாத்தமுத்து	256
சேமங்குருகையோ	211
சேய்கொண்டாரும்	203
சேய்மொழியோதாய்	211
சேரலர்கோன்	108

பாட்டு.	பக்கம்.
சேராதவேடன்	415
சேராநாளெல்லாம்	295
சேற்றுக்கமலவயல்	141
சேனைத்தழையாக்கி	104
சொ	
சொலங்கக்காகொண்ட	387
சொல்லாமலேபெரியர்	111
சொல்லுக்கினிய	233
சொல்லுமல்லும்	191
சொன்னசந்தலிக்கலி	179
சொன்னமன்னமாடை	282
சோ	
சோகாமா ஏவாதா	39
சோதிச்சவிரிவிழி	232
சோமன்புரப்படத்	62
சோனையுங்காத்து	195
ஞா	
ஞாலத்தெவ	257
ஞானசபைகனகசபை	37
ஞானவானென்று	131
த	
தங்கள்குலதீபமென	365
தங்கடனமிருக்க	300
தடக்கடக்கயலோ	352
தடக்கடலிற்பள்ளி	41
தடக்கயத்தலரெல்லா	343
தடக்கும்பகிம்புரி	260
தடங்கொண்டகல்வில்லின்	304
தடத்தத்தளிச்சிறுநாண்	357
தடிக்கவில்லைமுலை	389
தண்டமிழ்தேருத்த	361
தண்டங்கூர்	64
தண்டாமலீவது	117
தண்ணமுதபாஷித	160
தண்ணீருங்காவிரி	105
தந்தப்பாதுகடீர்	170
தந்துகந்துகந்	173
தந்தைபிறந்திறவா	57
தமிட்டராணுவம்பெருக்	321
தரகலாதனங்கன்	372
தரும்பலிக்குமருவலரை	380
தரைகண்டமட்டும்	245
தளையவிழ்நாண்மலை	147
தற்கோலிப்பூசற்பா	183
தனதுமெய்க்கு	391

பாட்டு.	பக்கம்.
தனதனுகநடாத்தி	368
தனம்பொ	294
தன்னுடன்கூடப்பிறந்த	182
தா	
தாண்டுபரிதூண்டு	363
தாண்டித்திரியும்	195
தாண்டியொருத்தி	53
தாதிதூதோ	57
தாயோடறுசுவை	125
தாலமுற்றும்வாழ்	365
தானவாரணமாமுலை	345
தி	
திகிரிவட்டைக்குடை	180
திக்குளெட்டுக்கயங்	181
திங்கட்குடையுடை	109
திங்கணுதலார்தி	543
திடக்குவடககடக்	41
திடவாரண	285
திமிரமருதடலாதி	285
,,	282
திரண்டிமையோர்	80
திருகலகுவாய்ப்பறந்து	337
திருக்கரங்கம்வகுக்க	323
திருக்குடந்தையா	88
திருந்தலரிகலையடக்	335
திருந்தாடரவணி	71
திருந்துதமிழிலக்கண	204
திருநெடுமால்	170
திருமாலையம்புதொட்ட	320
திருமாலவாகனநாவா	92
திருவிருக்குமணிமார்ப	331
திரைக்கலைக்குத்தை	366
தினங்கொடுக்கும்	244
தினைவிளைத்தார்	146
தீ	
தீத்தானுன்கண்ணிலே	63
து	
துங்கவரைமார்பா	289
துங்காதராதலகெ	231
துடித்துத்தடித்துத்	88
துடியார்கரத்தும்	400
துணையானநாரி	396
துதிவாணிவீரம்	87
துப்பரையுமரகதத்தின்	225
துயிலையிலேயிடர்	233

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
துரையத்தந்திதலை	345	நிட்டூரமாக	112
துளைபடுமாமா	331	நிணம்போதத்தள்ளி	412
தெ		நிருதராகவனந்	351
தெந்தனம்பேசுங்	339	நிலமாதுதிலகனெ	322
தெருமுட்டப்பாளை	42	நிலமேழளந்த	414
தெள்ளுதமிழுக்கரு	361	நிலவாய்விளங்குத	19
தென்னவன்றென்ன	171	நிலைதந்தார்	167
தென்னவாமீனவா	164	நில்லுநில்லென்று	133
தென்னெனுக்குஞ்சோலை	81	நிழலருமைவெய்யிலிலே	123
தே		நிறையவுளதோ	202
தேங்குபுகழாங்கூர்	218	நின்றுபடியளக்கு	393
தேடரிதாய்மாறுஞ்	282	நீ	
,,	283	நீகாவிதுராநெ	367
தேட்டாளன்	244	நீச்சாற்	91
தேட்டேதுமில்லை	407	நீரிலுளதா	24
தேருளைப்புரவி	145	நீரெலாஞ்சேற்று	150
தேரையார்செவ்	123	நீரோபிறவா	36
தேன்பொழிந்தவாயான்	188	நீளத்திரிந்துழன்றாய்	291
தொ		நீறுவாய்நெற்றி	30
தொடுக்கவத்திரம்	380	நூ	
ந		நூனெனிலோகோல்	115
நகத்துவாரயிலாங்கண்	349	நூற்றுப்பத்தாயிரம்	112
நங்கைபயணநம	239	நெ	
நங்கையொருத்தி	238	நெருப்புக்கறுக்க	235
நச்சரவம்பூண்டதில்லை	43	நெல்லைச்சொன்னு	308
நஞ்சிருக்குந்தோலுரிக்கு	28	நெற்படிவிளைகழனி	160
நஞ்சுகுடிகொண்ட	63	நே	
நமக்கின்றொருவர	397	நேசனைக்காணு	123
நம்பரக்கரை	374	நேசித்துவந்த	243
நம்பனடியவர்க்கு	102	நேற்றிராவந்தொ	32
நல்லதொருபுதுவை	50	நேற்றிராவந்தநிலவு	351
நல்லம்புலியணிந்தோன்	306	நை	
நல்லாளையிடமருவு	227	நையும்படியேநாங்கொற்ற	182
நற்றமிழ்வாணர்க்கு	363	ப	
நற்றேரணவீதி	418	பகருங்கான்மேட	14
நா		பங்கஜமேன்மேவிய	192
நாட்டிற்சிறந்ததிரு	248	பங்கப்பழனத்துழு	175
நாட்டுக்குளாட்டுக்கு	53	பங்கயமுமேரிக	263
நாணியென்பதை	204	படங்குமாதங்க	378
நானென்றனஞ்சி	220	படுபெருந்துஞ்சு	147
நாராயணனை	65	படைத்தாமவேற்கண்	259
நாராய்நாராய்	207	பணியாரந்தோசை	193
நானேயினியுன்னை	173	பண்காணிந்தமிழ்ப்புல	227
நி		பண்டனைப்பண்	231
நிட்டையிலே	203		

பாட்டு.	பக்கம்.
பண்ணப்பம்பரமன்	353
பண்டோதரிய	402
பண்புளருக்கோர்	67
பதிவீரசம்புவென்று	222
பத்தாவுக்கேற்ற	104
பத்துக்கொண்டன	168
பரத்துவசத்துரு	321
பரப்போதஞால	148
பருதியாகமகமாக	353
பருதியானவரீரா	392
பருப்பதங்களொவ்	256
பழியும்புகழு	180
பழுத்தான்மரத்	308
பறவாததும்பி	84
பனிப்பகையும்	156
பா	
பாகப்பாவருமை	319
பாங்குபெறுந்திரு	73
பாங்குயர்பளிக்குகே	253
பாடல்பெறுனே	114
பாடுந்தமிழ்க்குச்	401
பாட்டானதைவண்டு	304
பாணர்க்குச்சொல்	27
பாணன்மதுரைப்	140
பாணியிலேபுள்ளிமான்	394
பாண்டியனைப்	140
பாண்டியன்மாலே	195
பாண்டியன்ருரா	302
பாரவிளநீர்சுமக்க	237
பாரளக்குந்தூது	72
பாரார்சொல்லாரார்	263
பாரிபறித்தபறி	106
பாருரறிய	79
பாரைச்சுமந்தபட	137
பாலேயிலாள்பின்னங்கால்	251
பாளேமணம்	85
பானுகிரணம்பார்	251
பி	
பிள்ளேவயதினி	224
பீ	
பீலிக்குஞ்சரங்	388
பு	
புகார்மன்னன்பொன்	107
புடவிகடகடென	326
புத்தியின்பேர்க்	359
புரசைவடமலேயப்பா	232
புரந்தனேமாலே	305
புராதனமான	221
பலவடரயி	384
புல்லுக்கட்டும்	270
புவிக்காதிபதியிளசை	325
புள்ளிருக்குந்தார்மார்	176
பூ	
பூங்கமலன்கலேசை	396
பூசத்தந்திருலே	347
பூசுகந்தந்தனத்	381
பூணித்திலத்துப்புயல்	141
பூத்தூக்கியுண்டவ	362
பூநக்கியாறுகால்	47
பூமாதிருந்தென்	261
பூரிக்குஞ்சர	349
பூவலாரைமுதலான	376
பூவிலயனும்	130
பூவேந்தர்முன்போற்	186
பெ	
பெரியதுகேட்கில்	121
பெரியவிடமேசே	19
பெருமாளுநல்லபெரு	43
பெற்றுளொருபிள்	141
பே	
பேயல்லவோவொரு	401
பேரரசர்தேவிமார்	136
பொ	
பொதியிலகத்தியனுய்	185
பொய்யருக்குப்பொய்	166
பொரக்கலக்கமுற்ற	323
பொரடக்கயம்	414
பொரவிசயஞ்செலு	326
பொருகோட்டுவாரி	258
பொருந்தமரங்கச	337
பொருப்புக்குஞ்சரி	381
பொருவதற்குச்சிலே	338
பொருவாசிக்கொரு	325
பொல்லாதமூர்க்கரு	246
பொன்போலுங்கள்ளி	187
பொன்போலுங்கூடற்	404
பொன்மாரிபெய்யுமூர்	109
பொன்னஞ்சடையறுகு	64
பொன்னனேவாளரக்க	94
பொன்னுகத்தார்பணியு	413

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பொன்னூர்மருமத்தன்	309	மாங்காட்டுவேளா	219
பொன்னிலங்கை	333	மாங்குயிலால்	168
பொன்னேபொருந்த	407	மாசற்றிடுதிருமேனியில்	270
பொன்னேமலைய	403	மாடில்லான்	122
போ		மாடுதின்பான்	66
போசநீயோர்	418	மாடேறுதாளும்	235
போதத்தைமேவும்	310	மாட்டுக்கோன்	52
போதாசிவகுருநாதா	233	மாதங்கங்கோடி	321
போதன்னரியிமை	285	மாதமந்திரணம்	372
போந்தவுதாரனுக்கு	125	மாதரணிமென்முலை	191
போமெனவுரைத்தீர்	133	மாதர்க்கிதங்கவி	393
போலநிறமாவார்க்கு	68	மாதாவாவின	388
போற்றினும்போற்றுவர்	148	மாதாபிதாவு	223
		மாதாம்படியுண்டு	399
ம		மாதானைவேந்தர்க்கு	355
		மாந்தையிலேவாழு	298
மங்கையொருபங்கர்	136	மாப்பைந்தார்க்கல்ல	165
மஞ்சலக்கணங்	390	மாமனுக்குமக	386
மஞ்சுமஞ்சுங்கை	262	மாயனூர்போற்றும்	44
மட்டாருந்தென்களந்தை	417	மாயன்றயின்றது	26
மட்டார்குழலங்க	405	மாவாரிமுத்தம்	192
மட்டுப்படா	157	மாலைமணிமுடி	329
மண்ணென்றமண்டல	399	மாறுஞ்செனன	283
மண்டலத்தினூம்	66	மாவுறங்கின	163
மதமுறுசிறு	283	மானமேநண்ணு	88
மதிமலிபுரிசை	213	மானவனுனந்த	113
மதியாதார்முற்ற	115	மானிற்குமோ	172
மதுரமொழிநல்	99	மான்பிடித்தீர்	255
மதுமேவுகுவளை	291	மி	
மய்க்கணையான்	159	மின்னமருங்கொடி	30
மய்வடிவக்குழலியர்தம்	155	மு	
மருகிருக்கும்	91	முக்கட்பராபரை	405
மறந்தாகிலுமரை	249	முக்கண்ணனென்று	32
மற்கொண்டதிண்	152	முக்காலுக்கேகாமுன்	46
மற்றொருப்பிலாக்கொடை	316	முடிக்குமருப்புக்கி	356
மன்னவனுநீயோ	149	முட்டத்துப்பன்றி	302
மன்னன்வெங்கடேசு	360	முத்திருக்குங்	17
மன்னீரிலேபிறக்கும்	20	முத்தெறியும்	108
மன்னுதிருவண்ணு	38	முந்தவிளையோன்	184
		முந்நான்கிலொன்று	58
மா		முலையுங்குழலுமுளைப்	302
		முற்கரையப்பரை	247
மாகத்தத்தும்புகழ்	261	முற்றுதகாஞ்சியினு	55
மாகமழைக்கரன்	309	முனசனங்கை	378
மாக்கைக்கிரங்குங்கு	81	முன்னநின்னனனை	247

பாட்டு.	பக்கம்.
முன்னமொருதமிழ்ப்	205
முன்னூட்டுதவமுனி	166
முன்னுளிருவர்க்கு	190
முன்னனகூப்பிட	396
முன்னேகடி	49
முன்னேயிரண்டு	237
மூ	
மூங்கிலிலேயொளித்	272
மூச்சுவிடுமுன்னமே	9
மூடர்முன்னேபாட	218
மூப்பான்மழுவு	45
மூவர்கோவையு	126
மூவேந்தருமற்று	246
மூவொன்பதென்பது	294
மெ	
மெச்சுபுகழ்வேங்கட	14
மெய்க்கேயணியும்	395
மெய்யன்வெங்கடேசு	362
மெய்யாரப்புவிகாண	254
மெய்யிலேயொரு	225
மெலக்கணக்கா	333
மே	
மேலாடையின்றி	268
மேவினுடனேவிடி	240
மேழிபிடிக்குங்கை	151
மேற்குப்பவளமலை	135
மேற்பார்க்கமைந்த	125
மை	
மைக்கார்குழற்	306
மைப்போதகமும்	261
மையூருங்கண்ணுற்	301
மோ	
மோட்டெருமை	144
மோனமுத்தமிழ்	178
யா	
யாக்கையெனும்	209
யாவருக்கும்ரஞ்சனை	29
வ	
வஞ்சகத்திலொன்று	273
வஞ்சகர்பானடந்தலை	280
வடக்குத்திசைபழ	126
வடவைக்கனலை	190
வடிகொண்டசெந்த	403
வட்டமதிபோலிருக்	161
வணக்கம்வருஞ்சிலநேரம்	269

பாட்டு.	பக்கம்.
வண்ணங்கரியனென்	30
வண்டமிழைத்தேர்ந்த	127
வண்டாங்கிசைபயில்	310
வண்டிட்டகூந்தலு	406
வண்டுண்டியதோ	229
வண்டுறைசோலை	258
வந்தனந்த	192
வந்துவாரவை	379
வம்பிறைக்குங்கடம்	272
வரகரிசிச்சோறு	112
வருக்கைநறுங்க	216
வருதுகட்டுமுட்டே	373
வரைத்தூற்று	335
வல்லரியாயுற்றிட	33
வழக்குடையானிற்ப	118
வழிமேலவிழிவைத்து	242
வளவனைநேராக	318
வள்ளலெனும்பெரிய	50
வள்ளிகொண்டான்	268
வனக்குந்தளவஞ்சி	311
வா	
வாசக்காந்தண்	379
வாசமலர்மடந்தை	162
வாட்டானைத்தென்ன	143
வாணன்புகழ்க்கெல்லை	143
வாணன்பெயரெழுதா	140
வாணியன்பாடிட	79
வாதக்காலாந்தமக்கு	59
வாதக்கோனானையென்றான்	116
வாதமணரேறியது	35
வாய்த்தவயிரபுர	185
வாரணங்களெட்டும்	15
வாரிக்களத்தடிக்கும்	17
வாரிட்டுவிம்மி	265
வாலெங்கேநீண்ட	8
வாழ்த்ததிருநாகை	65
வாழ்நிலைசேர்	306
வானமுளதா	119
வான்பணிந்தால்	394
வான்குருவியின்	100
வி	
விகடத்தந்தி	358
விக்காவுக்காவி	183

பாட்டு.	பக்கம்.
விடங்காட்டி	305
விண்ணுக்குமாமதி	411
விண்ணீரும்வற்றி	77
விண்ணுக்கடங்காமல்	15
விண்ணுக்குமண்ணு	248
விண்பட்டகொக்கு	179
விதுவையம்பதியோ	264
வியந்தநிசாசரணு	257
விரகரிருவர்	106
விரவலராய்வாழ்வாரை	80
விரித்தான்சிகை	409
விருத்தாப்பாகவித்	339
வில்லம்புசொல்லம்பு	160
வில்லாலடிக்க	90
வில்லைவளையாதே	299
விழுந்ததுளியந்தரத்தே	187
விள்ளப்புதுகை	77
விறகுதறிக்கக்கறி	277
விற்கம்பத்	266
வீ	
வீமனுக்குமைந்தனுர்	277
வீமனெனவலிமிகுந்த	85
வீரஞ்சொரிகின்ற	194
வீரமுண்டோமதன்	155
வீரவெண்டையப்பிரதாப	284
வீறுதரமேவலரை	340
வெ	
வெங்கண்சிவந்து	156
வெங்காயஞ்சுக்கானுல்	237
வெஞ்சத்தமர்ந்து	359
வெண்ணெய்க்கட்டி	271
வெண்ணெய்த்திருடியுண்ட	64
வெண்பாவுருகாவில்	181
வெம்புங்காலை	298
வெந்தாய்நறுவிதாய்	106
வெள்ளத்தடங்கா	175
வெள்ளாறதுவடக்கா	135
வெள்ளைக்கலையு	8
வெள்ளையானேறு	51
வெறிக்குங்குமக்கொங்	313
வெறும்புற்கையுமரி	208
வெற்றிபுனைதா	144
வென்றிவளவன்	180
வே	
வேண்டியபோதின்ப	166
வேம்பாகிலுமினிய	165
வேயீன்றமுத்தர்	219
வேல்கொடுத்தாய்	245
வேழமுடைத்து	127
வை	
வையைத்துறைவன்	107

செய்யுளகராதி

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

தனிப்பாடற்றிரட்டு

மூலமும் - உரையும்.

முதற்பாகம்.

காளமேகப்புலவர் சரித்திரம்.

திருக்குடந்தையிற் பிறந்துவளர்ந்த வடமனாகிய பிராமணனொருவன் ஸ்ரீரங்கத்திற் பெருமாள்கோயிற் சுயம்பாகிபாகிப் பரிசாரகம் செய்துகொண்டிருக்கையில், திருவானைக்காவிலுள்ள சம்புகேசுரர் கோயில் தாசி ஒருத்தி மோகனாங்கி யென்னும் பெயருடையவள் அதிக அழகும் ஆடல் பாடல்களில் திறமுமுடையவளாயிருந்ததனால், இவன் அவளுடைய மோகவலையிற் சிக்கித் தனக்கவள் இணங்கும்பொருட்டுப் பெருமாள் பிரசாத முதலானவைகளும் அவளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அவளோடு சம்பந்தப்பட்டிருந்தான். அப்படி யிருக்குமளவில், மார்கழிமாசத்திற் சம்புகேசுரர் சந்நிதியில், மேற்படி தாசிக்குத் திருவெண்பாவை பாடும்முறைவந்தபொழுது, "உங்கையிற் பிள்ளை" என்னும் பாடலைப் பாடுகையில், அதில் "எங் கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க" என்ற தொடரை அவள் வாயினாற் சொல்லித் தலைகுனிந்துகொண்டதைப் பார்த்து அவளுடனேகூட விருந்த மற்றத் தாசிகளெல்லாம் புன்சிரிப்புச் சிரித்துத் தங்களுக்குள்ளே இவள் சிவன்கோயில் தாசியாயிருந்தும் பெருமாள் கோயில் சுயம்பாகியுடனே சம்பந்தப்படுகிறாளே, இதென்ன! "படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோயில்" என்பதாக வாயினாற் பேசுகிறதொன்று நடக்கிறதொன்றாயிருக்கிறதே யென்று அவளைப் பரிகாசம் பண்ணினார்கள், அது அவளுக்கு மார்பில் தைத்தது முதுகில் உருவினதுபோல வருத்தத்தை விளைத்ததனால், அன்றிரவு அவ்வைஷ்ணவன் வரும் தருணத்தில் தெருக்கதவைச் சாத்தி உள்ளே வரவேண்டாமென்று தடுக்க, அவன் வாசலுக்கு வெளியே நின்றபடி நிமித்தத்தால் இன்றைக்கு என்னைத் தடைசெய்கிறாயென, மோகனாங்கி நீ

விஷ்ணு அடியாள் நான் சிவனடியாளாகையால் உன் சம்பந்தம் எனக்குத் தகாதெ‌ன, அவன் "அந்தாமரையன்னமே நின்னையான கன்றுற்றுவனோ" என்றபடி உன்னை நான் ஒருபொழுதாயினும் விட்டுப்பிரிந்து சகிப்பேனோ! சகிக்கமாட்டேனாதலால் உன் தலைவாசலிலேயே நான்றுகொண்டு என் பிராணனைவிட்டு விடுகிறேனென்றான். இவள் இதேதுபழிவந்து சம்பவிக்கிறதேயென்று நினைத்து, நல்லது, நான் வேண்டுமென்று உனக்கு ஆவசிகமாயிருந்தால் நீ தீட்சைபண்ணிக்கொண்டு சைவனானால் உன்னிஷ்டப்படி நடக்கிறேனென்றுசொல்ல, அவன் காமப்பேய்கொண்டவனாகையால் "பெண்கள் பால்வைத்தநேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்" என்றவிதமாய் அவளுறவைக் கைவிடமாட்டாமல் நீ சொன்னவண்ணம் சைவசமயத்தை அநுசரிக்கிறேனென்று ஸ்ரீரங்கத்தை விட்டுச் சம்புகேசுரத்திற்கு வந்து, சிவதீட்சை பண்ணிக்கொண்டு, அகிலாண்டவல்லி கோயிற் பரிசாரகனாகி, தனக்கு அவ்விடத்துவரும்படிகளில் அவளுக்குக் கொடுத்து மீந்ததைத் தன் சீவனத்திற்கு வைத்து அநுபவித்துக்கொண்டுவந்தான்.

அந்நாளிற் சம்புகேசுரத்தில் ஒரு சிவப்பிராமணன், தனக்கு வித்தையிற் பூரணபாண்டித்தியம் உண்டாகவேண்டுமென்று நியமத்துடனே திரிபுரை சக்கரம் ஸ்தாபித்து, அதில் அத்தேவதைக்குரிய மந்திர பீஜாட்சரத்தைப் பிரணவ நமக சகிதமாய் வரைந்து உருச் செபித்து நெடுநாளாக உபாசித்துக்கொண்டிருந்தான் ஓரிராத்திரி நடுச்சாமத்தில், அகிலாண்டநாயகி அழகான ஒரு சிறுபெண்போல் வடிவெடுத்து, வெள்ளை வஸ்திரம் உடுத்து, வாய்நிறையத் தாம்பூலம் தரித்துக்கொண்டு, உபாசகன் கண்ணுக்கெதிரே சென்று, உன் வாயைத்திறவென்று அந்தத் தாம்பூலத்தை அவன் வாயிலே உமிழப்போமளவில், அவன் நிர்ப்பாக்கியனாகையால் அவளை மகாதேவியென்றறியாமல், ஆரடி எச்சிற்றம்பலத்தை என்வாயிலே துப்பவருகிறாய், உனக்கு பைத்தியம் பிடித்ததோ, அப்புறம் எட்டநில்லடியென்று கடிந்துரைத்தான். அம்மட்டில் அவனைவிட்டுத் திரும்பி வருகையில், மோகனாங்கி அன்றிராத்திரி கோயிற் குடவரிசைக்கு வந்திருந்ததறிந்து, பரிசாரகன் அவளுடனே நீ வீட்டுக்குப் போம்பொழுது என்னைவந்து அழை நாமிருவரும் கூடிப் போவோமென்று அங்கொரு மண்டபத்திற் படுத்திருக்க, மோகனாங்கி குடவரிசையானபின்பு பரிசாரகனைத் தேடிக் காணாமல் தான்மாத்திரம் வீட்டுக்குப் போய்விட்டாள்.

ஸ்தானிகர் முதலானவர்களும் கோயிற் குச்சுப்போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குப் போனார்கள். பரிசாரகன் விழித்துக்கொண்டு மோகனாங்கியைக் காணாமையாலும், கோயிற் கதவு பூட்டப்பட்டிருந்ததனால் தான் வெளிப்படக் கூடாமையாலும், இருந்த ஸ்தானத்தில் தானே நித்திரை பிடியாமல் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அவனை மேற் சொல்லிய தேவி பார்த்து வாயைத் திறக்கச் சொல்லித் தான் வாயிலிருந்த பாக்குத் தம்பலத்தை உமிழ்ந்து இதைத் தின்றுவிடென்ன, அவன் மோகனாங்கியென்று நினைத்து, அவளிஷ்டப்படி நடவாமற் போனால் அவளுக்குக் கோபமூளும் பிறகு தன் முகத்தைப் பார்க்கமாட்டாளென்பதனாலும், தான் பூர்வ ஜன்மத்திற்செய்த புண்ணியத்தாலும் தடுக்காமல் உட்கொண்டான். அம்மை அவனுக்கு அன்று முதற் காளமேகமானது அமோகமாய் மழை பொழிவதுபோலத் தமிழில் ஆசுமுதலாகச் சொல்லப்படும் நால்வகைக் கவிகளும் அசுவதாட்டியாய்ப்பாடும சக்தி உண்டாகவும், அந்நாற்கவிகளிலும், ஆாயினும் ஒருவர் எந்தச்சொல்லாவது, பொருளாவது, அடியாவது, தொடையாவது, எடுத்துக்கொடுத்து, இன்ன அலங்காரத்தில் இப்படி தொடங்கி இப்படி முடிக்கவேண்டுமென்ற மாத்திரத்தில், மயங்கி இடர்ப்படாமல் அப்படியே விரைந்து பாடுகின்ற ஆசுகவித்திரம் விசேஷமாகச் சித்திக்கவும், அக்காரணத்தால் காளமேகக் கவியென்னும் பெயர் லோகபிரசித்தமாக வாய்க்கவும் அநுக்கிரகித்து மறைந்துபோனாள்.

அவள் போன அடியிலே தானே அவனுக்குக் கடல் மடை திறந்தார்போலக் கவிபாடத்தக்க பிரபலமான வாக்குண்டாயிற்று. அதனால் அவன் இப்பொழுது நமக்குப் பிரசன்னமானவள் அகிலாண்டவல்லிதானென்று உணர்ந்து, அந்த மகாதேவியை ஸ்தௌத்தியம் பண்ணி, முதல் முதல் திருவானைக்கா உலாவென ஒரு பிரபந்தம் பாடினபின்பு, அச்சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு முதலான பலநாடுகளுக்கும்போய், அங்கங்குள்ள பிரதானமாகிய தெய்வஸ்தலங்களைத் தரிசித்து, அந்தந்த மூர்த்திகள்மேல் ஸ்துதியாகவும், நிந்தாஸ்துதியாகவும், மற்றும் அநேகவிதமாகவும் பற்பல பாடல்கள்பாடி வரும்பொழுது, கதை, கல், மரம், உலோக முதலானவைகள் சிற்பனால் உருப்படுத்தப் பட்டபின் அவ்வவற்றிற்குரிய இயற்பெயர் மாறி வெவ்வேறு சிறப்புப்பெயர் உண்டானாற்

போல, அகிலாண்டேச்சுரி வரப்பிரசாதத்தால் முன்புள்ள பரிசாரகனென்னும் பெயர்மாறி, யாவரும் காளமேகம்புலவர் காளமேகப்புலவரென்று சொல்லும்படி மேன்மையாகிய பெயர் எத்திசையிலும் வழங்கத் தலைப்பட்டது.

இந்தப்படி காளமேகப்புலவர் நவநவமாகக் கருத்தமைத்துக் கவிபாடி ஸ்தலதரிசனம் செய்து வருகையில் திருமலைராயன் பட்டணத்தில் கல்வியில் மிகச் சிறந்தவர்களென்று அவ்வரசன் வியந்துகொடுத்த தண்டிகை பரிசுபெற்ற புலவர்கள் அறுபத்து நால்வரும், அவர்களுக்குத் தலைவனாகிய அதிமதுரகவியென்பவனும் தமிழில் தங்களுக்குச் சமானம் ஒருவருமில்லையென்று அகங்கரித்து, உலகத்திலுள்ள மற்றப்புலவர்களையெல்லாம் மதியாமற் பலவாறாக நிந்தித்து அவமானப்படுத்தி வருகிறார்களென்றும், அதற்குத் திருமலைராயனும் உடன்பட்டிருக்கிறானென்றுஞ் செய்திகேட்டு, வித்வான்களாயிருப்பவர்கள் ஆராயினுமென்ன, அப்படிப்பட்டவர்களை அவமதிக்கலாமா! அவர்களை இகழ்ந்தது நம்மை இகழ்ந்ததல்லவா, பூர்வம் ஒட்டக்கூத்தனென்பவன், கற்றது கையளவு கல்லாதுலகளவென்றெண்ணாமல், தாமே வித்தையில் அதிகவல்லவனென்று மமதைகொண்டு நெஞ்சிரக்கமின்றிப் புலவர்களைச் சிரச்சேதம்பண்ணிவந்தான். அதுகண்டு அக்காலத்தில் புகழேந்திப் புலவரானவர் அவனுக்குத் தக்கபடி கர்வபிராயச்சித்தம் செய்வித்து அனேகரைக் கொலைக்குத் தப்புவித்து ரட்சித்துப் புண்ணியம் தேடிக்கொண்டார், அந்தப்படி இந்தக் காலத்தில் திருமலைராயன் சமஸ்தானத்திலிருக்கும் வித்வான்கள் நான் நானென்று இறுமாப்புற்று "நக்குகிறநாய் செக்கென்றும் சிவலிங்கமென்றும் அறியாதது போல" நல்லார் பொல்லாரென்று அறியாமலும் "அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியாததுபோல" பாடிய அருமை தெரியாமலும் பிரசண்ட கவிகளையெல்லாம் பழித்துக்கொண்டிருக்கிறார்களே, இவர்களுடைய அகந்தையை நாம் போய் அவசியம் அழிக்கவேண்டுமென்ற பிரதிக்கினையுடனே ஒருநாள் அவ்விடத்திற்குப் போக யத்தினப்படுகிற சமயத்தில், அவரை மோகனாங்கி யென்னும் தாசி கண்டு, திருமலைராயன் பட்டணத்துத் துறை முகத்தில் விசேஷமாய் முத்துக் குளிக்கிறதாகவும், அம்முத்து மற்றத்துறைகளில் குளிக்கப்படுகிற முத்துகளிலும் மிகச் சிறந்ததாகவும், திருமலைராயனே அந்த வியாபாரம் செய்வதாகவும் சொல்லுகிறார்கள், ஆகையால் அங்கேபோய்த் திரும்பிவரும்

பொழுது மறவாமல் எனக்கு மார்பிணியுங் கச்சும் முத்து வாங்கி வரவேண்டுமென்றாள். அதுகேட்டு, நல்லது, அப்படியே ஆகட்டுமென்று சொல்லி அவளிடத்திற் செலவுபெற்றுக் கொண்டு புறப்பட்டு அப்பட்டணத்துக் கடைவீதியில் வந்தார்.

இவருக்கெதிரே மேற்சொல்லிய அதிமதுர கவியென்பவன் தனக்குப் பின்னும் முன்னும் இருபக்கங்களிலும் அறுபத்துநாலு தண்டிகைப் புலவர்களும் வரிசை வரிசையாக நெருங்கிச்சூழ்ந்து வர, அவர்கள் நடுவில் நீலமலை யொன்று உரல்போலப் பருத்தகால்களும்; பனைபோல நீண்டதுதிக்கையும், ஆலவட்டம்போலப்பரந்த செவிகளும், பிறைபோலவளைந்த கொம்புகளும், மலைச்சிகரம்போல உன்னதமாகிய மஸ்தகமும், சாமரம்போல அசைகின்ற வாலும் முளைத்து எழுந்து நடப்பதுபோல நடக்கின்ற மதயானைமேல் நவரத்னமயமாகிய தவிசிட்டு ஏறி, துஜம்சத்திரம் சாமரமுதலிய விருதுகள் பிடிக்க, கட்டியம் கூற அதிக ஆடம்பரத்துடனே ராஜசமுகத்தை நாடிவருவது கண்டு தாம் அப்பால் விலகிப்போகாமல் அப்புலவர்கள் ஏறிவரும் தண்டிகைக் கணைகளின் மத்தியில் வந்து நிற்க, அதுகண்டு கட்டியக்காரன் கண்டிகைக்கணைக் குட்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும், அவர்கள் தங்கள்வாயினால் அதிமதுரகவியென்பவனுக்குரிய விருதைச் சொல்வது நெடுநாளையவழக்கமாயிருப்பதால் அவ்வழக்கப்படி, இவர் மார்பிலே தன்கையிலிருந்த மான்தோற் பட்டையால் தட்டி அதிமதுரகவிராய சிங்கம் பராக்கென்று சொல்லென்றான், இவர் இழவுக்கு வந்தவர்களையெல்லாம் தாலியறுக்கச்சொன்னால் அறுப்பார்களா. அதுபோலத் தெருவிலே போகிறவர்கள் வருகிறவர்களையெல்லாம் இவன்பெருமையைச் சொல்லச் சொன்னாற் சொல்வார்களா, ஆயினும் இவன் பெற்ற பெருமைதானென்ன ? துடைப்பக்கட்டுக்குப் பட்டுக்குச்சு கட்டியதுபோல அதிமதுரகவிராய சிங்கமென்று பெயர்வைத்துக் கொண்டு விருதுகூறி வருகிறானே, இவனபாடும் பாட்டென்ன அத்தனை மதுரமானதா? தன்னைச் சிங்கமென்று சொல்வதைப்பற்றிக் கொஞ்சமாவது இவனுக்கு மனங்கூசவில்லையே. இவன் எத்தனை வித்வான்களைச் செயித்தான். இதெல்லாம் வீண்புகழ்ச்சி தானே. இப்படிப்பட்டவன் வெட்கித்தலையிறக்கங் கொள்ளும்படி இவனைப்பரிகசிப்பதே யுக்தமென்று நினைத்துக் கட்டியங் கூறுவோனை நோக்கி, அதிமதுரம் அதிமதுரமென்று உலகமெல்லாம் அறியும்படிப் பறைசாற்றினதுபோலப் பலமுறையுமெடுத்துச்சொல்லி இவ

னை மதுரம்போன்ற ஸ்துதி செய்கின்றையே, இவனிடத்திலுள்ள புதுமையென்ன. இப்படிச் சொல்வதைப் பார்க்கிலும், காட்டிலுண்டாகிய சரக்கு, காரமில்லாத சரக்கு, தனியே பிரயோகிக்காமல் வேறுசரக்குகளுடனே கூட்டப் பிரயோகிக்கப்படும்சரக்காகியமலைக்குன்றிமணிவேரை உலகத்தார் தொன்றுதொட்டு அதிமதுரமென்று வழங்குவது சகசமாதலால் நீ அதைக்குறித்துச் சொல்லென்னும் கருத்தை அமைத்து "அதிமதுரமென்றே யகிலமறியத்-துதிமதுரமா யெடுத்துச்சொல்லும்.. புதுமை யென்ன - காட்டுச்சரக்குலகிற் காரமில்லாச் சரக்குக்-கூட்டுச் சரக்கதனைக் கூறு" என்றொரு பாடலைச் சொல்லி ஏளனம் பண்ணினார்.

அது அதிமதுரகவி யென்பவனைத் தூக்கிப் போட்டாற்போலிருந்தனால், அவன் ஆச்சரியப்பட்டு, சிறிதாவது பயமில்லாமல் இவ்வளவு தைரியத்துடனே பகிரங்கமாக நம்மைப்பரிகசிக்கின்றானே, இவனாரென்றுஅறியும்படி, தான் ராஜசமுகத்திற்குப்போய்ச் சேர்ந்த மாத்திரத்திற் சேர்வைகாரனொருவனை அனுப்பி, இன்னவிடத்தில் ஒரு பிராமணனிருக்கிறான், அவனுடைய பெயரென்ன, அவன் எங்கிருப்பவனென்று விசாரித்துவாவெனச் சொன்னான், சேர்வைகாரன்நேரிலே வந்து விசாரித்தபொழுது, காளமேகப்புலவர்என்பேர் ஊர் முதலானவைகளைவாய்ச் சொல்லாகச்சொன்னால் நான் சொன்னபடி நீ போய்ச் சொல்வது பிரயாசம் விவரமாய்ஏட்டில் எனக்கைப்பட எழுதிக் கொடுக்கிறேனென்பதாகச் சொல்லி "தூதைந்து நாழிகையிலாறுநாழிகைதனிற் சொற்சந்தமாலை சொல்லத் - துகளிலாவந்தாதி யேழு நாழிகைதனிற் றொகைபட விரித்துரைக்கப் - பாதஞ்செய் மடல் காவை பத்துநாழிகைதனிற் பரணியொரு நாண் முழுதுமே - பாரகாவியமெலா மோரிரு தினத்திலே பகரக்கொடிக் கட்டினேன் - சீதஞ் செயுந்திங்கண் மரபினா னீடுபுகழ் செய்ய திருமலைராயன் முன் - சீறுமாறாகவே தாறுமாறுகள் சொல் திருட்டுக்கவிப் புலவரைக் - காதங்கறுத்துச் செறுப்பிட்டடித்துக் கதுப்பிற் புடைத்து வெற்றிக் - கல்லணையினொடுகொடிய கடிவாளமிட்டேறுகவிகாளமேகநானே" எனத்தான் ஆசுகவிபாடும் திறத்தைச் சிறப்பித்தும், தமதுபெயரை வெளிப்படையாகச்செப்பியும், திருமலைராயன் சமஸ்தானத்து வித்துவான்கள்செய்யும்அக்கிரமத்தைக் குறிப்பித்து அவர்களை இகழ்ந்தும் ஒரு சீட்டுக்கவி எழுதி அதைச் சுருட்டிச் செந்தரிக்கம் போட்டு, இதைக்கொண்டு போய்க் கொடுவென்று கொடுத்தனுப்பினார்.

அதிமதுரகவிராயன் முதலானவர்கள் அதைவாங்கிவாசித்து, இதை எழுதினவன் காளமேகமென்பவனு, பாம்புக்கு பல்லிலும் தேளுக்குவாலிலும் ஏகதேசமாக விஷமிருக்கு மென்பார்கள். இவனுக்குஉடல்முழுதும் விஷமாயிருக்கிறது ஆதலால் இவன்பொல்லாததுஷ்டனென்றும், அகங்காரமே கால்கைமுதலிய உறுப்புகளாய் உருவெடுத்துவந்தவனென்றும், கண்டவர்கள் மேலெல்லாம் வம்பும் தும்புமாக வசைபாடுகிறவனென்றும், இவனுடைய சமாசாரம் முன்னமே நமக்குக் கேள்விதானே. அப்படியிருக்க இப்பொழுது நம்மையும் அவர்களைப்போல இலேசாக நினைத்துக்கொண்டு கொஞ்சமாவதுமதிப்பில்லாமல் வாய்க்குவந்தபடியெல்லாம் தூஷித்துச் சீட்டுக்கவி. எழுதினன் பார்த்தையா! இப்படிப்பட்டவனைச் சும்மாவிடப் போமா. கொட்டினுல் தேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சி யல்லவா ஆதலால் இவனைச் சிலிர்க்கச் சிலிக்கவலித்து மானபங்கப்படுத்தித் தக்க சிட்சை செய்வித்தாலொழிய இவன் அடங்கமாட்டானென்று தங்கள் அரசனுடனும் ஆலோசித்து, நாலுபெயர் சேவகர்களை விடுத்து அந்தக் காளமேகமென்பவன் எங்கேயாவது ஓடி யொளித்துப்போகப் போகிறுன். இந்த நொடிக்குள்ளே கைப்பிடியாகப் பிடித்து வந்து ஒப்பிக்கவேண்டுமென்ன, அந்நால்வரும்போய்ப் பெரும் புலிகள்போல் அவரைச் சுற்றிக்கொண்டு நீ சும்மாவருகிறையா, உன்னைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போகவேண்டுமா வென்றுர்கள். புலவர், நீங்களார், என்னை எங்கே அழைக்கிறீர்களென்ன. அவர்கள் நாங்கள் திருமலைராயன்சேவகர்கள். அவரிடத்திறகுத்தான் உன்னை அழைக்கிறேமென்ன, இவர் அங்கு ஏதுக்காக வரச் சொல்லுகிறீர்களென்ன, சேவகர், நீ எங்கள்ராஜசமஸ்தானத்து வித்வான்களைத் தூஷித்தையே - அதற்காகத்தானென்ன, இவர் பின்னையொன்றும்செய்யவில்லையே இதற்குத்தானு பிடிக்கிறதும் கட்டுகிறதும், என்னைத் தொடவேண்டாம் தூர நில்லுங்கள். நானேவருகிறே னென்று, கடையில் எலுமிச்சம் பழமொன்று வாங்கிக் கையில்வைத்துக்கொண்டு ராஜ சமுகத்தை நோக்கி வருகிறுர்.

இதற்குள் அவ்விடத்தில் அதிமதுரகவி யென்பவன் அறுபத்துநாலு தண்டிகைக்காரரையும்பார்த்துக்காளமேகமென்பவன் இவ்விடத்திற்குவந்தால் அவன் அரசனருகிற் கட்டிச்சொல்லாதபடி நீங்களெல்லாரும் நெருங்கி உட்கார்ந்து உங்க ளாசனத்தை விட்

டெழுந்திராம லிருங்களென்று திட்டம் செய்து, பின்பு ராஜாவை நோக்கி, அந்த வம்பனைத் தாங்கள் வாவென்றழையாமலும், அவனுக்கு ஆசனம் கொடாமலும், சம்மானம் செய்யாமலு மிருக்கவேண்டுமென்று சொல்லி எச்சரிக்கையா யிருந்தான். அப்படி யிருக்கையிற் புலவர் பெருமான் வந்துபார்த்து, நாம் உட்பிரவேசிக்கக்கூடாமல் இங்கே ஏதோ மித்துருபேதம் நடந்திருக்கிறதென்றுகிரகித்துக்கொண்டு, தாம் உட்செல்லாமல் ஆஸ்தானவாசல்நடையிலிருந்தபடியே இதற்கேற்ற உபாயமொன்றுசெய்யவேண்டுமென்று, ஒரு சுலோகம் சொல்லி அரசனை ஆசீர்வதித்து, அந்த எலுமிச்சம்பழத்தை அவனுக்கெதிரே நீட்டினார். பிராமணர்கள் ஆசீர்வசனம் பண்ணி அட்சதையாவது புஷ்பமாவது மற்றேதாவதுகொடுக்கவந்தால் வாங்காமலிருப்பது விதியல்லவே. அதுபற்றி அவன் தன்கையைநீட்டினான் நீட்டியகையில் இந்த எலுமிச்சம்பழம்போய்ச்சேரவேண்டுமே அதனால் யாவரும் விலகி வழிவிட்டார்கள், காளமேகப்புலவர்தாராளமாக அச்சபை நடுவேசென்று அதை வேந்தன்கையிற்கொடுக்க, அவன்வேண்டாமென்று சொல்லாமல்வாங்கிக்கொண்டதன்றி, அவருக்கும் ஆசனம் கொடுக்கவும், உட்காருமென்று சொல்லவுமில்லை. அதுதெரிந்து ஜம்புகேசுரத்தின்திசையைநோக்கி மானசிகமாக ஸ்ரீ அகிலாண்டவல்லி விமானத்தைத் தரிசித்து, சாரதையைத்தியானித்து "வெள்ளைக் கலையுடுத்துவெள்ளைப்பணிபூண்டு - வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை - அரியாசனத்தி னரசரோடென்னைச் - சரியாசனத்து வைத்ததாய்" என்பதை உள்ளிட்ட முப்பது வெண்பாவிற் சரஸ்வதிமாலையென ஒரு பிரபந்தம் பாடினார், பாடினமாத்திரத்தில் வாணிகடாட்சத்தால் திருமலைராயனிருந்த ஆசனம் ஒரு புறத்தில் வளர்ந்து இடங்கொடுக்க, அதில் அவர் அவனுடன் சமானஸ்கந்தமாக வீற்றிருந்தார்.

இவ்விதமாகராசசிங்காசனம் வளர்ந்துஇடங்கொடுக்க, இவர் அதன்மேலேறி உட்கார்ந்த தருணத்தில், அவர்களெல்லாம் இதென்னமந்திரமோ, மாயமோ, அல்லது கண்கட்டுவித்தையோவென்று பிரமிப்புடனே பார்கையில், புலவர் பெருமான் அந்தப் புலவர்களை நோக்கி, என்னை வைத்தகண் வாங்காமல் ஊடுருவப் பார்க்கிறீர்களே, நீங்களார், தெரியச்சொல்ல வேண்டு மென்றுகேட்க, அவர்கள் நாங்கள் இந்தச் சமஸ்தானத்தி லிருக்கும் கவிராஜர்களென்று உத்தரஞ் சொல்ல, இவர் கவிராஜ ரென்பதற்குக்

காரகப்பொருள்கொண்டு, குலுக்கென்றுநகைத்து, அவர்களை உல்லங்கனம் பண்ணும்படி. ஓ! ஓ! புவியரசர்களாற் புகழப்படும்புலவர்களே! நீங்களாரென்று உங்களைக்கேட்டால் கவிராஜர்களென்கிறீர்களே! கவிராஜர்களாயிருந்தால், உங்கள்ஜாதிசுபாவப்படி வாலிருக்கவேண்டுமே, அதெங்கே? வாலில்லாமையால் நீங்கள் வாலில்லாத குரங்குகளென்றல்லவோசொல்லப்படுவீர்கள்; அப்படிதானென்று ஒப்புக்கொண்டாலும், நீண்டு வளர்ந்து வலிபெற்ற நகமிருக்கவேண்டுமே, அதெங்கே? அல்லாமலும் நாலுகாலிருக்கவேண்டுமே, அவை எங்கே? காலாகக் கையைப் பாவித்துக் கொள்ளலாமென்றாலும், பீளைசார்ந்த கண்ணிருக்கவேண்டுமே, அதெங்கே? சொல்லுங்களென்னும் கருத்தினை உள்ளமைத்து, "வாலெங்கே நீண்டெழுந்த வல்லுயிரெங்கே நாலுகாலெங்கே யூன்வடிந்த கண்ணெங்கே சாலப்-புவிராயர்போற்றும் புலவீர்காணீங்கள் கவிராயரென் றிருந்தக்கால்" என்றொரு வெண்பாப்பாடினார் இதில் குரங்குகளென்று இழித்துரைத்தாலும், அவர்களைப்போலத் தாமும் புலவராகையால் அந்தச் சுஜாதியபிமானம் போகாமற் புவிராயர் போற்றும் புலவீர்காளென்று சிறப்பித்தார்.

அதையவர்கள் அவ்விதமாக நினையாமல், இவன் எட்டிக்குடுமியைப் பிடித்து இறங்கிக் காலைப்பிடிக்கிறவன்போல், இந்தப்பாட்டிலே நம்மையெல்லாம் குரங்குகளென்று பிரத்தியட்சத்திலேயே நிந்தித்து, அதனோடு கூடக் கொஞ்சம் முகஸ்துதியாகப் புவிராயர் போற்றும் புலவீர்காளென்றான். முன்பு சீட்டுக்கவியிலும் தூஷித்திருக்கிறான். இவனுடைய நெஞ்சத்துணிவுதான் என்னவென்று சிந்தித்துப்பிறகு அவரைநோக்கி, இந்தச் சமஸ்தானத்தில் வெகுகாலமாகப் பெயர்பெற்றிருக்கின்ற எங்களை இன்றுவந்து முளைத்த நீஆரென்று கேட்கிறையே, நீயார் சொல்லென்று கேட்டார்கள். இவர் நாம்காளமேகமென அறியீர்களாவென்ன, அவர்கள் நீகாளமேகமா; நல்லது, காளமேகமென்பது கறுத்தமேகமாதலாற்பொழியவேண்டுமேயென்ன, இவர்பொழியத்தான் வந்ததென்ன அவர்கள் எப்படிப் பொழியவந்ததென்ன, புலவர்சிரோமணி, கழியினிடத்திற் செல்லும் கடல்நீரானது உப்புமயமா யிருப்பதென்று அதை ஒழித்து, சாஸ்திரமாகிய கடலில் அந்த சாரமாகிய நீரை முகந்து, அருவியாறு வழிந்தோடுகின்ற தமிழ்பிறந்த பொதியமலையிற்காலூன்றி, கடுமையாகிய கவிகளைப்பாடுகின்ற புலவர்கள் மன

தின்கண்ணே பயஞ்செனிக்க இடித்து, அவர்கள் காதுகள் செவிடு படக்குமிறி, கண்கூசமின்னி, கவியாகிய மழைபொழியும்படி காள மேகமானது புறப்பட்டதென்னும் கருத்தை அமைத்து "கழியுந் திய கடலுப்பென்று நன்னூற்கடலின் மொண்டு வழியும் பொதிய வரையினிற்கால்வைத்து வன்கவிதை-மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்-பொழியும்படிக்குக் கவிகாளமேகம்புற ப்பட்டதே" என்றொருபாடல் பாடக்கேட்டு, அதிமதுரகவி யென் பவன் அதிக வாச்சரியங்கொண்டு, அவரை முன்னிட்டு, வெள்ளைக் கவிபாடித்திரிகின்ற காளமேகமே! மூச்சுவிடுவதற்கு முன்னே முந் நூறு, அல்லது நானூறு பாடல் பாடப்போகாதா? மூச்சுவிட்டா ச்சுதென்றால் ஐந்நூறு பாடல்வரையிலும் ஆகாதா? இதற்கித்தனை பேச்சென்ன, சும்மா ஆடம்பரமாக உன்னுடைய கள்ளக்கவிக் கடையைப் பரப்பவேண்டாம். அந்தமட்டிலே அதைக்கட்டென் னும் கருத்துத்தோன்ற "மூச்சுவிடுமுன்னே முந்நூறுநானூறும், ஆச்சென்றாலைந்நூறு மகாதோ-பேச்சென்ன-வெள்ளைக்கவி காள மேகமே யுன்னுடைய கள்ளக்கவிக்கடையைக்கட்டு." (ஆயிற்றென் பது-எதுகைநோக்கி ஆச்சென மரூஉவாக அமைக்கப்பட்டது; வெள்ளைக்கவி-வெண்பா) என்றொருபாடலைச் சொல்லி அவன் தன் பெருமையை வெளியிட்டுக் கவிசிரேஷ்டராகிய இவரை இழிவு செய்தபொழுது, இவர் நீமூச்சுவிடுகிறதற்கு முன்னே முந்நூறு நானூறு பாடல்வரையிலும், ஆச்சென்றால் ஐந்நூறுபாடல் வரை யிலும் பாடுகிறதாகச்சொன்னையே இதோராச்சரியமா, நான்சொல் வதைக்கேள் வாயைத் திறவாதற்குமுன் எழுநூறு எண்ணூறு பாட்டளவிலும் ஆகாதா? பாடுகிறதற்கு ஒருநிமித்தமில்லாதகால த்திற் சும்மாவிருந்தாலிருப்பேன். ஆவசிகமுண்டாய்ப்பாட ஏற் பட்டேனானல், யானைத்துதிக்கைபோலப் பெரிய தாரைகளாக வரு ஷிக்கும் மேகம் நானென்று நினை, பிள்ளாயென்னும் கருத்தை யமைத்து, "இம்மென்னுமுன்னே யெழுநூறுமெண்ணூறும், அம் மென்றாலாயிரம்பாட் டாகாதா-சும்மா-இருந்தாலிருப்பே னெழுந் தேனே யாயிற்-பெருந்தாரைமேகம் பிள்ளாய்" (இம்மெனல்-வாய் திறவாமையையும், அம்மெனல்-வாய்திறந்து மூடுகையையும் உணர் த்திய குறிப்புச்சொற்கள்) என்பதாக ஒருகவிபாடித் தமது வல்ல மையைக் குறிப்பித்தார்.

அதை அதிமதுரகவிகேட்டு, தூக்கிநிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறே னென்பவனைப்போல வெகுசாமார்த்தியமாகப்பேசுகி

றானே, இவன் சொல்வது மெய்யாயிருக்குமா, அதேது. ஆராத்தாள் செத்தாலும் பொழுதுவிடிந்தால் தெரியுமென்பதுபோல, இன்னும் சற்றுநேரத்திற்குள்ளே பொய் மெய்யெல்லாம் பட்டப்பகலாய்த் தெரியவருகிறதென்று நினைத்துக் காளமேகப்புலவரை நோக்கி, கூரம்பாயினும் வீரம்பேசேலென்பதை அறியாமல், நீ இவ்வளவு வீரம்பேசுகிறையே-அரிகண்டம்பாடு, பார்ப்போமென்றான். இவர் அரிகண்டமாவது என்னவென, அவன் கழுத்திற் கத்திகட்டிக்கொண்டு எதிரிகொடுக்கும்சமிசைக்கு இணங்கப்பாடுவதுதான். அப்படி பாடுமிடத்தில் ஏதாவதுதவறினால் அந்தக்கத்தியினாலேயே வெட்டுண்ணவேண்டி வருமென்ன, அதற்கு இவர் கைகொட்டிச் சிரித்து, இதுதானா அரிகண்டமென்பது இத்தனை சுலபமானதை ஒருவிஷயமாகத்தேடிச் சொல்லவந்தையே, இதிலென்ன அருமையிருக்கிறது. இது நிற்க யமகண்டம் பாடுகிறதல்லவோ மகாபிரயாசம். அதைக்குறித்துப் பேசுவதுதான் கௌரவமென்று சொல்ல, அவன் யமகண்டமென்றும் ஒன்றிருக்கிறதா, அது எப்படிப்பட்டதென்ன, இவர் பூமியிற் பதினாறடி நீளம், பதினாறடி அகலம், பதினாறடி ஆழமாகச் சதுரத்திற்குச் சதுரம் ஒரு பெரிய குழிவெட்டி, அதன் நான்குமூலையிலும் பதினாறடி இரும்புக் கம்பங்கள் நாட்டி, கம்பத்தின்மேல் நாலுபக்கத்திலும் இரும்பினால் நாலுசட்டமும், நடுவேயொருசட்டமும்போட்டு நடுச்சட்டத்தில் உறிகட்டி, குழிக்குள் பருத்த புளியங்கட்டைகளை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்புமூட்டி, அது கனன்றெழுந்து சுவாலித்து எரிந்துகொண்டிருக்க, அந்நெருப்பில் ஒரு ஆளுயரமான இருப்புக் கொப்பரை வைத்து, கொப்பரை நிறைய எண்ணெய்விட்டு, அதில் அரக்கு மெழுகு குங்கிலியம் கந்தகம் சாம்பிராணிகளை நிரப்பி, அவை நன்றாய்க்காய்ந்து உருகிக் கொதித்துக்கொண்டிருக்க, நான்கு யானைகளைப்பாகர்கள் மதமேற்றிக்கொண்டுவந்து கம்பத்திற்கு ஒவ்வொன்றாக மலைகளைப்போல நிறுத்திவைத்திருக்க, பின்புறத்தில் வளையம் வைத்து, வளையத்திற் சங்கிலிகோத்து, நயத்த எழுகினால் கூர்மையாகச் சமைத்துப்பளபளவென்று மின்னும்படி சாணைபிடித்த எட்டுக்கத்திகளைக் கழுத்தில் நாலும், அரையில் நாலுமாகக் கட்டிக்கொண்டு, கத்திகளின் புறத்திலுள்ள சங்கிலிகளை மேற்படியானைகளின் துதிக்கையிற்கொடுத்துவைத்து, தான் கொப்பரைக்குநேராகத்தொங்குகின்ற உறிநடுவில் ஏறியிருந்து, எவரெவர் என்ன என்னசமிசைகொடுத்தாலும் அவைகளை அரைநொடியிலேதானே தடை

யின்றிக் குறித்த கருத்தின்படி இசைத்தும் பாடவேண்டியது, அவ்வாறு பாடும்பொழுது எவ்வளவாவது வழுவுமானுற் சமிசை கொடுத்தவர்கள் யானைமேலிருக்கும் பாகர்களுக்குக் கண்சைகை காட்ட, அவர்கள் யானைகளை மஸ்தகத்தில் அங்குசத்தாற் குத்தி அதட்ட, அவைகள் தமது தும்பிக்கையிற்கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை விசையாயிழுக்க, இழுத்தவுடனே புலவன் கழுத்தும் அரையும் கத்திகளாற் கண்டிக்கப்பட்டு, தலையொரு துண்டமும் அரைமுதற் காலளவும் ஒரு துண்டமுமாகி, அவ்வெண்ணெய்க் கொப்பரையில்விழுந்து மாண்டுபோகிறது. இப்படிப்பட்டதுதான் யமகண்டமென்றார்.

காளமேகப்புலவர் இவ்வண்ணம் சொல்லக் கேட்டமாத்திரத்தில் அதிமதுரகவி மனம் திடுக்குற்று, அடா அப்பா! யமகண்டமென்பது இப்படிப்பட்ட கோரமானதா, இது உள்ளபடி யமகண்டத்திற்கு ஒப்பாயிருப்பதனாலேதான் இதற்கு இப்பெயர்கொடுக்கப்பட்டதாகக் காண்கிறது. இவ்வாறு செய்ய ஆராலேயாகும்? அசாத்தியம், அசாத்தியம் என்று தனக்குள்ளே எண்ணி அதிசயித்து, பின்பு புலவர்பெருமானைப்பார்த்து, நீசொன்னயமகண்டம் தகுதியானதுதான். ஆயினும் சும்மா வாயினாலே டம்பமாகச்சொல்வதனால் என்னபிரயோசனம். "மாடு திருப்பினவனல்லவோ அர்ச்சுனன்" அதுபோல, சொன்னபடி செய்வதல்லவோ கௌரவம். ஆகையால் நீசெய், பார்ப்போமென்றான். இவர் சபாசு ஆடவிட்டு நாடகம்பார்க்கிறதுபோல என்னைச் செய்யச்சொல்லிப் பார்க்கிறதென்ன, நீ முதல் முதல் இந்த விஷயத்தை எடுத்துப் பேசினதனாலும், வெகுநாளாக யாவருமறிய நடுத்தெருவிலே அதிமதுர கவிராயசிங்கம் பராக்கென்று விருது கூறிக்கொண்டு வருகிறபடியினாலும், செய்யவேண்டியகடமை உன்னுடையதே, அப்படியிருக்கக் குரங்குகுட்டிக் கையைதோய்க்கிறதுபோல என்மேலே சார்த்தி என்னைத் தூண்டிவிட்டு நீதப்பித்துக்கொள்ளப் பார்ப்பதுசரியோ, இது விருது கூறிவந்து செடியில் நுழைகிறதுபோ லாகுமல்லவோ வென்றார்.

அத்தருணத்தில்அதிமதுரகவியும்அறுபத்துநாலுதண்டிகைப் புலவரும் திருமலைராயன் முன்னிலையில் ஒருங்குசேரக்கூடி, இவன் எதிரிகளை மதியாத துன்மார்க்கனாயிருக்கிறபடியினாலே தந்திரமாக இவனையே அந்த யமகண்டத்தில்மாட்டி இவனுடைய கொழுப்பை

அடக்கவேண்டுமென்று தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டு, அப்படிச்செய்யவேண்டுமென்று ஆவசிகமில்லை. நீயே உன்னை அதிகசமர்த்தனென்று பெருமைப்படுத்தியும் எங்களை யிழித்தும் சீட்டுக்கவிபாடி யனுப்பினதனாலும், நாங்கள் சுளுவாக அரிகண்டம் பாடச்சொன்னால். கிணற்றுக்குத்தப்பித் தீயிலே பாய்ந்ததுபோல, அதை விலக்கி உன் வாயினாலேயே யமகண்டம் பாடுகிறதைக்குறித்துப் பேசினதனாலும், நீதான் அந்தப்படிச் செய்யவேண்டுமென்றார்கள்.

அவர்கள் அப்படிச் சொல்லக்கேட்ட புலவர் சிகாமணியானவர், கல்வித்திறமும் கவி சாதுரியமுமில்லாத இவர்களை யமகண்டம்பாடச்சொல்லுகிறது, வீரமில்லாத பேடியைப்போருக்கழைக்கிறதுபோலல்லாமல் வேறல்ல. அதனால் அதை நாமே செய்து காட்டி இவர்கள் இறுமாப்பை அடக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, நீங்கள் வருத்தப்படவேண்டாம், தலைகீழாகக் கரணம்போட்டாலும் இது உங்களால் ஆகத்தக்கதல்ல. நானே செய்கிறேன் பாருங்களென்று உடன்பட்டார். அவர் உடன்பட்டமாத்திரத்தில் அவர்கள் இனித்தாமதித்தலாகாதென்று யமகண்டத்தைக்குறித்து அவர்சொன்னபடி ஏவலாளர்களைக்கொண்டு ராஜாவின் சபாமண்டபத்திற்கு நேரிலே குழிவெட்டித் தழல்மூட்டி எண்ணெய்க் கொப்பரைவைத்துக்குழிக்கு நாற்றிசையிலும் இரும்புக் கம்பம் நாட்டிக்கம்பத்தின்மேற் சட்டம்போட்டு நடுச்சட்டத்திற்கொப்பரைக்குமேலே உறிகட்டிப் பாகர்களால் யானைகளை மதமேற்றிக் கொண்டுவந்து கம்பத்திற் கொவ்வொன்றாக நிறுத்தும்படி செய்தார்கள். புலவர்பெருமான் கழுத்திற்கும் அரைக்கும் கத்தி கட்டிக்கொண்டு, கத்திகளின் பின்னுள்ளவளையங்களிற் கோத்திருக்கும் சங்கிலிகளை யானைகளின்கையிற் கொடுத்துவிட்டுத், தாம் உறியின்மேலேறி முகமலர்ச்சியுடனே மண்டலித்திருந்து, திருமலைராயனுடைய அனுமதிபெற்றுக்கொண்டு, அதிமதுரகவி முதலானவர்களைநோக்கி, இனி நீங்கள் காலதாமசம் செய்யாமல் உங்களிஷ்டப்படிக்குக் கொடுக்கவேண்டிய சமிசைகளைத் தடையின்றித்தாராளமாகக்கொடுக்கலாமென்ன, அவர்கள் இவருடைய தைரியத்தையும் உறியேறிப் பயமின்றிக் கம்பீரமாக வீற்றிருப்பதையுங்கண்டு, அம்மம்மா! இவனுடைய தைரியந்தான் எப்படிப்பட்டதென்று ஆச்சரியப்பட்டு, நாமிதை முற்றமுடியப் பார்க்கவேண்டுமென்று யாவரும் சமீபத்தில் வந்திருந்து, அவரவர் வெவ்

வேறே ஆராய்ந்து தேடியெடுத்துத் தங்களிஷ்டப்படிக்கெல்லாம் நாலுவிதமான சமிசைகளை கொடுக்க, அவைகளெல்லாவற்றையும் அகிலாண்டநாயகி அனுக்கிரகத்தாற் பொருள்செய்யாமலும், எவ்வளவேனும் இடர்ப்படாமலும் அநாயாசமாக அவர்கள்கொண்ட கருத்துக்கிணங்கும்படி சித்திர விசித்திரமாய் நல்ல நயந்தோன்ற அதற்குத்தக்க அலங்காரங்களும் அமைத்து விரைவாகப்பாடினார்.

அதிமதுரகவி, திருமாலவதாரம் பத்தினையும் ஒரு வெண்பாவிலடக்கிப் பாடவேண்டுமென, புலவர் பெருமான் இதற்கு ஒரு வெண்பாவும் வேண்டுமோ, நான்பாதிவெண்பாவிற் பாடுவேனென்றுபாடியது.

1. மெச்சுபுகழ்வேங்கடவாவெண்பாவிற்பாதியிலென்
இச்சையிலுன்சென்மமெடுக்கவா-மச்சாகூர்
மாகோலாசிங்காவாமாராமாராமாரா
மாகோபாலாமாவாவாய்.

இ-ள். மெச்சு-(தேவர்முனிவர் முதலிய யாவரும்) மெச்சுகின்றபுகழ் கீர்த்தியையுடைய, வேங்கடவா-திருவேங்கடமுடையானே, என் இச்சையில்-என் விருப்பப்படி, வெண்பாவின் பாதியில்-பாதிவெண்பாவில், உன் சென்மம் எடுக்க-உன் திருவவதாரம் பத்தையுமெடுத்துக் கூறுதற்கு, வா-கிருபைசெய்ய எழுந்தருள்வாய், மச்சா-மச்சாவதாரத்தைச் செய்தவனே, கூர்மா-கூர்மாவதாரத்தைச்செய்தவனே, கோலா - வராஹாவதாரத்தைச் செய்தவனே, சிங்கா-நரசிங்கனே, வாமா - வாமநனே, ராமா-பரசுராமா ராமா-தசரதராமா, ராமா-பலராமா, கோபாலா-கிருஷ்ணா, மாஆவாய்-இனிக்கற்கி அவதாரஞ்செய்யப் போகிறவனே. எ-று.

மச்சம்-மீன். கூர்மம்-ஆமை. கோலம் - பன்றி. வாமநம் -குறள். மா-குதிரை. இந்த அவதாரம் இனிச்செய்யப்போகிற தாதலால் ஆவாய் என எதிர்காலத்தாற் கூறினார்.

அறுபத்துநான்கு தண்டிகைப்புலவர்களில் ஒருவர், இராசிகளின் பெயரும், முறையும், தொகையும் அடைமொழியில்லாமல் ஒரு வெண்பாவமைத்துப் பாடவேண்டுமென, முதலில் பகருங்கால்என்றும், இறுதியில் பன்னிரண்டும் வசையறுமிராசிவளம் என்றும், சேர்த்துப் பாடியது.

2. பகருங்கான்மேடமிடபம்மிதுனங்கர்க்க
டகஞ்சிங்கங்கன்னிதுலாம்விர்ச்-சிகந்த
நுசுமகரங்கும்பமீனம்பன்னிரண்டும்
வசையறுமிராசிவளம்.

இ - ள். வெளிப்படை.

ஒருவர், மும்மூர்த்திகளின்பெயர், அவர்கள் தின்னுங்கறி, உண்ணு முணவு, ஏந்தும் ஆயுதம், பூணும் பூஷணம், ஏறும்வாகநம், வசிக்குமிடம் இவைகளை ஒரு வெண்பாவிலடக்கிப் பாடவேண்டுமெனப் பாடியது.

3. சிறுவனளைபயறுசெந்நெற்கடுகு
மறிதிகிரிதண்டுமணிநூல்-பொறியரவம்
வெற்றேறுபுள்ளன்னம்வேதனரன்மாலுக்குக்
கற்றாழம்பூவே கறி.

இ-ள். வேதன் அரன்மாலுக்கு-பிரமன் சிவன் விஷ்ணு என்னும் மூவருக்கும், கறி-கறிகளாவன, பயறு சிறுவன் அளை - பயறு பிள்ளை வெண்ணெய் இம்மூன்றுமே; (உணவு) உணவுகளாவன, செந்நெல் கடுகு - செந்நெல்விஷம் பூமி இம்மூன்றுமே; (ஆயுதம்) ஆயுதங்களாவன, தண்டு மறி திகிரி-தண்டம் மான் சக்கரம் இம்மூன்றுமே; (பூஷணம்) - பூஷணங்களாவன, நூல் பொறி அரவம் மணி - உபவீதம் புள்ளிகளையுடைய பாம்பு கௌஸ்து பரத்நம் இம்மூன்றுமே; (வாகநம்) - வாகனங்களாவன, அன்னம் வெற்றேறுபுள்-அன்னம் வெள்ளிய இடபம் கருடன் இம்மூன்றுமே; (இடம்) இடங்களாவன, பூ கல்தாழ் அம்-தாமரைமலர் கைலைமலைஆழ்ந்த பாற்கடல் இம்மூன்றுமே. எ-று.

ஒருவர் ஈயெற மலைகுலுங்கப் பாடுகவெனப் பாடியது.

4. வாரணங்களெட்டுமகமேருவுங்கடலும்
தாரணியுமெல்லாஞ்சலித்தனவால்-நாரணனைப்
பண்வாயிடைச்சிபருமத்தினாலடித்த
புண்வாயிலீமொய்த்தபோது.

இ-ள். நாரணனை-(திருவாய்ப்பாடியில்கண்ணனாயவதரித்திருந்தஸ்ரீமந் நாராயணனை, பண்வாய் இடைச்சி-இசைபோலுஞ்சொல்லையுடைய யசோதைப்பிராட்டி, பருமத்தினால் அடித்த-பருத்தமத்தினா லடித்ததனா லுண்டாகிய, புண்வாயில்-புண்ணினிடத்து, ஈமொய்த்தபோது - ஈக்கள்மொய்க்க அருவருத்தசைந்தபோது, வாரணங்கள் எட்டும்-திக்குயானைகள் எட்டும், மகமேருவும், மகாமேருமலையும், கடலும் - எழ்கடலும், தாரணியும் உலகங்களும் ஆகிய, எல்லாம்-எல்லாப்பொருள்களும் சலித்தன - அசைந்தன. எ-று.

ஆல்-அசை. எல்லாவுலகங்களும் அவற்றிலுள்ள திக்குயானைகள் முதலியவும் இறைவனது திருவயிற்றில் வைத்துக் காக்கப்படும் பொருள்களாதலால் அவனசைந்தபோது அவையும் அசைந்தனவென்க.

ஒருவர் குடத்திலே கங்கையடங்கும் எனப்பாடுகவெனப்பாடியது.

5. விண்ணுக்கடங்காமல்வெற்புக்கடங்காமல்
மண்ணுக்கடங்காமல்வந்தாலும்-பெண்ணை

இடத்திலேவைத்தவிறைவர்சடாம
குடத்திலேகங்கையடங்கும்.

இ-ள். கங்கை-கங்காநதியானது, விண்ணுக்கு அடங்காமல்-ஆகாயத்திலடங்காமலும், வெற்புக்கு அடங்காமல் - மலைகளிலடங்காமலும், மண்ணுக்கு அடங்காமல்-பூமியிலடங்காமலும், வந்தாலும்-பெருகிவரினும்,பெண்ணை - உமாதேவியை, இடத்திலேவைத்த - இடப்பாகத்திலிருத்தின, இறைவர்-பரமசிவனது, சடாமகுடத்திலே அடங்கும் - சடையாகிய கிரீடத்தில் அடங்கும். எ-று.

ஒருவர் அடைசொல்லில்லாமல் ஒன்றுமுதல் பதினெட்டுவரையில்
ஒரு வெண்பாவிலடக்கிப் பாடுகவெனப் பாடியது.

6. ஒன்றிரண்டுமூன்றுநான்கைந்தாறுஏழெட்டு
ஒன்பதுபத்துப்பதினொன்று-பன்னி
ரண்டுபதின்மூன்றுபதினான்குபதினைந்துபதி
னாறுபதினேழ்பதினெட்டு.

இ - ள். வெளிப்படை.

ஒருவர் கடலின் நடுவில் செந்தூள் எழுந்ததாகக் கற்பித்துப்
பாடவேண்டுமெனப் பாடியது.

7. சுத்தபாற்கடலினடுவினிற்றூளி
தோன்றியவதிசயமதுகேள்
மத்தகக்கரியையுரித்தவன்மீது
மதன்பொருதழிந்திடுமாற்றம்
வித்தகக்கமலைசெவியுறக்கேட்டாள்
விழுந்துநொந்தயர்ந்தழுதோங்கிக்
கைத்தலமலரான்மார்புறப்புடைத்தா
ளெழுந்ததுகலவையின்செந்தூள்.

இ-ள். சுத்தம்-பரிசுத்தமாகிய, பால்கடலின் நடுவினில் - திருப்பாற்கடலினிடையே. தூளிதோன்றிய-செந்தூள் எழுந்த, அதிசயமதுகேள்-அதிசயத்தைக்கேட்பாய், மத்தகம் கரியை உரித்தவன்மீது-மஸ்தகத்தையுடைய யானையையுரித்தவனாகிய சிவபெருமான்மீது, மதன்பொருது-மன்மதன் போர்புரிந்து, அழிந்திடும் மாற்றம் - இறந்தசெய்தியை, வித்தகம் கமலை-அறிவினையுடைய திருமகள், செவி உறகேட்டாள்-காதிற்பொருந்தக்கேட்டு, விழுந்து - கீழேவிழுந்து, நொந்து - மனம்நொந்து, அயர்ந்து அழுது-சோர்ந்தழுது, ஓங்கி-உயரத்தூக்கி, கைத்தலம் மலரால்-தாமரைமலர்போன்ற கைகளால், மார்பு உறப்புடைத்தாள் - மார்பில் படும்படி அறைந்து கொண்டாள், (அதனால்) கலவையின் செந்தூள்-(அந்தமார்பில் பூசப்பட்டிருந்த) கலவைச் சந்தநத்தின் செந்தூளானது, எழுந்தது - மேலெழுந்து பரந்தது. எ-று.

புத்திரசோகம் கொடிதாதலால் இவள்பேரறிவை யுடையளாயிருந்தும் இவ்வாறு சோகித்தாள் என்றதாயிற்று.

ஒருவர் ஆமணக்குக்கும்-யானைக்கும் சிலேடை
பாடவேண்டுமெனப்பாடியது.

8. முத்திருக்குங்கொம்பசைக்குமூரித்தண்டேந்திவரும்
கொத்திருக்குநேரார்குலைசாய்க்கும்-எத்திசைக்கும்
தேமணக்குஞ்சோலைத்திருமலைரா யன்வரையில்
ஆமணக்குமால்யானையாம்.

இ-ள். எத்திசைக்கும்-எந்ததிசையிலும், தேமணக்குஞ்சோலை-மணம் வீசுகின்ற சோலைசூழ்ந்த, திருமலைராயன்வரையில் - திருமலை ராயனது மலையின்கண், ஆமணக்கும் - ஆமணக்குஞ்செடியும், மால்யானை ஆம் - மத மயக்கங்கொண்ட யானையைநிகர்க்கும்.

மால்-பெரிய எனினுமாம், அடியில்வருமாறு சிலேடைப்பொருள்கொள்க.

ஆமணக்கு.

முத்து இருக்கும் - முத்தென்றுவழங்கும் விதையையுடையதா யிருக்குங்கொம்பு அசைக்கும்-கிளையசையாநிற்கும், மூரித்தண்டேந்திவரும்-நெரிதலையுடைய குழலுள்ள தண்டினால் தாங்கப்பட்டுவளரும், கொத்துஇருக்கும்-காய்கொத்துகளை யுடைத்தாயிருக்கும், நேர் ஆர் குலை சாய்க்கும்-நேர்மையுள்ள குலைகளைச் சாய்க்கும்.

யானை.

முத்துஇருக்கும் கொம்பு அசைக்கும் - முத்துள்ள தன் கொம்புகளை அசைக்கும். மூரித்தண்டு ஏந்திவரும்-வலிமையாகிய இருப்புலக்கையைத் துதிக்கையிலேந்திவரும், கொத்துஇருக்கும்-மத்தகத்தில் பாகன் அங்குசத்தால் கொத்துங் கொத்துக்களோடு கூடியிருக்கும், நேரார்குலை சாய்க்கும்-பகைவர் கூட்டங்களைமுறிய அடிக்கும், எ-று.

யானைக்கொம்பில் முத்துண்டாவது மரபாதலால் முத்திருக்குங் கொம்பு என்றார்.

ஒருவர் வைக்கோலுக்கும்-யானைக்கும் சிலேடையாகப்
பாடவேண்டுமெனப் பாடியது.

9. வாரிக்களத்தடிக்கும்வந்துபின்புகோட்டைபுகும்
போரிற்சிறந்துபொலிவாகும்-சீருற்ற
செக்கோலமேனித்திருமலைராயன்வரையில்
வைக்கோலுமால்யானையாம்.

இ-ள். சீர் உற்ற-சிறப்புமிகுந்த, செம்மை கோலம்மேனி - செம்மையாகிய அழகிய திருமேனியையுடைய, திருமலைராயன் வரையில்-திருமலைராயனது மலையின்கண், வைக்கோலும் மால்யானை ஆம் வைக்கோலும் மால்யானையை நிகர்க்கும்.

செங்கோலம்-செக்கோலம் என வலித்தல் பெற்றது.

வைக்கோல்.

வாரிக்களத்து அடிக்கும்-(உழவர்களால்) வாரியெடுத்து நெற்களத்தில் அடிக்கப்படும் பின்புவந்து கோட்டைபுகும் - பிறகு அங்கு நின்றும் கொண்டுவந்து கோட்டையாகக் கட்டிச்சேர்க்கப்படும், போரில் சிறந்து பொலிவு ஆகும். போர்களாகி மேம்பட்டு பொலிவையடையும்.

யானை.

களத்துவாரி அடிக்கும்-போர்க்களத்தில் (பகைவரை) வாரி நிலத்திலறையும், பின்பு வந்து கோட்டைபுகும் - (பகைவரைமுடித்த) பிறகுகோட்டையில் பிரவேசிக்கும், போரில்சிறந்து பொலிவு ஆகும்-போரில்(வெற்றி) மிகுந்துவிளங்கும், எ-று.

ஒருவர்பாம்புக்கும் - எள்ளுக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

10. ஆடிக்குடத்தடையுமாடும்போதேயிரையும்
மூடித்திறக்கின்முகங்காட்டும்-ஓடிமண்டை
பற்றிற்பரபரெனும்பாரிற்பிண்ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம்பெள்ளெனவேயோது.

இ-ள். ஆடிகுடத்து அடையும் படமெடுத்தாடிக் குடத்திற்சேரும், ஆடும்போதே இரையும்-ஆடும்போதே இரைச்சலிடும், மூடிதிறக்கின்முகங் காட்டும்-பெட்டிமுதலியவற்றிலிட்டு மூடித்திறந்தால் தலையை நீட்டிக்காட்டும், ஓடிமண்டைபற்றின் பரபரெனும்-(கடித்தவுடனே அதன்விஷமானது) ஏறிமண்டையிற் பற்றினால் பரபரென்று தினவுண்டாகும், பாரில் பிள் நாக்கும் உண்டாம் - உலகில் அதற்குப்பிளவாகிய நாக்குமுண்டாயிருக்கும்.

எள்.

ஆடிகுடத்து அடையும்-செக்கிலிட்டாட்டப்பட்டு அதின் சாரமாகிய எண்ணெய்குடத்திற்சேரும், ஆடும்போதே இரையும் - செக்காடும்போதே சத்திக்கும், மூடித்திறக்கின் முகம்காட்டும்-குடத்திற் பெய்துமூடி (நுரையடங்கினபிறகு) திறந்துபார்த்தால் பார்த்தவர்களுடைய முகச்சாயையைத்தனக்குள்ளேகாட்டும், ஓடிமண்டைபற்றின பரபரெனும் - (அது உச்சியில்வார்க்கப்படுமானால்) பரவியோடி மண்டையிற்பற்றின் பரபரென்று ஊரலெடுக்கும், பிண்ணாக்கும் உண்டாம்-(அதனிடத்து)பிண்ணாக்குமுண்டாகும், (ஆதலால்) உற்றிடுபாம்பு - (உவமையாற்) பொருந்துகின்ற பாம்பை, எள் எனவே ஓது-எள்ளென்றேகூறு, எ-று.

ஒற்றுமைப்பற்றி எள்ளையும் எண்ணெயும் அபேதமாகக்கூறினர்.

ஒருவர் பாம்புக்கும்-எலுமிச்சம் பழத்துக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

11. பெரியவிடமேசேரும்பித்தர்முடியேறும்
அரியுண்ணுமுப்புமேலாடும்-எரிகுணமாம்
தேம்பொழியுஞ்சோலைத்திருமலைராயன்வரையில்
பாம்புமெலுமிச்சம்பழம்.

இ-ள். தேகம்பொழியும் சோலை-தேனைச்சொரிகின்ற சோலைசூழ்ந்த, திருமலைராயன்வரையில்-திருமலைராயனது வெற்பின்கண், பாம்பும் எலுமிச்சம்பழம்-பாம்பும் எலுமிச்சம்பழத்துக்கு நிகராகும்.

பாம்பு.

பெரியவிடமே சேரும்-மிகுந்த நஞ்சைப்பொருந்தி யிருக்கும், பித்தர் முடி ஏறும்-சிவபெருமானது திருமுடிமீதேறப்பெறும், அரிஉண்ணும்-காற்றையுட்கொள்ளும், உப்பும்-அதனால் உடம்பு ஊதும், மேல் ஆடும்-மேலெழுந்தாடும், எரிகுணம்-ஆம்-கோபித்துச்சீறுங்குணமுளதாகும்.

எலுமிச்சம்பழம்.

பெரிய இடமேசேரும்-ராஜசமுகமுதலியபெரிய இடங்களிற்சேரும், பித்தர்முடிஏறும்-பித்தர்தலைமீது பித்தசாந்தியின்பொருட்டு சாறு பிழிந்தேற்றப்படும், அரியுண்ணும்-ஊறுகாயின்பொருட்டு அரிகருவியால் அரியப்படும், மேல்உப்புஆடும் - அதின்பிறகு உப்பிட்டுக்குலுக்கப்படும், எரிகுணம் ஆம்-அதின்சாறு இரணத்திற்பட்டால் எரியுங்குணமுடையதாகும்.

ஒருவர் மலைக்கும்-சந்திரனுக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

12. நிலவாய்விளங்குதலானீள்வான்படிந்து
சிலபோதுலாவுதலாற்சென்று-தலைமேல்
உதித்துவரலாலுயர்மாமலையை
மதிக்குநிகராகவழுத்து.

இ-ள். உயர்மா மலையை-உயர்ந்தபெரிய மலையை, மதிக்கு நிகர் ஆக வழுத்து-சந்திரனுக்கு உவமையாகக்கூறு.

மலை.

நிலம்வாய் விளங்குதலால்-பூமியினிடத்துவிளங்குதலால், சிலபோது நீள்வான்படிந்து உலாவுதலால்-சிலகாலம் பெரியமேகங்கள் தன்னிடத்து வந்து படிந்துலாவப்பெறுதலால், தலைமேல்சென்று உதித்துவரலால்-சிகரங்கள் ஆகாயத்திற்செல்ல வளர்ந்துவருதலால்.

சந்திரன்.

நிலவு ஆய்விளங்குதலால் நிலாவினையுடைத்தாய்ப் பிரகாசித்தலால், சிலபோது நீள்வான்படிந்து உலாவுதலால் - சிலநாள் நீண்ட ஆகாயத்திற் படிந்து சஞ்சரித்தலால், சென்று உது அலைமேல் உதித்துவரலால்-அஸ்தமித்துப்போய் மறுநாள் இந்தக்கடல்முகட்டில் உதயமாகிவருதலால்,எ-று.

ஒருவர் தேங்காய்க்கும்- நாய்க்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

13. ஓடுமிருக்குமதனுள்வாய்வெளுத்திருக்கும்
நாடுங்குலைதனக்குநாணாது-சேடியே
தீங்காயதில்லாத்திருமலைராயன்வரையில்
தேங்காயுநாயுமிணைசெப்பு.

இ-ள். சேடியே-தோழீ, தீங்கு ஆயது இல்லா - தீமையில்லாத, திருமலைராயன்வரையில்-திருமலைராயனது மலையின்கண், தேங்காயும் நாயும் இணைசெப்பு-தேங்காயையும் நாயையும் ஒப்பாகக்கூறு.

தேங்காய்.

ஓடும் இருக்கும் - (காயேயன்றி) ஓடும் தன்னிடத்திருக்கப்பெறும். அதன்உள்வாய் வெளுத்து இருக்கும்-அதின் உட்புறம்வெளுத்திருக்கும் நாடுங்குலைதனக்கு நாணாது-(யாவரும்) விரும்புதற்குரிய பெருங்குலை விடுதலால்வளையாது.

நாய்.

ஓடும்-(சிலநேரம்) ஓடித்திரியும், இருக்கும்-(சிலநேரம்)இருந்தஇடத்திற்றானேயிருக்கும், அதன்வாய் உள்வெளுத்து இருக்கும்-அதின்வாயின் உள்ளிடம் வெளுத்திருக்கும், நாடும்-(புதியர்வரக் காணின்) உற்றுப்பார்க்கும், குலைதனக்கு நாணாது-பார்த்தபிறகு குறைக்குந் தொழிலில் சற்றும் பின்னிடாது, எ-று.

ஒருவர் மீனுக்கும்-பேனுக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

14. மன்னீரிலேபிறக்குமற்றலையிலேமேயும்
பின்னீச்சிற்குத்தும்பெருமையால்-சொன்னேன்கேள்
தேனுந்துசோலைத்திருமலைராயன்வரையில்
மீனும்பேனுஞ்சரியாமே.

இ-ள். தேன் உந்துசோலை-தேன்பாய்கின்ற சோலைசூழ்ந்த, திருமலைராயன்வரையில்-திருமலைராயனதுமலையின்கண், மீனும்பேனும் சரி ஆம்-மீனும்பேனும் ஒன்றற்கொன்று நிகராகும்,சொன்னேன்கேள்-சொன்னேன் நீ கேட்பாயாக.

மீ ன்.

மன் ஈரிலேபிறக்கும்-பெருமையுள்ள நீரினிடத்தில் உற்பத்தியாகும், அலையிலேமேயும் - அந்தநீரலைகளில்மேய்ந்து கொண்டிருக்கும், (அப்படி மேயுமிடத்தில் ஏதாயினும் அரவம்கண்டால்) பின்நீச்சின் குத்தும் - பின் நீச்சினால் குத்தியோடும்.

பே ன்.

மன் ஈரிலேபிறக்கும்-மிகுதியாக ஈரினிடத்துண்டாகும், மல்தலையிலேமேயும்-வலிமையாகியதலையோட்டின்மீது மேயும், பின்ஈச்சின்குத்தும் பிறகுபெண்களால் ஈச்சென்றவாயின் ஒலிக்குறிப்போடுகுத்தி நாசம் பண்ணப்படும், பெருமையால்-இந்தப்பெருமையினால், எ-று.

ஒருவர் ஆட்டக்குதிரைக்கும்-காவிரியாற்றுக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

15. ஓடுஞ்சுழிசுத்தமுண்டாகுந் துன்னலரைச்
சாடும்பரிவாய்த்தலைசாய்க்கும்-நாடறியத்
தேடுபுகழான் றிருமலைராயன்வரையில்
ஆடுபரிகாவிரியாமே.

இ-ள். நாடு அறியதேடுபுகழான்-தேசமெல்லாமறியும்படித் தேடின பெரும்புகழை யுடையவனாகிய, திருமலைராயன் வரையில் திருமலைராயன துவரையகத்தில், ஆடுபரி ஆட்டக்குதிரை, காவிரியாறு ஆம்-காவிரியாற்றிற்கு நிகராகும், எ-று.

ஆட்டக்குதிரை.

ஓடும்-வேகமாயோடும், சுத்தம் சுழிஉண்டாகும்-சுத்தமான சுழிகளையுடைத்தாயிருக்கும், துன்னலரைசாடும்-பகைவரைமுறிய அடிக்கும், பரிவாய்தலைசாய்க்கும்-(காண்பவருக்கு) விருப்ப முண்டாகத் தலைவளைத்து நடக்கும்.

காவிரியாறு.

ஓடும்-(நீர்பெருகிய) ஓடும், சுழி (உண்டாகும்) நீர்ச்சுழிகளையுடைத்தாயிருக்கும், சுத்தம் உண்டாகும் - தன்னிடத்தில் மூழ்கினவர்களுக்குப் பரிசுத்தத்தையுண்டாக்குந் தன்மையை யுடைத்தாயிருக்கும், துன் அலரைசாடும் நெருங்கிய மலர்களை யலைத்தெறியும், பரிவாய்த்த அலைசாய்க்கும்-குதிரையுருவாய்ந்த அலைகளை மடக்கிவீசும், (ஆதலால்,) எ-று.

வாய்த்தலையென்பதில் வாய்த்த என்னும்பெயரெச்சத்தகரம் தொகுத்தது.

ஒருவர் கீரைப்பாத்திக்கும்-ஏறுகுதிரைக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

16. கட்டியடிக்கையாற்கான்மாறிப்பாய்கையால்
வெட்டிமறிக்கின்றமேன்மையால்-முட்டப்போய்
மாறத்திரும்புகையால்வண்கீரைப்பாத்தியுடன்
ஏறப்பரியாகுமே.

இ-ள். வள் கீரைப்பாத்தியுடன்-வளமாகிய கீரைப்பாத்தியோடு, ஏறு அப்பரி ஆகும்-ஏறுதற்குரிய அந்தக் குதிரையானது சமமாகும்.

கீரைப்பாத்தி.

கட்டி அடிக்கையால் - நிலத்தைக்கொத்தி மண் கட்டிகளை அடித்துடைக்கையால், கால் மாறிபாய்கையால்-ஒரு வாய்க்காலிலிருந்து மற்றொரு வாய்க்காலில் நீர் மாறிற்பாய்தலால், வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - சதுரஞ் சதுரமாக வெட்டித் தடுக்கப்படுகின்ற மேன்மையால், முட்டப்போய் மாறத்திரும்புகையால்-கடை மடையில் முட்டும்படி நேரே சென்று (அங்கிருந்து) மாறிவிடத் திரும்புதலால்.

ஏறுகுதிரை.

கட்டி அடிக்கையால்-கட்டிக்கொட்படிக்கப்படுதலால், கால் மாறிப் பாய்கையால்-கால் மாறிமாறியெழுந்து பாய்ந்து செல்லுதலால், வெட்டி மறிக்கின்ற மேன்மையால் - (தன்மேலேறியவீரன் பகைவரை) வெட்டித் திரும்புகின்ற மேன்மை யுடைத்தாதலால், முட்டப்போய் மாறத்திரும்புகையால்-போகவேண்டிய இடமுழுதும்போய் மீளத் திரும்பிவருவதால்.

கொட்படித்தல்-குதிரைத் திருப்பும்பொழுது அது உடனே திரும்பப்பழகுதற்குக் கழுத்திற்கயறுகட்டிச் சாட்டைகொண்டு சுற்றிச்சுற்றி யடித்தல்.

ஒருவர் ஆட்டுக்கும்-குதிரைக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

17. கொம்பிலேயேதீனிதின்னுங்கொண்டதன்மேல்வெட்டுதலால்
அம்புவியினன்னடையதாதலால்-உம்பர்களும்
தேடுநற்சோலைத்திருமலைராயன்வரையில்
ஆடுங்குதிரையுநேராம்.

இ-ள். உம்பர்களும் தேடும்-தேவர்களும் தேடிவருதற்குரிய,நல்சோலை அழகாகிய சோலைகள் சூழ்ந்த, திருமலைராயன்வரையில்- திருமலைராய

னது வெற்பகத்தில், ஆடும் குதிரையும் நேர் ஆம்-ஆடும் குதிரையும் ஒன்றுக்கொன்று சமானமாகும்.

ஆ டு.

கொம்பு இலையே தீனிதின்னும்-நுனிக்கொம்பிலுள்ள இலைகளையே இரையாகத்தின்னும், கொண்டதன்மேல் வெட்டுதலால்-(இடையனிடத்தில்பணங்கொடுத்து) வாங்கிக்கொண்டபிறகு வெட்டப்படுதலால், அம்புவியில் நல்நடையது ஆதலால்-உலகத்தில் (இடையர்களுக்கு) நல்லசெல்வமாதலால்.

உலகியல்கள் யாவும் முட்டின்றி நடத்தற்குக் கருவியாதலால் செல்வம் நடையெனப்பட்டது.

கு தி ரை.

கொம்பு இல்லை-(இதற்குக் கொம்பு இல்லை, தீனிதின்னும், தீனியைத்தின்னும், அதன்மேல்கொண்டு வெட்டுதலால் - (போர்வீரன்) அதனையூர்ந்துசென்று (பகைவரை) வெட்டுதலால், அம்புவியில் நல்நடையது ஆதலால் பூமியில் அழகாகிய நடைகளையுடையதாதலால், எ-று.

ஒருவர் துப்பாக்கிக்கும்-ஓலைச்சுருளுக்கும் சிலேடையாகப்
பாடவேண்டுமெனப் பாடியது.

18. ஆணிவரையுறலாலானகுறிப்பேதரலால்
தோணக்கருமருந்தைத்தோய்ந்திடலால்-நீணிலத்தில்
செப்பார்க்குதவாத்திருமலைராயன்வரையில்
துப்பாக்கியோலைச்சுருள்.

இ-ள். நீள் நிலத்தில்-பெரியவுலகத்தில், செப்பார்க்குஉதவா-தன்னைப்புகழாத பகைவர்களுக்கு உபகரியாத, திருமலைராயன்வரையில் - திருமலைராயனது மலையின்கண், துப்பாக்கி ஓலைச்சுருள்-துப்பாக்கியும் ஓலைச்சுருளும் ஒன்றற்கொன்றிணையாகும்.

துப்பாக்கி.

ஆணிவரை உறலால்-இருப்புச் சலாகையைத் தன்னிடத்திற்கொண்டிருத்தலால், ஆனகுறிப்பேதரலால்-சுடுவோன் குறித்ததாகிய லட்சயத்தையே இலக்காக்குதலால், தோணகருமருந்தை தோய்ந்திடலால்-மிகுதியாகக் கரியமருந்தைப் பொருந்துதலால்.

ஓலைச்சுருள்.

ஆணிவரை உறலால் - எழுத்தாணியைக் கொண்டெழுதப்படுதலையுடைத்தாதலால், ஆனகுறிப்பேதரலால்-தன்னிடத் தெழுதப்பட்டதாகிய

குறிப்பைப் பிறர்க்குத் தெரிவித்தலால், தோணகருமருந்து தோய்ந்திடலால்-தன்னிடத்தெழுதப்பட்ட எழுத்து படிப்போர்க்கு நன்றாகத்தோன்றும்படி மைக்காப்புச்செய்யப்பெறுதலால், எ-று.

ஒருவர் வானவில்லுக்கும்-விஷ்ணுவுக்கும் வெற்றிலைக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

19. நீரிலுளதானிலம்பச்சையாற்றிருவால்
பாரிற்பகைதீர்க்கும்பான்மைபால்-சாருமனுப்
பல்வினையைமாற்றுதலாற்பாரீர்பெருவான
வில்வண்டுநேர்வெற்றிலை.

இ-ள். பெருவானவில் பெரியவில்லும், விண்டு-விஷ்ணுவும், வெற்றிலை-வெற்றிலையும், நேர்-ஒன்றுக்கொன்று நிகர்த்திருப்பன,(இதனை)பாரீர்-(உகைத்தாரே) பாருங்கள்.

வானவில்.

நீரில் உளதால்-நீர்கொண்டமேகத்திலுண்டாதலால், நிறம்பச்சையால்-பச்சைநிறமுடைமையால், திருவால் அழகாயிருப்பதால், பாரில் பகைதீர்க்கும் பான்மையால் பூமிக்குவிரோதமாகிய கோடைப்பகையை நீக்குந்தன்மையால், சாரும் மனுபல்வினையைமாற்றுதலால் - (உலகத்தில்) பொருந்தியமனிதர்களுடைய பலதுன்பங்களையும் நீக்குதலால்.

விஷ்ணு.

நீரில் உளதால்-பிரளயவெள்ளத்திலும் அழியாதிருத்தலால், நிறம்பச்சையால் பச்சை நிறமுடைமையால், திருவால் திருமகளையுடைமையால் பாரில் பகைதீர்க்கும் பான்மையால் உலகத்தில் (தேவர் முனிவருக்குப்) பகைவராகிய அரக்கரையழிக்குந்தன்மையால், சாரும்மனுபல்வினையை மாற்றுதலால் - தன்னையடைந்த பிரஜைகளுடைய பலபாவங்களையுமொழித்தலால்.

வெற்றிலை.

நீரில் உளதால்-நீர்க்கால்களில் இருப்பதனால், நிறம்பச்சையால் - பச்சை நிறத்தால், திருவால்-மங்களகரமாதலால், பாரில்பகைதீர்க்கும் பான்மையால்-உலகத்தில் (ஒருவரோடொருவர்க்குள்ள) பகைத் தன்மையையொழித்துச் சமாதானப்படுத்துந் தன்மையால், சாரும் மனுபல்வினையை மாற்றுதலால்-உலகிற் பொருந்திய மக்கட்டொகுதியின் தந்தரோகத்தை நீக்குதலால், எ-று.

ஒருவர்-பூசுணிக்காய்க்கும்-பரமசிவனுக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப்பாடியது.

20. அடிநந்திசேர்தலாலாகம்வெளுத்துக்
கொடியுமொருபக்கத்திற்கொண்டு-வடிவுடைய
மாசுணத்தைப்பூண்டுவளைத்தழும்புபெற்றதனுல்
பூசுணிக்காயீசனெனப்போற்று.

இ-ள். பூசுணிக்காய்-பூசுணிக்காயையும், ஈசன் எனப்போற்று-பரமசிவனெனமதித்து வணங்கு.

பூசுணிக்காய்.

அடிநந்திசேர்தலால்-அடியில்காம்பு பொருந்துதலால், ஆகம்வெளுத்து கொடியும் ஒருபக்கத்திற் கொண்டுவடிவுடைய மாசுண்ணத்தைப்பூண்டுவளைத்தழும்பு பெற்றதனுல்-உடல்வெளுத்து ஒருபக்கத்தில் கொடியையுங்கொண்டு அழகையுடைய வெண்சுண்ணத்தை மேற்புறத்தணிந்துவளைவாகிய தழும்புகளைப் பெற்றிருத்தலால்.

பரமசிவன்.

அடிநந்திசேர்தலால்-தன்கீழே இடபம் சேர்ந்திருத்தலால், ஆகம்வெளுத்துகொடியும் ஒருபக்கத்திற் கொண்டுவடிவுடைய மாசுணத்தைப்பூண்டுவளைத்தழும்புபெற்றதனுல்-திருநீறுபூசுதலால் திருமேனிவெளுத்து ஒருபாகத்தில் பூங்கொடிபோல் வாளாகிய உமாதேவியை வைத்துக்கொண்டு அழகையுடைய சர்ப்பாபரணத்தைப்பூண்டு காமாக்ஷியம்மையாரது வளைத்தழும்பையும் பெற்றிருத்தலால். எ-று.

ஒருவர் ஒருவெண்பாவில் ஐந்து டு வரப் பாடவேண்டுமெனப் பாடியது.

21. ஓகா மா வீ தோ நேரொக்க டு டு டு டு டு
நாகார்குடந்தைநகர்க்கிறைவர்-வாகாய்
எடுப்பர்நடமிடுவரேறுவரன்பர்க்குக்
கொடுப்பரணிவர்குழை.

இ-ள். நாகு ஆர்குடந்தை நகர்க்கு இறைவர் - இளமரசச் சோலைகள் நிறைந்ததிருக்குடந்தை நகரத்துத்தலைவராகியசிவபெருமானவர், ஓகாமாவீதோ-ஓகாமாவீதோ என்னுமிவ்வைந்தெழுத்துக்களும்,டுடுடுடுடு-டுடுடுடு என்னுமிவ் வைந்தெழுத்துக்களையும், நேர் ஒக்க - முறையே பொருந்தலால், (உண்டாகிய ஓடுகாடு மாடுவீடு தோடு என்னும் ஐந்துனுள் ஒன்

ருகிய) ஓடு-ஓட்டை, வாகுஆய்-அழகாக. எடுப்பர்-கைக்கொள்வர்-(ஒன்ரு கிய) காடு-சுடுகாட்டில், நடம்புரிவர்-நடனம்பண்ணுவர்,(ஒன்ருகிய) மாடு-இடபத்தின் மேல், ஏறுவர்-ஊர்வர், (ஒன்ருயே) வீடுமுத்தியை, அன்பர்க்குகொடுப்பர்-தம்மடியார்க்குத் தந்தருளுவர், (ஒன்ருகிய தோடு - காதணியை (குழையை) அணிவர்-காதில் தரிப்பார். எ-று.

நாகு ஆர் என்பதற்கு வயல்களில் சங்குகள்நிறைந்த எனினுமாம். குடந்தைநகர்-கும்பகோணம்.

ஒருவர்பச்சைவடம்பாகு சேலைசோமன் என்று
பாடவேண்டுமெனப் பாடியது.

22. மாயன்றுயின்றதுவுமாமலராள்சொல்லதுவும்
ஏயகுருந்திற்கொண்டேறியதும்-தூய
இடப்பாகன்சென்னியின்மேலேறியதுப் பச்சை
வடப்பாகுசேலைசோமன்

இ-ள். மாயன்துயின்றதுவும்-திருமால் மஹாப்பிரளயத்தில் திருக்கண் வளர்ந்ததும், மாமலராள் சொல்லதுவும்- பெருமையுள்ள தாமரை மலரையாதனமாக வுடையவளாகிய திருமகளதுசொல்லும், கொண்டுஏயகுறிந்தில்ஏறியதும்-கண்ணன் கவர்ந்துகொண்டு குருந்தமரத்தில்ஏறியதும், தூயை இடப்பாகன் சென்னியின்மேல் ஏறியதும்-பரிசுத்தையாகிய உமாதேவியை இடப்பாகத்திலிருத்திக்கொண்டவனுகிய பரமசிவனது திருமுடியின்மீதேறியதும், பச்சைவடம் பாகுசோலை சோமன் - (முறையே) பச்சைநிறமுள்ள ஆலிலையும் சர்க்கரைப்பாகும் சேலையும் சந்திரனும் ஆம்.

சேலை-கோபிகைகளை நாணச்செய்யக் கவர்ந்தபுடவை.

ஒருவர் பொன்னுவரையிலைகாய்பூவென்று பாடவேண்டுமெனப்பாடியது.

23. உடுத்ததுவுமேய்த்ததுவுமும்பர்கோன்றன்னுல்
எடுத்ததுவும்பள்ளிக்கியைப்-படுத்ததுவும்
அந்நாளெறிந்ததுவுமன்பினிரந்ததுவும்
பொன்னுவரையிலைகாய்பூ.

இ-ள். (திருமாலானவர்) உடுத்ததுவும்-ஆடையாயுடுத்ததும், மேய்த்ததுவும்-(க்ருஷ்ணவதாரத்தில்)மேய்த்ததும், உம்பர்கோன்தன்னுல் எடுத்ததுவும்-தேவர்கோனுகிய இந்திரன்பெய்வித்த நல்மழையைத் தடுக்கும் பொருட்டுக்குடையாயெடுத்துத் தாங்கியதும், பள்ளிக்கு இயைப்படுத்ததுவும்—(மஹாப்பிரளயத்தில்தன்) சயனத்துக்கிசையைக்கொண்டுபடுத்ததுவும், அந்நாள் எறிந்ததுவும்அக்காலத்தில் (கன்றைக்குணிலாகக்கொண்டு) எறிந்ததுவும், அன்பின் இரந்ததுவும் - விருப்பத்திஞல் மஹாபலியினிடத்

தில் யாசித்ததும், பொன் ஆவரை இலைகாய் பூ - (முறையே) பொன்னும் பசுக்களும்-(கோவர்த்தன)கிரியும்,ஆலிலையும், விளங்காயும், நிலமும், ஆம்.

ஒருவர் விநாயகர்க்கும்-முருகர்க்கும்-பரமசிவனுக்கும்-சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

24. சென்னிமுகமாறுளதாற் சேர்கரமுன்னாலுகையால்
இன்னிலத்திற்கோடொன்றிருக்கையால்-மன்னுகுளக்
கண்ணுறுதலானுங்கணபதியுஞ்செவ்வேளும்
எண்ணரனுநேராவரே.

விநாயகர்.

இ-ள். சென்னி முகம்மாறு உளதால்-தலையும் முகமும் மாறுயிருத்தலால், சேர்கரம் முன்நாலுகையால்-பொருந்திய துதிக்கையானதுமுற்புறத்தில் தொங்குதலால், இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால்-இவ்வுலகத்தில் ஒற்றைக்கொம்பு உண்டாயிருத்தலால், மன்னுகுளக் கண் உறுதலால்-நிலைபெற்ற வெல்லத்தினாற் செய்தவுருவத்தில் ஆவிர்ப்பவித்தலால்,

முருகர்.

சென்னிமுகம் ஆறு உளதால் - முடியும்முகமும் ஆறுண்டாதலால், சேர்கரம் முந்நாலுகையால்-சேர்ந்து ஒளியுள்ள பன்னிரண்டுகைகளுண்டாதலால், இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால்-இவ்வுலகத்தில் திருச்செங்கோடு என்னுந் தலமொன்றுண்டாயிருத்தலால், மன்னுகுளக்கண் உறுதலால்-நிலைபெற்ற சரவணப்பொய்கையில் அவதரித்தலால்.

பரமசிவன்.

சென்னிமுகம் ஆறு உளதால்-சிரசில் கங்காநதியிருத்தலால், முன் சேர்கரம் நாலுகையால்-முற்பக்கத்திற் சேர்ந்த ஒளியுள்ள நான்கு கைகளுண்டாதலால், இந்நிலத்தில் கோடு ஒன்று இருக்கையால் - இவ்வுலகத்தில் (கைலாச) மலையொன் றுண்டாயிருத்தலால், மன்னுகுளக்கண் உறுதலால்-நிலைபெற்ற நெற்றிக்கண்ணையுடைத் தாயிருத்தலால்.

இன்னிலம் என்பதில் பொருளுக்கிணங்க நகரனகரங்களையேற்றபெற்றிகொள்க.

ஒருவர் தை மாசி பங்குனிமாதம் என்று பாடவேண்டுமெனப் பாடியது.

25. பாணர்க்குச்சொல்லுவதும்பைம்புனலைமுடுவதும்
தாணுவுரித்ததுவுஞ்சக்கரத்தோன்-ஊணதுவும்

எப்மானையேத்துவதுமீசனிடத்துஞ்சிரத்தும்
தைம்மாசிபங்குனிமாதம்

இ-ள். பாணர்க்குச் சொல்லுவதும்-தையற்காரருக்குச் செய்யென்று சொல்லுவதும், தை - தையென்னுஞ்சொல்லே, பைம்புனலை மூடுவதும்-பசியநீரை மூடுவதும், மாசி பாசிக்கொத்துகளே, தானுஉரித்ததுவும்-சிவபெருமான் உரித்ததுவும்-இபம் - யானையையே, சக்கரத்தோன் ஊணதுவும்-சக்கராயுதத்தையுடைய திருமாலுக்கு உணவாவதும், கு-பூமியே, எம்மானை எத்துவதும் சிவபெருமானைத் துதிப்பதும், உன்னி-மனத்தில்நினைத்தே, ஈசன் இடத்தும்-சிவபெருமானது இடப்பாகத்திலிருப்பதும், மாது உமாதேவியே (ஈசன்) சிரத்தும்-சிவபெருமானது திருமுடியிலிருப்பதும், அம்-நீரே. எ-று.

ஒருவர் செருப்பு என்று எடுத்து விளக்குமாறு என்று முடிக்கவேண்டுமென அவ்வாறே பாடிமுடித்தது.

26 செருப்புக்குவீரர்களைச்சென்றுழக்கும்வேலன்
பொருப்புக்குநாயகனைப்புல்ல-மருப்புக்குத்
தண்டேன்பொழிந்ததிருத்தாமரைமேல்வீற்றிருக்கும்
வண்டேவிளக்குமாறே

இ-ள். செருபுக்குச் சென்று-போர்க்களத்திற் புகுந்துபோய், வீரர்களை உழக்கும்-வீரர்களைச் சிதறக்கலக்குகின்ற, வேலன் - வேலாயுதத்தையுடையவனான, பொருப்புக்கு நாயகனைப்புல்ல - குறிஞ்சிநிலத்தலைவனுமாகிய முருகவேளை நான்தழுவுதற்கு, மருபுக்கு வாசனைபொருந்தி, தண்தேன்பொழிந்த குளிர்ச்சியாகிய தேனைச்சொரிந்த, திருத்தாமரைமேல் வீற்றிருக்கும் அழகிய தாமரைமலர்மீது வீற்றிருக்கின்ற, வண்டே வண்டுகளே, ஆறுவிளக்கும் எனக்கு (அவனிருக்குமிடத்துச்செல்லும்,) வழியை விளங்கக்காட்டுங்கள். எ-று.

ஆறுவிளக்கும்-என்பதற்கு தழுவுதற்குரியவழி - (உபாயம்) விளங்கப்பண்ணும் எனினும், ஒழுங்காகச்சென்று என்மையலை அவனுக்கு விளங்கக்கூறும் எனினும், ஆறுகால்களால் விரைவாயோடி விளக்கும் எனினும் அமையும் இது வண்டுவிடுதூதென்று கொள்ளலாம்.

ஒருவர் பாம்புக்கும்-வாழைப்பழத்துக்கும் சிலேடையாகப் பாடவேண்டுமெனப் பாடியது.

27. நஞ்சிருக்குந்தோலுரிக்குநாதர்முடிமேலிருக்கும்
வெஞ்சினத்திற்பட்டான்மீளாது-விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ்சோலைத்திருமலைராயன்வரையில்
பாம்பாகும்வாழைப்பழம்.

இ-ள். விஞ்சும் மலர் தேம்பாயும் சோலை-மிகுதியாகிய பூந்தேன்பெருகிப்பாய்கின்ற சோலைகள்சூழ்ந்த, திருமலைராயன்வரையில்-திருமலைராயனது வெற்பின்கண், பாம்பு வாழைப்பழம் ஆகும்-பாம்பானது-வாழைப்பழத்தை நிகர்க்கும்.

பாம்பு.

நஞ்சு இருக்கும் - விஷத்தை யுடைத்தாயிருக்கும், தோல் உரிக்கும்-(பருவமறிந்து) சட்டையைக் கழற்றும், நாதர்முடிமேல் இருக்கும்-இறைவரது திருமுடிமீதிருக்கும், வெம்சினத்தில் பல்பட்டால் மீளாது-கொடியகோபத்தில்கடித்த அதன்பல்லானது பதிந்தால் விஷமிரங்காது.

மீளாது என்பதற்கு இறந்தவுயிர்திரும்பாது என்றலுமொன்று.

வாழைப்பழம்.

நஞ்சு இருக்கும்-நைந்திருக்கும், தோல் உரிக்கும் - தோலுகரிக்கப்படும், நாதர்முடிமேல் இருக்கும்-இறைவரது திருமுடிமீது அபிஷேகதிரவியமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும், வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது-பதார்த்தமாகுங்காலத்தில் பல்பட்டால் திரும்பாது. எ-று.

ஒருவர் கண்ணுடிக்கும்-அரசனுக்கும் சிலேடையாகப்
பாடவேண்டுமெனப் பாடியது.

28 யாவருக்கும்ரஞ்சனைசெய்தியாவருக்குமவ்வவராய்ப்
பாவனையாய்த்தீதகலப்பார்த்ததால்-மேவும்
எதிரியைத்தன்னுள்ளாக்கியேற்றரசத்தால்
சதிருறலாலாடியரசாம்.

இ-ள். ஆடி அரசு ஆம்-கண்ணுடியானது அரசனுக்குச் சமானமாகும்.

கண்ணுடி.

யாவருக்கும் ரஞ்சனைசெய்து யாவருக்கும் அவ்வவராய் பாவனையாய் தீது அரலபார்த்தலால்-எல்லார்க்கும் களிப்பையுண்டாக்கி எல்லார்க்கும் அவரவரைப்போலப் பிரதிபலித்து முகத்திலுள்ள களங்கம்நீங்கத்திருத்தமாகப்பார்க்கப்படுதலால், மேவும் எதிரியை தன் உள் ஆக்கி எற்றரசத்தால்வந்து எதிர்க்கபட்டவனுடைய சாயையைத் தனக்குள்ளேயடக்கத் தகுதியாகிய பாதரசம் பூசப்பட்டிருத்தலால், சதிர் உறலால் - அழகைப் பெற்றிருத்தலால்.

அரசன்.

யாவருக்கும் ரஞ்சனைசெய்து யாவருக்கும் அவ்வவராய் பாவனையாய் தீது அகலப்பார்த்தலால்-(தன்செங்கோலின்கீழ்வாழ்வார்)எல்லோர்க்கும்

சந்தோஷத்தை யுண்டாக்கி எல்லார்க்கும் அவரவர் தகுதிக்கேற்கத் தன்னைப்பாவித்து தன் நாட்டிலுள்ள தீமைகள்நீங்க நோக்குதலால், மேவும் எதிரியைதன் உள் ஆக்கி எற்ற ரசத்தால்- தன்மேல் போருக்குவருகின்ற பகைவனை உபாயத்தால்தன்வசப்படுத்தித்தகுதியாகிய ஈயத்தைக்கொண்டிருத்தலால், சதிர் உறலால் பெருமையடைந்திருத்தலால். எ-று.

ஒருவர் சிவபெருமானைக்குறித்து, நீறுவாய், நெருப்பாவாய், கூறுவாய், கொளுத்துவாய், நட்டமாவாய், நஞ்சாவாய், என்று ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடியது.

29. நீறுவாய்நெற்றிநெருப்பாவாயங்கமிரு
கூறுவாய்மேனிகொளுத்துவாய்-மாறாத
நட்டமாவாய்சோறுநஞ்சாவாய்நாயேனை
இட்டமாய்க்காப்பாயினி.

இ-ள். நெற்றி நீறு ஆவாய்-நெற்றியில் திருநீறுடையை யாவாய், அங்கம் நெருப்பு ஆவாய்-திருமேனி நெருப்புமயமாவாய், மேனி இருகூறு ஆவாய்-திருமேனி இருகூறுயிருப்பாய், கொளுத்துவாய், எரிந்துகொண்டிருப்பாய், மாறாத நட்டம் ஆவாய்-இடையறாத நடநத்தை யுடையையாவாய், நஞ்சுசோறு ஆவாய் - விஷத்தை உணவாகக் கொள்வோனுவாய், இனி-இனியாயினும், நாயேனை-நாயினேனை, இட்டமாய்க்காப்பாய்-அன்போடு காத்தருள்வாய். எ-று.

வெளிக் கிவ்வாறிருப்பினும் உள்ளிருக்குங்கருணையால் என்னைக்காக்கவேண்டும் என்பது கருத்து.

ஒருவர்யசோதைப்பிராட்டி கண்ணனைமத்தினலடித்ததைப்பற்றி யிரங்கி கூறியதாகப்பாடுகவெனப்பாடியது.

30. வண்ணங்கரியனென்றும்வாய்வேதநாறியென்றும்
கண்ணனிவனென்றுங்கருதாமல்-மண்ணை
அடிப்பதுமத்தாலேயளந்தானையாய்ச்சி
அடிப்பதுமத்தாலேயழ.

இ-ள். மண்ணை-பூமியை, அடிபதுமத்தாலே அளந்தானை திருவடித்தாமரையினல் அளந்தருளினவனை, இவன்-இவன் வண்ணம் கரியன் என்றும்-நிறத்தினற்கரியோனுகிய திருமால்என்றும், வாய்வேதம்நாறி என்றும்-திருவாயில் எல்லாவேதங்களும் பரிமளிக்கப் பெற்றவனென்றும், கண்ணன் என்றும்-எல்லாரினும் பெருமையுடையோ னென்றும், கருதாமல்-நினையாமல், ஆய்ச்சி-யசோதைப்பிராட்டியானவள், (கண்ணன்) அழ அழும்படி, மத்தாலே அடிப்பது-மத்தைக்கொண்டோ அடிப்பது (இது) என்ன அறியாமை.

பூஜித்து உஜ்ஜீவிக்கலாகாதோ என்பதுகருத்து, கண்ணன்-எல்லாருக்குங் கண்ணுயிருப்பவன், அன்றிக் கண்ணிலிருப்பவன்.

ஒருவர் போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவாள் அவாளாம் என்று பாடுகவெனப் பாடியது.

31. செற்றலரைவென்றதிருமலைராயன்கரத்தில்
வெற்றிபுரியும்வாளேவீரவாள்-மற்றையவாள்
போவாள்வருவாள்புகுவாள்புறப்படுவாள்
ஆவாளிவாளவாளாம்.

இ-ள். செற்றலரைவென்ற-பகைவரைவென்ற, திருமலைராயன்கரத்தில்-திருமலைராயன் கையிலுள்ள, வெற்றிபுரியும்வாளே - வெற்றியைக் கொடுக்கிறவாளே, வீரவாள்-வீரவாளாகும், மற்றையவாள் - மற்றயவாட்கள், போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள் ஆவாள் இவாள் அவாள்—, ஆம்-ஆகும். என்றவாறு.

திருமலைராயன்கையிலுள்ள வீரவாளேவாளாகும், மற்றையர் கையிலுள்ளவாட்களெல்லாம் போவாள் வருவாள் முதலியவாகப் பரிகசித்தற்குரியனவேயாமென்பது கருத்து.

ஒருவர் சிவன், முருகன், விநாயகன், திருமால், சிவனடியார், இவர்களுக்குத் தனித்தனியேஆறுதலை யுண்டென்று சொன்னம் வைத்துப் பாடுகவெனப்பாடியது.

32. சங்கரற்குமாறுதலைசண்முகற்குமாறுதலை
ஐங்கரற்குமாறுதலையானதே-சங்கைப்
பிடித்தோர்க்குமாறுதலைபித்தாநின்பாதம்
படித்தோர்க்குமாறுதலைபார்.

இ-ள். சங்கரற்கும் ஆறுதலை-சிவபெருமானுக்கும் கங்காநதி சிரசில் உண்டு, சண்முகற்கும் ஆறுதலை-முருகக்கடவுளுக்கும் ஆறுசிரங்கள், உண்டு ஐங்கரற்கு மாறுதலை - ஐந்துகைகளை யுடையவராகிய விநாயகருக்கு மாறுபட்டயானைத்தலையுண்டு, சங்கைப்பிடித்தோர்க்கும் ஆறுதலை-சங்கத்தைக்கையிற்பற்றியிருப்பவராகிய திருமாலுக்கும் பிரளயவெள்ளம் உறைவிடமாகும், பித்தா-பித்தனே (பரமசிவனே) நின்பாதம் படித்தோர்க்கும் ஆறுதலை-உன்திருவடியைத் துதித்தோர்க்கும் மனோதுக்கங்கள் தணிதலுண்டு, பார் நோக்கு, எ-று.

திருமால் பிரளயவெள்ளத்தில் ஆலிலைமேல் பள்ளிக்கோள்பவராதலால் சங்கைப்பிடித்தோர்க்கு மாறுதலைஎன்றார், ஆறு-நதி, அது இங்கு பிரளய வெள்ளத்துக்காயிற்று. தலை-இடம்.

திருக்காளத்தி நாதர்மீது பாடியது.

33. முக்கண்ணனென்றரனைமுன்னோர்மொழிந்திடுவார்
அக்கண்ணற்குள்ளதரைக்கண்ணே-மிக்க
உமையாள்கண்ணொன்றரைமற்றான்வேடன்கண்ணொன்
றமையுமிதனாலென்றறி.

இ-ள். முக்கண்ணன் என்று-மூன்று கண்களையுடையனென்று, அரனை சிவபெருமானை, முன்னோர் மொழிந்திடுவர் - முன்னோர்சொல்லுவர், அக்கு அண்ணற்கு உள்ளது அரைக்கண்ணே-அக்குமாலையையணிந்தபெரியோனுக்கு உள்ளது அரைக்கண்ணேயாம், (எப்படியெனின்) மிக்க உமையாள்கண் ஒன்றரை-மேலாகிய உமையவளுடையகண் ஒன்றரையாம் மற்று-பின்னும், ஊன்வேடன் கண் ஒன்று - ஊன்வடிகின்ற வேடனது கண் ஒன்றாம், இதனால் அமையும் என்று அறி - இந்த விருத்தாந்தத்தால் இந்தக் கட்சி அமைவுபெறும் என்றுணர்வாயாக. எ-று.

அர்த்தநாரீச்சுரனாகுங்கால் ஒன்றரைக்கண் உமாதேவிக்குரிய தாதலாலும், ஒருகண் கண்ணப்பநாயனார் அப்பினதாதலாலும் இவ்வாறுகூறப்பட்டது.

காஞ்சீபுரத்தில் ஏகாபரம்நாதரைக்கனவிற்கண்டு அசதியாடிய ஒரு பெண்ணின் கூற்றாகப்பாடியது. (அசதி-பரிகாசம்.)

34. நேற்றிரவந்தொருவனித்திரையிற்கைப்பிடித்தான்
வேற்றூரானென்றுவிடாயென்றேன்-ஆற்றியே
கஞ்சிகுடியென்றான்களித்தின்றுபோவென்றேன்
வஞ்சியரேசென்றான்மறைந்து.

இ-ள். வஞ்சியரே-பூங்கொடிபோன்ற தோழிகளே, ஒருவன் நேற்று இராவந்து-ஒருவன்நேற்றிரவில்வந்து, (என்) நித்திரையில்கைபிடித்தான்-நித்திரையிற் கையைப்பிடித்தான், வேறு ஊரான் என்று - (அவன்) அயலூரானென்று நினைத்து, விடாய் என்றேன்-(என்கையை) விடாய்என்றேன், (விடாய் என்றதை அவன் எனக்கு விடாயுண்டாயிருப்பதாகநினைத்து) ஆற்றி கஞ்சிகுடி என்றான்-வெப்பம்தணித்துக் கஞ்சிகுடியென்றான். (அதனால் இவன் கச்சிகுடி என்றான்-வெப்பம்தணித்துக் கஞ்சிகுடியென்றான். (அதனால் இவன் கச்சித்திருப்பதியையுடைய ஏகாம்பரநாதன் என்றுதெளிந்து இன்றுகளித்துபோஎன்றேன்-இன்று என்னைக்கலந்துசுகித்திருந்து நாளைபோவென்றேன், மறைந்துசென்றான்-(உடனே)மறைந்துபோனான்.

கஞ்சிகுடி, களித்தின்று, என்பவற்றிற்கு முறையே கஞ்சியைக்குடிப்பாய் என்றும், களியைத்தின்று என்றும் வேறுமொருபொருள் தோன்றுமாறுகாண்க.

ஒருவர் முகுந்தனுக்கும் முறத்துக்கும் சிலேடையாய்ப் பாடவேண்டுமெனப் பாடியது.

35. வல்லரியாயுற்றிடலான் மாதர்கையிற்பற்றிடலால்
சொல்லரியமாப்புடைக்கத் தோன்றுதலால்-வல்லோர்
அகந்தனிலேவாழ்தலா லன்றுலகளந்த
முகுந்தனுமே யாகும்முறம்.

இ-ள். அன்று - (த்ரிவிக்கிரமனுன) அக்காலத்தில், உலகு அளந்த- உலகத்தைத் தனது திருவடியாலளந்த, முகுந்தனும்- திருமாலும், முறம்ஆகும்-முறத்துக்கு நிகராவன்.

முகுந்தன்.

வல் அரி ஆய் உற்றிடலால் - வலிய நரசிங்கமாய்த் தோன்றுதலால், மாதர் கையின் பற்றுதலால்-ஆய்ச்சியார் கையாற் பற்றப்படுதலால், சொல் அரியமா புடைக்கதோன்றுதலால் - (வலியின் நிலைமை யிவ்வளவென்று) சொல்லுதற்கரிய (குவலயாபீடம் என்னும்) யானையை அழிக்கக் கண்ணனாய் அவதரித்தலால், வல்லோர் அகந்தனிலே வாழ்தலால்-(தன்னை நினைய)வல்லாரது மனத்தின் கண்ணே உறைதலால்.

மாதர் கையிற் பற்றினது - உரலிற் கட்டுதல், குரவைக் கூத்தாடுதல் முதலியவற்றிற்கு. குரவைக்கூத்து-கைகோத்தாடல்.

முறம்.

வல் அரி ஆய் உற்றிடலால் - விரைவில் அரிசியைக் கல்முதலியவையில்லாமல் ஆராயுந்தொழிலைப் பொருந்துதலால், மாதர்கையில் பற்றுதலால்-பெண்கள் கையிலேந்துதலால், சொல் அரியமாபுடைக்கத்தோன்றுதலால்-(அளவு) சொல்லுதற்கரிய மாவைப்புடைத்தெடுத்தற்குக்கருவியாயுண்டாயிருத்தலால், வல்லோர் அகந்தனிலே வாழ்தலால்-இவ்வாழ்க்கையில் வல்லோரது வீடுகளிலிருத்தலால். எ-று.

ஒருவர் ஆட்டுக்கும்-கதவுக்கும் சிலேடையாய்ப் பாடவேண்டுமெனப் பாடியது.

36. செய்யுட்கிடைமறிக்குஞ் சேர்பலகையிட்டுமுட்டும்
ஐயமறமேற்றாளடர்க்குமே-துய்யநிலை
தேடும்புகழ்சேர் திருமலைராயன்வரையில்
ஆடுங்கதவு நிகராம்.

இ-ள். புகழ்சேர்-கீர்த்தி பொருந்திய, திருமலைராயன்வரையில்-திருமலைராயனது மலையகத்தில், ஆடும் கதவும் நிகர் ஆம்-ஆடும் கதவும் ஒன்றற்கொன்று சமானமாகும்.

ஆடு.

செய் உள்கிடைமறிக்கும் - வயலில் (எருவின்பொருட்டு) கிடைமறிக்கப்படும், சேர் பலகையிட்டு முட்டும் - பொருந்தியபலகைகளைக் கொம்பினாற் குத்திமுட்டும், ஐயம் அறமேல்தாள் அடர்க்கும்-சந்தேகமற மிகுதியாகிய ஊக்கத்தோடு போர் புரியும், துய்யநிலைதேடும் - பரிசுத்தமான இருக்கையைத்தேடும்.

கதவு.

செய் உள் இடைமறிக்கும்-வீட்டுக்கிடையே யிடப்பட்டு வருவோரைத்தடுக்கும், சேர்பலகையிட்டு முட்டும் - ஒன்றற் கொன்று பொருத்தமான பலகைகளைக்கொண்டு மூட்டிச்செய்யப்படும், ஐயம் அறமேல் தாள் அடர்க்கும் - (யாரேனும் நுழைவார் என்கிற) சந்தேகம் நீங்கத்தான் மூடப்பட்டிருப்பதன்றித் தன்மீது தாளிடப்பட்டிருக்கும், துய்யநிலைதேடும்-அழகாகிய வாசற்காலை விரும்பும். எ-று.

செய் உள்-செய்யப்பட்ட உள்ளிடம் (அதாவது வீடு) மூட்டும் என்பது முட்டும் எனக் குறுக்கலாயிற்று.

ஒருவர் சிதம்பரதேவ என்றது ஒரு வெண்பாவில் நான்குதரம் வரப் பாடுகவெனப் பாடியது.

37. அரகரதிருச்சிற்றம்பலவாணவந்
தரரூபமகேசசிதம்-பரதே
வசிதம்பரதேவ சிதம்பரதே
வசிதம்பரதேவனே.

இ-ள் அரஅர-ஹரஹர, திருச்சிற்றம்பலவாண - திருச்சிற்றம்பலத்தில் வாழ்வோனே, அந்தரரூப-ஆகாயவுருவத்தை யுடையவனே, மகேச-மஹேச்சுரனே, சிதம்பரதேவ - சிதாகாயத்திலுள்ள தேவனே, சிதம்பரதேவ சிதம்பரதேவ சிதம்பரதேவனே. எ-று.

அரன்-சங்கரிப்பவன். திருச்சிற்றம்பலம்-அழகிய சிற்சபை, இதுசித்தம் பலத்தின் மரூஉ; வாழ்நா என்பது வாணஎன மரூஉவாயிற்று; மகேசன் பெருஞ் செல்வத்தை யுடையவன்.

ஒருவர்-ஒரு அழகாகிய பெண்ணைப்பார்த்து வியந்து
ராமாராமா, கோவிந்தா, வேங்கடவா, நாராயண
என்று ஒருவிகடன் பாடியதாகப் பாடுக
வெனப் பாடியது.

38. இந்தோதிலகநுதல் ராமராமாவனசக்
கொந்தோகளபமுலைகோவிந்தா-சந்தமுறும்

வேலோவிணைவிழிகள் வேங்கடவாநல்லவயி
றாலோகாணாராயணா.

இ-ள். ராமராமா—,(இந்தமாதுக்கு) திலதம் நுதல் இந்தோ-பொட்டணிந்த நெற்றி அஷ்டமீசந்திரனோ, கோவிந்தா—,களபமுலைவனசம் கொந்தோ-கலவைச்சந்தனமணிந்த தனங்கள்தாமரையரும்புகளோ,வேங்கடவா—,இணை விழிகள் சந்தம் உறும்வேலோ - இருவிழிகளும் அழகுமிகுந்த வேல்களோ, நாராயணா—,நல்லவயிறு ஆலோ-அழகியவயிறு ஆலிலையோ. எ-று.

காண்-அசை. இந்து - சந்திரன். இங்குநெற்றிக் குவமை யாயினமையால் அஷ்டமீ சந்திரன் எனப் பொருள்கூறப்பட்டது.

ஒருவர் கின்னரிவாசிக்குங் கிளியெனப் பாடுகவெனப் பாடியது.

39. ஆடல்புரிந்தானென்று மந்நாளிலேமூவர்
பாடலுகந்தானென்றும் பான்மையினால்-கூடலிலே
நன்னரிவாசிக்கு நடைபயிற்றினானென்றும்
கின்னரிவாசிக்குங் கிளி.

இ-ள். கிளி-கிளியானது, ஆடல்புரிந்தான் என்றும்-திருவிளையாடல்களைச் செய்தவனே யென்றும், அந்நாளிலே மூவர்பாடல் உகந்தான் என்றும்-அக்காலத்தில் மூவர் பாடலையுகந்தருளினவனேயென்றும், பான்மையினால் கூடலிலே நல்நரிவாசிக்கு நடைபயிற்றினான் என்றும் - (அன்பர்க்கெளியனாகுங்) குணத்தினால் திருவாலவாயில் நல்ல நரிகளாகிய குதிரைகளுக்கு நடை கற்பித்தவனே யென்றும் (புகழ்ந்துபாடி) கின்னரிவாசிக்கும் கின்னரியை வாசித்துக் கொண்டிருக்கும். எ-று.

ஆடல் - மதுரையிற்செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்கள். மூவர்பாடல்-அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் என்னும் மூவரும்பாடியதேவாரம். கூடல்-மதுரைநகர். நன்னரிவாசிக்கு நடைபயிற்றினது, திருவிளையாடற்புராணம் நரிபரியாக்கிய படலத்தினால் அறிக. கின்னரி - ஓர்வகைவீணை.

கச்சிக்காவலன் என்பவரொருவர் செங்கழுநீர் கிழங்கென்று
பாடவேண்டுமெனப் பாடியது.

40. வாதமணரேறியது மாயன்றுயின்றதுவும்
ஆதிதடுத்தாட்கொண்ட வவ்வுருவும்-சீதரனார்
தாள்கொண்டளந்ததுவுந் தண்கச்சிக்காவலா
கேள்செங்கழுநீர்க் கிழங்கு.

இ-ள். தண்கச்சிக்காவலாகேள்-சாந்த குணத்தையுடைய கச்சிக்காவலனே நீகேட்பாயாக, வாது அமணர் ஏறியதும்-(திருஞானசம்பந்தசுவாமிகளோடு)வாதுசெய்த சமணர்கள் தோற்றுஏறியதும்,மாயன்துயின்றதுவும்

திருமாலானவர் திருக்கண்வளர்ந்ததும், ஆதிதடுத்து ஆட்கொண்ட அவ்வுருவும்-முதல்வனாகிய சிவபெருமான் (சுந்தரமூர்த்தி சுவாமிகளைத்) தடுத்தாட்கொண்ட அந்தரூபமும், சீதரனார் தாள்கொண்டு அளந்ததுவும்-திருமாலானவர் (த்ரிவிக்ரமாவதாரத்தில் தம்) திருவடியைக்கொண்டு அளந்ததும், செங்கழுநீர் கிழம் கு-(முறையே) செங்கழுவும் நீரும் கிழப்பருவமும் பூமியும்ஆம்.

செங்கழு-எரியெண்ணெய்ச் சுவாலைகளால் செந்நிறமேறிய கழுமரம். நீர் என்றது பாற்கடலை. சீதரன் லட்சுமியைத் திருமார்பில் தரித்தவன்.

ஒருவர் நா நீ நூ நே. யென்று ஒரு வெண்பாவிலமைத்துப்
பாடுகவெனப் பாடியது.

41. அரையின்முடியிலணிமார்பினெஞ்சில்
தெரிவையிடத்தமர்ந்தான்சேர்வை-புரையறவே
மானார்விழியீர்மலரணவொற்றீருகும்
ஆனாலாநாநீநூநே.

இ-ள். மான் ஆர்விழியீர்-மானினது மருண்டநோக்கம்போலும் நோக்கத்தையுடையமாதரே, மலரண ஒற்று-ம் ல் ர் ண் என்னும் இந்நான்கொற்றுக்களும், நாநீநூநே-று ஆகும்; ஆனால்-நாநீநூநே என்னும் இந்நான்கெழுத்துக்களுக்கும் தலைதடுமாற்றமாய் இறுதியாகவருமாயின், தெரிவை இடத்து அமர்ந்தான்-உமாதேவியை இடப்பாகத்திலிருக்க விரும்பினவனாகிய சிவபெருமானது, அரையில் முடியில் அணிமார்பில் நெஞ்சில் - திருவரையிலும் திருமுடியிலும் அழகியதிருமார்பிலும், திருமிடற்றிலும், புரை அற சேர்வை ஆம்-குற்றமறச் சேர்க்கப்படுதற் குரியன ஆம். எ-று.

தலைதடுமாற்றம் எதிர்நிரனிறை. { ம் ல் ர் ண் / நா நீ நூ நே } - இதையுய்த்துணர்க.

நேம்-விஷம். நெஞ்சு-கண்டத்துக்காயிற்று. நே - அன்பு. இது நேம் எனமருவியது என்றலுமொன்று.

பிறவாநெறிகாட்டியா ரென்பவ ரொருவர் கடுங்காற்று மழைகாட்டும்
கடுநெட்புப்பகைகாட்டும்என்றிறுதியிலமைத்து ஒரு வெண்
பாப் பாடுகவெனப் பாடியது.

42. நீரோபிறவாநெறிகாட்டியாரெமக்கு
நீரோசமிசைநிலையிட்டீர்-நீரோயிவ்
விங்களயேன்செய்தீர்விடுங்கடுங்காற்றும்மழைகாட்
டுங்கடுநட்புப்பகைகாட்டும்.

இ-ள். பிறவாநெறிகாட்டியார் நீரோ-பிறவாநெறிகாட்டியார் என்பவர் நீர்தாமோ, எமக்கு சமிசைநிலையிட்டீர்நீரோ- (எமக்கு) இப்படிப்பட்ட

கடினமாகிய) சமிசையை யேற்படுத்தினவர் நீர்தாமோ, இவ்விங்கனம் செய்தீர்-நீரோ இந்த வேறுபாடுசெய்தவர் நீர்தாமோ, என்-யாதுக்கு இங்வாறு செய்தீர், விடும்-(இந்தமட்டிற் போதும்) விடும், கடுங்காற்று மழை காட்டும் பெருங்காற்று மழையை யுண்டாக்கும், கடுநட்பு பகைகாட்டும்-பெருநட்புப் பகையை யுண்டாக்கும், எ-று.

ஒருவர் சிதம்பரத்திலிருக்கும் ஞானசபை முதலியவற்றை ஒருவெண்பாவிலமைத்துப் பாடுகவெனப்பாடியது.

43. ஞானசபைகனகசபைசிற்றம்பலம்பே
ரானந்தக்கூடந்திருமூலட்-டானம்பே
ரம்பலம்பஞ்சாவரணநாற்கோபுரம்பொற்
கம்பமண்டபஞ்சிவகங்கை.

இ-ள். வெளிப்படை.

ஒருவர் திருவாரூரிலுள்ள சங்குதீர்த்த முதலியவற்றை ஒருவெண்பாவிலமைத்துப் பாடுகவெனப் பாடியது.

44. சங்குதீர்த்தந்திவ்விச்சாளரவாயில்வீர
சிங்காசனந்திருவந்திக்காப்புப்-பங்குனிமா
தத்திருநாடீர்த்தந்திருவிருதன்கோயில்
உத்தரபாகந்திருவாரூர்.

இ-ள். வெளிப்படை.

ஒருவர் ஏகாம்பரநாதரைத் தரிசிக்கும்போது அங்குள்ள பிராமணர்கள் இவரை அலக்ஷியமாக நினைத்து, இவன் கவிபாடுந்திறத்தை அறிவோமென்று இந்தத்தலத்தில் ஆறு அற்புதங்களிருக்கின்றன, அவற்றை ஒரு வெண்பாவில் அடக்கிப்பாடித் தரவேண்டுமென, அவையாவையென்று இவர்கேட்க, அவர்கள், குமரகோட்டக்கீரை, செவ்விலிமேட்டுப் பாகற்காய், பருத்திக்குளநீர், செப்புவாசற்காற்று, கம்பத்தடியிற்றவம், கருமாறிப்பாய்ச்சல், என்பவைகளேயென்றுசொல்ல, இவர், முதலில் அப்பா என்பதையும், இறுதியில் யார்க்குமினிது என்பதையும்சேர்த்து, நீங்கள் இப்போது சொன்னபடி சொல்லுங்கள் என, அப்படியே அவர்கள் சொல்லி ஒரு வெண்பாவாய் முடிந்திருக்கக்கண்டு அதிசயித்தார்கள் என்னுங் கருத்தை ஒருவெண்பாவிலடக்கிப் பாடுகவெனப்பாடியது, அவ்வெண்பா வருமாறு.

45. அப்பாகுமரகோட்டங்கீரைசெவ்விலிமேட்
டுப்பாகற்காய்பருத்திக்குளநீர்-செப்புவா
சற்காற்றுக்கம்பத்தடியிற்றவங்கருமா
றிப்பாய்ச்சல்யார்க்குமினிது.

இ-ள். வெளிப்படை.

ஒருவர் கும்பகோணத்தின் சின்னங்களை ஒரு வெண் பாவி லமைத்துப் பாடுகவெனப் பாடியது.

46. திருக்குடந்தையர் திகும்பேசர்செந்தா
மரைக்குளங்கங்கைமகங்கா-விரிக்கரையின்
ஓரங்கீழ்க்கோட்டங்காரோணமங்கைநாயகியார்
சாரங்கபாணிதலம்.

(ஷ பாட்டு வெளிப்படையானதால் உரையில்லை.)

ஒருவர் திருவண்ணுமலையில், உண்ணுமுலையம்மையார் கோவில் ஸ்தானிகளுகிய சம்பந்தாண்டான்என்பவன்அம்பட்டனிடத்தில் தன்தலைமழுங் கமுண்டிதமாகச் சௌரம்பண்ணிக்கொள்ளும் சமயத்தில் இவர் அவ்விடம்போனுர், அப்பொழுது அவன் இவரைக்கண்டு மரியாதைசெய்யாமல், வித்தியாகர்வத்தினுல், இந்தஸ்தலத்தின்பெயரும், என்பெயரும், நான் சௌரம் செய்துகொள்வதும் ஒருவெண்பாவில் அமைத்து, மன் என்று எடுத்து மலுக்கு என்று முடிக்கவேண்டு மென்றுசொல்ல, இவர் அவனை ஒருபொருளாகமதியாமல், இவனைப் பரிஹசிப்பதே தகுதியென்று நினைத்து, அவன் கேட்ட கேள்வியின்படியேயன்றி அவன் சௌரம்பண்ணுவித்துக்கொள்வதற்குக்காரணமும் கற்பித்து விஞவிடையாகப் பாடின விருத்தாந்தத்தை ஒரு வெண்பாவிலமைத்துப் பாடுகவெனப்பாடியது.

47. மன்னுதிருவண்ணுமலைச்சம்பந்தாண்டாற்குப்
பண்ணுதலைச்சவரம்பண்ணுவதேன்-மின்னின்
இளைத்தவிடைமாதரிவன்குடுமிபற்றி
வளைத்திழுத்துக்குட்டாமலுக்கு.

இ-ள். மன்னு திருவண்ணுமலை-நிலைபெற்ற திருவண்ணுமலையிலுள்ள சம்பந்தாண்டாற்கு-சம்பந்தாண்டான் என்பவனுக்கு, பண்ணுதலைச்சவரம் பண்ணுவது ஏன்-சொல்லப்பட்ட தலைச்சவரம் பண்ணுவதுயாதுக்கு.

(இது-விஞ)

மின்னின் இளைத்த இடை-மின்னற்கொடியினும் மெலிந்த (நுட்பமாகிய) இடையையுடைய, மாதர்-பெண்கள், இவன்குடுமிபற்றி-இவன்குடுமியைப்பிடித்து, வளைத்து இழுத்துக் குட்டாமலுக்கு-வளைத்திழுத்துக்குட்டாதிருத்தற்பொருட்டு. எ-று.

(இது-விடை.)

குடுமிபற்றிவளைத் திழுத்துக் குட்டுதல் ஊடற்காலத்தில்.

ஒருவர் சோ கா மா ஏ வா தா என்று பாடுகவெனப் பாடியது.

48. சோ கா மா ஏ வா தா சொல்லின்மனைக்கூட்டியுமை
பாகார்ந்ததில்லைப்பரமேசர்-வாகாய்த்
தரித்தாரெரித்தார் தறித்தாருதைத்தார்
உரித்தார்கணைபடைத்தாரூர்க்கு.

இ-ள். உமை பாகு ஆர்ந்த தில்லைப் பரமேசர் - உமாதேவியை இடப் பாகத்திற் பொருந்தியிருக்கிற தில்லைப் பரமசிவனானவர், சோகாமாஏவா தாசொல்லில்-சோ, கா, மா, ஏ, வா, தா, என்னுஞ் சொற்களினிறுதியில். மன்னைக்கூட்டி-மன் என்பதனைச்சேர்த்து, (இந்தச்சொற்பொருள்களை!! முறையே) வாகு ஆய்த்தரித்தார் - அழகாகத்தரித்தார், எரித்தார், தகித் தார், தறித்தார்-கொன்றார், உதைத்தார் - காலாலுதைத்தார், உரித்தார்- தோலுரித்தார்; ஊர்க்குகணைபடைத்தார் - முப்புரங்களை யழித்தற்பொ ருட்டு அம்பாகக்கொண்டார். எ-று.

சோமன்,	காமன்,	மாமன்,	ஏமன்,	வாமன்,	தாமன்,
சந்திரன்,	மன்மதன்,	தக்கன்,	யமன்,	வாமநன்.	திருமால்,

ஒருவர் கொட்டைபாக்கு என்று தொடங்கிக் களிப்பாக்கு என்றுமுடிக்க வேண்டுமென அவ்வாறேபாடியது.

49. கொட்டைப்பாக்குமொருகண்கூடையைப்பாக்கும்மடியில்
பிட்டைப்பாக்கும்பாகம்பெண்பாக்கும்-முட்டநெஞ்சே
ஆரணனுநாரணனுமாதிமறையுந்தேடும்
காரணனைக்கண்டுகளிப்பாக்கு.

இ-ள். நெஞ்சே - மனமே, கொட்டைப்பாக்கும் - மண்வெட்டியை நோக்குவோனும், ஒருகண் கூடையைப்பாக்கும் - ஒரு கண்ணினால்கூடை யைநோக்குவோனும், மடியில் பிட்டைப்பாக்கும் - தன்மடியிலுள்ள பிட் டினை நோக்குவோனும், பாகம் பெண்பாக்கும் - தன் இடப்பாகத்திலுள்ள உமாதேவியை நோக்குவோனும், முட்ட-முழுதும்-ஆரணனும்நாரணனும் ஆதிமறையும் தேடும்-பிரமனாலும் விஷ்ணுவினாலும் பழமையாகிய வேதங் களாலும் தேடப்படுவோனுமாகிய, காரணனை - சர்வகாரணனாகிய பரமசி வனை, கண்டு- தரிசித்து, களிப்பு ஆக்கு-மகிழ்தலைச்செய். எ-று.

களிப்பாக்கு-களிக்க என வினையெச்சமாக்கி, பாக்கும் என்னும் வினை முற்றாக்களோ டியைப்பினும் பொருந்தும். களிக்க என்றது மதுரையில் வையையாற்றங்கரையில் செம்மனச் செல்வியிட்ட பிட்டின்பொருட்டு மண்சுமக்க வந்தகாலத்தில் அங்கிருந்தார்களிக்க என்றபடி. பாக்கும்பார்க் கும் என்பதன் மரூஉ.

ஒருவர் கரியென்று தொடங்கி உமியென்று முடிக்கவேண்டுமென அவ்வாறே பாடி முடித்தது.

50. கரியதனையேயுரித்தவையாவளையேந்
தரியயற்குமெட்டாதவையா-பரிவாக
அண்டரெல்லாங்கூடி யமுதங்கடைந்தபொழு
துண்டநஞ்சையிங்கேயுமி.

இ-ள். கரியதனையே உரித்தவையா-யானையையுரித்தவையனே, வளையேந்து அரி அயற்கும் எட்டாத ஐயா-சங்கத்தையேந்தின திருமாலுக்கும் பிரமனுக்கும் எட்டாத ஐயனே, அண்டர் எல்லாம்-தேவர் எல்லாரும், பரிவாகக்கூடி-விருப்பமாகக்கூடி, அமுதம் கடைந்தபொழுது-திருப்பாற்கடலில் அமுதத்தின்பொருட்டுக் கடைந்தகாலத்தில், உண்டநஞ்சை-உண்ட விஷத்தை, இங்கே உமி-இவ்விடத்தில் உமிழ்ந்துவிடு. எ-று.

ஐயா என்பதற்கு அழகனே யென்றும், தெய்வத்தன்மையுள்ளவனே யென்றும் உரைக்கலாம். ஐ-அழகு.

ஒருவர் இவர் அத்தைமகள் சமைத்தகறிவகைகளில் உப்பு அதிகரித்திருந்ததைக் குறித்துப் பாடியதாய்ப் பாடுகவெனப் பாடியது.

51. கரிக்காய்பொரித்தாள் கன்னிக்காயைத்தீத்தாள்
பரிக்காயைப்பச்சடியாப்பண்ணுள்-உருக்கமுள்ள
அப்பைக்காய்நெய்துவட்டலாக்கினளத்தைமகள்
உப்புக்காண்சீசீயுமி.

இ-ள். அத்தைமகள்-அத்தைமகளானவள், கரிக்காய் பொரித்தாள்-கரிக்காயைப் பொரித்தாள், கன்னிக் காயைத்தீத்தாள்-கன்னிக் காயைவறுத்தாள்; பரிக்காயை பச்சடியாப் பண்ணுள்-பரிக்காயைப் பச்சடியாகச்செய்தாள், உருக்கம் உள்ள அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினள் - (எனக்கு) பிரீதியான அப்பைக்காயை நெய்துவட்டல் ஆக்கினள், (ஆயினும்) உப்பு-உப்பு மிகுதியாயிற்று, (ஆதலால்) சீசீ உமி-சீசீ உமிழ்ந்துவிடு.எ-று.

கரி-யானை, இதற்குப்பரியாயம் அத்தி. ஆதலால், கரிக்காய்-என்றது அத்திக்காயை.

கன்னி-தெய்வப்பெண், இவளுக்குப் பரியாயம் அரம்பை; அரம்பை வாழை ஆதலால், கன்னிக்காய் என்றது வாழைக்காயை.

பரி-குதிரை, இதற்குப் பரியாயம் மா ஆதலால், பரிக்காய் என்றது மாங்காயை,

பை-படம், இடபடத்தையுடைய பாம்புக்காயினமையால் சினையாகு பெயர். பாம்பில் கத்தரி என்பதுஓர்வகைப்பாம்பு ஆதலால், அப்பைக்காய் என்றது அந்தக் கத்தரிக்காயை.

ஒருவர் சீத்துப்பூத்தென்று ஒரு வெண்பாவி லமைத்துப்
பாடுகவெனப் பாடியது.

52. அப்பூருஞ்செஞ்சடைமே லம்புலியைப்பார்த்துப்பார்த்
தெப்போதுஞ்சீத்துப்பூத் தென்னவே-முப்போதும்
வாலங்காட்டாநிற்கும் வாயங்காவாநிற்கும்
ஆலங்காட்டான்பூணரா.

இ-ள். ஆலங்காட்டான்-திருவாலங்காட்டில் வாழ்பவனுகிய பரமசிவன் பூண்-(ஆபரணமாகத்) தரித்த, அரா-பாம்பானது, அப்பு ஊரும் - கங்கை தங்கிய, செஞ்சடைமேல் - செஞ்சடைமீதுள்ள, அம்புலியை - சந்திரனை, பார்த்து பார்த்து-நோக்கி நோக்கி, எப்போதும்-எப்பொழுதும், சீத்துப் பூத்து என்ன-சீத்துப்பூத்தென்று-முப்போதும் - முக்காலத்திலும்; அங்கு வால் ஆட்டாநிற்கும்-அவ்விடத்துத் தன்வாலை யசையாநிற்கும், வாய் அங் காவாநிற்கும்-வாயைத் திறவாநிற்கும். எ-று.

ஒருவர் என்னையிடுக்கடி, பாயைச்சுருட்டடி, ஏகடியம்பலத்தே
என்று பாடுகவெனப் பாடியது.

53. தடக்கடலிற்பள்ளிகொள்வோமிதனைநற்சங்கரனுர்
அடற்புலிக்குட்டிக்களித்தனராமதுகேட்டுநெஞ்சில்
நடுக்கம்வந்துற்றதுகைகாலெழா நளினத்தியென்னை
இடுக்கடிபாயைச்சுருட்டடி யேகடியம்பலத்தே.

இ-ள். தடக்கடலில்-விசாலமாகிய இந்தக்கடலில், பள்ளிகொள்வோம்-(இதுவரையில்) உறங்காநின்றேம், (இப்போது) இதனை - இந்தக்கடலை, நல்சங்கரனுர்-நன்மையுள்ள சிவபெருமானுனவர். அடல் புலிக்குட்டிக்கு-வலியுள்ள புலிக்குட்டிக்கு, அளித்தனராம்-கொடுத்தனராம், அதுகேட்டு-அந்தச் செய்தியைக்கேட்டு, நெஞ்சில் நடுக்கம் வந்து உற்றது - மனத்தில் நடுக்கம் வந்தடைந்தது, கைகால் எழா-கை கால்கள் எழாவாயின; (ஆதலால்) நளினத்தி-கமலாஸனையாகிய திருமகளே. என்னை இடுக்கடி - என்னைக் கக்கத்தில் இடுக்கிக்கொள்ளடி, பாயைச் சுருட்டடி-பாம்பணையைச் சுருட்டிக்கொள்ளடி, அம்பலத்து ஏகடி-அம்பலத்திற் செல்லடி. எ-று.

புலி-கௌதமர் புலிக்குட்டி-உபமந்யர்.

ஒருவர் பன்றிக்கு மார்பிலே கொம்புமுளைத்தது என்று பாடுகவெனப் பாடியது.

54. தெருமுட்டப்பாளைசிதறவளர்பூகத்
தருமுட்டச்செவ்வாளை தாவும்-திருமுட்டத்
தூரிலேகண்டேனொருபுதுமைபன்றிக்கு
மாரிலேகொம்பானவாறு.

இ-ள். தெருமுட்ட-தெருக்கள்முழுதும், பாளைசிதற-பாளைகள் சிதறும்படி, வளர்-வளர்ந்த, பூகத்தருமுட்ட-கமுகமரங்கள்தோறும், செவ்வாளை தாவும்-செவ்வாளைமீன்கள்குதிக்கின்ற, திருமுட்டத்தூரிலே-திருமுட்டத்தூரில், ஒரு புதுமைகண்டேன்-ஒரு அற்புதத்தைக் கண்டேன், (என்னையெனின்) பன்றிக்கு மாரிலேகொம்பு ஆன ஆறு-பன்றிக்குமார்பில் கொம்புண்டாயிருக்கும் விதமேயாம். எ-று.

பன்றி-பூவராஹஸ்வாமியென்னுந் திருமால். கொம்பு - அவரது திருமார்பிலுள்ள பூங்கொம்புபோல்பவளாகிய திருமகள்.

ஒருவர் குரங்கென்று தொடங்கி இடமென்று முடிக்கவேண்டுமென அவ்வாறே பாடியது.

55 குரங்கனலில்வீழ்ந்துவெறிகொண்டுதேள்கொட்டக்
கரஞ்செறியப்பாம்பலவன்கௌவ-விரைந்துபேய்
பற்றவேகள்ளுண்டுபச்சைமிளகைக்கடித்தால்
எத்தனைபார்சேட்டைக்கிடம்.

இ-ள். குரங்கு-ஒரு குரங்கானது, அனலில்வீழ்ந்து-நெருப்பில்விழுந்து, வெறிகொண்டு-பித்துப்பிடித்து, தேள்கொட்ட-தேள் கொட்டவும், பாம்புகரம்செறிய-பாம்புகையிற் சுற்றிக்கொள்ளவும், அலவன் கௌவ-நண்டு கௌவிக்கொள்ளவும், விரைந்துபேய்பற்ற-விரைவாகப் பேய்பிடிக்கவும், கள் உண்டு-கள்ளைக்குடித்து, பச்சைமிளகைக்கடித்தால் - பச்சைமிளகையும் கடிக்குமாயின், சேட்டைக்கு இடம் எத்தனைபார் - (அதனது) சேஷ்டைகளுக்கு இடமாவன எத்தனை. நீயேபார். எ-று.

கும்பகோணத்தில் ஒருசமாராதனையில் காளமேகம் உண்ணும் போது இவருக்கெதிரிலிருந்துண்ணும் ஒரு சோழியப்பிராமணன் குடுமி அவிழ்ந்து இலையில் விழுந்தது. அவன் அதையெடுத்து உதறினன், எச்சிற் சோறு காளமேகம் இலையில் விழுந்தது அதைக்குறித்துக் கோபித்துப் பாடியது.

56. சுருக்கவிழ்ந்தமுன்குடுமிச்சோழியாசோற்றுப்
பொருக்குலர்ந்தவாயாபுலையா-திருக்குடந்தைக்

கோட்டானேநாயேகுரங்கேயுனையொருத்தி
போட்டாளேவேலையற்றுப்போய்.

இ-ள். சுருக்கு அவிழ்ந்த-முடிச்சவிழ்ந்த, முன்குடுமிசோழியா - முன்குடுமியையுடைய சோழியனே, சோற்றுப்பொருக்கு உலர்ந்தவாயா-சோற்றுப்பருக்கை யுலர்ந்தொட்டியிருக்கிற வாயையுடையவனே, புலையா-நீசனே, திருக்குடந்தைக்கோட்டானே - திருக்குடந்தையிலுள்ள கோட்டானே, நாயே சுநகமே, குரங்கே-வானரமே, ஒருத்தி-ஒருமாது, வேலை அற்றுப்போய்-வேலையற்றவளாகி, உன்னை போட்டாளே-உன்னையும் ஒருபிள்ளையாக ஈன்றாளே (என்னபாவம்) எ-று.

போட்டாள் என்றது பன்றி நாய்முதலியவை குட்டிபோடுதல்போல உன்னையும்போட்டாள் என்றிழித்துக்கூறியவாறு. கோட்டான்-ஓர்பறவை

காஞ்சீபுரம்வரதராஜர் கருடோற்சவத்தைச் சேவித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

57. பெருமாளுநல்லபெருமாளவர்தம்
திருநாளுநல்லதிருநாள்-பெருமாள்
இருந்திடத்திற்சும்மாவிராமையினாலையோ
பருந்தெடுத்துப்போகிறதைப்பார்.

இ-ள். பெருமாளும் நல்லபெருமாள்-பெருமாளும் நல்ல பெருமாளே, அவர்தம் திருநாளும் நல்லதிருநாள்-அவரது திருநாளும் நல்ல திருநாளே ஆயினும், பெருமாள்-பெருமாளானவர், இருந்த இடத்தில்சும்மா இராமையினல்-தாமிருந்த இடத்திற்றானே சும்மா இராமையால், ஐயோ-அந்தோ (அவரை) பருந்து எடுத்துப் போகிறதைப்பார்-பருந்தெடுத்துக்கொண்டு போவதைப்பார். எ-று.

பருந்து-ஓர்பறவை. அது பெருமாளை எடுத்துப்போகிறது என்றமையால் கருடனை யுணர்த்திற்று.

தில்லைச்சபாநாயகர் உற்சவத்தைத்தரிசித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

58. நச்சரவம்பூண்டதில்லைநாதரேதேவரீர்
பிச்சையெடுத்துண்ணப்புறப்பட்டும்-உச்சிதமாம்
காளமேன்குஞ்சரமேன்கார்கடல்போற்றான்முழங்கும்
மேளமேன்ராஜாங்கமேன்.

இ-ள். நச்சு அரவம்பூண்ட - விஷத்தையுடைய பாம்பை ஆபரணமாயணிந்த, தில்லைநாதரே - தில்லைநாயகரே, தேவரீர் பிச்சையெடுத்து உண்ணப் புறப்பட்டும்-தேவரீர் பிட்சையேற்றுண்ணவெளிப்பட்டும், (உமக்கு) உச்சிதம் ஆம்காளம் என்-மேன்மையாகிய திருச்சின்னம் யாதுக்கு, குஞ்ச

ரம் என் யானையாதுக்கு-கார்கடல்போலே முழங்கும்மேளம் என்-கார்காலத்திற் கடல் முழக்கம்போல முழங்குகின்ற மேளம்யாதுக்கு, ராஜாங்கம் என்-(மற்றுமுள்ள) ராஜசின்னங்கள் யாதுக்கு. எ-று.

நாகபட்டணம் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் காளமேகப்புலவர் சாப்பிட்டபோது பாடிய நிந்தையும், காத்தான் வேண்டுகோளுக்கிரங்கி அதையே துதியாகவும் பாடியது.

59. கத்துகடல்சூழ்நாகைக்காத்தான்றன்சத்திரத்தில்
அத்தமிக்கும்போதிலரிசிவரும்-குத்தி
உலையிலிடவூரடங்குமோரகப்பையன்னம்
இலையிலிடவெள்ளியெழும்.

இ-ள். கத்துகடல்சூழ்-முழங்குகின்ற கடல்சூழ்ந்த, நாகை-திருநாகையிலுள்ள, காத்தான் தன்சத்திரத்தில் - காத்தான் சத்திரத்தில், அத்தமிக்கும் போதில் அரிசிவரும் – சூரியன் அஸ்தமிக்குஞ் சமயத்தில் அரிசிவருகின்றது, குத்தி உலையில் இட ஊர் அடங்கும்-குத்தி உலையிற்போடுங்காலத்தில் ஊர் அரவமடங்கிப்போம், ஓர் அகப்பை அன்னம் இலையில் இட வெள்ளி எழும்-ஒரு அகப்பை அன்னத்தை இலையிற் பரிமாறும்போதுசுக்ரோதய முண்டாகும். எ-று.

நாகை-நாகபட்டணம்.

மதுரைமீனாக்ஷியம்மை அன்னவாகனத்திலேறிவருவதைச் சேவித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

60. மாயனார்போற்றுமதுராபுரிச்சொக்க
நாயனார்பித்தேறினாரென்றே-நேயமாம்
கன்னன்மொழியங்கயற்கட்காரிகையாளையையோ
அன்னமிறங்காமலிருந்தாள்.

இ-ள். மாயனார்போற்றும்-திருமாலானவர் வணங்குகின்ற, மதுராபுரி சொக்கநாயனார் பித்தேறினார் என்றே-மதுராபுரிச் சொக்கநாதக் கடவுள் பித்தேறப்பெற்றாரென்று நிச்சயித்தே, நேயம் ஆம் - (அவரிடத்து) அன்புள்ள, கன்னல்மொழி-கருப்பஞ் சாறுபோலும் இனியமொழியையுடைய, அங்கயற்கண் காரிகையாள்-அங்கயற்கண் ணம்மையானவள், ஐயையோ-அந்தோ அந்தோ, அன்னம் இறங்காமல் இருந்தாள் - உணவிறங்காமல் இருக்கின்றாள்.

(அன்னவாகநம்) அன்னம்-சோறு, ஓர்பறவை.

ஐயையோ-இரக்கக்குறிப்பு, அங்கயற்கட்காரிகை-மீனாக்ஷியம்மை.

காஞ்சீபுரம்வரதராஜரது யானைவாகன உற்சவத்தைச்
சிறப்பித்துப் பாடியது.

61. எட்டொருமாவெண்காணிமீதேயிருந்தகலை
பட்டொருமாநான்மாவிற்பாய்ந்ததே-சிட்டர்தொழும்
தேவாதிதேவன்திருவத்தியூர்வரதன்
மாவேறிவீதிவரக்கண்டு.

இ-ள். சிட்டர்தொழும் - பேரறிவினையுடையோர் வணங்குகின்ற, தேவாதிதேவன்-தேவர்களுள் முதன்மையாகிய தேவனும், திருவத்தியூர் வரதன் - ஸ்ரீஹஸ்திகிரியை ஊராகவுடையவனுமாகிய வரதராஜன், மாஏறி-குதிரைமீதேறி, வீதிவரக்கண்டு- திருவீதியிலெழுந்தருளக்கண்டு, (மையல் மிகுந்து உடம்புமெலிதலால்) உட்டு ஒருமா எண்காணிமீதே இருந்தகலை-அரையிலிருந்த ஆடையானது, பட்டு-அவிழ்ந்து, ஒருமா நால்மாவில்பாய்ந்தது-காலில் விழுந்தது. எ-று.

கலைப்பட்டு - பட்டாடை யெனினுமாம். எட்டு ஒருமாவும் எட்டுக்காணியும் சேர்ந்தால் பத்துமா ஆகும்,இதுஅரையெனப்படும். அரை-இடை. ஒருமாவும் நால்மாவும் சேர்ந்தால் ஐந்துமா ஆகும், இது கால் எனப்படும். கால் பாதம். அரையிற்கட்டியிருந்த ஆடைநழுவிக் காலில் விழுந்தது என்பது கருத்து. இது பவனிகண்டழுங்கல் என்னுந்துறை.

காஞ்சீபுரம் விநாயகர் உற்சவத்தைத் தரிசித்து நிந்தாஸ்துதியாகச்
சிறப்பித்துப் பாடியது.

62. மூப்பான்மழுவும்முராரிதிருச்சக்கரமும்
பார்ப்பான்கதையும்பறிபோச்சோ-மாப்பார்
வலிமிகுத்தமும்மதத்துவாரணத்தையையோ
எலியிழுத்துப்போகின்றதென்.

இ-ள். மாபார்-பெரிய பூமியின்கண், வலிமிகுத்த-வலிமை மிகுத்த,மும்மதத்துவாரணத்தை-மும்மதத்தையுடைய யானையை, ஐயோ - அந்தோ, எலி இழுத்துப்போகின்றது-எலியானது இழுத்துக்கொண்டு போகா நின்றது, என்-(இதற்குக்காரணம்) யாது மூப்பான்மழுவும் - பெரியோனாகிய பரமசிவனது மழுவாயுதமும், முராரிதிருச்சக்கரமும் - திருமாலினது சக்ராயுதமும், பார்ப்பான் கதையும் - வேதியனாகிய பிரமனது தண்டாயுதமும், பறிபோச்சோ-களவுபோயினவோ, (அறியோம்) எ-று.

முராரி-முராசுரனைக் கொன்றவன். பறிபோகா திருந்தால் எலியிழுத்துப் போகாதென்பது கருத்து. மதத்துவாரணம்-விநாயகமூர்த்தி. எலி-மூஷிகம் (பெருச்சாளி.)

கச்சித்திருப்பதியில் ஏகாம்பரநாதரைத் தரிசித்து கிரமாலங்காரமாக் முக்கால்முதல் கீழரைவரையுமுள்ள எண்கள் வரும்படி பாடிய சிலேடை வெண்பா.

63. முக்காலுக்கேகாமுன்முன்னரையில்வீழாமுன்
அக்காலரைக்கால்கண்டஞ்சாமுன்-விக்கி
இருமாமுன்மாகாணிக்கேகாமுன்கச்சி
ஒருமாவின்கீழரையின்றோது.

இ-ள். (என்வாக்கே) முக்காலுக்கு ஏகாமுன் - மூன்று கால்களைக்கொண்டு நடவாமுன்னமே, முன் நரையில் வீழாமுன்-இனிவரக் கடவதாகிய நரையுளதாவதன் முன்னமே, கால் அக்காலரைக்கண்டு அஞ்சாமுன்-உயிரானது அந்தக் காலதூதரைக்கண்டு அஞ்சாமுன்னமே, விக்கி இருமாமுன் - விக்கலெழுந்து இருமாததற்கு முன்னமே, மாகாணிக்கு ஏகாமுன்-பெரிய இடமாகிய மயானத்திற்குச் செல்லாததற்கு முன்னமே, காசி-திருக்கச்சியிலுள்ள, ஒருமாவின்கீழரை-ஒரு மாமரத்தின்கீழே எழுந்தருளியிருக்கின்ற ஏகாம்பரநாதரை-இன்று ஓது - (இளமைப்பருவமுள்ள) இப்பொழுதே துதிசெய். எ-று.

இயற்கையாயுள்ள இரண்டுகால்களோடு ஊன்று கோலையுஞ்சேர்த்து முக்கால் என்றார். கால்-காற்று. அது உயிருக்காயிற்று. முடிமன்னரெல்லாரும்போய் அடங்கு மிடமாதலால் மயானம் மாகாணி யெனப்பட்டது. காணி-இடம்.

திருச்செங்காட்டில் உத்தராபதீசுரரைத் தரிசித்து நிந்தாஸ் துதியாகப் பாடியது.

64. காலனையுங்காமனையுங்காட்டுசிறுத்தொண்டர்தரு
பாலனையுங்கொன்றபழிபோமோ-சீலமுடன்
நாட்டிலேவீற்றிருந்தநாதரேநீர்திருச்செங்
காட்டிலேவீற்றிருந்தக்கால்.

இ-ள். சீலமுடன் - ஒழுக்கத்துடன், நாட்டிலே வீற்றிருந்த நாதரே-(முன்பு) நாட்டில் வீற்றிருந்த இறைவரே, நீர் திருச்செங்காட்டிலேவீற்றிருந்தக்கால்-நீர் (இப்போது இந்தத்) திருச்செங்காட்டில் வீற்றிருந்தால், காலனையும் காமனையும்-(முன்பு)யமனையும் மன்மதனையும், காட்டு-உம்மால் சுட்டப்பட்ட, சிறுத்தொண்டர் தருபாலனையும்-சிறுத்தொண்ட நாயனார் பெற்ற சிறுவனையும், கொன்ற - கொலைசெய்ததனாலுண்டாகிய, பழிபோமோ-பழியானது (உம்மைவிட்டு) நீங்குமோ. எ-று.

சிறுத்தொண்டர் தருபாலன், சீராளன்.

பூனைக்கியாறுகால் முதலியவாகச் சொற்
சாதுரியமாகப் பாடியது.

65. பூனைக்கியாறுகால்புள்ளினத்துக்கொன்பதுகால்
ஆனைக்குகால்பதினேழானதே-மானேகேள்
முண்டகத்தின்மீதுமுழுநீலம்பூத்ததுண்டு
கண்டதுண்டுகேட்டதில்லைக்காண்.

இ-ள். பூனைக்கு இயாறுகால் - பூனைக்கு ஆறுகால்களும், புள் இனத்துக்கு ஒன்பதுகால்-பறவைக்கூட்டத்துக்கு ஒன்பது கால்களும். ஆனைக்குப் பதினேழ்கால்-யானைக்குப் பதினேழ்கால்களும், ஆனது-ஆனதை, மானே கேள்-பெண்ணே கேட்பாயாக, முண்டகத்தின்மீது-தாமரைமலரின்மீது முழுநீலம் பூத்தது உண்டு-முழுநீலமலர்கள் பூத்ததுண்டு, கண்டது உண்டு பார்த்ததுண்டு, கேட்டது இல்லை-கேட்டதில்லை. எ-று.

பூனைக்கியாறுகால் என்பதைப் பூனைக்கி ஆறுகால்எனப்பிரித்து,வண்டுக்கு ஆறுகால்களுளவென்றும்; ஒன்பது கால்கொண்டது இரண்டேகால் ஆதலால், புள்ளினத்துக்குக் கால்களிரண்டேயென்றும்; பதினேழுகால் கொண்டது நாலேகால் ஆதலால், யானைக்கால்கள் நான்கேயென்றும் பொருளுரைத்துக்கொள்க. முண்டகம்-மாதர்முகம், முழுநீலம்-கண்.

ஒருதலத்தில் உற்சவகாலத்தில் மிகவும் ஆடம்பரமாகப்
பவனிவருகிற முருகக்கடவுளைத் தரிசித்து
நிந்தாஸ்துதியாகப் பாடியது.

66. அப்பனிரந்துண்ணியாத்தாண்மலைநீலி
ஒப்பரியமாமனுறிதிருடி-சப்பைக்கால்
அண்ணன்பெருவயிறனாறுமுகத்தானுக்கிங்
கெண்ணும்பெருமையிவை.

இ-ள். அப்பன் இரந்து உண்ணி - தந்தையாகிய பரமசிவன் இரந்துண்டுவாழ்பவன், ஆத்தாள் மலைநீலி-தாயாகிய உமாதேவி மலையிற்பிறந்தநீலி, ஒப்பு அரியமாமன் உறிதிருடி-உவமையில்லாத அம்மானாகியதிருமால் உறியில் வெண்ணெய்திருடுவோன், சப்பைக்கால் அண்ணன் பெருவயிறன்-சப்பைக்கால்களையுடைய தமையனாகிய விநாயகமூர்த்தி பெருவயிற்றையுடையோன், (இது லோகப்பிரசித்தமாயிருக்க) ஆறுமுகத்தானுக்கு-ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளுக்கு, இங்கு இவை-இவ்விடத்து நடப்பதாகிய இவை, எண்ணும் பெருமை-மதித்தற்குரிய ஆடம்பரங்கள். எ-று.

இரந்துண்ணி(பிட்சாடனன்; நீலி-நீல நிறமுள்ளவள்; உறிதிருடி-கிருஷ்ணன்.

மதுரையில் கூத்தாள் என்னுந் தாசியையும், அவள் தமக்கையையும் தாயையும், பாட்டியையும், சிறப்பித்துப் பாடியது.

67. கூத்தாள்விழிகணெடுங்கூர்வேலாங்கூத்தாள்தன்
மூத்தாள்விழிகண்முழுநீலம்-மூத்தாள்தன்
ஆத்தாள்விழிகளரவிந்தமாத்தாள்தன்
ஆத்தாள்விழிகளிரண்டம்பு.

இ-ள். கூத்தாள் விழிகள் நெடுகூர்வேல் ஆம்-கூத்தாளுடைய கண்கள் நெடுமையாகிய கூர்வேல்களாம்; கூத்தாள் தன் மூத்தாள் விழிகள்முழு நீலம்-கூத்தாளுக்கு மூத்தாளாகிய இவள்கண்கள்முழுநீயிமலர்களாம்;மூத்தாள் தன் ஆத்தாள் விழிகள் அரவிந்தம்-மூத்தாளுக்கு ஆத்தாளாகிய இவள்கண்கள் தாமரைமலர்களாம்; ஆத்தாள் தன் ஆத்தாள்விழிகள் இரண்டு அம்பு-ஆத்தாளுக்கு ஆத்தாளுடைய கண்கள் இரண்டம்புகளாம். எ-று.

ஒரு குழந்தை காளமேகனைக்கண்டு பயந்து அழுதுகொண்டு போய்த்தன் தாயினிடத்தில் சொல்ல, அவள் உன்னைக்கொடுப்பேனேஎன்று ஏசுதலால், சினங்கொண்டு அக்குழந்தை இறக்கும்படி வசையாகவும், அவள் கணவன் வேண்டுகோளுக்கிரங்கி அக்குழந்தை பிழைக்கும்படி வசைமீட்சியாகவும் பாடியது.

68. என்னைக்கொடுத்தாலிரக்கமுனக்குண்டாமோ
வன்னக்கமலமுகவல்லியே-துன்னுமதக்
காட்டானைக்கோட்டுமுலைக் காரிகையேநீபயந்த
கோட்டானைத்தானேகொடு.

இ-ள். வன்னக் கமலமுகவல்லியே-அழகாகிய தாமரை மலர்போன்ற முகத்தையுடைய பெண்ணே, துன்னும் மதங்காட்டுஆனைக்கோட்டுமுலைக் காரிகையே-மிடிந்த மதத்தையுடைய காட்டானைக் கொம்புபோன்றதனங்களையுடையமாதே,என்னைக்கொடுத்தால் உனக்குஇரக்கம் உண்டாகுமோ என்னைக்கொடுத்தால் உனக்கு இரக்கம் உண்டாகுமோ, நீபயந்தகோட்டானைத் தானேகொடு-நீபெற்ற கோட்டானைத்தானே கொடுத்துவிடு.

கோட்டான்-கூகை. இது குழந்தையின் விகாரவுருவத்தைக் குறித்தது. கொடு என்பது வசையில் இழந்துவிடு எனவும்; வசைமீட்சியில் எருப்பிக்கொடு எனவும் பொருள்படும்.

ஒரூரில் சர்க்கார் உத்தியோகஸ்தனுகிய விகடராமன் என்னும் பிரா
மணன், ஒருமெலிந்த குதிரைமீதேறிச் செல்லும்போது அது
நடவாததுகண்டு,தனக்குக்கீழ்ப்பட்டிருந்த வேலைக்காரர்
இருவர்பின்னேயிருந்து தள்ளவும்,மூன்றுபேர்முன்னே
நின்று கடிவாளத்தைப்பற்றி யிழுக்கவும் உத்தரவு
செய்தான், அப்படியே அவர்கள் செய்து.
கொண்டுபோகக்கண்டு
பாடியது.

69. முன்னே கடிவாளமூன்றுபேர்தொட்டிழுக்கப்
பின்னேயிருந்திரண்டுபேர்தள்ள-எந்நேரம்
வேதம்போம்வாயான்விகடராமன்குதிரை
மாதம்போங்காதவழி.

இ-ள். எந்நேரம்வேதம்போம்வாயான் - எப்போதும் வேதம்பயிலுகின்ற வாயையுடையவனுகிய, விகடராமன் குதிரை-விகடராமையனதுகுதிரையானது, மூன்றுபேர் முன்னே கடிவாளம் தொட்டு இழுக்க - மூன்றுபேர் முற்புறத்தில்நின்று கடிவாளத்தைத் தொட்டுவலிக்க, இரண்டுபேர் பின்னேயிருந்துதள்ள-இரண்டுபேர் பிற்புறத்தில் நின்றுதள்ள, மாதம்காதவழிபோம்-மாதமொன்றுக்குக் காதவழிசெல்லும். எ-று.

ஆமூரில் வேங்கடமுதலியாருடைய குதிரைகளைப் புகழ்ந்து பாடியது.

70. ஆறும்பதினுறுமாமூரில்வேங்கட்டன்
எறும்பரிமாவேயேற்றமா-வேறுமா
வெந்தமாசும்மாவெறுமாகளிகிளற
வந்தமாசந்தமாமா.

இ-ள். ஆமூரில் வேங்கட்டன் எறும்-ஆமூரில் வாழ்கின்ற வேங்கட்டன் எறுகின்ற, ஆறும்பதினுறும் பரிமாவே எற்றமா-இருபத்திரண்டு பரிமாவே பெருமையுள்ள மாவாகும், வேறுமா - அதற்கு வேருகிய மாவெல்லாம், வெந்தமா-வெந்தமாவும், சும்மா-சும்மாவும், வெறுவா-வெறுமாவும், களிகிளறவந்தமா-களிகிளறவந்தமாவும், சந்தமாமா-சந்தமாமாவுமேயாம்.

எற்றமா என்பதில் மாகுதிரை. வெந்தமாமுதலியன இகழ்ச்சிக்குறிப்பு.

திருவாரூர் தியாகராயப்பெருமானது திருநடநத்தைத்தரிசித்து
நிந்தாஸ் துதியாகப் பாடியது.

71. ஆடாரோபின்னையவரன்பரெலாம்பார்த்திருக்க
நீடாரூர்வீதியிலேநின்றுதான்-தோடாரும்

மெய்க்கேபரிமளங்கள்வீசுந்தியாகேசர்
கைக்கேபணமிருந்தக்கால்.

இ-ள். தோடு ஆரும்மெய்க்கு பரிமளங்கள்வீசும் - பூவிதழ்களினேட்டின் பரிமளம் திருமேனியில் கமழப்பெற்ற, தியாகேசர் - தியாகேசரானவர்; கைக்குபணம் இருந்தக்கால்- தம்கையிற்பணமிருந்தால்,பின்னை அவர்- பிறகு அவர், நீடு ஆரூர்வீதியிலே நின்று - திருவாரூரில் நீண்டதெருவில் நின்று, அன்பர் எல்லாம்பார்த்திருக்க - அன்பர் எல்லாரும் பார்த்திருக்க, ஆடாரோ-கூத்தாடாரோ. எ-று.

பணம்-கையிற் கங்கணமாகத்தரித்த பாம்பின்படம். காசு என்பதும் ஒருபொருள். இதில் விலையுயர்ந்த மாணிக்கமிருத்தலால் இவர்க்கு இறுமாப்பையுண்டாக்கிக் கூத்தாடச் செய்ததென்பது கருத்து.

மாயூரத்தில் சிவபெருமானைத் தரிசித்து நிந்தாஸ்

துதியாகப்பாடியது.

72. வள்ளலெனும்பெரியமாயூரநாதருக்கு
வெள்ளிமலைபொன் மலையுமேயிருக்கத்-தெள்ளுமையாள்
அஞ்சலஞ்சலென் றுதினமண்டையிலேதானிருக்க
நஞ்சுதனையேனருந்தினார்.

இ-ள். வள்ளல்எனும்-வள்ளலென்று சொல்லப்பட்ட, பெரிய மாயூரநாதருக்கு - பெரியமாயூரத் திறைவருக்கு, வெள்ளிமலை பொன்மலையும் இருக்க-வெள்ளிமலையாகிய கைலாயமும் பொன்மலையாகியமேருவும் தமதுசுவாதீனத்திலிருக்கவும், தெள் உமையாள்-தெளிந்த அறிவினையுடைய உமாதேவியானவள், தினம்-நாள்தோறும், அஞ்சல் அஞ்சல் என்று அண்டையிலே இருக்க- அஞ்சாதேஅஞ்சாதேயென்று அருகிலிருக்கவும்;(இவர்) நஞ்சுதனை என் அருந்தினார்-விஷத்தை என்ன காரணம்பற்றி உண்டார்.

இது வினவா யிருப்பினும் இதில்விடையு மடங்கியிருக்கின்றது: யாதெனின், அஞ்சி முறையிட்ட தேவர்களைப் பாதுகாப்பது காரணமாக உண்டாரென்பது.

மதுரையில் மீனாக்ஷியம்மையைத் தரிசித்து நிந்தாஸ்

துதியாகப்பாடியது.

73. நல்லதொருபுதுமைநாட்டிற்கண்டேனதனைச்
சொல்லவாசொல்லவாசொல்லவா-தொல்லை
மதுரைவிக்கினேச்சுரனைமாதுமையாள்பெற்றாள்
குதிரைவிற்கவந்தவனைக்கூடி,

இ-ள். நாட்டில் - இவ்வுலகத்தில், (நான்) நல்லதொருபுதுமைகண்டேன்(நான்)நன்மையாகிய ஒரு அற்புதத்தைக்கண்டேன், அதனை சொல்லவா சொல்லவா சொல்லவா-அதைச்சொல்லட்டுமோ சொல்லட்டுமோ சொல்லட்டுமோ, (என்னெனின்)மாது உமையாள் உமாதேவியானவள், தொல்லைமதுரை-பழமையாகிய மதுரையில்,குதிரைவிற்க வந்தவனைக்கூடி-குதிரைவிற்கவந்தவனைப்புணர்ந்து, விக்கினேச்சுரனைப்பெற்றாள்-விநாயகமூர்த்தியைப்பெற்றாள். எ-று.

குதிரை விற்கவந்தவன்-சொக்கநாதன். குதிரை விற்கவந்தவன் என்றது மாணிக்கவாசகர்க்காக நரிபரியாக்கிய கதையைக்குறிக்கும்.

கீரைவிற்கும் பெண்ணொருத்தியின் இடைச்சிறுமையும் முலைப் பெருமையும் நோக்கியிரங்கிப் பாடியது.

74. வெள்ளையானேறும்விமலரடிபணியும்
பிள்ளையான்வாழும்பெருந்தெருவில்-வள்ளை
இலைக்கறிவிற்பாண்மருங்குலிற்றுவிடுமென்று
முலைக்கறிவிப்பாரிலையேமுன்.

இ-ள். வெள்ளை ஆன் ஏறும்-வெள்ளிய இடபத்தின்மேலேறுகின்ற, விமலர் அடிபணியும்-நிர்மலராகிய சிவபெருமானது திருவடியைவணங்குகின்ற, பிள்ளையான்வாழும் பெருந்தெருவில்-பிள்ளையான் என்பவன்வாழ்கின்றபெரியவீதியில்; வள்ளை இலைக்கறிவிற்பாள் மருங்குல்-வள்ளைக்கீரையைவிற்பவளது இடையானது. இற்றுவிடும் என்று-ஒடிந்துபோமென்று, முன்-முன்போய்; முலைக்கு அறிவிப்பார் இல்லையே-தனங்களுக்குஉணர்த்துவோரில்லையோ. எ-று.

பிள்ளையான்-ஒரு சீமான்.

திருவண்ணமலையில் சோணசலேசுரரைத் தரிசிக்கையில் பாடியது.

75. சட்டியிலேபாதியந்தச்சட்டுவத்திலேபாதி
இட்டகலத்திற்பாதியிட்டிருக்கத்-திட்டமுடன்
ஆடிவந்தசோணேசரன்றழைத்தபோதுபிள்ளை
ஓடிவந்ததெவ்வாறுரை.

இ-ள். சட்டியிலேபாதி - (கறிசமைத்த) சட்டியிற்பாதி கறியும், அந்தச் சட்டுவத்திலேபாதி-அதனைமொண்ட அகப்பையிற்பாதிகறியும், இட்டகலத்தில்பாதி-படைத்த இலைக்கலத்தில் பாதிகறியுமாக, இட்டுஇருக்க-வைத்திருக்க, திட்டமுடன் ஆடிவந்த சோணேசர்-வேதியவேடமாக நடனஞ்செய்துவந்த சோணகிரிநாதர், அன்று அழைத்தபோது - அக்காலத்தில் அழைத்தபொழுது, பிள்ளை-(சிறுத்தொண்டனது) பிள்ளை, ஓடிவந்தது எவ்வாறு புறத்தேயிருந்து)ஓடிவந்தது எப்படி, உரை-நீ சொல்லாய்,

பிள்ளையென்றது சீராளனை. சோணம்-சிவப்பு, அசலம்-மலை, சோணசலம்-சிவப்புமலை, நெருப்புமலையாதலால், இவ்வாறு கூறப்பட்டது. அருணசலம் என்பதும் இப்பொருளையுடையதே. அருணம் சிவப்பு.

மதுரையில் சொக்கநாதரைத்தரிசித்துநிந்தாஸ்துதியாகப் பாடியது.

76. கண்டீரோபெண்காள்கடம்பவனத்தீசனார்
பெண்டீர்தமைச்சுமந்தபித்தனார்-எண்டிசைக்கும்
மிக்கானதங்கைக்குமேலேநெருப்பையிட்டார்
அக்காளையேறினாராம்.

இ-ள். பெண்காள் கண்டீரோ - பெண்களே நீங்கள் கண்டீர்களோ, கடம்பவனத்து ஈசனார்-கடம்பவனத்தீசர்; பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார்-பெண்களைச்சுமந்த பித்தர், (இவர்) எண்திசைக்கும் மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார் (ஆம், - அஷ்டதிக்குகளிலும் மேலாகியதங்கையின்மேலே நெருப்பையிட்டாராம், அக்காளை ஏறினார் ஆம்-அக்காள்மீதேறினாராம். எ-று.

தங்கைக்குமேலே நெருப்பையிட்டார், அக்காளையேறினார் என்பன விகடம். தங்கைக்குமேலே நெருப்பையிட்டார், அக்காளையேறினார் என்பவற்றிற்கு முறையே தமதுகையில் மழுவேந்தினாரென்றும், அந்தக்காளையின்மீது ஏறினார் என்றும் வேறுமொருபொருள் தோன்றுமாறுகாண்க.

தில்லையில் சிவகாம வல்லியைத் தரிசித்துப்பாடிய நிந்தாஸ்துதி.

77. மாட்டுக்கோன்றங்கைமதுரைவிட்டுத்தில்லைநகர்
ஆட்டுக்கோனுக்குப்பெண்டாயினாள்-கேட்டிலையோ
குட்டிமறிக்கவொருகோட்டானையும்பெற்றாள்
கட்டுமணிச்சிற்றிடைச்சிகாண்.

இ-ள். கட்டுமணி சிற்றிடைச்சி-மணிமேகலையைக்கட்டிய சிற்றிடையையுடையவளாகிய மாட்டுக்கோன்தங்கை - மாட்டு இடையன்தங்கையானவள், மதுரைவிட்டு-வடமதுரையைவிட்டு, தில்லைநகர்-தில்லைநகரிலுள்ள, ஆட்டுக்கோனுக்குப்பெண்டு ஆயினாள்-ஆட்டிடையனுக்குமனைவியாயினாள். (அன்றியும்) குட்டிமறிக்க - ஆட்டுக்குட்டிகளை மறித்துக்கொண்டு வரும்பொருட்டு, ஒரு கோட்டானையும் பெற்றாள்-ஒரு சிறுவனையும் பெற்றாள், கேட்டிலையோ (என்செவியே இதனை நீ) கேட்டாயில்லையோ.எ-று.

மாட்டுக்கோன் தங்கை-க்ருஷ்ணனுக்குத் தங்கையாகிய உமாதேவி, ஆட்டுக்கோன், நடனஞ்செய்வதில் முதல்வனாகிய நடேசன். குட்டிமறிக்க கண்டோரெல்லாரும் தலையில்நேராகக் குட்டிக்கொண்டு பிறகு கையை மறித்துக்கொள்ள, ஒருகோட்டு ஆனை-ஒற்றைக்கொம்புள்ள யானைமுகக் கடவுள். கோட்டான்-சிறுவன்.

தில்லை நடேசரைத் தரிசித்துப்பாடிய நிந்தாஸ்துதி.

78. நாட்டுக்குளாட்டுக்குநாலுகாலையாநின்
ஆட்டுக்கிரண்டுகாலானாலும்-நாட்டமுள்ள
சீர்மேவுதில்லைச்சிவனேயிவ்வாட்டைவிட்டு
போமோசொல்லாயப்புலி.

இ-ள். நாட்டம் உள்ள-யாவரும் நாடுந்தன்மையுள்ள, சீர்மேவு-சிறப்புப்பொருந்திய, தில்லைச்சிவனே-தில்லைச்சிவபிரானே, நாட்டுக்குள்-உலகிலுள்ள, ஆட்டுக்கு-ஆட்டுக்கு, நாலுகால் - நாலுகால்களுண்டு, ஐ ஆம்நின் ஆட்டுக்கு அழகாகிய உன் ஆட்டுக்குமாத்திரம்,இரண்டுகால்-இரண்டுகால்களேயுள்ளன, ஆனாலும்-ஆயினும், (அப்புலி-இந்த ஆட்டின்மீது நெடுங்காலமாக விருப்பம்வைத்திருந்த) அந்தப் புலியானது, இ ஆட்டை விட்டுப் போமோ இந்த ஆட்டைவிட்டுப்போகுமோ, சொல்லாய்-சொல்வாய்.

ஐயா என்பதனை ஐயனேயென விளியாக்கினுமமையும், நின்ஆட்டுக்கு உனது நடனத்துக்கு. இவ்வாட்டை - இந்தநடனத்தை. புலி - வியாக்கிரபாதர்.

தில்லையில் பரமசிவனது பிக்ஷாடன உற்சவத்தைத் தரிசித்துப் பாடிய நிந்தாஸ்துதி.

79. தாண்டியொருத்திதலையின்மேலேறுளோ
பூண்டசெருப்பாலொருவன்போடானோ-மீண்டொருவன்
வையானோவின்முறியமாட்டானோதென்புலியூர்
ஐயாநீயேழையானல்.

இ-ள். தென்புலியூர் ஐயா-தென்புலியூரையனே, நீ ஏழை ஆனல் - நீ இப்படி ஏழையாயிருந்தால், ஒருத்திதாண்டி தலையின்மேல் ஏறுளோ-பெண்ணொருத்தி குதித்துத் தலைமேல் ஏறுளோ, ஒருவன்பூண்டசெருப்பால் போடானோ-ஒருவன்தான்தரித்தசெருப்பினால் அடியானோ, மீண்டுஒருவன் வையானோ-மறுபடி ஒருவன் ஏசானோ, (ஒருவன்) வில்முறிய மாட்டானோ-ஒருவன் தன்கைவில்லானது முறியும்படி புடைக்கானோ. எ-று.

தலையின்மேல் ஏறினவள்-கங்கை. செருப்பால்போட்டவன்-கண்ணப்பன். வைதவன்-சுந்தரமூர்த்தி நாயனார். வில்முறியமாட்டினவன்-அருச்சுனன். ஏழை-அன்பர்க் கெளியவன்.

தில்லை நடேசரைத் தரிசித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

80. கொங்குலவுந்தென் றில்லைக்கோவிந்தக்கோனிருக்கக்
கங்குல்பகலண்டர்பலர்காத்திருக்கச்-செங்கையிலே
ஓடெடுத்தவம்பலவாவோங்குதில்லையுட்புகுந்த
ஆடெடுத்ததெந்தவுபாயம்.

இ-ள். செங்கையிலே ஓடு எடுத்தஅம்பலவா-திருக்கையில் பலிபாத்திரமேந்திய அம்பலவாணு, கொங்கு உலவும் தென்தில்லை கோவிந்தக்கோன் இருக்க - மலர்மணம் வீசுகின்ற தென்றில்லைக் கோவிந்தனுகிய இடையர்தலைவன் இருக்கவும், கங்குல்பகல் அண்டர் பலர்காத்திருக்க-இராப்பகல்களாக பல இடையர்கள் காத்திருக்கவும், ஓங்குதில்லை யுள் புகுந்து-உயர்ந்த தில்லைவனத்தில் நுழைந்து, ஆடுஎடுத்தது-நீ ஆட்டைக் களவுசெய்தது, எந்த உபாயம்-எந்தவுபாயத்தினுல். எ-று.

தில்லைக் கோவிந்தக்கோன் - தில்லைக் கோவிந்த ராஜப்பெருமாள். அண்டர்-தேவர். ஆடு எடுத்தது-நடனஞ்செய்யத் திருவடியைத்தூக்கினது தில்லை-ஓர்மரம்.

திருவொற்றியூர் தியாகராயரைத் தரிசித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

81. ஆடுந்தியாகரேயாட்டமேன்றானுமக்கு
வீடுஞ்சமுசாரமேலிட்டுக்-கூடிச்
செருக்கிவிளையாடச்சிறுவரிரண்டாச்சே
இருக்குமூரொற்றியாச்சே.

இ-ள். ஆடும் தியாகரே-நடனஞ்செய்கிற தியாகேசரே, உமக்குவீடும் சமுசாரம்மேலிட்டு-உமக்குவீடும் சமுசாரமும் அதிகரித்து, கூடிசெருக்கி விளையாட-சேர்ந்து செருக்கிவிளையாடுதற்கு; இரண்டுசிறுவர் ஆச்சே-இரண்டுசிறுவராச்சுதே, இருக்கும் ஊர் ஒற்றி ஆச்சே-நீர் இருக்குமூரும்ஒற்றியாச்சுதே, (இப்படியிருக்க) ஆட்டம் என்-(உமக்கு)நடனம்யாதுக்கு.

சமுசார மதிகரித்து ஊரையும் ஒற்றிவைத்திருக்கும் எழையாகிய வுமக்கு இந்த ஆட்டம்யாதுக்கு என்பது கருத்து.

மாம் பிஞ்சுகளை நோக்கிப் பாடியது.

82. திங்கணுதலார்திருமனம்போலேகீறிப்
பொங்குகடலுப்பைப்-புகட்டியே
ஆச்சாளுக்கூறுகாயாகாமலாருக்காக்
காய்ச்சாய்வடுகமாங்காய்.

இ-ள். வடுகமாங்காய்-மாவடுவே, திங்கள்நுதலார்-அஷ்டமீசந்திரன் போன்ற நெற்றியையுடைய மாதரது, திருமனம்போலே கீறி - அழகிய மனம்போலப் பிளவுபட்டு, பொங்குகடல் உப்பைப்புகட்டி-பொங்குகின்ற கடலிலுண்டாகிய உப்பை யூட்டப்பெற்று, எங்களிட ஆச்சாளுக்கு-எம்முடைய ஆச்சாளுக்கு, ஊறுகாய் ஆகாமல்-ஊறுகாய்க்குதவாமல், ஆருக்கா காய்ச்சாய்-வேறு யார்பொருட்டுக் காய்த்தனை. எ-று.

மாதர்மனம் வஞ்சகமுள்ளது என்றற்கு திங்கணுதலார் திருமனம் போலேகீறி என்றார். ஆச்சாள்-ஆத்தாள் என்பதின்திரிபு.

தென்றற்காற்று வீசாமலிருக்கும்போது பாடியது.

83. அம்பேந்துகையானவன்பதியிலைம்மாவைக்
கொம்பேந்திதந்தைபணிகொண்டதோ-அன்பா
அரிந்தமகவையமுதுக்கழையென்
றிருந்தவன்றன்செங்காட்டிலே.

இ-ள். அன்பா-அன்பாக, அரிந்த - அறுத்துச்சமைத்த, மகவை-சிறுவனை, அமுதுக்கு அழையென்று-(என்னோடிருந்து) உண்ணுதற்கு அழைப்பாயென்று *(சிறுத்தொண்டனுக்குச்சொல்லி) இருந்தவன் தன்செங்காட்டிலே - (அச்சிறுவன்வருமளவும் உண்ணுமல்) இருந்தபெருமானது திருச்செங்காட்டில், அம்பு ஏந்துகையான்-கடலை (ஆசமனஞ்செய்ய) ஏந்தியகையையுடையவனுகிய, அவன்பதியில்-அந்தஅகத்தியனதுஇடமாகியபொதியமலையிற்பிறந்த, ஐம்மாவை-ஐந்துமாவை, கொம்பு ஏந்தி தந்தைபணிகொண்டதோ - கொம்பேந்தியின் தந்தையாகிய சிவபெருமானதுபாம்பு உட்கொண்டு விட்டதோ. எ-று.

அம்பு-நீர் அது இங்குக் கடலுக்காயிற்று. ஐம்மா-கால், (காற்று)அது இவ்விடத்தில் தென்றற்காற்றைக்குறித்தது. கொம்பேந்தி-விநாயகர்:

ஆலைப்பதிப்பெற்றான் என்னும் வணிகன்மேற் பாடியது.

84. முற்றாதகாஞ்சியினுமுல்லையினும்பாலையினும்
கற்றான்பின்சென்றகருணைமால்-பெற்றான்றன்
ஆலைப்பதித்தாரளகத்தினட்கயனர்
வேலைப்பதித்தார்விழி.

இ-ள். முற்றாத காஞ்சியினும்-அழிவுபெறாத கச்சிநகரத்தினும், முல்லையினும்-முல்லை நிலத்திலும், பாலையினும்-பாலைநிலத்திலும், கற்றான்பின் சென்ற-(முறையே) செந்நாப்புலவர் கன்றையுடைய பசுக்கள் விசுவாமித்திரன் இவர்களின்பின்னே நடந்த, கருணைமால்-கருணையுள்ள திருமாலின் அமிசமாகிய, பெற்றான்தன்-பெற்றான் என்பவனது, ஆலைப்பதியிலுள்ள தார் அளகத்தினட்கு - பூமாலையையணிந்த கூந்தலையுடையாளுக்கு, அயனர்பிரமனர், வேலை-வேலாயுதத்தை, விழிபதித்தார்-கண்களாக்கி (முகத்திற்) பதித்துவைத்தார். எ-று.

பலசரக்குக்கடைவைத்துக்கொண்டு சீவனஞ்செய்யும் ஆலைப்பதிப் பெற்றான் என்னும் ஓர் ஏழைவணிகன் ஓர்நாள் காளமேகப் புலவரை நோக்கித் தன்மீது பாட்டுப்பாடும்படி பணிவாய்க்கேட்க, அப்புலவர் மன்னர் முதலியோரைப்பாடும் யாம்உன்னையும் ஒருபொருளாகவைத்துப்பாடுவமோ என்று சொல்லிப்போயினர். அவர் அவ்வாறுசொல்லியும் அவ்வேழைவணிகன் எவ்வகையாலாயினும் இப்புலவரால் பாட்டுப்பெற வேண்டுமென்கிற விருப்பமுடையவனய், அவ்வாலைப்பதியில் அவர் அபிமானித்

திருந்த கமலாக்ஷியென்னும் தாசியைக்கண்டு தன் எண்ணத்தை முற்றுவிக்க வேண்டுமென்று கெஞ்சினன். அத்தாசி இவன் மன்றாட்டுக்கிரங்கி அவ்வாறே முற்றுவிப்பதாக வாக்களித்து, காளமேகப்புலவர் இரவில் நேரஞ்சென்று வரும் ஓர்தினத்தை அறிந்து அன்றிரவில் அவ்வணிகனைக் கடைமூடாதிருக்கக் கற்பித்துத் தான்தேகம் அசௌக்கியம் உள்ளவள் போல் பாசாங்குசெய்து முக்காடிட்டுப் படுத்திருக்கும் தாசியைக்கிட்டி, வாட்டமுற்றிருக்கக் காரணம் என்னென்று வினவப்போகையில், அவள் நாள் முழுதும் உமது கருத்துக்கிசைந்த இடம்சென்று உல்லாசமாய்க் காலங்கழித்துத் திரியும் உமக்கு இப்பேதைத் தாசியின் சுகதுக்கங்கள் எதுக்குப்போம் போம் என்று கடிந்துகூற, புலவர் பெருமான் தாசியை நோக்கி, நீ வேண்டியவற்றை வேண்டியவாறு செய்யக்காத்திருக்கும் என்னை இவ்வாறு கூறுதல் தகுதியன்றென்று அவள் பிணக்குத் தீரும்பொருட்டு இதமானமொழிகள் பலகூறினர். அப்போது அத்தாசி பொறுக்க முடியாத என்னோய்தீர்ந்து சுகமடைகிறதற்கு இன்னின்ன மருந்துகள் வாங்கித்தருகவெனச் சிலமருந்தின்வகைகூற, இவற்றை இதோ நானே போய்க்கொண்டு வருறேனென்று கடைக்குச் சென்றபோது நெடுநேரமாய் விட்டபடியால் கடைகள் மூடப்பட்டிருந்தன. இவ்வணிகன் ஒருவனும் கடைவைத்திருந்தனன், அவனைக்கண்டு தமக்குவேண்டிய மருந்து கேட்க, அவன் நான் கடை கட்டப்போகின்றேன், இப்போது எடுத்துக் கொடுக்கமாட்டேன், மன்னரைப்பாடும் நீர் அம்மன்னரையே தேடிப் போம் என்றனன். அப்போது புலவர்அவ்வணிகன்மேல் இச்செய்யுளையும், வருஞ்செய்யுளையும்பாடி, மருந்து வாங்கிக்கொண்டுபோய்த் தாசிகமலாக்ஷிக்குக் கொடுத்தனர் என்பது கர்ணபரம்பரையான்கதை.

திருமால் காஞ்சியில் செந்நாப்புலவர் பின்சென்றசெய்தி வருமாறு.- செந்நாப்புலவருடைய சீஷராகிய கணிகண்ணரைக் காஞ்சி மண்டலத்தரசன் தம்மீது பாட்டுப்பாடாமையாகிய காரணம்பற்றித் தமது ராச்சியம் விட்டுப்போகச்சொல்ல, அவர் அதை தமதாசானாகிய செந்நாப்புலவர்பெருமாள் சந்நிதியில் இதனை விண்ணப்பஞ்செய்து நீரும்வாருமென்றழைக்க இவ்விருவருடன் பெருமாளும் தமதுசேஷசயனத்தைச்சுருட்டிக்கொண்டு சென்றனர் என்பது. இதற்குச் செய்யுள்:—

"கணிகண்ணன்போகின்றான்காமருபூங்கச்சி
மணிவண்ணாநீயிருத்தல்வேண்டா-துணிவொன்றிச்
செந்நாப் புலவனிதோ செல்கின்றே னீயு நின்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள். "

மன்னனைப் பாடாமற் போகின்றே னீயும்
வாவரியே வென்றழைத்த புலவன் பின்னே
பன்னகப் பாம்பணை சுருட்டிக் கொண்டேயேகிப்
படுத்துக்கொள்ளென்றமட்டிற் படுத்துக்கொண்டாய்
சொன்னவண்ணம்செய்த பெருமாளாமென்று
சுரர் துதிக்கக்கச்சியினிலிருக்கின்றாயால்.

முல்லையில் கன்றுகளையுடைய பசுவின்பின்சென்றது கிருஷ்ணவதாரத்தில். பாலையில் விசுவாமித்திரன் பின்சென்றது இராமாவதாரத்தில் தாடகை சம்மாரத்தின் பொருட்டு.

இதுவும் அவ்வணிகன்மேற்பாடியது இது பாலனைப்பழித்தல் என்னுந்துறை.

85 கஞ்சமுகையுங்களிற்றானையின்கொம்பும்
அஞ்சுமுலைநாலுமுலையானதுவும்-மிஞ்சுபுகழ்
பெற்றான்றன்மாலைபிறர்க்களித்ததுங்குதலை
கற்றான்பிறந்தபின்புகாண்.

இ-ள். கஞ்சமுகையும்-தாமரையரும்பும்; களிறு ஆனையின்கொம்பும்-களிற்றானையின் தந்தமும், அஞ்சும்முலை (கண்டு) அஞ்சும்படியான தனங்கள், நாலும்முலை ஆனதுவும் - தொங்குகின்ற தனங்களானதுவும், மிஞ்சுபுகழ்-மிகுந்தபுகழையுடைய, பெற்றான் - பெற்றான் என்பவன், தன்மாலை பிறர்க்கு அளித்தலும் - தன்மாலையைப் பிறருக்குக்கொடுத்ததும், குதலை கற்றான் பிறந்தபின்புகாண்-மழலைச்சொல்லைக்கற்றவனாகிய இந்தப்பாலன் பிறந்தபின்பே. எ-று.

அஞ்சுமுலை நாலுமுலையானதுவும் எனச்சொன்னயங்காண்க.

ஸ்ரீரங்கத்து வைஷ்ணவ பிராமணர்கள் விநாயகருக்கு நாமமிட்டு இவர்விஷ்ணுவே பரமென்றுநாமம் போட்டுக்கொண்டிருக்கிறார் பாரும் என்று இகழ்ந்து சொன்னதற்குப் பாடியது.

86. தந்தைபிறந்திறவாத்தன்மையினாற்றன்மாமன்
வந்துபிறந்திறக்கும்வண்மையினால்-முந்தொருநாள்
வீணிக்குவேளெரித்தான்மகன்மாமன்
காணிக்குவந்திருந்தான்காண்.

இ-ள். தந்தை-(தன்) தகப்பனான பரமசிவன், பிறந்து இறவாதன்மையினால்-ஜனித்துமரிக்காத தன்மையினாலும், தன்மாமன்-தன்மாமனாகிய திருமால், வந்துபிறந்து இறக்கும் வண்மையினால்-(உலகில்) வந்துபிறந்திறக்கின்றவளப்பத்தாலும். முந்து ஒருநாள்-பூர்வம் ஒருகாலத்தில்,வீண்-வீணே, இக்குவேளை எரித்தான்-கருப்புவில்லையுடைய மன்மதனையெரித்தவனாகிய சிவபெருமானுக்கு, மகன் (மூத்த) பிள்ளையாகிய விநாயகன், மாமன்காணிக்கு வந்து இருந்தான் மாமனுடைய காணியின்பொருட்டு வந்து (இவ்விடத்தில்) தங்கி யிருக்கிறான். எ-று.

அது.

87. தாதிதூதோதீதுதத்தைதூதோதாது
தூதிதூதொத்திதத்தூததே-தாதொத்த

தூத்திதத்தாதே தூதித்துத்தேத்தொத்தீது
தித்தித்ததோதித்திதி.

இ-ள். தாதி-தோழியினுடைய, தூதோ-தூதோ, தீது-குற்றமுள்ளது, தத்தை-கிளி, தூது ஓதாது-தூதுசொல்லாது, தூதி-தூதியே, தூது-உன் தூதானது, ஒத்து-(என்மனதுடன்) பொருந்தி, இதம்-நன்மையான, தூத தே-தூதாகும், (ஆதலால்) தாதுஒத்த-பொன்னை நிகர்த்த, துத்தி-தேமல், தத்தாதே-படராதவண்ணம், துதித்து-(அவரை) தோத்திரித்து, ஒத்து-(அவருடன்) ஒத்து, தேத்து-(அவர்மனதைத்) தேற்று, இது-இந்தச்செய்தி தித்தித்தது - (என்மனதுக்கு) இனித்தது, ஓதி - (இதை அவருடன்) சொல்லி, திதி-(என்னைக்) காப்பாற்று. எ-று.

தாதியும் கிளியும் என் தூதுக்கிசைவாயிராமையால், தூதியே, நீதலைவரிடம் சென்று அவர்மனம் இறங்கும்படி செய்யவேண்டும் என்பதாம்.

வெறி விலக்கல்.

88. முந்நான்கிலொன்றுடையான்முந்நான்கிலொன்றெடுத்து
முந்நான்கிலொன்றின்மேன்மோதினன்-முந்நான்கில்
ஒன்றரிந்தாலாகுமோ ஓஓமடமயிலே
அன்றணைந்தான் வாராவிட்டால்.

இ-ள். ஓ ஓ மடமயிலே-ஓ இளமைபொருந்திய மயிற்சாயலுள்ள பெண்ணே, அன்று அணைந்தான் வாராவிட்டால் அன்றுகலந்து பிரிந்ததலைவன் வராதிருந்தால், முந்நான்கில் ஒன்று உடையான்-பன்னிரண்டில் ஒன்றையுடையவன், முந்நான்கில் ஒன்று எடுத்து-பன்னிரண்டில் ஒன்றையெடுத்து, முந்நான்கில் ஒன்றின்மேல் மோதினன்-பன்னிரண்டில் ஒன்றின் மீதுமோதினன், (இதற்கு) முந்நான்கில் ஒன்று அரிந்தால் ஆகுமோ-பன்னிரண்டில் ஒன்றினை அறுத்தால் பரிஹாரமாகுமோ. எ-று.

முந்நான்கு என்னும் நான்கனுள் முதலாவது இராசி பன்னிரண்டில் ஒன்றாகிய மீனம், இரண்டாவது இராசிபன்னிரண்டில் ஒன்றாகியதநுசு, மூன்றாவது இராசிபன்னிரண்டில் ஒன்றாகியகன்னி, நான்காவது இராசி பன்னிரண்டில் ஒன்றாகிய மேஷம். மேஷம்-ஆடு. மன்மதன் வில்லைவளைத்து மலர்க்கணையெய்யக் காமவெறிகொண்ட இக்கன்னிக்கு ஆட்டைக் கொலைசெய்து அவ்வெறியைநீக்கநினைத்தலால்பயனின்றென்பதுகருத்து.

சிவபெருமான் திருவாரூரில் பரவையாரிடம் சுந்தரருக்காகத்
தூதுசென்றதைச் சிறப்பித்துப் பாடியது.

89. ஆரூரிலையேயயனுந்திருமாலும்
காணாடிமுடிமுன்காண்பதற்கு-மேனாள்

இரவுதிருவாரூரிலெந்தைபிரான்சென்ற
பரவைதிருவாயிற்படி.

இ-ள். அயனும் திருமாலும்-பிரமனும் விஷ்ணுவும், கான் ஆர் - வாசனைபொருந்திய, அடிமுடி-அடிமுடிகளை, முன்காண்பதற்கு-முற்காலத்தில் காண்பதற்கு, மேல்நாள் இரவு-முன்னளிரவில், திருவாரூர்-திருவாரூரின் கண், எந்தைபிரான்சென்ற-எமது தந்தையாகிய சிவபெருமான் நடந்து போன, பரவைதிருவாயிற்படி - பரவையென்பவர்வீட்டுத் திருவாசற்படியாக, ஆனர் இல்லையே-ஆனர்களில்லையே.

சிவபெருமான் அடியார்க் கெளியனும், மற்றையர்க்கு அறியனுயுமிருக்கின்றனர் என்பது கருத்து.

வைத்தீச் சுரரைத் தரிசித்து அவர்மீது பாடிய நிந்தாஸ்துதி.

90. வாதங்காலாந்தமக்குமைத்துனர்க்குநீரிழிவாம்
போதப்பெருவயிறும்புத்திரனுக்-கோதக்கேள்
வந்தவினை தீர்க்கவகையறியார்வேளூரர்
எந்தவினை தீர்ப்பாரிவர்.

இ-ள். தமக்கு வாதக்கால் ஆம் - (சிவபெருமானுகிய) தமக்கு வாதக்காலாம், மைத்துனர்க்கு நீரிழிவு ஆம்-மைத்துனராகிய திருமாலுக்கு நீரிழிவுண்டு, புத்திரனுக்கு போதபெருவயிறு ஆம்-புதல்வனுகிய விநாயகருக்கு மிகவும் பெருவயிறுண்டு, ஓதக்கேள்-சொல்லக்கேள், வந்தவினை தீர்க்க வகை அறியார்-(தமக்கு) வந்தநோய்களை நீக்கிக்கொள்ள வகையறியார், வேளூரார் இவர்-(இப்படியிருக்கிற) புள்ளிருக்கு வேளூரராகிய இவ்வைத்தீச்சுரர், எந்தவினை தீர்ப்பார் - (தம்மிடத்தில் வந்தடைந்தோர்க்கு) எந்த வினைகளை ஒழிப்பார். எ று.

வாதக்கால் கொண்டவர்கள் சிரம பரிகாரத்தின்பொருட்டு காலைத் தூக்குவராதலால் நடனம்பண்ணும்பொருட்டு; ஒருகாலைத் தூக்கிக்கொண்டவர் குளிர்ச்சியை விரும்புவாராகையால் நீரில்படுத்திருக்கும் திருமாலுக்கு நீரிழிவு என்றும் கற்பித்தார்.

ஸ்ரீரங்கத்து வைஷ்ணவரும் திருவானைக்காக்குருக்களும்சமயத்துவேஷத்தால் சண்டைசெய்ய, அவர்களைச் சமாதானப் படுத்தப் பாடியது.

91. சீரங்கத்தாருந்திருவானைக்காவாரும்
போரங்கமாகப்பொருவதேன்-ஓரங்கள்
வேண்டாமிதென்னவிவரந்தெரியாதோ
ஆண்டானுந்தாதனுமானல்.

இ-ள். சீரங்கத்தாரும்-ஸ்ரீரங்கத்திலுள்ள வைணவரும், திருவானைக் காவாரும்-திருவானைக் காவிலுள்ளசைவரும், அங்கம் ஆக (போர்)பொருவது என் - (உரிய) ஆதாரங்களோடு சண்டைசெய்தற்குக் காரணம்யாது (இவர்கள்தெய்வங்கள்) ஆண்டானும் தாதனும் ஆனல்-சேஷியும் சேஷபூதனும் ஆயின், ஓரங்கள்வேண்டாம் - பட்சபாதச் சொற்கள்வேண்டாம், இதென்ன-இது என்ன ஆச்சரியம், விவரம்தெரியாதோ - விவரந்தெரியமாட்டாதா. எ று.

அங்கம் ஆறுசாஸ்திரங்களெனினுமாம், சேஷி பரமாத்மா, சேஷபூதன் சீவாத்மா. ஆண்டான் தாதன் என்கிற சொற்களினுலேயே சிவபெருமான் இறைவனென்றும், திருமால் அடிமை என்றும்விளங்குகின்றபடியால் பரத்துவ நிர்ணயத்துக்குச் சாஸ்திரஆதாரங்கள் தேடவேண்டியதில்லை என்பது கருத்து.

கன்னபுரம் சவரிநாராயணப்பெருமாள் திருநக்ஷத்திரத்தைக்
குறித்துப் பாடியது.

92. உத்திரத்துக்கோர்நாளுரோகணிக்குப்பத்தாநாள்
சித்திரைக்குநேரேசிறந்தநாள்-எத்திசையும்
காராரும்பூஞ்சோலைக்கன்னபுரம்வாழ்சவரி
நாராயணன்பிறந்தநாள்.

இ-ள். எத்திசையும் எந்தத்திக்கிலும், கார் ஆரும்-மேகமண்டலத்தையளாவிய, பூஞ்சோலை பூஞ்சோலைகள்சூழ்ந்த, கன்னபுரம்வாழ்-கன்னபுரத்தில்வசிக்கின்ற, சவரிநாராயணன் பிறந்தநாள்-சவரிநாராயணன் ஜன்மித்தநாள், உத்திரத்துக்கு ஓர்நாள்-உத்திரத்துக்கு அடுத்த ஒன்றாவது நாள், உரோகணிக்கு பத்தாம்நாள்-உரோகணிக்குப் பத்தாவதுநாள், சித்திரைக்குநேரே சிறந்தநாள்-சித்திரைக்குநேராய் மேலானநாள். எ று.

நாள் நட்சத்திரம். உத்திரத்துக்கு அடுத்ததும், உரோகணிக்குப் பத்தாவதும், சித்திரைக்கு முற்பட்டதுமாகிய நட்சத்திரம் அஸ்தம்என்றறிக. சவரி நாராயணன் பிறந்தநாள் அஸ்தம் என்பது கருத்து.

சிவபெருமானை நஞ்சுணியெனப் பாடியது.

93. சிரித்துப்புரமெரித்தான்சிந்துரத்தைப்பற்றி
உரித்துதிரம்பாயவிடுத்தான்-வருத்தமுடன்
வாடுமடியாருடனேவானவருந்தானவரும்
ஓடுபயந்தீர்த்தநஞ்சுணி.

இ-ள். வருத்தமுடன்-துன்பத்தோடு, வாடும்அடியாருடனே-வாட்டமடைந்த அடியவர்களுடன், வானவரும்தானவரும் - தேவரும் அசுரரும், ஓடுபயம் ஓடுதற்கேதுவாகிய பயத்தை,தீர்த்த-நீக்கின, நஞ்சுஉண்ணி-விஷத்தையுண்டோனாகிய சிவபெருமான், சிரித்துபுரம் எரித்தான்-நகைத்து

முப்புரங்களை நீறாக்கினன், சிந்துரத்தைப்பற்றி-யானையைப்பிடித்து, உரித்து அதின்தோலையுரித்து, உதிரம்பாய-ரத்தம் பெருகும்படி, உடுத்தான்-போர்த்துக்கொண்டான். எ று.

சிந்துரம் என்றது கயமுகாசுரனை.

திருவாலங்குடியில் தட்சணாமூர்த்தியைத் தரிசிக்கும்போது பாடியது.

94. ஆலங்குடியானை யாலாலமுண்டானை
ஆலங்குடியானென்றார்சொன்னார்-ஆலங்
குடியானேயாயிற்குவலயத்தோரெல்லாம்
மடியாரோமண்மீதிலே.

இ-ள். ஆல் அம் குடியானை-கல்லால மரநிழலை அழகிய உறைவிடமாகக்கொண்டவனை, ஆலாலம் உண்டானை-ஆலாலவிஷத்தை யுட்கொண்டவனை, ஆலம்குடியான்என்று ஆர்சொன்னார்-விஷத்தைக் குடிக்கமாட்டானென்று யார்சொன்னார், ஆலம்குடியானே ஆயின் - (அந்த) விஷத்தை அவன் குடியானாயின், குவலயத்தோர் எல்லாம் மண்டலத்திலுள்ளார் எல்லாம், மண்மீதிலே மடியாரோ - மண்ணின்மீது மாண்டுவிழமாட்டார்களா. எ று.

ஆல் அம்குடியான் என்றது சநகாதியர்க்கு அருள்செய்யும் பொருட்டு கல்லாலினிழலிலெழுந்தருளிய தட்சணாமூர்த்தியை ஆலாலமுண்டது திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்தில் அதிலுண்டாகிய நஞ்சைக்கண்டு அஞ்சியோடிய தேவர் முதலியோர் பயந்தீர்த்தற்பொருட்டு ஆலங்குடியான் என்பது-திருவாலங்குடியிலுள்ளான் என்றும் பொருள்படுதல்காண்க.

கங்கைகொண்ட சோளேச்சுரத்துச் சிவபெருமானைத் தரிசித்து

அவரைச் சிறப்பித்துப் பாடியது.

95. காவலனெங்கள் கனவைப்பாஞ்சோளேசன்
மாவலிகங்கைமணிவாரி-ஆவனலென்
றப்புளங்கைதோய்க்கவதில்வாரியமுத்தைக்
கொப்புளமென்றூதுங்குரங்கு.

இ-ள். காவலன் - அடைந்தாரைக் காக்குந்தொழில் வல்லவன், எங்கள் கனவைப்பு ஆம் சோளேசன்-எங்களுக்குப்பெரிய நிட்சேபமாகிய கங்கைகொண்ட சோளேச்சரத்தான், (அவனது) மாவலிகங்கைமணி-மிகுந்தவலியுடன் பிரவகிக்கும் கங்கையின் மாணிக்கங்களை, குரங்குவாரி-(சில) குரங்குகள் அள்ளி, ஆ அனல் என்று-ஆ நெருப்பென்று, அப்புள்-நீரினுள்ளே, அங்கைதோய்க்க-அங்கையைத்தோய்க்க, குரங்கு-(சில) குரங்குகள், அதில் வாரியமுத்தை - அதில் அள்ளியமுத்துக்களை, கொப்புளம் என்று ஊதும்-கொப்புளமென்று வாயினால் ஊதும். எ-று.

சோழநாட்டிலுள்ள இத்திருப்பதியி லெழுந்தருளிய சிவபெருமானுக்கு கங்கைகொண்ட சோளேச்சரத்தானென்றுதிருநாமமாகையால், அத்திருப்பதியிலுள்ளஆறுமாவலிகங்கை எனப்பட்டது. கங்கைகொண்டசோளேச்சுரத்தான் என்பது சிவபெருமான் திருநாமம் என்பதற்குச்செய்யுள்:-

அன்னமாய்விசும்புபறந்தயன்றேட வங்ஙனேபெரியநீசிறிய, வென்னையாள்விரும்பியென்மனம்புகுந்த வெளிமையையென்றுநான் மறவேன், முன்னமாலறியாவொருவனுமிருவர்முக்கணுநாற்பெருந்தடந்தோட், கன்னலேதேனேயமுதமேகங்கை கொண்டசோளேச்சரத்தானே.

தில்லை மூவாயிரவரில் சிலர், நடேசர் கையிலேந்தியமான் அவர் திருமுகத்துக்கு நேராகத் தன் முகத்தையும். முன்னங்கால் களையும் மேலேதூக்கி நிற்பதற்குக் காரணம் கற்பித்துப் பாடவேண்டுமெனப் பாடியது.

96 பொன்னஞ்சடையறுகம்புல்லுக்கும்பூம்புனற்கும்
தன்னெஞ்சுவகையுறத்தாவுமே- அன்னங்கள்
செய்க்கமலத்துற்றுலவுந்தில்லைநடராசன்
கைக்கமலத்துற்றமான் கன்று.

இ-ள். அன்னங்கள்-அன்னப்பறவைகள், செய்கமலத்து-வயல்களிலுள்ள தாமரைமலர்களின்மீது, உற்று உலவும் - பொருந்தியுலாவுகின்ற, தில்லை திருத்தில்லையி லெழுந்தருளிய, நடராஜன் - நடராஜனது, கைக்கமலத்து-கையாகிய தாமரைமலரிலிருக்கிற, மான்கன்று-மான்கன்றுனது, பொன் அம்சடை-பொன்போலும் அழகிய சடையிலணிந்திருக்கிற, அறுகம்புல்லுக்கும், அறுகம்புல்லின் பொருட்டும், பூபுனற்கும் - அழகிய நீரின் பொருட்டும், தன்னெஞ்சு உவகை உறதாவும்-தன்மனத்தில் களிப்பு மிகும்படி தாவா நிற்கும். எ-று.

அறுகம்புல்-அன்பர்சாத்தினது. புனல்-கங்கைநீர்.

இஞ்சி குடியிலிருக்கும் தாசியாகிய கலைச்சியென்பவள் இவரை மதியாதிருந்ததனால் கோபங்கொண்டு அவள்மீது பாடிய வசை.

97. ஏய்ந்ததனங்களிரண்டுமிருபாகற்காய்
வாய்ந்தவிடைசெக்குலக்கைமாத்திரமே-தேய்ந்தகுழல்
முக்கலச்சிக்கும்பிடிக்குமூதேவியாள்கமலைக்
குக்கலிச்சிக்குங்கலைச்சிக்கு.

இ-ள். தேய்ந்தகுழல் முக்கலச்சிக்கும் பிடிக்கும்மூதேவியாள் - குறுகின கூந்தலில் முக்கலச்சிக்குபிடித்த மூதேவியும், கமலைகுக்கல் இச்சிக்கும் கலைச்சிக்கு - கமலை நகரிலுள்ளநாய் விரும்புகின்ற கலைச்சியென்னும்

பெயருள்ளவளுமாகிய இவளுக்கு, எய்ந்த தனங்கள் இரண்டும் - பொருந்திய தனங்களிரண்டும், இருபாகற்காய் - இரண்டு பாகற்காய்களை நிகர்ப்பன, வாய்ந்த இடை-பொருந்திய இடையானது, செக்கு உலக்கைமாத்திரமே-செக்குலக்கையின் அளவுள்ளதே யாம். எ-று.

முக்கலச்சிக்கு-மிகுந்த சிக்கு.

மேற்படி கலைச்சியின்தாயார்வேண்டுகோளுக் கிரங்கிப்பாடிய புகழ்ச்சி.

98. நஞ்சுகுடி கொண்ட கணைநாலுந்தெரிந்துமதன்
இஞ்சிகுடி தன்னிலும்வந்தெய்வானோ-விஞ்சு
முலைச்சிகரத்தாலழுத்திமுத்தமிட்டுச்சற்றே
கலைச்சிகரத்தாலணைத்தக்கால்.

இ-ள். கலைச்சி-கலைச்சியென்பவள், விஞ்சும்-(நாளுக்குநாள்) விருத்தியடைகின்ற, முலைச்சிகரத்தால் அழுத்தி-தன்முலை முகட்டாலழுத்தி, முத்தமிட்டு-முத்தங்கொடுத்து, சற்றே-சிறிதுபொழுது, கரத்தால் அணைத்தக்கால்-கையால் அணைத்துக்கொள்ளுவளானால், மதன் - மன்மதனானவன், நஞ்சுகுடிகொண்ட-விஷமானது குடிகொண்டிருக்கிற, கணைநாலும் தெரிந்து-நான்குபாணங்களையும் தெரிந்தெடுத்துக்கொண்டு, இஞ்சிகுடிதன்னிலும்வந்து-இஞ்சிகுடியென்னும் இவ்வூரிலும்வந்து, எய்வானோ - என்மீது பிரயோகிப்பானோ. எ-று.

கணைநாலும் என்றது தாமரைமலர், மாமலர், அசோகமலர், முல்லைமலர் எனபவற்றை. நீலமலர்கொல்லுமியல் புள்ளதாதலால் அதனையொழித்து இந்நான்கையே கூறினர். தாமரைமலர் முதலியவைகட்கு முறையே நினைப்பூட்டுதலும், பசலைபோர்த்தலும், உணவை யொழித்தலும், கிடக்கச்செய்தலும் குணங்களாம்.

வைத்தீசுரன்கோயிலில் சுவாமி தரிசனம் செய்யும்போது

பாடிய நிந்தாஸ்துதி.

99. தீத்தானுன்கண்ணிலே தீத்தானுன்கையிலே
தீத்தானுமுன்புன்சிரிப்பிலே-தீத்தானுன்
மெய்யெலாம்புள்ளிருக்கு வேளூரா வுன்னையிந்தத்
தையலாளெப்படிச்சேர்ந்தாள்.

இ-ள். புள்ளிருக்குவேளூரா-புள்ளிருக்கு வேளூரி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, உன்கண்ணிலே தீ-உன் கண்ணிலிருப்பது (மன்மதனையெரித்த) நெருப்பு, உன்கையிலே தீ-உன்கையிலிருப்பது (தாருகாவனத்திருடிகள் உன்னைக்கொல்ல ஏவின) நெருப்பு, உன்புன்சிரிப்பிலே தீ-உன் புன்சிரிப்பிலிருப்பது (முப்புரத்தையெரித்த) நெருப்பு, (அன்றியும்) உன்மெய்யெல்லாம் தீ-உன் திருமேனிமுழுதும் நெருப்புருவமாயிரு

க்கின்றது (இப்படியிருக்க) உன்னை-நின்னை, இந்தத்தையலாள் - இந்தத் தையற்சீரையுடுத்தவள், எப்படிசேர்ந்தாள்-(சீரையும் தானும் வேவாமல்) எவ்வாறு கூடினாள், (இவளுக்கு அக்நிஸ்தம்பநவித்தை தெரியுமோ).எ-று.

தையலாள்-தையனாகியம்மை. இது இத்தலத்தி லெழுந்தருளி யிருக்கும் பிராட்டியார் திருநாமம்.

திருக்கருவை நல்லூரில் களாமரத்தின்கீழே எழுந்தருளியிருக்கும் பால்வண்ணநாதரைத் தரிசித்து அவர்மீதுபாடிய மொழிமாற்று.

100 வெண்ணெய்திருடியுண்டவேணியனாரிருக்கக்
கண்ணன்மேல்வைத்தகளவேது-பெண்ணைத்
தலையிற்சுமந்தான்மால்சர்ப்பத்திலேறி
அலையிற்றுயின்றானரன்.

இ-ள். வெண்ணெய் திருடியுண்டகண்ணன் இருக்க - திருவாய்ப்பாடியில் வெண்ணெய்யைத் திருடிப்புசித்த க்ருஷ்ணனிருக்க, (அவன்மீது களவைவையால்) வேணி அரனார்மேல் களவுவைத்தது எது - சடாபாரத்தையுடைய சிவபெருமான்மீது களவைவைத்ததற்குக் காரணம்யாது, அரன்பெண்ணைத் தலையில் சுமந்தான்-சிவபெருமான் (கங்கையென்னும்) பெண்ணை சிரசிற்றாங்கினான், மால் சர்ப்பத்தில் ஏறி அலையில் துயின்றான்-திருமால் ஆதிசேஷன்மீதேறித் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தான்.எ-று.

களவு-திருட்டுத்தனம், களாமரம், இவற்றை முறையே மாலுக்கும் அரசனுக்குங்கொள்க.

தண்டங்கூரிலுள்ளவர்கள் பண்டநிறை குறைய விற்றதைக்கண்டு அவர்கள்மீது வசையாகப்பாடியது.

101. தண்டங்கூர்மாசனங்காள்சற்குணரென்றிருந்தேன்
பண்டங்குறையவிற்றபாவிகாள்-பெண்டுகளைத்
தேடியுண்ணவிட்டீர்தெருக்கள்தெருக்கடோறும்
ஆடிமுதலானிவரைக்கும்.

இ-ள். தண்டங்கூர்-தண்டங்கூரிலுள்ள, மாசனங்காள்-மிகுதியாகிய ஜனங்களே, நீர் சற்குணர் என்று இருந்தேன்-நீங்கள் நற்குணமுள்ளவர்களென்று இருந்தேன், பண்டம் குறையவிற்ற பாவிகாள்-பண்டத்தைக்குறையநிறுத்துவிற்ற பாவிகளே, ஆடிமுதல் ஆனிவரைக்கும்- ஆடிமாசமுதல் ஆனிமாசம்வரைக்கும், தெருக்கள் தெருக்கள்தோறும்-எல்லாத் தெருக்களிலும், பெண்டுகளை-உங்கள் மனைவியரை, தேடி உண்ணவிட்டீர்-சம்பாதித்து உண்ணும்படி விட்டீர்கள். எ-று.

இப்படிப் பாடினவுடன், தெருக்கள்தோறும் பண்டம் விற்றுக்கொண்டிருந்த பெண்கள் ஒருவருஷகாலம் அந்தத் தெருக்களிற்றானே இங்குமங்குமாய் அலைந்துகொண்டிருந்தார்கள் என்பர்.

கம்பரைப் பரிகசித்துப் பாடியது.

102. நாராயணனைநாராயணனென்றேகம்பன்
ஓராமற்சொன்னவுறுதியால்-நேராக
வாரென்றால்வர்என்பேன் வாளென்றால்வள்என்பேன்
நாரென்றால்நர்என்பேன்நான்.

இ-ள். கம்பன் - கம்பனானவன், ஓராமம் - ஆராயாமல், நாராயணனை நாராயணன் என்றுசொன்ன உறுதியால் - நாராயணனை நாராயணனென்றுசொன்ன உறுதியைக்கொண்டு, நான்-நானும், நேராக - செவ்வையாக, வார் என்றால்வர் என்பேன் - வாரென்றால்வர் என்பேன், வாள் என்றால் வள் என்பேன் - வாளென்றால்வள் என்பேன்; நார் என்றால்நர் என்பேன் நாரென்றால் நர் என்பேன். எ-று.

கம்பர் குறுக்கல் விகாரம் என்னும் இலக்கணம்பற்றி நாராயணனை நாராயணன் என்றுபாடிய செய்யுள் வருமாறு:—

ஆதியரியோநமநாராயணர்திருக்கதையறிந்தனுதினம்பரவுவோர்
நீதியனுபோகநெறிநின்றுநெடுநாளதி னிறந்துசெகதண்டமுழுதுக்
காதிபர்களாயரசுசெய்துளநினைத்ததுகிடைத்தருள்பொறுத்துமுடிவில்
சோதிவடிவாயழிவில்முத்திபெறுவாரெனவுரைத்தசுருதித்தொகைகளே.

நாகப்பட்டணம் தேவடியாளொருத்தி பாடிக்கொண்டிருப்பதைக்
கேட்டுத் தன்செவிக் கினிமையாயிராமையால்
அவளைப் பரிகசித்துப் பாடியது.

103. வாழ்த்துதிருநாகைவாகானதேவடியாள்
பாழ்த்தகுரலெடுத்துப்பாடினாள்-நேற்றுக்
கழுதைகெட்டவண்ணான்கண்டேன்கண்டேனென்று
பழுதையெடுத்தோடிவந்தான்பார்.

இ-ள். வாழ்த்து (திருநாகைவாகு) ஆனதேவடியாள்-யாவராலும் வாழ்த்துதல்பெற்ற திருநாகையிலிருக்கும் அழகாகிய தேவடியாள், பாழ்த்தகுரல் எடுத்துப்பாடினாள்-தன்பாழான குரலையெடுத்துப் பாடினாள், (அக்குரலைக்கேட்டவுடன்) நேற்று கழுதைகெட்ட வண்ணான் - நேற்றுத்தன்கழுதையையிழந்த வண்ணான், கண்டேன் கண்டேன் என்று-நேற்றுக் காணாமற்போன என்கழுதையை) கண்டேன் கண்டேனென்று, பழுதை எடுத்து ஓடிவந்தான்-(கட்டுதற்கு) கயிற்றையெடுத் தோடிவந்தான், பார்-பார். அவள் குரலுக்கும் கழுதையின்குரலுக்கும் பேதமில்லையென்பது கருத்து.

திருத்துருத்தியில் சுவாமியைத் தரிசித்தபொழுது பாடியது.

104 காலையிலும்வேலைகடையக்கயிறுகும்
மாலையிலும்பூமுடித்துவாழுமே-சோலைசெறி
செய்யிலாரம்பயிலுஞ்செந்துருத்திமாநகர்வாழ்
பொய்யிலார்மெய்யிலிடும்பூண்.

இ-ள். சோலைசெறி - சோலைகள் நெருங்கிய, செய்யில் ஆரம்பயினும்-வயல்களில் முத்துக்கள் மிகுந்திருக்கிற, செந்துருத்தி மாநகர்வாழ்-செவ்விய திருத்துருத்தியென்னும் பெரியநகரத்தில் உறைகின்ற, பொய்யிலார் அழிவில்லாதவராகிய சிவபெருமானுனவர், மெய்யில் இடும்பூண்-திருமேனியிலணிந்த ஆபரணமானது, கால் அயிலும்-காற்றைப்புசிக்கும், வேலைகடைய கயிறுகும் - திருப்பாற்கடலைக் கடைதற்குக் கடை கயிறுகும். மால் அயிலும்-திருமால் சர்வசம்ஹாரகாலத்தில் உண்ணுகின்ற, பூ - பூமியை; முடித்துவாழும்-சிரசிலேர்திவாழும். எ-று.

பூண் சர்ப்பமாதலால் இவ்வாறுகூறினுர். காலையிலும் மாலையிலும் பூ முடித்துவாழும் எனச் சொன்னயங்காண்க.

வைத்தீச்சுரன்கோயிலில் சுவாமியைத்தரிசித்து அவ்விடத்து
மருந்தாகக் கொடுக்கப்படுகிற மண்ணைக்குறித்துப்
பாடியது.

105. மண்டலத்திஞளும்வயித்தியராய்த்தாமிருந்து
கண்டவினை தீர்க்கின்ருர்கண்டீரோ-தொண்டர்
விருந்தைப்பார்த்துண்டருளும்வேளூரெங்நாதர்
மருந்தைப்பார்த்தாற்சுத்தமண்.

இ-ள். மண்டலத்தில்-உலகத்தில், நாளும்-நாள்தோறும், தாம்வயித்தியராய் இருந்து-தாம் வயித்தியரா யிருந்துகொண்டு, கண்டவினை தீர்க்கினருர் - உயிர்களுக்கு உண்டாகிய வினைகளையெல்லாம் போக்குகின்ருர், கண்டீரோ-(உலகத்தீர்களே) பார்த்தீர்களோ, தொண்டர் விருந்தை-அன்பரிடும் விருந்தை, பார்த்து உண்டருளும்-பார்த்துத் திருவமுது செய்தருளுகிற, வேளூர் எம்நாதர்-புள்ளிருக்குவேளூரி லெழுந்தருளியிருக்கிற எம்மிறைவரது, மருந்தைப்பார்த்தால்-மருந்தைநோக்கினுல். சுத்தமண்-வெறுமண்ணேயாம். எ-று.

வைத்தீச்சுரன்கோயில் சுவாமிதரிசனம் செய்யப்போவார்தமக்குள்ள தேகப்பிணிநீங்கும்பொருட்டுஅத்தலத்துமண்ணைமருந்தாகஉட்கொள்ளும் சாம்பிரதாயம் இன்றும்உள்ளது இதனைஅடியில்வரும்செய்யுளாலுமுணர்க.

விரிந்தபுகழ் புள்ளிருக்கு வேளூர்வைத்தியனார்
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதர்கா ணம்மானை
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதரேயாமாயின்
மருந்துவிலை கைக்கூலி வாங்காரோ வம்மானை
வாயிலே மண்போட்டு வாங்குவர்கா ணம்மானை.

பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்கள்.

106. கூடல்புனைவாயில்குற்றாலமாப்பனூர்
ஏடகநெல்வேலியிராமேசம்-ஆடானை
தென்பரங்குன்றஞ்சுழியல்தென்றிருப்புத்தூர்காசி
வன்கொடுங்குன்றம்பூவணம்.

கூடல்-மதுரை. மற்றவை வெளிப்படை.

ஒருவனைநோக்கி, நல்லோருக்குதவி முதலியவற்றைச்
செய்யென்று பாடியது.

107. பண்புளருக்கோர்பறவைபாவத்திற்கோரிலக்கம்
நண்பிலரைக்கண்டக்கானற்காலி-திண்புவியை
ஆள்வார்மதுரையழகியசொக்கர்க்கரவம்
நீள்வாகனநன்னிலம்.

இ-ள். பண்பு உளருக்கு ஓர்பறவை-நற்குணமுடையாற்கு ஒருபறவை, பாவத்திற்கு ஓர் இலக்கம்-பாவத்துக்கு ஒருஎண், நண்பு இலரைக்கண்டாக்கால் நாற்காலி-நட்புக்குண மில்லாதவரைக் கண்டால் நாற்காலி, திண் புவியையாள்வார் வலியமைந்த நிலவுலகத்தை யாள்பவராகிய, மதுரை அழகியசொக்கர்க்கு-மதுரையிலெழுந்தருளியிருக்கும் அழகாகிய சொக்க நாதசுவாமிக்கு, அரவம்நீள்வாகனம் நல்நிலம் - பாம்பு, பெரியவாகனம், நல்லநிலம். எ று.

ஓர்பறவை ஈ. ஓர் இலக்கம் அஞ்சு. நாற்காலி நான்கு கால்களையுடையதாகிய விலங்கு. அரவம்வாகனம் நிலம் பணி, விடை; செய், இவற்றை முறையே பண்புளர் முதலியோர்க்குப் பின்னேசேர்த்து, பண்புளருக்குக் கொடு, பாவத்துக்குப்பயப்படு, நண்பிலரைக்கண்டாக்கால் விலங்கு (விலகு), சொக்கநாதர்க்குபணிவிடைசெய், எனவுரைக்க. விடை. இடபம்.கண்டாக்கால் நாற்காலி என்பதை, காணிலிருநாற்காலி எனப்பாடமோதி, காணில்பரிகரி(நீக்கு)என வுரைத்தலுமுண்டு. பரி குதிரை, கரி யானை; இருநாற்காலி இரண்டுநாற்காற் பிராணிகள்.

அழகர்தமது பாஞ்சசந்யத்தை முழக்காவிடின் பாண்டவரைவரும்
தோற்பர் என்று பாடியது.

108. சதுரரங்கர்சங்கத்தழகர்செங்கைச்சங்கை
ஆதரமிசைவைத்திலரேயாயின்-முதலை

வருங்குளத்தின்முண்டகக்கைவைப்பரன்றேயன்று
பொருங்களத்தினூற்றுவர்முன்போய்.

இ-ள். சதுர் சதுரப்பாட்டையுடைய, அரங்கர் திருவரங்கர், சங்கத்து அழகர் சங்கத்துக்குத் தலைவராயிருந்த அழகர், (அவர்) செங்கைசங்கை செவந்த தமதுகையிலுள்ள பாஞ்சசந்யம் என்னும் சங்கை, அதரம்மிசை தமது திருவதரத்தின்மீது, வைத்திலரே ஆயின் வைத்து முழக்கிலராயின், அன்று அக்காலத்தில், முதல் ஐவரும் முதன்மைபெற்ற ஐவரும் பொரும் களத்தில் யுத்தகளத்தில், நூற்றுவர் முன்போய் (துரியோதநாதியராகிய) நூறுபேருக்கெதிரேசென்று,குளத்தில் (தம்) நெற்றியில் (தலையில்,)முண்டகம் கைவைப்பர் அன்றேதாமரைமலர்போன்ற (தமது) கையைவைத்துக்கொண்டழுவா ரல்லவா, எ-று.

சங்கை அதரமிசை வைத்ததாவது, பாரதயுத்தத்தில் அருச்சுனனுக்குச் சாரதியாயிருந்து பாண்டவர்க்கு வெற்றியுண்டாகவும், துரியோதநாதியர் மனங்கலங்கவும், தமதுபாஞ்சசந்யமென்னும்சங்கைவாயில்வைத்தூதியது.

கொண்டத்தூர் தண்டைக்காலம்மை சமைத்த பூசுணிக்காய்க்
கறியைவியந்து பாடியது.

109. சுண்டக்காற்கிட்டுங்கயிலாயங்கைக்கொண்டுட்
கொண்டக்கால்மோட்சங்கொடுக்குமே-கொண்டத்தூர்
தண்டைக்காலம்மைசமைத்துவைத்தபூசுணிக்காய்
அண்டர்க்காமீசருக்குமாம்.

இ-ள். கொண்டத்தூர் - கொண்டத்தூரில் வாழ்கின்ற, தண்டைக்காலம்மை சமைத்துவைத்த-தண்டைக்கா லம்மையென்பவள் பாகஞ்செய்துவைத்த, பூசுணிக்காய்-பூசுணிக்காய்கறியை, கண்டக்கால்-கண்டால், கயிலாயங்கிட்டும்-கைலாசவின்பங்கிடைக்கும், கைக்கொண்டு-கையிலெடுத்து உட்கொண்டக்கால்-உண்டால், மோட்சங்கொடுக்கும்-முத்தியின்பத்தைத் தரும், (மேலும்) அண்டர்க்கு ஆம் - தேவர்களுக்குரியதாகும், ஈசருக்கும் ஆம்-சிவபெருமானுக்கும் உரியதாகும். எ-று.

வெறிவிலக்கல்.

110. போலநிறமாவார்க்குப்பூணாரமாவாரை
ஏலவதைசெய்தாலியல்பாமோ-சாலப்
பழிக்கஞ்சுங்தென்மதுரைப்பாவையிருநான்கு
விழிக்கஞ்சன்சோமனலைவேந்து:

இ-ள். இருநான்கு விழிகஞ்சன்போல - எட்டுக்கண்களையுடையபிரமன்போலவும்,சோமன்போல-சந்திரன்போலவும்,அலைவேந்துபோல-கடற்கர

சனுகிய வருணன்போலவும், நிறம் ஆவார்க்கு-(முறையே) செம்மைவெண்மைகருமை என்னும் நிறவேற்றுமையுடைய இப்பெண்ணரசியர் பொருட்டு, பூணாரம் ஆவாரை-ஆட்டை, எலவதைசெய்தால்-பொருந்தக்கொலைசெய்தால், இயல்புஆமோ-(அது) நல்லியற்கையாகுமோ, (ஆகாதுஅன்றியும்) தென்மதுரைப்பாவை-தென்மதுரையிலுள்ள பாவைபோலும் உருவுடைய எமது பெண்ணும், சாலபழிக்கு அஞ்சும்-மிகவும்பழிக்கு அஞ்சுவாள். எ-று.

ஆட்டுமாமிசத்தைச் சிறுகஅரிந்து உலர்த்துவோர் கயிற்றில்கோத்து ஆரம்போலத் தோரணங்கட்டுதலால் ஆட்டைப் பூணாரமென்றார். நிறமாவாரை எனப்பாடமோதி, செம்மை வெண்மை கருமைநிறங்களையுடைய ஆடுகளை யெனப்பொருள் கூறுவாருமுளர்.

மருதீசர்மீது காமதகநத்தைக்குறித்து பாடியது.

111. கண்ணனிடுங்கறியுங்காட்டுசிறுத்தொண்டரன்பிற்
பண்ணுசிறுவன்கறியும்பற்றாதோ-தண்ணோடு
மட்டியையுஞ்சோலைமருதீசரேபன்றிக்
குட்டியையேன்தீத்தீர்குறித்து.

இ-ள். கண்ணன் இடும்கறியும்-கண்ணனிட்ட கறியும், காட்டு - குறிக்கப்பட்ட, சிறுத்தொண்டர் சிறுத்தொண்ட நாயனார், அன்பின்-அன்போடு, பன்னு-சமைத்துவைத்த, சிறுவன்கறியும்-சிறுவனாகிய சீராளன்கறியும், பற்றாதோ-போதாதோ, தன்-குளிர்ச்சியாகிய, ஓடும்-பெருகி யோடுகின்ற, மட்டு இயையும்-தேன் பொருந்திய, சோலை - சோலைசூழ்ந்த; மருதீசரே-திருவிடைமருதூரீசரே, பன்றிக்குட்டியை-பன்றியின் குட்டியை, குறித்து நினைத்து, என்தீத்தீர்-என் தீயச்செய்தீர். எ-று.

வராகவுருக்கொண்டதனால் பன்றியென்றது திருமாலை. குட்டியென்றது அவர் புதல்வனாகிய மன்மதனை. கண்ணன்-கண்ணப்பன்.

கடைமொழிமாற்று.

112. மாடுதின்பான்பார்ப்பான்மறையோதுவான்குயவன்
கூடிமிகமண்பிசைவான்கொல்லனே-தேடி
இரும்படிப்பான்றான்செக்கானெண்ணெய்விற்பான்வண்ணான்
பரும்புடைவைதப்பும்பறை.

இ-ள். பறைமாடுதின்பான் பறையன்மாடுதின்பான், பாப்பார் மறை ஓதுவான்-பார்ப்பான் வேதமோதுவான், குயவன்கூடிமிகமண்பிசைவான் குசவன்சேர்ந்து மிகுதியாக மண்ணைப் பிசைவான், கொல்லன் தேடி இரும்பு அடிப்பான்-செக்கான் எண்ணெய் விற்பான்-, வண்ணான் பரும்புடைவைதப்பும்-வண்ணான் பெரியசீலையைத் தப்புவான். எ-று.

இதுவுமது.

113 ஆயனுக்குக்கண்மூன்றுலாதிசிவனுக்கிருகண்
மாயனுக்குச்செங்கையிலேமான்மழுவாம்-நேயமுடன்
சங்கரற்குச்சங்காழிதான்மாலுக்காலமாம்
மங்கையிடத்தாற்காகுமண்.

இ-ள். ஆதிசிவனுக்கு கண் மூன்று ஆம், - மாயனுக்கு இருகண் ஆம்- சங்கரற்கு செங்கையிலே மான் மழு ஆம்-, மாலுக்கு (செங்கையிலே) சங்கு ஆழி ஆம்-திருமாலுக்குச் செவந்தகையில் சங்குசக்கரங்களாம், மங்கைஇடத்தாற்கு ஆலம் ஆம்-உமாதேவியை யிடப்பாகத்திலுடைய சிவபிரானுக்கு (உணவு) விடமாம், ஆயனுக்கு மண்ஆம் - திருமாலுக்கு (உணவு) மண்ணாகும். எ-று.

இதுவுமது.

114 கொன்றைமலர்தரித்தான்கோபாலன்கோலெடுத்து
நின்றுகுழலூதினனீள்சடையோன்-பொன்றிகழும்
அக்கணிந்தான்மாயனரவணையிற்கண்வளர்ந்தான்
சிக்கலிலேவாழுஞ்சிவன்.

இ-ள். சிக்கலிலே வாழும் சிவன் கொன்றை மலர் தரித்தான்-, கோபாலன் - கோல்எடுத்து நின்று குழல் ஊதினன் - மாட்டாங்கோலைக் கைக்கொண்டுநின்று வேய்ங்குழலையூதினன், நீள் சடையோன் - நீண்ட சடையையுடைய சிவபெருமான், பொன்திகழும் அக்கு அணிந்தான்-அழகுவிளங்குகின்ற அக்குமாலையையணிந்தான், மாயன் அரவு அணையில் கண்வளர்ந்தான்-திருமால் சர்ப்பசயநத்தில் நித்திரைசெய்தான். எ-று.

சிக்கல்-ஒரு சிவஸ்தலம்.

திருச்செங்காட்டிலிருக்கும் சிவபெருமானை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

115. கண்ணபுரங்கோயிற் கதவடைத்துத்தாழ்போட்டார்
மண்ணையுண்டார்வெண்ணெயுண்டமாயனார்-எண்ணும்
சிரக்கப்பரையேந்திச் செங்காட்டிலீசர்
இரக்கப்புறப்பட்டாரென்று.

இ-ள். செங்காட்டில் ஈசர்- திருச்செங்காட்டி லெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானவர், எண்ணும் - யாவரும் மதித்தற்குரிய, சிரம் கப்பரை ஏந்தி, தலையோடாகிய பாத்திரத்தையேந்தி, இரக்க புறப்பட்டார் என்று- இரக்கவெளிப்பட்டா ரென்று, கண்ணபுரம்கோயில் - கண்ணபுரக்கோயிலின், கதவு அடைத்து-கதவைமூடி, தாழ்போட்டார் தாழிட்டார், வெண்ணெய் உண்டமாயனார்-வெண்ணெயுண்ட திருமாலானவர், மண்ணை உண்டார் -மண்ணை யுண்டனர். எ-று.

கண்ணபுரக்கோயில் இவர்போனபொழுது மூடப்பட் டிருந்ததனுலும், திருமால்பூமியை உலகமுடிவுக்காலத்தில் உண்டருளுவ னுதலாலும் இவ்வாறு கற்பித்துக்கூறினுர். திருமால் மண்ணையுண்பதற்குக் காரணம் தன் மைத்துனனுகிய சிவபெருமான் கப்பரையேந்திப் பிச்சைக்குப்புறப் பட்டது.

திருவாரூர்த்தியாகராயர் திருநடநத்தைக்குறித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

116 திருந்தாடரவணியுந்தென்கமலையீசர்
இருந்தாடாதென்செய்திடுவார்-பொருந்த
ஒருகாலேயல்லவேயொண்டொடிக்காவன்
றிருகாலுஞ்சந்துபோனுல்.

இ-ள். திருந்து திருத்தமாகிய, ஆடு அரவு அணியும் - படமெடுத்தாடு மியல்புள்ள பாம்பைத்தரித்த, தென்கமலேசர் - தென்கமலை நகரிலெழுந்தருளிய சிவபெருமானுனவர்; பொருந்த ஒருகாலே அல்லவே-பொருந்த ஒருதரமேயல்லவே; ஒள்தொடிக்கு ஆ-ஒட்பமாகிய வளையலை யணிந்தவளாகிய பரவையின்-பொருட்டு, அன்று-அந்நாள், இருகாலும் சந்துபோனுல்-இரண்டு தரமும் தூதுபோனுல், இருந்து ஆடாது என்செய்திடுவார்-இருந்து ஆடாமல் என்செய்வார். எ-று.

சந்துபோதல் - உண்டைவிலகலுமாதலும். திருநடநத்தைத் தூது போய் உண்டைவிலகி யதனுலுண்டாகிய நோய்பொறுக்காமல் ஆடினதாகக் கற்பனை செய்யப்பட்டது. இருகாலும் என்பது இரண்டு கால்களாலும் என்றும் பொருள்படும்.

ஆமூர்முதலியார் என்கிறபிரபுவைப் புகழ்ந்துப்பாடியது.

117. உள்ளங்கால்வெள்ளெலும்புதோன்றவொருகோடி
வெள்ளங்காலந்திரிந்துவிட்டோமே-உள்ளபடி
ஆமூர்முதலியமரர்கோனிங்கிருக்கப்
போமூரறியாமற்போய்.

இ-ள். உள்ளபடி - உண்மையாக, ஆமூர் முதலி - ஆமூர் முதலியாரென்கிற. அமரர்கோன் இங்கு இருக்க-தேவேந்திரன் இவ்விடத்திருக்க, போம் ஊர் அறியாமல் போய் - போகவேண்டிய ஊர் இன்னதென் றறியாமற் சென்று, உள்ளங்கால் வெள் எலும்புதோன்ற-உள்ளங்காலிலுள்ள வெள்ளெலும்பு வெளிகாணும்படி, ஒருகோடி வெள்ளங்காலந்திரிந்துவிட்டோம்-வெகுகாலம் திரிந்துவிட்டோம். எ-று.

ஆறுசாதிவரப்பாடுமெனச் சிலர்வேண்டப் பாடியது.

118. கம்மாளனங்கிக்கணக்கனெனவேதுதித்தார்
செம்மான்சதுரைத்திருவரசை-அம்மாகேள்

வாணியனும்பொன்னே வாழும்வெள்ளாளனுமே
சேணியனுமன்றேதெரிந்து.

இ-ள். அம்மாகேள்-அம்மா கேட்பாயாக, வாணியனும் - சரசுவதியை (மனைவியாகி) உடையவனுகிய பிரமனும், பொன்எரி-இலக்குமியாகியஅழகியை மனைவியாகவுடையவனும், வாழும் - வாழ்கின்ற, வெள் ஆளனும்-வெண்மையாகிய பாற்கடலை புடையவனுகிய திருமாலும், சேணியனும்-சுவர்க்கலோகத்தை யுடையவனுகிய இந்திரனும், தெரிந்து-அறிந்து செம்மான் சதுரைதிரு அரசை-செவந்த மானைத்தாங்கிய சதுரகிரிக்கு வேந்தனுகிய சிவபெருமானை, கம்மாளன்-கபாலத்தையுடையவன், அங்கிக்கணக்கன்-நெருப்புக்கண்ணையுடையவன், எனதுதித்தார் என்று தோத்திரம் பண்ணினுர்கள்.

செம்மான் சக்கிலியன்.

திருவாரூருத் தியாகராயருக்குத் திருமால் வாகனமானுரெனப் பாடியது.

119. பாரளக்குந்தூதுசெல்லும்பையரவின்மேனடிக்கும்
சீரகலிசாபத்தைத்தீர்க்குமே-ஊரருகில்
சண்டச்சகடுதைக்குந்தையலாய்கார்நீல
கண்டத்தாரூரான்கழல்.

இ-ள். தையலாய்-பெண்ணே, கார்நீல கண்டத்தார் மிகக்கரிய கண்டத்தையுடைய சிவபெருமானுனவர், ஊர் ஏறிநடாத்திய, ஆண் (திருமாலாகிய) இடபத்தின், கழல் அடி, பார் அளக்கும் பூமியையளக்கும், தூது செல்லும், தூதுபோகும், பை அரவின்மேல் நடிக்கும் படத்தையுடைய (காளிங்கன் என்னும்) பாம்பின்மீது நடநம்பண்ணும், சீர் அகலிசாபத்தை தீர்க்கும் சிறப்பையுடைய அகலியையின் சாபத்தை நீக்கும், ஊர் அருகில்-ஊரருகிலுள்ள, சண்டம் - வேகமாக வோடுமியல்புள்ள, சகடு-வண்டியை உதைக்கும்-உதைக்கும். எ-று.

பாரளந்தது திரிவிக்கிரமாவதாரத்தில், தூதுசென்றதும்; அரவின் மேல் நடித்ததும். சகடுதைத்ததும்கிருஷ்ணவதாரத்தில்; அகலிகைசாபந் தீர்த்ததும் ராமவதாரத்தில். நீலகண்டத்து ஆரூரான் கழல் எனப்பிரித்து; நீலகண்டத்தையுடைய திருவாரூரானது வாகனமாகிய திருமால் என்று பொருளுரைத்தலும் பொருந்தும். கழல் திருவடி. அது இங்கு சிவபெருமானுடைய திருவடி நிலையாகிய திருமாலுக் காயிற்று.

திருவீழிச் சிவபெருமானுக்குத் திருமால் விடையானு ரெனப்பாடியது.

120. காலாற்படியளக்குங்கண்ணிடந்துபூசிக்கும்
சேலாங்கமடமாஞ்சிங்கமாம்-பாலாகும்
ஆழியப்பிலேதுயிலுமைவர்க்குத்தூதாகும்
வீழியப்பரேறும்விடை.

இ-ள். வீழியப்பர் ஏறும்விடை - வீழியப்பர் ஏறிநடத்துகிற (திருமாலாகிய) இடபம், காலால் படிஅளக்கும்-அடியினால்பூமியையளக்கும், கண் இடந்துபூசிக்கும்-கண்ணைத் தோண்டி (மலராகக் கொண்டு) அர்ச்சிக்கும், சேல் ஆம்-மச்சாவதாரமெடுக்கும், கமடம் ஆம் - கூர்மாவதாரமெடுக்கும், சிங்கம் ஆம் - நரசிங்காவதாரமெடுக்கும், பால் ஆழியாகும் அப்பிலேதுயிலும் பாற்கடலாகிய நீரிலேதூங்கும், ஐவர்க்குதூதாகும் - பஞ்சபாண்டவர்க்குத்தூதாகிச் செல்லும். எ-று.

கண்ணிடந்து பூசித்ததாவது திருமால் நாள்தோறும் நியமமாம் ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டருச்சித்து வருங்காலத்தில், இவரதுபக்தியைச் சோதிக்கக்கருதின சிவபெருமான் ஒருமலரைமறைக்க, இவர் அக்குறையை நிரப்பத் தம்கண்ணைத்தோண்டி அருச்சித்தது. திருமால்படியளந்தது மாவலியின்வலியடக்க ; மச்சாவதார மெடுத்தது சோமுகாசுரனைக் கொல்லுதற்கு ; கமடமாகியது. திருப்பாற்கடல் கடைகையில் மத்தாகிய மந்த்ரமலையைத்தாங்க ; நரசிங்கமாகியது இரணிய கசிபனைக்கொன்று பிரகலாதனனைக்காத்தற்பொருட்டு, கமடம்-ஆமை.

மதுரைச் சொக்கநாதரைப் புகழ்ந்துபாடியது.

121. கடம்பவனச்சொக்கருக்குக்கண்ணன்வேறே
இடம்பெரியகண்ணொன்றையீந்தான்-உடம்பதனிற்
சொம்பாதியானான் சுமக்கவெருதானான்
அம்பானான்றேவியுமானான்.

இ-ள். கடம்பவனச் சொக்கருக்கு-மதுரைச் சொக்கநாதருக்கு, கண்ணன்தான்வேறு- திருமால்தான் வேறுவனோ(ஆகான், எனெனின்,)இடம் பெரியகண் ஒன்றை ஈந்தான்-பெரியதாகிய இடக்கண் ணொன்றைத் தந்தான், உடம்பதனில் சொம்பாதியானான் - உடம்பில் சரிப்பாதியானான், சுமக்க எருது ஆனான்-சுமக்க இடபமானான், அம்பு ஆனான்-பாணமானான், தேவியுமானான்-மனைவியுமானான், (ஆதலால்) எ-று.

பாதியானது-இறுதிக்காலத்தில் திருமேனியின் ஓர்பக்கத்தில் சேர்ந்திருந்தது. சுமக்க எருதானதும் அம்பானதும் திரிபுரசங்கார காலத்தில் தேவியானது மோஹினி யவதாரத்தில்.

திருக்கன்னபுரத்திலிருக்கும் திருமாலை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

122. கன்னபுரமாலேகடவுளிலுநீயதிகம்
உன்னிலுமேயானதிகமொன்றுகேள்-முன்னமே
உன்பிறப்போபத்தாமுயர்சிவனுக்கொன்றுமில்லை
என்பிறப்பெண்ணத்தொலையா.

இ-ள். கன்னபுரமாலே - திருக்கன்னபுரத்தி லெழுந்தருளிய திருமாலே, கடவுளிலும்-சிவபெருமானிலும், நீஅதிகம்-நீஉயர்ந்தவன், உன்னிலும் யான் அதிகம்-உன்னிலும் நான் உயர்ந்தவன், ஒன்றுகேள் - (நான் சொல்லுவதாகிய) ஒரு செய்தியைக்கேளாய், உயர்சிவனுக்கு ஒன்றும் இல்லை-உயர்ந்த சிவபெருமானுக்கு ஒருபிறப்புமில்லை, முன்னமே - முன்னே, உன்பிறப்போபத்து ஆம்-உன் பிறப்போபத்தாகும், என்பிறப்பு எண்ணத்தொலையாது-என்பிறப்பு அளவிடமுடியாது (ஆதலால்) எ-று.

ஒன்றுமில்லாதவனினும் பத்துள்ளவன் அதிகன், அவனினும் மிகப் பலவுள்ளவன் அதிகன், ஆதலால், இவ்வாறுகூறினர். இதில் சிவனுக்கு ஒன்றுமில்லையென் றிகழ்ந்ததுபோலக் கூறினும் பிறவியற்றவரெனப் புகழ்ந்ததாயிற்றெனக் கொள்க.

அமராவதி குருக்களிட்ட விருந்துண்டு அவனைப்புகழ்ந்து பாடியது.

123 ஆனைகுதிரைதருமன்னைதனைக்கொன்றகறி
சேனைமன்னரைக்காய் துன்றீயவரை-பூநெயுடன்
கூட்டியமுதிட்டான்குருக்களமராபதியான்
வீட்டி லுண்டுவந்தேன்விருந்து.

இ-ள். குருக்கள் அமராபதியான் - அமராபதிகுருக்கள் என்பவன், ஆனைகறி-ஆனைக்கறியும், குதிரைகறி - குதிரைக்கறியும், தரும் அன்னைதனைக்கொன்றகறி-பெற்றதாயைக்கொன்றகறியும், சேனைமன் - கூட்டமாகப் பொருந்திய, நரைக்காய்-வெண்மையாய்க் காய்க்கிற, துன்-நெருங்கிய, தீ-மதுரமாகிய, அவரை கறி-அவரைக்காய்க்கறியும், பூநெய்யுடன் கூட்டி-பொலிவைத்தருகிற நெய்யுடன்கலந்து, அமுதுஇட்டான்-அமுது படைத்தான், வீட்டில் - (அவனது) வீட்டில், விருந்து உண்டுவந்தேன் விருந்துண்டு வந்தேன். எ-று.

விருந்துண்டு உவந்தேன் எனப்பிரித்து, விருந்துண்டு களித்தேன் எனினும்பொருந்தும், ஆனைக்கு அத்தியென்னும் பெயருண்டாதலால், ஆனைக்கறி என்றது அத்திக்காய்க்கறியை என்றும்; குதிரைக்கு மா என்னும் பெயருண்டாதலால், குதிரைக்கறி என்றது மாங்காய்க்கறியை என்றும்; குலைசாய்த்தவுடனே தனக்குத் தாயாயிருந்தமரத்தை யழித்தலால், அன்னைதனைக் கொன்ற கறி வாழைக்காய்க்கறியை என்றும் கொள்க. பூநெய்-தேன் என்பாருமுளர். அது ஒருவாற்றானும் பொருந்தாது.

திருவாரூரில் ஒருகாலவிசேஷத்தில் கோயிலுக்குப் போனபொழுது குருக்கள்மார் தியாகருக்கு வச்சிரப்பதக்கம் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள், அதனல் சுவாமிதரிசனம் செய்வதற்குச் சற்றுநேரம் தாமதமானதைப்பற்றிக் கோவங் கொண்டு

அந்த வச்சிரபதக்கம் அறவும் அக்குருக்கள் பிரார்த்தனையின்படி மறுபடியும் பொருந்திப்போகவும் பாடிய வசையும் வசைமீட்சியும்.

124. அன்னவயல்சூழ்ந்திருக்குவாரூரானெஞ்சத்தில்
இன்னம்வயிரமிருக்குமே-முன்னமொரு
தொண்டன்மகனைக்கொன்றுஞ்சோழன்மகனைக்கொன்றும்
சண்டன்மகனைக்கொன்றுந்தான்.

இ-ள். முன்னம்-முன்னே, ஒருதொண்டன் மகனைக்கொன்றும் - ஒப்பற்ற சிறுத்தொண்டனது புதல்வனாகிய சீராளனைக்கொன்றும், சோழன் மகனைக்கொன்றும்-மனுநீதிகண்ட சோழனது புதல்வனாகிய வீதிவிடங்கனைக்கொன்றும், சண்டன் மகனைக்கொன்றும்-சூரியன் மகனாகிய யமனைக்கொன்றும், அன்னம்-அன்னப்பறவைகள் வாழ்கின்ற, வயல்சூழ்ந்து இருக்கும்-வயல்கள் சூழ்ந்திருக்கின்ற, ஆரூரான் நெஞ்சத்தில் - திருவாரூரையுடையவனாகிய சிவபெருமானது மனத்தில், இன்னம்வயிரம் இருக்குமே-இன்னம் வயிரமிருக்குமே. எ-று.

இருக்குமே என்பதில் ஏகாரத்தை எதிர்மறையாக்கி வசைக்கும், அசையாக்கி வசைமீட்சிக்கும் கொள்க.

திருமலைராயனும் அதிமதுரகவியும் அறுபத்துநாலு தண்டிகைப்புலவர்களும் கேட்டவினாக்களுக்குக் காளமேகப்புலவர் யமகண்டத்திலிருந்து தக்க விடைகூறியதைக்குறித்து மகிழ்ந்து சம்மதியாமல் பொறாமையால் அவரை உபேட்சித்திருந்ததைப்பற்றி அவர் சினங்கொண்டு திருமலைராயன் பட்டணத்தில் மண்மாரிபெய்யப் பாடியவை.

125. கோளரிக்குமூர்கோள்கரவுகற்றவூர்
காளைகளாய்நின்றுகதறுமூர்-நாளையே
விண்மாரியற்றுவெளுத்துமிகக்கறுத்து
மண்மாரிபெய்கவிந்தவான்.

இ-ள். கோளார் இருக்கும் ஊர் - கோள்சொல்வோர் வாழும் ஊர் கோள் கரவுகற்ற ஊர் - கோளையும் வஞ்சகத்தையும் கற்றிருக்கிற ஊர், காளைகள் ஆய் நின்று கதறும் ஊர் - இளைஞராய் நின்று கதறுகின்ற ஊர், (இது ஆதலால் இதில்) இந்தவான் - இந்தமேகம், நாளையே - நாளைக்கே, விண்மாரி அற்று ஆகாயத்தினின்றும் மழைபொழிதலையொழிந்து, வெளுத்து-வெளுப்படைந்து, மிகக்கறுத்து - மிகவுங்கறுத்து, மண்மாரிபெய்க-மண்மழையைப் பொழியக்கடவது. எ-று.

126. செய்யாதசெய்ததிருமலைராயன்வரையில்
அய்யாவரனேயரைநொடியிற்-வெய்யதழல்
கண்மாரியான்மதனைக்கட்டழித்தாற்போற்றீயோர்
மண்மாரியாலழியவாட்டு.

இ-ள். செய்யாத-செய்யவொண்ணாத தீச்செயல்களை, செய்த - பண்ணின, திருமலைராயன்வரையில்-திருமலைராயன் மலையில், அய்யா-என் தந்தையே, அரனே-பரமசிவனே, அரைநொடியில்-அரைநொடிப்பொழுதில், வெய்யதழல் கண்மாரியால்-வெப்பமாகிய நெற்றிக்கண் ணெருப்புமழையால், மதனைக் கட்டழித்தாற்போல - மன்மதனை வலிகெட எரித்தாற்போல, தீயோர்-இந்நகரத்திலுள்ள தீயோரை, மண்மாரியால் - மண்மாரி பெய்தலால், அழிய-அழிந்துபோக, வாட்டு-வருத்தாய். எ-று.

வறும்புனங்கண்டு தலைவனிரங்கல்.

127. கம்பத்தானைக்கடையிற்கட்டினான்கால்சாய
அம்பைத்தாவித்தான்காலானதே-வம்புசெறி
பூவைகாள்கிள்ளைகாள்பூங்குயில்காளன்றில்காள்
பாவையாளாண்டபதி.

இ-ள். வம்புசெறி-புதுமைமிகுந்த, பூவைகாள் - நாகணவாய்ப்பறவைகளே, கிள்ளைகாள்-கிளிகளே, பூங்குயில்காள் அழகாகிய குயில்களே,அன்றில்காள்-அன்றில்களே, பாவையாள்-பாவைபோலுமுருவமுள்ள தலைவி, ஆண்ட-ஆண்டுகொண்டிருந்த,பதி-இடமானது, கம்பத்தானை-பத்துத்தலைகளை யுடைய ராவணனை, கடையில்கட்டினான்-தன்வாயிலிற் கட்டிவைத்தவனாகியவாலி, கால்சாய-வேரோடற்றுவிழ, அம்பைத்தாவித்தான்-அம்பையேவினவனாகிய ஸ்ரீராமனது, கால்ஆனது திருவடியாயிற்று. எ-று.

அம்பைத்தாவித்தான் கால் அரிதாள். இது அரிந்ததாள்எனவிரியும். தாவித்தான் தாபித்தான் என்பதன்திரிபு; அன்றித் தாவுவித்தான் எனினும் பொருந்தும். வறும்புனங்கண்டு தலைவனிரங்கலாவது - தலைமகள் காத்திருந்த தினைத்தாள்கள் அரியப்பட்டும், தலைமகள் இச்செறிக்கப்பட்டும் இருந்ததைக்கண்ட தலைமகன் வருந்தி அங்குள்ள பூவை முதலியவற்றோடு கூறியிரங்கியது. இற்செறித்தல்-வீட்டிற்சேர்த்தல்.

ஒரு கலியாணத்தில் சேஷையிட்டபோது அத்தம்பதிகளைச் சிவனும் விஷ்ணுவும் காக்கவென்று ஆசீர்வதித்தது-சிலேடை.

128. சாரங்கபாணியாஞ்சக்கரத்தர்கஞ்சனைமுன்
ஓரங்கங்கொய்தவுகிர்வாளர்-பாரெங்கும்
ஏத்திடுமையாகரினிதாயிவரும்மைக்
காத்திடுவரெப்போதுங்காண்.

சிவன்.

இ-ள். சாரங்க பாணியர் - மானைத்தாங்கிய கையையுடையவரும், அஞ்சு அக்கரத்தர் - பஞ்சாட்சரத்தையுடையவரும், கஞ்சனை - பிரமனை, முன் - முற்காலத்தில், ஓர் அங்கம்கொய்த - ஒப்பற்ற அவயவமாகிய தலையைக்கிள்ளிய, உகிர்வாளர்-நகமாகிய வளையுடையவரும்,பார் எங்கும்- உலக மெங்கும், ஏத்திடு-துதிக்கின்ற, உமை ஆகர்-உமாதேவியைத் திரு மேனியி லுடைய வரும் ஆகிய, இவர்-இந்தச் சிவபெருமானனவர்.

விஷ்ணு.

சாரங்கபாணியர் - சாரங்கமென்னும் வில்லைக் கையிலேந்தினவரும், அம் சக்கரத்தர்-அழகாகிய சக்கரத்தையுடையவரும், கஞ்சனை-கம்ஸனை, முன்-முன்னளில், ஓர் அங்கம்கொய்த - ஒப்பற்ற உடலைநாசப்படுத்திய, உகிர் வளர்-நகமாகிய வாளாயுதத்தை யுடையவரும், பார்எங்கும்-உலக மெங்கும், ஏத்திடு-துதிக்கின்ற, மைஆகர்-கரியதிருமேனியையுடையவரும் ஆகிய, இவர்-இந்தவிஷ்ணுவானவர்.

உம்மை-உங்களை, எப்போதும்-எக்காலத்தினும், இனிதாய் காத்திடுவர்-இனிதாக ரக்ஷித்தருளுவர், எ-று.

திருப்பனந்தாள் பட்டர்மேல் பாடியது.

129. விண்ணீரும்வற்றிப்புவிநீரும்வற்றிவிரும்புமழைத்
தண்ணீரும்வற்றிப்புலவோர்தவிக்கின்றகாலத்திலே
உண்ணீருண்ணீரென்றுபசாரஞ்சொல்லியுபசரித்துத்
தண்ணீருஞ்சோறுந்தருவான்றிருப்பனந்தாட்பட்டனே.

இ-ள். விண் நீரும்வற்றி-விண்ணுலகத்திலுள்ள நீரும்சுவறி, புவிநீரும் வற்றி-மண்ணுலகத்திலுள்ள நீரும்சுவறி, விரும்பும் மழைத்தண்ணீரும்வற்றி - யாவரும் விரும்புகின்ற மேகத்திலுள்ள குளிர்ச்சியாகிய நீரும் வற்றி, புலவோர் தவிக்கின்றகாலத்தில்-வித்துவான்கள் தவிக்கின்ற காலத்தில், உண்ணீற் உண்ணீர் என்று-உண்ணுங்கள் உண்ணுங்கள் என்று, உபசாரம்சொல்லி-உபசாரவார்த்தைகளைச்சொல்லி,உபசரித்து-உபசாரஞ் செய்து, தண்ணீரும் சோறும்தருவான்-தண்ணீரையும்சோற்றையும் உதவுவான், (அவன்யாரெனின்) திருப்பனந்தாள் - திருப்பனந்தாள் என்னும் ஊரிலிருக்கிற, பட்டன்-பட்டன் என்பவன், எ-து.

மதுரை மீனாக்ஷியம்மையைத் தரிசித்துப் பாடியது-சிலேடை.

130. விள்ளப்புதுமையொன்றுண்டாலவாயினின்மேவுதென்னன்
பிள்ளைக்கொருகுலைமுன்றேகுரும்பைபிடித்ததிலே
கொள்ளிக்கணன்றிட்டியாலோர்குரும்பைகுறைந்தமிர்தம்
உள்ளிற்பொதிந்தவிரண்டிளநீர்கச்சுறைந்ததுவே.

இ-ள். விள்ள-நான் எடுத்துச சொல்வதற்கு, புதுமை ஒன்று உண்டு-புதுமையாகியசெய்தி ஒன்றுளது, (அது யாதெனின்) ஆலவாயினில்மேவு-திருவால வாயில் பொருந்திய, தென்னன்பிள்ளைக்கு-தென்னம் பிள்ளையில், ஒருகுலை-ஒருகுலையுண்டு, (அதில்) மூன்றே குரும்பை பிடித்ததில்-மூன்று குரும்பைகளேபிடிப்பதில், ஓர்குரும்பை-ஒருகுரும்பையானது, கொள்ளிக் கண்ணன்-கொள்ளிக்கண்ணனது, திட்டியால்-பார்வையால், குறைந்து-குறைவுபட்டு, உள்ளில்-உள்ளிடத்தில், அமிர்தம் பொதிந்த-நீர் நிறைந்த, இரண்டு இளநீர், இரண்டிளநீர்கள், கச்சு உறைந்தன-கைத்துத் தோய்ந்தன, எ-று. இதைத் தென்னம்பிள்ளைக்கும்.

ஆலவாயினில்மேவு-திருவாலவாயனில் பொருந்தியிருக்கிற, தென்னன்பிள்ளைக்கு-பாண்டியன்மகளுக்கு, ஒருகுலைமூன்றேகுரும்பைபிடித்து-ஒருமார்பில் மூன்று குரும்பைபோன்றதனங்களுண்டாகிய, அதில்-அதில் ஓர்குரும்பை - ஒரு குரும்பையானது, கொள்ளிக்கண்ணன் திட்டியால் குறைந்து-நெருப்புக்கண்ணனாகிய சொக்கநாதனது பார்வையால்கருகி, அமிர்தம் உள்ளில் பொதிந்த-அமுதமானது உள்ளிடத்திற் பொருந்திய, இரண்டு இளநீர்-இரண்டிளநீர்களை நிகர்த்த தனங்கள், கச்சு உறைந்தன-கச்சின் கண்ணேதங்கின, எ-று. இதை மீனாக்ஷியம்மைக்கும் கொள்க.

தில்லைக்கோவிந்தராஜா கால்மாட்டிலிருந்து சபாநாதர் நடனஞ்
செய்வதைப் பாருமென்று வைணவர் அவமதித்துச்
சொன்னபோது பாடியது.

131. ஆட்டுக்கிசைந்தடாரம்பலவாணரவர்க்கெதிரே
நீட்டிற்றுமால்வடபாலினிற்காலெனநீநினையேல்
சூட்டுற்றமுப்புரஞ்செற்றவர்தம்மைச்சுமந்தலுத்த
மாட்டிக்கென்னேவிடங்காணீட்டல்சொல்லவழக்கில்லையே.

இ-ள். ஆட்டுக்கு இசைந்தவர்-நடனஞ்செய்தற் கிசைந்தவராகிய ‘அம்பலவாணர் அவர்க்கு எதிரே-அம்பலவாணராகிய அவர்க்கெதிரில், மால்-திருமாலானவன், வடபாலினில் - வடபாரிசத்தில், கால்நீட்டிற்று என நீ நினையேல்-கால்நீட்டினதாக. நீநினைக்கவேண்டாம், சூடு-(நெற்றிக்கண்ணினது) நெருப்பினால், உற்றமுப்புரம்-பொருந்திய திரிபுரங்களையும், செற்றவர்தம்மை-அழித்தவரை, சுமந்து அலுத்த - சுமந்திளைத்த, மாட்டுக்கு-இடபத்துக்கு, கால்நீட்ட இடம் என்-கால்நீட்ட இடம் யாதுக்கு, சொல்லவழக்கு இல்லை-(இதனைச்)சொல்வது வழக்கன்று. எ-று.

இடபமாய்த் தாங்கின திருமாலுக்குக் கால்நீட்டல் சொல்வது பொருந்தாதென்பது கருத்து.

திருவொற்றியூர்த் தியாகராயரைத் தரிசித்தது நிந்தாஸ் துதியாகப் பாடியது.

132. பாரூரறியப்பலிக்குழன்றீர்பற்றிப்பார்க்குமிடத்
தோரூருமில்லையிருக்கவென்றாலுமுன்னூருமொற்றி
பேரூரறியத்தியாகரென்றேபெரும்பேரும்பெற்றீர்
ஆரூரிலேயிருப்பீரினிப்போய்விடுமம்பலத்தே.

இ-ள். பார் ஊர் அறிய உலகத்திலுள்ள ஊர்களெல்லாம் அறியும்படி பலிக்கு உழன்றீர் பிட்சையின்பொருட்டு உழன்றீர். பற்றி பார்க்குமிடத்து-உற்று நோக்குமிடத்தில், இருக்க என்றாலும் - இருத்தற்காயினும், ஓர்ஊரும் இல்லை-ஒரு ஊராயினுமில்லை, உன் ஊரும் ஒற்றி-உள்ள ஊரும் ஒற்றி, பேர்-உமதுபெயரை, ஊர் அறிய-ஊரெல்லா மறியும்படி, தியாகர் என்றுபேரும் பேரும்பெற்றீர்-தியாகர் என்று பெரியபேரையும் படைத்தீர், ஆரூரிலே இருப்பீர் - இனியாவருடைய ஊரிலே யிருக்கப்போறீர், இனி அம்பலத்தே போய்விடும்-இனி அம்பலத்துக்குப்போய்விடும். எ-று.

ஆரூர்-திருவாரூர் என்று மொருபொருள். அம்பலம்-பொது இடம், பொன்னம்பலம்.

ஒரூரில் சிவபெருமான் புறப்பாட்டைக் கண்டு நிந்தாஸ் துதியாகப் பாடியது. இதில் ஒன்பது சாதிவந்தமைகாண்க.

133. வாணியன்பாடிடவண்ணான்சுமக்கவடுகன்செட்டி
சேணியன்போற்றக்கடற்பள்ளிமுன்றொழத்தீங்கரும்பைக்
கோணியன்வாழ்த்தக்கருமான்றுகிறனைக்கொண்டணிந்த
மேனியனவன்றட்டான்புறப்பட்டவேடிக்கையே.

இ-ள். வாணியன்பாடிட-சரசுவதியை யுடையவனாகிய பிரமன் பாடவும், வண்ணான்சிமக்க-வளமாகிய இடபம் (நந்தி) சுமக்கவும், வடுகன்செட்டி சேணியன்போற்ற - வைரவனும் மூருகனும் இந்திரனும் தொழவும், கடல்பள்ளி முன்தொழ-திருப்பாற்கடலில் பள்ளிகொள்வோனாகுய திருமால் முன்னின்று வணங்கவும், தீகரும்பை கோணியன்வாழ்த்த-மதுரமாகிய கரும்பை வில்லாக வளைத்தவனாகிய மன்மதன் துதிக்கவும், கருமான் துகில்தனைக்கொண்டு அணிந்த வேணியனனவன் தட்டான் - யானையின் தோலை யுரித்துத் தரித்த சடாபாரத்தை யுடையவனாகிய சிவபெருமான் என்கிற (முக்கரணங்களுக்கும்) எட்டாதவன், புறப்பட்டவேடிக்கை எ-புறப்பட்ட வேடிக்கை என்ன வியப்பு. எ-று.

திருவரங்கரை மணியாகச் சிலேடித்துப் பாடியது.

134. பாங்குபெறுந்திருவைந்நூற்றிரட்டிப்பணவிடையில்
தூங்குமதிலொருமாவேற்றமுண்டுசூரர்முனிவர்
ஆங்கவர்செப்பிற்கடங்காதுலகமனைத்தும்பெறும்
ஓங்குமரங்கத்திருப்பெட்டகத்துளொருமணியே.

இ-ள். ஓங்கும்-உயர்ந்த, அரங்கம் - திருவரங்கமாகிய, திருப்பெட்டகத்துள்-அழகாகிய பெட்டியிலிருக்கின்ற, ஒருமணி-ஒப்பற்ற ரத்நமானது, பாங்குபெறும்-அழகுபெற்றிருக்கும், திரு ஐந்நூற்று இரட்டி பணவிடையில் தூங்கும்-அழகாகிய ஆயிரம்பண வெடை யென்னும் நிறைபெற்றிருக்கும், அதில் ஒருமா எற்றம் உண்டு-அதில் ஒருமா அதிகமுண்டு, சுரர்முனிவர் அவர் செப்பிற்கு அடங்காது - தேவர் முனிவராகிய அவர்களுடைய செப்பினுள்ளடங்காது, உலகம் அனைத்தும்பெறும்-உலகங்களெல்லாவற்றையும் (விலைமதிக்கப்) பெறும். எ-று.

திருவரங்கனைக் குறிக்கும்போது, ஒருமணி-ஒப்பற்ற நீலமணியையிகர்த்த ரங்கநாதன், அழகைக்கொண்டிருக்கிற (ஆதிசேடனது) அழகிய ஆயிரம் பணாமகுடங்களினிடையே பள்ளிகொள்வான், அப்படி பள்ளிகொள்வதிலும் ஒப்பற்ற திருமகளும்(திருமார்பில்)ஏறியிருத்தல் உண்டு, தேவர் முனிவர் என்னும் அவர்களுடைய சொல்லுக்கு அடங்கான், எல்லாவுலகங்களையும் படைத்தருளுவன் எனப் பொருள்கொள்க.

135 சத்ததியைந்தையுந்தாங்காததெய்வந்தனிமறையும்
கத்தாவெனுந்தெய்வமம்பலத்தேகண்டுங்கண்களிரு
பந்தானவன்மைந்தன்பொய்த்தேவியைக்கொல்லப்பார்த்த
பித்தானவன்றனையோதெய்வமாகப்பிதற்றுவதே. [ழுத

தில்லைக் கோவிந்தராஜர் கோயிலிலிருக்கும் நம்பியார், விஷ்ணுவேபரம் என்றதற்குப் பாடியது.

இ-ள். சத்ததி ஐந்தையும் தாங்காததெய்வம்-சப்தாதி விஷயங்களைந்தினையும் கொண்டிராத தெய்வமும், தனிமறையும் கத்தா எனும் தெய்வம்-ஒப்பற்ற வேதங்களும் கடவுளேயென்று துதிக்கின்றதெய்வமும் ஆகியசிவபெருமானை, அம்பலத்தேகண்டும் - பொன்னம்பலத்திற் கண்டிருந்தும், கண்கள் இருபது ஆனவன் மைந்தன்-இருபதுகண்களையுடையவனாகிய ராவணன் புதல்வனாகிய இந்திரசித்து, பொய்த்தேவியைக் கொல்லப் பார்த்து அழுத-பொய்த்தேவியாகிய (மாயாசீதையைக்) கொல்லநோக்கியழுத, பித்தானவன் தனையோ-பித்தனாகிய திருமாலையோ, தெய்வமாக பிதற்றுவது. (நீங்கள்) தெய்வமாகக்கொண்டு பிதற்றுதல்செய்வது எ-று.

திருவரங்கர் சந்நிதிக்கு முருகர்வர அவரது மயில் வாகனத்தைக்கண்டு அத்திருவரங்கரது அணையாகிய பாம்பு அஞ்சியதாகப்பாடியது.

136 இரண்டிமையோர்தொழுந்தென்னரங்கேசர்முன்செங்கைகளா
றிரண்டுடையோனுமெதிர்சென்றதாலெதிர்ந்தார்தமைக்கண்
டருண்டெழுமைவர்க்குத்தேருர்பவன்கொளணைவெருண்டு
புரண்டொருபுற்றைக்கடந்தொருபுற்றிற்புகுந்ததுவே.

இ-ள். இமையோர் திரண்டுதொழும்-தேவர்கள் கூடிவணங்குகின்ற, தென் அரங்கேசர் முன்-தென்னரங்க நாதனுக்கெதிரில்; ஆறிரண்டுசெங் கைகள் உடையோனும்-பன்னிரண்டு திருக்கைகளை யுடையவனாகிய முருகனும், எதிர்சென்றதால்-எதிரேபோனதனால் (இவனது மயிலைக்கண்டு,) எதிர்ந்தார்தமைக்கண்டு-எதிர்ந்தவர்களாகிய துரியோதநாதியரைநோக்கி அருண்டு எழும் ஐவர்க்கு-அஞ்சியெழுந்த பஞ்சவர்பொருட்டு, தேர் ஊர்ந்தவன் கொள் அணை-(அருச்சுநனுக்கு) தேர்செலுத்தினவனாகிய திருமால் கொண்ட அணையாகிய பாம்பு, வெருண்டு புரண்டு - அஞ்சிப்புரண்டு, ஒரு புற்றைக் கடந்து-ஒரு புற்றைத்தாண்டி, ஒருபுற்றில் புகுந்தது-ஒருபுற்றில் நுழைந்தது. எ-று.

கச்சியில் காமாக்ஷியம்மையைத் தரிசிக்கையில் பாடியது.

137. மாக்கைக்கிரங்குங்குருகும்வளர்சக்ரவாகப்புள்ளும்
தாக்கச்சரபங்குழைந்ததெவ்வாறுசகதலத்தை
ஆக்கிப்பெருக்கித்திருவறச்சாலையிலன்னமிட்டுக்
காக்கைக்கொருகொக்கின்கீழேயிருக்குங்கருங்குயிலே.

இ-ள். சகதலத்தை ஆக்கி-உலகங்களைப் படைத்து, பெருக்கி வளர்த்து, திரு அறச்சாலையில்-அழகாகிய தருமசாலையில், அன்னம் இட்டு காக்கைக்கு-அமுதுபடைத்துக் காத்தற்பொருட்டு, ஒருகொக்கின்கீழே இருக்கும்-ஒருமாமரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கின்ற, கருங்குயிலே - கருங்குயில் போன்றவளே, மாக்கைக்கு இரங்கும் குருகும் - மாந்தளிர்போன்ற உன்கையில் அணியப்பட்டொலிக்கின்ற வளையலும், வளர் சக்ரவாகப்புள்ளும் வளராநின்ற சக்ரவாகப் பறவையை நிகர்த்ததனங்களும், தாக்க-படுதலால், சரபம் - சரபரூபியாகிய சிவபெருமான், குழைந்தது எவ்வாறு-குழைந்துபோயினதெப்படி. எ-று.

ஒருபெண்ணாகிய உனக்குச்சிவபெருமான் எப்படிக்குழைந்தார் என்றும், குயிலாகிய உனக்குச் சரபம் எப்படிக் குழைந்தது என்றும், இருவகையாகப் பொருள்கொள்க. காமாக்ஷியம்மை கம்பாநதியில் மணல் இலிங்கஞ்செய்து பூசித்திருக்கும்போது வெள்ளம்வரக் கண்டு இலிங்கத்தைத் தழுவிக்கொண்டதனால் முலைத்தழும்பும் வளைத்தழும்புமபட்டுச் சிவலிங்கமழிந்தது என்பது கதை. திருவறச்சாலையி லன்னமிட்டுக் காக்கைக்கு என்றது முப்பத்திரண்டு தருமத்தையும் ஈராழிநெல்லைக்கொண்டு செய்வதைக்குறித்தது. குருகு, சக்ரவாகம், சரபம், காக்கை, கொக்கு, குயில், எனப் பறவைப்பெயர்கள் சொன்னயந் தோன்றவந்தன. சிவபெருமான் சரபரூபங் கொண்டது, இரணிய சம்மாரஞ்செய்த நரசிங்கத்தைச் செயித்தற்பொருட்டு.

திருவாரூர்த் தியாகராயரைத் தரிசிக்கையில் பாடியது.

138. தென்னைக்குஞ்சோலைக்கமலைப்பிரான்செஞ்சடாடவிதான்
என்னைக்குமென்னிலெரியொக்குமந்தவெரியிலிட்ட

பொன்னொக்குங்கொன்றைகரியொக்கும்வண்டுநற்பொற்பணிசெய்
மின்னொக்குங்கங்கைகிழக்கொல்லனொக்குமவ்வெண்பிறையே.

இ-ள். தென் ஒக்கும்சோலை-அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த, கமலைபிரான் - கமலாலயத்துக்கிறைவனாகிய தியாகராயப் பெருமானது, செம்சடா அடவி-செவந்த சடைக்காடானது, என் ஒக்கும் என்னில்-எதனை நிகர்க்குமென்றால், எரி ஒக்கும் - நெருப்பை நிகர்க்கும், கொன்றை-(அந்தச் சடையிலணிந்த)கொன்றை மலர்கள், அந்த எரியில் இட்ட-அந்த நெருப்பின்மேல் வைத்த, பொன் ஒக்கும் - பொன்னைநிகர்க்கும், வண்டு-(அந்தமலர்களின்மீது மொய்க்கின்ற) வண்டுகள், கரி ஒக்கும்-கரியைநிகர்க்கும், கங்கை-அங்குள்ள கங்கையானவள், நல்பொன் பணிசெய்மின் ஒக்கும்-நல்ல பொன்னாபரணங்களைச்செய்கின்ற (ஒரு) மாதைநிகர்ப்பள், அவ்வெள்பிறை-அந்தவெள்ளியபிறையானது, கிழக்கொல்லன் ஒக்கும்-கிழக்கம்மாளனை நிகர்க்கும். எ-று.

பிறை வளைந்திருத்தலால் கிழக்கொல்லனுக் குவமையாயிற்று.

ஓரூரில் சிவபெருமானது இடபவாகந சேவையைத்தரிசித்துப் பாடியது.

139. கரியொன்றுபொன்மிகும்பையேறக்கற்றவர்சூழ்ந்துதொழ
எரியொன்றுசெல்வன்றுலாத்தினிலேறவிருண்டமஞ்சு
சொரிகின்றநாகமின்சோற்றினிலேறித்தொடர்ந்துவர
நரியொன்றுசொந்தக்கனலேறிவந்ததுநங்களத்தே.

இ-ள். கரி ஒன்று-ஒருயானை(கணபதி),பொன்மிகும்பை ஏற-பெருச்சாளியின் மீதேறிவரவும், கற்றவர் சூழ்ந்துதொழ-(கற்கவேண்டிய வீட்டு நூல்களைக்) கற்றவர் சூழ்ந்து வணங்கும்படி. எரி ஒன்று செல்வன்-நெருப்புப்பொறியிற்றோன்றிய முருகக்கடவுள், துலாத்தினில் ஏற-(துலாஸ்நாநகட்டமாகிய மாயூரத்தின்மீது (மயிலின்மீது) ஏறிவரவும், இருண்டமஞ்சு சொரிகின்ற நாகமின்-கறுத்தமேகங்கள் (மழையைப்) பொழிதற் கிடமாகிய (இமய) மலையிற் பிறந்த மின்கொடி போல்பவளாகிய உமாதேவி, சோற்றினில் ஏறி தொடர்ந்துவர-அந்நவாகநத்திலேறித் தொடர்ந்துவரவும், நரி ஒன்று-சம்பு ஒன்று (பரமசிவன் ஒருவன்), சொந்தக்கனல் ஏறி-நந்தியில் ஏறி (நந்தியின்மீதேறி), நங்களத்தேவந்தது-நம்மிடத்தே வந்தனன். எ-று.

நந்தி-என்பதில் தி குறுக்கல், சாளி - பொன்னிட்டு வைக்கும்பை; பொன் மிகும்பை என்றதனால் பெருச்சாளியெனப்-பொருளுரைக்கப்பட்டது. துலாஸ்நாநம்-ஐப்பசிமாசம் காவேரிநதியில் மூழ்குதல்.

சிவபரமாகவும் விஷ்ணுபரமாகவும் சிலேடித்துப் பாடியது.

இது சந்திரோபாலம்பநம் என்னுந்துறை.

140 இருந்தாரைகேள்வனையோங்குமாரனை மூழ்புனலைத்
திருந்தாரைவந்நினைமுன்முடித்தோன்செய்யவேளைப்பண்டு

தருந்தாதைநாயகன்சுந்தரன்றூதன்சமரிலன்று
பொருந்தார்புரத்திட்டதீப்போன்மதியம்புறப்பட்டதே.

சிவபரம்.

இ-ள். இருதாரைகேள்வனை - பெரிய நக்ஷத்திரங்களுக்கு நாயகனாகிய சந்திரனையும், ஓங்கும் அராவை - உயர்ந்தபாம்புகளையும், எழுபுனலை-(ஆகாயத்தினின்றும்பெருகி) எழுந்த கங்கையையும், திருந்து ஆரை-திருத்தமாகிய ஆத்திமாலையையும், வன்னியை-வன்னியிலையையும், முன்முடித்தோன் - முன்னாளில் முடித்தவனும், செய்யவேளைப் பண்டுதரும்தாதை-முருகக்கடவுளை முன்னீன்றதந்தையும், நாயகன்-(எல்லார்க்கும்) இறைவனும், சுந்தரன் தூதன் - சுந்தரற்குத் தூதுசென்றவனும் ஆகிய சிவபெருமான், அன்று-அந்நாளில் நிகழ்ந்த, சமரில்-போரில், பொருந்தார் புரத்து-பகைவருடைய முப்புரத்தில், இட்ட தீபோல்-மூட்டிவிட்ட நெருப்பைப்போல, மதியம் புறப்பட்டது-சந்திரன் புறப்பட்டது. எ-று.

விஷ்ணு பரமாகும்போது-தாரைகேள்வன் - வாலியெனவும், திருந்தார்-பகைவர் எனவும், வன்னி-ஓரரக்கன் எனவும், வேள்-மன்மதன் எனவும், சுந்தரன் தூதன்-அழகனாகிய ஸ்ரீராமனுக்குத் தூதனாகிய அநுமான் எனவும், புரம்-இலங்காபுரம் எனவும்கொள்க.

141. ஆராயுமுத்தமிழாற்றூரிற்சோமியழகுகண்டு
நாராயணனெடுமாலாகினனந்தநான்முகனும்
ஓராயிரமடலூர்ந்தான்வின்மாரனுருவழிந்தான்
பேரானவானவர்கோனுங்கண்ணுயிரம்பெற்றனனே.

ஆற்றூரிலிருந்த சோமியென்னுந் தாசியின் அழகைக்கண்டு
வியந்து பாடியது.

இ-ள். ஆராயும்-(தமிழ் நாட்டாராலே)ஆராயப்படுகின்ற, முத்தமிழ்-முத்தமிழ் வழங்குமிடமாகிய, ஆற்றூரில் - ஆற்றூரிலுள்ள, சோமி அழகு கண்டு-சோமியின் அழகைப்பார்த்து, நாராயணன்-ஸ்ரீமஹாவிஷ்ணுவானவன், நெடுமால் ஆகினன்-பெரிய காமமயக்க முடையனானான், அந்தநான்முகனும்-அந்தப்பிரமனும், ஓர் ஆயிரம்மடல் ஊர்ந்தான்-ஒப்பற்ற ஆயிரம் மடன்மாக்களை யேறினன், வில்மாரன் உருவழிந்தான் - (கரும்பு வில்லையுடைய) மன்மதன் உருவமிழந்தான், பேர் ஆனவானவர்கோனும் - பெருமையுடையவனாகிய தேவேந்திரனும், கண் ஆயிரம்பெற்றனன் - ஆயிரம் கண்களைப்படைத்தான், எ-று.

ஆயிரம்மடல் - தாமரைமலரென்றும் வேறொரு பொருள் கொள்க. மடலூர்தலாவது-தலைமகன்தான் விரும்பிய நாயகியைப் பெறாவிடில் அவளைப் பெறும்பொருட்டுப் பனைமடலாற் செய்யப்பட்ட குதிரைமீதேறித் தெருக்களிற் செல்லுதல்.

திருவலஞ்சுழியில் விநாயகரைத் தரிசிக்கையில் பாடியது.

142. பறவாததும்பிகருகாதவெங்கரிபண்புரண்டே
இறுகாததந்தியுருகாதமாதங்கமிந்துநுதல்
நிறவாதசிந்தூரம்பூசாக்களபநெடுஞ்சுனையில்
பிறவாதவாம்பல்வலஞ்சுழிக்கேவரப்பெற்றனனே.

இ-ள். பறவாததும்பி-பறக்காதவண்டும், கருகாதவெம் கரி-கறுக்காத வெப்பமாகிய கரியும், பண்புரண்டு இறுகாததந்தி-பண்கள் புரளப்பெற்று இருகாததந்தியும், உருகாதமாதங்கம் - உருகாத அழகிய தங்கமும், இந்துநுதல் நிறவாதசிந்தூரம்-அஷ்டமீசந்திரன்போன்ற (மாதரது) நெற்றியி லணியப்பட்டு ஒளிசெய்யாத சிந்தூரமும், பூசாக்களபம் - பூசாத கலவைச்சந்தநமும், நெடு சுனையில்பிறவாத ஆம்பல்-நீண்ட சுனைகளில் உண்டாகாத அல்லியும், வலஞ்சுழிக்கே வரப்பெற்றனன் - திருவலஞ்சுழியில் கிடைக்கப்பெற்றேன். எ-று.

தும்பி, கரி. தந்தி, மாதங்கம், சிந்தூரம். களபம், ஆம்பல், இவையாவும் யானைக்குப் பரியாயப்பெயர்கள்.

திருத்தில்லையிலிருக்கும் கற்பகவிநாயகரைத் தரிசித்து
நிந்தாஸ்துதியாகப் பாடியது.

143. கம்பமதகடகளிற்றான்றில்லைவாழும்
கணபதிதனபெருவயிற்றைக்கண்டுவாடி
உம்பரெலாம்விழித்திருந்தாரயில்வேற்செங்கை
உடையவறுமுகவனுங்கண்ணீராருனன்
பம்புசுடர்க்கண்ணனுமோநஞ்சுண்டானமால்
பயமடைந்தானுமையுமுடல்பாதியானாள்
அம்புவியைப்படைத்திடுவதவமதேயென்
றயனுமன்னமிறங்காமலலைகின்றானே.

இ-ள். கம்பமதகடம் களிற்றான்-கட்டுத்தறியிற் கட்டப்படுகிற மதம் பாய்கின்ற சுவடுள்ள யானைமுகத்தையுடையவனாகி, தில்லைவாழும்-தில்லையில் வாழ்கின்ற, கணபதியின் பெருவயிற்றைக்கண்டு-விநாயகக்கடவுளது பெருவயிற்றைநோக்கி, உம்பர் எல்லாம்-தேவரெல்லாரும், வாடி-வாட்டமடைந்து, விழித்து இருந்தார்-(உறங்காமல்) விழித்துக்கொண்டிருந்தார்கள், அயில்வேல்-கூர்மையாகிய வேலாயுதத்தை, செய்கைஉடைய-செவந்தகையின் கண்ணே யுடையவனான, அறுமுகவனும்-ஆறுமுகங்களையுடையவனாகிய முருகக்கடவுளும், கண்ணீர் ஆற ஆனான்-கண்ணீர் ஆறாகப்பெருக அழுதான், பம்புசுடர்க்கண்ணனும் - பரவிய நெருப்புக்கண்ணனாகிய சிவபெருமானும், நஞ்சு உண்டான்-(இறக்கக்கருதி) விஷத்தையுண்டான், மால்பயம் அடைந்தான்-திருமால் அச்சத்தையடைந்தான், உமையும்-உமாதேவியும், உடல்பாதி ஆனாள்-பாதியுடம்பாய் மெலிந்தாள், அயனும்-பிரமனும், அம்புவியைப்படைத்திடுவது உலகத்தைச் சிருஷ்டிப்பது, அவமதே

என்று-வீணேயென்று, அனனம் இறங்காமல் - சோறுமிறங்கப்பெருமல், அலேகின்ருன்-திரிகின்ருன். எ-று.

விழித்திருந்தார், கண்ணீராருஞன், பயமடைந்தான், உடல்பாதியாஞன், அன்னமிறங்காம லலேகின்ருன், என்பவற்றிற்கு முறையே இமையாதிருந்தார், கண்கள் பன்னிரண்டையுடையனுஞன் பாற்கடலே யடைந்தான், சிவபெருமான் திருமேனியிற் பாகம்பெற்ருன், அன்னவாகநத்தினின்று மிறங்காமல் திரிகிருன், என வேறொருபொருள் தோன்றுதல் காண்க.

கயிற்ருற்றிலுள்ள பெருமாளேத் தூக்கும்படி இவரைவருத்திச் சுமத்தியபோது பாடியது.

144. பாளேமணங்கமழுகின்றகயிற்ருற்றுப்பெருமாளேபழிகாராகே
ளேவேளேயென்ருலிவ்வேளேபதிஞறுநாழிகைக்குமேலாயிற்றென் [ள்
தோளேமுறித்ததுமன்றிநம்பியாீனயுங்கூடச்சுமக்கச்செய்தாய்
நாளேயினியார்சுமப்பாரெந்நாளுமுன்கோயிஞசந்தானே.

இ-ள். பாளே மணங்கமழுகின்ற-தெங்கு கமுகு என்பவற்றின் பாளேகள் மணம்வீசுகின்ற, கயிற்ருற்றுப் பெருமாளே-கயிற்ருற்றிலுள்ள பெருமாளே, பழிகார-பழிகாரனே, கேள்-கேட்பாயாக, வேளேயென்ருல்-காலமோவென்ருல், இவ்வேளே-இந்தக்காலம்,பதிஞறு நாழிகைக்குமேல் ஆயிற்று-பதிஞறு நாழிகைப் பொழுதுக்கு மேற்பட்ட, என்தோளே முறித்ததும் அன்றி - என் தோள்களே முறித்ததுமல்லாமல், நம்பியானேயுங்கூட சுமக்கச்செய்தாய் - நம்பி யானேயும் சுமக்கும்படிபண்ணிஞய், இனிநாளே யார்சுமப்பார்-இனி நாளேயத்தினம் யார் உன்னேச் சுமப்பவர், எந்நாளும் உன்கோயில் நாசம்தான்-எக்காலமும் உன்கோயில் நாசத்தையே யடைந்திருக்கும். எ-று.

திருமலேராயன் கீர்த்தியைக்குறித்துப் புகழ்ந்து பாடியது.

145. வீமனெனவலிமிகுந்த திருமலேராயன்சீர்த்தி வெள்ளம்பொங்கத், தாமரையினயஞேடிச்சத்தியலோகம்புகுந்தான் சங்கபாணி, பூமிதொட்டுவானமட்டும் வளர்ந்து நின்ருன் சிவன் கயிலேப்பொருப்பிலேறிச், சோமனேயுந் தலேக்கணிந்து வடவரைத்தண்டாலாழஞ் சோதித்தானே.

இ-ள். வீமன் எனவலிமிகுந்த-வீமன்போல வலிமிகுந்த, திருமலேராயன்-திருமலேராயனது, சீர்த்தி வெள்ளம்பொங்க - கீர்த்தியாகிய பிரவாகம் பொங்கியெழவே, தாமரையின் அயன் ஓடி-தாமரைமலரி லிருக்கிற பிரமஞேடி, சத்தியலோகம் புகுந்தான்-சத்தியலோகத்தில் நுழைந்தான், சங்கபாணி - சங்கத்தைக் கையிலுடையவஞகிய திருமால், பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்து நின்ருன் - பூமிதொடங்கி ஆகாயமளவும் உயர்ந்து நின்ருன், சிவன்-சிவபெருமான், கயிலேப்பொருப்பில் ஏறி - கைலாய மலே

மேலேறி, சோமனையும் தலைக்கு அணிந்து - அரையாடையையும் தலையிற் றரித்து, வடவரைத் தண்டால்-வடமேருமலையாகிய மூங்கிற் றண்டினால், ஆழம்சோதித்தான்-ஆழத்தைச் சோதனைசெய்தான். எ-று.

சோமன்-சந்திரன்.

திருத்துருத்தியென்னும் தலத்தில் சிவபெருமானைத் தரிசிக்கச்சென்ற போது, அவ்விடத்திலுள்ள குருக்கள்மார், புங்கங்கொம் பங்கிங்கொன் பது, பிளியங்கொம் பங்கிங்கொன்பது, வெட்டிநறுக்கிய வெள்வே லங்கொம்பங்கிங்கொன்பது, என்னுமிவற்றை ஒருவெண்பாவி லடக்கிப் பாடவேண்டுமென்ன, எங்கள் மடத்துக் கெரிக ரும்பு கொள்வது என்பதை முதலில் சேர்த்து வெண் பாவாய் அமைத்துக் காட்டியது.

எரிகரும்பு-விறகு.

146. எங்கண்மடத்துக்கெரிகரும்புவெட்டுதற்குப்
புங்கங்கொம்பங்கிங்கொன்பதுபுளி-யங்கொம்பங்
கிங்கொன்பதுவெட்டிநறுக்கியவெள்வே
லங்கொம்பங்கிங்கொன்பது.

இ-ள். வெளிப்படை.

எழுத்தாணியென்றெடுத்து சூரிக்கத்தியென்று முடிக்கவேண்டுமெனச் சிலர் கேட்க, அவ்வாறே பாடியது.

147. எழுத்தாணிதுபெண்ணிதனை முனிகாதில்
வழுத்தாரணக்குகனைவாதுக்-கழைத்ததுவும்
மாரன்கைவின்மான்முன்காத்ததுவுநன்றுகுந்
தீரமுள்ளசூரிக்கத்தி.

இ-ள். இது ஆண் எழுத்து-இது ஆணெழுத்தாம், இது பெண் எழுத்து-இது பெண்ணெழுத்தாம் (என்று), இதனை - இந்த விவரத்தை, முனி காதில்-அகத்தியமுனிவரது செவியில், வழுத்து-உபதேசித்தருளிய, ஆரணம் குகனை-வேதப் பிரதிபாத்தியனான முருகக்கடவுளை,வாதுக்கு அழைத்ததுவும்-போருக்கழைத்ததுவும், நன்று ஆகும் தீரம் உள்ளசூர்-சிறப்பாகிய தீரகுணமுள்ளசூரன், மாரன் கை வில் இக்கு - மன்மதனது கையில்லாயிருப்பதுவும் கரும்பாகும், மால்முன் காத்ததும் அத்தி- திருமால் முற்காலத்தில் காத்ததுவும் யானையாகும். எ-று.

சூரிக்கத்தி என்பதனைசூர் இக்கு அத்தி எனப்பிரித்துக்கொள்க. அத்தி என்றது கஜேந்திரனை. ஆணெழுத்து-குற்றெழுத்து,பெண்ணெழுத்து-நெட்டெழுத்து. இவற்றையுணர்த்தினன் என்றதனால் இலக்கணவரம்பை ஆதியந்தமாகக் கற்பித்தானென்றதாயிற்று.

பதினாறுபேறு இவையென்பது.

148. துதிவாணிவீரம்விசயஞ்சந்தானந்துணிவுதனம்
அதிதானியஞ்சவுபாக்கியம்போகமறிவழகு
புதிதாம்பெருமையறங்குலநோயின்மைபூண்வயது
பதினாறுபேறுந்தருவாய்மதுரைப்பராபரனே.

இ-ள். துதி-புகழ், வாணி-கல்வி, வீரம்-வீரத்தன்மை, விசயம்-வெற்றி, சந்தானம்-பிள்ளைகள், துணிவு-துணிதல், தனம் - பொன், அதிதானியம் - மிகுதியாகிய தானியம், சவுபாக்கியம் - சிறந்தபாக்கியம், போகம் - (மாதரது) அநுபவம், அறிவு-ஞானம், அழகு - சௌந்தரியம், புதிது ஆம் பெருமை-நூதனமாகிய பெருமை, அறம்-தருமம், குலம்-உயர்குலம், நோயின்மை-ஆரோக்கியம், பூண்-ஆபரணம், வயது-ஆயுள், என்னும் பதினாறு பேறும் தருவாய் - பதினாறுபேற்றையும் தந்தருள்வாய், மதுரை பராபரனே-மதுரையிலெழுந்தருளியிருக்கின்ற பராபரனே. எ-று.

ஸ்ரீரங்கத்துவைணவர், திருமால் உலகத்தையுண்டருளினபோது சிவன் எங்கேயிருந்தார் என்றதற்கு விடையாகச்சொல்லியது.

149. அருந்தினனண்டமெலாமன்றுமாலீசன்
இருந்தபடியேதென்றியம்பின்-பொருந்தி
பருங்கவளம்யானைகொளப்பாகனதன்மீதே
இருந்தபடியீசனிருந்தான்.

இ-ள். அன்று-அக் கடைகாலத்தில், மால் - திருமாலானவன், அண்டம் எல்லாம் அருந்தினன் - உலகங்களையெல்லாம் உண்டான், (அப்பொழுது) ஈசன் இருந்தபடி எது-சிவனிருந்த விதம்யாது, என்று இயம்பின்-என்று கேட்பின், யானை-யானையானது, பருகவளம்கொள்ள - பெரியகவளத்தையுட்கொள்ள, பாகன் - (அதைச்செலுத்தும்) பாகன், அதன்மீதே பொருந்தி இருந்தபடி - அதின்மீதிற்றானே பொருந்தியிருந்தாற்போல, ஈசன்-இருந்தான்-சிவபெருமானிருந்தான். எ-று.

யானை கவளங்கொள்ளும்போது பாகன் அதின் பிடர்மீதிருந்தாற்போல, திருமால் உலகத்தை யுண்ணும்போது சிவபெருமான் அவன்மீது தங்கியிருந்தார் என்பது கருத்து.

ககரவருக்கத்தில் ஒருபாடல் பாடுகவெனச் சிலர்கேட்கப் பாடியது.

150. காக்கைக்காகாகூகைகூகைக்காகாகாக்கை
கோக்குக்கூகாக்கைக்குக்கொக்கொக்க-கைக்கைக்குக்
காக்கைக்குக்கைக்கைக்காகா.

இ-ள். கூகை காக்கைக்கு ஆகா - கூகை (பகற்காலத்தில்) காக்கைக்கு எதிர்நிற்றல்கூடாது, காக்கை கூகைக்கு ஆகா-காக்கை (இராக்காலத்தில்) கூகைக்கு எதிர்நிற்றல்கூடாது, கர்க்கு ஐக்கு - கற்பக தருச்சோலைக் கிறைவனுகிய இந்திரனுக்கும், கைக்கைக்கு ஆகா - (காலமல்லாக்காலத்தில்) பகைவரைகொல்லுதற்கிசையாது, (ஆதலால்) கோக்கு - அரசனுக்கு, கூ-பூமியை, காக்கைக்கு-ரக்ஷிக்கவும், கைக்கைக்கு - பகைவரைக் களையவும், கொக்கு ஒக்க காலம்வாய்க்குமளவும்-கொக்கைநிகர்த்து அடங்கியிருக்கக்கடவன். எ-று.

வல்லினத்தில் ஒருபாடல் பாடுகவெனச் சிலர்கேட்கப் பாடியது.

151. துடித்துத்தடித்துத்துடுப்பெடுத்தகோடல்
தொடுத்ததொடைகடுக்கைபொன்போற்-பொடித்துத்
தொடிபடைத்ததோடுடித்ததோகைகூத்தாடக்
கடிபடைத்துக்காட்டிற்றுக்காடு.

இ-ள். தடித்து துடித்து-மின்னல் மின்னினதனுல், கோடல் துடுப்பு எடுத்த-காந்தள் துடுப்புகளையேந்தின (அரும்பின), கடுக்கை-கொன்றைகள், பொன்போல்பொடித்து தொடைதொடுத்த - பொன்போலரும்பி மாலையாகத் தூக்கப்பட்டன, தொடிபடைத்த தோள்துடித்த வளையலையணிந்த தோள்கள் துடியாநின்றன, (ஆதலால்) காடு - காடானது, தோகை கூத்து ஆட-மயில்கள் நடமாட, கடிபடைத்து காட்டிற்று மணப்பந்தலின் தன்மையைப் பெற்றுக் காட்டிற்று. எ-று.

காந்தள் துடுப்பெடுத்ததை மணப்பந்தலிலுள்ள தீபத்திற்கும், கொன்றைபொன்போ லரும்பித்தொடை தொடுத்ததைப் பந்தலின் நாற்புறத்தும் தொங்குகின்ற பூமாலைக்கும், மயில் நடனமாடுதலை பந்தலில் கணிகைமாதர் நடனம்பண்ணுதற்கும், தோள்துடித்தலை மூங்கிலின் அசைதலுக்கும் உவமையாகக் கொள்க.

மெல்லினத்தில் ஒருபாடல் பாடுகவெனச் சிலர்கேட்கப் பாடியது.
துறை-தாயிரங்கல்.

152. மானமேநண்ணுமனமென்மனமென்னும்
மானமான்மன்னுநனிநாணு-மீனமா
மானுமினன்மின்னிமுன்முன்னேநண்ணினும்
மானுமணிமேனிமான்.

இ-ள். ஈனம் ஆம்-இழிவாகிய, ஆனு-நீங்காத, மின்னல் மின்னி-மின்னலானது மின்னி, முன்முன்னே நண்ணினும்-எதிரெதிரேவரினும், மானு ஒப்பாகாத, மணி-அழகாகிய, மேனி-வடிவையுடைய, மான்-(என்) பெண்ணனவள், என்மனம்-என்நெஞ்சமானது, மானமே நண்ணுமனம்என்னும்-

மானஞ்சிறிதும் பொருந்தாத நெஞ்சமாயிருக்கிறதென்பாள், நனிநாணும்-மிகவும் வெட்குவாள், (ஆதலால்), மானம் மான்மன்ன - பெரிய யானைகளையுடைய அரசனே, (இவளைக் காக்கவேண்டும்), எ-று.

இடையினத்தில் ஒருபாடல் பாடுகவெனச் சிலர்கேட்கப் பாடியது.

153. விரவலராய்வாழ்வாரைவெல்லலொழிவாய்
இரவுலவாவேலையொலியே-வரவொழிவாய்
ஆயர்வாயேயரிவையாருயிரையீராவோ
ஆயர்வாய்வேயோவழல்.

இ-ள். இரவு உலவாவேலை ஒலியே - இராக்காலத்திலும் அடங்காத கடலோசையே, விரவலர் ஆய்வாழ்வாரை வெல்லல் ஒழியாய் - தனியாய் வாழ்வோரை-வருத்துதலை நீக்குவாய், வரவு ஒழியாய்-உன் வருகையைத் தவிர்வாய், அரிவை-(இந்தப்) பெண்ணினது, ஆர் உயிரை-அரியவுயிரை, ஆயர்வாயே ஈராவோ - தாய்மார்களுடைய (பழிதூற்றுகிற) வாய்களே பிளக்காவோ, ஆயர்வாய்வேயோ-இடையர் வாயில்வைத்தூதுகின்ற வேய்ங்குழலோ, அழல்-நெருப்புப்போலச் சுடாநின்றது. எ-று.

கடலோசையே! தாய்மார் பழிதூற்றலும், வேய்ங்குழலோசையும் இவளுயிரை வருத்த லமையாதோ, நீயும் வருத்தவேண்டுமோ என்பது கருத்து.

சிவபெருமான் நஞ்சுண்டதைச் சிறப்பித்துப் பாடியது.

154. கடுக்கைமுடியானேகாலைமுடித்தாற்போல்
கடுக்கைமுடியானுயிற்காணார்-கடுக்கை
உரலடிமீதுற்றானுமும்பர்களுமற்றும்
உரலடிமீதுற்றானூர்.

இ-ள். கடுக்கை முடியான்-கொன்றை மாலையையணிந்த பரமசிவன், முன்-முற்காலத்தில், காலைமுடித்தாற்போல்-யமனைக் கொன்றதுபோல, கடு-நஞ்சை, கை-தன்கையில், முடியான் ஆயின்-அடக்கானாயின், கடுகை-வேகத்தையும் துதிக்கையையுமுடைய, உரலடிமீதுஉற்றானும்-(வெள்ளை) யானைமீதேறின இந்திரனும், உம்பர்களும்-தேவர்களும், மற்றும்-மேலும், அடி-தன்காலானது, உரல்மீது உற்றானும்-உரலின்மீது பொருந்தப்பெற்றவனாகிய கிருஷ்ணனும் (திருமாலும்), ஊர்காணார்-(தத்தம்) உலகங்களைக்காணுதழிவர்.

காலனை என்பது கால் என ஈறுதொகுத்து நின்றது.

கடைமொழிமாற்று.

155. கடம்பற்கெண்டோளயற்குக்கண்பதினைந்தாமால்
கடம்பற்கோநால்வாய்க்கையைந்தே-கடம்பற்கோ

டானைமுகற்காயிரங்கண் ணாகண் டலற்கிலம்பா
டானைமுகற்கா றிரண்டுகை.

இ-ள். ஆறிரண்டுகை கடம்பற்கு - கடப்பமாலையைத்தரித்த முருகக்கடவுளுக்கு பன்னிரண்டு கைகளுண்டு, எண்தோள் அயற்கு-பிரமனுக்கு எட்டுத்தோள்களுண்டு, கடம்பற்கு கண்பதினைந்தாம்-கடப்ப மாலையைத் தரித்த சிவனுக்குப் பதினைந்து கண்களுண்டு, கடம் - மதத்தையும், பல் கோடு-பல்லாகிய கொம்பையும், ஆனைமுகற்கு-யானை முகத்தையுமுடைய விநாயகர்க்கு, நால்வாய்-தொங்குகின்றவாயும், கைஐந்துகைகளும் உண்டு ஆகண்டலற்கு ஆயிரம்கண்-இந்திரனுக்கு ஆயிரங்கண்களுண்டு, ஆன்-இடபவாகநத்தையுடைய, ஐமுகற்கு-ஐந்து முகங்களையுடைய சிவனுக்கு, இலம்பாடு- தரித்திரமுண்டு,

சிவனுக்கு முகமைந்தாதலால், முகமொன்றுக்கு மூன்றுகண் விழுக்காடு ஐந்துமுகங்களுக்குப் பதினைந்துகண்களாயின. இடம்பாடு என்றது பலியேற்றலைக்குறித்தது. ஆல்-அசை.

நடேசர்மீதுபாடிய நிந்தாஸ்துதி.

156. வில்லாலடிக்கச்செருப்பா லுதைக்கவெகுண்டொருவன்
கல்லாலெறியப்பிரம்பாலடிக்கவிக்காசினியில்
அல்லார்பொழிற்றில்லையம்பலவாணற்கொரன்னைபிதா
இல்லாததாழ்வல்லவோவிங்ஙனேயெளிதானதுவே.

இ-ள். இக்காசினியில்-இந்தப் பூமியில், அல் ஆர்பொழில்தில்லை அம்பலவாணற்கு-இருண்ட சோலைசூழ்ந்த சிதம்பரத்தின்கண் உள்ள பொன்னம்பலத்தில் வாழ்பவனாகிய நடேசப்பெருமானுக்கு, ஓர் அன்னைபிதா இல்லாத தாழ்வு அல்லவோ-ஓர்தாயும் தகப்பனும் இல்லாத குறைவினால் அல்லவா, ஒருவன்வெகுண்டு-ஒருவன் கோபித்து, வில்லால் அடிக்க-வில்லால் அடிக்கவும், செருப்பாலுதைக்க - செருப்பாலுதைக்கவும், கல்லால் எறிய-கல்லால் வீசவும், பிரம்பால் அடிக்க-பிரம்பாலடிக்கவும், இங்ஙனே எளிதானது-இவ்வாறு எளிதாய் முடிந்தது. எ-று.

வில்லால் அடித்தவன் அர்ச்சுனன். இவன் பாசுபதாஸ்திரம்பெறச் சிவபெருமானைநோக்கித் தவஞ்செய்கையில் துரியோதனனுடைய ஏவுதலால் அத்தவத்தை அழிக்கப் பன்றியின் உருவங்கொண்டுவந்த மூகாசுரனைக் கொன்று அர்ச்சுனனைக்காக்கச் சிவபெருமான் வேடரூபந்தரித்து, அப்பன்றியைத்துரத்திக்கொண்டுபோய் அர்ச்சுனனோடு விளையாட்டாகப் போர்புரிகையில், அர்ச்சுனன் சிவபெருமான்விட்ட கணையால் தன்வில்லின் நாணற்றபோது வெகுண்டு சிவபெருமானை வில்லால் அடித்தனன். செருப்பா லுதைத்தவர் கண்ணப்பநாயனர். கல்லாலெறிந்தவர் சாக்கியநாயனர். பிரம்பாலடித்தவன் பாண்டியன்.

முருகவேள் குறத்தியை மணந்தானென்று சிவன் முதலானோர் வருந்தி நஞ்சுண்டல் முதலானவற்றைச் செய்தார்களெனக் கற்பித்துப் பாடியது.

157. மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன் குறமகளை
மணந்தானென்றே
உருகியரனஞ்சுண்டா னுமையவளுந் தவம்புரிந்தா
ளுயர்மான்மேனி
கருகிமிகமண்டின்றான் கமலன்முக நாலானான்
கடவுளோர்கள்
இருவிழியு மிமையாம லிரவுபக லுறங்காம
லிருக்கின்றாரே.

இ-ள். மருகு இருக்கும் - மகரவாழைகள் சூழ்ந்திருக்கின்ற, வேளூரின் - வேளூரிலிருக்கிற, வயித்திமகன் - வயித்திமகனானவன், குறமகளை மணந்தான் என்று - குறப்பெண்ணை மணஞ்செய்துகொண்டானென்று, அரன் உருகிநஞ்சு உண்டான்-சிவபெருமான் மனங்கரைந்து விஷத்தைப் பருகினான், உமையவளும் தவம்புரிந்தாள்-உமாதேவியும் தவத்தைச்செய்தாள், உயர்மால்-உயர்ந்த திருமாலானவன், மேனிமிகக்கருகி - உருவம் மிகக்கறுத்து, மண்தின்றான்-மண்ணையுண்டான், கமலன் - பிரமன், முகம் நால்ஆனான்-முகமிறங்குதலை யுடையவனானான், கடவுளோர்கள் - தேவர்கள், இருவிழியும் இமையாமல் இரவுபகல் உறங்காமல் இருக்கின்றார்-இருகண்ணும் இமைக்காமலும் இராப்பகல்கள் உறங்காமலும் இருக்கின்றார்கள். எ-று.

அரன் முதலியோர் நஞ்சுண்டல்முதலிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் வேறாயிருக்க, முருகன் குறப்பெண்ணை மணந்தமை காரணமாகக் கற்பித்துரைத்தனர். வயித்திமகன் - வயித்தீச்சுரன் மகனாகிய முருகக்கடவுள். நாலுதல்-தொங்குதல்.

ஸ்ரீரங்கத்தில் ஒருத்திவீட்டில் சாப்பிட்ட சாப்பாட்டை நிந்தித்துப்பாடியது.

158. நீச்சாற் பெருகிடு காவேரியாற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சாளிலைக்கறிச் சாற்றையெல்லாமது தானுமன்றி
காய்ச்சாப்புளியு நற்கல்லுடன் சோறுங் கலந்துவைத்த
ஆய்ச்சாளை யான்மறவேன் மறந்தான்மன மாற்றிடுமே.

இ-ள். நீச்சால்பெருகிடு - நீச்சுநிலையால் பெருகியோடுகிற, காவேரி ஆற்றை நிலைநிறுத்தி - காவேரிநதியைத்தடுத்து, இலைக்கறிசாற்றையெல்லாம் சாய்ச்சாள்-கீரைச்சாற்றையெல்லாம்சாய்த்தாள், அதுதானும்அன்றி அதுவுமன்றி காய்ச்சாப்புளியும்-பச்சைப்புளியும்-கல்லுடன் சோறும் - கல்லோடுகூடிய சோற்றையும், கலந்துவைத்த - கலந்துபடைத்த, ஆச்சாளை

நான்மறக்கமாட்டேன், மறந்தால் - மறந்தேனுயின், மனம் ஆற்றிடுமோ-என்மனம் பொறுக்குமோ. எ-று.

ஒருவேசையானவள் கதைசொல்லச் சொன்னபோது பாடியது.

159. சோமன் புறப்படத் தென்றலும்வீசத் துயிலொழிய
யாமங்க டோறுங் குயில்வந்துகூவி டங்நேரத்திலே
நாமும்பிழைத்து மனிதர்முன் பேசிட நாமு முண்டாய்க்
காமக்கலகந் தெளிந்தபின் னானுங் கதைசொல்வனே.

இ-ள். சோமன்புறப்பட-சந்திரன் உதிக்க, தென்றலும்வீச - தென்றற்காற்றும்வீச, துயில்ஒழிய-நித்திரைநீங்க, யாமங்கள்தோறும் குயில்வந்துகூவிட-சாமங்கள்தோறும் குயில்வந்துகூவுகின்ற, அந்நேரத்தில் - அந்த வேளையில், நாமும்பிழைத்து-யாமும் (இறவாது) பிழைத்து, மனிதர்முன் பேசிட நாமும் உண்டாய்-மனிதருக்கெதிரில் பேசும்படி நாமும் உண்டாயிருந்து, காமக்கலகம் தெளிந்தபின்-காமப்போர் தெளிந்தபிறகு, நானும் கதைசொல்வன்-நானும் கதைசொல்வேன். எ-று.

சோமன் புறப்பாடு முதலியவற்றிற்குத் தப்பிப் பிழைத்திருந்தால் கதைசொல்வேன் என்பதாம்.

ஒரு ஊரார்மேல் கோவங்கொண்டு, அந்தஊரிலுள்ள ஏரியுடைந்து
ஓட்டை ஏரியாகும்படி பாடியது.

160. கலங்கற் றுறையதனிற் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன் றெண்டிக்கச்-சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்ருயுடைந்துநீர்
கட்டா தொழிதல் கடன்.

இ-ள். கலங்கல் துறை யதனில் காராளர்போத - கலங்கல்போகுந் துறையில் வேளாளரை (நீரோட்டத்தோடு அடித்துக்கொண்டு) செல்லவும், தெலுங்கப்ப நாரணன்தெண்டிக்க - தெலுங்கப்ப நாரணன் தண்டிக்கவும், சலம்பெருகி-நீர்பெருகி, நட்டாறுகொண்டு-நட்டாற்றைத் தன்னுட்கொண்டு, கரைநன்ருய் உடைந்து - கரைமுழுதும் உடைய, நீர்கட்டாது ஒழிதல்-நீர் கட்டப்படாதொழிதலே, கடன்-முறைமையாகும். எ-று

நடுவெழுத்தலங்காரம்.

161. திருமால்வாகனநாவா யிராசியொன்று
கிளைதெளிட்டார்மாதுலன்கோகிலமிவ்வேழின்
உருவாமேழெழுத்துநடு வெனக்குச்செய்தான்
உடனைபதினன்குந் தானேகொண்டான்

ஒருபாகத்திருத்தினான் றலையிலேற்றான்
ஒருமதலைதனக்களித்தா னுண்டான்பூண்டான்
பரிவாயொண்கரத்தமைத்தா னுகந்தானிந்தப்
பைம்பொழிற்றில்லையுளாடும் பரமன்றானே.

இ-ள். இந்தபைம்பொழில் தில்லையுள் ஆடும்பரமன்-பசியசோலைசூழ்ந்த இந்தத்தில்லையில் நடனம்பண்ணுகிற மேலோனாகிய சிவபெருமான், திருமால்வாகனம்-கருடன் (நாகாரி), நாவாய் - தெப்பம் (கலம்), இராசி ஒன்று-கன்னி, கிளை - (கவடு), தெவிட்டார் - ஆரார், மாதுலன்-மாமன், கோகிலம்-பல்லி, இ எழின் - இவ்வேழு சொற்களிலுள்ள, உரு ஆம் எழ் எழுத்துநடு - வரிவடிவாகிய நடுவெழுத்தேழையும், எனக்குசெய்தான்—, உடனனபதினான்கும் தானேகொண்டான் - கூடஇருந்தபதினான்கையும் தானேகொண்டு,(முறையே) ஒருபாகத்து இருத்தினான்-ஒருபங்கில் வைத்துக்கொண்டான், தலையில் எற்றான்-சிரத்திலேற்றுக்கொண்டான், ஒருமதலை தனக்கு அளித்தான் - ஒருபுதல்வனுக்குத் தந்தான், உண்டான்—, பூண்டான்—, பரிவாய்-அன்போடு, ஒள்கரத்து அமைத்தான்-அழகாகிய கையில் அமைத்துக்கொண்டான், உகந்தான்-விரும்பினான். எ-று.

ஒருபாகத் திருத்தினான் கையிலேற்றான் எனச்சிலர் பாடமோதுவர். இப்பாடத்தில் கம் என்பதற்கு கபாலம்எனப் பொருள்கூறலாம், ஆயினும் கரத்தமைத்தான்என மேல்வருகையால் தலையிலேற்றான் என்பதே சிறப்புடைத்து. ௦ நடுவிலுள்ள எழெழுத்துக்களை யெடுத்துக்கொண்டு, காலன் வராமல் செய்தான் என்றும், நடுவெழுத்தொழியநின்ற முதலெழுத்தையும் கடையெழுத்தையும் முறையேசேர்த்து, பெண்ணைப்பாகத்தி லிருத்தினான், நீரைத்தலையிலேற்றான், கனியைப் புதல்வனுக்குத் தந்தான், விஷத்தையுண்டான், ஆத்தி மாலையைப் பூண்டான், மானைக்கையிலமைத்தான், பலியைவிரும்பினான் என்றும் கூறுக.

ப நா	கா	ரி
க	ல	ம்
க	ன்	னி
க	வ	டு
வா	ரா	ர்
மா	ம	ன்
ப	ல்	லி

கனிகொடுத்தசெய்தி சிவபெருமான் கையிலிருந்த மாங்கனியை விநாயகர் சுப்பிரமணியர் இருவரும்விரும்பிக்கேட்க, சிவபெருமான் அவ்விருவரையும்நோக்கி, உம்மிருவரில்யார் உலகமுழுதும் வலம்வந்து முன்னே என்னிடம் சேருகிறீர்களோ அவர்களுக்கு கொடுப்பேனென்று சொல்ல, சுப்பிரமணியர் மயிலின்மீதேறி உலகத்தை வலம்வருமுன்னே, விநாயகர் எழுந்து சிவபெருமானை வலம்வந்து, உலகமெல்லாம் உன்வடிவமாதலால், வலம்வந்தது உலகத்தை வந்ததாயிற்று என்றுசொல்ல, இந்த யுத்திக்கு மெச்சிக் கனியைத் தந்தருளினர் என்பது.

நிரனிறைப்பொருள்கோள்.

162. கூற்றுவனைவின்மதனை யரக்கர்கோவை
கூனிலவைக்குஞ்சரத்தை யிஞ்சிமூன்றை
எற்றுலகின்புறவுருவ மாளத்தோள்க
ளிறவெறிப்பவிமையப்பெண் வெருவவேவக்
காற்றொழிலானயனத்தால் விரலாற்கற்றைக்
கதிர்முடியாற்கரதலத்தாற் கணையாற்பின்னும்
ஊற்றழியவுதைத்தெரித்து நெரித்துச்சூடி
உரித்தெரித்தானவனென்னை யுடையகோவே.

இ-ள். எற்று-எதிர்த்து. கூற்றுவனை-யமனையும், வில்மதனை - கருப்பு வில்லையுடைய மன்மதனையும், அரக்கர்கோவை - அரக்கருக்கரசனாகிய ராவணனையும், கூன்நிலவை - வளைவாகிய பிறைச்சந்திரனையும், குஞ்சரத்தை-யானையையும், இஞ்சிமூன்றை - மும்மதில்களையும், உலகு இன்புஉற-உலகம் இன்பமடையவும், உருவம்மாள-உருவமழியவும், தோள்கள் இற-புயங்கள் முறியவும், எறிப்ப-விளங்கவும், இமையப்பெண்வெருவ - உமாதேவியஞ்சவும், வேவ-வெந்து நீறாகவும், கால்தொழிலால்-காலின் தொழிலினாலும், நயனத்தால்-கண்ணினாலும், விரலால்-கால்விரலினாலும், கற்றை கதிர்முடியால் - திரட்சியாகிய ஒளியுள்ள சடாமகுடத்தாலும், கரதலத்தால்-கைத்தலத்தாலும், கணையால்-அம்பினாலும், பின்னும் ஊற்று அழிய-மேலும் சுரப்பற்றொழியும்படி, உதைத்து-உதைத்தும், எரித்து எரித்தும், நெரித்து-நெரித்தும், சூடி-சூடியும், உரித்து-உரித்தும், எரித்தான்-எரித்தவனும் ஆகிய, அவன்-அவனே, என்னை உடையகோ-என்னை-யடிமையாகவுடைய இறைவன். எ-று.

கூற்றுவனை உலகின்புற காற்றொழிலால் உதைத்து என்றும், வின்மதனை உருவமாள நயனத்தால் எரித்து என்றும், அரக்கர்கோவை தோள்களிற விரலால் நெரித்து என்றும், கூனிலவை எறிப்ப கற்றைக் கதிர்முடியால்கூடி என்றும், குஞ்சரத்தை இமையப்பெண்வெருவ கரதலத்தால் உரித்து என்றும், இஞ்சிமூன்றைவேவ கணையால் எரித்தான் என்றும் இயைத்துப் பொருளுரைத்துக் கொள்க. குஞ்சரம் என்றது - கயாசுரனை. இஞ்சிமூன்று என்றது திரிபுரங்களை.

நிரனிறைப்பொருள்கோள்.

163. பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக்காவைப்
பொருசிலையைச் சனகடலைப் பொன்னனீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காயை வருக்காய்க்காதல்
நப்பினைக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற்புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்களாலும்

முன்னுடற்கீறிச்சரங்கொண்டமரில்வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூரானே.

இ-ள். பொன்னனை-இரணியனையும், வாள் அரக்கனை - வாட்படையையுடைய அரக்கனாகிய ராவணனையும், நூற்றுவரை - துரியோதனன் முதலிய நூற்றுவரையும்-காவை, பாரிசாதமரச் சோலையையும், பொருசிலையை-போர்புரிதற்குரியவில்லையும், கனைகடலை - ஒலிக்கின்ற கடலையும், பொன்னன் ஈன்றநல் மகற்காய் - இரணியன்பெற்ற சற்புத்திரனாகிய பிரகலாதனன் பொருட்டாகவும், சுரர்க்காய் - தேவர்க்காகவும், ஐவருக்காய்-பஞ்சவர்பொருட்டாகவும், காதல் நப்பினைக்காய் - அன்புள்ள நப்பின்னைப் பிராட்டிக்காகவும், சானகிக்காய்-சீதாபிராட்டியின் பொருட்டாகவும், நடவைக்காக-வழியுண்டாகும் பொருட்டாகவும், மன்உகிரால் - நிலைபெற்ற நகத்தாலும், வடிக்கணையால் - வடித்தமைந்த அம்பினாலும், வளையால்-சங்கத்தொனியினாலும், புள்ளால்-பறவையாலும், வயங்குதோள்வலியால்-விளங்குகின்ற புஜபலத்தினாலும், வாநரங்களாலும்—, முன் - முற்காலத்தில், உரம்கீறி-மார்பைப்பிளந்தும், சிரங்கொண்டு - தலையையறுத்தும், அமரில்வீழ்த்தி-யுத்தகளத்தில் விழுத்தியும், முதலொடுங்கொண்டு - வேரோடு பெயர்த்தெடுத்தும், இறுத்து-ஒடித்தும், அடைத்த- திருவணைகட்டித்தடுத்த, மோகூரானே, திருமோகூரிலெழுந்தருளிய இறைவனே. எ-று.

பொன்னுக்கு இரணியம் என்றுபெயராதலால், பொன்னன் என்றது இரணியனுக்காயிற்று.

பொன்னனை நன்மகற்காய் மன்னுகிரால் உரங்கீறிஎன்றும், வாளரக்கனை சுரர்க்காய் வடிக்கணையால் சிரங்கொண்டு என்றும், நூற்றுவரை ஐவருக்காய் வளையால் அமரில்வீழ்த்தி என்றும், காவை காதனப்பினைக்காய் புள்ளால் முதலோடுங் கொண்டு என்றும், பொருசிலையை சானகிக்காய் வயங்கு தோள்வலியால் இறுத்துஎன்றும், கனைகடலை நடவைக்காக வானரங்களால் அடைத்த என்றும், இயைத்துப் பொருளுரைத்துக் கொள்க.

வீரசென்னன் என்னும் வடுகப்பிராமணன் வீட்டில்
உண்ட கூழைக்குடித்துப்பாடியது.

164. ஏழாளையடித்தபுலிதன்னை யடித்தான் வீரசென்னனென்றேகாட்டில், வாழாமற்சிறுபுலிக ளீப்புலியோ டெலிப்புலியாய் வடிவங்கொண்டு, பாழாகிக் காடெல்லாம் பரதவிக்க வடுகரடிப்படியிடு வந்து, கூழாகி வயிற்றினிற் போம்பொழுதும் குணம்போகாமற் குமுறுங்காணே.

இ-ள். ஏழ் ஆளை அடித்தபுலிதன்னை-ஏழாட்களைக் கொன்ற புலியை, வீரசென்னன் அடித்தான்என்று-வீரசென்னன் கொன்றானென்று (அஞ்சி) சிறுபுலிகள்-சிறியபுலிகள், காட்டில்வாழாமல்-காட்டில் தங்காமல், ஈப்புலியோடு எலிப்புலியாய் வடிவங்கொண்டு-ஈப்புலிகளோடு எலிப்புலியின் வடிவங்கொண்டு, காடுஎல்லாம் பாழ்ஆகி - காடுமுழுதும் பாழ்பட்டு, பரதவி

க்க-வருந்த, வடுகர் அடுப்பு அடியில்வந்து கூழ்ஆகி-வடுகருடைய அடுப்பினடியில்வந்து கூழினுருவமாகி, வயிற்றினில் போம்பொழுதும்—, குணம் போகாமல்-பழையகுணம்நீங்காமல், குமுறும்-முழங்கும். எ-று.

ஏழாட்களைக் கொன்றபுலியை வீரசென்னன் கொன்றானென்னுஞ் செய்தியைக் காட்டில்வாழ்கின்ற மற்றைப்புலிகள்கேட்டு அஞ்சி, ஈப்புலியும் எலிப்புலியுமாய் வடிவங்கொண்டு ஊரில்வந்து வீடுகளில்சஞ்சரிப்பதுமன்றி, இன்று கூழுருவெடுத்து வடுகருடைய அடுப்படியினின்றும் என்வயிற்றிற் புகுந்தது. ஆனால், அப்படிபுகும்பொழுதும் தமது பழையகுணமாகிய குமுறலையொழிந்திலது, என்பதாம்.

இடைச்சிமிகுதியாய்த் தண்ணீர்கலந்தமோரைக்
கொடுத்தபோதுபாடியது.

165. காரென்றுபேர்படைத்தாய்ககனத்துறும்போது
நீரென்றுபேர்படைத்தாய்நெடுந்தரையில்வந்ததற்பின்
வாரொன்றுமென்முலையாராய்ச்சியர்கைவந்ததற்பின்
மோரென்றுபேர்படைத்தாய்முப்பேரும்பெற்றாயே.

இ-ள். ககனத்து உறும்போது-ஆகாயத்திலிருக்கும்போது, கார் என்றுபேர் படைத்தாய்-மேகமென்று பேர்படைத்தாய், நெடுந்தரையில் வந்ததற்பின்-பெரியபூமிக்கு வந்த பிறகு, நீர்என்று பேர்படைத்தாய்-நீரென்று பேர்படைத்தாய், வார்ஒன்றும் - கச்சுப்பொருந்திய, மெல்முலையார் மெல்லிய தனங்களையுடையவராகிய, ஆய்ச்சியர் கைவந்ததற்பின்-இடைச்சிமார் கையில்வந்தபிறகு, மோர்என்று பேர்படைத்தாய் - மோரென்று பேர்படைத்தாய் (ஆதலால்,) முப்பேரும்பெற்றாய் - மூன்றுபேர்களும் படைத்தாய். எ-று.

செட்டிகள் இவரைக்கண்டு தம்முள் பரிபாஷைபாய்ப்
பேசிக்கொண்டதைக்குறித்துப்பாடியது.

166. கருந்தலைசெந்தலைதங்கான்றிரிக்கால்கடையிற்சுற்றி
வருந்திக்குடவற்குந்தாட்டிக்குங்கொத்திட்டுமாய்வதல்லால்
கரந்தைகளாண்டிலொருக்கால்வருவதுகண்டிருந்தும்
அரும்புக்குங்கொத்துக்கும்வந்தார்பிழைப்பதரிதென்பரே.

இ-ள். கரந்தைகள் - குருக்கள், ஆண்டில் ஒருக்கால் வருவது கண்டிருந்தும்-வருஷத்திலொருதரம் வரப்பார்த்திருந்தும், (அவ்வாறு செய்யாமல் அடிக்கடிவருகிறார் என்றுநினைத்து) கருந்தலை-கால், செந்தலை-அரைக்கால், தங்கான்-அரை, திரிக்கால் முக்கால், (இந்தத்தொகைகளைப்பெற) கடையில் சுற்றிவருந்தி-கடைகளில் சுற்றிவருந்தி-குடவற்கும்-தேவடியாளுக்கும், தாட்டிக்கும் - வைப்பாட்டிக்கும், கொத்து இட்டு மாய்வது அல்லால்-சோறிட்டுமடிவதேயல்லாமல், அரும்புக்கும்-அரிசியின்பொருட்டும், கொத்துக்கும்-சோற்றின் பொருட்டும், வந்தார் - வந்துவிட்டார், பிழைப்பது(இனிநாம் பிழைப்பது, அரிது என்பர் - அருமையாகுமென்று சொல்லுவர்) எ-று.

திம்மியென்னும் தெலுங்கத்தேவடியாள் மரியாதையின்றிப் பேசினதைக்குறித்துப் பாடியது.

167. ஏமிராவோரியென்பாளெந்துண்டிவஸ்திவென்பாள்
தாமிராச்சொன்னவெல்லாந்தலைகடைதெரிந்ததில்லை
போமிராச்சூழுஞ்சோலைபொருகொண்டைத்திம்மிகையில்
நாமிராப்பட்டபாடுநமன்கையிற்பாடுதானே.

இ-ள். ஏமிரா ஓரி என்பாள்-அடே என்னடா என்பாள், எந்து உண்டிவஸ்திவி என்பாள் - எங்கிருந்துவந்தாய் என்பாள், தாம் இராசொன்ன எல்லாம்-அவள் இராத்திரிசொன்ன சொற்களெல்லாம், தலைகடை தெரிந்த தில்லை-முதல் இறுதிகள் அறியப்பட்டதில்லை, போம் இராசூழும் சோலைபொரு-மிகுந்த இருளையும் நெருங்கியசோலையையுமிகர்த்த, கொண்டை கொண்டையையுடைய, திம்மிகையில் - திம்மி என்பவள் கையில், நாம் இராபட்டபாடு - யாம் ராத்திரிபட்டதுன்பம், நமன்கையில்பாடுதானே-யமன்கையில் அகப்பட்டு அடைந்த துன்பமேயாம். எ—று.

தன்னை ஏளனம்செய்த பாடத்தெரியாத கிழத்தாசியை நிந்தித்துப் பாடியது.

168. இந்துமுடிக்குஞ்சடையாளரிருக்குந்தொண்டைவளநாட்டில்
சிந்துபடிக்கக்கவிபடிக்கத்தெரியாமடவாயுன்றனக்குக் [தும்
கெந்தபொடியேன் பூமுடியேன்கிழமாய்நரைத்துமுகந்திரைந்
இந்தமுறுக்கேன்வீறுப்பேனெடுப்பேனுன்னைக்கொடுப்பேனே.

இ-ள். இந்துமுடிக்கும் சடையாளர் - சந்திரனையணிந்த சடாபாரத்தையுடைய சிவபெருமானவர், இருக்கும்-வாழ்கின்ற, தொண்டைவளநாட்டில்-சிந்துபடிக்க - சிந்துபடிக்கவும், கவிபடிக்க-கவிபடிக்கவும், தெரியா-அறியாத, மடவாய்-பெண்ணே, உன்தனக்கு-உனக்கு, கெந்தபொடி என்-கெந்தபொடியாதுக்கு, பூமுடி என்-பூமுடித்தல் யாதுக்கு, கிழம் ஆய் நரைத்தும் முகம் திரைந்தும் - கிழப்பருவம் வந்து மயிர்நரைத்து முகம் தோல் திரைந்தும், இந்த முறுக்கு என்—, வீறுப்புஏன்—, எடுப்பேன் உன்னைக்கொடுப்பேன்—, எ-று.

169 ஏறுகட்டிய கொட்டிலரங்கமே யீரிரண்டுமுகன்வாயிலாயமே,
மாறுகண்ணப்பன் வாய்மடப்பள்ளியே வாய்த்தவேடை திருமால்வதனமே, வீறுசேர்சிறுத்தொண்டனில்லாளுந்திவேட்டை
நற்கறி காய்க்கின்றதோட்டமே, நாறுபூம்பொழில்சூழ் தில்லையம்பலநாரிபாகற்கு நாடகசாலையே.

இ-ள். நாரிபாகற்கு- உமாதேவியை இடதுபாகத்தினுடைய சிவபெருமானுக்கு, அரங்கம்-திருவரங்கமானது, ஏறுகட்டியகொட்டில்-இடபத்தைக்கட்டிவைத்த தோழமாகும், ஈரிரண்டு முகன்வாய் - நான்கு முகங்களையுடையவனாகிய பிரமனது வாயானது, இலாயம்-குதிரைப்பந்தியாகும், மாறுகண்ணப்பன்வாய் - ஊனமாயிருந்த கண்ணுக்குப் பிரதியாகத் தன் கண்ணைத்தோண்டி அப்பினவனாகிய கண்ணப்பநாயனாரது வாயானது, மடைப்பள்ளி-மடைப்பள்ளியாகும், திருமால்வதனம்-திருமாலின் முகமானது, வாய்த்த ஓடை-மாட்சிமைப்பட்ட குளமாகும், வீறுசேர்சிறுத்தொண்டன் இல்லாள் உந்தி - மேன்மை பொருந்திய சிறுத்தொண்ட நாயனாரது மனைவியின் வயிறானது, வேட்ட நல்கறிகாய்க்கின்ற தோட்டம்-விரும்பிய நல்லகறிகள் காய்க்கின்ற கொல்லையாகும், நாறுபூம்பொழில்சூழ் தில்லையம்பலம் - மணக்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த தில்லைப்பொன்னம்பலமானது, நாடகசாலை-நடனசபையாகும். எ-று.

திரிபுரசங்கார காலத்தில் திருமால் இடபமாயிருந்தாராதலாலும், அவருக்கு இடமாயிருப்பது திருவரங்கமாதலாலும், "ஏறுகட்டிய கொட்டிலரங்கமே" என்றும்; வேதங்கள் பிரமனதுவாயில்தங்குதலாலும்; அவைசிவபெருமானுக்குக் குதிரைகளாதலாலும். "ஈரிரண்டு முகன்வாயிலாயமே" என்றும்; கறியைமென்று பதமாக்கிக்கொடுத்தது "கண்ணப்பன்வாயாதலால், கண்ணப்பன்வாய்மடைப்பள்ளியே" என்றும்; திருமால் நாடோறும் ஆயிரம் தாமரைமலர்களால் அருச்சித்துவந்து ஒருநாள் ஒருமலர் குறைதலும், அதற்குப் பிரதியாகத் தன்முகத்திலுள்ள கண்ணைப்பிடுங்கி அருச்சித்ததனால், "ஓடை திருமால் வதநமே" என்றும்; சிறுத்தொண்டன்மனைவியின் வயிறானது கறியாகச் சமைத்துப் படைத்தற்குறிய புதல்வனைப் பெற்றவயிறாதலால், "சிறுத்தொண்டனில்லாளுந்திவேட்டநற்கறிகாய்க்கின்ற தோட்டமே" என்று கூறினர்.

முற்றிற்று.

ஔவையார்.

சேரமான் பெருமாணயனுர் பொன்வண்ணத் தந்தாதியையும் ஆதியுலாவையும்பாடித் திருக்கைலாயத்தில் சிவபெருமான் சந்நிதியில் அரங்கேற்றப்போகும்போது சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் அழைத்துக்கொண்டு, விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாரையும் தம்முடன் வரும்படி யழைத்தனர். ஔவையார் விநாயகர் பூசையைச் சீக்கிரத்தில் முடித்துப்போக நினைத்தார். அந்த நினைப்பை விநாயகக்கடவுளறிந்து, அவர்களுக்குமுன் உன்னைக் கைலாயத்தில் சேர்க்கிறேன், அவசரப்படாமல் பூசைசெய்யென்று கட்டளையிட, ஔவையாரும், அந்தப்படியே விரையாமல் பூசித்து சீதக்களப என்னும் அகவலைப்பாடித் துதித்தனர். உடனே விநாயகர் விசுவரூபங்கொண்டு ஔவையாரைத் தம் துதிக்கையாலேந்திக் கைலாயத்தில் விடுத்தனர். தமக்கு முன் ஔவையார் வந்திருப்பதைக்கண்டு சேரமான் பெருமாணயனுர் வினவினபோது பாடியது.

1. மதுரமொழிநல்லுமையாள்புதல்வன்மலர்ப்பதத்தை
முதிரநினையவல்லார்க்கரிதோமுகில்போன்முழங்கி
அதிரவருகின்றயானையுந்தேருமதன்பின்சென்ற
குதிரையுங்காதங்கிழவியுங்காதங்குலமன்னனே.

இ-ள். குலமன்னனே - சிறப்பையுடைய வேந்தனே, மதுரமொழி-இன்சொல்லையுடைய, நல் உமையாள் புதல்வன் - நன்மையைத் தருகின்ற உமாதேவிக்குப் புத்திரனாகிய விநாயகக்கடவுளின், மலர்பதத்தை - தாமரைமலர்போலுந் திருவடியை, முதிரநினைய வல்லார்க்கு-மிகுதியாக நினையவல்லவர்க்கு, அரிதோ - (இப்படி முந்திவந்திருப்பது) அரிதாகுமோ, முகில்போல்முழங்கி-மேகம்போல் கர்ச்சித்து, அதிரவருகின்ற-(பூமி அதிரும்படி) நடந்துவருகின்ற, யானையும்-யானையும், தேரும்-இரதமும், அதன்பின் சென்ற குதிரையும்-அதன்பின்போன குதிரையும், காதம் - (நடப்பது) காததூரமே, கிழவியும் காதம்-கிழவியாகிய நானும் (நடந்தது) காததூரமே. எ-று.

சோழன் ஔவையைநோக்கி நீயெங்கிருந்து வந்தாயென்று
கேட்கப் பாடியது.

2. காலொந்தே னொந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான் வந்த தூரமெளிதன்று—கூனல்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்.

இ-ள். கால் நொந்தேன் நொந்தேன் - கால் வருந்தினேன் வருந்தினேன், கடுகி வழிநடந்தேன்-விரைந்து வழிநடந்தேன், யான்வந்த தூரம் எளிது அன்று-நான் வந்ததூரம் எளிதல்ல, கூனல் - சங்கானது, கருந்தே

னுக்கு அண்ணுந்த-பெரியதேனின்பொருட்டு நிமிர்ந்த, காவிரிசூழ் நாடா-காவிரியாறு சூழ்ந்த நாட்டையுடைய சோழனே, இருந்தேனுக்கு-இப்படியிருந்த எனக்கு, இடம் எங்கே-இடம் எவ்விடத்தே. எ-று.

நான் இருப்பது இன்னவிடம் என்றில்லை என்பது கருத்து.

சோழன் ஔவையென்றறியாமல் கம்பர்பாட்டை

வியந்தபோது பாடியது.

3. விரகர்இருவர்புகழ்ந்திடவேவேண்டும்
விரனிறையமோதிரங்கள்வேண்டும்-அரையதனில்
பஞ்சேனும்பட்டேனும்வேண்டுமவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனுநன்கு.

இ-ள். விரகர் இருவர் - விவேகியர் இருவர், புகழ்ந்திடவேண்டும்-(உடனிருந்து) புகழவேண்டும், விரல்நிறைய மோதிரங்கள்வேண்டும்-விரல்கள்நிரம்ப மோதிரங்கள் அணிந்திருக்கவேண்டும், அரையதனில்-இடையில், பஞ்சேனும் பட்டேனும்வேண்டும் - நூலாடையாயினும் பட்டாடையாயினும் (அலங்காரமாக அணிந்திருக்க) வேண்டும், (இப்படியொருவரிருப்பாராயின்), அவர் கவிதை - அவர் பாடியபாடல், நஞ்சேனும் வேம்பேனும்-விஷமாயிருப்பினும், வேம்பாயிருப்பினும், நன்கு-அழகிதே. எ-று.

சோழன் கம்பர்போலப் பாரகாவியம் பாடுவோர் ஒருவருமில்லை

என்றுசொன்னபோது பாடியவை.

4. வான்குருவியின்கூடுவல்லரக்குத்தொல்கறையான்
தேன்சிலம்பியாவர்க்குஞ்செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோமேயென்றுவலிமைசொலவேண்டாங்காண்
எல்லார்க்குமொவ்வொன்றெளிது.

இ-ள். வான் குருவியின் கூடு-சிறந்த குருவிக் கூடும், வல் அரக்கு-வன்மையாகிய அரக்கும், தொல்கறையான்-பழமையாகிய சிதலும், தேன்-தேனும், சிலம்பி-சிலம்பிப்பூச்சியின்கூடும், யாவர்க்கும்செய் அரிது-எவர்க்கும் செய்வது அருமையாகும், (ஆதலால்) யாம்பெரிதும் வல்லோம் என்று-நாம்மிகவும் வல்லோமென்று, வலிமை சொல்ல வேண்டாம்-வன்மை பேசவேண்டாம், எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது - யாவர்க்கும் ஒவ்வொரு காரியஞ்செய்தல் எளிதாகும். எ-று.

5. சித்திரமுங்கைப்பழக்கஞ்செந்தமிழுநாப்பழக்கம்
வைத்ததொருகல்விமனப்பழக்கம்-நித்தம்
நடையுநடைப்பழக்கநட்புந்தயையும்
கொடையும்பிறவிக்குணம்.

இ-ள். சித்திரமும் கைப்பழக்கம் - சித்திரமெழுதுவதும் கைப்பழக்கமாகும், செந்தமிழும் நாபழக்கம்-செந்தமிழ்த்தேர்ச்சியும் நாவினது பழக்கமாகும், வைத்ததொருகல்வி மனப்பழக்கம் - வைத்ததோர்கல்வி மனப்பழக்கத்தினுலுண்டாகும், நித்தம்-நாள்தோறும், நடையும் - நடத்தலும், நடைப்பழக்கம்-நடத்தற்பழக்கமாகும், நட்பும்-நட்புக்குணமும்,தயையும்-கருணையும், கொடையும்-ஈகையும், பிறவிக்குணங்களாம். எ-று.

வலியோரைக்கண்டால் மெலியோர் அஞ்சுவர்எனப்பாடியது.

6. காணுமல்வேணதெல்லாங்கத்தலாங்கற்றோர்முன்
கோணுமல்வாய்திறக்கக்கூடாதே-நாணுமல்
பேச்சுப்பேச்சென்னும்பெரும்பூனைவந்தக்கால்
கீச்சுக்கீச்சென்னுங்கிளி.

இ-ள். காணுமல்-பாராமல், வேணது எல்லாம் கத்தலாம்-வேண்டியவைகளையெல்லாம் கத்தலாகும், கற்றோர்முன் - கற்றவர்களுக்கெதிரில், கோணுமல் வாய்திறக்கக்கூடாது-நாணுமல் வாய்திறக்க வொண்ணுது, கிளி-கிளிப்பிள்ளையானது, நாணுமல்-வெட்கப்படாமல், பேச்சுபேச்சு என்னும்-பலபேச்சுகள் பேசும், பெரும்பூனை வந்தாக்கால் - பெரியபூனைவந்து எதிர்ப்பட்டால் கீச்சு கீச்சு என்னும் - கீச்சு கீச்சு என்று (அச்சத்தால்) கூவும். எ-று.

மனிதர்களுக்கு இவை அழகாம் எனப்பாடியது.

7. சுரதந்தனிலிளைத்ததோகைசுகிர்த
விரதந்தனிலிளைத்தமேனி-நிரதம
கொடுத்திளைத்ததாதாகொடுஞ்சமரிற்பட்ட
வடுத்துளைத்தகல்லபிராமம்.

இ-ள். சுரதம்தனில் இளைத்ததோகை - கலவியினுல்மெலிந்த மாதினது கூந்தலும், சுகிர்தவிரதம்தனில் இளைத்தமேனி-புண்யவிரதங்களால் மெலிந்தமேனியும், நிரதம்-எப்பொழுதும், கொடுத்துஇளைத்ததாதா-கொடுத்து மெலிந்த கொடையாளியினது, கொடுசமரில்பட்ட - கொடுமையாகிய யுத்தத்தில் பட்ட (வீரத்தன்மையைக் குறித்தெழுதப்பட்ட) வடுதுளைத்தகல்-வடுவாகத்தொளைக்கப்பட்ட கன்னிற்றலும், அபிராமம் - அழகாகும். எ-று.

பெண்களுக்கு இம்மைப்பயனுகிய நன்மக்கட்பேறு கருதிச்செய்யும் கலவியும், மறுமைப்பயனுக் குதவுவதாகிய விரதாதிகளை யனுஷ்டித்தலும் அழகாகும், புருடருக்கு இம்மைப்பயனுகிய புகழ்கருதிச்செய் தானமும், மறுமைப்பயனுகிய வீரசொர்க்கங் கருதிப் போரிற்பின்னிடாது நின்று போர்செய்து தமதுவீரமுதலியவற்றை யெழுதின கல்லில்நிற்றலும், அழகாகும் என்பதுகருத்து. கொடையாளியினது கல் என இயைக்க.

சற்பாத்திரத்தில் செலவழியாத செல்வம் வீணில்
அழியும் எனப்பாடியது.

8. நம்பனடியவர்க்குநல்காத்திரவியங்கள்
பம்புக்காம்பேய்க்காம்பரத்தையர்க்காம்-வம்புக்காம்
கொள்ளைக்காங்கள்ளுக்காங்கோவுக்காஞ்சாவுக்காம்
கள்ளர்க்காந்தீக்காகுங்காண்.

இ-ள். நம்பன் அடியவர்க்கு - சிவனடியார்க்கு, நல்கா திரவியங்கள்-கொடாததிரவியங்கள், பம்புக்கு ஆம்-குனியத்துக்குதவும், பேய்க்குஆம்-பிசாசத்துக்குதவும், வம்புக்காம்-வீண்காரியங்களுக்குதவும், கொள்ளைக்கு ஆம்-(திருடர்) கொள்ளையிடுதற்குதவும், கள்ளுக்கு ஆம்-கள்ளுண்டற்குதவும், கோவுக்குஆம்-அரசனுக்குதவும், சாவுக்கு ஆம் - இழவுக்குதவும், கள்ளர்க்காம். கள்ளருக்குதவும், தீக்கு ஆகும் - நெருப்பில் அகப்பட்டு அழியும். எ-று.

ஒருகுறவனுக்கு இரண்டுபேர் மனைவிமார் இருந்தனர். அவர்களுள் இளையவள்மீது அவனுக்கு அதிகவிருப்பம்; அவன் ஒருநாள் ஒருத்திப்போம்போது மனைவியரைநோக்கி, நான் அன்பாகவளர்க்கிற இந்தப் பலாவை நீங்களிருவரும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்களென்று சொல்லிப்போயினன். இளையவள் அந்த மரத்தை வெட்டிவிட்டு மூத்தவள்மேல் பழிசுமத்தினள். குற்றமற்றவளாகிய மூத்தவள், கணவன் என்னசெய்வானோ என்று துக்கித்துக்கொண்டிருந்தாள். அவளை ஔவை நோக்கி வினவிச்சங்கதி தெரிந்துகொண்டு

பலாமரம் தழைக்கப்பாடியது.

9. கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றாயுயர்மரமாய்ச்-சீரியதோர்
வண்டுபோற்கொட்டையாய் வண்காவாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோனிற்க பலா.

இ-ள். கூரியவாளால்-கூர்மையாகிய வாளினால், குறைத்திட்ட-வெட்டிவிட்ட, கூன்பலா-வளைவாகிய பலாமரமானது, ஓர்இதழ் ஆய் - ஓரிதழாகி, கன்றாய்-கன்றாகி, உயர்மரம் ஆய்-உயர்ந்தமரமாகி, சீரியது ஓர்வண்டுபோல் கொட்டை ஆய்-சிறந்ததாகிய ஒருவண்டினுருவம்போலக்கொட்டையையுடையதாகி, வள்காய் ஆய்-வளமாகியகாய்களையுடையதாகி, தின்பழம் ஆய்-உண்ணும் கனிகளையுடையதாகி, (பார் - உலகில்) பண்டுபோல் நிற்க முன்னிருந்ததுபோலவே நிலைபெற்றிருக்க. எ-று.

ஔவையின் கையிலிருந்த மூட்டையைச் சோழன்பார்த்து
அது என்னென்று கேட்டபோது பாடியது.

10. கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள்-சோழகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம்.

இ-ள். கூழைப்பலா தழைக்கப்பாட-தறிபட்ட பலாமரம் தழைக்கும்படி நான்பாட, குறமகளும்-குறப்பெண்ணும், மூழக்குழக்கு - மூவுழக்கு என்னும் அளவுள்ள, தினைதந்தாள்-தினையரிசியைக்கொடுத்தாள், சோழ கேள்-சோழனேகேட்பாயாக, உப்புக்கும்பாடி-உப்பின்பொருட்டும்பாடி, புளிக்கும்-புளியின்பொருட்டும், ஒருகவிதை-ஒருபாடலை, என்றன் உள்ளம் ஒப்பிக்கும்-என்மனமானது ஒப்பியாநிற்கும். எ-று.

ஒப்பிக்கும்-பாடும் என்றபடி.

ஒருவன் ஔவைக்கு அமுதுபடைக்க வேண்டுமென்று மனைவியோடு
சொல்ல, அவள்செய்த காரியங்களைப்பற்றிப் பாடியது

11. இருந்து முகந்திருத்தி யீரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப-வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தால்
சாடினா ளோடோடத் தான்.

இ-ள். இருந்து-அருகிலிருந்து, முகந்திருத்தி-முகத்தைத்துடைத்து, ஈரொடுபேன் வாங்கி-ஈருடனே பேனையும் உருவியெடுத்து, விருந்துவந்தது என்று விளம்ப-விருந்துவந்ததென்று (கணவன்) சொல்ல, (மனைவியானவள்) மிகவருந்தி - மிகவருத்தப்பட்டு, ஆடினாள்—, பாடினாள்—, ஆடி—, ஓடோட-(அவன்) ஓடவோட, பழமுறத்தால் சாடினாள்-பழமுறத்தைக்கொண்டு (அவனை) அடித்தாள். எ-று.

இருந்தங் கிதம்பேசி யீருரீஇப் பேன்பார்த்து, விருந்துவந்ததன்பன் விளம்ப என்றும் பாடமுண்டு.

ஒருத்தி, தன்கணவன் வேண்டிக்கோடலால் வெறுப்போடு
ஔவைக்கு அன்னமிட, அவளது அன்பின்மை
யைக் குறித்துப் பாடியது.

12. காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது.

இ-ள். ஐயையோ—, அன்பு இல்லாள் இட்ட அமுது - அன்பில்லாதவள் படைத்த அன்னத்தை, காண-பார்க்க, கண்கூசுதே-கண் கூசாநின்றதே, கை எடுக்க நாணுதே-கையானது எடுத்தற்கு நாணாநின்றதே, மாண் ஒக்கவாய்திறக்கமாட்டாதே-மாட்சிமைபொருந்தவாயானது அங்காத்தல் செய்யாதே, வீணுக்கு-வீணாக, என்-எனது, என்பு எல்லாம்-எலும்புகளெல்லாம், பற்றி எரிகின்றது-பற்றி எரியாநின்றது. எ-று.

ஒரு அவிவேகிக்கு வாழ்க்கைப்பட்டிருந்தசற்குணமுள்ள ஒரு பெண்ணைக்கண்டிரங்கிப் பிரமனைநிந்தித்துப் பாடியது.

13. அற்றதலைபோகவறாததலைநான்கினையும்
பற்றித்திருகிப் பறியேனோ-வற்றும்
மரமனையானுக்கிந்தமானைவகுத்திட்ட
பிரமனையான்காணப்பெறின்.

இ-ள். வற்றும்மரம் அனையானுக்கு-உலர்ந்த மரத்தை யொத்தவனுக்கு, இந்த மானை வகுத்திட்ட-இந்தப் பெண்ணையுண்டாக்கிவைத்த, பிரமனை-பிரமதேவனை, யான்காணப்பெறின்-நான் காணப்பெற்றால், அற்ற-தலைபோக (முன்பே) அறுபட்ட தலையொன்றும் ஒழிய, அறாததலை நான்கினையும்-அறுபடாத நான்கு தலைகளையும், பற்றி திருகிபறியேனோ-பிடித்துத் திருகிப் பிடுங்கேனோ. எ-று.

நற்குண நற்செய்கைகளில்லாத மனையாளோடுகூடி வாழ்தலினும் இல்வாழ்க்கையைத் துறப்பதே நன்றெனப்பாடியது.

14. பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தா லுங் கூடி யிருக்கலாம்-சற்றேனும்
ஏறுமா றாக விருப்பாளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள்.

இ-ள். பத்தாவுக்கு ஏற்ற-கணவனுக்குத்தக்க, பதிவிரதை உண்டானால்-கற்புடைய மனைவியுண்டாயிருந்தால், எத்தாலும் - எவ்வழியாலும், கூடி இருக்கல் ஆம்-சேர்ந்திருக்கலாம், சற்றேனும்-சிறிதாயினும், ஏறுமாறாக இருப்பாளேயாமாயின் - ஏறுமாறாக இருந்தாளேயாயின், கூறாமல்-ஒருவரோடும் சொல்லாமல், சந்நியாசம்கொள்-துறவைக்கைக்கொள்வாய்

15. சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே-தொண்டர்
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

இ-ள். சண்டாளி-இழிந்த செய்கையுடையவளே, சூர்ப்பநகை தாடகை யைப்போல் வடிவு கொண்டாளே-சூர்ப்பநகையும் தாடகையும்போல உரு வமுடையவளே, பெண்டென்று கொண்டாயே-மனைவியாகப் பெற்றாயே, தொண்டர்செருப்பு அடிதான் சொல்லா உன் செல்வம் என்ன செல்வம்-அடியாருடைய செருப்பின் அடிக்கும் ஈடாகாத உன்னுடைய செல்வமும் ஒருசெல்வமா, (இதனினும்) நெருப்பிலே வீழ்ந்திடுதல்நேர்-நெருப்பிலே விழுந்து இறத்தலே தகுதியுடையதாம். எ-று.

சிலம்பியென்னுந் தாசி ஐந்நூறு பொன்கொடுக்கக் கம்பர்பாடிய

அரைப்பாடலை ஔவை கூழுக்கு முழுப்பாடலாகப் பாடியது.

16. தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

இ-ள். தண்ணீரும்-தண்ணீராவதும், காவிரியே-காவிரிநதியே, தார் வேந்தன்-மாலையை யணிந்த அரசனாவான், சோழனே-சோழனே யாவான், பெண் ஆவாள்-பெண்ணென்று சொல்லப்படுவாளும், அம்பொற்சிலம் பியே-அம்பொற்சிலம்பியென்பவளே, சிலம்பு - சிலம்பாவது, அரவிந்தம் தாள் அணியும்-(அவளது) தாமரைமலர்போன்ற பாதத்தில் தரிக்கப்படு கிற, செம்பொன் சிலம்பே - செம்பொன்னாற் செய்யப்பட்ட சிலம்பேயா கும். எ-று.

கம்பன்பொறாமையால் ஔவையை அடியென்று சொல்ல விரும்பி

ஒருகாலடி நாலிலைப்பந்தலடியென்று சிலேடையாகச்

சொல்லிப் பொருள் கேட்டபோது பாடியது.

17. எட்டேகா லட்சணமே யெமனே றும்பரியே
மட்டில் பெரியம்மைவாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்ன யடா.

இ-ள். எட்டேகால் லக்ஷணமே-அவலக்ஷணமே, எமன் ஏறும்பரியே-இயமன் ஏறுகின்றவாகனமாகிய எருமைக்கடாவே, மட்டு இல்பெரியம்மை வாகனமே-அளவு இல்லாத மூதேவிக்கு வாகனமாகிய கழுதையே, முட்ட மேல் கூரை இல்லாவீடே-முழுதும் கூறையில்லாத வீடாகிய குட்டிச்சுவரே, குலராமன் தூதுவனே-மேன்மையாகிய ஸ்ரீராமதூதனாகிய ஆஞ்சநே யனே (குரங்கே), ஆரை அடா சொன்னாய் அடா-ஆரைக்கீரையடா சொன்னாய் அடா. எ-று.

செருமலைத் தெய்வீகனுடைய திருக்கோவலூரில், பெண்ணைநதிக்குத் தென்கரையில் குடிசை போட்டுக்கொண்டிருந்த பாரியென்னும் இடையன் வீட்டிற்கு, ஔவை மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டுபோயினள். அந்தவீட்டில் கலியாணமில்லாதிருந்த அங்கவை சங்கவையென்னும் இரண்டு பெண்கள், தமது சிற்றாடையைக் கொடுத்து நெருப்பில் குளிர்காயச்செய்து, முருங்கைக்காயை நெய்விட்டு விருந்திட்டார்கள். அப்போது

அவர்களைப் புகழ்ந்து
பாடியது.

18. வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி யமுதத்தையிட்டார்
கடகஞ் செறிந்தகையார்.

இ-ள். கடகம் செறிந்தகையார்-கடகம்பொருந்திய கையினையுடையவராகிய அங்கவை சங்கவையென்பவர், வெய்தாய்-சூடுள்ளதாய் - நறுவிதாய் - நன்மணமுள்ளதாய், வேண்டளவும் தின்பதாய் - வேண்டுமளவும் உண்ணப்படுவதாய், நெய்தான் அளாவி-நெய்யோடுகலந்து, நிறம்பசந்த-, நிறத்தாற் பசுமையாகிய, பொய்யா அடகு என்றுசொல்லி-உண்மையாகிய இலைக்கறியென்று சொல்லி, அமுதத்தையிட்டார்-அமிர்தத்தைப் படைத்தார்கள். எ-று.

அங்கவை சங்கவையென்னும் பெண்கள்கொடுத்த
நீலச்சிற்றாடையை வியந்து பாடியது.

19. பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

இ-ள். பாரிபறித்தபறியும் - பாரியென்னும் இடையன் ஆடையைப் பறித்துத் தன்னைவிட்டு நீங்காமலிருக்கும்படி தடுத்ததும், பழையனூர் காரிகொடுத்தகளைக்கொட்டும்—, சேரமான்வாராய் என அழைத்த வாய்மையும்-சேரமான் பெருமாணயனார் வாராயென்றழைத்தசொல்லும் ஆகிய இம்மூன்றும் நீலச்சிற்றாடைக்குநேர் - நீலச்சிற்றாடைகொடுத்த அன்பிற்குநேராகும். எ-று.

அன்பின்மிகுதியால் பாரியென்னும் இடையன் ஔவையை ஆடைபற்றி யிழுத்துத் தன்னைவிட்டுப்போகாமல் தடுத்தானென்பதும், பழையனூரிலிருக்கும் காரிமுதலியார் தன்கொல்லையில் களைவெட்டும்போது

ஔவையார் வர, அவள்கையிலும் கிளைக்கொட்டுக் கொடுத்துக் களைவெட்டச் சொன்னனென்பதும், சேரமான் பெருமாளுயனார் தினந்தோறும் கைலாயத்துக்குப் போகும்போது வாராய் என்றழைத்தானென்பதும், முன்னே நிகழ்ந்த கதையாதலால், இவ்வாறுகூறினர்.

அங்கவை சங்கவையென்னும் பெண்களிருவரில் ஒருத்தியைச் சோழனுக்கும், மற்றொருத்தியைப் பாண்டியனுக்கும் கலியாணம் செய்து கொடுக்க எண்ணி மணவோலையெழுத விநாயகரை வரும்படி பாடியது.

20 ஒருகொம்பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணுல வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

இ-ள். கரி உரிவை கங்காளன் - யானைத்தோலையுடைய சிவபெருமானது, ஒருகொம்பு-ஒற்றைக்கொம்பையும், இருசெவி - இரண்டுகாதுகளையும், மும்மதத்து - மூன்றுமதங்களையும், நால்வாய் தொங்குகின்ற வாயையும் உடைய, காளாய் - மூத்தபுதல்வனாகிய விநாயகமூர்த்தியே, கண்ணுல் ஓலைகடிது எழுத-மணவோலையை விரைவாய் எழுதும்பொருட்டு, பரிவுடனேவாராயேல்-அன்போடு வாராயாயின், சபித்து-சாபமிட்டு, தன் ஆண்மைதீர்ப்பன்-உனது ஆண்மையை ஒழிப்பேன். எ-று.

நால்வாய், நான்குவாய் என்றும் சொன்னயம் தோன்றுதல் காண்க. கங்காளன்-முழுவெலும்பைத் தரித்தவன்.

சோழனைக் கலியாணம் செய்துகொள்வதற்கு வரும்படி பாடியது.

21. புகார்மன்னன்பொன்னிப் புனனாடன்சோழன்
தகாதென்று தானங்கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டாநாள்.

இ-ள். புகார் மன்னன்-காவிரிப்பூம் பட்டினத்துக் கரசனும், பொன்னிபுனல்நாடன் - காவிரியாற்றுநீர்சூழ்ந்த நாட்டையுடையவனும் ஆகிய, சோழன்-சோழபூபதி, தகாது என்று-தகாத காரியமென்று, அங்கு இருந்துநகாதே - அவ்விடத்திருந்து நகையாமல், பதினெட்டாம் நாள்விடிய-பதினெட்டாநாள் விடியுமளவில், கடிகோவலூர்க்கு-காவலையுடைய திருக்கோவலூருக்கு; கடிதின்வருக-விரைவாகவருக. எ-று.

பாண்டியனைக் கலியாணம் செய்துகொள்வதற்கு வரும்படி பாடியது.

22. வையைத் துறைவன் மதுராபுரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு

வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பானுள்
ஈண்டு வருக விசைந்து.

இ-ள். வையைத்துறைவன்-வையையாற்றுத் துறையையுடையவனாகிய, மதுராபுரிதென்னன்-மதுராபுரியிலுள்ள பாண்டியன், செய்யத்தகாது என்று தேம்பாதே - செய்யத்தகாதென்று வருந்தாமல், தையலர்க்கு வேண்டுவனகொண்டு-பெண்களுக்கு வேண்டுமவற்றைச்சேகரித்துக்கொண்டு, ஈரொன்பான் நாள் விடிய-பதினெட்டாநாள் விடியுமளவில்-இசைந்து ஈண்டுவருக, மனமிசைந்து இவ்விடத்துக்குவருக. எ-று.

சேரனைக் கலியாணத்துக்கு வரும்படி பாடியது.

23. சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசர் மனமிசைந்தார்
சங்கவை யையுங்கூடத் தான்.

இ-ள். பாரிமகள்-பாரியின்மகளாகிய, அங்கவையை சங்கவையையுங் கூடக்கொள்க-அங்கவையையும் சங்கவையையும் மணஞ்செய்துகொள்ள, அரசர் உட்காதே மனமிசைந்தார்-சோழன் பாண்டியன் என்னும் இரண்டரசரும் நாணமல் மனமிசைந்தார்கள், (ஆதலால்) சேரலர்கோன் சேரன்-சேரநாட்டார்க் கரசனாகிய சேரன், செழுபூ - செழுமையும் அழகுமுள்ள, திருக்கோவலூரளவும் வருக - திருக்கோவலூர் வரைக்கும் வருக.

வருணனைப் பொன்மாரிபெய்விக்கப் பாடியது.

24. கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுவாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.

இ-ள். கருணையால்-கிருபையினால், இந்தகடல் உலகம்காக்கும் - இந்தக்கடல்சூழ்ந்த உலகத்தைக்காக்கின்ற, வருணனே - வருணபகவானே, மாமலையன்கோவல்-செருமலைத் தெய்வீகனது திருக்கோவலூரில், திருமணத்தில்-திருமணக்காலத்தில், முன்மாரிபெய்யும் - முன்னே மழையாகப் பெய்கின்ற, முதுவாரியைமாற்றி - பழமையாகிய கடல்நீரையொழித்து, பொன் மாரியாகப்பொழி - பொன்மழையாகச் சொரியக்கடவாய். எ-று.

பெண்ணை நதியைப்பால் நெய்யாகப் பெருகிவரும்படி பாடியது.

25. முத்தெரியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பா றலைப்பெய்து—குத்திச்

செருமலைத் தெய்வீகன் றிருக்கோவலூர்க்கு
வருமளவுங் கொண்டோடிவா.

இ-ள். முத்து எறியும்-முத்துக்களை வீசுகின்ற, பெண்ணை-பெண்ணை நதியே-முதுநீர் அதுதவிர்ந்து-பழையநீராகிய அதனையொழித்து, தந்திய நெய்பால் தலைப்பெய்து-அவைகள் தாவுகின்ற நெய்பால்களின் பெருக் கோடேட்டி, குத்தி-(எதிர்ப்பட்ட மேடுகளைக்) குத்திக்கொண்டு, செருமலை தெய்வீகன் திருக்கோவலூர்க்கு-செருமலை தெய்வீகனது திருக்கோவலூருக்கு வருமளவும்-வரும்வரைக்கும், கொண்டு ஓடிவா-கொண்டுவிரைந்து வரக்கடவாய். எ-று.

திருக்கோவலூரைச் சிறப்பித்துப் பாடியது.

26. பொன்மாரி பெய்யுமூர் பூப்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுகழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

இ-ள். பொன்மாரிபெய்யும் ஊர் - பொன்மழைபெய்யும் ஊரும், பூபருத்தி ஆடைஆம் அந்நாள் - அழகாகிய பருத்தி ஆடையாகின்ற அந்நாளில், வயல் அரிசி ஆகும் ஊர் - வயலரிசியாகிற ஊரும் (யாதெனின்), எந்நாளும் - எக்காலமும், தேங்குபுகழேபடைத்த நிறைந்த - புகழையே படைத்திருக்கிற, சேதிமாநாடு அதனில் - பெரிதாகிய சேதிதேசத்தில், ஓங்கும்-உயர்ந்ததாகிய, திருக்கோவலூர்-திருக்கோவலூரேயாகும். எ-று.

பனந்துண்டந் தளிர்க்கப் பாடியது.

27. திங்கட்குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின்றார் மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந் துண்டமே.

இ-ள். திங்கள்குடை உடை-சந்திரவட்டக் குடையையுடைய, சேரனும்-சேரராஜனும், சோழனும்-சோழராசனும், பாண்டியனும்-பாண்டிய ராசனும், மங்கைக்கு-(அங்கவைசங்கவைஎன்னும்) பெண்களுக்கு, அறுகு இட-அக்ஷதையிடும்பொருட்டு, மணப்பந்தலிலே வந்துநின்றார்-மணப்பந்தலிலே வந்து நின்றார்கள், (ஆதலால்) பனந்துண்டமே-பனங்கட்டையே, சங்கு ஒக்க வெண்குருத்து ஈன்று-சங்கைநிகர்க்க வெண்மையாகிய குருத்தைவிட்டு, பச்சோலை சலசலத்து-பச்சையோலை சலசலவென் றொலிக்கப் பெற்று, நுங்குக்கண்முற்றி-நுங்குக்கண்கள்முதிர்ந்து, அடிக்கண்கறுத்து-

அடியில்கறுத்து, நுனிசிவந்து - நுனியில்சிவந்து, பங்குக்கு மூன்றுபழம் தரவேண்டும் - ஒவ்வொரு பாகத்துக்கு மும்மூன்று பழங்களைக் கொடுக்க வேண்டும். எ-று.

அங்கவை சங்கவையென்னும் பெண்களுக்கு இடையர் மரபின்படி சீதநங் கொடுக்கும்பொருட்டுச் சேர ராஜனை ஆடுகேட்டனன், அவன் பொன் ஆடுகொடுத்தான், அதைச் சிறப் பித்துப் பாடியது.

28. சிரப்பான் மணிமவுலிச் சேரமான் றன்னைச்
சுரப்பாடி யான்கேட்கப் பொன்னாடொன்றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தம்கொடையின் சீர்.

இ-ள். சிரப்பால்-சிரத்தின்கண், மணிமவுலி-மணிமுடியைத் தரித்த, சேரமான் தன்னை - சேரமானை, யான் சுரப்பு ஆடுகேட்க-நான்பால் சுரக்கிற ஆட்டைக்கேட்க, (அவன்) பொன் ஆடு ஒன்று ஈய்ந்தான்-பொன்னினாற் செய்யப்பட்ட ஆடொன்றைக் கொடுத்தான், இரப்பவர் என்பெறினும்கொள்வர்-யாசிப்பவர் எதனைப் பெறினும் ஏற்றுக்கொள்ளுவார்,கொடுப்பவர்தாம்-ஈவோரே, தம்கொடையின்சீர் அறிவர் - தமதுகொடையினேற்றத்தை யறிவார். எ-று.

'இரப்பவரென் பெறினுங்கொள்வர், கொடுப்பவர் தாமறிவார் தங் கொடையின்சீர்' என்றதனால், கொடைப்பொருளின் மேன்மை கொடையாளனுக்கே தெரியுமாதலால், இரப்பவளாகிய யான்புகழ அறிந்து வல்லே னல்லேன் என்பது கருத்து.

சோழனையும் பாண்டியனையும் ஆசீர்வதித்து, இந்தப் பெண்களை எப்போதும் அன்பாகப் பாதுகாக்கவேண்டுமென்றுபாடியது.

29. ஆயன் பதியி லரன்பதிவந் துற்றளகம்
மாய னூதுங்கருவி யானாலும்-தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடனீர்
இன்றுபோ லென்று மிரும்.

இ-ள். ஆயன்பதியில்-திருமாலின் இடமாகிய ஆலிலைமேல், அரன்பதி வந்து உற்று-சிவன்திடமாகிய மலைவந்துபொருந்தி, அளகம்மாயன் ஊதும்கருவி ஆனாலும்-கூந்தல் அந்தத்திருமால் ஊதுகின்ற கருவியாகிய சங்கமாய் விட்டாலும், தூயமணிக் குன்றுபோல்வீறு-பரிசுத்தமாகிய ரத்நமலைபோலப் பூத்த, குவிமுலையார்தம்முடன் - குவிந்ததனங்களை யுடையவர்க

கிய இந்தப்பெண்களுடன்கூடி, நீர்-நீங்கள், இன்றுபோல் - இன்றிருப்பது போலவே, என்று இரும்-எந்நாளும் கூடிவாழ்ந்திருங்கள். எ-று.

ஆயன்பதியி லரன்பதி வந்துற்று என்பதற்கு, ஆலிலைவயிற்றுக்கும் மலைதனங்களுக்கும் உவமையாதலால், தனங்கள்தளர்ந்து வயிற்றளவும் தொங்கினாலும் என்பதும், அளகம்மாயனாதுங் கருவியானாலும் என்பதற்கு, கூந்தலானது நரைத்து சங்குபோல வெளுத்துப்போனாலும் என்பதும், கருத்து.

உத்தமர் மத்திமர் அதமர் என்னு மூவரையும் உவமைமுகத்தாற் கூறியது.

30. சொல்லாமலேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமைநாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

இ-ள். பெரியர் சொல்லாமலே செய்வர்-பெரியோர் சொல்லாமலேயிருந்து ஒரு (உபகாரத்தைச்) செய்வர். சிறியர்சொல்லி செய்வர், சிறியோர் சொல்லிச்செய்வர், கயவர் சொல்லியும் செய்யார்-கீழ்மக்கள்சொல்லியும் செய்யமாட்டார்கள், நல்ல-அழகாகிய, குலாம்மாலை-விளக்குகின்ற பூமாலையையணிந்த, வேல்கண்ணாய்-வேல்போலுங் கண்களையுடையாளே; கூறு உவமை நாடின்-(இம்மூவருக்கும்) முறையே சொல்லுதற்குரிய உவமைப்பொருள்களை ஆராயின், பலாவை மாவை பாதிரியைபார் பலாமரத்தையும் மாமரத்தையும் பாதிரிமரத்தையும் நோக்கு. எ-று.

பலா-பூவாது பயன்தருவது, மா-பூத்துப் பயன்தருவது,பாதிரி - பூத்தும்பயன்தராதொழிவது.

தீயோர்கள் தீமையைநாடுவர் எனப் பாடியது.

31. இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நீளும் வண்டு ஈ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்.

இ-ள். வண்டது-வண்டானது, நிலத்து உறும் கமலத்தை தேடும்தன்மைபோல்-உலகத்தில் தாமரை மலரைத்தேடும் தன்மைபோலவும், ஈ-ஈயானது, தலைக்குறை கமலத்தைசாரும் தன்மைபோல் - முதற்குறையாகிய கமலத்தைச்சேரும் தன்மைபோலவும், இலக்கணக்கவிஞர்-இலக்கணவித்துவான்கள், சொல்லின்பம் தேடுவர் - சொல்லின தின்பத்தைத் தேடுவார்கள், வன்கணாளர்கள்-அவிவேகிகள், மலக்குசொல்தேடுவர் - மயங்குதற் கேதுவாகிய சொற்களைத் தேடுவார்கள். எ-று.

தலைக்குறை கமலம்-மலம்.

இவரிவர் கெடுவரென்று பாடியது.

32. நிட்டூரமாக நிதிதேடு மன்னனும்
இட்டதனை மெச்சா விரவலனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

இ-ள். நிட்டூரமாக நிதிதேடும் மன்னவனும் - எல்லார்க்கும் விரோதமுண்டாகப் பொருள்தேடுகிற அரசனும், இட்டதனைமெச்சா இரவலனும்-தந்ததைக்கொண்டு மகிழாத யாசகனும், முட்டகூசி நிலைநில்லாக்குலக்கொடியும்-முழுதும்நாணி அந்த நிலையில் நில்லாத குலமாதும், கூசியவேசியும்-நாணிய வேசையும், கெட்டுவிடும்-கெட்டுப்போவார்கள். எ-று.

முட்ட-முற்ற என்பதன் மரூஉ.

சோழன் தனக்கு உயர்ந்த பட்டாடை கொடுத்துத் தன்கொடையைத் தானே பாராட்டிமகிழ, அவ்வாடையினும் உயர்ந்த தன்பாடலைச் சிறப்பித்துப் பாடியது.

33 நூற்றுபத் தாயிரம் பொன்பெறினு நூல்சீலை
நாற்றிங்க ளுளுக்கு ணைந்துவிடும்—மாற்றலர்கள்
பொன்றப் பொருதடக்கைப் போர்வே லகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு.

இ-ள். நூற்றுப்பத்து ஆயிரம்பொன்பெறினும் - நூற்றுப்பத்தாகிய ஆயிரம்பொன் விலைபெற்றதாயிருப்பினும், நூல்சீலை-நூலாற்செய்யப்பட்ட ஆடையானது, நால்திங்கள்நாளுக்குள் - நான்குமாச காலத்துக்குள்ளே, நைந்துவிடும்-நைந்து கிழிந்து போகும், மாற்றலர்கள்-பகைவர்கள், பொன்ற-அழியும்படி, பொரு - போர்செய்கின்ற, தடக்கை - பெரியகைகளில், போர்வேல்-போரிற்சிறந்த வேலைத்தாங்கிய, அகளங்கா-மாசற்றவனாகிய சோழனே, என்பாட்டு-என்பாட்டானது, என்றும் கிழியாது - எக்காலத்தும் கிழியாது. எ-று.

அகளங்கன்-மற்றோர் பிரபுவின்பெயர் என்பாருமுளர்.

வேளூர்ப்பூதன் விருந்திட்டதைப் புகழ்ந்து பாடியது.

34. வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டானீ
தெல்லா வுலகும் பெறும்.

இ-ள். வரகரிசிசோறும்-வரகரிசிச்சோற்றையும், வழுதுணங்காய்வாட்டும்-கத்திரிக்காய்த்துவட்டலையும், முரமுரெனவேபுளித்தமோரும்-முரமுரென்றிரைந்து நுரைத்துப் புளித்தமோரையும், புல்வேளூர்பூதன்-சிறிதா

கியவேளூரில் வாழ்வோனாகிய பூதன் என்பவன், திரமுடனே புரிந்து விருந்திட்டான்-உறுதியாக விரும்பி விருந்திட்டான், ஈது-இந்த விருந்தானது, எல்லா உலகும் பெறு-எல்லா உலகங்களையும் விலைமதிக்கப்பெறும்.

"புகழ்ந்து பரிந்திட்ட சோறு" என்றும் பாடம்.

இதனிலும் இதுநன்றெனல்.

35. ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று-நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

இ-ள். ஏசி இடலின்-ஏற்பாரைவைது பின்பு பிக்ஷையிடுவதினும், இடாமையேநன்று-இடாதிருப்பதே நன்மையாகும், எதிரில்பேசும் மனையாளின்-(கணவனுக்கு) எதிராகநின்று பேசுகிற மனைவியினும்,பேய்நன்று-பேயேநன்மையாகும், நேசம் இல்லாவணக்கத்தின் - உள்ளன்பில்லாத சிநேகத்தினும், வலியபகைநன்று-வலிமையாகிய விரோதம் நன்மையாகும், வாழ்வு இல்லாசங்கடத்தின்-செல்வமில்லாத வருத்தத்தினும், சாவதேநன்று-இறப்பதே நன்மையாகும், எ-று.

கோரைக்கால் என்னும் ஊரிலுள்ள ஆழ்வான்

கொடையை நிந்தித்துப் பாடியது.

36. கரியாய் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகாலோய்ந்தே
கோரைக்கா லாழ்வான் கொடை.

இ-ள். கோரைக்கால் ஆழ்வான்கொடை - கோரைக்கால் என்னும் ஊரிலிருக்கிற ஆழ்வான் என்பவனது கொடையானது, கரி ஆய்-(முதலில்) யானையாகி, பரி ஆய்-(பின்பு) குதிரையாகி, கார் எருமை ஆய்-(பின்பு) கரிய எருமையாகி, எருது ஆய்-(பின்பு) எருதாகி, முழப்புடவை ஆகி-ஒருமுழ நீட்சியுள்ள சீலையாகி, திரிதிரி ஆய்- திரிதிரியாகி, தேரைக்கால் பெற்று-கால் தேரைக்கால்களின் தன்மையையடைந்து, மிகத்தேய்ந்து ஓய்ந்தது-மிகவும் தேய்ந்து தளர்ந்தது, எ-று.

யானை முதலானவைகளைக் கொடுப்பேனென்று பலநாளும் ஆசை வார்த்தைசொல்லி யலையவைத்து, முடிவில் ஒன்றுங்கொடாமையால் இவ்வாறு அவமதித்துக் கூறலாயிற்று.

ஈகையில்லாதவனாகிய சேடன் என்பவனை இழித்துப் பாடியது.

37. பாடல் பெறானே பலர் மெச்சவாழானே
நாடறிய நன்மணங்க ளாடானே-சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருகடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென்ன மலர்ந்தென்ன காண்.

இ-ள். பாடல்பெறான் - (சிறந்தபுலவர்களது) பாடலைப் பெறாதவனும், பலர்மெச்சவாழான்-பலரும் மெச்சும்படி வாழாதவனும் நாடு அறிய நல்மணங்கள் ஆடான் - உலகமறிய நல்ல சுபங்களை விரும்பாதவனும் ஆகிய, சேடன் இவன்-சேடன் என்னும் பெயருள்ள இவன், வாழும் வாழ்க்கை-வாழும் வாழ்வானது, இருகடல் சூழ்பாரில் - பெரியகடல்சூழ்ந்த பூமியில், கவிழ்ந்து என்-அழிந்தால் என்ன, மலர்ந்து என் - செழித்தால் என்ன, எ-று.

காண்-அசை. பாடல் பெறுகை முதலானவை யில்லாதவன் உலகி லிருந்தென்ன இறந்தென்ன என்பது கருத்து.

முல்லான் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

38 காலையிலொன்றாவர் கடும்பகலி லொன்றாவர்
மாலையிலொன் றாவர் மனிதரெலாம்-சாலவே
முல்லானைப் போல முகமுமகமும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோ நாம்.

இ-ள். மனிதர் எலாம்-மனிதரெல்லாரும், காலையில் ஒன்று ஆவர்-காலையில் ஒருதன்மையராவர், கடும்பகலில் ஒன்று ஆவர்-கடும்பகலில் ஒரு தன்மையராவர், மாலையில் ஒன்று ஆவர்-மாலைக்காலத்தில் ஒரு தன்மைய ராவர், (இவருள்) சால-மிகவும், முல்லானைப்போல் - முல்லானைப்போல, முகமும் அகமும் மலர்ந்த நல்லானை-(எப்போதும்) முகமும் மனமும் அல ரப்பெற்ற நல்லோனொருவனை, நாம் கண்டறியோம் - நாம் கண்டறிந்தி லேம், எ-று.

கல்விக்கு ஓரெல்லையில்லை யாதலால் நீர் செருக்காதீர் என்று புலவரைநோக்கிக் கூறியது.

39. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்றகலை மடந்தை யோதுகிறாள்-மெத்த
வெறும் பந்தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந் தன்கையாலெண்சாண்.

இ-ள். புலவீர்-புலவரே, கற்றதுகைமண் அளவு-கற்கப்பட்டது கை மண்ணளவேயாகும், கல்லாது உலகு அளவு-கற்கப்படாதது உலகினள வேயாகும், என்று-என்று, உற்றகலைமடந்தை ஓதுகிறாள் பொருந்திய கலை மாதும் சொல்லாநின்றாள், (ஆதலால்) மெத்த - மிகவும், வெறும்பந்தயம்

கூறவேண்டாம்,—எறும்பும் தன்கையால் எண்சாண்-எறும்பும் தன்கையி ஞல் எட்டுசாணளவு வுள்ளதேயாகும், எ-று.

மந்திரிகளாக இன்னாரைக் கொள்ளத்தகும் எனப்பாடியது.

40. நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்-நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த வரசே யரசு.

இ-ள். நூல் எனிலோ கோல் சாயும்-பூணூலையுடையவனுகிய அந்தணன் மந்திரியானாலே செங்கோல் முறைபிறழும், நும்தமர் எல் வெம்சமர் ஆம்-உம்மவராகிய க்ஷத்திரியராயின் கொடியபோர் விளையும், கோல் எனிலோ ஆங்கே குடிசாயும்-நிறைகோலை யுடையவனுகிய வணிகனென்றாலோ அப்பொழுதே குடிகளழியும், நால் ஆவான்-நான்காம் வருணத்தனுகிய சூத்திரன், மந்திரியும் ஆவான்-மந்திரியும் ஆதற்குரியனுவான், வழிக்குத் துணையாவான்-வழி நடைக்குத் துணையாதற்கு முரியவனுமாவான், அந்த அரசே அரசு-அப்படிப்பட்ட மந்திரியையுடைய அரசனே அரசன்,

முருகர்மீது, ஒருபெண்ணின்தாய் இரங்கிக்கூறியதாகப் பாடியது.

41. செம்மான் கரத்தனருள் சேயா நெடியோனை
அம்மா னெனப்பெற் றருள்வேலா-இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்குங் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்த லணை.

இ-ள். செம்மான் கரத்தன் அருள்சேயா-செவ்வந்தமானைக் கையிலேந்தினவனுகிய சிவபெருமான் ஈன்றருளின புதல்வனே, நெடியோனை-திருமாலை, அம்மான் எனப்பெற்றருள்வேலா-அம்மான் என்று சொல்லப்பெற்றருளின வேலவனே, இம்மான்-இந்தப் பெண்ணானவள், கரும்பு இறைக்கும்-கருப்பு வில்லையுடைய மன்மதராஜனுக்கும், வெண்பிறைக்கும்-வெண்மையாகிய பிறைச்சந்திரனுக்கும், கண் அம்பு இறைக்கும் - கண்ணீரையிறைக்கிறுள், (ஆதலால்) அரும்பு இறைக்கும் கூந்தல் - பூவரும்புகளைச் சிந்துகின்ற கூந்தலையுடைய இவளை, அணை-நீவந்து தழுவவேண்டும்-எ-று.

இன்னின்னசெயல்கள் சிறந்தன என்று பாடியது.

42. மதியாதார்முற்றமதித் தொருகாற்சென்று மிதியாமை கோடிபெறும், உண்ணீருண் ணீரென்றுபசரியார் தம்மனையி லுண்ணாமை கோடிபெறும், கோடிகொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல்கோடிபெறும், கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடை நாக்கோடாமை கோடிபெறும்.

இ-ள். மதியாதார் முற்றம்-மதிக்காதவருடைய முற்றத்தை, மதித்து-மதித்தலைச்செய்து, ஒருகால் சென்று-ஒருதரம்போய், மிதியாமை-மிதியாதிருத்தல், கோடிபெறும்-கோடிபொன்பெறும், உண்ணீர் உண்ணீர் என்று-புசியும் புசியும் என்று, உபசரியார் தம்மனையில்-உபசரிக்காதவருடைய வீட்டில், உண்ணாமை-புசியாதிருத்தல், கோடிபெறும் - கோடிபொன்பெறும், கோடிகொடுத்தும்-கோடிபொன்னைக் கொடுத்தாயினும், குடிப்பிறந்தார் தம்மோடு - உயர்குடியிற் பிறந்தவரோடு, கூடுதல் - சேர்தல், கோடிபெறும்-கோடிபொன்பெறும், கோடானுகோடி கொடுப்பினும்-கோடானுகோடி பொன்னைக் கொடுத்தாலும், தன்னுடைநா - தனது நாவானது, கோடாமை-சொன்னசொல் தவறாதிருத்தல், கோடிபெறும்-கோடிபொன்பெறும், எ-று.

43. வாதக்கோனாளையென்றான் மற்றைக்கோன்பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனு மில்லையென்றான்-ஓதக்கேள் [ன்
வாதக்கோன் சொல்லதிலும் மற்றைக்கோன்சொல்லதிலும்
ஏதக்கோன் சொல்லே யினிது.

இ-ள். வாதக்கோன் நாளை என்றான்-வாதராஜன் நாளைக்கென்றான், மற்றைக்கோன்பின்னை என்றான் - மற்றைராஜன் பிறகென்றான், ஏதக்கோன் யாதேனும் இல்லை என்றான்-ஏதராஜன் யாதொன்று மில்லையென்றான், ஓதக்கேள் - சொல்லக்கேள், வாதக்கோன் சொல்லதிலும் - வாதக்கோன் சொல்லினும், மற்றைக்கோன் சொல்லதிலும் - மற்றைக்கோன் சொல்லினும், ஏதக்கோன் சொல்லே இனிது - ஏதக்கோன் சொல்லே இனிமையைத் தருவதாகும், எ-று.

நாளைக்கென்று சொல்லுவோனும் பின்னைக்கென்று சொல்லுவோனும் ஆகிய இருவர்சொல்லினும், இல்லையென்பவனது சொல்லே இனிதாமென்பதாம். வாதநாடி யடங்கினால் ஒருநாளிலும், பித்தநாடி யடங்கினால் ஒரு நிமிஷத்திலும் உயிர் நீங்கும் என்பது சொன்னயம்.

ஈயாத லோபிகளுடைய தனம் இதற்கு நிகராமென்று பாடியது

44. சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ றாரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்-புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே யொக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்.

இ-ள். தளர்ந்தோர்க்கு-(செல்வப்பெருக்கமற்றுத்) தளர்ச்சியடைந்தவர்களுக்கு, ஒன்று ஈயார்தனம்-(அவர் வேண்டிய) ஒருபொருளைக் கொடாதவருடைய தனமானது, சுற்றும் கருங்குளவி-சுற்றிலுங் கருங்குளவி மொய்த்த, சூரைத்தூறு - சூரைச்செடிப்புதலிலும், ஆரியப்பேய் எற்றும் சுடுகாடு இடிகரையின் புற்றில் - (நேர்ந்தாரை) பார்ப்பனப்பேய் அறைகின்ற சுடுகாட்டிலுள்ள இடிகரையின் கண் உள்ள புற்றிலும், வளர்ந்த

மடல்பனைக்குள் - உயர்ந்த மடற்பனைமரத்தின்மீதும், வைத்ததேன் ஒக்கும் வைக்கப்பட்ட தேனை நிகர்க்கும்.

மடற்பனை - மடல்கழிக்காதபனை. சூரைப்புல்முதலிய இடங்களில் கட்டப்பட்டதேன் எளிதிற்கிடையாததுபோல, உலோபரதுதனமும் எளிதிற்கிடையாதென்பது கருத்து.

பொற்கிழி அறும்படி பாடியவை.

45. ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்-பூத்தமலர்த்
தண்டாமரைத்திருவே தாதாகோடிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

இ-ள். ஆர்த்தசபை நூற்றொருவர் - நிறைந்த சபைக்கேறத் தகுதியுடையவர் நூற்றிலொருவர், புலவர் ஆயிரத்தொன்று ஆம்-அவருள் புலவராயிருப்பவர் ஆயிரத்திலொருவர், (அவருள்) வார்த்தை பதினாயிரத்தொருவர்-வார்த்தைசொல்லுதற் குறியார் பதினாயிரத்திலொருவர், பூத்ததண் தாமரை மலர்திருவே-மலர்ந்த குளிர்ச்சியாகிய தாமரைமலரில்வாழ்கின்ற திருமகளே, தாதாகோடிக்கு ஒருவர்-கொடையாளிகள் கோடிக்கொருவர் உண்டு ஆயின் உண்டு என்று அறு-உண்டென்றால் உண்டென்று அறுபடுவாய். எ-று.

46. தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை-அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானெச் சம்போ லறு.

இ-ள். தண்டாமல் ஈவதுதாளாண்மை - கேளாமல் (குறிப்பறிந்து) கொடுப்பது ஊக்கமாம், தண்டி அடுத்தக்கால் ஈவதுண்மை-கேட்டு அடுத்தால் கொடுப்பது கொடையாம், அடுத்து அடுத்து பின்சென்றால் ஈவது கால்கூலி-அடுத்தடுத்துப் பின்னே தொடர்ந்து சென்றால் கொடுப்பது கால்கூலியாம், பின்சென்றும்-பின்னே தொடர்ந்து சென்றும், ஈயான்-கொடாதவனுடைய-எச்சம்போல்அறு-சந்ததியைப்போல அறுபடுவாய். எ-று

47. உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி-எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்றா லறு.

இ-ள். உள்ளவழக்கு இருக்க - உண்மையாகிய வழக்கிருக்கவும், ஊரார் பொதுஇருக்க-ஊரிலுள்ளாரதுசபையிருக்கவும், தான்பேசி-தான் முனைந்து பேசி வழக்கதனைத்தள்ளி-வழக்கைத்தள்ளிவிட்டு, எள்அளவும்-சிறிதாயினும், கைக்கூலிதான் வாங்கும்-கைக்கூலியை வாங்குகின்ற, கால்

அறுவான் தன்கிளையும்-சந்ததியற்றுப்போவானது சுற்றமும்,எச்சம்அறும் என்றால் அறு-சந்ததியற்றுப்போமாயின் நீயும் அறுபடுவாய். எ-று.

48. வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்-வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றா லறு.

இ-ள். வழக்கு உடையான் நிற்ப-(உண்மையாகிய) வழக்குடையவனிருக்க, வலியானைக்கூடி-வலியனைச்சேர்ந்து, வழக்கை - நல்வழக்கை, அழிவழக்குச்செய்தோன்-கெடுவழக்காக்கினவன், வழக்கு இழந்தோன்-வழக்கைத்தோற்றவன், சுற்றமும்தானும்-தன் சுற்றமும் தானுமாக, தொடர்ந்து அழுதகண்ணீரால்-இடையறாதழுத கண்ணீரினால், எச்சம் அறும் என்றால்-சந்ததியற்றொழிவனாயின், அறு-(நீயும்) அறுபடுவாய். எ-று.

ஒரு ராஜகுமாரத்தி அழகுள்ள ஒரு ராஜகுமாரனைக் கல்வியில்லாதவனென்றறியாமல் ஒருசத்திரத்தில் இன்னகாலத்தில் நீவந்திருந்தால் நான் வருகிறேன், கூடிக்களிக்கலாம் என்றெழுதினள். அதை அவன்படித்த ஒருவனுக்குக்காட்ட, அவன் அதிலுள்ள செய்தியை யறிந்துகொண்டு, ராஜகுமாரனை நோக்கி, நீ இவ்விடத்தி லிருந்தால் அரசன் உன்னைத் தலைவெட்டும்படி நேரிடுமென்றுசொல்லி அவனைப் போகச்செய்து, தான் அந்த ராஜகுமாரனைப்போல வேஷங்கொண்டு அங்கிருந்தான். ராஜகுமாரத்தி அவ்வாறேவந்து அந்நியனென்று அறியாமல் கூடிரமித்தபின்பு தெரிந்து பிராணத்தியாகஞ் செய்துக்கொண்டு பிசாசமாகி அந்தச்சத்திரத்தில்வந்து தங்குவோரைத் தொந்தரைசெய்து கொண்டிருந்தாள். அங்கு ஔவை வர்தனள், அவளையும் சாமந்தோறும் தொந்தரைசெய்தபோது நான்குசாமத்திலும் பாடியவை.

49. வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்-பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

இ-ள். வெண்பா-வெண்பாவை, இருகாலில்-இரண்டுதரம் சொல்லுமளவில், கல்லானை-கல்லாதவனையும், வெள் ஓலை கண்பார்க்க-வெண்மையாகிய ஓலையைக்கண் பாராநிற்க, கையால் எழுதானை-கையினால் (எழுத்தாணியைக்கொண்டு) எழுதாதவனையும், பெண்பாவி பெற்றாள்பெற்றாள்-பெண்பாவி ஈன்றாள், பிறர்நகைக்கப் பெற்றாள்-பிறர்பார்த்துச் சிரிக்கும்பொருட்டு ஈன்றாள், (ஆதலால்) அவர்களை எற்று எற்று - அறை அறை அறை. எ-று.

50. கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை-அரும்பகலே

இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

இ-ள். கருங்குளவி-கருங்குளவிமொய்த்த,சூரைத்தூறு-சூரைப்புதலிலுள்ள, ஈச்சங் கனிபோல் - ஈச்சமரத்தின் கனிபோல, வருந்தினர்க்கு-துன்பமடைந்தார்க்கு, ஒன்று ஈயாதவன்வாழ்க்கை-ஒருபொருளையுங்கொடாதவனது செல்வத்தையும், இச்சித்திருந்த பொருள் - விரும்பியிருந்த பிறபொருள்களையும், அருபகலே - அருமையாகிய (அன்றைப்) பகலிற்றானே, தாயத்தார் கொள்வர் - தாயாதிகள் கவர்ந்து கொள்வார்கள் (ஆதலால் அந்த லோபியை) எற்று எற்று எற்று-அறை அறை அறை. எ-று.

51\. வானமுளதான் மழையுளதான் மண்ணுலகில்
தானமுளதாற் றடமுளதால்-ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்பாரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

இ-ள். வானம் உளது-மேகமுண்டு, மழைஉளது-(அதனால் பெய்யப்படுவதாகிய) மழையுண்டு, மண்ணுலகில்-நிலவுலகத்தில், தானம் உளது-நிலமுண்டு, தடம்உளது-நீர்நிலைகளுண்டு, ஆனபொழுது (இப்படி) ஆயின பின்பு, எய்த்தோம் இளைத்தோம்என்று (யாம்) இளைத்தோம் மெலிந்தோமென்று, ஏமாந்திருப்பாரை-ஏமாந்திருப்பவர்களை, எற்று எற்று - அறை அறை அறை. எ-று.

52\. எண்ணாயிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றாக் கிடைபோல்-பெண்ணாவாய்!
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

இ-ள். எண்ணாயிரத்து ஆண்டு - எண்ணாயிரவருஷம், நீரில் கிடந்தாலும்-நீரிலே தங்கியிருந்தாலும், உள் நீரம்பற்றா-உள்ளேநீரைக்கொள்ளாத கிடையேபோல்-சடைபோலவே,பெண்ணாவாய்-பெண்ணானவளே,பொன்தொடிமாதர் - பொன் வளையலையணிந்த குலமாதரது, புணர்முலைமேல் சாராரை-நெருங்கிய தனங்களின்மீது பொருந்தாது வேசையரை விரும்புந் தூர்த்தரை, எற்று எற்று எற்று-அறை அறை அறை. எ-று.

ஔவையால் பாடல்பெறவிரும்பிய முருகக்கடவுள் எருமைமேய்க்கிற பிள்ளைகளைப்போல ரூபங்கொண்டு நாவல் மரத்தில் ஏறியிருந்தனர். ஔவை அவரைநோக்கி, அப்பா நாவற்பழம் போடென்றாள். அவர் சுடுகிற பழம்போடவா சுடாதபழம்போடவா என்றார். அதைக்கேட்ட ஔவை ஆச்சரியமடைந்து சுடுகிறபழம் போடென்று சொல்ல, அவர் அளிந்த ஓர் பழத்தைப் போட்டார்.

அது மணலில் வீழ்ந்ததனால் மணல் ஒட்டிக்
கொண்டது; அதை ஔவையெடுத்து
மணலை யூதும்போது முருகர்,
பழம் சுடப்போகிறதென்று
பரிஹசித்தபோது
பாடியது.

53. கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்-பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண்.

இ-ள். கருங்காலிகட்டைக்கு - கருங்காலிக் கட்டைக்கு, நாணு கோடாலி-அஞ்சாத கோடாரியானது, இருங்கதலித் தண்டுக்குநாணும்-பெரியவாழைத் தண்டுக்கு அஞ்சும், (அதுபோல) பெருகானில் - பெருங்காட்டில், கார் எருமை மேய்க்கின்ற காளைக்கு - கரிய எருமைகளை மேய்க்கிற சிறுவனுக்கு, நான் தோற்றது - நான் தோற்றதைக் குறித்து, என்கண்-என்கண்ணனது, ஈரிரவும் துஞ்சாது-இரண்டிராக்களும் நித்திரைகொள்ளாது. எ-று.

முருகர் கொடியது முதலாயின எவையென்றுகேட்க ஔவைபாடியது.

54. கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற வவர்கையி லுண்பது தானே.

இ-ள். கொடியதுகேட்கின் - கொடியதைக்கேட்குமிடத்து, நெடியவெவ்வேலோய்-நெடுமையாகிய வெவ்விய வேலாயுதத்தை யுடையவனே, வறுமைகொடிது கொடிது கொடிது - தரித்திரம் கொடியது கொடியது கொடியது, இளமையில்வறுமை அதனினும் கொடிது - இளமையில் நேரிட்டதரித்திரம் அதிலும் கொடியது, ஆற்றொணா கொடுநோய் அதனினும் கொடிது - சகிக்கக்கூடாத கொடியவியாதி அதினும்கொடியது, அன்பு இல்லாபெண்டீர் - அன்பில்லாத பெண்டிரையுடைத்தாதல், அதனினும் கொடிது-அதினும் கொடியது, இன்புஉற-இன்பமுண்டாக, அவர்கையில் உண்பது-அவர் கையில் அன்னம் புசிப்பது, அதனினும்கொடிது - அதினும் கொடியது. எ-று.

55. இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைச்
கனவினு நனவினுங் காண்பது தானே.

இ-ள். இனியது கேட்கின்-இனியதைக் கேட்பையாயின், தனிநெடு வேலோய்-ஒப்பற்ற நேடியவேலை யுடையவனே, ஏகாந்தம் - தனித்திருத்தல், இனிது இனிது இனிது-இனியது இனியது இனியது, ஆதியைதொழுதல்-முதற்கடவுளை வணங்குதல், அதனினும் இனிது - அதினும் இனியது, அறிவினர் சேர்தல் - அறிவுள்ளவரைக்கூடுதல், அதனினும் இனிது-அதினும் இனியது, அறிவுள்ளோரை-அறிவுள்ளவரை, கனவினும் நனவினும் காண்பது - சொப்பனத்தினும் சாக்கிரத்திலும் தரிசிப்பது, அதனினும்-இனிது-அதினும் இனியது. எ-று.

56. பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இ-ள். பெரியதுகேட்பின்-பெரியதனைக் கேட்பையாயின், எரிதவழ் வேலோய்-நெருப்புப் பரவிய வேலை யுடையவனே. புவனம்பெரிது பெரிது பெரிது-உலகம் பெரியது பெரியது பெரியது, புவனமோ நான்முகன் படைப்பு-உலகமோ பிரமனது சிருஷ்டி, நான்முகன் கரியமால் உந்திவந்தோன்-பிரமன் திருமாலின் உந்தியிற்பிறந்தவன், கரியமாலோ அலைகடல் துயின்றோன் - திருமாலோ அசையாநின்ற கடலில் உறங்கினவன், அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம் - அசையாநின்றகடல் அகத்தியரது உள்ளங்கையில் அடக்கம், குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்-அகத்தியனே குடத்தில்பிறந்தவன், கலசமோபுவியில் சிறுமண்-குடமோ நிலத்தி

லுள்ள அற்பமண், புவியோ அரவினுக்கு ஒருதலைப்பாரம் - நிலமோ ஆதி சேடனாகிய பாம்புக்கு ஒரு தலைப்பளுவு, அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்-ஆதிசேடனோ உமாதேவிக்குச் சிறுவிரலி லணியப்பட்ட மோதிரம், உமையோ இறைவர்பாகத்து ஒடுக்கம் - உமாதேவியோ சிவபெருமானது இடப்பாகத்தில் ஒடுக்கம், இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்-சிவபெருமானோ அடியாரது மனத்தில் ஒடுக்கம், தொண்டர்தம் பெருமைசொல்லவும் பெரிதே - அடியாரதுமேன்மை சொல்வதற்கும் பெரியதேயாம். எ-று.

57. அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயத்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

இ-ள். அரியதுகேட்கின்-அரியதனைக் கேட்பையாயின், வரிவடிவேலோய்-நீண்டவடித்த வேலையுடையவனே, மானிடர்ஆதல் - மனிதராகப் பிறப்பது, அரிது அரிது அரிது-அரியது அரியது அரியது, மானிடர் ஆயினும், மனிதராகப்பிறந்தாலும், கூன்குருடு செவிடுபேடு நீங்கிபிறத்தல் அரிது-கூன் குருடு செவிடுபேடு என்பவற்றை யொழிந்து பிறப்பது அரியது, பேடுநீங்கிப்பிறந்த காலையும்-(கூன்குருடுசெவிடு) பேடுநீங்கிப் பிறந்த காலத்திலும், ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது - ஞானத்தையும் கல்வியையும் விரும்புதல் அரியது, ஞானமும்கல்வியும் நயத்தகாலையும்-ஞானத்தையும் கல்வியையும் விரும்பினகாலத்திலும், தானமும் தவமும் செயல் அரிது-தானத்தையும் தவத்தையும் செய்தல் அரியது, தானமும் தவமும் செய்வர் ஆயின் - தானத்தையும் தவத்தையும் செய்வாராயின், (அவர்களுக்கு) வானவர்நாடு-சுவர்க்கலோகம்-வழிதிறந்திடும்-வழிதிறந்து வைக்கப்படும். எ-று.

பயனற்றன இவை எனப்பாடியது.

58. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபநன்
னாடில்லான் செங்கோ னடாத்துவதுங் —கூடும்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல்.

இ-ள். மாடு இல்லான்வாழ்வு-செல்வமில்லாதவனது வாழ்க்கையும், மதிஇல்லான் வாணிபம்-அறிவில்லாதவனது வியாபாரமும், நல்நாடு இல்லான் செங்கோல்நடாத்துவது - நல்லதேசமில்லாத அரசன்செங்கோல் செலுத்துவதும், கூடும்குரு இல்லாவித்தை-பொருந்திய குருஇல்லாதவித்தையும், குணம் இல்லாபெண்டு-நற்குணமில்லாத மனைவியும், விருந்து இல்லாவீடு-விருந்து வராதவீடும், விழல்-வீணேயாகும், எ-று.

இன்னாரை இன்ன இடத்திற் புகழவேண்டுமென்று பாடியது.

59. நேசனைக்காணு விடத்தி னெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடிவில்

இ-ள். நேசனை-நண்பனை, காணு இடத்தில்-காணாத இடத்தில், நெஞ்சு ஆர துதித்தல் - மனமாரப்புகழ்க, ஆசானை - குருவை, எவ்விடத்தும் அப்படியே-எவ்விடத்திலும் அவ்வாறேபுகழ்க, மனையாளை - மனைவியை, வாசம் பஞ்சணையில்-பரிமளம் பொருந்திய பஞ்சணைமீதுபுகழ்க, மைந்தர் தமைநெஞ்சில்-புதல்வரை மனத்திற்புகழ்க, வினைஆளை-தொழிலாளியை, வேலைமுடிவில்-தொழிலின் முடிவில்புகழ்க, எ-று.

சாத்தியப்படாத காரியங்கள் இவையெனப் பாடியது.

60. ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலாமோ.

இ-ள். ஆலைபலா ஆக்கல் ஆமோ-ஆலமரத்தைப் பலாமரமாகச் செய்தல் கூடுமோ, அருஞ்சுணங்கன்வாலை நிமிர்க்க வசம் ஆமோ-அருமையாகிய நாயின்வாலைநிமிர்க்க வசப்படுமோ, நீலநிறம் காக்கைதனை பேசுவிக்கல்ஆமோ-கருநிறமுள்ள காகத்தைப் பேசுவித்தல் கூடுமோ, கருணை இல்லாத மூர்க்கனை சீர்ஆக்கல் ஆமோ-(மனத்தில்) இரக்கமில்லாத மூர்க்கனைச் சீர்படுத்தல் கூடுமோ.

சோமன் என்னும் பிரபுவையடுத்துப் பல உதவிபெற்றிருந்து
அவனிறந்தவுடனே அவனதுகொடை யருமை
தோன்றப் புகழ்ந்துபாடியது.

61. நிழலருமை வெய்யிலிலே நின்றறிமினீசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

இ-ள். நிழ்ல் அருமை-நிழலினது அருமையை, வெய்யிலிலே நின்று அறிவின்-வெயிலிற்போய்நின்று அறிந்துகொள்ளுங்கள், ஈசன்கழல் அருமை-கடவுளினது திருவடியின் அருமையை, வெவ்வினையில் காண்மின்-கொடிதாகிய வினைவசப்பட்டுத் திகைக்குங்காலத்தில் கண்டுகொள்ளுங்கள், பழகு-(அறிஞர்) பழகுகின்ற, தமிழ்ச்சொல் அருமை - தமிழ்ச்சொற்களின் அருமையை, நால் இரண்டில்-நான்கடிகொண்ட பாடல்களாற் செய்யப்பட்ட நாலடியாரிலும் இரண்டடிகொண்ட பாடல்களாற் செய்யப்பட்டகுறளிலும்(கண்டுகொள்ளுங்கள்)சோமன் கொடை அருமை-சோமன் என்பவனது ஈகையின் அருமையை, புல்லர் இடத்தேபோய் அறிமின்-அற்பரிடத்தேசென்று அறிந்துகொள்ளுங்கள், எ-று.

இன்னவிஷயத்தில் இன்னது சிறந்ததென்று பாடியது.

62. காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசுமுலா விற்பெதும்பை புலி—ஆசு
வலவர்க்கும் வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி.

இ-ள். காசினியில் - உலகத்தில், பிள்ளைக்கவிக்கு-பிள்ளைத்தமிழில், அம்புலிபுலிஆம் - அம்புலிப்பருவம் சிறந்ததாகும், பேசும்-சொல்லப்பட்ட, உலாவில்-உலா என்னும் பிரபந்தத்தில், பெதும்பைபுலி-பெதும்பைப்பருவம் சிறந்ததாகும், ஆசுவல்லவர்க்கு-ஆசுகவியில் வல்லவர்க்கு, வண்ணம் புலிஆம்-வண்ணம்பாடுதல் சிறந்ததாகும், மற்று எல்லாப்புலவர்க்கும்-மற்றை வித்துவான்களெல்லார்க்கும், வெண்பாபுலி - வெண்பாப் பாடுதல் சிறந்ததாகும், எ-று.

அறமுதலிய நான்கினையும் ஒருகவியி லமைத்துப் பாடியது.

63. ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

இ-ள். ஈதல் அறம்-(வரையாது) கொடுத்தலே அறமாகும், தீவினை விட்டு ஈட்டல்பொருள்-தீச்செயலைவிட்டுத் தேடுதலே பொருளாகும், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், காதல் இருவர் - (ஒருவர்மேல் ஒருவர்) ஆசையுள்ள (கொழுநன் மனைவி என்னும்) இருவரும், கருத்து ஒருமித்து-(தமது) மனமொன்றுபட்டு, ஆதரவுபட்டதே இன்பம் - அன்பாய்ப் பொருந்தியிருத்தலே இன்பமாகும், பரனைநினைந்து-கடவுளைநினைந்து, இம்மூன்றும் விட்டதே-இந்த மூன்றினையும் விட்டொழிந்ததே, பேரின்பவீடு-பேரானந்தத்தைத் தருகிற மோட்சமாகும், எ-று.

இதனோடு இதுநீங்குமென்று பாடியது.

64. தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்றா ருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

இ-ள். தாயோடு அறுசுவைபோம்-தாயுடன் அறுசுவையுண்டியும் நீங்கும், தந்தையொடு கல்விபோம்-தகப்பனுடன் கல்வியும் நீங்கும், சேயோடு தான்பெற்ற செல்வம்போம் - புதல்வனுடன் தான்படைத்த செல்வமும் நீங்கும், உற்றாருடன் ஆய வாழ்வுபோம்-உறவினருடன் (ஒருவனுக் குண்டாயிருக்கிற) சுகவாழ்க்கைநீங்கும், உடன்பிறப்பால் தோள்வலிபோம்-சகோதரனோடு புஜபலம் நீங்கும், பொன்தாலியோடு எவையும்போம்-பொற்றாலியை யுடையவளாகிய மனைவியோடு எல்லா நன்மைகளும் நீங்கும்.

தாய்முதலியோர் நீக்கத்தில் ஒவ்வொருநலம் நீங்கும்; மனைவிநீக்கத்தில் எல்லாநலங்களும் நீங்குமென்பது கருத்து.

இவர்க்கிது துரும்பென்று பாடியது.

65. போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் றுரும்பு.

இ-ள். போந்த உதாரனுக்கு - (கொடைக்கென்றே) வந்து பிறந்த உதாரகுண முள்ளவனுக்கு, பொன்துரும்பு - பொன்னானது துரும்புக்கு நிகராகும், சூரனுக்கு-சௌரியமுள்ளவனுக்கு, சேர்ந்தமரணம் - பொருந்திய மரணமானது, சிறுதுரும்பு - சிறுதுரும்புக்கு நிகராகும், ஆய்ந்த அறிவோர்க்கு-நல்லநூல்களை யாராய்ந்த அறிஞருக்கு, நாரி-பெண்ணானவள், அருதுரும்பு ஆம் - அற்பமாகிய துரும்புக்கு நிகராவாள்; இல்லறத்துறவோர்க்கு-இல்வாழ்க்கையை விட்டு நீங்கினவர்களுக்கு வேந்தன்-அரசனானவன்; துரும்புக்கு நிகராவான்.

தம்மை யாசித்தவர்களுக்குக் கொடாதபோது சம்பூரணமான
செல்வமுடையவர்க்கும் குறைவுநேரிடும் என்னு நீதி
தோன்ற, பரமசிவத்தின் பிட்சாடனத் திருக்
கோலத்தை அலங்கரித்துப் பாடியது.

66. மேற்பார்க்கமைந்தரும் மூவாவெருதும் விளங்கு கங்கை
நீர்ப்பாய்ச் சனுநன் னிலமுமுண் டாகியு நின்னிடத்தின்
பாற்பாக் கியவதி நீங்சா திருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாமலன்றோ பெருங்கோயி லிறையவனே.

இ-ள். மேல்பார்க்க மைந்தரும்-மேற்பார்வை பார்த்துவரப் புதல்வரும், மூவா எருதும் - முதிராத எருதும், விளங்கு கங்கைநீர் பாய்ச்சலும்-விளங்குகின்ற கங்காநதியின் நீர்பாய்ச்சலும், நல்நிலமும் உண்டாகியும்-நல்லநிலமும் உண்டாயிருந்தும், நின் இடத்தின் பால்பாக்கியவதி நீங்காதிருந்தும்-உன்இடப்பாகத்தில் பாக்கியவதியாகிய உமாதேவி நீங்காதிருந்தும், ஏற்பார்க்கு இடாமல்அன்றோ - இரப்பவர்க்குக் கொடாமையாலன்றோ, பலிக்கு உழன்றீர் - (நீர்) பிச்சையின்பொருட்டு உழன்றீர், பெருங்கோயில் இறையவனே - பெருங்கோயிலில் எழுந்தருளிய இறைவனே.

வீரமுதலிய இல்லாத ஒருவன் தன்னைப் பாடும்படி

கேட்டபோது பாடியது.

67 மூவர்கோவையுமூவிளங்கோவையும்
பாடியவென்றன்பனுவல்வாயால்
என்னையும்பாடுகவென்றனையெங்ஙனம்
பாடுதுமியாங்களிறுபடுசெங்களம்
கண்ணிற்காணீர்வெளிறுபடுநல்யாழ்
விருப்பமாய்க்கேளீர்
இலவவாய்ச்சியரிளமுலைபுல்லீர்
புலவர்வாய்ச்சொற்புலம்பலுக்கிரங்கிலீர்
ஊடீருண்ணீர்கோடீர்கொள்ளீர்
ஓவாக்கானத்துயர்மரம்போலத்
தாவாக்கனியிற்றோன்றினீரே.

இ-ள். மூவர் கோவையும்-மும்மூர்த்திகளுக்கு இறைவனையும், மூவிளங்கோவையும்-இளமையுள்ள மூவேந்தரையும், பாடிய-பாடின, என்றன்-எனது, பனுவல்வாயால்-நூல்பயின்றவாயினால், என்னையும் பாடுக என்றனை-என்னையும் பாடக் கடவையென்று நீசொல்லினை, யாம் எங்ஙனம்பாடுதும்-யாம் எவ்வாறு பாடுவோம், களிறுபடு செங்களம் கண்ணில் காணீர்-யானைகளிறக்கின்ற செவந்தபோர்க்களத்தை கண்ணிற்கண்டிலீர், வெளிறுபடு நல்யாழ் விருப்பமாய் கேளீர்-வெண்மையாகிய நல்லவீணையை விருப்பமாய்க்கேட்டிலீர், இலவவாய்ச்சியர் இளமுலைபுல்லீர் - முருக்கமலர் போன்ற வாயையுடைய மாதரது இளமுலைகளைத் தழுவிலீர், புலவர்வாய்ச்சொல் புலம்பலுக்கு இரங்கிலீர்-புலவர் வாய்ப்பாடலாகிய புலம்பலுக்கு இரங்கிலீர், ஊடீர் உண்ணீர்-ஊடுகின்றிலீர் (அநுபோகரசத்தை) உண்டிலீர், கோடீர்கொள்ளீர்-கொடுத்திலீர்கொண்டிலீர், ஓவாகானத்து - (மரநெருக்கம்) நீங்காதகாட்டில் உள்ள, உயர்மரந்தன்னில்-உயர்ந்தமரத்தில் (பழுத்த), தாவாகனியின் - எட்டப்படாத கனியைப்போல, தோன்றினீரே-உண்டாயிருக்கின்றீரே. எ-று.

கொள்ளீர் என்றது வித்வான்களால் பாடல்பெற்றிலீர் என்றபடி.

துர்வியாச்சியம் செய்வோன் சுற்றம் அழியும் என்னும் நீதிதோன்றப் பாடியது.

68. கல்வியுடையீர் கருங்கானகத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போ லன் மாண்டு.

இ-ள். வல்லாய்கேள்-வல்லவனே கேட்பாயாக, வெல்லாவழக்கை-வெல்லாத துர்வியாச்சியத்தை, விலைவாங்கிவெல்விக்கும்-விலைக்குக்கொண்டு வெல்லும்படிச் செய்கிற, வல்லாளன் சுற்றம்போல்-வன்கண்ணனது உறவினர்போல, மாண்டு-பட்டு, கல்வி உடையீர் - கல்வியுடையீரே, கருகானத்து இடையே - கரியகானகத்தினிடையில், நெல்லி இலை உதிர்ந்து நிற்பது எவன்-நெல்லியிலையுதிர்ந்து நிற்பதற்குக்காரணம் யாது. எ-று.

பாண்டியனது கலியாணத்தில்தான் விருந்துண்டதைக் குறித்துப் பாடியது.

69. வண்டமிழைத் தேர்ந்த வழுதிகலியாணத்
துண்டபெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்.

இ-ள். வள்தமிழைத்தேர்ந்த - வளமாகிய தமிழ்நூல்களை ஆராய்ந்த, வழுதி கலியாணத்து-பாண்டியன் விவாகத்தில், உண்டபெருக்கம் உரைக்கக்கேள்-யான்விருண்ட பெருமையைச் சொல்லக் கேட்பாயாக, அண்டி நெருக்கு உண்டேன்-கிட்டிநெருக்கப் பட்டேன், தள் உண்டேன்-தள்ளப்பட்டேன், நீள்பசியினாலே சுருக்கு உண்டேன்-மிகுந்தபசியினால் இளைக்கப்பெற்றேன், சோறு உண்டிலேன்-அன்னமொன்றையுமே உண்ணப்பெற்றேனில்லை. எ-று.

மலைநாடு முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடியது.

70. வேழமுடைத்துமலைநாடுமேதக்க
சோழவளநாடுசோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடுமுத்துடைத்துத்தெண்ணீர்வயற்றொண்டை
நன்னாடுசான்றோருடைத்து.

இ-ள். மலைநாடு வேழம் உடைத்து-மலைநாடானது யானைகளையுடையது, மேதக்க சோழவளநாடு சோறு உடைத்து - மேன்மைபொருந்திய சோழவளநாடு சோற்றையுடையது, பூழியர்கோன் தென்னாடு முத்து

உடைத்து - சேரனது தென்னாடு முத்தையுடையது, தெள்நீர் வயல்தொண்டை நன்னாடுசான்றோர் உடைத்து - தெளிந்தநீர்நிறைந்த வயல்சூழ்ந்த நல்லதொண்டைநாடு பெரியோரையுடையது. எ-று.

—:—

ஔவையார் முதலிய எழுவரும் பிறந்தவுடனே தாயாராகிய ஆதியென்பவள், இவர்களைவிட்டு நீங்கமாட்டாமல் மயங்கும்போது அவளுக்கு மனவுறுதி யுண்டாகும்படி பாடியவை.

ஔவையார்.

1. இட்டமுடனென் றலையிலின்னபடியென் றெழுதி
விட்டசிவனுஞ்செத்துவிட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும்பாரமவனுக்கன்னாய்
நெஞ்சமேயஞ்சாதேநீ

இ-ள். அன்னாய்-தாயே, இட்டமுடன்-விருப்பத்தோடு, என்தலையில்-என்சிரசில், இன்னபடி என்று-(சுகதுக்கங்கள்) இவ்வாறு நிகழ்கவென்று, எழுதிவிட்டசிவனும் செத்துவிட்டானோ - எழுதிவிட்டசிவனும் இறந்துபோயினனோ, முட்டமுட்டபஞ்சமே ஆனாலும்-மிகப்பெரும் பஞ்சமேயாயினும், பாரம் அவனுக்கு - (எம்மைக்காக்கவேண்டிய) பாரம் அவனுக்கேயாகும், (ஆதலால்) நீநெஞ்சம் அஞ்சாதே-நீமனமஞ்சாதே. எ-று.

உப்பை.

2. அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்கும்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகன்—முற்றவே
கற்பித்தான்போனானோகாக்கக்கடனிலையோ
அற்பனோவன்னாயரன்.

இ-ள். அத்திமுதல் எறும்பு ஈறு ஆன - யானைமுதல் எறும்புகடையான உயிர் அத்தனைக்கும் உயிர்களெல்லாவற்றுக்கும், சித்தம் மகிழ்ந்து அளிக்கும் தேசிகன்-மனமகிழ்ந்து (உணவுமுதலியவற்றைக்) கிருபைசெய்கிற பரமகுருவாய், முற்றகற்பித்தான்-உலகமுழுதும் கற்பித்தவன், போனானோ-இறந்தானோ, காக்க - (யாவரையும்) காத்தலுக்கு, கடன் இல்லையோ-(அவனுக்கு) கடமையில்லையோ, அன்னாய்-தாயே, அரன்-சிவபெருமான், அற்பனோ-புன்மையனோ. எ-று.

அதிகமான்.

3. கருப்பைக்குண்முட்டைக்குட்கல்லினுட்டேரைக்கும்
விருப்புற்றமுதளிக்குமெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டிவளர்க்கானோவோகெடுவாயன்னாய்கேள்
வாட்டமுனக்கேன்மகிழ்.

இ-ள். கருப்பைக்குள்-கருப்பைக்குள்ளுள்ள உயிருக்கும், முட்டைக்குள் - முட்டைக்குள்ளுள்ள உயிருக்கும், கல்லினுள் தேரைக்கும் கல்லுக்குள்ளிருக்கிற தேரைக்கும், விருப்புற்று-விரும்பி, அமுது அளிக்கும்-உணவையூட்டுகின்ற, மெய்யன்-அழியாதவன், உருப் பெற்றால்-உருவம் பெற்றால், ஊடிவளர்க்கானோ-ஊட்டிவளர்க்கமாட்டானோ, ஓகெடுவாய்-ஆகெடுவாய்,அன்னாய்-தாயே, கேள்-கேட்பாயாக, உனக்கு வாட்டம் என்-உனக்கு வாட்டம் யாதுக்கு, மகிழ்-மகிழ்ந்துசெல். எ-று.

கருப்பைக்குளுள்ள வுயிர்கள்-மனிதர் மிருகம் முதலாயின; முட்டைக்குள்ளுள்ள வுயிர்கள்-கோழிமுதலிய பறவைகளும் பாம்புமுதலியவும்.

உ றவை

4. **சண்டப்பைக்குள்ளுயிர்தன்றாயருந்தத்தானருந்தும்**
அண்டத்துயிர்பிழைப்பதாச்சரியம்—மண்டி
அலைகின்றவன்னாயரனுடையவுண்மை
நிலைகண்டுநீயறிந்துநில்.

இ-ள். சண்டப்பைக்குள் உயிர்-கருப்பமாகிய பையிலுள்ள உயிரானது,தன் தாய் அருந்த-தன் தாய் உண்ண, தான் அருந்தும் - தானும் உண்ணும், அண்டத்து உயிர்பிழைப்பது ஆச்சரியம் - முட்டையிலுள்ள உயிரானது பிழைத்தல் அதிசயம், மண்டி அலைகின்ற அன்னாய்-மிகுதியாய் அலைகின்றதாயே, அரனுடைய உண்மைநிலை-சிவபெருமானது மெய்யாகியநிலைமையை, நீகண்டறிந்துநில் - நீகண்டறிந்து (சலியாமல்) நிற்கக்கடவாய்.

க பி ல ர்.

5 **கண்ணுழையாக்காட்டிற்கருங்கற்றவளைக்கும்**
உண்ணும்படியறிந்தூட்டுமவர்—நண்ணும்
நமக்கும்படியளப்பார்நாரியோர்பாகர்
தமக்குத்தொழிலென்னதான்.

இ-ள். கண்ணுழையா காட்டில்-கண்ணும் நுழையப் பெறாத காட்டிலுள்ள, கருங்கல் தவளைக்கும் - கருங்கல்லினுள் வாழ்கின்ற தேரைக்கும், உண்ணும்படி அறிந்து ஊட்டுமவர் - உண்ணும் முறையறிந்து உண்பிப்பவர், நண்ணும் - அவரையடைந்திருக்கிற, நமக்கும் படி அளப்பர்—, நாரி ஓர்பாகர் தமக்கு-பெண்ணை யொருபாகத்தி லுடையவராகிய சிவபெருமானுக்கு, தொழில் என்ன-(இதைவிட) வேறு என்னவேலை யிருக்கின்றது.

வள்ளியம்மை.

6. **அன்னைவயிற்றிலருத்திவளர்த்தவன்றான்**
இன்னும்வளர்க்கானோவென்றாயே—மின்னாவாம்

சூடும்பெருமான்சுடுகாட்டினின் றுவிளை
யாடும்பெருமானவன்.

இ-ள். என்தாயே—, மின் அரவம் சூடும்பெருமான் - மின்னுகின்ற பாம்பைத் தரிக்கின்ற சிவபெருமானும், சுடுகாட்டில் நின்று விளையாடும் பெருமான்-மயானத்தில்நின்று விளையாடும் பெருமானும், அன்னைவயிற்றில் அருத்திவளர்த்தவன் - தாய்வயிற்றி லிருக்கும்போதே ஊட்டிவளர்த்தவனுமாகிய, அவன்-அந்தச் சிவபெருமான், இன்னும் வளர்க்கானோ - இனிமேலும் வளர்க்கமாட்டானோ(வளர்ப்பான், நீவருந்தாது செல்வாய்),எ-று.

திருவள்ளுவர்.

7 எவ்வுயிருங்காக்கவொருவீசனுண்டோவில்லைபோ
அவ்வுயிரில்யானொருவனல்லேனோ—வவ்வி
அருகுவதுகொண்டிங்கலைவதேனன்னை
வருகுவதுதானேவரும்.

இ-ள். எவ்வுயிரும்காக்க-எல்லாவுயிர்களையும் காப்பதற்கு, ஒரு ஈசன் உண்டோ இல்லையோ-ஒப்பற்ற சிவபெருமான் உளனோ இலனோ, அவ்வுயிரில்-அந்தவுயிர்களுள்ளே, யான் ஒருவன் அல்லேனோ-நானொருவனல்லேனோ, வவ்வி-விரும்பி, அருகுவது கொண்டு - அழியும்பொருளைக்கொண்டு, இங்கு அலைவது என் - இவ்விடத்து அலைவது யாதுக்கு, அன்னே-தாயே, வருவது தானேவரும்-வரும்பொருள் தானேவரும் (நீவருந்தவேண்டாம்), எ-று.

தேவர்கள் ஊர்த்துவ நடனத்துக்குக் காரணம் யாதென்று
கேட்டதற்கு விடைகொடுத்தது.

1. பூவிலயனும்புரந்தரனும்பூவுலகைத்
தாவியளந்தோனுந்தாமிருக்க—நாவில்
இழைநக்கிநூனெருடுமேழையறிவேனோ
குழைநக்கும்பிஞ்ஞகன்றன்கூத்து.

இ-ள். பூவில் அயனும் - தாமரைமலரில் வாழும் பிரமனும், புரந்தரனும்-இந்திரனும், பூவுலகைதாவி அளந்தோனும் இருக்க-அழகாகிய லோகங்களைத் தாவி யளந்ததிருமாலும் இருக்கச்செய்தே, நாவின் இழைநக்கி நூல் நெருடும்-நாவினால் நூலிழையைநக்கி நெருடுகின்ற,ஏழை-ஏழையாகிய நான், குழை நக்கும் பிஞ்ஞகன்தன்கூத்து - கழன்றுவிழுந்த குண்டலத்தை நாவாற்சப்பி (காதில்) ஒற்றியெடுத்து அணிந்த சிவபெருமானதுகூத்தின்பெருமையை, அறிவேனோ-அறியவல்லேனோ. எ-று.

சிவபெருமான் திருவாலங்காட்டில் ஊர்த்தவ நடனஞ்செய்யும்போது காதில் அணிந்திருந்த குண்டலம் கழன்று கீழேவிழுந்ததாகவும், அவர் தமது நடனத்தை நிறுத்தாமலே அதைக் காதினால் ஒற்றி எடுத்து அணிந்ததாகவும் பூர்வகதை பின்னுகன்-தலைக்கோல மணிந்தவன்.

திருவள்ளுவர் அகங்கரித்திருந்த சங்கப்புலவரைச் செயிக்கப்போன
போது, அவர்கள் திருவள்ளுவரைநோக்கி, நீர் ஐயரோ என்றும்,
ஞானவானோ என்றும், என்னசாதி என்னசமயம் என்றும்,
எந்த ஊர் என்றும், அப்படி நில் என்றும்,
இரும் என்றும், போம் என்றும்
கூறியபோது பாடியவை.

2. ஐயரென்றுரைத்தீர்நாயேற்கடுக்குமோவருளில்லேனை
பொய்யொடுகளவுமற்றுப்புலன்களையொடுக்கிக்கொண்டு
உய்யவேபுலன்களைந்துமுயர்பரவெளியுள்ளாக்கி
வெய்யவன்மதியம்போலவிரவுவாரையராவார்.

இ-ள். அருள் இல்லேனை - திருவருள்பெறாத என்னை, ஐயர் என்று உரைத்தீர்-ஐயரே யென்று சொன்னீர். நாயேற்கு அடுக்குமோ-நாயினேனுக்கு(அந்தப்பெயர்) பொருந்துமோ, பொய்யொடுகளவும் அற்று-பொய்யோடுகளவும் ஒழிந்து, புலன்களை ஒடுக்கிக்கொண்டு - ஐம்புலன்களையடக்கிக்கொண்டு, உய்ய-பிழைக்கும்படி, புலன்கள் ஐந்தும்-ஐம்பொறிகளையும், உயர்பர வெளியுள் ஆக்கி-உயர்ந்தபரமாகாயத்திற் செலுத்தி, வெய்யவன் மதியம்போல விரவுவார் - சூரியசந்திரகலைகளாகிய இடைபிங்கலைகள் ஒன்றி நிற்றல்போல அதில்கலந்து நிற்பவர், ஐயர் ஆவார்-ஐயராவார்.எ-று

3. ஞானவானென்றுசொன்னீர்நாதவிந்துவுங்கடந்து
கானலைவரையுஞ்சுட்டுக்கடுவெளிபரமாநந்தந்
தானெனுமவையிரண்டுந்தவிர்ந்துதன்வசமுங்கெட்டு
மோனமுங்கடந்தேயப்பான்முடிந்தவன்ஞானியாவன்.

இ-ள். ஞானவான் என்றுசொன்னீர் - ஞானவானென்று சொன்னீர், நாதவிந்துவுங்கடந்து-நாததத்துவத்தையும் விந்துதத்துவத்தையும் தாண்டி, கானல் ஐவரையும் சுட்டு - கானல்நீர் போன்ற பஞ்சவிஷயங்களையும் நீறாக்கி, கடுவெளி பரமாநந்தம் - கடுவெளியாகிய பேராநந்தமும், தான்-தானும், என்னும்-என்கிற, அவை யிரண்டும்-அவ்விரண்டையும், தவிர்ந்து ஒழிந்து, தன்வசமுங்கெட்டு - தன்வசமும் ஒழிந்து, மோனமுங்கடந்து-மௌனநிலையையுந் தாண்டி, அப்பால் முடிந்தவன்-அப்புறம் முடிவுபெற்றவன், ஞானி ஆவன்-ஞானவானவன். எ-று.

4 சாதியிலேதொண்ணூற்றொன்பானஞ்சாதி
சமயத்திற்பதின்மூன்றுஞ்சமயமாகும்
நீதியிலேசிவனுடையநீதியாகும்
நிலைமையிலேவேதாந்தநிலைமையாகும்
ஆதியிலேயெங்களூர்கருவூராகும்
அந்தத்திற்போயடைவோம்பேரூர்தன்னில்
சோதியிலேபரஞ்சோதிக்கூட்டமாகும்
சொல்லுதற்குமெங்கள்குலஞ்சுக்கிலமதாமே.

இ-ள். சாதியிலே தொண்ணூற்றொன்பான் ஆம் சாதி - சாதியிலே தொண்ணூற்றொன்பதாஞ்சாதி, சமயத்தில் பதின்மூன்றும் சமயம் ஆகும்-சமயத்தில் பதின்மூன்றுஞ் சமயமாகும், நீதியிலே சிவனுடைய நீதி ஆகும்-நீதியிலே சிவபெருமானது நீதியாகும், நிலைமையிலே வேதாந்த நிலைமை ஆகும்-நிலைமையில் வேதாந்த நிலைமையாகும், ஆதியிலே எங்கள் ஊர் கரு ஆர் ஆகும்-பூருவத்தில் எங்களூர் கருவூராகும், அந்தத்தில் பேரூர் தன்னில்போய் அடைவோம்-முடிவில் பேரூரில்போய்ச் சேர்வோம், சோதியிலே பரஞ்சோதிக் கூட்டமாகும்—, சொல்லுதற்கும்-சொல்வதற்கும், எங்கள் குலம்-எங்கள் குலமானது, சுக்கிலம் ஆம்-சுக்கிலகுலமாகும். எ-று.

தொண்ணூற்றொன்பான் சாதி என்றது - தொண்ணூற்றாறு தத்துவங்களுடன், நாததத்துவத்தையும், விந்து தத்துவத்தையும் கூட்டி சாதி தொண்ணூற்றெட்டென்பதும், இவற்றைக் கடந்து நின்றவன் தொண்ணூற்றொன்பதாம் சாதியுடையான் என்பதும், சங்கேதப்பொருள். பதின்மூன்றும் சமயம் என்றது - அகச்சமயம் ஆறும், புறச்சமயம் ஆறும் ஆகிய பன்னிரண்டையுங் கடந்த நிலையை. சிவனுடைய நீதியாவது - சிவபெருமான் சர்வசங்காரகாலத்தில் எவற்றையும் சுட்டெரித்துத் தனித்து நிற்றல்போல சகலகர்ம பரித்தியாகஞ்செய்து நிற்கும்நீதி. கருவூர் என்றது-தாயின் உதரத்தில் தரித்தகருவை. பரஞ்சோதிக்கூட்டம் என்றது-சோமசூரியாக்கினிகளுக்கு மேலாகிய பேரொளிப்பிழம்பை—, இது யோகிகளுக்குக் காணப்படுவது.

5 எந்தவூரென்றீரிருந்தவூர்நீர்கேளீர்
அந்தவூர்ச்செய்தியறியீரோ—அந்தவூர்
முப்பாழும்பாழாய்முடிவிலொருசூனியமாய்
அப்பாலும்பாழென்றறி.

இ-ள். எந்த ஊர் என்றீர்-எந்தவூரென்றுகேட்டீர், இருந்த ஊர் நீர் கேளீர் - (நான்முன்னே) இருந்தவூரை நீர் கேட்கக்கடவீர், அந்த ஊர்செய்தி அறியீரோ-அந்தவூரின் செய்தியை அறியீரா, அந்த ஊர்-அந்த வூரானது, முப்பாழும்பாழ் ஆய்—, முடிவில் ஒரு சூனியம் ஆய்—, அப்பாலும்-அப்புறமும், பாழ் என்று அறி-பாழேயென் றுணரும், எ-று.

மூப்பாழ் என்றது, ஜகஜீவபரங்களின் இன்மையை இதனைச் சூனிய மென்றும் வழங்குவார். இதன்விரிவெல்லாம் குருமுகத்தாலறிக.

6. நில்லுநில்லென்றுசொன்னீர்நேசபாசங்களைந்தும்
புல்லறிவோடுவாங்காப்புலைகொலைகளவுமற்றுச்
சொல்லுதற்கரியஞானச்சுழுமுனைமுடியின்மீதில்
எல்லையுங்கடந்தேயப்பாலேகமானவர்கணிற்பார்.

இ-ள். நில்லுநில்லென்று சொன்னீர்,— நேசபாசங்கள் ஐந்தும்-ஆசாபாசங்கள் ஐந்தையும், புல் அறிவோடுவாங்கா-அற்பபுத்தியோடுநீக்கி, புலை கொலைகளவும் அற்று-புலாலுண்டல் கொலைசெய்தல் திருடல் என்பவைகள் ஒழிந்து, சொல்லுதற்கு அரியஞானச்சுழுமுனை முடியின்மீதில்,—எல்லையுங்கடந்து-எல்லையையுந்தாண்டி, அப்பால்-அப்புறம், ஏகம் ஆனவர்கள் நிற்பார்-ஒன்றானவர்கள் நிற்பார்கள், எ-று.

சுழுமுனை-இடைபிங்கலைக்கு இடையிலுள்ளது. இது நடுநாடி எனவும்படும். முடியின்மீதி னெல்லையுங் கடந்து என்றது, இந்த மூன்றுநாடிகளொருங்குகூடிய இடத்தையுங் கடந்துநிற்றலை.

7. இருமிருமென்றுசொன்னீரேற்குமோவேழையேற்குத்
தருபொருளுணர்ந்துசைவசமயமுமனைத்துநீங்கி
மருடருவினையுநீங்கிமாசிலாவுண்மைஞானம்
பொருந்தினரிருப்பர்பின்புபொறாதவரிறப்பர்தாமே

இ-ள். இரும் இரும் என்றுசொன்னீர், - (அப்படிசொல்லல்) ஏழையேற்கு ஏற்குமோ-ஏழையேனுக்குத் தகுமோ, தருபொருள் உணர்ந்து-(அன்பர்விரும்பினவற்றையெல்லாம்) தருகின்ற உண்மைப் பொருளையறிந்து, சைவசமயமும் அனைத்தும் நீங்கி-சைவசமயப்பற்றையும் மற்றெல்லாப்பற்றையும் நீங்கி, மருள்தருவினையும் நீங்கி-மயக்கத்தை யுண்டாக்குகிற வினைகளையும் நீங்கி, மாசு இல்லா-குற்றமில்லாத, உண்மை-ஞானம்பொருந்தினர் இருப்பர் - மெய்ஞ்ஞானத்தை யடைந்தவர்கள் இருப்பார்கள், பின்பு பொறாதவர் இறப்பர் - பிறகு (இக்குணங்களைப்) பொறுக்காதவர் இறந்தொழிவர்.

8. போமெனவுரைத்தீரென்னைப்பொறியொடுபுலன்களைந்தும்
ஆமெனுமவிச்சையோடுமங்ஙனேமதித்துக்கொண்டே
ஏமமுஞ்சாமமற்றேயிரவொடுபகலுமற்றுச்
சேர்மனுர்பதியைவிட்டுத்துறந்தவர்போவரன்றே.

இ-ள். என்னைபோம் என உரைத்தீர்-என்னைப் போமென்று சொன்னீர், பொறியொடுபுலன்கள் ஐந்தும் - பொறிகளோடு ஐம்புலன்களையும், ஆம் என்னும் அவிச்சையோடும்-ஆமென்கிற அஞ்ஞானத்துடன், அங்ஙு

னே மதித்துக்கொண்டே - அவ்விடத்தே கணித்துக்கொண்டு, ஏமமும் சாமம் அற்று-ஏமசாமங்களுமொழிந்து, இரவொடுபகலும் அற்று - இராப் பகல்களுமொழிந்து, சோமனார்பதியைவிட்டுத் துறந்தவர்போவர்-சோம னார்பதியைவிட்டுத் துறந்தவர்போவர் - சோமனுருடைய இடத்தைவிட்டு நீங்கினவர் போவர், எ-று.

ஏமம்-இரவு சாமம் - அதின் பகுதி சோமனார்பதி - சந்திரமண்டலம்; இது ஆருதாரங்களுக்கு மேலாயிருப்பது.

இவர் மனைவியாராகிய வாசுகியென்பவர் இறந்தபோது

மனம்வருந்திப் பாடியது.

9. அடிசிற்கினியாளேயன்புடையாளே
படிசொற்றவறுதபாவாய்—அடிவருடிப்
பின்றூங்கிமுன்னெழுந்தபேதையேபோதியோ
என்றூங்குமென் கணிரா.

இ-ள். அடிசிற்கு இனியாளே-(எனக்கு) அன்ன மூண்பித்தலில் இனி யவளே, அன்பு உடையாளே-(என்னிடத்து)அன்புடையவளே, படிசொல் தவறுத பாவாய்-என்சொற்படியே காரியங்களைச்செய்தலில் பிழைபடாத பாவையே, அடிவருடி - (முன்னேநான் நித்திரைசெய்ய என்) கால்களை வருடிக்கொண்டிருந்து, பின்தூங்கி-பின்னே நித்திரைசெய்து, முன் எழு ந்த-(எனக்குமுன்) எழுந்திருந்த, பேதையே-பெண்ணே, போதியே (என் னைவிட்டுப்) போகின்றுயோ, இரா-இராக்காலத்தில், என்கண்-என்கண் கள், என்தூங்கும்-எப்படியுறங்கும், எ-று.

பாவை-பிரதிமைபோலும் உருவமுடையவள்.

சோழநாட்டெல்லை இதுவெனப் பாடியது.

1 கடல்கிழக்குத்தெற்குக்கரைபொருவெள்ளாறு
குடதிசையிற்கோட்டைக்கரையாம்—வடதிசையில்
ஏணட்டுப்பண்ணையிருபத்துநாற்காதம்
சோணட்டுக்கெல்லையெனச்சொல்.

இ-ள். கிழக்குகடல் - கிழக்கில்கடலும், தெற்குகரை பொரு வெள் ளாறு-தெற்கில்கரையில் அலைமோதுகின்ற வெள்ளாறும், குடதிசையில்-மேற்றிசையில், கோட்டைக்கரை ஆம்-கோட்டைச்கரையும் உண்டு, வட திசையில்-வடக்குத்திக்கில், ஏணட்டுப்பண்ணை - ஏணட்டின் வயல்களுள், இருபத்துநாற்காதம்-இந்த இருபத்துநாற்காதம் விஸ்தீர்ணமுள்ள பூமியே சோணட்டுக்கு எல்லையெனச்சொல் - சோழநாட்டின் எல்லையென்றுகூறு.

பாண்டிநாட்டெல்லை இதுவெனப் பாடியது.

2 வெள்ளாறதுவடக்காமேற்குப்பெருவழியாம்
தெள்ளார்புனற்கன்னிதெற்காகும்—உள்ளார
ஆண்டகடல்கிழக்காமைம்பத்தறுகாதம்
பாண்டிநாட்டெல்லைப்பதி.

இ-ள். வெள்ளாறது வடக்கு ஆம்-வெள்ளாறு வடக்கிலுளது, மேற்கு பெருவழி ஆம்-மேற்கில் பெரியவழியுளது, தெள் ஆர் புனல் கன்னிதெற்கு ஆகும் - தெளிவுபொருந்திய நீரையுடைய கன்னியாறு தெற்கிலுளது, உள் ஆர ஆண்டகடல் கிழக்கு ஆம்-மனமார ஆளப்பட்ட கடல் கிழக்கேயுளது, ஐம்பத்தறுகாதம்-(இந்த) ஐம்பத்தறுகாத விஸ்தீர்ணமான பூமியே பாண்டி நாட்டு எல்லைப்பதி-பாண்டிநாட்டின் எல்லையாகிய இடம்.

உள்ளார ஆண்டகடல் என்றது-பலவேந்தராலும் துறைமுகமாயாளப்பட்ட கடலை, எ-று.

சேரநாட்டெல்லை இதுவெனப் பாடியது.

3. வடக்குத்திசைபழனிவான்கீழ்தென்காசி
குடக்குதிசைகோழிக்கோடாம்—கடற்கரையின்
ஓரமேதெற்காகுமுள்ளெண்பதின்காதம்
சேரநாட்டெல்லையெனச்செப்பு.

இ-ள். வடக்குதிசை பழனி-வடதிசையில் பழனியுளது, வான்கீழ் தென்காசி - மேன்மையாகிய கீழ்த்திசையில் தென்காசியுளது, குடக்குத்திசை கோழிக்கோடு ஆம் - மேற்றிசையில் கோழிமலையுளது, கடற்கரையின் ஓரம் தெற்கு ஆகும் - கடற்கரையோரமே தென்றிசையி லுளது, உள்(இந்த நான்குதிசை யெல்லைக்கு) உட்பட்ட, எண்பதின்காதம் - எண்பதின்காத விஸ்தீர்ணமான பூமியே, சேரநாட்டு எல்லை எனச்செப்பு-சேரநாட்டெல்லை யென்று சொல், எ-று.

தொண்டைநாட்டெல்லை இதுவெனப்பாடியது.

4 மேற்குபவளமலைவேங்கடநேர்வடக்காம்
ஆர்க்குமுவரியணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப்பிணாகிதிகழிருபதின்காதம்
நற்றொண்டைநாடெனவேநாட்டு.

இ-ள். மேற்கு பவளமலை-மேற்றிசையில் பவள மலையுளது, வேங்கடம் நேர்வடக்கு ஆம் - திருவேங்கடமலை நேர்வடக்கிலுளது, ஆர்க்கும் உவரி அணிகிழக்கு-ஆரவாரிக்கின்ற கடல் அழகிய கிழக்குத் திக்கிலுளது

பார்க்குள் உயர்பிநாகி தெற்கு - உலகத்தில் உயர்ந்த பிநாகிநதி தென்றிசையிலுளது, திகழ் இருபதின்காதம் - விளங்குகின்ற (இந்த) இருபதின் காத விஸ்தீர்ணமான பூமியே, நல்தொண்டைநாடு எனநாட்டு-நல்லதொண்டை நாட்டின் எல்லை யென்று நிலைபொறுத்து, எ-று.

இராமாயாணத்தை அரங்கேற்றும்பொருட்டுச் சிதம்பரத்திலிருக்கும் தீக்ஷதரிடத்திற் கொண்டுபோய் நெடுநாள் காத்திருந்தும் அவர்களெல்லாரும் ஓரிடத்திற்கூடி அந்தநூலைக் கேளாதிருந்தனர். ஒருநாள் அவருள் ஒருவருடைய குழந்தையைப் பாம்புகடித்து இறந்துபோக, அந்தக்குழந்தையை எல்லாருங்கூடி மயாநத்திற்குக் கொண்டுபோயினர். அப்போது கம்பர் இதுதான் நல்லசமயமென்று அவ்விடத்திற்குப்போய், நீங்களெல்லாரும் ஒருங்குகூடி யிருக்கின்ற இந்தச்சமயந்தவறினால் மறுபடியும் கூடும்படி நேரிடுவது அருமையாதலால், என்னால் பாடப்பட்ட இராமாயணத்தைக் கேட்பீர்களாயின், இந்தக் குழந்தையை நான் பிழைப்பித்துத் தருகிறேன் என்றனர். அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டு, முன்னே குழந்தையை யெழுப்பு மென்றபோது பாடியவை.

5 ஆழியான்பள்ளியணையேயவன்கடைந்த
ஆழிவரையின்மணித்தாம்பே—பூழியான்
பூணேபுரமெரித்தபொற்சிலையிற்பூண்டுநின்ற
நாணேயகலநட.

இ-ள். ஆழியான்பள்ளி அணையே-சக்ராயுதத்தையுடையவனாகிய திருமால் பள்ளிகொள்ளுதற்குரிய சயநமே, அவன்கடைந்த ஆழிவரையில் மணித்தாம்பே - அவன்கடைந்த திருப்பாற்கடலில் மத்தாகநட்ட மந்தரமலையில் கட்டிய அழகிய கடைகயிறே, பூழியான்பூணே-விபூதியைத் தரித்தவனாகிய சிவபெருமானது ஆபரணமே, புரம் எரித்த பொன்சிலையில்பூட்டுநின்ற நாணே-(அவனது) திரிபுரங்களை யெரித்தற்குக் கருவியாயிருந்த (மேருவாகிய)பொன்வில்லிற்பூட்டினநாணே, அகலநட-தூரநடப்பாயாக.

அணையாயும் தாம்பாயும் பூணும் நாணும் இருந்தன ஆதிசேஷன் வாசுகி-தாருகாவனத்திருடியர் வேள்விக்கண்ணே பிறந்த பாம்புகள் என்பவைகளே யாதலாற், பாம்பேயென்றதற்கு இவ்வாறு கூறினர். மணித்தாம்பு-முகப்பில் மாணிக்கமிழைத்த தாம்பு எனினுமாம்.

6 மங்கையொருபங்கர்மணிமார்பிலாரமே
பொங்குகடல்கடைந்தபொற்கயிறே—திங்களையும்
சீறியதன்மேலூருந்தெய்வத்திருக்கோளே
ஏறியபண்பேயிறங்கு.

இ-ள். மங்கை ஒருபங்கர் மார்பில் மணி ஆரமே-மங்கைப் பருவத்தையுடைய உமாதேவியை ஒருபாகத்திலுடையவராகிய சிவபெருமானது மார்

பிலணிந்தமாணிக்க ஆரமே,பொங்கு கடல் கடைந்த பொன்கயிறே-பொங்குகின்ற பாற்கடலைக்கடையக் கருவியாயிருந்த அழகிய கடைகயிறே,திங்களையும் சீறி அதன்மேல் ஊரும் தெய்வம் திருக்கோளே-பிறைச்சந்திரனையும் கோவித்து அதன்மேல் தவழ்கின்ற தெய்விகமாகிய அழகியகிரகமே, எறியபண்பே இறங்கு, நீயேறின பிரகாரமே இறங்குக, எ-று.

7 பாரைச்சுமந்தபடவரவேபங்கயக்கண்
வீரன்கிடந்துறங்குமெல்லணையே-ஈரமதிச்
செஞ்சடையான்பூணுந்திருவாபரணமே
நஞ்சுடையாய்தூரநட.

இ-ள். பாரைசுமந்த படம் அரவே - பூமியைத் தாங்கிய படத்தையுடைய பாம்பே, பங்கயம் கண்வீரன்கிடந்து உறங்கும் மெல் அணையே - தாமரை மலர்போலுங் கண்களையுடைய வீரனாகிய திருமாலானவன் படுத்துறங்குகின்ற மெல்லியசயநமே, ஈரம்மதி செஞ்சடையான்பூணும் திரு ஆபரணமே - குளிர்ச்சியாகிய சந்திரனையணிந்த செவந்த சடாபாரத்தையுடைய சிவபெருமான் தரிக்கின்ற அழகாகிய ஆபரணமே, நஞ்சு உடையாய்-விஷத்தையுடையவனே, தூரநட-அகலப்போ, எ-று.

சீராமன் என்னும் வண்ணான் தனக்கு ஆடைவெளுத்துக்கொடுத்த
நேர்த்தியை மெச்சிப்பாடியது.

8 சிரம்பார்த்தானீசனயன்றேவிதனைப்பார்த்தான்
கரம்பார்த்தான்செங்கமலக்கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்ததிண்புயத்துவண்ணான்சீராமன்
கலைவெளுத்தநேர்த்திதனைக்கண்டு.

இ-ள். உரம்சேர்-வலிமைபொருந்திய, மலைவெளுத்த - மலையும் வெளுத்துப்போவதற்குக் காரணமாகிய, திண்புயத்து-திடமான தோள்களையுடைய, வண்ணான் சீராமன் - வண்ணானாகிய சீராமனென்பவன், கலைவெளுத்த நேர்த்திதனைக்கண்டு-ஆடைகளைச் சலவைசெய்த நேர்த்தியைப்பார்த்து, ஈசன்சிரம்பார்த்தான்-சிவபெருமான் தன் தலையைத் தீண்டிப்பார்த்தான், அயன் தேவிதனைப் பார்த்தான்-பிரமன் தன் மனைவியைத்தொட்டுப்பார்த்தான், செங்கமலக்கண்ணன் - செந்தாமரைமலர்போலுங் கண்களையுடைய திருமாலானவன், கரம் பார்த்தான் - தன் கையை நோக்கினான், எ-று.

ஈசன், அயன், செங்கமலக்கண்ணன், இம்மூவரும் முறையே தத்தமது சிரத்தையும் தேவியையும் கரத்தையும் பார்த்தற்குக்காரணம், சீராமனென்னும் வண்ணான் வெளுத்த வெள்ளாடைகளை நோக்கின மாத்திரமேவெண்ணிறமுள்ள கங்கையும், வெண்ணிறமுள்ள சரசுவதியும், வெண்

ணிறமுள்ள பாஞ்சசந்யம் என்னும் சங்குமே, நன்மை நீங்கினவோ என்னும் ஐயம் அன்றி, இவ்வெண்மைக்கு நம்மிடத்துள்ள கங்கைமுதலியவற்றின் வெண்மை ஒத்திருப்பதோ என்று உவமித்துப்பார்த்தல். மலைவெளுத்தலாவது, இவனதுதோள்களின் பெருமை வலி திரட்சி முதலியவற்றிற்கு ஒவ்வாமை.

சிதம்பரத்தில் இருந்த தம்பிபுகான் என்னும் பெயருள்ள அம்பட்டன்
தமக்கு க்ஷவரஞ்செய்த நேர்த்தியை மெச்சி
அவனைப்புகழ்ந்து பாடியது.

9. ஆரார்தலைவணங்காரார்தாங்கையெடார்
ஆரார்தாஞ்சத்திரத்திலாறுதார்—சீராரும்
தென்புலியூர்மேவுஞ்சிவனருள்சேரம்பட்டத்
தம்பிபுகான்வாசலிலேதான்.

இ-ள். சீர் ஆரும்-மேன்மைநிறைந்த, தென்புலியூர் - தென்புலியூரில், மேவும் - எழுந்தருளியிருக்கின்ற, சிவன் அருள்சேர் - சிவபெருமானது அருள்பொருந்திய, அம்பட்டத் தம்பிபுகான் வாசலிலே - அம்பட்டனாகிய தம்பிபுகான் முற்றத்தில் வந்து, ஆர் ஆர்தலை வணங்கார் - எவரெவர் தலைவளையாதவர், ஆர்ஆர் தாம்கையெடார் - எவரெவர்தாம் கைதூக்காதவர், ஆரார்தாம் சத்திரத்தில் ஆறுதார்-எவரெவர்தாம் (அவன்) சூரியால் அறுத்துப்புண் ஆறப்பெறுதவர், (ஒருவருமில்லை) எ-று.

சிரத்தில் க்ஷவரஞ் செய்யும்போது தலைகுனிதலும், கக்ஷத்தில் க்ஷவரம்செய்யும்போது கைகளை உயரவெடுத்தலும், கத்தித்தொழிலினால் சூடுதணிதலும் உண்டென அவனது தொழிலின் இயற்கையுந் தோன்றுதல் காண்க. சத்திரம்-கத்தி. ஆரார்தாம் சத்திரத்தில் ஆறுதார் என்பதற்கு, அவன் சத்திரத்தில் (உண்டு இளைப்பு) ஆறுதவர் எவர், என வேறுபொருள் படுதலுங்காண்க.

தானும்தன்மனைவியும் பள்ளியறையிலிருக்கும்போது காற்றுகதவைமோத
யாரோ கதவைத்தட்டுகிறார்களென்று நினைத்துக் கதவைத் திறந்து
பார்த்து யாருமில்லாதிருக்கையால் கதவை மோதினது
காற்றென்று தெளிந்து காற்றை முன்னிலை
யாக்கிப் பாடியது.

10. கொற்கையான்மாறன்குலசேகரப்பெருமான்
பொற்கையானகதைபோதாதோ—நற்கமல
மன்றலேவாரிமணிவாசலையசைக்கத்
தென்றலேயென்வந்தாய்செப்பு.

இ-ள். கொற்கையான்-கொற்கைப்பதியை யுடையவனாகிய, மாறன் குலசேகரப்பெருமான் - குலசேகர பாண்டியனாகிய பெருமையை யுடை

யோன். பொற்கையான் ஆனகதை போதாதோ - பொற்கையான் ஆகிய கதை பற்றாதோ, தென்றலே - தென்றற்காற்றே, நல் கமலம் மன்றலே வாரி - நன்மையாகிய தாமரைமலரின் மணத்தையே மூகந்துகொண்டு, மணிவாசலை அசைக்க-ரத்நகசிதமாகிய கதவை யசைத்தற்பொருட்டு; என் வந்தாய்-நீயேன்வந்தாய்.

பாண்டியன் மூடியிருந்த பிறர்வீட்டுக் கதவை தட்டின குற்றத்துக் காகத் தன்கையை வெட்டிக்கொண்டனன். பின் அவனுக்குப் பொற்கை முளைத்தது. இதனை "எனக்குத்தவன்றால்" என்னும் பழமொழிச் செய்யுளாலுமறிக.

ஆறைநகரிலிருக்கும் எகம்பவாணனைப் புகழ்ந்து பாடியவை.

11. பேரரசர்தேவிமார்பெற்றமதலையர்தம்
மார்பகலங்கண்டுமகிழ்வரே—போர்புரிய
வல்லாளகளங்கன்வாணன்றிருநாமம்
எல்லாமெழுதலாமென்று.

இ-ள். பேர் அரசர் தேவிமார் - பெரிய அரசருடைய மனைவிமார், பெற்ற மதலையர்தம் - தாம்பெற்ற புதல்வருடைய, மார்பு அகலம் கண்டு-மார்பின் அகலத்தைநோக்கி, (அம்மார்பில்) போர்புரியவல்லான் அகளங்கன்-போர் செய்ய வல்லவனும் குற்றமற்றவனுமாகிய, வாணன் - வாணனது, திருநாமம் எல்லாம் - திருநாமங்களெல்லாவற்றையும், எழுதலாம் என்று-எழுதலாமென்று கருதி, மகிழ்வர்-களிப்பார்கள், எ-று.

வாணன் திருநாமமெல்லவெழுதலாமென்று கருதினமையால் அவனது பெரும்புகழ் விளங்குகின்றது.

12. உலைக்குரியபண்டமுவந்திரங்கச்சென்றால்
கொலைக்குரியவேழங்கொடுத்தான்—தலைக்குரிய
வாணர்கோனாறைமகதேவனுக்கிந்தப்
பாணனோடென்னபகை.

இ-ள். உலைக்கு உரியபண்டம் உவந்து-உலையிற் பெய்தற்குரிய பொருளாகிய அரிசியை விரும்பி, இரக்கசென்றால் - யாசிக்கப் போனால், கொலைக்குரிய வேழம் கொடுத்தான் - கொல்லுதற்குரிய யானையைத் தந்தான், தலைக்கு உரிய-தலைமைப்பாட்டுக்குரிய, வாணர்கோன்-வாணர்பிரானாகிய, ஆறைமகதேவனுக்கு - ஆறையிலிருக்கும் மகதேவனுக்கு, இந்த பாணனோடு-இந்தப் பாணனுடன், என்னபகை - என்னபகையுளது, எ-று.

பிச்சையேற்க வந்தவனுக்கு யானையைக் கொடுத்தால் அதை அவன் கொண்டுபோய்க் காப்பாற்றமாட்டாமல் வருந்துவானாதலால், "பாணனோடென்னபகை" என்றார்.

13. வாணன்பெயரெழுதாமார்புண்டோ—வாணன்
வாணன்புகழுரையாவாயுண்டோ—வாணன்
கொடிதாங்கிநில்லாதகொம்புண்டோவுண்டோ
அடிதாங்கிநில்லாவரசு.

இ-ள். வாணன் பெயர் எழுதாமார்பு உண்டோ—, மாகதர்கோன் வாணன்புகழ் உரையாவாய் உண்டோ-மகதர் பிரானாகிய வாணனது கீர்த்தியைச் சொல்லாதவாயுளதோ, வாணன் கொடிதாங்கி நில்லாதகொம்பு உண்டோ - வாணனது வெற்றிக்கொடியைத் தாங்கி நில்லாதகொம்புண்டோ, (வாணன்) அடிதாங்கிநில்லா அரசு உண்டோ - வாணனது பாதத்தைத்தாங்கி நில்லாத வேந்தன் உண்டோ, (இல்லை) எ-று.

14. பாண்டியனைப்பேர்மாற்றிப்பாணர்க்கரசளித்த
வாண்டகையென்றுன்னையறியேனோ—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ்செங்கைக்கடகரிவாணாவுனது
பேர்மாற்றுவதரிதோபேசு.

இ-ள். பாண்டியனை பேர்மாற்றி - பாண்டியனது பேரை மாறச் செய்து, பாணர்க்கு அரசு அளித்த-பாணர்க்கு ராஜரீகத்தைக் கொடுத்த, ஆண்தகையென்று-ஆண்மையுடையவனென்று, உன்னை அறியேனோ-உன்னையறியமாட்டேனோ, மூண்டு எழுந்த - திரண்டெழுந்த, கார்மாற்றும்-மேகத்தின் கொடையை மாறப்பண்ணுகின்ற, செம்கை-செவந்தகையினையும், கடம்கரி - மதயானைகளையுமுடைய, வாணா-வாணனே, உனது பேர் மாற்றுவது அரிதோ - உன்பேரையுமாற்றுவது அருமையாகுமோ, பேசு-சொல்வாய், எ-று.

ஆறைநகரிலிருக்கும் இவர், ஏகன் என்பவன் தனக்குச்செய்த நன்றிக்காக அவன்பெயரை முன்னும், கம்பர் தனக்காசிரியர் ஆகையால் அவர் பெயரை இடையிலும், வாணன் தன்னைப் பெற்றவனாகையால் அவன் பெயரைக் கடையிலும், சேர்த்து, ஏகம்பவாணன் எனத் தான் பெயரிட்டுக் கொண்டனர். இவருக்குத் தாய்தந்தையரால் இட்டபெயர் விளங்கவில்லை.

15. பாணன்மதுரைப்பதியாளவைத்தபிரான்
வாணர்புகழவருமேகம்ப—வாணன்
கம்போதகமேநின்கால்பணிவேன்மீண்டு
வரும்பேதகமேவரின்.

இ-ள். பாணன்-பாணனானவன், மதுரைப்பதி ஆள - மதுரை நகரத்தை ஆளும்படி, வைத்த-நியமித்துவைத்த, பிரான்-பெருமான், வாணர்புகழவரும்-கவிவாணர் புகழும்படி தோன்றிய, ஏகம்பவாணன் - ஏகம்புவா

ணன் நடத்துகின்ற, கருபோதகமே-கரியயானையே, மீண்டுவரும்போது-திரும்பி வரும்பொழுது, அகமேவரின் - என்வீட்டிற்கு வருவையாயின், நின்கால் பணிவேன்-உன்பாதத்தை வணங்குவேன், எ-று.

வாணனை யிச்சித்தவளொருத்தி அவனை வணங்குதற்குப் பதிலாக, அவன் ஊர்ந்துசெல்லும் யானையைநோக்கி வணங்கிக்கூறினாள்.

16. என்கவிகையென்சிவிகையென்கவசமென்றுவசம்
என்கரியீதென்பரியீதென்பரே—மன்கவனம்
மாவேந்தன்வாணன்வரிசைப்பரிசுபெற்ற
பாவேந்தரைவேந்தர்பார்த்து.

இ-ள். மன்கவனம்-மிக்கவேகத்தையுடைய, மாவேந்தன் - அசுவஞ்செலுத்துவதில்வல்ல நகுலராஜனை நிகர்த்த, வாணன்-ஏகம்ப வாணனது, வரிசை பரிசுபெற்ற-வரிசைப் பரிசுபெற்றுவருகிற, பாவேந்தரை-கவிராஜரை, வேந்தர்பார்த்து - (அவருக்கெதிரேவருகிற) அரசர்கள் பார்த்து, ஈது என்கவிகை - இந்தப்புலவர் பிடித்துச்செல்லுவது என்குடை, ஈது என்சிவிகை-இந்தப்புலவர் ஏறிப்போவது எனதுதண்டிகை, ஈது என்கவசம்-இந்தப் புலவர் தரித்திருப்பது என்கவசம், ஈது என்துவசம் - இந்தப் புலவர் ஏந்திச் செல்வது என்கொடி, ஈது என்கரி - இந்தப்புலவர் செலுத்திவருவது என்யானை, ஈது என்பரி - இந்தப் புலவர் ஏறிச் செல்லுவது என்குதிரை, என்பர்-என்று சொல்வார்கள், எ-று.

இப்படிக்கூறியதனால், இவன் கவிவாணருக்குப் பரிசிலாகக் கொடுத்தகுடை முதலியவைகள், தனக்குத்தோற்ற அரசர்களுடையன என்றதாயிற்று,

17. சேற்றுக்கமலவயற்றென்னுறைவாணனையான்
சோற்றுக்கரிசிதரச்சொன்னக்கால்—வேற்றுக்
களிக்குமாவைத்தந்தான்கற்றவர்க்குச்செம்பொன்
அளிக்குமாறெவ்வாறவன்.

இ-ள். சேறு-சேற்றின் கண், கமலம் - தாமரைமலர்கள் நெருங்கிய, வயல் - வயல்சூழ்ந்த, தென் ஆறை வாணனை - தெற்கிலுள்ள ஆற்றூரில் வாழ்கின்றவாணனை, யான்-நான், சோற்றுக்கு அரிசிதரச்சொன்னக்கால்-சோற்றுக்கு அரிசியைத் தரச்சொல்லிவேண்டினால், வேறு-அதனின்வேறாகிய, களிக்கு - களிகிளறும்பொருட்டு, மாவை தந்தான்-மாவைக் கொடுத்தான், கற்றவர்க்கு-கற்று வல்லபுலவர்களுக்கு, அவன் செம்பொன் அளிக்கும் ஆறு எவ்வாறு - அவன் செம்பொன்னைக் கொடுக்கும் விதம் எவ்விதம், எ-று.

களிக்குமா என்பது களிக்கும்மா எனப் பிரிக்கப்பட்டு, களிக்கின்ற யானையென வேறுபொருள் தருதல்காண்க.

18. அலங்கலணிமார்பனுறையர்கோன்வாணன்
விலங்குகொடுவருகவென்முன்—இலங்கிழையீர்
சேரற்கோசோழற்கோதென்பாண்டிநாடாளும்
வீரற்கோயார்க்கோவிலங்கு.

இ-ள். அலங்கல் அணிமார்பன்-பூமாலையை யணிந்த மார்பினையுடையவனும், ஆறையர்கோன்-ஆறையர் வேந்தனுமாகிய, வாணன்—, விலங்கு கொடுவருக என்றான் - விலங்கைக் கொண்டு வருகவென்று கட்டளையிட்டான், இலங்கு இழையீர்-பிரகாசியாநின்ற ஆபரணத்தையணிந்த தோழியரே, விலங்கு-(அந்த) விலங்கு, சேரற்கோ-சேரனுக்கோ, சோழற்கோ-சோழனுக்கோ, தென்பாண்டிநாடு ஆளும்வீரற்கோ - தென்பாண்டிநாட்டை யாள்கின்ற வீரனாகிய பாண்டியனுக்கோ, யார்க்கோ - (இவர்களொழிந்தமற்ற) எவருக்கோ (யாமறியோம்), எ-று.

இவ்வாறு கூறியதனால், இவன் மூவேந்தரையும் தளைபூட்டி யடக்கியாளவல்லோனென்றதாயிற்று.

19. தேருளைப்புரவிவாரணத்தொகுதிதிறைகொணர்ந்துவருமன்னநின்
தேசமேதுன துநாமமேதுபுகல்செங்கையாழ்தடவுபாணகேள்
வாருமொத்தகுடிநீருநாமுமகதேவனுறைநகர்காவலன்
வாணபூபதிமகிழ்ந்தளிக்கவெகு வரிசைபெற்றுவருபுலவன்யா
நீருமிப்பரிசுபெற்றுமீளவரலாகுமேகுமவன்முன்றில்வாய் [ன்
நித்திலச்சிகாமாடமாளிகைநெருங்குகோபுரமருங்கெலாம்
ஆருநிற்குமுயர்வேம்புநிற்கும்வளர்பனையுநிற்குமதனருகிலே
அரசுநிற்குமாசைச்சுமந்தசிலவத்திநிற்குமடையாளமே.

இ-ள். தேர்-இரதங்களையும், உளைபுரவி-புறமயிரினையுடைய குதிரைகளையும், வாரணம்தொகுதி-யானைக்கூட்டங்களையும், திறை கொணர்ந்துவரும்-பகுதிப் பொருளாகக் கொண்டுவருகின்ற, மன்ன - அரசனே, நின் தேசம் ஏது-உன்நாடியாது, உனது நாமம் ஏது - உன்பெயர்யாது, புகல்-சொல்வாய் (என்று பாணன்கேட்க) (புலவன் விடையாகக் கூறுவதுயாதெனின்) செங்கையாழ் தடவுபாண - செவந்தகையினால் வீணையைவருடுகின்ற பாணனே, கேள்-கேட்பாயாக, வாரும் - வருவீராக, நீரும் நாமும் ஒத்தகுடி - நீரும் நாமும் (கல்வியால்) ஒததகுடிப் பிறப்பினையுடையோம், மகதேவன்-மகதேவனும், ஆறை நகர் காவலன்-ஆறைநகர்க்கிறைவனுமாகிய, வாணபூபதி-வாணன் என்னும் மண்டலேசுவரன், மகிழ்ந்து அளிக்க-மனமகிழ்ந்து கொடுக்க, வெகு வரிசைபெற்றுவரு புலவன்யான் - அநேகமாகிய வரிசைகளைப் பெற்றுவருகிற புலவன் நான், நீரும் - (என்னைக் கல்வியால் நிகர்த்த) நீரும், இப்பரிசு பெற்று மீளவரல் ஆகும்-இந்தப் பரிசில்களைப்பெற்றுமீண்டுவருதல்கூடும், ஏகும்-போம், அவன்முன்றில்வாய்-அவனது முற்றத்தில், நித்திலம் சிகரம் - முத்துத்தொழி லமைந்தசிகரங்

களையுடைய, மாடமாளிகை நெருங்கு கோபுரம் - மாடமாளிகைகளில் நெருங்கிய கோபுரங்களின், மருங்கு எல்லாம் - எல்லாவிடங்களிலும், ஆரும் நிற்கும்-ஆத்திமரமும் நிற்கும், உயர்வேம்பும் நிற்கும்-உயர்ந்த வேப்பமரமும் நிற்கும், வளர்பனையும் நிற்கும் - உயர்ந்தபனைமரமும் நிற்கும், அதன் அருகிலே - அதன் சமீபத்திலே, அரசுநிற்கும் - அரசமரம் நிற்கும், அரசைசுமந்த சில அத்திநிற்கும்-அரசமரத்தைத்தாங்கிய சில அத்திமரங்கள் நிற்கும், அடையாளம்-(இதுவே அவனுக்குள்ள) அடையாளம், எ-று.

ஆர்-ஆத்தி மாலையைத்தரித்த சோழன்; வேம்பு - வேப்பமாலையைத் தரித்தபாண்டியன்; பனை-பனை மாலையைத் தரித்தசேரன்; அரசு - மற்ற அரசர்கள். அரசைச்சுமந்த அத்தி-அரசைத்தாங்கிய யானைகள், எனவேறுமொருபொருள் தோன்றுதல் காண்க.

20. வாணன்புகழ்க்கெல்லைவாழ்த்துவோர்நாவெல்லை
வாணன்புகழ்க்கெல்லைமண்ணெல்லை—வாணன்
படைக்கெல்லைதிக்கெல்லைபைந்தமிழ்தேர்வாணன்
கொடைக்கெல்லையேற்பவர்தங்கோள்.

இ-ள். வாணன்புகழ்க்கு எல்லை - வாணனது கீர்த்திக்கு எல்லையாவது, வாழ்த்துவோர் நா எல்லை-புகழ்வோரது நாவினெல்லையே, வாணன் புகழ்க்கு எல்லை, வாணனது கீர்த்திக்கு எல்லையாவது, மண் எல்லை-மண்ணினது எல்லையே, வாணன்படைக்கு எல்லை-வாணனது சேனைக்கெல்லையாவது, திக்கு எல்லை - திசைகளினெல்லையே, பைந்தமிழ் தேர்வாணன் கொடைக்கு எல்லை-பசுந்தமிழை யாராய்ந்து தெளிந்த வாணன் ஈகைக்கு எல்லையாவது, எற்பவர் தம்கோள் - இரப்பவர்களுடைய மனக்கொள்கையே, எ-று.

21. வாட்டானைத்தென்னவர்கோன்மாகதற்குத்தோற்றசெய்தி
கேட்டானத்தீங்குரலுங்கேட்டதற்பின்—நாட்டம்
பொருந்தாயிரவிழியான்பொன்முடியைச்சாய்த்தங்
கிருந்தானிங்கென்னாகுமென்று.

இ-ள். வாள்தானை-வாட்படையையுடைய, தென்னவர்கோன்-பாண்டியன், மாகதற்குதோற்ற செய்திகேட்டான் - ஏகம்பவாணனுக்குத்தோற்ற செய்தியைக்கேட்டான், அத்தீங்குரலும் கேட்டதற்பின் - அந்தமதுரமாகிய குரலையுங் கேட்டபிறகு, நாட்டம்பொருந்து ஆயிரவிழியான்-பார்வைபொருந்திய ஆயிரங்கண்களையுடைய இந்திரன், பொன் முடியைசாய்த்து - பொன்முடியையவளைத்து, இங்கு என் ஆகும் என்று - இவ்விடத்தில் என்னவிளையுமோ வென்றஞ்சி, அங்கு இருந்தான் - அவ்விடத்தில் இருந்தான், எ-று.

"வாணன் பெயரெழுதா மார்புண்டோ - மாகதர்கோன்வாணன் புகழுரையாவா யுண்டோ" என, கரு-ஆம் செய்யுளிலுங் கூறியிருப்பதால்,

மாகதற்கு என்பதற்கு வாணனுக்கு எனப்பொருள் கூறப்பட்டது; ஆயினும் வாணனுக்கு அப்பெயர்வந்த காரணம் விளங்கவில்லை.

பாண்டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசியைப் புகழ்ந்துபாடியது.

22. உமையாளுநீயுமொருங்கொப்பேயொப்பே
உமையாளுக்குண்டங்கோரூனம்—உமையாடன்
பாகந்தோய்ந்தாண்டான்பலிக்குழன்றான்பாண்டியனின்
பாகந்தோய்ந்தாண்டானரசு.

இ-ள். உமையாளும் நீயும்-உமாதேவியும் நீயும், ஒருங்கு ஒப்பே ஒப்பே-முழுதும் நிகர்ப்பீர் நிகர்ப்பீர் (ஆயினும்), அங்கு-அவ்வொப்புமையில், உமையாளுக்கு—, ஓர்ஊனம் உண்டு-ஒரு குறையுளது - (என்னெனின்), ஆண்டான் - ஆண்டவனாகிய சிவபெருமான், உமையாள் தன்பாகம் தோய்ந்து - உமாதேவியின் பாகத்தைப் பொருந்தி (அதனால்), பலிக்கு உழன்றான் - பிச்சையின்பொருட்டுத் திரிந்தான், பாண்டியன் - பாண்டியனானவன், நின் ஆகம்தோய்ந்து - உன்மார்பிற்படிந்து, அரசு ஆண்டான் - அரசாட்சிசெய்தான், எ-று.

சடையப்ப முதலியாரைப் புகழ்ந்து பாடியது.

23 மோட்டெருமைவாவிபுக்குமுட்டுவரால்கன்றென்று
வீட்டளவும்பால்சொரியும்வெண்ணெயே—நாட்டில்
அடையாநெடுங்கதவுமஞ்சலென்றசொல்லும்
உடையான்சடையப்பனூர்.

இ-ள். நாட்டில்—அடையாநெடுகதவும் - மூடாத நீண்ட கதவையும், அஞ்சல் என்றசொல்லும்-அஞ்சாதே என்றவார்த்தையையும், உடையான்-உடையவனாகிய, சடையப்பன் ஊர்-சடையப்பமுதலியாருக்கு ஊராவது, மோடு எருமைவாவிபுக்கு-பெரிய எருமைகள் தடாகங்களில் பிரவேசித்து முட்டுவரால்-(தம்முலைகளில் வந்து) முட்டுகின்றவரால் மீன்களை, கன்று என்று-தம் கன்றுகளென்று நினைத்து, வீடு அளவும்-வீட்டுக்குப் போமளவும், பால் சொரியும்-பால்சுரந்து நிலத்தில் பொழிந்துகொண்டே செல்லுகின்ற, வெண்ணெயே-திருவெண்ணெய் நல்லூரே, எ-று.

ஆதொண்டைச் சக்ரவர்த்தி தமக்கு உபகாரஞ் செய்ததற்கு
மகிழ்ந்து பாடியது.

24. வெற்றிபுனைதாதகிக்கும்வேம்புக்கும்பெண்ணைக்கும்
சுற்றும்பெருநிழலாய்த்தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந்தாங்குஞ்செகமுழுதுந்தாங்கும்
அறந்தாங்குந்தொண்டையரசு.

இ-ள். தொண்டை அரசு - தொண்டை நாட்டிற்கு வேந்தனாகிய ஆதொண்டைச் சக்கரவர்த்தியானவன், வெற்றி பனை தாதகிக்கும்-வெற்றியைத் தரித்த ஆத்திமாலையையணிந்த சோழனுக்கும், வேம்புக்கும்-வேப்பமாலையையணிந்த பாண்டியனுக்கும், பெண்ணைக்கும் - பனைமாலையையணிந்த சேரனுக்கும், சுற்றும் பெருநிழலாய்த் தோன்றும் - சுற்றியும் பெரிய நிழலைச் செய்பவனாகத் தோன்றுவான், (அன்றியும்), கற்றோர் திறந்தாங்கும் தாங்கும்-கற்றோரது கூட்டத்தை ஆதரிப்பான், செகமுழுதும் தாங்கும்-உலகமுழுதையும் தாங்குவான், அறம்தாங்கும் - தருமத்தையும் தாங்குவான், எ-று

தாங்கும் செகமுழுதும் தாங்கும் எனவைத்து, ஆதிசேஷன் ஆயிரந் தலைகளால் தாங்குகின்ற உலகத்தைத் தன்னொருதோளினால் தாங்குவான் என்றுரைப்பினுமமையும், தொண்டைநாட்டிலுள்ள அரசமரம், சோழநாட்டிலுள்ள ஆத்திமரத்துக்கும், பாண்டிநாட்டிலுள்ள வேப்பமரத்துக்கும், சேரநாட்டிலுள்ள பனைமரத்துக்கும். பெருநிழலைச்செய்யும் எனவேறுமொருபொருள் தோன்றுதல் காண்க.

வல்லியென்னும் தாசியை இகழ்ந்து பாடியது.

25. கந்தமலர்ப்பிரமன்கன்னிமடவார்க்கெல்லாம்
அந்தவிளநீரைமுலையாக்கினான்-சுந்தரஞ்சேர்
தோற்றமிகுவல்லிக்குத்தோப்பைமுலையாக்கினான்
ஏற்றமிதில்யார்தானியம்பு.

இ-ள். கந்தம் மலர் பிரமன்-மணமுள்ள தாமரைமலரில் வாழ்கின்ற பிரமன், கன்னி மடவார்க்கு எல்லாம் - கன்னிப் பெண்களுக்கெல்லாம், அந்தம் இளநீரைமுலை ஆக்கினான்-அழகாகிய இளநீரை முலைகளாகப்படைத்தான், சுந்தரம் சேர்தோற்றம் மிகு வல்லிக்கு-அழகு பொருந்திய காட்சியாற் சிறந்தவல்லியென்பவளுக்கு, தோப்பை முலை ஆக்கினான்-தோப்பை முலைகளாகப் படைத்தான், இதில் - இந்த பிரஸ்தாபத்தில், ஏற்றம்யார்-அதிகம் யாவர், இயம்பு-நீசொல்வாய். எ-று.

தோப்பை என்பது தோற்பையெனவும் வேறுமொரு பொருள் தருதல்காண்க பால்கமருக்கு உகுத்து என்பதை "பாக்கமருக்கு உகுத்து" என்றார் பிறரும்.

கத்திரிக்காயும் முளைக்கீரையும் கொடுத்த தோட்டக்காரனாகிய மாத்தத்தன்மேல் பாடியது.

26. இருந்தவளைப்போனவளையென்னையவளைப்
பொருந்தவளைபறித்துப்போனான்-பெருந்தவளை
பூத்ததத்தேன்சொரியும்பொன்னிவளநன்னாட்டில்
மாத்தத்தன்வீதியினில்வந்து.

இ-ள். பெருதவளை-பெரியதவளைகள், பூதத்த - தாமரைமலர்களின் மீதுகுதிக்க, தேன்சொரியும் - (அந்தமலர்கள் விரிந்து) தேனைப்பொழி கின்ற, பொன்னிவளம் நல்நாட்டில்-காவிரி நதியினால் பவளங்களும் நிறைந்த நல்லசோழநாட்டிலுள்ள, மாத்தத்தன்-மாத்தத்தன் என்பவன், வீதியினில்வந்து-தெருவில்வந்து, இருந்தவளை-இருந்தவளையும், போனவளை-போனவளையும், என்னை அவளை - என்னையும் அவளையும், பொருந்தவளை பறித்துப்போனான்-பொருந்தும்படி வளையலைக் கவர்ந்து சென்றான். எ-று

சிங்கன் என்னும் கருமானைப் புகழ்ந்து பாடியது.

27. ஆழியானாழியயனெழுத்தாணியென்பார்
கோழியான்குன்றெறியவேலென்பான்-பூழியான்
அங்கைமழுவென்பானருள்பெரியமாவண்டூர்ச்
சிங்கனுலைக்களத்திற்சென்று.

இ-ள். அருள்பெரிய - கருணையாற்சிறந்த, மாவண்டூர் சிங்கன் உலைக்களத்தில் சென்று-மாவண்டூரிலுள்ள கருமாரச்சிங்கனது உலைக்களத்திற் போய், ஆழியான் அயன்-பாற்கடலையுடையவனாகிய திருமாலும் பிரமனும் ஆருஎழுத்தாணி என்பார் - சக்கரமும் எழுத்தாணியும் வேண்டுமென்பார்கள், கோழியான் - கோழிக்கொடியை யுடையவனாகிய முருகன், குன்று எறிய-கிரவுஞ்சமலையை யெறிதற்கு, வேல் என்பான்-வேலாயுதம் வேண்டுமென்பான், பூழியான்-திருநீற்றையுடையவனாகிய சிவபெருமான், அங்கை-அகங்கையில் தாங்குதற்குரிய, மழு என்பான் - மழுவாயுதம் வேண்டுமென்பான், எ-று.

திருமால் முதலியோர் சிங்கனுலைக்களத்தில் வந்து, தமது ஆயுதங்களாகிய சக்கரமுதலியவற்றைச்செய்து கொடுக்கும்படி, அவனைவேண்டுவர் என்பது கருத்து.

அச்சுதன் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

28. தினைவிளைத்தார்முற்றந்தினையுணங்குஞ்செந்நெல்
தனைவிளைத்தார்முற்றமதுதானும்-கனையு
முரசுணங்கச்சங்குணங்குமூரித்தேர்த்தானை
அரசுணங்குமச்சுதன்முற்றம்.

இ-ள். தினை விளைத்தார் முற்றம் தினை உணங்கும்-தினையைப் பயிர்செய்தாரது முற்றங்களில் தினை உலரும். செந்நெல்தனை விளைத்தார் முற்றம் அதுதான் ஆம் - செந்நெல்லைப்பயிர் செய்தாரது முற்றத்தில் அந்தச் செந்நெல்லே உலரும், மூரித்தேர்தானை அரசு உணங்கும் அச்சுதன் முற்றம்-வலிமையாகிய தேர்களையும் சேனைகளையுமுடைய அரசர் உலர்தற்கிடமாகிய அச்சுதனது முற்றத்தில், கனையும்-முழங்குகின்ற, முரசு உணங்க-முரசம் உலர, சங்கு உணங்கும்-சங்கங்களும் உலரும், எ-று.

தினைவிளைத்தார் முற்றத்தில் தினையும், நெல்விளைத்தார் முற்றத்தில் நெல்லும் உலர்தல்போல, அச்சுதன் முற்றத்தில் வேற்றரசர் உலர, முரசவாத்தியமும் சங்கவாத்தியமும் உலரும் என்பது கருத்து.

29. அரசனகளங்கனச்சுதன்முற்றத்
தரசரவதரித்தவந்நாள்-முரசதிரக்
கொட்டிவிடுமோசையினுங்கோவேந்தர்காற்றளையை
வெட்டிவிடுமோசைபுகும்

இ-ள். அரசர் அவதரித்த அந்நாள்-வேந்தர் பிறந்த அத்தினத்தில், முரசுஅதிர கொட்டிவிடும் ஓசையினும் - முரச மதிரும்படி கொட்டுகின்ற ஒலியினும், அரசன் அகளங்கன் அச்சுதன் முற்றத்து - அரசனுகவும் களங்கமற்றவனுகவுமிருக்கிற அச்சுதனது முற்றத்தில், கோவேந்தர் கால் தளையை - பேரரசரதுகால்விலங்கை, வெட்டிவிடும் ஓசைமிகும் - வெட்டிவிடுகின்ற ஒலியே மிகுந்திருக்கும், எ-று.

இது இவனது பவனிகண்டு மயங்கினவளையிழந்த
ஒரு பெண்ணின் கூற்ருகக்கூறியது.

30 தளையவிழ்நாண்மாலைத்தாயரேயாவி
களையினுமென்கண்டிறந்துகாட்டேன்-வளைகொடுபோம்
வன்கண்ணன்மாவிசயன்மால்யானைதன்ஞெடும்வந்
தென்கண்புகுந்தானினி.

இ-ள், தளை அவிழ்-கட்டவிழ்ந்த, நாள்மாலை-புதிய மலர்மாலையைத் தரித்த, தாயரே-தாய்மாரே, வளைகொடுபோம்-வளையலைக் கவர்ந்து கொண்டுபோன, வன்கண்ணன் - வன்கண்ணை யுடையவனுகிய, மாவிசயன்-மாவிசயன் என்பவன், மால்யானை தன்ஞெடும்வந்து - மதமயக்கமுள்ள யானையோடுவந்து, என் கண்புகுந்தான் - என்கண்ணில் நுழைந்தான், இனி-இனி, ஆவிகளையினும்-என் உயிரை வாங்கினுலும், என்கண் திறந்து காட்டேன் - என் கண்ணைத்திறந்து (அவனை உங்களுக்குக்) காட்டமாட்டேன், எ-று.

சோழன் எழுடி எதிர்கொண்டு வந்து மரியாதை செய்தபோது பாடியது.

31. படுபருந்துஞ்சூர்ப்பேயும்பன்மிருகஞ்செந்நாய்
கொடிகழுகுமித்தனையுங்கூடி-வடிவுடைய
கோமான்களப்பாளன்கொல்யானைபோமாறு
போமாறுபோமாறுபோம்.

இ-ள். படுபருந்தும் - பொருந்திய பருந்துகளும், சூர்பேயும்-அச்சத்தைத் தருகிறபேய்களும், பலமிருகம் செந்நாய் கொடி கழுகும் - பலமிருகங்கள் செந்நாய்கள் காக்கைகள் கழுகுகள் என்பவைகளுமாகிய, இதனைத்

யும்கூடி - இத்தனையும் ஒருங்குசேர்ந்து, வடிவு உடைய - அழகையுடைய; கோமான் களப்பாளன் - வேந்தனுகிய சோழனது, கொல்யானை - (பகைவரைக்) கொல்லுகின்ற யானையானது, போம் ஆறு போம் ஆறு போம் ஆறுபோம்-செல்லும்வழிதோறும் தொடர்ந்து செல்லும், எ-று.

சோழனது யானையைப் பருந்து முதலியவை தொடர்ந்துசெல்லுதல்; அந்தயானையால்கொலையுண்டவர் பிணங்களைத்தின்னுதற்கெனக்கொள்க.

கம்பர் தன்புதல்வனுகிய அம்பிகாபதி இறந்ததைக்குறித்துப் பாடியது.

32. பரப்போதஞாலமொருதம்பியாளப்பனிமதியம்
துரப்போனொருதம்பிபின்வரத்தானுந்துணைவியுடன்
வரப்போனமைந்தற்குத்தாதைபொருதுயிர் மாய்ந்தனனெஞ்
சுரப்பாவெனக்கிங்கினியாருவமையுரைப்பதற்கே

இ-ள். பரப்பு ஓதம்-விஸ்தாரமாகிய கடல்சூழ்ந்த, ஞாலம் - பூமியை; ஒரு தம்பி ஆள-ஒருதம்பியாகிய பரதன் ஆளவும், பனிமதியம்துரப்போன் ஒருதம்பிபின்வர-குளர்ச்சியாகிய சந்திரனை (நிறத்தினுல்) வெல்வோனுகிய ஒருதம்பியாகிய இலக்குமணன் பின்தொடர்ந்து செல்லவும், தானும் துணைவியுடன்-தானும் மனைவியாகிய சீதையோடுகூடி, வரப்போன மைந்தற்கு-(பதினுன்குவருடம் கழிந்தவுடனே) வரவுத்தேசித்துப்போன புதல்வனுகிய ஸ்ரீராமனது பிரிவின்பொருட்டு, தாதை-தந்தையாகிய தசரதன், பொருது-சகிக்காமல், உயிர் மாய்ந்தனன்-உயிர் நீங்கினுன், (அப்படியிருக்க என்புதல்வ னிறந்ததைக்குறித்து நான் இறவாதிருத்தலால்) நெஞ்சஉரப்பு-மனவுறுதியில், எனக்கு உவமை உரைப்பதற்கு - எனக்கு ஒப்பாக எடுத்துச் சொல்வதற்கு, இங்கு இனியார் - இவ்வுலகத்தில் இனி யாவருளர், எ-று.

தாசி பொன்னிக்குக் கம்பனடிமையென எழுதிக்கொடுத்த முறிச்சீட்டைச்
சோழன் தன்சபையாருக்குக் காட்டிச்சிரிக்க, அப்போது கம்பர்
உலகமாதாவாகிய ஸ்ரீலட்சுமிக்குக் கம்பன் அடிமை
எனப் பொருத்தமான பொய்சொல்லிச் சமர்த்
தித்தபோது, சோழன் பாடியது.

33. போற்றினும்போற்றுவர்பொருள்கொடாவிடில்
தூற்றினுந்தூற்றுவர்சொன்னசொற்களை
மாற்றினுமாற்றுவர்வன்கணுளர்கள்
கூற்றினும்பாவலர்கொடியராவரே.

இ-ள். போற்றினும் போற்றுவர்-புகழ்ந்தாலும் புகழ்வார்; பொருள் கொடாவிடில் - பொருள் கொடாவிட்டால், தூற்றினும் தூற்றுவர்-இகழ்ந்தாலும் இகழ்வார் - சொன்ன சொற்களை, மாற்றினும் மாற்றுவர் - தாம்

சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர் (ஆதலால்) வன் கணாளர்கள் பாவலர்-வன் கண்ணராகிய வித்துவான்கள், கூற்றினும் கொடியவர்ஆவர் யமனிலும் கொடியோராவர். எ-று.

சோழன் என்தேசத்தைவிட்டு போவென்றபோது பாடியவை.

34. மன்னவனுநீயோவளநாடுமுன்னதோ
உன்னையறிந்தோதமிழையோதினேன்-என்னை
விரைந்தேற்றுக்கொள்ளாதவேந்துண்டோவுண்டோ
குரங்கேற்றுக்கொள்ளாதகொம்பு.

இ-ள். மன்னவனும் நீயோ-வேந்தனுவதும் நீதானே, வளநாடும் உன்னதோ - வளமுள்ளதேசமும் உன்னுடையது தானே, உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்-உன்னையறிந்துதானே தமிழைப் படித்தேன், என்னை விரைந்து ஏற்றுக்கொள்ளாத வேந்து உண்டோ-என்னை விரைந்து வந்து ஏற்றுக்கொள்ளாத அரசன் உண்டோ, குரங்கு ஏற்றுக்கொள்ளாத கொம்பு உண்டோ-குரங்கை ஏற்றுக்கொள்ளாதமரக்கொம்பு உண்டோ.எ-று.

35. அன்றையிலும்வையமகன்றதோவல்லவென்று
குன்றெடுத்துநீதிருத்திக்கொண்டாயோ-என்றும்
அடைந்தாரைக்காக்குமகளங்காதுங்கா
நடந்தாயோநாலாறடி.

இ-ள். அன்றையிலும் வையம் அகன்றதோ - அந்நாளினும் பூமிவிசாலித்ததோ, அல்ல என்று குன்று எடுத்து நீதிருத்திக் கொண்டாயோ,அல்லவென்று மலைகளைத் தோண்டியெடுத்து நீதிருத்திக்கொண்டாயோ, என்றும் அடைந்தாரைகாக்கும் அகளங்கா-எந்நாளும் அடைந்தவரைக் காக்கின்ற களங்கமற்றவனே, துங்கா - பரிசுத்தனே, நாலாறு அடிநடந்தாயே-நாலாறடிதூரம் நடந்தனையே. எ-று.

36. காதமிருபத்துநான்கொழியக்காசினியை
ஓதக்கடல்கொண்டொளித்ததோ-மேதினியில்
கொல்லிமலைதேன்சொரியுங்கொற்றவாநீமுனிந்தால்
இல்லையோவெங்கட்கிடம்.

இ-ள். காதம் இருபத்துநான்குஒழிய-இருபத்துநான்கு காததூரமொழிய, காசினியை-மற்ற பூமியை, ஓதக் கடல்கொண்டு ஒளித்ததோ-அலைகளையுடைய கடலானதுகொண்டு மறைத்ததோ, மேதினியில் - உலகத்தில், கொல்லிமலை தேன்சொரியும் கொற்றவா-கொல்லி மலையானது தேனைப் பொழிகின்ற பூபாலனே, நீமுனிந்தால் - நீகோபித்தால், எங்கட்கு இடம் இல்லையோ-எங்களுக்கு வேறிடமில்லையோ. எ-று.

கொங்குநாட்டில் சென்றபோது அந்தநாட்டார் இவர்க்கு மரியாதை செய்யாதிருந்ததனால் இகழ்ந்துபாடியது.

37. நீரெலாஞ்சேற்றுநாற்றநிலமெலாங்கல்லுமுள்ளும
ஊரெலாம்பட்டிதொட்டியுண்பதோகம்பஞ்சோறு
பேரெலாம்பொம்மன்திம்மன்பெண்களோநாயும்பேயும்
காருலாங்கொங்குநாட்டை கனவிலுநினைக்கொணாதே.

இ-ள். நீர் எல்லாம் சேற்றுநாற்றம் - நீரெல்லாஞ் சேற்று நாற்றமே நாறும், நிலம் எல்லாம் கல்லுமுள்ளும்-நிலமெல்லாம் கல்லுமுள்ளுமாகவே யிருக்கும், ஊர் எல்லாம் பட்டி தொட்டி-ஊர்கள் எல்லாம் பட்டிதொட்டி யென்பனவே, உண்பதோ கம்பஞ்சோறு - உண்ணுவதோ கம்பஞ்சோறே யாம், பேர் எல்லாம் பொம்மன் திம்மன் - பேர்கள் யாவும் பொம்மன் திம்மன் என்பவையே, பெண்களோ நாயும்பேயும்-பெண்க ளென்றாலோ நாயும்பேயும்போல் மார்புதிறந்தும் தலைவிரித்தும் இருப்பார்கள், (ஆதலால்) கார் உலாம் கொங்குநாட்டை-மேகங்கள் சஞ்சரிக்கிற கொங்குதேசத்தை கனவினும் நினைக்கொணாது-சொப்பநத்திலும் நினைக்கக்கூடாது. எ-று.

வன்னியரை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

38. குமிண்டியும்பண்ணையுங்கூடமுளைக்கின்றகொல்லைக்கம்பை
நிமிண்டியுமூதியுந்தின்னவல்லோரிந்தநீணிலத்தில் [ண்டீர்
துமிண்டியங்காய்தன்னைமொட்டையம்பாலெய்யுஞ்சூரர்க
நமிண்டியிற்பள்ளிகளத்தனைபேர்களுநல்லவரே.

இ-ள். குமிண்டியும் பண்ணையும் கூடமுளைக்கின்ற கொல்லைக் கம்பை-குமிண்டிக்கீரையும் பண்ணைக்கீரையும் கூடவேவிளைகின்ற கொல்லையிலுள்ள கம்பை, நிமிண்டியும் ஊதியும் தின்னவல்லோர்-கையால் நிமிண்டியும் வாயால் ஊதியும் தின்னவல்லவர், இந்த நீள்நிலத்தில் - இந்தப்பெரிய நிலவுலகத்தில், துமிண்டியங்காய்தன்னை-துமிண்டிக் காயை, மொட்டை அம்பால் எய்யும்-மொட்டையம்பினால் எய்கின்ற, சூரர் - வீரராகிய, நமிண்டியில் பள்ளிகள் அத்தனைபேர்களும்-நமிண்டியென்னும்ஊரிலுள்ள பள்ளிகள் எல்லாரும், நல்லவரே-நல்லவரே யாவர். எ-று.

செட்டிகள் முதலியோரிடத்திற்சென்று அவரால் மதிக்கப் பெருமையால் அவர்களையிகழ்ந்தும், வேளாளரைப் புகழ்ந்தும் பாடியது.

39. செட்டிமக்கள்வாசல்வழிச்செல்லோமேசெக்காரப்
பொட்டிமக்கள்வாசல்வழிப்போகோமே-முட்டிபுகும்
பார்ப்பாரகத்தையெட்டிப்பாரோமேயெந்நாளும்
காப்பாரேவேளாளர்காண்.

இ-ள். செட்டிமக்கள் வாசல்வழி செல்லோம்-வணிகர் வீட்டுவாயில் வழிபோகோம், செக்காரப் பொட்டிமக்கள்வாசல்வழிப்போகோம்-செக்கடித்துச் சீவனஞ்செய்யும் வாணியர் வீடுகளின்வழியே போகமாட்டோம், முட்டிபுகும் பார்ப்பார் அகத்தை எட்டிப் பாரோம்-பிச்சையெடுத்துச் சீவனஞ்செய்யும் பிராமணர் வீட்டை எட்டியும்பார்க்கமாட்டோம், எந்நாளும் காப்பார் வேளாளரே-(எம்மை) எக்காலமும் காப்பவர் வேளாளரேயாவர்.

இச்செய்யுளும் வருஞ்செய்யுளும், சோழன் தன்தேசத்தை விட்டுப் போவென்று கடிந்து சொல்லக் கோபித்துப்போகும்போது தமது வீட்டாருடன் சொல்லாமலும், வஸ்திரம் வழிச்செலவுக்குவேண்டும் பணம் உணவுக்குவேண்டும் சாமக்கிரிகள் முதலானவைகளைக்கொண்டு போகாமலும் வெறுங்கையுடனே போகிறவழியில், மிகுந்த பசியாயிருந்தமையால் ஒருசெட்டி கடையில் போய் எனக்குக் கொஞ்சம் அவல்கொடும் என்றார். அவன், கடை போணியாவதற்கு முன் கொடேன் போ என்றான். அப்புறம் கொஞ்சதூரம்போய், ஓர் வாணியன் எள்ளாடுவதுகண்டு கொஞ்சம் பிண்ணாக்குக் கொடுவென்றார். அவனும் கொடுக்கவில்லை. அப்பால் ஒரு பிராமணன் வீட்டைக்கண்டு தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் தரவேண்டுமென்றார். அவனும் தண்ணீர் கொடேன் என்றான். பிறகு இவர் பசியும் தாகமும் சகிக்க முடியாமல் மிகவும் இளைத்து ஒரு மரநிழலில் படுத்திருந்தனர் அங்கே ஏர் உழுகிறவேளாளனொருவனுக்கு பழையதுவந்தது; அவன் அதைச் சாப்பிடப்போகும்தருணத்தில் இவர்போய் கையேந்த, அவன் அந்தப் பழஞ்சோற்றை இவருக்கு இட்டு உபசரிக்க, இவர் உண்டு பசிதீர்ந்தபிறகு மனமகிழ்ந்து பாடியவை.

40. மேழிபிடிக்குங்கைவேல்வேந்தர்நோக்குங்கை
ஆழிதரித்தேயருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கையென்றுநிலைக்குங்கைநீடூழி
காக்குங்கைகாராளர்கை.

இ-ள். காராளர்கை-வேளாளர் கையானது, மேழிபிடிக்கும் கை-கலப்பைபிடித்துழும் கையாகும், வேல்வேந்தர்நோக்கும் கை-வேற்படையையேந்திய அரசர்களும் எதிர்பார்க்கும் கையாகும், ஆழிதரித்தே அருளும் கை-மோதிரம் தரித்தருளும் கையாகும், சூழ்வினையை நீக்கும் கை - (எம்மை) வளைந்த தீவினைப்பயனாகிய வறுமையை நீக்கும் கையாகும், என்றும் நிலைக்கும் கை-எந்நாளும் ஒரேநிலையில் நிலைத்திருக்கும் கையாகும், நீடூழி காக்கும் கை-நீடூழிகாலம்வரைக்கும் (உயிர்களைக்) காக்கும் கையாகும்.

உணவுக்குரிய தானியம் முதலியவற்றைப் பயிர்செய்து தருபவர் ஆதலால், வேல்வேந்தர் நோக்கும் கை என்றார்,

வேளாளனாகிய செல்லனது மனைவியிட்ட கம்பஞ்
சோற்றைப் புகழ்ந்து பாடியது.

41. கல்லங்காடுதனில்விளையாக்கடியநிலத்திற்றான்முளையா
அல்லங்கிருந்தகருங்கூந்தலணங்குக்கணங்குபோலாவாள்
செல்லன்றேவிமனைகடோறுந்தேடித்திரிந்துங்காணாத
நெல்லஞ்சோறேகம்பஞ்சோற்றினைநீசுமந்துதிரிவாயே.

இ-ள். கல்லங் காடுதனில் விளையா கடிய நிலத்தில் தான் முளையா-கல் நிலத்தில் விளையாததும் வலியநிலத்தில் முளையாததுமாகிய, அல் அங்கு இருந்தகருகூந்தல் - இருள் தங்கியிருந்த கரியகூந்தலையுடைய, அணங்குக்கு தெய்வப்பெண்ணுக்கு, அணங்குபோல் ஆவாள் -தெய்வப்பெண்போல்பவளாகிய, செல்லன்தேவி-செல்லன் மனைவியானவள், மனைகள்தொறும்தேடித்திரிந்தும்-வீடுகள்தோறும்தேடியலைந்தும், காணாத-காணப்படாத, நெல்லஞ்சோறே-நெற்சோறே, கம்பஞ்சோற்றினை நீசுமந்து திரிவாய் - கம்பஞ் சோற்றினை நீ தாங்கித்திரியக்கடவை, எ-று.

இவரைக்கண்டளவில்இவருக்குத் தன்வீட்டிலிருந்தகம்பஞ்சோற்றை யிட நாணி, அயலிலிருக்கிற சிலவீடுகளிற் நெல்லஞ் சோற்றைக் கேட்டுக் கிடையாமையால் மீண்டுவந்து கம்பஞ்சோற்றையே படைக்க, நெற்சோற்றினும் அது சுவை யுள்ளதாய் இருந்ததைப்பற்றி இவ்வாறு கூறினர். விளையா முளையா காணாத நெல் எனக்கூட்டுக.

அப்பால் போகும்போது ஓர் ஊரில் பெண்ணரசியாயிருக்கும் வேலியென்பவள் ஒருமண்சுவர் கட்டுவிக்க எத்தனித்து, இந்தச் சுவர்கட்டிமுடித்தவனுக்குக்குறுணிநெல் கொடுப்பேனென்று பிரசித்தம்பண்ணியிருந்தாள். அங்குத்தினம் ஒருவர்வந்து சுவர் எழுப்பித் திரும்பும்போது, அதுஒரு பிரமராட்சசால்தள்ளப்பட்டுக் கூலிபெறாமல்போவது வழக்கம். இதனையறியாத கம்பர் சுவர் எழுப்பிக் கூலிவாங்கித் திரும்பி ஓரடியெடுத்து வைக்கையில், சுவர் விழுகிற குறிப்பையறிந்து இப்பாடலைப்பாட, ஷ அந்தப்பிரமராட்சசுஇவர்மஹா பண்டிதர் என்று உணர்ந்து விலகிப்போகச் சுவர்விழாமல் நிற்பதைக்குறித்தது.

42 மற்கொண்டதிண்புயத்தான்மாநகர்விட்டிங்குவந்தேன்
சொற்கொண்டபாவின்சுவையறிவாரீங்கிலையே
விற்கொண்டவாணுதலாள்வேலிதருங்கூலி
நெற்கொண்டுபோமளவுநில்லாய்நெடுஞ்சுவரே.

இ-ள். மல்கொண்ட திண்புயத்தான்-மற்போரைகொண்டதிடமாகிய புயங்களையுடையவனாகிய சோழனது, மாநகர்விட்டு இங்குவந்தேன் - பெரியபட்டணத்தைவிட்டு இவ்விடம்வந்தேன், ஈங்கு-இவ்விடத்தில், சொல்

கொண்ட பாவின்சுவை-சொற்களை உறுப்பாகக்கொண்ட பாடல்களின் ர
த்தை, அறிவார் இல்லையே, அறிவோர் இல்லையே, நெடுசுவரே-நீண்டசு
ரே, வில்கொண்டவாள் நுதலாள் வேலிதரும் - வில்லின் உருவத்தைக்
கொண்ட ஒளிபொருந்திய நெற்றியையுடையவளாகிய வேலியென்பவள்
கொடுக்கின்ற, கூலிநெல் கொண்டுபோமளவும் - கூலிநெல்லைக் கொண்டு
போகுமளவும், நில்லாய் (விழாமல் நிற்கக்கடவை, எ-று.

சேரன்சால்வையைக் கம்பர் போர்த்துக்கொண்டிருந்ததினால், அவ்வரசன் மனைவி தன்கணவனெனக்கருதிக் கூடப்படுத்துக்கொண்டிருந்ததை யறிந்தபின் கம்பர்பாடியது.

43. தேரையார்செவ்விளநீருண்ணப்பழிசுமப்பர்
நாரியார்தாமறிவார்நாமவரைநத்தாமை
கோரைவாய்ப்பொன்சொரியுங்கொல்லிமலைநன்னாடா
ஊரைவாய்மூடவுலைமூடிதானில்லையே.

இ-ள். தேரையார்-தேரைகள், செவ்விளநீர் உண்ணப்பழிசுமப்பர்-செவ்விளநீரை உண்ணமலே பழியைச்சுமக்கும், நாரியர்தாம் - அரசன் மனைவியர் தாம்,நாம் அவரைநத்தாமை-நாம் அவரைவிரும்பாமையை, அறிவார்-அறிவர், கோரைவாய்பொன்சொரியும்-கோரையிடங்களிலெல்லாம் அருவிகள் பொன்னைப்பொழிகின்ற கொல்லிமலை நல்நாடா-கொல்லிமலையுள்ள நல்லநாட்டையுடையானே, ஊரை வாய்மூட-ஊராரை வாய்மூடுதற்கு உலைமூடிதான் இல்லையே, எ-று.

இளநீரை உண்ணமலே பழியடைந்த தேரைபோல, அரசன்மனைவியைவிரும்பாமலே பழிசுமந்தேனென இரங்கி இவ்வாறு கூறினார்.

ஓரரசன் தன்மகளை அம்பிகாபதி இச்சித்ததாகச் சந்தேகித்து சந்தேக நிவர்த்தியின்பொருட்டு ஒருவிருந்துசெய்து அம்பிகாபதியுடன் மற்றுஞ் சிலரை வரவழைத்து, அவர்களுக்குத் தன்மகளையே பரிமாறச்சொன்னபோது, அவள் பதார்த்தவட்டிலைச்சுமந்து வரக்கண்ட இவன்மோகமிகுதியால், "இட்டடிநோவ வெடுத்தடி கொப்புளிக்க-வட்டில்சுமந்து மருங்கசைய," என்று அரைப்பாட்டுப் பாடினதைக்கண்ட கம்பர், தன்மகனுக்கு அபாயம் வருமென்றஞ்சி, சரசுவதியைத் தியானம் பண்ண, சரசுவதி ஒரு கிழவி யுருவங் கொண்டு

தெருவில்கொட்டிக்கிழங்கு
விற்பவள் போல்வர,
அதைப்பொருத்தி மற்ற
அரைப் பாட்டுப்
பாடியது.

44. இட்டடிநோவவெடுத்தடிகொப்புளிக்க
வட்டில்சுமந்துமருங்கசைய—கொட்டிக்
கிழங்கோகிழங்கென்றகூறுவாணுவில்
வழங்கோசைவையம்பெறும்.

இ-ள். இட்ட அடிநோவ - (நிலத்தில்) வைத்தஅடிநோவவும், எடுத்த அடிகொப்புளிக்க - (நிலத்தில்வைத்து எடுத்த அடிகொப்புளிக்கவும், வட்டில்சுமந்து மருங்கு அசைய-வட்டிலேச்சுமந்து இடையசையவும், கொட்டிக்கிழங்கோகிழங்குஎன்று கூறுவாள் நாவிள்வழங்கு ஓசை வையம்பெறும் கொட்டிக்கிழங்கோ கிழங்குஎன்று கூவுவாள் நாவிலுண்டாகும் குரல்உலகமுழுதும் விலைமதிக்கப்பெறும், எ-று.

அரசன்தன் மகளை அம்பிகாபதி இச்சித்தானெனச் சந்தேகித்து, சின்றின்பமாகப் பாடாமல் நூறுகவி சுவாமி விஷயமாகப் பாடினுல் தண்டியாமல்விட்டுவிடுகிறேன் என்றுசொல்லினன். அம்பிகாபதி அவ்வாறே பாடிக்கொண்டு வரும்போது, அரசன்புத்திரி மறைவாகவிருந்து எண்ணிக்கொண்டுவந்து கக - பாடல்பாடினவுடன், காப்புச்செய்யுளுடன்நூறு என்று நினைத்து,
எட்டிப்பார்த்தபோது பாடியது.

45. சற்றேபருத்ததனமேகுலுங்கத்தரளவடந்
துற்றேயசையக்குழையூசலாடத்துவர்கொள்செவ்வாய்
நற்றேனொழுகநடனசிங்காரநடையழகின்
பொற்றேரிருக்கத்தலையலங்காரம்புறப்பட்டதே.

இ-ள். சற்றே பருத்த தனமேகுலுங்க - சற்றுப்பெருத்த தனங்கள்குலுங்கவும், தரளவடம் துற்றேஅசைய-முத்துமாலைகள் நெருங்கிஅசையவும், குழைஊசல்ஆட-குண்டலங்கள் ஊசலாடவும், துவர்கொள்செவ்வாய்-பவளத்தின் தன்மையைக்கொண்ட செவந்தவாயின்கண், நல்தேன்ஒழுக-நல்ல தேனொழுகவும், நடநசிங்காரநடை அழகின் பொன்தேர் இருக்க-நடனசிங்காரநடை யழகினையுடைய பொற்றேர் உள்ளிருக்க, தலைஅலங்காரம் புறப்பட்டது-சிகரத்தினழகு வெளிப்பட்டது, எ-று.

பொற்றேர் என்றது நிதம்பப் பிரதேசத்தை. தலை அலங்காரம்என்றது தலைச்சாத்தினது அழகை.

அம்பிகாபதிக்குராஜதண்டனை நேர்ந்தபோது அவன்வருந்திப்பாடியது.

46. வீரமுண்டோமதன்கையம்பினுல்வெந்துவீழுகைக்கு
நேரமுண்டோவஞ்சிநேர்பட்டகாலையில்நெஞ்சைவிடப்
பேரமுண்டோசொலவொண்ணுதகாமப்பெருநெருப்புக்
கீரமுண்டோவையனேயென்னபாவமினிச்சொல்வதே.

இ-ள். மதன்கை அம்பினுல் வெந்துவீழுகைக்கு வீரம்உண்டா - மன்மதன்கைப் பாணத்தில் வெந்துவிழுதலில் ஒருவீரத்தன்மையு முண்டோ, வஞ்சிநேர்பட்டகாலையில்-கொடிபோல்வாள் எதிர்ந்தகாலத்தில், நேரம்உண்டோ - சமயம்பார்த்தலுண்டோ, நெஞ்சைவிட பேரம்உண்டோ - மனத்தைக் கொடுப்பதைவிட வேறு விவகாரமுண்டோ, சொல்ல ஒண்ணுத - சொல்லக்கூடாத, காமம் பெருநெருப்புக்கு - காமமாகிய பெரியநெருப்புக்கு, ஈரம் உண்டோ - நனைவுண்டோ, ஐயனே—, என்னபாவம் இனிச் சொல்வது - இனி இதைப்பற்றிச் சொல்வது என்னகொடுமை, எ-று.

அம்பிகாபதி அரசன் மகளைப் புகழ்ந்து பாடியவை.

47. உருகியுடல்கருகியுள்ளீரல்பற்றி
எரிவதவியாதென்செய்கேன்—வரியரவ
நஞ்சிலேதோய்ந்தநளிநவிழிப்பெண்பெருமாள்
நெஞ்சிலேயிட்டநெருப்பு.

இ-ள். வரி அரவநஞ்சிலேதோய்ந்த - நீண்ட பாம்பின் விஷத்தில் தோய்ந்த, நளிநம்-தாமரை மலர்போன்ற, விழி-கண்களையுடைய, பெண்பெருமாள் - மங்கையர்க்கரசி, நெஞ்சிலே இட்ட நெருப்பு - என்மார்பில் மூட்டிவிட்ட நெருப்பானது, உருகி - மனமுருகி, உடல்கருகி-உடம்புகரிந்து, உள் ஈரல்பற்றி எரிவது - நெஞ்சில் உள்ள ஈரல் மூண்டெரிவது, அவியாது - ஆருது, என்செய்வேன் - நான் என்னசெய்வேன், எ-று.

48. மய்வடிவக்குழலியர்தம்வதனத்தைநிகரொவ்வா மதியேமானே, செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை வேய்த்தோளைத் தெய்வமாக, இவ்வடிவைப்படைத்தவடி வெவ்வடிவோயானறியேனுண்மையாகக், கய்படியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனனற்கமலத்தோனே.

இ-ள். மய்வடிவம் - மேகத்தினுருவமாகிய, குழலியர்தம் - கூந்தலையுடைய இம்மாதரது, வதனத்தை நிகர் ஒவ்வா - முகத்தையொவ்வாத, மதியே - சந்திரனே, மானே-பெண்ணே, செய்வடிவை - செய்யப்பட்ட உருவத்தையும், சிற்றிடையை-நுட்பமாகிய இடையையும், திருநகையை-

அழகிய பற்களையும், வேய்தோளை-மூங்கில்போலும் தோள்களையும், தெய்வமாக-தெய்விகமாக, இவ்வடிவை படைத்தவடிவு-இந்த அழகைப்படைத்த உருவம், எவ்வடிவோ-எந்த எந்த உருவமோ, யான் அறியேன்-நானறிந்திலேன், உண்மையாக - யதார்த்தமாக, நல்கமலத்தோன்-அழகிய தாமரையி லிருப்பவனுகிய பிரமன், கய்படிய-கைபடியும்பொருட்டு, திருமகளைப்படைத்து-திருமகளைச் சிருஷ்டித்து, இவளைப் படைத்தனன் - (பிறகு) இவளைப் படைத்தனன்—, எ-று.

அரசன் அதைக்கண்டு ஒட்டக்கூத்தருக்குச் சொல்லியது.

49 கண்டீரோகாணம்பிகாபதிசெயும்பிழையைக்
கண்டீரோநம்மீதிற்கள்ளமில்லை—உண்டோகாண்
ஆற்றாதுகோபமடங்கவிவனைபொட்டக்
கூத்தாவென்செய்திடலாங்கூறு.

இ-ள். ஒட்டக்கூத்தா-ஒட்டக்கூத்தனே, அம்பிகாபதிசெய்யும்பிழையைக் கண்டீரோ—, நம்மீது கள்ளம் இல்லை-நம்மிடத்தில்வஞ்சனையில்லை, உண்டோ-இருக்கிறதோ, ஆற்றாதகோபம் அடங்க - சகிக்கவொண்ணாத கோபம் தணியும்படி, இவனை என்செய்திடலாம்-இவனை என்ன தண்டனை செய்யலாம், கூறு-சொல்வாய். எ-று.

அதற்கு ஒட்டக்கூத்தர் சொல்லியது.

50. பனிப்பகையுந்திங்களுமேபார்த்தசெயலானல்
உனக்கியான்சொல்லுவதொன்றுண்டோ—கனத்த
பிழைசெய்தானன்னைக்குப்பின்பார்க்கவேண்டாம்
கழுவினிலேயேற்றிவிடல்காண்.

இ-ள். பனிப்பகையும்-சூரியனும், திங்களும்-சந்திரனும், பார்த்தசெயல் ஆனல் - கண்டசெய்கைஆயின், உனக்கு யான்சொல்லுவது ஒன்றுண்டோ—, அன்னைக்கு-நம்புதல்விக்கு, கனத்த பிழைசெய்தான்-பெரியகுற்றத்தைச் செய்தான், பின்பார்க்கவேண்டாம்-இனி தாட்சண்ணியம் பார்க்க வேண்டுவதில்லை, கழுவினிலே ஏற்றிவிடல் (இவனை) கழுவிலேற்றுக.

அம்பிகாபதியை அரசன் யானையின்காலில் இடறச்சொன்னபோது
அம்பிகாபதி பாடியது.

51. வெங்கண்சிவந்துவெடிவான்முறுக்கிவெகுண்டெழுந்தென்
அங்கம்பிளக்கவருங்களிறேயன்றிரணியனைப்
பங்கம்படவரங்கீண்டேயுதிரம்பருகுநர
சிங்கமிருக்குதுகாண்கெடுவாயென்றன்சிந்தையிலே.

இ-ள். வெம்கண் சிவந்து-கொடியகண்கள் சிவந்து, வெடிவால்முறுக்கி-வெடித்தவாலை முறுக்கி, வெகுண்டு எழுந்து-கோவித்தெழுந்து, என் அங்கம்பிளக்கவரும்-என் உடம்பைப் பிளக்கவருகின்ற,களிறே-யானையே, அன்று-அந்நாளில், இரணியனை-இரணிய கசிபனை,பங்கம்பட உரம்கீண்டு-(அவன்) பங்கமடைய (அவனது) மார்பைக்கிழித்து, உதிரம்பருகும் (அவனது) ரத்தத்தைக்குடித்த, நரசிங்கம்-நரசிங்கமானது, என்றன் சிந்தையிலே இருக்குது-என்மனத்தின்கண் இருக்கின்றது, கெடுவாய் - (நீஎன்மீது வருவையாயின்) அழிவாய். எ-று.

கம்பர் சொல்லியது.

52. இந்நாளிதுவிளையுமென்றெழுத்துத்தானிருக்க
என்னாலேயாவதொன்றுமில்லையே—உன்னாலே
வந்ததுதானப்பாமகனேதவிர்ப்பவரார்
முந்தையினீசெய்தவினையே.

இ-ள். அப்பாமகனே—, இந்நாள் - இந்தக்காலத்தில், இதுவிளையும்-இந்தத்துன்பம் உண்டாகும், என்ற எழுத்து இருக்க-என்ற பிரமனெழுத்திருக்க, என்னாலே ஆவது ஒன்றும் இல்லையே-என்னாலே உனக்குச் செய்யத்தகுவது ஒன்றுமில்லையே, உன்னாலே வந்ததுதான் - இவ்வினை உன்னாலேயேவந்தது, முந்தையில்-முற்பிறப்பில், நீசெய்தவினை-நீசெய்த வினைப்பயனை, தவிர்ப்பவர் ஆர்-நீக்குவோர் யாவர். எ-று.

அதற்கு அம்பிகாபதி சொல்லியது.

53. இந்நாளிதுவிளையுமென்றெழுத்துத்தானிருக்க
என்னாலேயாவதொன்றுமில்லையே—என்னாலே
வந்ததுசாணையாவரும்விதியையார்தடுப்பார்
எந்தைமகதேவர்செயலே.

இ-ள். ஐயா - தந்தையே, இந்நாள் இதுவிளையும் என்றவெழுத்து இருக்க-இக்காலத்து இது உண்டாகும் என்றுபிரமனெழுதியஎழுத்து இருக்க, என்னாலே ஆவது ஒன்றுமில்லையே-என்னாலே அதனைத் தடுக்கக்கூடிய செயல் ஒன்றுமில்லையே, என்னாலே வந்தது-என்னாலே உண்டானதாகி, வரும்விதியை-வருகிற ஊழின்பயனை, யார்தடுப்பார் - தடுக்கவல்லவர் யாவர், (இவையாவும்) எந்தை மகதேவர்செயலே-எமது தந்தையாகிய மஹாதேவனது செயலே யாகும். எ-று.

அம்பிகாபதியை அரசன் வெட்டியபோது கம்பர் பாடியது.

54. மட்டுப்படாக்கொங்கைமானார்கலவிமயக்கத்திலே
கட்டுப்பட்டாயென்னகாதல்பெற்றாய்மதன்கையம்பினால்

பட்டுப்பட்டாயினுந்தேறுவையேயென்றுபார்த்திருந்தேன்
வெட்டுப்பட்டாய்மகனேதலைநாளின்விதிப்படியே.

இ-ள். மகனே-புதல்வனே, மட்டுப்படா - அளவுபடாத, கொங்கை-தனங்களையுடைய, மாஞர்-மாதரது, கலவிமயக்கத்திலே - புணர்ச்சி மயக்கத்தில், கட்டுப்பட்டாய்-பிணிக்கப்பட்டாய், என்னகாதல்பெற்றுய் - என்ன ஆசையையடைந்தாய், மதன்கை அம்பினுல் - மன்மதனுடைய கைப்பாணத்தால், பட்டுப்பட்டு ஆயினும்-வருந்திவருந்தியாயினும், தேறுவையே என்றுபார்த்து இருந்தேன்-தெளிவாயென்று நோக்கியிருந்தேன், தலைநாளின் விதிப்படியே-முன்னுளின் விதிப்பிரகாரமே, வெட்டுப்பட்டாய்-வெட்டுப்பட்டனை.

அம்பிகாபதியும் கம்பரும்பாடிய கண்டசுத்தி; அதாவது
ஒருவர் சமிக்கைகொடுக்க அச்செய்தியைத் தாம்
கண்டதாகப் பாட்டிலமைத்துப் பாடுவது.

55. கரைக்குவடக்கிருக்குங்காளிகாளம்மைக்
கரைத்துவழிசாந்தைத்தொட்டப்பேய்—உரைத்தும்
மறைக்கவறியாதவன்பேயின்கையைக்
குறைக்குமாங்கூன்கத்திகொண்டு.

இ-ள். கரைக்கு வடக்கு இருக்கும்—, காளிகாளம்மைக்கு அரைத்து காளியாகிய காளிகாளம்மையின்பொருட்டு அரைத்து, வழிசாந்தைதொட்டு-வழிந்த சந்தனத்தைத்தீண்டி, அப்பேய் உரைத்தும் - அந்தப்பேய் உரைத்தும், மறைக்க அறியாத - ஒளிக்க அறியாத, வல்பேயின்கையை-வலிய பேயின்கையை, கூன்கத்திகொண்டு குறைக்கும்-வளைவாகிய கத்தியைக்கொண்டு வெட்டும். எ-று.

சேரன் ஒருநாளிரவில் நகர்சோதனை வரும்போது, காளிகோயிலில் ஒருவன் சந்தனம்அரைத்து வழிவதைக்கண்ட ஒருபேய் அதனைத்தீண்ட, அரைப்பவன் கத்தியைக்கொண்டு வெட்டக் கண்டு, அதனைக் கம்பரைக் கொண்டு கண்டசுத்தியாகப் பாடுவிக்க வேண்டுமென்றெண்ணி, அவர் வீட்டுக்கதவை அப்போதேபோய்த் தட்டினசத்தத்தை, நடையில் படுத்திருந்த அம்பிகாபதிகேட்டெழுந்து, தன்தந்தையாகிய கம்பரை அப்பேய் என்றழைத்து, முதலிரண்டடியையும் பாட, கம்பர் மற்ற இரண்டடியையும் சொல்லிமுடிக்க, அரசன்கேட்டுக் களித்துச் சென்றனன்.

கம்பர் வேளாளரைப் புகழ்ந்து பாடியது.

56. காலப்புயனிகர்காராளர்தம்மைக்கடலுடுத்த
தாலக்குலமங்கைபெற்றதனுற்சதகாலமுமால்
கோலத்திருமுகத்தாலேமுகந்தனன்கூடலிலே
சூலக்கரப்படையான்றலைமீதுசுமந்தனனே.

இ-ள். காலம் புயல்நிகர் - (கொடையினால்) கார்காலமேகம்போன்ற, காராளர் தம்மை-வேளாளரை, கடல்உடுத்த-கடலாகிய ஆடையையுடுத்த, குலம்-உயர்ச்சியுள்ள, தாலம்மங்கை-நிலமகள், பெற்றதனால் - பெற்றமையால், தலைக்காலத்து-முற்காலத்தில், மால்-திருமால், கோலம் திருமுகத்தாலே முகந்தனன் - தனது அவதாரமாகிய வராகத்தின் அழகிய முகத்தைக்கொண்டு குத்தியெடுத்தான், கூடலிலே - மதுரையிலுள்ள, சூலக்கரப்படையான் - கையில் சூலாயுதத்தையுடைய சிவபெருமான், தலைமீது சுமந்தனன்-தலைமேற் சுமந்தான். எ-று.

'திருமால் கோலத்திருமுகத்தாலே முகந்தனன்' என்றது, இரணியாக்ஷன் கவர்ந்துபோன நிலமகளைப் பாதாளத்தினின்றும் கொம்பினால் குத்தியெடுத்த வராகாவதாரத்தைக் குறித்தது. 'கூடலிலே சூலக்கரப்படையான் றலைமீது சுமந்தனனே' என்றது, சிவபெருமான், மதுரையில் வையைநதிப்பெருக்கைத் தடுக்கும்போது, செம்மனச் செல்வியென்னும் பிட்டுவாணிச்சியின் கூலியாளாய்வந்து மண்சுமந்து, பாண்டியனால் பிரம்படிபட்ட சரித்திரத்தைக் குறித்தது.

கம்பரால் பாடல்பெற விரும்பிய ஒரு கைக்கோளன் மனைவி, தன் புருஷனை ஒளித்துவைத்துக் கம்பரைத்தன்னிடத்துவரும்படி செய்தனள். கம்பர்வீட்டில் வருதலும், அந்தக் கைக்கோளன் ஒரு குறுந்தடியை கைக்கொண்டு கம்பரை அடிக்கவரும்போது, அவர் பாடியது.

57. மய்க்கிணையானவிழிக்கணைகொண்டுமருட்டியழைத்திடலால்
பொய்க்களவாகப்புகுந்ததுமுண்டுபுணர்ந்ததுமில்லையடா
கய்க்கிசைவானகுறுந்தடிகொண்டுகழுத்தைநெரிக்கவரும்
கய்க்களவாவென்றங்கையடாநின்றாரமடாவிடடா.

இ-ள். மய்க்கு இணையான-அஞ்சனத்துக்கு நிகரான, விழிக்கணைகொண்டு-கண்களாகிய பாணங்களைக்கொண்டு, மருட்டி (என்மனம்) மருளச்செய்து, பொய்க்களவாக-பொய்யாகிய களவுப்புணர்ச்சிக்காக, அழைத்திடலால்-அழைத்ததினால், (இருட்டறையில்) புகுந்ததும் உண்டு—, நுழைந்ததும் உண்டு, புணர்ந்ததும் இல்லையடா - புணர்ந்ததும் இல்லையடா, கய்க்கு இசைவான-கைக்கிசைவாகிய, குறுந்தடிகொண்டு—, கழுத்தைநெரிக்கவரும்-கழுத்தைமுறிக்கவருகிற, கய்க்களவா-கைக்கோளனே, (இ-ள்) என்தங்கையடா—, நின்தாரமடா - உன்மனைவியடா, விடடா - (என்னை) விடடா. எ-று.

ஓர் வலையன்வீட்டிலும் இவ்வாறே அகப்பட்டுக்கொண்ட போது பாடியது.

58. இருளையிருள்விழுங்கியெவ்விடமுந்தோன்று
திருவிழியுங்கோல்வழியேசெல்ல—வருமல்லில்

வந்ததுண்டுசேர்ந்ததில்லைமாலேயல்லாமலே
அந்தமனையுன் தன்மனையே.

இ-ள். இருளை இருள் விழுங்கி-மிக இருண்டு, எவ்விடமுந் தோன்றாது-எவ்விடமும் தோன்றாமல், இருவிழியும்-இரண்டு கண்களும், கோல் வழியே செல்ல-கைக்கோலின் வழியாகவேபோக, வரும் அல்லில் - வருகின்ற இரவில், வந்தது உண்டு - நான்வந்ததுண்டு, மாலே அல்லாமல்-ஆசையேயன்றி, சேர்ந்தது இல்லை-புணர்ந்ததில்லை, அந்த அம்மனை - அந்தத்தாய், உன் தன்மனையே-உன்மனைவியே யாவாள். எ-று.

கம்பர் தன்மகனாகிய அம்பிகாபதியை அரசன் கொன்றனனென்னும் பகையால், யானை துரத்திவந்ததற்கஞ்சித் தன்வீட்டில் நுழைந்த அவ்வரசன் புதல்வனைக் கம்பர் எழுத்தாணியாற் குத்திக்கொல்ல, அரசன் அவர்மீது அம்பெய்தபோது பாடியது.

59. வில்லம்புசொல்லம்புமேதினியில்ரெண்டுண்டு
வில்லம்பிற்சொல்லம்பேமேலதிகம்—வில்லம்பு
பட்டதடாவென்மார்பிற்பார்வேந்தாநின்குலத்தைச்
சுட்டதடாவென்வாயிற்சொல்.

இ-ள். பார்வேந்தா-சோழனே, மேதினியில்-உலகத்தில், வில் அம்பு சொல்அம்பு ரெண்டு உண்டு-வில்லம்பும் சொல்லம்புமாகிய இரண்டுண்டு, (அவற்றுள்) வில்லம்பின்-வில்லம்பினும், சொல்லம்பே-சொல்லாகிய அம்பே, மேல்அதிகம் - மிகவும் சிறந்தது, (என்னெனின்) அடா-எடா, வில் அம்பு-நீ உன் வில்லிற்றொடுத்த அம்பு, என் மார்பில்பட்டது-என்மார்பில் பாய்ந்தது, என் வாயில்சொல் - என்வாயினின்றும் வெளிப்பட்ட சொல்லாகிய அம்பு, அடா-எடா, நின்குலத்தைச் சுட்டது-உன் வமிசத்தை எரித்து நீறாக்கிவிட்டது. எ-று.

கம்பன்வீட்டு வெள்ளாட்டி பாடியது.

60. நெற்படிவிளைகழனிபுடைசூழ்நென்மலிவாழ்தச்சன்
கற்படிபணைதோளான்பெயரோகங்கணகணகணவன்
விற்படிவாணுதலாண்மனைவிமின்மினிமினிமினிமி
சொற்படிவேலைசெயும்மவளோதுந்துமிதுரிதுரிதி.

இ-ள். நெற்படி விளைகழனி - நெல்லானது தரந்தரமாக விளைகின்ற வயல்கள், புடைசூழ்-பக்கங்களில் சூழ்ந்திருக்கின்ற, நென்மலி-நென்மலியென்னும்ஊரில், வாழ்கின்ற, தச்சன்—, கல்படி பணைதோளான் - மலைபோலப்பருத்த புயங்களையுடையவன், பெயரோ - (அவனது) பெயரோ, கங்கண கணகணவன்—, (அவனுக்கு) வில்படிவாள் நுதலாள்மனைவி,

வில்லைப்போல ஒளிபொருந்திய நெற்றியையுடையவளாகிய மனைவி, மின் மினிமினிமினிமி, (அவளுக்கு) சொற்படி வேலைசெயும் அவளோ-சொல் லின்படி வேலைசெய்பவளோ, துந்துமிதுரிதுரிதி—, எ-று.

நென்மலியூரில் வாழ்கின்ற தச்சன் பெயர் கங்கணகணகணவன், அவன் மனைவி பெயர் மின்மினிமினிமினிமி, அவன் வேலைக்காரின்பெயர் துந்துமிதுரிதுரிதி, என்பது கருத்து.

இச்செய்யுளும் அவ்வெள்ளாட்டிக்கம்பரிடத்தில் தன் கல்வித் திறத்தைக்காட்ட வந்தசோமாசியென்னும் வித்வானை நோக்கிப்பாடியது.

61. வட்டமதிபோலிருக்கும்வன்னிக்கொடிதாவும்
கொட்டுவார்கையினின்றுகூத்தாடும்-சுட்டால்
அரகராவென்னுமேயம்பலசோமாசி
ஒருநாள்விட்டேனீ யுரை.

இ-ள். எ அம்பலசோமாசி-ஓய் அம்பல சோமாசிஎன்னும்வித்வானே, வட்டமதிபோல் இருக்கும் - வட்டவடிவமுள்ள சந்திரன்போலிருக்கும், வன்னிக்கொடிதாவும் - நெருப்புச்சிகை தாவிப்படரும், கொட்டுவார் கை யில் நின்று கூத்தாடும் - அறைவோருடைய கைகளில் நின்று கூத்தாடும், சுட்டால்-சுட்டு நீறாக்கினால், அர அரா என்னும்—அரகரா என்றுசொல்வி யணிதற்குரியதாகும், ஈது - இப்பெயருள்ளது இன்னதென்று நீ யாலோ சித்துச் சொல்வதற்கு, ஒருநாள்விட்டேன்-ஒருநாள் முழுதும் அவகாசம் கொடுத்தேன், உரை-ஆலோசித்துச் சொல்வாயாக. எ-று.

வரட்டியென்பது பொருள். இதனைச் சொல்ல வகையறியாது அப்பு லவன் அவமானப் பட்டுப்போயினன் என்பர்.

அரசன், காக்கை கழுகோட்டுங்கை என்றுசொல்ல, அதைச்சேர்த்துப் பாடியகண்டசுத்தி.

62. கண்டாயோபார்வேந்தாகானகத்துக்கள்ளியின்கீழ்
வெண்டாழைபூத்துவிளக்கெரியப்-பெண்டாலி
பூட்டுதற்குமுன்னமொருபுத்திரனைப்பெற்றெடுத்தாள்
காக்கைகழுகோட்டுங்கை.

இ-ள். பார்வேந்தா-பூமியை யாளுகின்ற அரசனே, கண்டாயோ-பார் த்தாயோ, கானகத்து கள்ளியின்கீழ் - காட்டிலுள்ள கள்ளிப்புதலின்கீழ், வெள்தாழை பூத்து விளக்கு எரிய - வெண்டாழை பூத்து விளக்குப்போ லெரிய, பெண்-பெண்ணானவள், தாலி பூட்டுதற்கு முன்னம் - மங்கிலியம் தரிப்பதற்குமுன்பே, ஒரு புத்திரனை பெற்றெடுத்தாள்-(விபசரித்து) ஒரு

புதல்வனை யீன்றெடுத்தாள், (அதைக்கண்ட அவள் முதியோர் அவனைக் கொலைசெய்து ஆற்றில் மிதக்கவிட்டார்கள் ஆதலால்) கை-அவளது கை, காக்கை கழுகு ஒட்டும்-(அசைதலால் அது தன்னைக் கொத்தவரும்) காக்கையையும் கழுகையு மோட்டுகின்றது. எ-று.

காட்டிற் கழுகோட்டும் என்றும் பாடம்.

திருவிடைமருதூர் தாசிகளைச் சிறப்பித்துப்பாடியது.

63. வாசமலர்மடந்தைபோல்வார்மருதவனத்
தீசனடியாரெழுபதின்மர்-நேசித்
திரவலர்மேனீட்டுவர்கையிவ்வுலகையாளும்
புரவலர்மேனீட்டுவர்பொற்றாள்.

இ-ள். வாசம்-மணமுள்ள, மலர்-தாமரை மலரில் வாழ்கின்ற, மடந்தைபோல்வார்-திருமகளை நிகர்ப்பவரும், மருதவனத்து ஈசன் அடியார்-மருதவனத்தீசனது அடியாரும் ஆகிய,எழுபதின்மர்-எழுபதின்மரும்,இரவலர்மேல்-யாசகர்மீது, நேசித்து கைநீட்டுவர்-விரும்பிக் கையை நீட்டுவர், இவ்வுலகை ஆளும் புரவலர்மேல்-இந்தவுலகத்தை யாளுகின்ற அரசர்மீது, பொன் தாள் நீட்டுவர்-அழகிய பாதங்களை நீட்டுவர். எ-று.

அச்சுதன் என்பவனது வாயிலில்முழங்கும் முரசைப்புகழ்ந்து பாடியது.

64. குடகர்குணகடலென்பர்-குடகுக்
கிடகர்வடகடலென்பர்-வடகடலோர்
தென்கடலென்பர்திருந்துதாரச்சுதநின்
முன்கடைநின்றார்க்குமுரசு.

இ-ள். திருந்துதார் அச்சுத-திருத்தமாகிய பூமாலையையணிந்த அச்சுதனே, நின்முன்கடை - உன்தலைவாயிலில், நின்று ஆர்க்கும் - நிலைபெற்று முழங்குகின்ற, முரசு-பேரிகை யோசையை, குடகர் குணகடல் என்பர்-மேற்றிசையார் கீழ்கடலென்பர், குடகுக்கு இடகர் வடகடல் என்பர்-குடகுக்குத் தெற்கிலுள்ளார் வடகடலென்பர், வடகடலோர் தென்கடல் என்பர்-வடகடலோர் தென்கடலென்பார். எ-று.

அச்சுதன் தலைவாயிலைப் புகழ்ந்துபாடியது.

65. குறையுளாரெங்கிரார்கூர்வேலிராம
விறையாறுதிங்களிருந்தான்-முறைமையால்
ஆலிக்குந்தார்மாரபாவச்சுதாவந்நாளில்
வாலிக்கிளையான்கடை.

இ-ள். ஆலிக்கும் தார்மார்பா - (தேனைத்) துளிக்கின்ற பூமாலையைய ணிந்த மார்பையுடையவனே, அச்சுதா-அச்சுதனே, அந்நாளில் - திரேதா யுகத்தில், முறைமையால்—ஊழினால், வாலிக்கு இளையான் கடை - வாலிக்கு இளையவனாகிய சுக்ரீவனது வாயிலில், கூர்வேல் இராம இறை கூர்மையாகிய வேற்படையையுடைய இராமபிரான், ஆறுதிங்கள் இருந்தான்- ஆறுமாதம் இருந்தான் - (ஆதலால்) குறை உளார் - குறையுள்ளவர் எங்கு இரார் (அந்தக் குறைதீருமளவும் (எவ்விடத்துத்தான் இரார் (இருப்பர்,)

சுக்ரீவன் தலைவாயிலில் ஸ்ரீராமர் காத்திருந்ததுபோல, உன் தலைவாயிலில் பல அரசரும் காத்திருக்கின்றனர் என்பது கருத்து.

கம்பர் கற்றுச்சொல்லி பாடியது.

66. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வெங்கண்மானிருகண்ணுறங்கிலளையகோ
கோவுறங்குகடைத்தலைக்குலதீபவள்ளைகுதட்டிவாய்
ஆவுறங்குபுகாரசஞ்சலவஞ்சலென்னவடுக்குமே.

இ-ள். கோ-(திறைகொண்டுவந்த) அரசர், உறங்கு - (சமயம் வாய்க்காமையால்) உறங்குகின்ற, கடைத்தலை - தலைவாயிலையுடைய, குலவிளக்குப்போன்றவனே, ஆ-பசுக்கள், வாய்-வாயினால், வள்ளைகுதட்டி-வள்ளைக்கொடியை மென்றுகொண்டே, உறங்கு-உறங்குகின்ற, புகார் - காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள, அசஞ்சல-அசஞ்சலனே, மா உறங்கின-மிருகங்கள் உறங்கின, புள் உறங்கின-பறவைகள் உறங்கின, வண்டு உறங்கின-வண்டுகள் உறங்கின, தண்டலைகா உறங்கின-குளிர்ந்த இடத்தையுடைய சோலைகளுறங்கின, எங்கள் மான்-எங்கள் பெண்ணானவள், இருகண் உறங்கிலள்-இருகண்ணுறங்கினளில்லை, ஐய ஐய-னே, அஞ்சல் என்ன அடுக்கும்- நீ எம்மை அஞ்சற்க என்று சொல்லத்தகும். எ-று.

அசஞ்சலனே, மிருகமுதலியவை உறங்குகின்ற இந்த இராக்காலத்திலும் என்மகள் உறங்குகின்றாளில்லை. ஆதலால், இவளை நீ அஞ்சலென்று சொல்லத்தகும் என்பதுகருத்து: இதனைக் கண்படைபெறாது கங்குலோ தலைத் தாய் அறிவுறுத்துவதாக் கொள்க.

சேரசோழ பாண்டியர்கள் ஏகம்பவாணமுதலியார் வீட்டிற்குவந்து முதலியாரெங்கேயென, அவர்மனைவி கழனிக்குப் போயினரென, அவர்கள் வேடிக்கையாக முடிநடப்போனரோ வென்றபோது, ஷை முதலியார்மனைவி பாடியது.

1. சேனைதலையாக்கிச்செங்குருதிநீர்தேக்கி
ஆனைமிதித்தவடிச்சேற்றில்-மானபரன்
மாவேந்தர்வேந்தன்பறித்துநட்டானேகம்பன்
மூவேந்தர்தங்கண்முடி.

இ-ள். மானபரன்-பெருமையிற் சிறந்தோனும், வாவேந்தர்வேந்தன்-பேரரசனுமாகிய, ஏகம்பன்-ஏகம்பவாணன், சேனைதலைஆக்கி-சேனைகளை எருத்தலையாக்கி, செங்குருதிநீர்தேக்கி - செவந்த உதிரநீரைத் தேங்கவிட்டு, ஆனைமிதித்த அடிச்சேற்றில் - யானைமிதித்த அடிச்சேற்றின்கண், மூவேந்தர் தங்கள் முடிபறித்து-சேரசோழ பாண்டியர்களாகிய மூன்றரசர்கள் முடியைப்பறித்து, நட்டான்-(நாற்றாக)நட்டான். எ-று.

அரசர்கள் சொன்னதை ஏகம்பவாண முதலியார் மனைவி கணவனுக்குச்சொல்ல, அவர் கோபித்துக்கொண்டு பூதத்தை யனுப்பி, சேரனையும், சோழனையும் தன் சிறைச்சாலையி லடைத்துவிட்டுப் பாண்டியனிடத்திற் கனுப்ப, அவனிடத்தில் வேப்பமாலையிருப்பதனல் பூதம் அஞ்சித்திரும்ப, அப்போது ஏகம்பவாணர் அவ்வேப்பமாலையை உபாயமாய் வாங்கிவர நான்கு பெண்களை யனுப்ப, அந்நால்வரும் ரம்பை முதலிய தேவதாசிகளைப்போல அரசன் சமுகத்தில் நடனஞ்செய்து அவனைப் பிரமிக்கப்பண்ணியபோது, அவன் முத்துமாலை முதலிய அணிகளைப் பரிசாகக் கொடுக்கவர, அவர்கள் அவற்றை மறுத்து வேப்பமாலையைத் தருகவெனப் பாடியவை.

2. தென்னவாமீனவாசீவிலிமாறுமதுரை
மன்னவாபாண்டிவளநாடா-முன்னம்
சுரும்புக்குத்தாரளித்ததுய்யதமிழ்நாடா
கரும்புக்குவேம்பிலேகண்.

இ-ள். தென்னவா-தென்னவனே, மீனவா-மீனக்கொடியையுடையானே, சீவிலிமாறு-ஸ்ரீவில்லிபுத்தூரையுடைய அழகிய வில்லாளியாகிய பாண்டியனே, மதுரைமன்னவா-மதுரைக்கரசனே, பாண்டிவளநாடா-பாண்டிவளநாட்டை யுடையவனே, முன்னம் - முன்னாளில், சுரும்புக்கு தார் அளித்த-வண்டுகளுக்கு மாலையைக்கொடுத்த, துய்யதமிழ் நாடா-பரிசுத்தமாகிய தமிழ் நாட்டையுடையானே, கரும்புக்கு-கரும்புபோல் வாளாகிய என்பெண்ணுக்கு, வேம்பிலேகண்-உன் வேப்பமாலையிலேதிருஷ்டியுண்டு.

3. மாப்பைந்தார்க்கல்லமுத்துவண்ணத்தார்க்கல்லவென்பெண்
வேப்பந்தார்க்காசைகொண்டுவிட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்குநெல்வேலிச்சீவிலிமாறுதமிழை
ஆய்ந்திருக்கும்வீரமாறு.

இ-ள். பூ-மலர்கள் நிறைந்த, பைதார் சேர்ந்திருக்கும் - பசியசோலைகள் பொருந்தி யிருக்கின்ற, நெல்வேலி சீவிலிமாறு - திருநெல்வேலிக்கிறைவனாகிய சீவிலிமாறனே, தமிழை ஆய்ந்து இருக்கும் வீரமாறு - தமிழை யாராய்ந்திருக்கிற வீரமாறனே, என்பெண்-என்மகள், மாபைதார்க்கு அல்ல - அழகாகிய பசியபூமாலைக்கு விருப்பங்கொண்டாளல்லள், வண்ணம்-அழகாகிய, முத்துதார்க்கு அல்ல-முத்துமாலைக்கு விருப்பங்கொண்டாளல்லள்; வேப்பந்தார்க்கு ஆசைகொண்டுவிட்டாள் - (உனது) வேப்பமாலைக்கு விருப்பங்கொண்டு விட்டாள். எ-று.

4. வேம்பாகிலுமினியசொல்லிக்குநீபுனைந்த
வேம்பாகிலுமுதவவேண்டாவோ-மீன்பாயும்
வேலையிலேவேலைவைத்தமீனவாநின்புயத்து
மாலையிலேமாலைவைத்தாண்மான்.

இ-ள். வேம்பாகிலும் இனியசொல்லிக்கு-வெல்கின்ற சர்க்கரைப்பாகினும் இனிமையாகிய சொல்லையுடையாளுக்கு; நீ புனைந்த-நீ தரித்த; வேம்பாகிலும் உதவவேண்டாவோ - வேப்பமாலையையாவது கொடுக்கவேண்டாமோ, மீன்பாயும்வேலையிலே-மீன்கள் தாவுகின்ற கடலின்மீது; வேலைவைத்த-வேலைப் பிரயோகித்த; மீனவா-பாண்டியனே, மான்-(என்)பெண்ணானவள்; நின்புயத்து மாலையிலே - உன்தோளிலணிந்த வேப்பமாலையின்மீது, மாலைவைத்தாள்-விருப்பத்தை வைத்தாள். எ-று.

5. இலகுபுகழாறையேகம்பவாணன்
அலகைவரும்வருமென்றஞ்சி-உலகறிய
வானவர்கோன்சென்னிமிசைவண்கைவளையெறிந்த
மீனவர்கோன்கைவிடான்வேம்பு.

இ-ள். உலகு அறிய-உலகத்தார் அறியும்படி, வானவர்கோன் சென்னி மிசை-தேவேந்திரனது சிரத்தின்மீது; வள்கை வளை எறிந்த - (தன்) கொடைக்கையினுள்ள வளையையேவின; மீனவர்கோன் - பாண்டியன்; இலகுபுகழ் - விளங்குகின்ற கீர்த்தியையுடைய; ஆறை ஏகம்பவாணன்-ஆறை ஏகம்பவாணனது; அலகை வரும்வரும் என்று அஞ்சி-பூதம் வரும் வரும் என்றுபயந்து; (தான்றுணிந்து) கைவிடான் வேம்பு - வேப்பமாலையைக் கைவிடான். எ-று.

பரத்தையிற்பிரிந்துவந்த தன்நாயகனை நோக்கிப்

பாண்டியன்மனைவி கூறியது.

6. வேண்டியபோதின்பம்விளைக்குமடந்தையரைத்
தீண்டியகையாலென்னைத்தீண்டாதே-பாண்டியா
முல்லைக்கதிபாமுகம்பார்த்தகலநின்று
சொல்லக்கடவவெல்லாஞ்சொல்.

இ-ள். வேண்டியபோது-விரும்பியபோது, இன்பம்விளைக்கும் - சுகத்தை யுண்டாக்குகிற, மடந்தையரை-(பொது) மாதரை, தீண்டியகையால்-தொட்டகையால், என்னைதீண்டாதே - என்னைத்தொடாதே, பாண்டியா—, முல்லைக்கு அதிபா-முல்லைநகர்க்கு இறைவனே, அகல நின்று-தூரநின்று, முகம்பார்த்து - என்முகத்தைப்பார்த்து, சொல்லக்கடவ எல்லாம் சொல்-சொல்லவேண்டியவற்றையெல்லாம் சொல்லக்கடவாய். எ-று.

இதுவுமது.

7. கலையான்முலைமூடிக்கண்வலைக்குள்ளாக்கும்
விலைமாதர்தாம்வரவிட்டாரோ-விலைமாதர்
கொங்கையிலேதோய்ந்தகுறைதீரத்துய்யசிவ
கங்கையிலேநீராடிவா.

இ-ள். கலையால் முலைமூடி-ஆடையால் தனங்களை மறைத்து, கண்வலைக்கு உள் ஆக்கும் - கண்களாகிய வலைக்குள்ளே அகப்படுத்துகிற, விலைமாதர்தாம் வரவிட்டாரோ-வேசையர்தாம் (உன்னை இங்கு) வரவிட்டனரோ, விலைமாதர்-(அந்த) விலைமாதரது, கொங்கையிலே தோய்ந்த - தனஇடத்திற்படிந்த, குறைதீர-பாவம்தீர, துய்ய-பரிசுத்தமாகிய, சிவகங்கையிலே நீராடிவா-சிவகங்கையில்மூழ்கி வருவாயாக. எ-று.

கைக்கோளர், ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்தை
ஒட்டக்கூத்தர் பாடும்பொருட்டுத் தமதுசிரங்களையே பரிசாகக்கொடுக்க,
அப்புலவர் அவர்களைப் பிழைப்பிக்கும் பொருட்டுச்
சிரச்சிங்காதனத்திலிருந்து பாடியது.

1. கலைவாணிநீயுலகிலிருப்பதுவுங்கல்வியுணர்கவிவல்லோரைத்
தலையாகக்காப்பதுவுமவர்நாவில்வாழ்வதுவுஞ்சத்தியமேயன்றே
சிலைவாணனுவிருந்தாயிரம்புயங்கடுணிந்துமுயர்சீவனுற்றான் (யே.
தலையாவிகொடுத்திடுஞ்செங்குந்தருயிர்பெற்றிடநீதயைசெய்வா

இ-ள். கலைவாணி-எல்லாக் கலைகளுக்கும் அதிதேவதையாகிய சரசுவதியே, நீ உலகில் இருப்பதுவும்-நீ உலகத்தில் வியாபித்திருப்பதும், கல்வி உணர் கவிவல்லோரை - வித்தையையறிந்த புலவோர்களை, 'தலை ஆக காப்பதுவும்-தலைமைபெறக்காப்பதுவும், அவர்நாவில் வாழ்வதும் - அவருடைய நாவினிடத்து வசிப்பதும், சத்தியமே அன்றே - சத்தியமே யல்லவோ, சிலைவாணன் நா இருந்து-வில்லையுடைய வாணுசுரனது நாவில் தங்கியிருந்ததனால், ஆயிரம் புயங்கள் துணிக்கும்-(அவனது) ஆயிரந்தோள்களும் அறுபட்டும், உயர்சீவன் உற்றான்-உயர்ந்த உயிரைப்பெற்றிருந்தான், (ஆதலால்) தலை ஆவிகொடுத்திடும்-(தமது) தலையையும் உயிரையுந்தந்த, செங்குந்தர்-செங்குந்தரெல்லாரும், உயிர்பெற்றிட - உயிர்பெற்றெழும் வண்ணம்-நீ தயைசெய்வாய்-நீ கருணைசெய்யவேண்டும். எ-று.

ஒட்டக்கூத்தர் செங்குந்தரைப் புகழ்ந்துபாடியது.

2. நிலைதந்தா ருலகினுக்கு ளியாவருக்கு மானமதை நிலைக்கத்
தந்தார், கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய் திடவென்றேகை
யிற்றந்தார், விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த ரென்கவிக்கே
விலையாகத்தம், தலைதந்தா ரெனக்குமொட்டக் கூத்தனெனப் பெய
ரிணையுந் தாந்தந்தாரே.

இ-ள். செங்குந்தர்-செங்குந்தர்கள், உலகினுக்குள்-உலகத்தில், நிலை தந்து ஆர்யாவருக்கும் - நிலைபெற்றிருக்கிற எல்லாச் சாதியார்க்கும், மானமது நிலைக்கத்தந்தார் - மானம் அழியாது நிலைபெறச் செய்தார்கள், ஆர் வணிகருக்கு-உலகில் நிறைந்த வியாபாரிகளுக்கு, சீவனம்செய்திட என்று-சீவனஞ் செய்தற்பொருட்டு, கலைதந்து-ஆடையையுண்டாக்கி, கையில்தந்தார்-(அவருடைய) கையில் கொடுத்தார்கள், தமிழினுக்கு-(வித்வான்கள் பாடிய) தமிழ்ப் பாடல்களுக்கு, விலைதந்தார்-(பெரும்பொருளை) பரிசிலாகக்கொடுத்தார்கள், என்கவிக்கு விலையாக-(இவர்மீதுபாடப்பட்ட ஈட்டியெழுபது என்னும் பிரபந்தமாகிய) என்பாடலுக்கு விலையாக, தம் தலை தந்தார் - தமது தலையையும் கொடுத்தார்கள், எனக்கும் ஒட்டக்கூத்தன்

என்னும் பெயரினையும் தாம்தந்தார்-எனக்கும் ஒட்டக்கூத்தன் என்கிறபெயரையும் தாம் கொடுத்தார்கள். எ-று.

சோழராஜர் ஒருவித்வானுக்குவிருதுகொடுத்தபோது
ஒட்டக்கூத்தன் பொறாமைகொண்டு பாடியது.

3 பத்துக்கொண்டனதிக்கும்பதறிப்போயுலைபப்
பைம்பொற்றாரகைசிந்தப்பகிரண்டத்திடைநீள்
மத்துக்கொண்டுமதிக்குந்திரைபாழிநெடுமால்
வடிவாகிப்புவிகைக்கொண்டருண்மாநுபரணு
முத்துப்பந்தரினிற்குங்குருளைக்குஞ்சினவேன்
முருகற்கும்பொதியக்கோமுனிவற்குஞ்சடிலக்
கொத்தற்கும்பதுமக்கொந்தயனுக்குமலதிக்
கூழைத்தண்டமிழுக்கேன்கொடியுங்காளமுமே.

இ-ள். பத்துகொண்டனதிக்கும் பதறிபோய் உலைய - பத்தென்னும் தொகையைக்கொண்ட திசைகளும் பதறி நடுங்கவும், பைம்பொன் தாரகை சிந்த-பசும்பொன்னிறமுள்ள நக்ஷத்திரங்கள் உதிரவும், பகிரண்டத்து இடை நீள்-பகிரண்டத்தினளவும் நீண்ட, மத்துக்கொண்டு - (மந்தரமலையாகிய) மத்தினால், மதிக்கும்-கடைந்த, திரை ஆழி-அலைகளோடுகூடிய பாற்கடலையுடைய, நெடுமால்-திருமாலின், வடிவு ஆகி-உருவங்கொண்டு, புவி-பூமிமுழுதும், கைக்கொண்டு-கைப்பற்றி, அருள்-ஆண்டருளுகின்ற, மாநுபரணு-மாநுபரணனே, முத்துப்பந்தரில் நிற்கும் குருளைக்கும் - முத்துப்பந்தலில்வசிக்கின்ற திருஞானசம்பந்தர்பாடிய பாடலுக்கும், சினம் வேல் முருகற்கும் - கோவத்தையுடைய வேலாயுதமேந்திய முருகர்பாடிய பாடலுக்கும், பொதியம் கோமுனிவற்கும் - பொதியமலையில் வாழ்கின்ற முனிசிரேஷ்டராகிய அகத்தியர்பாடிய பாடலுக்கும், பதுமக்கொந்து அயனுக்கும்-தாமரைமலரை யாசநமாகவுடைய பிரமதேவன்பாடிய பாடலுக்கும், அலது-அன்றி, இ-இந்த, கூழை தண்தமிழுக்கு-அற்பமாகிய தமிழ்ப் பாடலுக்கு, கொடியும் காளமும் என்-கொடியும் காளமும் (கொடுத்தல்) யாதுக்கு. எ-று.

கம்பைக்காவலன் என்னும் ஓர் பிரபுவின்மீது பாடியது.

4 மாங்குயிலால்வில்லிதன்னம்பினாற்கம்பவாரிதியால்
ஓங்கியபூமெல்லணையொன்றினாலும்பரூர்மதியால்
தீங்குறுமேநல்லெழில்குன்றுமேகொம்புசேர்கெடுமே
காங்கெயனேசொல்லகளங்கனேகம்பைக்காவலனே.

இ-ள். மாகுயிலால்-மாமரத்திலுள்ள குயிலினாலும், வில்லி தன்அம்பினால்-மன்மதனது பாணத்தினாலும், கம்பம் வாரிதியால்-அசைதலுள்ளகடலினாலும், ஓங்கிய-உயர்ந்த மெல் - மென்மையாகிய, பூ அணை -ஒன்றினால்

புஷ்பசயந மொன்றினாலும், உம்பர்ஊர்மதியால்-ஆகாயத்தில் தவழ்கின்ற சந்திரனாலும், கொம்பு-பூங்கொம்புபோல்வாளாகிய என் பெண்ணானவள், தீங்கு உறும்-தீமையையடைவாள், நல்எழில்குன்றும்-நல்ல அழகழிவாள், சீர்கெடும்-மேன்மையை யிழப்பாள், காங்கேயனே,- கம்பைக்காவலனே,- சொல்-சொல்வாயாக. எ-று.

குயில்முதலியவற்றால் என்பெண் சீரழிவதற்குமுன், கம்பைக்காவலனே நீவந்து இவளைக் காக்கவேண்டுமென்பது கருத்து மூன்றாமடியில் ஏகாரமூன்றும் ஈற்றசை.

காகங்கரைப்பயந்த ஒருபெண் ஒருசோர நாயகனை விரும்பி, இராக்காலத்தில் நீர்ப்பெருக்கில் மிதக்கின்றபிணத்தையே தெப்பமாகக்கொண்டுசென்று, அவனைக் கூடியனுபவித்து மீண்டுவரும்போது, முதலையானது காலைப்பற்ற, அதைத் தன் காலிலணிந்த கொலுசினால் கன்னத்தில் உதைத்தாள். இந்தச்செய்தியைச் சோழன்கண்டுவந்து கேட்டபோது ஒட்டக்கூத்தர்பாடிய. கண்டசுத்தி.

5 காரண்டகண்டத்தொனிக்கஞ்சியமான் சருங்கங்குலிலே
திரண்டவெள்ளத்திற்பிணமீதுசென்றனள்சேர்ந்தவனை
அரண்டவின்பங்கொடுமீளக்கராம்பற்றவங்கொலுசால்
குரண்டகன்னத்திலுதைத்தனள்காணங்குலோத்துங்கனே.

இ-ள். அம்குலோத்துங்கனே - அழகிய குலோத்துங்கச்சோழனே, காரண்டம்-நீர்க் காக்கையின், கண்டத்தொனிக்கு அஞ்சிய - குரலோசைக்குப் பயந்த, மான்-பெண்ணானவள், கருகங்குலிலே-கருமையாகிய இராக்காலத்தில், திரண்டவெள்ளத்தில்-பெரியவெள்ளத்தில், பிணமீதுசென்றனள்-பிணத்தின்மேலேறிப்போய், அவனைசேர்ந்து - அந்தச் சோரநாயகனைக்கூடி, அரண்ட இன்பம்கொடு-வெருட்சியாகிய இன்பத்தையநுபவித்து, மீள - மீண்டுவர, கராம்பற்ற - முதலை (காலைப்) பிடிக்க, அம்கொலுசால் - அழகிய கால்கொலுசினால், குரண்ட கன்னத்தில் உதைத்தனள்- திரைந்த கன்னத்தில் உதைத்தாள். எ-று.

ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண்கேட்டபோது பாண்டியன் சோழனுக்கு என்னபெருமையென்றுவினவ, அச்சோழனுடைய குதிரை, நதி, மாலை, சூலம், வீரம், கொடி, நகர், தேசம் இவைகளுக்குப் பாண்டியனுடைய குதிரைமுதலிய அவ்வெட்டும் ஒப்பாகமாட்டா எனப் பாடியது.

6. கோரத்துக்கொப்போகனவட்டமம்மானை
கூறுவதும்காவிரிக்குவையையோவம்மானை

ஆருக்குவேம்புநிகராகுமோவம்மானை
ஆதித்தனுக்குநிகராம்புலியோவம்மானை
வீரர்க்குள்வீரனொருமீனவனோவம்மானை
வெற்றிப்புலிக்கொடிக்குமீன்கொடியோவம்மானை
ஊருக்குறந்தைநிகர்கொற்கையோவம்மானை
யொக்குமோசோனாட்டுக்குப்பாண்டிநாடம்மானை.

இ-ள். கனவட்டம் கோரத்துக்கு ஒப்போ-கனவட்டமானது கோரத்துக்கு ஒப்பாகுமோ, காவிரிக்கு கூறுவதும் வையையோ - காவிரியாற்றுக்கு உவமையாகச் சொல்லப்படுவதும் வையையாறோ, வேம்பு ஆருக்கு நிகர் ஆகுமோ-வேப்பமாலை ஆத்திமாலைக்கு நிகராகுமோ. ஆதித்தனுக்கு-சூரியனுக்கு, அம்புலியோநிகர்-சந்திரனோ நிகராவது, ஒருமீனவனோ-ஒரு பாண்டியனோ, வீரர்க்குள்வீரன்-வீரருக்குள்ளே வீரனாயிருப்பவன், வெற்றிபுலிக்கொடிக்கு-வெற்றியுள்ள புலிக்கொடிக்கு, மீன்கொடியோ - மீனக்கொடியோ நிகராவது, ஊருக்கு-ஊர்களில், கொற்கையோ-கொற்கைநகரமோ, உறந்தை நிகர்-உறந்தை நகரத்துக்கு நிகராவது, பாண்டிநாடு-பாண்டிநாடானது, சோனாட்டுக்கு ஒக்குமோ - சோழநாட்டை நிகர்த்திருக்குமோ. எ-று.

கோரம்-சோழன் ஏறும்குதிரை. கனவட்டம்-பாண்டியன் ஏறும் குதிரை.

அதற்குமாறாகப் புகழேந்திப்புலவர்பாடியது.

7. திருநெடுமாலவதாரஞ்சிறுபுலியோவம்மானை
சிவன்முடியிலேறுவதுஞ்செங்கதிரோவம்மானை
ஒருமுனிவனேரியிலோவுரைதெளிந்ததம்மானை
ஒப்பரியதிருவிளையாட்டுறந்தையிலோவம்மானை
கரையெதிரேடேறியதுகாவிரியோவம்மானை
கடிப்பகைக்குத்தாதகியங்கண்ணியோவம்மானை
பரவைபணிந்ததுஞ்சோழன்பதந்தனிலோவம்மானை
பாண்டியனார்பராக்கிரமம்பகரௌிதோவம்மானை.

இ-ள். திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ-திருமகளையுடையநெடுமாலின் அவதாரம் சிறுபுலிதானோ, சிவன்முடியில்ஏறுவதும்செங்கதிரோ-சிவனது சிரசின்மீதேறுவதும் சூரியன்தானோ, உரைதெளிந்ததுஒருமுனிவன் நேரியிலோ-தமிழ்ப்பாஷை தெளிவடைந்தது ஒப்பற்ற நேரிமலையிற்றானோ, ஒப்பு அரிய திருவிளையாட்டு உறந்தையிலோ - உவமையில்லாத திருவிளையாடல்களைச் சிவபெருமான் செய்தது உறந்தையில்தானோ, கரை எதிர் ஏடு ஏறியது காவிரியோ-கரையைநோக்கி ஏடு எதிரேறியதற்கிடமாயிருந்தது காவிரிநதிதானோ, கடிப்பகைக்கு-வேம்புக்கு நிகராவது, தாதகி அம்கண்ணியோ-அழகிய ஆத்திதானோ, பரவைபணிந்ததும் சோழன்பதந்தனிலோ-கடலானதுவந்து பணிந்ததும் சோழனது பாதத்தில்

தானே, பாண்டியனார் பராக்கிரமம் பகர் எளிதோ - பாண்டியனாருடைய வல்லமைசொல்லுதற் கெளிதாகுமோ

சோழன் பவனிவரும்போது ஒட்டக்கூத்தர் அவனைப்புகழ்ந்து
இரண்டடிபாட, சோழனிரண்டடிபாடியது.

8 ஆடுங்கடைமணிநாவசையாமலகிலமெங்கும்
நீடுங்குடையைத்தரித்தபிரானிந்தநீணிலத்தில்
பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்கச்சோழனென்றேயென்னைச்சொல்லுவரே.

இ-ள். ஆடும் கடைமணி நாவசையாமல் - அசையு மியல்புள்ளவாயில் மணியானது நாவசையாதவண்ணம், அகிலம்எங்கும்-உலகமெங்கும், நீடும் குடையைத் தரித்தபிரான்-பெரியகுடையைத் தரித்து நிழலைச்செய்கின்ற பெருமான், இந்த நீள்நிலத்தில்-இந்தப் பெரிய நிலவுலகத்தில், புலவர்பாடும் பகழ்-புலவர் புகழ்ந்துபாடும் புகழையுடைய, ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தை-ஒட்டக்கூத்தனது திருவடித்தாமரையை,சூடும்-சிரசிலணிகின்ற, குலோத்துங்கச்சோழன் என்றே என்னைச்சொல்லுவர். எ-று.

ஒட்டக்கூத்தர் சோழனது யானைச்சங்கிலி யவிழ்க்கப்
பட்டதைக்குறித்துப் பாடியது.

9. இன்னங்கலிங்கத்திகல்வேந்தருண்டென்றோ
தென்னவன்தமிழ்நாட்டைச்சீறியோ-சென்னி
அகளங்காவுன்றனயிராவதத்தின்
நிகளங்கால்விட்டநினைவு.

இ-ள். சென்னி அகளங்கா-அகளங்கச்சோழனே, உன்றன் அயிராவதத்தின்-உன் யானையினது, நிகளம்-கால்விலங்கானது, கால்விட்டநினைவு-காலைவிட்டு நீங்கினதற்குக்கருத்து, இன்னம்-இன்னமும், கலிங்கத்து-கலிங்கதேசத்தில், இகல்வேந்தர் உண்டு என்றோ - பகையரசர் உளரென்பது தானோ, தென்னன் தமிழ்நாட்டைச்சீறியோ - பாண்டியனது தமிழ்நாட்டைக் கோவித்தோ, (யாமறியோம்.) எ-று.

புகழேந்திப்புலவர் பாண்டியனது யானைச்சங்கிலியவிழ்க்கின்வரும்
பயனைக் குறித்துப் பாடியது.

10. தென்னவன்றென்னர்பெருமான்றிறன்மதுரை
மன்னவன்கோக்களிற்றின்வல்லிக்கும்-பொன்னிநா
டாலிக்கும்வேந்தாமபயகுலன்மகளிர்
தாலிக்குமொன்றேதளை.

இ-ள். தென்னவன்-பாண்டியன், தென்னர்பெருமான் - தென்னாட்டார்க்கிறைவன், திறல்-வலியைபொருந்திய, மதுரைமன்னவன்-மதுரை

வேந்தன், (அவனது) கோ களிற்றின் வல்லிக்கும்-பட்டத்துயானைச்சங்கிலிக்கும், பொன்னிநாடு ஆலிக்கும்வேந்து ஆம்-பொன்னிநாட்டில் களித்து வாழ்கின்ற வேந்தனாகிய, அபயகுலன் மகளிர்தாலிக்கும்-சோழனது குலமகளிரது மங்கலசூத்திரத்துக்கும், தளை ஒன்றே-முடிச்சு ஒன்றேயாம்.

பாண்டியனது பட்டத்து யானைச்சங்கிலி யவிழ்க்கப்பட்டவுடனே அதுசென்று சோழன்முதலியோரைக்கொல்லும், அதனால் அவன் குலமகளிர் மங்கலநாணையிழப்பர் என்பதுகருத்து.

அரசன் புகழேந்தியை யாரெனவினவ, ஒட்டக்கூத்தர் இவன் பித்தனென்றபோது புகழேந்திப்புலவர் பாடியது.

11. சத்தம்பயிலும்புலவோர்கதலித்தண்டோட்டம்புகும்
பித்தனிவனென்பரென்னைக்கண்டாற்பெருத்துப்பணைத்துத்
தத்தம்பிறகிடும்பார்வேந்தர்தங்கடடமகுட
சத்தமபசத்தங்காண்கங்குல்யானைச்சயதுங்கனே.

இ-ள். பெருத்து பணைத்து-மிகப்பெருத்து, தத்தம் பிறகிடும் - தத்தமக்குப்பின்னிடுகின்ற, பார்வேந்தர் தங்கள் - பூமியையுடைய அரசரது, தடமகுடசத்தம்-பெரியமுடியோசையை, அபசத்தம்காண்-அபசத்தமாகக் காண்கிற, கங்குல்யானை சயதுங்கனே - இருள்போலும் கரியயானைகளையுடைய சயதுங்கனே, சத்தம்பயிலும்புலவோர் - இலக்கணசாத்திரத்தில் பழகுகின்றபுலவர்கள், என்னைக்கண்டால் - என்னைப்பார்த்தால், இவன் தண்கதலிதோட்டம் புகும் பித்தன் என்பர் - இவன் குளிர்ந்த வாழைத்தோட்டத்தில் நுழைகின்ற பித்தனென்பார்கள். எ-று.

பித்தர் வாழைக்கொல்லையில் நுழைவது அந்த நிழலிலிருந்தால் பித்தம் தணியுமென்பது ஆயுணூல் வழக்காதலால், 'கதலித்தண்டோட்டம் புகும்பித்தன்' என்றார், அபசத்தமாகக் காண்டலாவது - உடைத்து ஓட்டையாக்கல்.

யானைமேல் பவனிவரும் சோழன், ஒட்டக்கூத்தரால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, அச்சாலையின் தளத்தில் நின்று வேடிக்கையாக பார்த்துக்கொண்டிருந்த புகழேந்திப் புலவரைச் சுட்டி, இவன் சிறந்தபுலவனன்றோ என்றபோது, ஒட்டக்கூத்தர் பாடியது.

12. மானிற்குமோவிந்தவாளரிவேங்கைமுன்வற்றிச்செத்த
கானிற்குமோவிவ்வெரியுந்தணன்முன்கனைகடலின்
மீனிற்குமோவிந்தவெங்கட்சுறாமுனம்வீசுபனி
தானிற்குமோவிக்கதிரவன்றோற்றத்திற்றார்மன்னனே.

இ-ள். தார்மன்னனே-வெற்றிமாலையையணிந்த சோழமகாராசனே, இந்தவாளரிவேங்கைமுன்-இந்த ஒளியுள்ள கீற்றுக்களையுடைய வேங்கைப்

புலிக்கெதிரே, மான்நிற்குமோ-மானானது நிற்குமோ, இளரியும்தணல்முன் இந்த எரிகின்ற நெருப்புக்கெதிரில், வற்றிச்செத்தகான் நிற்குமோ - நீர்ப் பசையற்றுப்போன காடானது நிற்குமோ, இந்தவெம்கண்சுறுமுனம்-இந் தக்கொடுமையையுடைய சுறுமீனுக்கெதிரில், கனைகடலின் மீன்நிற்கு மோ-ஒலிக்கின்ற கடலிலுள்ள மற்றைச் சிறுமீன்கள் நிற்குமோ, இக்கதிர வன் தோற்றத்தில் - இந்தச் சூரியோதயத்தில், வீசுபனிதான்நிற்குமோ- வீசுகின்ற பனிதானும் நிற்குமோ, (இவ்வுவமைகள்போல எனக்கெதிரில் இந்தப்புகழேந்தி நிற்கமாட்டுவனே.) எ-று.

இதைக்கேட்ட புகழேந்திப்புலவர் அரசனைநோக்கி, இக்கவியை ஒட்டிப்பாடவோ வெட்டிப் பாடவோவென, அரசன் ஒட்டக் கூத்தரிடத்துள்ள அன்பால் ஒட்டிப்பாடென, அவ்வாறே புகழேந்தி ஒட்டிப் பாடியது.

13. மானவனானந்தவாளரிவேங்கைமுன்வற்றிச்செத்த
காணவனானவ்வெரியுந்தணன்முன்கனைகடலின்
மீனவனானந்தவெங்கட்சுறுமுனம்வீசுபனி
தானவனானக்கதிரவன்றோற்றநற்றார்மன்னனே.

இ-ள். நல்தார்மன்னனே-அழகியபூமாலையைத்தரித்த அரசனே, அவ ன்மான்-அந்த ஒட்டக்கூத்தன் மான், நான் அந்தவாள் அரிவேங்கை-நான் அந்த மான்களைக் கொல்லுகின்ற ஒளிபொருந்திய கோடுகளையுடையபுலி, அவன்முன்வற்றிச் செத்தகான் - அவன்பசையற்று உலர்ந்தகாடு, நான் அளரியும் தணல்— நான் அதனை எரிக்கின்ற அந்தக் காட்டுத்தீ, அவன் கனைகடலின் மீன் - அவன் ஒலிக்கின்ற கடல்மீன், நான் அந்த வெங்கண் சுறு—நான் அந்தக்கொடிய சுறுமச்சம், அவன்வீசுபனி - அவன்பெய்யும் பனி, நான் அ கதிரவன் தோற்றம்-நான் அதனைநீக்கும் சூரியோதயம்.

புகழேந்திப்புலவர் தன்பிதாவின் சமஸ்தான வித்வானுகையாலும், நெடு நாளாய் அவர் சிறையிலிருப்பதினாலும், அந்தச் சிறையினின்றும் மீட்கவிரும்பின ராஜபத்தினி, தனது பள்ளியறைக்கு அர சன்வரும் குறிப்பறிந்து, கதவை மூடிக்கொண்டு உள்ளே பிரவேசிக்க வொட்டாமல் தடைசெய்தபோது, அக்காலத்து வழக்கத்தின்படி அரசன் மனைவியின் ஊடலைத்தணிக்கும்படி ஒட்டக்கூத்தரை யனுப்ப, அவர் போய் கதலின் புறத்து நின்று பாடியது.

14. நானேயினியுன்னைவேண்டுவதில்லைநளினமலர்த்
தேனேகவாடந்திறந்திடுவாய்திறவாவிடிலோ

வானேறனையவிரவிகுலாதிபன்வாயில்வந்தால்
தானேதிறக்குநின்கையிதழாகியதாமரையே.

இ-ள். நளினமலர் தேனே-தாமரைமலரில் வாழ்கின்றதேன்போலும் இன்சுவையைத்தருகிற மொழியையுடைய திருமகளை நிகர்ப்பவளே, கவாடம் திறந்திடுவாய்-கதவைத் திறப்பாயாக, திறவாவிடில்-திறவாவிட்டால், வான் ஏறுஅனைய (பகைவராகிய பாம்புகளுக்கு) மேகத்திலிடிக்கின்ற ஆணிடிபோன்றவனாகிய, இரவிகுலாதிபன் - சூரியகுலத்தரசனாகிய சோழன், வாயில்வந்தால்-உன் வாசலில் வந்தால், நின்-உனது, கைஇதழ் தாமரை - (விரல்களாகிய) இதழ்களையுடைய கைத்தாமரையானது, தானே திறக்கும் - தானே திறந்துவிடப்போகின்றது, (ஆதலால் அந்தவிஷயத்தைப்பற்றி) நான் இனி உன்னைவேண்டுவதில்லை-நான் இனியுன்னைப்பிரார்த்திப்பதில்லை. எ-று.

இதைக்கேட்ட அரசன்மனைவி, ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரைச் சிறையில் வைத்திருக்கின்ற கோபமிகுதியால், ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்றுசொல்லி மேலும் ஓர் தாள் பூட்ட, இதனை ஒட்டக்கூத்தரால் அறிந்த அரசன், இவள் ஊடலுக்குக் காரணம் புகழேந்தியைச் சிறையில் வைத்தமை யாகுமென்று ஆலோசித்துத் துணிந்து, புகழேந்திப் புலவரைச் சிறையினின்று நீக்கி, அவ்வூடலை நீக்கும்படி அனுப்பியபோது, அப்புலவர் பெருமான் பாடியது.

15. இழையொன்றிரண்டுவகிர்செய்தநுண்ணிடையேந்துவள்ளைக்
குழையொன்றிரண்டுவிழியணங்கேகொண்டகோபந்தணி
மழையொன்றிரண்டுகைமானாபரணனின்வாயில்வந்தால்
பிழையொன்றிரண்டுபொறாரோகுடியிற்பிறந்தவரே.

இ-ள். இரண்டுவகிர்செய்த இழைஒன்று-இருபிளவாகச் செய்யப்பட்டநூலிழையின் ஒரு சிறுகூறுபோன்ற, நுண்இடை - நுட்பமாகிய இடையையும், ஏந்துவள்ளைக் குழைஒன்று இரண்டுவிழி-காதில் அணிந்த குழைகளைச்சென்று தீண்டுகிற இருகண்களையும் உடைய, அணங்கே - தெய்வப்பெண்போல்பவளே, கொண்ட கோபம்தணி - நீ கொண்ட கோபத்தை நீயே தணித்துக்கொள்ளவேண்டும், மழைஒன்று-கைம்மாறு கருதாக்கொடையாகிய மேகத்தின்குண மமைந்த, இரண்டுகை - இரண்டுகைகளையும், மானம் ஆபரணன்-மானமாகிய ஆபரணத்தையும் உடையவனாகிய சோழமஹாராஜன், நின்வாயில் வந்தால்-உன் வாசலில்வந்தால், குடியில்பிறந்தவர்-உயர்குடியிற் பிறந்த மாதர்கள், ஒன்று இரண்டு பினழபொறாரோ-ஒரு பிழை இருபிழைகளைப் பொறுக்கமாட்டார்களா. எ-று.

'மழைஒன்று இரண்டுகை' என்பதற்கு, மேகம்கொடையால் ஒருமடங்கும் இவன் இருமடங்குமாக மதித்தற்குரிய இரண்டாகிய கொடைக்கை எனவுரைப்பினுமமையும். ஏந்திய பொற்குழையென்றும்பாடம்.

ஔவையார் ஒட்டக்கூத்தர் புகழேந்தி இவ்விருவரில், புகழேந்திப்புலவருக்கு நீட்டியகாலைமடக்கி மரியாதைசெய்து, ஒட்டக்கூத்தனுக்கு அப்படிச் செய்யாமலிருந்தமையால், அவன் அதை அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் ஔவையைநோக்கிஇவ்விருவரும் ஒத்தபுலவராயிருக்க, நீ இவ்வாறு செய்ததற்குக் காரணம் யாதென்றுவினவ, ஔவையார் இவ்விருவருக்கும் உள்ள தாரதம்மியத்தை விளக்கிக் காட்டுகிறேன் பாருமென்று ஒட்டக்கூத்தரை நோக்கி, மூன்றுபிறை வரும்படி ஒருபாட்டுப்பாடுக என்றுசொல்ல, அவர் பாடியது.

16. வெள்ளத்தடங்காச்சினவாளைவேலிக்கமுகின்மீதேறித்
துள்ளிமுகிலைக்கிழித்துமழைத் துளியோடிறங்குஞ்சோணாடா
கள்ளக்குறும்பர்குலமறுத்தகண்டாவண்டர்கோபாலா
பிள்ளைமதிகண்டெம்பேதைபெரியமதியுமிழந்தாளே.

இ-ள். வெள்ளத்து அடங்கா - நீர்ப்பெருக்கி லடங்காத, சினவாளை-கோவத்தையுடைய வாளைமீன்கள், வேலிகமுகின்மீதுஏறி-வேலியிலுள்ள கமுகமரத்தின்மேலேறி, துள்ளி-குதித்து, முகிலைகிழித்து - மேகத்தைக் கிழித்து, மழைத்துளியோடு இறங்கும் - மழைத்துளியோடே இழிகின்ற, சோணாடா-சோழனே, கள்ளம்-குற்றமுள்ள, குறும்பர்-குறுநிலமன்னரது, குலம்-வமிசத்தை, அறுத்த-அறுத்தொழித்த, கண்டா - வாளாயுதத்தையுடையானே, அண்டர்கோபாலா-ஆயர்களுடைய பசுக்களைப் பரிபாலித்தவனே, பிள்ளைமதிகண்டு - இளம்பிறையைக்கண்டு, எம்பேதை எமது பேதைப் பெண்ணானவள், பெரியமதியும் இழந்தாள்-பேரறிவையும் இழந்துவிட்டாள். எ-று.

அரசர் திருமாலின் அமிசமாதலால் "அண்டர்கோபாலா" என்றார். இதில், பிள்ளைமதி பெரியமதி என பிறையின் பரியாயமாகிய இரண்டுமதி மாத்திரம் வந்ததைநோக்கிய ஔவை, ஒட்டா ஒருமதிகெட்டாய் என்றிகழ்ந்து, புகழேந்திப் புலவரைநோக்கினர், நோக்குதலும்.

புகழேந்திப்புலவர் பாடியது.

17. பங்கப்பழனத்துழுமுழவர்பலவின்கனியைப்பறித்ததென்று
சங்கிட்டெறியக்குரங்கிளநீர்தனைக்கொண்டெறியுந்தமிழ்நாடா

கொங்கைக்கமராபதியளித்தகோவேராசகுலதிலகா [லே.
வெங்கட்பிறைக்குங்கரும்பிறைக்கும்மெலிந்தப்பிறைக்கும்விழிவே

இ-ள். பங்கம்பழனத்து-சேற்றையுடையவயலிக், உழும் உழவர்-உழு கின்ற மள்ளர்கள், (குரங்கு) பலவின்கனியைபறித்ததுஎன்று-பழாப்பழங் களை பிடுங்கினதென்று, சங்கு இட்டுஎறிய-சங்குகளால் எறிதலும்,குரங்கு-குரங்குகள், இளநீர் தமைக்கொண்டுஎறியும் - இளநீர்களால் எறிகின்ற, தமிழ்நாடா-தமிழ்நாட்டையுடையவனே, கொங்கு ஐக்கு-கொங்கர் பிரானுக்கு, அமராபதி அளித்தகோவே-சுவர்க்கலோகத்தைக் கொடுத்தஇறைவனே, ராசகுலதிலகா - ராஜகுலத்துக்குத் திலகம்போல்பவனே, (எமது பெண்ணனவள்) வெங்கண் பிறைக்கும் - கொடுமையுள்ள பிறைச்சந்திரனூலும், கரும்பு இறைக்கும் - கரும்புவில்லையுடைய மன்மதனூலும், மெலிந்து-இளைத்து, விழிபோல்-வேல்போலும் கண்களில்நின்றும், அப்பு இறைக்கும்-நீரை யிறைப்பாள். எ-று.

கொங்கைக்கு அமராபதி யளித்தலாவது கொங்கநாட் டரசனைவென்று வீரசுவர்க்கம் அடைவித்தது. 'கொங்கைக்கு அமராபதியளித்த' என்பதற்கு, தனத்துக்கு வெள்ளிய நகக்குறியைத்தந்த என்றும் பொருள் கொள்ளலாம். அமராபதிக்கு வானகம் என்றும்பெயர். இதனை வால்நகம் எனப்பிரித்து வெள்ளியநகம் எனப் பொருள்கொள்க.

அரசன் சபைக்குவந்த ஒட்டக்கூத்தரை நோக்கிக் களி என்னும் கலம்பக வுறுப்பினல் ஒருபாட்டுப் பாடுகஎனப் பாடியது.

18. புள்ளிருக்குந்தார்மார்பன்பூம்புகார்வாழ்களியேம்
சுள்ளிருக்குங்கள்ளையுண்டுஞ்சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவாவாலிதுரோபதையைமூக்கரிந்த
தல்லவாமாபாரதம்.

இ-ள். புள்இருக்கும் தார்மார்பன்-வண்டுகள் மொய்த்திருக்கிற பூமாலையைத்தரித்த மார்பினை யுடையவனது, பூபுகார் வாழ்களியேம் - அழகாகிய காவிரிப்பூம்பட்டணத்தில் வாழ்கின்ற களியரேம், சுள் இருக்கும் கள்ளை உண்டும் சோர்வுஇலேம்-(மயக்கமாகிய) அற்பத்தன்மையுள்ள கள்ளைக் குடித்தும் யாம் மறதிஇலேம், (என்னெனின்) உள்ளபடி சொல்லவா-உள்ளபிரகாரம் சொல்லட்டுமோ, மாபாரதம் - மஹாபாரதம் என்பது, வாலி துரோபதையை மூக்கறுத்த சரித்திரமல்லவா. எ-று.

மஹாபாரதம் என்பது துரியோதனன் துரோபதையை மானபங்கம் செய்ததனுல் உண்டானது என்பதுகருத்து. மூக்கு அரிதலாவது மானபங்கஞ்செய்தல். வாலி - வாலினையுடையது. இது, வாலுள்ள பிறவுயிர்களுக்கும் ஆகுமாயினும், இவ்விடத்தில் துரோபதையை மூக்கரிந்தது என்னுங்

குறிப்பால், வாலினையுடைய சர்ப்பமெழுதியகொடியை யுயர்த்தவனுகிய துரியோதனனுக்காயிற்று. சுள்-உலர்ந்தமீன் எனினுமாம்.

தலைவி சந்திரனைநோக்கி இரங்கிக்கூறியதாகப் பாடியது.

19. என்றுபெறுவேன்யானீசன்றிருமுடிமேல்
சென்றுவிளையாடுகின்றதீபமே-என்றும்
செருப்புக்குத்தோல்வாங்குஞ்சென்னியகளங்கன்
பொருப்புக்குத்தோலாப்புயம்.

இ-ள். என்றும் செருப்புக்கு - எந்நாளும் போர்க்களத்திற்புகுந்து, தோல்வாங்கும்-(பகையரசரது) யானைகளைக்கவர்கின்ற, சென்னி அகளங்கன்-அகளங்கச்சோழனது, பொருப்புக்கு தோலாபுயம்-மலைக்குத் தோற்காத தோள்களை, யான் என்றுபெறுவேன் - நான் எக்காலம் பெறக்கடவேன், ஈசன்திருமுடிமேல்சென்று-பரமசிவனுடைய திருமுடிமேற்போய், விளையாடுகின்றதீபமே-விளையாடாநின்ற தீபமே (நீசொல்வாயாக.) எ-று.

தீபம் என்றது சந்திரனை. செருப்புக்குத்தோல்-செருப்பின் பொருட்டுத்தோல் எனச்சொன்னயம் புயம் என்றுபெறுவேன் எனக்கூட்டுக சந்திரனே, சோழனுடைய புயத்தை யான் எக்காலம் அணையப் பெறுவேன் என்பது கருத்து.

சோழன் தன் வித்யாகுருவாகிய ஒட்டக்கூத்தரை நகரை ஆளவைத்துத்தான் தென்மதுரைக்குச்சென்று, பாண்டியன்மகளை மணஞ்செய்தனன். பாண்டியன் தன்மகளுக்குச் சீதனமாகப் பொன்னணிமுதலியவற்றையும், புகழேந்திப்புலவரையும் கொடுத்தனன். சோழன் சீதனப்பொருள்களையும், அப்பொருள்களில் ஒருவராகிய புகழேந்திப் புலவரையும்,முன்னதாகத் தனது நகரத்துக்கு அனுப்பினன். அங்கு அப்போது அரசுபுரிந்திருந்த ஒட்டக்கூத்தர், முன் தான் சோழனுக்குப் பெண்கேட்கச் சென்றபோது புகழேந்திப்புலவர்தன்னைக் கல்வியறிவால் அவமதித்தனரென்னும் பகைமையால் அவரைச்சிறையிலிட்டனர். அவரும் சிறையிலிருந்து காலங்கழித்து வந்தனர். அக்காலத்தில் அரசனிடத்தில் பரிசுபெறும் பொருட்டு கவிபாடிக்கொண்டுவரும்புலவர்களைச் சிறையிலடைத்துவைத்திருந்து, நவராத்திரிகாலத்தில் அந்தச் சமஸ்தானவித்வானுகிய ஒட்டக்கூத்தர் பொறாமையால் சிலவற்றை வினவி, விடைசொல்ல அறியாதவர்களையெல்லாம் தேவிக்குப் பலியிடுவதுவழக்கம். இக்கொடியவழக்கத்தை நிறுத்தும்பொருட்டு, புகழேந்திப்புலவர் தம்மோடு சிறையிருந்தவர்களில் ஐந்து புத்திமான்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை இலக்கண இலக்கியங்களில் மிகுசமர்த்தராக்கினுர். அவர்கள் குயவன்முதலிய ஐவர் விஜயதசமியில் ஒட்டக்கூத்தர் அவர்களைப் பரிட்சித்து அறியும்பொருட்டு அரசன் சமுகத்தில் தனித்தனியே இட்டுக்கொண்டு வரும்படிசொல்ல, அவர்கள் வந்தவுடன், அவர்களில் முதலில் நின்றவனுகிய குயவனைநோக்கி, ஒட்டக்கூத்தர் முதல், இரண்டடியால் என்முன் நின்றவன் யாரடா என, அதற்குக் குயவன் இரண்டடி பாடியது.

களஅ ஒட்டக்கூத்தரும், புகழேந்திமாணவரும்.

20. மோனைமுத்தமிழ்மும்மதமும்பொழி
யானைமுன்வந்தெதிர்த்தவனாரடா
கூனையுங்குடமுங்குண்டுசட்டியும்
பானையும்வனையங்குசப்பையல்யான்.

இ-ள். மோனைமுத்தமிழ்-மோனைமுதலியவை யமைந்த முத்தமிழ்ப் பாடல்களாகிய, மும்மதமும்பொழி-மும்மதங்களைவும் சொரிகின்ற, யானை முன்-(கவி) யானையாகிய என்முன், வந்து எதிர்த்தவன்-வந்து எதிர்நின்ற வனாகியநீ, ஆரடா - யாவனடா, (என்று ஒட்டக்கூத்தர் வினவ) அதற்குக் குயவன், யான்-நான், கூனையும்குடமும் குண்டுசட்டியும் பானையும் வனை-கூனைமுதலிய மண்பாத்திரங்களைச்செய்கின்ற, அங்குசப்பையல்-அழகிய குசப்பையன். எ-று.

ஒட்டக்கூத்தர் தன்னை யானையென்றமையால், குயவன் அதனையடக் குகின்ற தோட்டியெனப்பொருள்பட, அங்குசம்பையல் என்றான்.

மஹாகவிகளாகிய எங்களுக்குமுன், கவிஞர் என்றுபெயர்
பூண்டுவந்து நின்றவன்யாரடா என்று ஒட்டக்
கூத்தர்கேட்க, வேளாளன்பாடியது.

21. கோக்கண்டுமன்னர்குரைகடற்புக்கிலர்கோகநகப்
பூக்கண்டுகொட்டியும்பூவாதொழிந்திலபூதலமேற்
காக்கின்றமன்னன்கவியொட்டக்கூத்தநின்கட்டுரையாம்
பாக்கண்டொளிப்பர்களோதமிழ்பாடியபாவலரே.

இ-ள். மன்னர் - அரசர்கள், கோகண்டு சக்கரவர்த்தியைக் கண்டு, குரைகடல்புக்கிலர்-ஒலிக்கின்ற கடலில்வீழ்ந்து இறந்திலர், கொட்டியும்-கொட்டிப் பூண்டும்,கோகனகப்பூகண்டு-தாமரைமலரைப்பார்த்து, பூவாது ஒழிந்தில-மலராதொழிந்தனவில்லை, பூதலம் எழ் - எழுதீவுகளையும், காக் கின்ற மன்னன்-காக்கின்ற சோழமஹாராஜனது, கவி-சமஸ்தான வித் வானாகிய, ஒட்டக்கூத்த-ஒட்டக்கூத்தரே, தமிழ்பாடியபாவலர்-தமிழ்க்க விபாடுகின்ற புலவர்கள், நின்கட்டுரை ஆம்பாகண்டு-உன் சொல்வன்மை பொருள் நுண்மைகளமைந்த கவிகளைக்கண்டு, ஒளிப்பர்களோ-ஒளித்துக் கொள்வார்களோ. எ-று.

கருமான் பாடியது.

22. செல்லன்புதல்வன்றிருவேங்கடவன்செகத்குருவாம்
கொல்லன்கவியைக்குறைசொல்லுவோரைக்குறடுகொண்டு
பல்லைப்பிடுங்கிப்பருந்தாட்டமாட்டிப்பகைவர்முன்னே
அல்லும்பகலுமடிப்பேன்கவியிருப்பாணிகொண்டே.

இ-ள். செல்லன்குமரன் - (நான்) செல்லப்பாசாரி குமாரன், திரு வேங்கடவன்-(என்பெயர்) திருவேங்கடாசாரி, செகத்குருஆம்கொல்லன்-

ஜகத்குருவாயிருக்கும் கருமாரகுலத்தன், கவியை-(குற்றமற்ற என்) கவியை, குறைசொல்லுவோரை-குறைகூறுவோரை, குறடுகொண்டு பல்லைப் பிடுங்கி-குறட்டினுல் பல்லைப்பிடுங்கி, பருந்தாட்டம் ஆட்டி-பருந்துபோல் அலையச்செய்து, பகைவர்முன்னே-பகைவருக்கெதிரில், அல்லும்பகலும்-இரவும்பகலும், கவி இருப்பு ஆணிகொண்டு-கவியாகிய இருப்பாணியைக் கொண்டு, அடிப்பேன்-கடாவுவேன். எ-று.

அரைப்பாட்டு ஒட்டக்கூத்தரும், அரைப்பாட்டு அம்பட்டனும் பாடியது

23\. விண்பட்டகொக்குவல்லூறுகண்டென்னவிலவிலத்து
புண்பட்டநெஞ்சொடுமிங்குநின்றுய்பொட்டையாய்புகலாய்
கண்பொட்டையாயினுமம்பட்டனுன்கவிவாணர்முன்னே
பண்பட்டசெந்தமிழ்நீயுந்திடுக்கிடப்பாடுவனே.

இ-ள். பொட்டையாய்-பொட்டைக் கண்ணனே, விண்பட்டகொக்கு வல்லூரு கண்டென்ன-ஆகாயத்தில்பறக்கின்ற கொக்கு வல்லூறுஎன்னும் பறவையைக் கண்டாற்போல, விலவிலத்து-(கைகால்கள்)நடுக்கமடைந்து, புண்பட்ட நெஞ்சொடும்-வருந்துகின்றமனத்தோடும், இங்குநின்றுய்-இவ்விடத்தில் நின்றனே, புகலாய் (நீயாவன்) சொல்வாய், (என்று ஒட்டக்கூத்தர்வினவ, அதற்கு அம்பட்டன்) நான் அம்பட்டன்—நானே அம்பட்டன், கண்பொட்டை-(என்) கண்ணும் பொட்டை, ஆயினும்-ஆனாலும், கவிவாணர்முன்னே-புலவர்களுக் கெதிரே, பண்பட்ட செந்தமிழ்-செம்பாகமான செந்தமிழ்ப்பாடல்களே, நீயும் திடுக்கிடப் பாடுவன் (யாவரையும் திடுக்கிடப்பண்ணுகிற) நீயும், திடுக்கிடும்படி பாடுவேன். எ-று.

தச்சன்பாடியது.

24\. சொன்னசந்தக்கவியாவருஞ்சொல்லுவர்சொற்சுவைசேர்
இன்னசந்தக்கவியேதென்றபோதிலெதிர்த்தவரை
வன்னசந்தங்கெடவாயைக்கிழித்திந்தவாய்ச்சியினுல்
நன்னசந்தங்களினிற்கவியாப்பைக்கடாவுவனே.

இ-ள். சொன்ன சந்தக்கவி-(எதிரிகள்) சொல்லிய சந்தமமைந்த கவிகளே, யாவரும்சொல்லுவர்-எல்லாரும்பாடுவர், சொல்சுவைசேர்-சொற்சுவைபொருந்திய, இன்னசந்தக்கவி எது என்றபோதில் - இப்படிப்பட்ட அழகமைந்தகவி யாதென்று வினவினகாலத்தில், எதிர்த்தவரை-எதிர்த்து நின்றவரை, வன்னசந்தம்கெட-நிறமும் அழகும் அழிய, வாயைக்கிழித்து-வாயைப்பிளந்து, இந்தவாய்ச்சியினுல் - இந்தவாய்ச்சியைக்கொண்டு, கன்னசந்தங்களினில்-காதாகிய துவாரத்தில், கவி ஆப்பை கடாவுவன் - கவியாகிய ஆப்பைக் கடாவுவேன். எ-று.

தட்டான் பாடியது.

25. திகிரிவட்டக்குடைச்செங்கோலபயன்செழுஞ்சிலம்பில்
பகுதியொட்டக்கூத்தபட்டனைநானப்பணைக்கவியில்
மிகுதவொட்டத்தட்டிவிட்டகையோட்டி லுருக்கிக்குத்திப்
புகுதவொட்டித்தட்டிம்மேலணுகாவண்ணம்போர்செய்வனே.

இ-ள். திகிரி-(ஆணைச்) சக்கரத்தையும், வட்டக்குடை-சந்திரவட்டக் குடையையும், செங்கோல்-செங்கோலையும் உடைய, அபயன்-சோழராஜனது, செழுசிலம்பில்-செழுமையாகிய மலையில், பகுதி-பிறபுலவர்களிடத்து பகுதிபெறுதற்குரிய, ஒட்டக்கூத்தபட்டனை - ஒட்டக்கூத்தனென்னும் புலவனை, நான்—, அ பணைகவியில்-அந்தக் கவியாகியபணையினால், மிகுத ஒட்டத்தட்டி-மிகவும் அச்சமாகத்தட்டி, விட்டகை ஓட்டில் உருக்கி-உடைந்தகையோட்டில் வைத்து உருக்கி; குத்தி - குத்தி; புகுத ஒட்டித்தட்டி-புகும்படி ஒட்டத்தட்டி; மேல் அணுகாவண்ணம்-இனிநம்மீது எதிர்த்துவராவகை; போர்செய்வன்-சண்டைசெய்வேன். எ-று.

ஒட்டக்கூத்தர் சோழனைப் புகழவேண்டி முதலிரண்டடிபாடி சற்று ஆலோசிக்க; (மற்ற) இரண்டடியையும் புகழேந்திப்புலவர் பாடியது.

26. வென்றிவளவன்விறல்வேந்தர்தம்பிரான்
என்றுமுதுகுக்கிடான்கவசம்- துன்றும்
வெறியார்தொடைகமழுமீனவர்கோன்கைவேல்
எறியான்புறங்கொடுக்கினென்று.

இ-ள். துன்றும்-மலர்கள்நெருங்கிய, வெறி ஆர்-மணம்பொருந்திய, தொடை-பூமாலை; கமழும் - பரிமளிக்கப்பெற்ற; மீனவர்கோன் - பாண்டியன்; புறம்கொடுக்கின்-(பகைவர்) முதுகுகாட்டினால்; கைவேல் எறியான் என்று-தன்கைவேலை (அவர்மீது) எறியானென்று; வென்றிவளவன்விறல் வேந்தர் தம்பிரான் - வெற்றியையுடைய சோழனாகிய வலியவேந்தர்க்கு வேந்தன்; என்றும்-எந்நாளும்; முதுகுக்கு கவசம்இடான் - (தன்) முதுகுக்குக்கவசம்பூணான்.

நற்றாய் சோழனைநோக்கி உனக்கு விற்கொடியையும் மீனக்கொடியையும் உடைய சேரனும் பாண்டியனும் தோற்றார்களாயினும்; அவ் வில்லும்மீனும் என் பெண்ணின்புருவமும் கண்ணுமாகிவந்து உன்னை வெல்கின்றன எனத் துறையிலமைத்துப் பாடியது.

27. பழியும்புகழுமெவர்க்குமுண்டே மிந்தப்பாரிலுனக்
கழியுஞ்சிலையுங்கயலும்மென்றுலகளங்கதுங்கா

மொழியும்பொழுதெங்கள்பெண்சக்ரவர்த்திமுகத்திரண்டு
விழியும்புருவமுமாகிபந்தோவுனைவெல்கின்றவே

இ-ள். அகளங்க துங்கா-அகளங்கதுங்கனே, இந்தப்பாரில் - இந்தப் பூமியில், எவர்க்கும்-யாவருக்கும், பழியும் புகழும்உண்டாம்—, (என்னெனின்) கயலும்சிலையும் உனக்கு அழியும்என்றால்-மீனும்வில்லும் உனக்குத் தோற்குமெனினும், (அவை) மொழியும்பொழுது-சொல்லுமிடத்து, எங்கள்பெண்சக்ரவர்த்திமுகத்து-எங்கள் பெண்ணரசியின்முகத்தில், இரண்டுவிழியும் புருவமும்ஆகி - இரண்டுகண்களும் புருவங்களுமாகிவந்து, அந்தோ உன்னைவெல்கின்ற-அந்தோ உன்னைவெல்லாநின்றன. எ-று.

ஒருநாள் சோழன் திருக்குருங்குடியென்னும் தலத்தில் எழுந்தருளியிராநின்ற திருமாலின்மீது வல்லோசையுள்ள கட்டளைக்கலித்துறை பாடும்படி ஒட்டக்கூத்தரையும் புகழேந்திப்புலவரையும் கேட்க,

ஒட்டக்கூத்தர் பாடியது.

28. திக்குளெட்டுக்கயந்துக்கமுற்றுத்திடுக்கிட்டலற
மைக்கடற்குட்சாந்தைக்கவிட்டோர்க்கிடமாமதுர
இக்குமுற்றிக்கணுச்சற்றுவிட்டுத்தெறித்திட்டமுத்தைக்
கொக்குமொக்கிக்கக்கிவிக்குமச்சோலைக்குறுங்குடியே.

இ-ள். திக்குள்எட்டுக்கயம்-அஷ்டதிக்குயானைகளும், துக்கம் உற்று-வருத்தமடைந்து, திடுக்கிட்டு அலற- திடுக்கிட்டு அலறும்படி,மைகடற்குள் கருங்கடலின்மீது, தைக்க-பதியும்படி, சரம்விட்டோர்க்கு இடம் - பாணமேவிய ஸ்ரீராமபிரானுக்கு இடமாவது, மாமதுரம் இக்குமுற்றி - மிகவும் இனிமையாகிய கரும்புகள்முதிர்ந்து, கணுசற்றுவிட்டு - கணுக்கள் சற்றே வெடித்து, தெறித்திட்டமுத்தை-தெறித்தமுத்துக்களை, கொக்கு-கொக்குகள், மொக்கி-விழுங்கி, கக்கிவிக்கும் - கக்கிவிக்குதற் கிடமாகிய, அச்சோலை - அந்தச்சோலைகள்சூழ்ந்த, குறுங்குடியே - திருக்குறுங்குடிதான்.

புகழேந்திப் புலவர் பாடியது.

29. எட்டெழுத்தைக்கருத்திற்குறித்திட்டுநித்தம்பரவும்
சிட்டர்கட்குத்திருப்பொற்பதத்தைச்சிறக்கத்தருமவ்
வட்டநெட்டைப்பணிமெத்தையத்தற்கிடம்வாரிசப்பொ
ருட்டினந்துக்குலந்தத்திமுததனுங்குறுங்குடியே.

இ-ள். எட்டெழுத்தை-திருவட்டாட்சரத்தை, கருத்தில் - தம்மனத்தில், குறித்திட்டு-தியானித்து, நித்தம்-நாள்தோறும், பரவும்- துதிக்கின்ற, சிட்டர்கட்கு-தாசர்களுக்கு, திருப்பொன்பதத்தை-தமது அழகிய திருவ

டியை, சிறக்கதரும் - சிறப்பாகக்கொடுக்கின்ற, அவட்டம் நெட்டைபணி மெத்தை-அந்தவட்டவடிவாகச் சுற்றியிருக்கின்ற ஆதிசேஷனாகிய மெத்தையையுடைய, அத்தற்கு இடம்-எம்பெருமானுக்கு இடமாவது, வாரிசம் பொருட்டில்-தாமரைமலரின்கர்ணிகையில், நத்துக்குலம்தத்தி - சங்குக் கூட்டங்கள் தாவியிருந்து, முத்து ஈனும்-முத்துகளைப்பெறுகின்ற, குறுங்குடியே-திருக்குறுங்குடியென்னும் திருப்பதியேயாம். எ-று.

கார்காலங்கண்டு மயங்கிய தலைவிக்குத் தோழிகூறியதாக

ஒட்டக்கூத்தர் பாடியது.

30. நையும்படியோநாங்கொற்றநங்கோன்செஞ்சிவரைமீத
ஐயம்பெறுநுண்ணிடைமடவாயகிலின்றாபமுகிலன்று
பெய்யுந்துளியோமழையன்றுபிரசதுளியோபிழையாது [ரே.
வையம்பெறினும்பொய்யுரைக்க மாட்டார்தொண்டைநாட்டா

இ-ள். நாம்கொற்றம் நையும்படியோ-நாம் வெற்றி கெடும்படியோ, நம்கோன் செஞ்சிவரைமீது - நம்மிறைவனது செஞ்சிமலையின்மீது; ஐயம் பெறும் நுண்இடைமடவாய்-சந்தேகத்துக்கிடமாகிய நுட்பமாகிய இடையையுடைய பெண்ணே, அகிலின்தூபம் - (இவ்விடத்துத் தோன்றுவது) அகிலின் புகையே முகில்அன்று-மேகமல்ல, பெய்யும்துளியோ-சொரிகின்றதுளிகளோ, மழை அன்று-மழைத்துளியல்ல, பிரசத்துளியோ-தேனின் துளிகளோ, பிழையாது-தவறாது, வையம்பெறினும்-உலகமுழுதும் பெறவரினும், தொண்டைநாட்டார்-தொண்டை நாட்டிலுள்ளவர்கள், பொய் உரைக்கமாட்டார்-பொய்சொல்ல மாட்டார்கள். எ-று.

தலைமகனைப்பிரிந்து தனியேயிருந்த தலைமகள் கார்காலங்கண்டுவருந்தும்போது, தோழி அவள்வருத்தந் தணிவித்தற்பொருட்டு மேகத்தை அகிற் புகையென்றும், மழைத்துளியைத் தேன் துளி யென்றும்சொல்லித் தேற்றினளென்பதுகருத்து.

புகழேந்திப்புலவர் செங்கலங்கைவடுகநாதமுதலியார்மேல் பாடியது.

31. தன்னுடன்கூடப்பிறந்தசகோதரத்தம்பியுயிர்
அந்நிலைமாண்டதுதோன்றாமன்மூடிவைத்தன்னமிட்டான்
மன்னவர்போற்றிடவாழ்செங்கலங்கைவடுகனுக்குக்
கன்னனுஞ்சோமனுமோவிணையாகக்கழறுவதே.

இ-ள். தன்னுடன் கூடப்பிறந்த சகோதரத்தம்பி - தன்னோடு கூடப்பிறந்த ஒருதாய்வயிற்றுத் தம்பியானவர், உயிர்மாண்டது - உயிர் நீங்கினதாகிய, அந்நிலைதோன்றாமல்-அந்தநிலைமை பிறர்க்குவெளியாகாமல், மூடிவைத்து-(பிணத்தை) மறைத்துவைத்து, அன்னம் இட்டான் - அன்னம்

பகிர்ந்தான், (ஆதலால்) மன்னர் போற்றிடவாழ்-அரசரும் வணங்கும்படி வாழ்கின்ற, செங்கலங்கை வடுகனுக்கு-செங்கலங்கை என்னும்ஊரிலுள்ள வடுகநாதமுதலியாருக்கு, கன்னனும் சோமனுமோ இணையாகக் கழறுவது-கர்ணனையும் சோமனையுமோ நிகராகச்சொல்லுவது. எ-று.

சோமன்-ஒருபிரபு.

சோழன், ஒருநாள் ஒட்டக்கூத்தப் புலவரையும் புகழேந்திப் புலவரையும் நோக்கி, 'நெய்த்தானத்தானைச் சேவித்தே' என்பது மகுடமாய் வரும்படி, சந்தவிருத்தமாக ஆளுக்கு ஒவ்வொருபாட்டுப் பாடுகவென ஒட்டக்கூத்தப்புலவர் பாடியது.

32. விக்காவுக்காவித்தாவிப்போய்விட்டாணட்டார்சுட்டூர்புக்கார்
இக்காயத்தாசைப்பாடுற்றேயிற்றேடிப்போய்வைப்பீர்நிற்பீா
அக்காடப்பேய்தொக்காடச்சூழப்பாடத்தீவெப்பாடப்பூண்
நெக்காடக்கானத்தாடப்பேர்நெய்த்தானத்தானைச்சேவித்தே.

(இ-ள்.) விக்கா-விக்கல்கண்டு, உக்கு-அஞ்சிநடுங்கி, ஆவிதாவிபோய் விட்டால் -(உடலைவிட்டு) உயிரானது அப்புறப்பட்டுப் போய்விட்டால், நட்டார்-(முன்பிரியாமல் பரிவுற்றிருந்த) தாய்தந்தைமுதலிய சுற்றத்தார், சுட்டு ஊர்புக்கார் - (உடம்பைச்சுட்டு) ஊரில் புகுந்துவாழ்வார், இக்காயத்து ஆசைப்பாடுஉற்று - இத்தன்மையாகி இழிதன்மையாகிய தேகத்தினிடத்து ஆசைகொண்டு, இல்தேடிபோய்வைப்பீர்-(அதனைப்போஷிக்க நித்தம்பொருளைத்தேடிவந்து அறஞ்செய்யாமல்) வீட்டில்புதைத்து வைக்கின்றவர்களே, அக்காட - அக்குமாலை அசைந்தாடவும், பேய்தொக்குஆட-பேய்கள்கூடியாடவும், சூழ் அப்புஆட - சடாமகுடத்திலிருக்கும் கங்கை ஆடவும், தீவெப்புஆட-வலதுகையிலிருக்கும் மழுவானது சுவாலித்துஆடவும், பூண்நெக்குஆட-காதிலணிந்த சர்ப்பக்குழைகள் நெகிழ்ந்துஆடவும், கானத்துஆடபோம்-மயானத்தில் ஆடுகின்ற, அபேர் நெய்த்தானத்தானை-அந்தப்பெரிய நெய்த்தானம் என்னும்க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய பரமசிவனை, சேவித்து-வணங்கி, நிற்பீர்-நிற்கக் கடவீர், என்றவாறு.

புகழேந்திப் புலவர்.

33. தக்கோலிப்பூசற்பாசத்தேதப்பாமற்சாகைக்கேநிற்பீர்
முக்கோலிக்கோலிப்பூசித்தேமுட்டாமற்சேவித்தேநிற்பீர்
வற்றுநெட்டோடைப்பாரைச்சேன்மைப்பூகத்தேறித்தாவிப்போய்
நெற்றுளுற்றுலைப்பாகிற்சேர்நெய்த்தானத்தானைத்தியானித்தே.

இ-ள். தன்கோலி - இருவினைகள் தன்னை வளைந்துகொள்ள, பூசல் பாசத்தே - பாசத்திரயமாகிய போராட்டத்தில் அக்ப்பட்டு, தப்பாமல் சாகைக்கே நிற்பீர்-தப்பாமலே சாகும்படி நிற்பவர்களே, முன்கோலிகோலி-

முந்தி விரைந்து, முட்டாமல்பூசித்து-மந்திரதந்திர வழுவுவராமல் பூசை செய்து, சேவித்து-வணங்கி, வற்று நெடு ஓடை - வற்றாத நெடிய நீரோடைகளிலுள்ள, பாரைச்சேல்-பாரைமீன்கள், மைபூகத்து-மேகமண்டலத்தை அளாவியிருக்கிற கமுகமரத்தில், தாவிஏறிப்போய்-தாவி ஏறிச்சென்று, (பாக்குலேகளை உதிர்ந்து அங்கிருந்துதிரும்பி) நெல்தாள் உற்று-நெல்லின் அடியில்விழுந்து, (அந்நெற்கதிர்களேச்சிதறி) ஆலே பாகில்சேர்-ஆலேயாடிக் காய்ச்சப்படும் கரும்பின்பாகில் பாய்கின்ற, (வளப்பமிகுந்த) நெய்த்தானத்தானைத் தியானித்து - நெய்த்தானத்தி லெழுந்தருளிய எம்பெருமானைத் தியானித்து-நிற்பீர்-நிற்கக்கடவீர்கள். எ-று.

பாசத்திரயம்-மண்-பெண்-பொன்களில் ஆசை.

வடுகநாதமுதலியார் குமாரர்வீட்டில் அசுபம் உண்டான காலத்தில், புகழேந்திப்புலவர் தமது கலியாணத்துக்கு வரும்படி பாடியது.

34. முந்தவிளேயோன்மாளமுத்தமிழோர்க்கன்னமிட்ட
அந்தவடுகன்மகனுயின்-வந்தென்
தலேக்கலியாணத்துக்கேதான்பிணத்தைமூடி
இலக்கணமாச்செய்குவைநீயே.

இ-ள். முந்த இளேயோன்மாள-முற்காலத்தில் தம்பியிறக்க, (அந்தப் பிணத்தை மறைத்துவைத்து) முத்தமிழோர்க்கு அன்னம் இட்ட - முத்தமிழ்ப்புலவருக்கு அன்னம்பகிர்ந்த, அந்தவடுகன்மகன் ஆயின்-அந்த வடுகநாதமுதலியாருக்கு மகனுனல், பிணத்தைமூடி - (உன்தந்தைபோலநீயும்) பிணத்தைமறைத்துவைத்து, என்தலே கலியாணத்துக்குவந்து-என்முதன்மையாகிய விவாகத்துக்குவந்து, இலக்கணமாகச் செய்குவை - நீ(செய்யவேண்டிய) முறைமையாகச் செய்வாயாக. எ-று.

புகழேந்திப்புலவர் அயன்றைப்பதிக் காவலனுகிய சடையன் என்பானது கொடையைப் புகழ்ந்து பாடியது.

35. இரவாலளரேபெருந்திருவுறுக
அரவுமிழ்மணியுமலேகடலமிர்தும்
திங்கட்குழவியுஞ்சிங்கப்பறழும்
குதிரைமருப்புமுதிர்சுவைச்சுரபியும்
ஈகெனமொழியினுமில்லெனமொழியான்
சடையனேயயன்றைத்தலேவனேநீர்போய்
உடையதுகேண்மினுறுதியுள்ளோரே.

இ-ள். இரவாலளரே-யாசகரே, அரவு உமிழ்மணியும்-சர்ப்பம் ஈன்ற மாணிக்கத்தையும், அலேகடல் அமிர்தும்-அலேகளேயுடைய திருப்பாற்கடலிற்பிறந்த அமிர்தத்தையும், திங்கள்குழவியும் - இளஞ்சந்திரனேயும், சிங்

கப்பறழும் சிங்கத்தின் குட்டியையும், குதிரைமருப்பும் - குதிரைக் கொம்பையும், முதிர் சுவை சுரபியும் - மிகுந்த சுவையுள்ள பாலைசொரிகின்ற காமதேனுவையும், ஈக எனமொழியினும் - தாவென்று கேட்கினும், இல் எனமொழியான்-இல்லை என்று கூறாதாகிய, சடையனை - சடையன் எபன் வனை, அயன்றைத்தலைவனை - அயன்றை என்னும்பதிக்கு இறைவனை, நீர் போய்-நீங்கள்போய் அடைந்து; உறுதியுள்ளோர் - மனவுறுதி யுடையவராய், உடையது-உம்மனத்தில்பெற நினைத்தபொருளை, கேண்மின்-கேளுங்கள், பெருதிரு உறுக-மிகுந்த சம்பத்தையடையக்கடவீர். எ-று.

பொய்யாமொழிப்புலவர்பாடல்,

—*—

இவர், தமது ஆசிரியர்கொல்லையைக் காத்திருக்கும்போது,
காளிங்கன் என்னும் அரசனதுகுதிரை அப்பயிரை
மேயக்கண்டு, ஆசிரியர் வைவாரென்று பயந்து
அந்தக்குதிரை யிறக்கும்படி பாடியது.

1. வாய்த்தவயிரபுரமாகாளியம்மையே
ஆய்த்தமணலிலணிவரையிற்-காய்த்த
கதிரைமாளத்தின்னுங்காளிங்கனேறும்
குதிரைமாளக்கொண்டுபோ.

இ-ள். வாய்த்தவயிரபுரம்-நீர்வளமுதலியவையமைந்த வயிரபுரத்தில் வாழ்கின்ற, மாகாளியம்மையே-மாகாளியம்மே, ஆய்த்தமணலில் - ஆய்ந்த மணலில் - ஆய்ந்தமணலினும், அணிவரையில் - அழகிய மலைநிலத்தினும், காய்த்த - காய்த்திருக்கிற, கதிரை - தினைக்கதிர்களை, மாள-அழியும்படி, தின்னும்-மேய்கின்ற, காளிங்கன் ஏறும் - காளிங்கராயனேறுகின்ற, குதிரையானது, மாளநீஇறக்கும்படி, கொண்டுபோ-அதைக்கொண்டுபோவாயாக. எ-று.

இது கம்பரால் பாடப்பட்டதெனக் கூறுதலுமுண்டு.

இது குதிரையிறக்கக்கண்ட இவர் உபாத்தியாயர்பாடியது.

2. பொதியிலகத்தியனுப்பொய்யாமொழியாய்ச்
சிதைவில்புலவர்சிகாமணியாய்த்-துதிசேரும்
செங்காட்டங்கோட்டத்துறையூரெனுந்தலத்தில்
தங்காட்டங்கொண்டிருப்பாய்தான்.

இ-ள். பொதியில் அகத்தியனாய் - பொதியமலையில் அகத்தியனும், பொய்யாமொழியாய்-பொய்யாமொழிப் புலவனாகியும், சிதைவு இல்புலவர்

சிகாமணியாய்-அழிவில்லாத புலவர்களுக்குச் சூடாமணியாகியும், திகிசேரும்-புகழ்பொருந்திய, செங்காட்டங் கோட்டத்துறையூர் என்னும் தலத்தில் - செங்காட்டங் கோட்டத்துறையூர் என்னும் ஊரில், தங்கு ஆட்டம் கொண்டிருப்பாய் - தங்கியிருத்தலாகிய விளையாட்டையுங் கொண்டிருப்பாய். எ-று.

அகத்தியனே, பொய்யாமொழி யென்னும் பெயர்பூண்டு செங்காட்டங் கோட்டத்துறையூரில்வந்து தங்கியிருக்கிறான் என்பதுகருத்து.

பாண்டியன் வேண்டுகோளின்படி பொற்றாமரைத்தடத்தில்

அழுந்திக்கிடந்த சங்கப்பலகை மிதக்கப்பாடியது.

3. பூவேந்தர்முன்போற்புரப்பாரிலையெனினும்
பாவேந்தருண்டென்னும்பான்மையாற்-கோவேந்தன்
மாறனறியமதுராபுரித்தமிழோர்
வீறணையேசற்றேமித.

இ-ள். பூவேந்தர் - பூமியையுடைய அரசரில், முன்போல் புரப்பார் இல்லை யெனினும்-முன்போலத் தமிழைக்காப்பவர் இல்லையாயினும், பாவேந்தர் உண்டு என்னும் பான்மையால்-வித்வான்கள் உண்டென்னுந் தன்மையால், கோவேந்தன்-அரசர்க்கரசனாகிய, மாறன் அறிய-பாண்டியனறியும்படி, மதுராபுரிதமிழோர்-மதுரைத் தமிழ்ச்சங்கத்தார், வீறுஅணையே-செருக்குதற்குக் காரணமாயிருந்தபலகையே, சற்றேமித - சற்றுமிதப்பாயாக. எ-று.

சங்கப்புலவருடைய உருவங்களாகிய விக்கிரகங்கள் தலை

யசைக்கும்படி பாடியது.

4. உங்களிலேயானொருவனொவ்வுவனோவொவ்வேனோ
திங்கட்குலனறியச்செப்புங்கள்-சங்கத்தீர்
பாடுகின்றமுத்தமிழ்க்கென்பைந்தமிழுமொக்குமோ
ஏடெழுதாரேழெழுவீரின்று.

இ-ள். சங்கத்தீர்-சங்கப்புலவர்களே, உங்களிலே யான் ஒருவன் ஒவ்வுவனோ-உங்களிலே நானொருவன் ஒப்பாவேனோ, ஒவ்வேனோ-ஒப்பாகேனோ, திங்கட்குலன் அறிய செப்புங்கள்-சந்திரகுலத் தரசனாகிய பாண்டியனறியச்சொல்லுங்கள், ஏடு எழுதார் - இதழ்விரிந்த பூமாலையை யணிந்த, ஏழ் எழுவீர்-நாற்பத்தொன்பதின்மரே, இன்று-இப்பொழுது, பாடுகின்ற முத்தமிழ்க்கு - நீவிர்பாடுகின்ற முத்தமிழ்ப்பாடல்களுக்கு, என்பைந்தமிழும் ஒக்குமோ-என்புசுர்தமிழ்ப்பாடல்களும் ஒத்திருக்குமோ, எ-று.

இவர் பாலைநிலத்தின்வழியாக ஒரூர்க்குப்போகும்போது, முருகக்கடவுள் ஒரு வேடவுருக்கொண்டுவந்து நீயாரென்றுகேட்க, பொய்யாமொழியென்னும் ஒருவித்வானென, அப்படியானால் என்மீது ஒரு பாடலைப்பாடு என்று முருகர் சொல்ல, இவர் உன்பெயர் என்னென்றுகேட்க, முருகர், தம்பெயர் முட்டையென்றும், பாட்டு சுரம்போக்குத் துறையாயிருக்கவேண்டுமென்றும் சொல்லப் பாடியது.

5 பொன்போலுங்கள்ளிப்பொறிபறக்குங்கானலிலே
என்பேதைசெல்லற்கிசைந்தனளே-மின்போலும்
மானவேன்முட்டைக்குமாறாயதெவ்வர்போம்
கானவேன்முட்டைக்குங்காடு.

இ-ள். மின்போலும்-மின்னலைநிகர்க்கின்ற, மானம் - பெருமையமைந்தவேல்-வேலாயுதத்தையேந்திய, முட்டைக்கு மாறாய-முட்டையென்பவனுக்கு மாறுபட்ட, தெவ்வர்போம்-பகைவர்போகிற, கான-மணம்வீசுகின்ற, வேல்முள்தைக்கும்-வேலமுள்தைக்கிற, காடு - காட்டில், பொன்போலும்-பொன்னை நிகர்க்கின்ற, கள்ளி-கள்ளிச் செடிகளினின்றும், பொறிபறக்கும்-நெருப்புப்பொறி பறக்கின்ற, கானலிலே-கானல்பரவிய பாலைநிலத்தில், என்பேதை - என்பேதைப்பெண்ணானவள், செல்லற்கு இசைந்தனள்-போக மனமிசைந்தாள், ஏ-இதென்னபாவம். எ-று.

இதனைக்கேட்டுக்களித்த முருகக்கடவுள், பொய்யாமொழிப்புலவரைப் புகழ்ந்துபாடிய சுரம்போக்கு.

6. விழுந்ததுளியந்தரத்தேவேமென்றும்வீழின்
எழுந்துசுடர்சுடுமென்றேங்கிச்-செழுங்கொண்டல்
பெய்யாதகானகத்திற்பெய்வளையுஞ்சென்றனளே
பொய்யாமொழிப்பகைஞர்போல்.

இ-ள். விழுந்ததுளி அந்தரத்தேவேம் என்றும்-விழுந்த மழைத்துளி. ஆகாசத்திற்றானே வேகுமென்றும், வீழின்-வீழ்ந்தால், எழுந்து - மேலே தாவி, சுடர்சுடும் என்று-அனலானது சுடுமென்று, ஏங்கி-ஏக்கமுற்று, செழுங்கொண்டல் - செழுமையாகிய மேகங்கள்; பெய்யாத கானகத்தில்-மழைபெய்யாதகாட்டில்; பொய்யாமொழிப் பகைஞர்போல் - பொய்யாமொழிப் புலவரது பகைஞர்போல; பெய்வளையும்போயினள் - வளையலை யணிந்த என்பெண்ணும்போயினள்; ஏ-இதென்னபாவம். எ-று.

திருவேங்கடம் என்னும் கொடையாளியை யிவர் போயடைந்திரக்க; அவன் இரங்கி இவருக்குச் சம்மானம்பண்ணப்போந் தருணத்தில் அவன்தமையனாகிய கண்ணுக்கினியான் என்பவன் தடுத்தமையால்; அவன்மீது கோபங்கொண்டு அவனை மூதேவியென் றிகழ்ந்தும்; அவன்தம்பியாகிய திருவேங்கடத்தைச் சீதேவியென்று புகழ்ந்தும் பாடினது இச் செய்யுள்.

1 தேன்பொழிந்தவாயான் றிருவேங்கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக்கினியானே-வான்சிறந்த
சீதேவியாருடனே செய்யதிருப்பாற்கடலில்
மூதேவியேன்பிறந்தாள் முன்.

இ-ள். தேன்பொழிந்தவாயன்-தேனைச்சொரிந்த வாயையுடையவனாகிய; திருவேங்கடத்துடனே-திருவேங்கடம் என்பவனோடு; கண்ணுக்கினியான் ஏன்பிறந்தான் - கண்ணுக்கினியான் ஏன்பிறந்தான்; செய்ய திருப்பாற்கடலில்-அழகிய திருப்பாற்கடலில்; வான்சிறந்த சீதேவியாருடனே-மேன்மையிற்சிறந்த திருமகளோடு; முன் - முன்னே; மூதேவி; ஏன்பிறந்தாள்-ஏன் பிறந்தனள். எ-று.

தேன்பொழிந்தவாயான் என்பதற்கு இன்சொல்லை யுடையான் என்பது கருத்து.

தமக்கு யானையைப் பரிசிலாகக்கொடுத்த இராமன் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

2. இம்பர்வா னெல்லையிராமனையேபாடி
என்கொணர்ந்தாய்பாணாநீயென்றாள்பாணி
வம்பதாங்களபமென்றேன பூசுமென்றாள்
மாதங்கமென்றேன்யாம்வாழ்ந்தேமென்றாள்
பம்புசீர்வேழமென்றேன் றின்னுமென்றாள்
பகடென்றேனுழுமென்றாள் பழனந்தன்னைக்
கம்பமாவென்றேனற்களியாமென்றாள்
கைம்மாவென்றேன்சும்மாகலங்கினாளே.

இ-ள். பாணி-பாடினியானவள்; பாணா-பாணனே; இம்பர்வான் எல்லை இராமனையேபாடி-இவ்வுலகமும் அவ்வுலகமும் (தன்புகழ்க்கு) எல்லைகளாகவுடைய இராமன் என்பவனைப்பாடி; நீ என்கொணர்ந்தாய்-நீ யென்னபொருள் கொண்டுவந்தாய்; என்றாள்-என்று என்னைநோக்கிவினவினாள்;

(அதற்குவிடையாகநான்) வம்பதுஆம் களபம் என்றேன் - புதுமையாகிய களபமென்று சொன்னேன்; (அதற்கு அவள்) பூசும் என்றாள் - பூசுவீர் என்று சொன்னாள்; மாதங்கம் என்றேன் - மாதங்கம் என்றுசொன்னேன்; யாம் வாழ்ந்தோம் என்றாள்-நாம் வாழ்ந்தோம் என்றாள்; பம்புசீர் வேழம் என்றேன்-மிக்கசிறப்பினையுடைய வேழமென்று சொன்னேன்; தின்னும் என்றாள்-தின்னுவீர் என்றாள்; பகடு என்றேன்-பகடென்றுசொன்னேன்; பழனம்தன்னை உழும் என்றாள் - வயலை உழுவீரென்றாள்; கம்பமா என்றேன்-கம்பமா என்றுசொன்னேன்; நல்களிஆம் என்றாள்-நல்லகளி கிளறலாமென்றாள்; கைம்மா என்றேன் - கைம்மா என்றுசொன்னேன்; (பொருள் தெரியாமையால்) சும்மாகலங்கினாள்-சும்மா கலங்கினாள். எ-று.

களபம்முதலியன யானைக்குப் பரியாயப்பேர்கள், இவர் பரிசிலாகப் பெற்றுவந்தது யானையாதலால் அதன்பரியாயப் பேர்கள்கூறிவர; அவற்றிற்கெல்லாம் வேறுபொருள்கொண்டு பரிகசித்ததாகக்கூறி;கைம்மா என்பதற்கு வேறுபொருள் கூறத்தெரியாது மயங்கினதாகக்கூறியது. களபம்-களவச்சந்தனம்; மாதங்கம் - உயர்ந்தபொன்; வேழம்-கரும்பு; பகடு எருமைக்கடா; கம்பம்-கட்டுத்தறி; கம்பமா - கம்பையரைத்துச்செய்தமா.

தமக்குயானையைப் பரிசிலாகக் கொடுத்த தானன் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

3. இல்லெனுஞ்சொல் லறியாதசீகையில்வாழ் தானனைப்போய்ப்பாணன்யான், பல்லைவிரித்திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும்பாலியாமல், கொல்லநினைந்தேதனது நால்வாயைப் பரிசென்றுகொடுத்தான்பார்க்குள், தொல்லையெனதொருவாய்க்கு நால்வாய்க்கு மிரையெங்கே துரப்புவேனே.

இ-ள். இல் என்னும் சொல்அறியாத-இல்லையென்று சொல்லுஞ்சொல்லைஅறியாத; சீகையில்வாழ்தானனை-சீகையென்னும் ஊரில் வாழ்கின்றதானன் என்பவனை; பாணன்யான்போய் - பாணனாகிய நான்போய்; பல்லைவிரித்து இரந்தக்கால் - பல்லைத்திறந்து யாசித்தால்; வெண்சோறும்-வெண்மையாகிய அன்னத்தையும்; பழம்தூசும் - பழையவஸ்திரத்தையும்; பாலியாமல்-கொடுக்காமல்; கொல்ல நினைந்து (என்னைக்) கொல்லவெண்ணி, தனதுநால்வாயை-தனது நால்வாயினை; பரிசென்றே கொடுத்தான்-எனக்குப்பரிசிலென்றேதந்தான்; பார்க்குள்-உலகத்தில்; தொல்லை எனது ஒருவாய்க்கும்-பழைய என் ஒருவாய்க்கும்; நால்வாய்க்கும் - (இப்பொழுது பெற்ற) நால்வாய்க்கும்; இரை எங்கேதுரப்புவேன் - உணவு எங்கே கொண்டுவந்து நிறைப்பேன். எ-று.

நால்வாய் - நான்குவாய் எனவும்; தொங்குகின்ற வாயினையுடைய யானையெனவும் பொருள்படும். ஒருவாய்க்கு இரைபெறாத நான்; ஐந்துவாய்க்கு இரையெங்கே பெறுவேன் என்பது; சொன்னயம்.

பாலனைப் பழித்தல்,

4. முன்னாளிருவர்க்கும்யாக்கையொன்றாகமுயங்கினமால்
பின்னாட்பிரியன்பிரியையென்றாயினம்பேசலுறும்
இந்நாட்கொழுநன்மனைவியென்றாயினமின்னமுமோர்
சின்னாளிலெப்படியோவையநீயின்றுசெப்புகவே.

இ-ள். (உன்தந்தையும்நானும்) முன்நாள்-முன்னாளில், இருவர்க்கும் யாக்கை ஒன்று ஆகமுயங்கினம் - இருவருக்கும் உடலொன்றென்னும்படி கலந்திருந்தோம், பின்நாள்-பிற்காலத்தில், பிரியன் பிரியையென்று ஆயினம் - பிரியன் பிரியையென்று சொல்லலானோம், பேசல்உறும் இந்நாள்-சொல்லப்பட்ட இக்காலத்தில், கொழுநன்-கணவன்,மனைவி-மனையாட்டி, என்று ஆயினம்-என்று சொல்லப்பட்டவரானோம், இன்னம் ஓர்சிலநாளில் இன்னமும் ஒருசொற்பகாலத்தில், எப்படியோ-எவ்வாறாகுமோ, ஐய-புதல்வனே, நீஇன்றுசெப்புக-நீயின்று சொல்லக்கடவாய். எ-று.

மகனே, நீபிறந்தபிறகு உன்தந்தைக்கு என்மீதுள்ள அன்பு நீங்கும்படி நேரிட்டதென்பது கருத்து.

அளங்கன் என்பவனைப் புகழ்ந்துபாடியது.

5. வடவைக்கனலைப்பிழிந்துகொண்டு
மற்றுமொருகால்வடிதெடுத்து
வாடைத்துருத்திவைத்தூதி
மறுசுக்காய்ச்சிகுழம்புசெய்து
புடவிக்கயவர்தமைப்பாடிப்
பரிசுபெறுமற்றிரும்பிவரும்
புலவர்மனம்போற்சுடுநெருப்பைப்
புழுகென்றிறைத்தாற்பொறுப்பாளோ
அடவிக்கதலிப்பசுங்குருத்தை
நச்சுக்குழலென்றஞ்சியஞ்சி
அஞ்சொற்கிளிகள்பஞ்சரம்விட்
டகலாநிற்குமளங்கா
திடமுக்கடவாரணமுகைத்த
தேவேதேவசிங்கமே
திக்குவிசயஞ்செலுத்திவரு
செங்கோனடாத்துமெங்கோனே.

இ-ள். வடவைக்கனலைப் பிழிந்துகொண்டு - வடவாமுகாக்கினியைக் கசக்கிப் பிழிந்துகொண்டு, மற்றும்ஒருகால் வடித்துஎடுத்து-மற்றுமொரு

தரம்வடிகட்டியெடுத்து, வாடை - வடகாற்றாகிய. திருத்திவைத்தூஊதி- திருத்தியைவைத்துஊதி, மறுகக்காய்ச்சி குழம்புசெய்து - மறுபடியும் காய்ச்சிக்குழம்பாக்கி, புடவிகயவர்தமைப்பாடி - உலகத்திலுள்ள கீழ்மக்களைப்புகழ்ந்துபாடி, பரிசுபெறாமல் திரும்பிவரும் - பரிசுபெறாமல் திரும்பி வருகிற, புலவர்மனம்போல் சுடும்நெருப்பை-வித்துவான்களுடைய மனத்தைப்போலச் சுடுகின்ற நெருப்பை, புழுகுஎன்று இறைத்தால்-புனுகு என்றுசொல்லி இறைத்தால், பொறுப்பாளோ-ஆற்றுவாளோ, அடவி-காட்டிலுள்ள, கதலி-வாழையின், பசுங்குருத்தை - பசுமையாகிய குருத்தை, நச்சுக்குழல் என்று அஞ்சி அஞ்சி - நச்சுக்குழலென்றுபயந்துபயந்து, அம்சொல்கிளிகள்-அழகிய சொல்லையுடைய கிளிகள், பஞ்சரம்விட்டு அகலா நிற்கும்-கூட்டைவிட்டு வெளிப்படாநின்ற, அகளங்கா-அகளங்கனே,திடம் உறுதியாகிய, முக்கடம்வாரணம் உகைத்த - மும்மதங்களையுடைய யானையைநடாத்திய, தேவே-தேவனே, தேவசிங்கமே-தேவர்களுக்குள் சிங்கம் போல்பவனே, திக்குவிசயம் செலுத்திவருபவனே - செங்கோல்நடத்தும் எமதரசனே. எ-று.

சிதம்பரபூபதியின்மீது பாடியது.
நற்றாயிரங்கல்.

6 மாதரணிமென்முலைதோய்மாராசிதம்பரபூ
மாதரணிராசர்மகிழ்மாவசன—மாதர்
மறுகிடத்தேயம்பொன்மடவார்பழிக்கநெஞ்ச
மறுகிடத்தேங்குந்துரைப்பெண்வா.

இ-ள். மாதர்-மாதரது, அணி-அழகாகிய, மெல்-மெல்லிய, முலைதனங்களில், தோய்-படிகின்ற, மாரா-மன்மதனே, சிதம்பரபூமா-சிதம்பரபூபதியே, தரணிராசர்மகிழ்-பூபாலர்கள் மகிழ்தற்கேதுவாகிய, மாவசன-மிருதுவசநங்களை யுடையவனே, மாதர்-அழகாகிய, மறுகிடத்தே-தெருக்களிலுள்ள, அம்பொன்மடவார் பழிக்க-அழகிய திருமகளை நிகர்த்த மாதர்கள் நிந்திக்க, நெஞ்சம்மறுகிட-மனமயங்கி, துரைபெண்-எங்கள்பெண்ணரசி, தேங்கும்-திகையா நின்றாள், (ஆதலால் அவளைக்காக்கும்பொருட்டு) வா-நீவருவாயாக. எ-று.

இதுவும் அத்துறை.

7. சொல்லுமல்லும்பகலுஞ்சோருங்கிடைகிடக்கும்
கல்லுமுருகக்கனிந்தாற்றும்—புல்லியணை
விண்கலக்குங்கீர்த்தியுறுவேள்சிதம்பரக்குமுணு
பெண்கலக்கங்கொண்டுநின்றன்பேர்.

இ-ள். விண்கலக்கும் கீர்த்திஉறு-சுவர்க்கலோகத்திலும் வியாபித்திருக்கிற கீர்த்திமிகுந்த, வேள்-மன்மதனைநிகர்த்த, சிதம்பரக்குமுணு-சிதம்பரவள்ளலே, பெண்-எமதுபெண்ணானவள், கலக்கங்கொண்டு-மனங்கலங்கி, நின்றன்பேர்-உன்பெயரை, அல்லும்பகலும்சொல்லும்-இரவினும் பகலினும்சொல்லாநின்றாள், சோரும்-தளர்வாள், கிடை கிடக்கும் - படுக்கை

யில் (செயலற்றுக்கிடப்பாள், கல்லும்உருக - கற்களும் உருகும்படி, கனிந்து அரற்றும்-நைந்து அழுவாள், (ஆதலாள்இவளை) புல்லிஅணை - கலந்தணைக்கவேண்டும். எ-று.

8 வந்தனந்தமென்பூமணந்தோய்ந்துபாயப்பா
வந்தனம்விம்மிச்சோர்ந்தாள்வாகோடி—வந்தனங்கல்
அன்னமனங்கொள்ளாமலாள்சிதம்பரக்குமுணு
அன்னமனங்கொண்டுயவேயாங்கு.

இ-ள் சிதம்பரக்குமுணு-சிதம்பரவள்ளலே, அன்னம் - (நடையாள்) அன்னம்போல்பவளாகிய என்பெண், வந்து - (தென்றற்) காற்றானது, அனந்தம், அநேகமாகிய, மெல்பூமணம்தோய்ந்து - மெல்லியமலர்களின் மணத்திற்படிந்து, பாய-(வந்து) படுதலால், பாவம்-அந்தோ, தனம்விம்மி சேர்ந்தாள்-தனம்பூரித்துவாடினாள், அன்னம்கொண்டுஉய்ய-அன்னமுண்டு பிழைக்கும்படி, ஆங்கு - அவளிடத்தில், கல் அன்ன மனம்கொள்ளாமல்-கல்லை நிகர்த்தவன்மனமாயிராமல், ஆள் - (இரங்கி) ஆளவேண்டும், வா-வருவாயாக, கோடிவந்தனம்-(உமக்குக் (கோடிநமஸ்காரம். எ-று.

9 மாவாரிமுத்தவெண்பன்மாதுமயலைத்தணிசோ
மாவாரிமுத்தளித்தவைபோகா—மாவுச்
சிதம்பரவையாநீதிக்குளுயர்பூமா
சிதம்பரவையாநீதிக்கு.

இ-ள். சோமா-(குளிர்ச்சியாகிய தோற்ற முதலியவற்றால்) சந்திரனை நிகர்ப்பவனே, ஆரிமுத்து அளித்தவைபோகா-ஆரிமுத்துவள்ளல் பெற்ற வைபோகனே, மா உச்சிதம்பரவுஐயா-மிகமேன்மையாக யாவராலும் துதிக்கப்படுகிற அழகனே, நீதிக்குள் உயர்பூமா - நீதிநெறியாலுயர்ந்த சார்வபௌமனே, சிதம்பரஐயா-சிதம்பரஐயனே, நீதிக்கு-(எமக்கு) நீயேதிக்கு, (ஆதலால்) மா-பெரிய, வாரி-கடலிற்பிறந்த, முத்தம் - முத்துப்போன்ற, வெள்பல்-வெள்ளிய பல் பரிசையையுடைய, மாது-(என்) பெண்ணினது, மயலை-காமமயக்கத்தை, தணி-தணித்தருளவேண்டும். எ-று.

10. பங்கஜமேன்மேவியசௌபாக்யசுபமானளித்த
அங்கஜவேள்வெங்கணையாலாவிநொந்த—எங்களிட
மாரஞ்சிதம்பரவுமாதினையாள்கோடிநமஸ்க்
காரஞ்சிதம்பரயோகா.

இ-ள். சிதம்பரயோகா - சிதம்பரவள்ளலே, பங்கஜம்மேல் மேவிய-தாமரைமலர்மேல் வீற்றிருக்கிற, சௌபாக்ய சுபமான் அளித்த-சௌபாக்கியங்களையும் சுபங்களையும் தருகிற திருமகள்பெற்ற, அங்கஜவேள்-மன்மதனது, வெங்கணையால் - கொடிய பாணங்களால், ஆவிநொந்த - மனம்

வருந்தின, எங்கள் இடம்-எம்மிடத்துள்ள, மாரஞ்சிதம்-மிகவும் மனோரஞ்சநத்துக் கேதுவாய், பரவும் - புகழப்படுகிற, மாதினை - பெண்ணை, ஆள்-ஆண்டருளவேண்டும், கோடி நமஸ்காரம்-(உனக்குக் கோடிவந்தநம்.

11. கோளரவெந் துலகிலிந்தப் புதுமையுண்டோ வெனமொழிந் தகுமுணு கேளாய், ஆளரைவர் தமைத்தோய்ந்த கற்புடையபாஞ் சாலியணைந்தவீமன், வாளரிபோலருகிருக்க மலயவெற்பிலிருந்து வந்தமாமனுரைச், சாளரவாசலைத்திறந்து வரவழைத்து முலையாரத் தழுவினளே.

இ-ள். கோள் அரவு எந்து உலகில்-வலிய பாம்பாகிய ஆதிசேடனால் தாங்கப்பட்ட இந்த உலகத்தில், இந்தப் புதுமை உண்டோ எனமொழிந் தகுமுணு கேளாய்-இந்த ஆச்சரிய முண்டோ என்றுகேட்ட குமுணனே கேட்பாயாக, ஆளர் ஐவர் தமைதோய்ந்த - ஐந்து கணவரைத்தழுவின, கற்பு உடைய பாஞ்சாலி-கற்பினையுடையதுரோபதையை,அணைந்தவீமன், வாள் அரிபோல் அருகு இருக்க - ஒளியுள்ள சிங்கம்போல் அருகேயிருக்கவும், மலய வெற்பில் இருந்துவந்த மாமனுரை - பொதியமலையினின்றும் வந்தமாமனுரை, சாளரவாசலைத்திறந்து-சன்னலைத்திறந்து, வரவழைத்து (உள்ளே) வரும்படியழைத்து, முலையாரத் தழுவினள்-தனங்களிற் பொருந்தும்படி தழுவினள். எ-று.

மாமனுர் என்றது தென்றற் காற்றை, வாயு வீமனுக்குத் தந்தையாதலால், துரோபதைக்கு மாமனுயிற்று.

12. பணியாரந்தோசையிலக்கொங்கைதோய்ந்திடப்பார்ப்பர்பல்லி
பணியாரந்தோசையிலாச்செந்துவாய்ப்பிறப்பார்களென்னோ
பணியாரந்தோசைமுன்னோனுக்கிட்டேத்திப்பழனிச்செவ்வேட்
பணியாரந்தோசைவராகாரன்னோர்க்கென்னபாவமிந்த.

இ-ள். பணிஆர்-ஆபரணம்நிறைந்த, தோ - இரண்டாகிய, சையிலம்-மலைபோன்ற, கொங்கை-தனங்களை, தோய்ந்திடப் பார்ப்பர்-பொருந்தப் பார்ப்பார்கள், பல்லி-பல்லி, பணி-பாம்பு, ஆர் அந்து - நிறைந்த அந்து, (இவைகளாகவும்) ஓசை இலாசெந்து ஆய் பிறப்பார்கள்-சத்தமற்ற செந்துக்களாகவும் ஜநிப்பார்கள், என்னோ-(இதற்குக்காரணம்) யாதோ, பணியாரம் தோசை - பணியாரம் தோசைகளை, முன்னோனுக்கு இட்டு ஏத்தி-மூத்தபிள்ளையாருக்குப் படைத்துத் துதித்து, பழம்செவ்வேள்-திருப்பழனியி லெழுந்தருளி இருக்கிற முருகக்கடவுளை, பணியார் - வணங்காதவர்கள், சைவர்ஆகார்-சைவசமயிகளாகமாட்டார்கள், அந்தோ-ஐயோ, அன்னோர்க்கு-அவர்களுக்கு, இது என்னபாவம்-இது என்ன தீவினைப்பயன்.

விநாயகர்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

13. வீரஞ்சொரிகின்றபிள்ளாயுனக்குப்பெண்வேண்டுமென்றால்
ஆருங்கொடார்களுங்களப்பன்கபாலியம்மான்றிருடன்
ஊருஞ்செங்காடுநின்றன்முகம்யானையுனக்கிளையோன்
பேருங்கடம்பனுன்றாய்நீலிநிற்கும்பெருவயிறே.

இ-ள். வீரம்சொரிகின்ற பிள்ளாய் - வீரத்தன்மை பொழிகின்ற பிள்ளையாரே, உனக்குப் பெண்வேண்டும் என்றால் - உனக்குப் பெண்வேண்டுமானால், ஆரும்கொடார்-ஒருவரும்கொடுக்கமாட்டார், (ஏனெனின்,) உங்கள் அப்பன் கபாலி-உங்கள்தந்தைகபாலி, அம்மான் திருடன் - அம்மானாகிற கிருஷ்ணன் வெண்ணெய் திருடி, ஊரும்-ஊரும், செங்காடு - செங்காடு, நின்றன்முகம் யானை-உன்முகம் யானைமுகம், உனக்கு இளையோன் பேரும்,கடம்பன்-உன் தம்பிபேரும் கடம்பன். உன்தாய்நீலி-உன்தாய்நீலி, நிற்கும்பெருவயிறு-உனக்கும் மகோதரம் (ஆதலால்.) எ-று.

கபாலி-கபாலத்தை யேந்தினவன். கடம்பன்-கடப்பமலர் மாலையை யணிந்தவன். நீலி-நீலநிறமுள்ளவள்.

பிரயாணத்தில் கட்டுச்சோற்றைப் பறிகொடுத்தபோது பாடியது.

14. சீராடையற்றிடும்வைரவன்வாகனஞ்சேரவந்து
பாராருநான்முகன்வாகனந்தன்னைமுன்பற்றிக்கௌவி
நாராயணனுயர்வாகனமாயிற்றுநம்மைமுகம்
பாரான்மைவாகனவந்தேவயிற்றினிற்பற்றினனே.

இ-ள். சீர் ஆடை அற்ற-சிறப்புள்ள வஸ்திரமில்லாத, வைரவன் வாகனம்-வைரவக்கடவுளின் வாகநமானது, சேரவந்து - நெருங்கவந்து, பார் ஆரும்-உலகிலுள்ள, நான்முகன்வாகனம் தன்னை முன்பற்றி கௌவி-பிரமனதுவாகநத்தைப்பற்றிக் கவ்விக்கொண்டு, நாராயணன் - திருமாலின், உயர்-உயரப்பறக்கின்ற, வாகநம் ஆயிற்று-வாகநமாய்விட்டது, (அதனால்) மைவாகநன்-ஆட்டை வாகநமாகவுடையவன், நம்மை - எம்மை, முகம்பாரான்- தாட்சணியம் பாராதவனாகி, வந்து வயிற்றினில் பற்றினன் - வந்து வயிற்றில்பற்றி யெரியா நின்றான். எ-று.

வைரவன்வாகநம்-நாய், நான்முகன்வாகனம்-அன்னம் (சோறு,) நாராயணன்வாகநம்-கருடன் (கருடன்போலப் பறந்தோடிவிட்டது) மைவாகநன்-அக்கினிதேவன். அவன் வயிற்றினிற் பற்றினன் என்றது, பசி அதிகரித்தது என்றபடி-

கோதண்டராமனைப் புகழ்ந்து பாடியது.

15. பாண்டியன்மாலைகண்டாய்மகளேநினைப்பார்த்தவர்க்கு
வேண்டியவின்பமிகவருமோவெண்ணையேதிருடித்
தாண்டிக்குதித்தநற்கோதண்டராமன்றடவரைமேல்
ஆண்டியிருப்பிடந்தாதனிருப்பிடமானபின்னே.

இ-ள். வெண்ணையேதிருடி - வெண்ணெயையேதிருடி, தாண்டிகுதித்த-தாவிக்குதித்துக் கூத்தாடின, நல்கோதண்ட ராமன்-நல்ல கோதண்டராமனது, தடவரைமேல் - பெரிய மலையின்மீது, ஆண்டி இருப்பிடம்-ஆண்டியிருப்பிடமானது, தாதன் இருப்பிடம் ஆனபின் - தாதனிருப்பிடமானபிறகு, மகளே-மகளே, நினை பார்த்தவர்க்கு-உன்னைப் பார்த்தவர்களுக்கு, பாண்டியன்மாலை - பாண்டியன் மாலையாகிய வேம்பாயிருக்கிறாய், வேண்டிய இன்பம்மிகவருமோ-வேண்டியசுகம் மிகுதியாக உனக்கு உண்டாகுமோ. எ-று.

ஆண்டியிருப்பிடம்-சிவபெருமானிருப்பிடமாகிய மலை. தாதனிருப்பிடம் ஆலிலை. மலைபோன்றமுலை திருமாலிருப்பிடமாகிய ஆலிலைபோன்ற வயிற்றளவும் தொங்கிவிட்டதனால், இனி நோக்குவோர்க்கு நீ இனிமையாயிராய் வேம்பாகத் தோன்றுவாய் என்பதுகருத்து.

திருமால்துதி.

16. சோலையுங்காத்துநல்லானையுங்காத்துந்துரோபதைதன்
தானையுங்காத்தடைந்தானையுங்காத்தூததடத்தகலி
மானையுங்காத்தனுமானையுங்காத்துமடுவில்விழும்
ஆனையுங்காத்தவனேயெனைக்காப்பதரிதல்லவே.

இ-ள். சோலையும் காத்து - சோலைமழையையும் தடுத்து, நல் ஆனையும் காத்து-நல்ல, பசுக்களையும்காத்து துரோபதை தன்தானையும்காத்து-துரோபதையின் வஸ்திரத்தையும்காத்து, அடைந்தானையும்காத்து-சரணமடைந்தவனையும்காத்து, தடத்து அகலிமானையும்காத்து-வழியில் அகலிகையென்பவளையும்காத்து, அநுமானையும்காத்து அநுமானையும்காத்து, மடுவில்விழும்-(முதலையால்கவ்வப்பட்டு) மடுவில்விழுந்த, ஆனையும்காத்தவனே-கஜேந்திராழ்வானையும் காத்தருளினவனே, எனைக்காப்பது அரிது அல்லவே-என்னைக்காப்பது உனக்கு அருமையல்லவே. எ-று.

சோலைகாத்தது-கிருஷ்ணாவதாரத்தில் கோவர்த்தநகிரியைக் குடையாகத் தாங்கிக் கல்மழையைத் தடுத்தது ஆன்காத்தது-பசுக்களை மேய்த்தது. அடைந்தானைக் காத்தது-ராமாவதாரத்தில் விபீஷணனைக்காத்தது. அகலிமானைக்காத்தது-கல்லாய்க்கிடந்தவளைப் பெண்ணாக்கினது. அநுமானைக்காத்தது-சிரஞ்சீவியருள் ஒருவனாக்கினது.

இன்னின்னார்க்குப்பொய்சொன்னால் இன்னின்னபயனுண்டா மெனப் பாடியது.

17. பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியாமவருக்குப் பொய்யாகாத, மெய்யருக்குப்பொய்யுரைத்தால் தேய்பிறைபோற் றவங்குறையுமிடியுண்டாகும், துய்யதாய்தந்தையர்க்குப் பொய்யுரைத்தால் வறுமைபிணிதொலையாவென்றும், உய்யவருடேசிகர்க்ுப் பொய்யுரைத்தானரகமது வுண்மைதானே.

இ-ள். பொய்யருக்கு பொய்உரைத்தால் - பொய்பேசுவோருக்குப் பொய்யைச்சொன்னால், அவருக்கு-அந்தப் பொய்சொன்னவர்க்கு, வெற்றி ஆம் - வெற்றியுண்டாகும், பொய் ஆகாதமெய்யருக்கு பொய் உரைத்தால்-பொய்யற்ற மெய்பேசுவோருக்குப் பொய்சொன்னால், தேய்பிறை போல் - தேய்பிறைபோல, தவம்குறையும் - தவம்குறைந்துபோகும், மிடி உண்டாகும்-தரித்திரமுண்டாகும், துய்யதாய் தந்தையர்க்கு பொய் உரைத்தால்-பரிசுத்தராகிய மாதாபிதாக்களுக்குப் பொய்சொன்னால், வறுமை பிணியென்றும் தொலையா - தரித்திரமும் நோயும் எக்காலமும் நீங்கா, உய்ய-கடைத்தேறும்படி, அருள்-அருள்செய்த, தேசிகர்க்கு - குருமூர்த்திக்கு, பொய் உரைத்தால்-பொய்சொன்னால், நரகம் உண்மை - நரகமடைவது சத்தியம். எ-று.

இவர் இறந்தபோது இவர் மாணக்கர் பாடியவை.

18. இன்னங்கலைமகள் கைம்மீதிற்புத்தகமேந்தியந்தப்
பொன்னம்பலந்தனிற்புக்கிருந்தாளென்னபுண்ணியமோ
கன்னன் களந்தைக்கவிவீரராகவன் கச்சியிலே
தன்னெஞ்சமேடெனக்கற்றனொருமுத்தமிழையுமே.

இ-ள். கலைமகள்-சரசுவதி, இன்னம்-இன்னமும், கைமீதில் புத்தகம் ஏந்தி - கையின்மீது புத்தகத்தைத்தாங்கி, அந்தபொன்னம்பலந்தனில் புக்கு இருந்தாள்-அந்தப் பொன்னம்பலத்தில் போயிருந்தாள், என்னபுண்ணியமோ-என்னபுண்ணிய விசேஷத்தினாலோ, கன்னன்-கர்ணனுக்கு நிகரானவனும், களந்தை-களந்தைப்பதியில் வாழ்வோனுமாகிய, கவிவீரராகவன்-கவிவீரராகவன், கச்சியிலே - திருக்காஞ்சீ நகரத்தில், தன்னெஞ்சம் ஏடு என-தன்மனத்தையே ஏடாகக்கொண்டு (அதிலெழுதி,) ஒருமுத்தமிழையும் கற்றான்-ஒப்பற்ற முத்தமிழையும் கற்றான். எ-று.

19. முன்னாட்டுத்தவமுனியுஞ்சேடனும்வான்மீகனுமுன் முன்னில்லாமல், தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்துந் சென்று சேர்ந்தார், இந்நாட்டுப்புலவருடைக் கெதிரிலையே கவிவீரராகவா நீ, பொன்னாட்டுப்புலவருடன் வாதுசெய்யப் போயினையோ புகலுவாயே.

இ-ள். கவிவீரராகவா-கவிவீரராகவனே, முன்-முன்னே, நாடு-இவ் வுலகத்திலுள்ள, தவமுனியும் - தவத்தையுடைய அகத்திய முனிவனும், சேடனும் - ஆதிசேஷனும், வால்மீகமுனிவனும், உன்முன் நில்லாமல்-உனக்கெதிரேநிற்காமல், (முறையே) தென்னாட்டு மலையிடத்தும் - தென்னாட்டிலுள்ள பொதியமலையி னிடத்தும், பாரிடத்தும் - பூமியின்கீழும், புற்றிடத்தும்-புற்றினிடத்தும், சென்றுசேர்ந்தார் - போய்சேர்ந்தார்கள், இந்நாட்டுப் புலவர் உனக்கு எதிர் இலையே-இந்தவுலகிலுள்ள புலவர்களில் உனக்குநிகராவார் ஒருவருமில்லையே, (ஆதலால்) நீ-நீ, பொன்னாட்டுப் புலவருடன் - பொன்னுலகத்திலுள்ள புலவரோடு, வாதுசெய்யப் போயினையோ-வாதுபண்ணச்சென்றாயோ, புகலுவாய்-சொல்வாயாக. எ-று.

பொன்னாட்டுப்புலவர்-பிருகற்பதி, இந்திரன்முதலானோர்.

சிவப்பிரகாசசுவாமிகள்பாடல்.

---*---

ஒருகலியாணத்தில் சேஷையிடும்போது பாடியது.

1 ஐயநின்சென்னிமிசை யுறைகின்றமடமங்கை யாரென்ன வுமை
வினவவும், அன்னதொருமடமங்கையன்று வெண்டிரைதொழித்
தழகொழுகுதண்புனலெனத், துய்யவொளியானனங் கரியவிழி
காதுவாய் தோயத்தி லுண்டோவெனச் சொல்லருங்கமலமலர்
காவிமலர்கொடிவள்ளை தூயசெங்குமுதமென்னப், பொய்யென
நினைத்துநற் கொங்கையுங்கூந்தலும் புனலினிடையுண்டோவெ
னப், புற்புதஞ்சைவலமதெனவேமறுத்துப் புகன்றிடுதிநங்காயெ
னத், தையலவளென்ன நாணுடுவணங்கியென் றன்பிழை
பொறுத்திடென்றே, சங்கரனுரைத்திடத் திருவுளமகிழ்ந்தசிவ
சங்கரியுமைக்காக்கவே.

இ-ள். ஐய-ஐயனே, நின்சென்னிமிசை உறைகின்ற மடமங்கை-உன் சிரமீது வசிக்கின்ற இளம்பெண்; யார் என்ன - யார்என்று; உமை வினவவும்-உமாதேவி கேட்கவும், அன்னது ஒருமடமங்கை அன்று-அப்படியுனக்குத்தோற்றுவது ஒருஇளம்பெண்ணல்லள், வெள்திரைகொழித்து-வெண்மையாகிய இலைகளைவீசி, அழகு ஒழுகு தண்புனல் என - அழகொழுகாநின்ற குளிர்ந்த நீரென்றும், துய்யஒளி-பரிசுத்தமாகிய வொளியையுடைய; ஆநநம்-முகமும்; கரியவிழி-கருங்கண்களும், காது-செவிகளும்; வாய்-வாயும்; தோயத்தில் உண்டோ என-நீரிலுண்டோவென்று கேட்க, (முகமுதலியவாகத்தோற்றுவது) சொல் அரு-சொல்லுதற்கரிய; கமலமலர் - தாமரைமலரும்; காவிமலர்-கருங்குவளைமலரும், கொடியவள்ளை-வள்ளைக்கொ

டியும்; தூயசெங்குமுதம - பரிசுத்தமாகிய செவ்வல்லி மலருமேயாம்; என்ன—என்றுசொல்ல; பொய்யென நினைத்து - பொய்யென்று நினைத்து-நல்கொங்கையும் கூந்தலும் - அழகாகிய தனங்களும் கூந்தலும்; புனலினிடை உண்டோ என-நீரினிடத்துண்டோவென்றுகேட்க-(அப்படித் தோற்றுவது) புற்புதம் சைவலமதெனவே மறுத்துப் புகன்றிடுதி-நீர்க்குமிழியும் பாசியுமாமென்றே மறுத்துச்சொல்வாய், நங்காய் என்-பெண்ணேயென்று சொல்ல; தையலவள் என் என்ன-(தன்னையழைத்ததாயெண்ணி) அந்தக் கங்கையானவள் ஏனென்றலும்; நாணொடுவணங்கி - வெட்கத்தோடுபணிந்து, என்றன்பிழைபொறுத்திடு என்று-என்பிழையைப் பொறுக்கவேண்டுமென்று, சங்கரன் உரைத்திட-சிவபெருமான்சொல்ல, திருவுள்ளம் மகிழ்ந்த-மனமகிழ்ந்த, சிவசங்கரி உமைக்காக்க - சிவசங்கரி உங்களைக் காக்கக்கடவள், எ-று.

உமாதேவியானவள் சிவபெருமானைநோக்கி உமது சிரத்தின்மீது வாழ்கின்ற பெண்யாரென்றுவினவ, சிவபிரான் உன் கண்ணுக்குத் தோற்றுவது பெண்ணல்ல என்றும், முகம் கண்முதலியவாகத் தோன்றுவது தாமரைமலர் நீலோற்பலமலர் ஆமென்றும் கற்பித்து, பெண்ணே இதனை மறுத்துச்சொல் என்றளவில், பெண்ணேயென் றழைத்தது தன்னையென்று நினைத்துக் கங்கை ஏனென்று கேட்க, சிவபிரான் தன்கரவுவெளிப்பட்டதேயென்று நாணத்தோடு வணங்கி என் பிழைபொறுக்க வேண்டுமென்றுவேண்டத் திருவுளமகிழ்ந்த பார்வதிதேவி, தம்பதிகளாகிய உங்களைக் காக்கக்கடவள் என்பது கருத்து.

2. அரனவனிடத்திலே யைங்கரன்வந்துதா னையவென் செவியை
மிகவும், அறுமுகன்கிள்ளினு னென்றேசிணுங்கிடவு மத்தன்வே
லவனைநோக்கி, விரைவுடன் வினவவே யண்ணனென்சென்னியில்
விளங்குகண்ணெண்ணினனென, வெம்பிடும் பிள்ளையைப் பார்த்
துநீயப்படி விகடமேன்செய்தாயென, மருவுமென் கைந்நீள மு
ழுமளந்தானென்ன மயிலவனகைத்துநிற்க, மலையரையனுதவவரு
முமையவளை நோக்கிநின் மைந்தரைப் பாரெனக், கருதரியக
டலாடை யுலகுபலவுமடங் கருப்பமாய்ப்பெற்றகன்னி, கணப
திமுருகனைத் தகமகிழ்வு கொண்டவள் களிப்புடனுமைக்
காக்கவே.

இ-ள். அரனவன் இடத்திலே-பரமசிவனிடத்தில்,ஐங்கரன்வந்து -விநாயகன் வந்து, ஐய-ஐயனே, என்செவியை-என்செவிகளை, மிகவும்-மிகுதியாக, அறுமுகன் கிள்ளினன் என்று சிணுங்கிடவும் - முருகன் கிள்ளினனென்று சொல்லிச் சிணுங்குதலும், அத்தன்-பரமசிவன், வேலவனைநோ

க்கி-முருகனைநோக்கி, விரைவுடன் வினவவே - விரைவாக வினவுதலும், அண்ணன் - தமையன், என்சென்னியில் விளங்குகண் - என்தலையிலுள்ள கண்களை, எண்ணினன் என-கணக்கிட்டானென்றுசொல்ல, வெம்பிடும்பிள்ளையைப்பார்த்து-வருந்துகின்ற பிள்ளையைநோக்கி, நீ அப்படிவிகடம் என்செய்தாய்என- நீ அவ்வாறு என்விகடம்பண்ணினாயென்று கேட்க, மருவும் என் கைநீளம்-பொருந்திய என் துதிக்கையின் நீளத்தை, முழம் அளந்தான் என்ன - முழம்போட்டா னென்றுசொல்ல, மயிலவன் நகைத்து நிற்க - முருகன் சிரித்துக்கொண்டுநிற்க, மலையரையன்-பர்வதராஜன், உதவ வரும்-பெறவந்த, உமையவளைநோக்கி-உமாதேவியைப் பார்த்து, நின்மைந்தரைப்பாராய் என - உன்புதல்வரைப்பாராயென்று சொல்ல, கருது அரிய-நினைத்தற்கரிய, கடல் ஆடை-கடலாகிய ஆடையைத் தரித்த, உலகு-உலகத்தையும், பல அண்டம்-பல அண்டங்களையும், கருப்பமாய்ப்பெற்ற-கருப்பமாகக்கொண்டுபெற்ற, கன்னி-இளமைப்பருவமுள்ளபார்வதி, கணபதியை அருகு அழைத்து-விநாயகரை அருகேயழைத்து, அகமகிழ்வு கொண்டவள் - மனமகிழ்ச்சிகொண்டவளாகிய உமாதேவி, களிப்புடன்- மகிழ்வாகி, உமைகாக்க-உம்மைக்காக்கக்கடவள், எ-று.

3. அம்பிகையரன்றன்னை நோக்கியுன்னாபரண மரவமென வுமையைநோக்கி, அரியரவசயனத்தை யாவுருவமானத்தை யறியாய்கொல்சிறிதுமென்ன, நம்பிமனைதொறுமிரந் துணுமாண்டி நீயென்ன நானுருதனறிவேனென, நவையுறும்பொய்புகன் றீரெனப் பாரதநடந்ததேசரியாமென, வெம்பியொருவன்பிரம்பாலடித்தானென விளங்கிழையொருத்திதாம்பால், வீசினதுசொல்லென்ன வெண்ணாயிரம்பெண்கண்மிகுகற்பை நீக்கினையெனப், பம்புகற்பினிமலா நிரட்டிப்புநீக்கினது பதருமனீ கெளெனப், பரமருடனிவ்வாறு விளையாடுபச்சைப் பசுங்கொடியுமைக்காக்கவே.

இ-ள். அம்பிகை-உமாதேவியானவள், அரன்தனை நோக்கி-பரமசிவனைப்பார்த்து, உன் ஆபரணம் அரவம் என-உன்பூஷணமாயிருப்பது பாம்பென்றுசொல்ல, (அதற்கு) நம்பி-சிவபெருமான், உமையை நோக்கி-உமாதேவியைப்பார்த்து, அரி - திருமால், அரவசயனத்தை-சர்ப்பசயன முடையதையும், அரவுருவம் ஆனத்தை-சர்ப்பரூபமானதையும், சிறிதும் அறியாய்கொல்என்ன-சிறிதும் அறியாயோஎன்றுசொல்ல மனைதோறும் இரந்து உண்ணும் ஆண்டிஎன்ன-நீவீடுகள்தோறும் இரந்துண்ணுகின்ற ஆண்டியென்றுசொல்ல, நவை உறும் பொய்புகன்றீர் என - குற்றமிகுந்த பொய்சொன்னீ ரென்றுசொல்ல, பாரதம்நடந்ததேசரி ஆம் என-பாரதம் நடந்ததேசாக்ஷியென்றுசொல்ல, வெம்பி ஒருவன் பிரம்பால் அடித்தான் என- கோவித்து ஒருவன் பிரம்பினால் அடித்தானென்றுசொல்ல, விளங்கிழை ஒருத்தி-பெண்ணொருத்தி, தாம்பால் வீசினது சொல் என்ன - தாம்புக்கயிற்

னால் அடித்ததைச் சொல்லென்றுசொல்ல, எண்ணாயிரம் பெண்கள்-எண்ணாயிரம் பெண்களுடைய, மிகுகற்பைநீக்கினை எனா - மிகுந்த கற்பைநீக்கினாயென்றுசொல்ல, பம்புகற்பினில்-மிகுந்தகற்பினில், ஓர் இரட்டிப்புநீக்கினது-ஓர் இரட்டிப்பாக நீக்கினதை, பதறாமல் நீகேள் என-பதறாமலிருந்து நீ கேட்பாயென்று சொல்ல, பரமனுடன் - பரமசிவனோடு, இவ்வாறு-இந்தப்பிரகாரம், விளையாடு விளையாடாநின்ற, பச்சைபசுங்கொடி - உமாதேவியானவள், உமைக்காக்க - உம்மைக்காக்கக்கடவள். எ-று.

திருமால் அரவுருவமானது பார்வதியும் பரமேச்சுவரனும் சூதாடுங்காலத்தில், பார்பதிகெலித்திருக்கச் சிவபெருமான் நான் கெலித்தேனென்று பொய்சொல்லி, அருகிருந்த திருமாலைச் சாட்சியாகக்கோர, அவர் சிவபிரானேகெலித்ததாகப் பொய்சாட்சிசொல்ல, உமாதேவி கோபம்கொண்டு நீபொய்ச் சாட்சிசொன்னமையால் அரவமாகக்கடவையென்று சபித்தனள் என்பது, கந்தபுராணத்திலுள்ளது சிவபெருமான் பொய்கூறியதும் அந்தச்சந்தர்ப்பத்தில்தான்

4. அச்சுதனளிப்பனில முமது நேயன்வித்தை யருளுவன் பலபத்தி
ரன், அலமுதவுவன் சமன் பகடுவனந்தமக் காளாமோரெருதுமு
ண்டே, முச்சிரவயிற்படையினைக் கொழுவதாக்குவோம் மொய்ம்
புடனிழுத்திறுக்க, முந்தியவடக்கயிற்று டன்மற்று நமதன்பர்
முன்போ யிரந்துகொள்வோம், இச்சையுடை நமதிளைய தநயனுங்
கந்த னினிமையொடு மாடுமேய்ப்பன், இனியுழுது பயிரிடுத
னன் றுநன் றிதைவிட்டிரந்துண்ப தீனமெனவே, கச்சுமுலைமாது
மை யுரைத்திடும் புத்தியைக் கைக்கொண்டுளத்திலிதுநற், காரிய
மெனக்கருதி மெத்தக்களித்திடுங் கண்ணுதலுமைக்காக்கவே.

இ-ள். அச்சுதன்-திருமால், நிலம் அளிப்பன்-(நாம்வேண்டும்)பூமியைக்கொடுப்பன், உமதுநேயன், உமது தோழனாகிய குபேரன், வித்தைஅருளுவன்-விதையைக்கொடுப்பன், பலபத்திரன் அலம் உதவுவன்-பலராமன் கலப்பையைஉதவிசெய்வான், சமன்பகடுஈவன்-யமன் எருமைக்கடாவைக் கொடுப்பான், நந்தமக்கு ஆளது ஓர்எருதும் உண்டே-நமக்கு ஆளாயிருப்பதாகிய ஒரு எருதும் உளதே, முச்சிரம் அயில்படையினை- முத்தலைச்சூலத்தை, கொழு ஆக்குவோம்-கொழுவாக்கிக்கொள்வோம், மொய்ம்புடன் இழுத்து இறுக்க-வலிமையோடு இழுத்திறுக்குதற்கு, முந்தியவடக்கயிற்றுடன்-முதன்மையாகிய வடக்கயிற்றோடு, மற்றும்-மற்றும் வேண்டுவனயாவும், நமது அன்பர்முன்போய் இரந்துகொள்வோம்-நமது அன்பரிடத்திற் சென்று யாசித்துக்கொள்வோம், இச்சை உடை-விருப்பத்தை யுடைய, நமது இளையதநயன் ஆகியகந்தன்-நமது இளையகுமாரனாகிய முருகன், இனிமையோடு மாடுமேய்ப்பன்-இனிதாகமாடுமேய்ப்பான், இனி உழுதுபயிரிடுதல்நன்றுநன்று-இனிஉழுதுபயிரிடுதலே, நல்லது-நல்ல, தனைவிட்டு-

இதனைவிட்டு, இரந்துண்பது-யாசித்துண்பது, ஈனம் என - இழிவென்று, கச்சுமுலைமாது உமை உரைத்திடும்புத்தியை-கச்சணிந்ததனங்களையுடைய உமாதேவிசொல்லும் புத்தியை, கைக்கொண்டு - ஏற்றுக்கொண்டு, உளத்தில்-மனதில், இது நற்காரியம் எனக்கருதி-இதுநல்லகாரியமென்று நினைத்து, மெத்தகளித்திடும்-மிகவும் மகிழ்கின்ற, கண்நுதல்-நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன், உமைக்காக்க-உங்களைக் காக்கக்கடவன். எ-று.

5. கவுரிகமலாயர னிரந்தசோ றிதுவெனக் கமலைமண் கண்டேனெ
னக், காளையொன்றேயரற் கெனமாடுமேய்த்ததைக் கட்டிடைய
னாரோவெனச், சிவனொருவர் தூதென்ன வத்தூதுசென்றகதை
செப்பிலொருபாரதமெனச், சேரோடுதிருடினானரனெனக்கட்டு
ண்ட செய்திநா மறிவோமென, அவையினடமாடினானரனென்
ன வவ்வாட லரவமறியாதோவென, ஆலமதையுண்டன னர
னென்னமண்ணுண்ட வதனையறியாமோவென, விவரமொடுமலை
மகளுமலர்மகளுமிவ்வாறு விளையாடு மிவர்கடுணையா, மேவிவரு
புத்ரமித்ர களத்திரருடனே மேன்மேலு மிகவாழியே.

இ-ள். கவுரி-உமாதேவியானவள், கமலாய்-திருமகளே, அரன்இரந்த சோறு இது என - சிவன் யாசித்துவந்தசோறு இதுதானென்றுசொல்ல, கமலை-திருமகளானவள், மண்கண்டேன் என - மண்ணைத்தான் நான்கண்டேனென்று சொல்ல, அரற்கு காளை ஒன்றே என-சிவனுக்கு எருது ஒன்றேயென்றுசொல்ல, மாடுமேய்த்து அதைகட்டு இடையன் ஆரோ என-எருதைமேய்த்து அதைக்கட்டுகின்ற இடையன் யாரோவென்று சொல்ல, சிவன் ஒருவர் தூது என - சிவன் ஒருவனுக்குத் தூதுபோனானென்று சொல்ல, அத்தூது சென்ற கதைசெப்பில் ஒருபாரதம் என-அந்தத் தூது போன கதையைச் சொன்னால் ஒருபாரதமென்று சொல்ல, அரன்சேர் ஓடு திருடினான் என-சிவன் தன்னிடத்தில் வைக்கப்பட்ட ஓட்டைத் திருடினானென்று சொல்ல, கட்டுண்டசெய்தி நாம் அறிவோம் என-கட்டுண்டசங்கதியை யாம் அறிவோமென்று சொல்ல, அரன் அவையில் நடம் ஆடினான் என-சிவன் சபையில் கூத்தாடினானென, அவ்வாடல் அரவம் அறியாதோ என-அந்த ஆட்டத்தைப் பாம்பு அறியாதோ என்ன, அரன் ஆலமதை உண்டனன் என - சிவன் நஞ்சையுண்டானென்ன, மண் உண்ட அதனை அறியாமோ என - மண்ணுண்டதை அறியாமோ என்ன, விவரமொடு - விவரத்துடன், மலைமகளும் - மலையரயன் மகளாகிய பார்வதியும், மலர்மகளும் - திருமகளும், ஆக இவ்வாறுவிளையாடும் இவர்கள் துணையா-இப்படிவிளையாடுவோர்களாகிய இவர்களைத் துணையாகக்கொண்டு, மேவிவரு-பொருந்திவருகின்ற, புத்ர மித்ர களத்திரருடன்-புத்ர மித்ர களத்ரரோடுகூடி, மேன்மேலும் மிகவாழி-மேலும் மேலும் மிகுதியாய் வாழக்கடவீர். எ-று.

மித்திரன்-சிநேகன். களத்திரம்-மனைவி. சிவபெருமான் ஓடு திருடின தென்பது - திருநீலகண்டனார் திருவோட்டைமறைத்த சரித்திரத்தைக் குறித்தது. அவ்வாடல் அரவம் அறியாதோ என்றது, காளிங்கமர்த்தந சரித்திரத்தைக் குறித்தது.

தாயார்சொற்படி உப்புக்காரியை அழைத்தது.

9 நிறையவுளதோவெளிதோகொளுவோம்
பிறையைமுடிக்கணிந்தபெம்மான் உறையும்
திருக்காட்டுப்பள்ளிதிரிபாவாய்நீயிங்
கிருக்காட்டுப்பள்ளியெமக்கு.

இ-ள். பிறையை முடிக்கு அணிந்த பெம்மான் உறையும் - பிறைச்சந் திரனைச் சிரத்திலணிந்த சிவபெருமான் வாழ்கின்ற, திருக்காட்டுப்பள்ளி திரிபாவாய்-திருக்காட்டுப்பள்ளியில் திரிகின்ற பெண்ணே, நீ இங்கு இரு-நீ இவ்விடத்தில் இரு, உப்பு அள்ளி எமக்குக்காட்டு - உப்பையள்ளி எமக் குக்காட்டு, நிறைய உளதோ-நிரம்ப இருக்கிறதோ, வெளிதோ-வெண்மை யாயிருக்கிறதோ (நிறையவும் வெண்மையாயும் இருக்குமாயின்) கொளு வோம்-விலைக்கு வாங்குவோம். எ-று.

தோட்டக்காரன் மாம்பழத்தையெடுத்ததற்காக இவரை மடி பிடித்திழுத்தபோது பாடியது.

7. அடுத்துவருந்தொண்டனுக்காவந்தகனைத்தாளல்
அடர்த்ததுவுஞ்சத்தியமேயானல்-எடுத்தொரு
மாங்கனிக்காவென்னைமடிபிடித்தமாபாவி
சாங்கனிக்காதித்தன்வரத்தான்.

இ-ள். அடுத்துவரும் தொண்டனுக்கா-ஆசிரயித்துவந்த அடியவனுக் காக, அந்தகனை-யமனை, தாளால் அடர்த்ததுவும்-திருவடியால் உதைத்த துவும், சத்தியமே ஆனல்-சத்தியமேயாயின், எடுத்தது ஒருமாங்கனிக்கா-எடுத்தவொரு மாம்பழத்தின் பொருட்டு, என்னை மடிபிடித்தமாபாவி-என்னை மடிபிடித்திழுத்த படுபாவியானவன், கன்னிக்கு ஆதித்தன்வர-கந்யாராசியில் சூரியன்வர, சாம்-சாவன். எ-று.

தொண்டனென்றது-மார்க்கண்டனை. கன்னிக்கு ஆதித்தன்வர என்றது புரட்டாசிமாதத்தை. புரட்டாசிமாதத்தில் சாவாய் என்பதுகருத்து.

தருமபுரமடத்துக்குச் சென்றபோது, வெள்ளியம்பலத்தம்பிரான்
இவர்கல்வித்திறத்தை யறியும்பொருட்டு சிவபெருமானது
ஊர்முதலியமூன்றையும் ஓர்வெண்பாவில் அமைத்து,
முதலிலும் இறுதியிலும் கெரம்வரப்
பாடுகவெனப் பாடியது.

8. குடக்கோடுவானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடுமுன் னமணிவார்க்கு-வடக்கோடு
தேருடையான்றெவ்வுக்குத் தில்லைதோன்மேற்கொள்ளல்
ஊருடையரென்னுமுலகு.

இ-ள். குடக்கு ஓடுவான் எயிறுகொண்டார்க்கு-மேற்றிசையைநோக்கியோடுகிறவனாகிய சூரியனது பற்களைத் தகர்த்தவருக்கு, கேழல்முடக்கோடு முன்னம் அணிவார்க்கு - பன்றியினது வளைவாகிய கொம்பை முற்காலத்தில் அணிந்தவருக்கு, வடக்கு ஓடுதேர் உடையான் தெவ்வுக்கு-வடதிசையைநோக்கியோடுகின்ற (தென்றலாகிய) தேரையுடையவனாகிய மன்மதனது பகைவருக்கு, தில்லை ஊர் - தில்லைநகரம் ஊராகும், தோல் உடை - யானைத்தோல்புலித்தோல்கள் வஸ்திரமாகும், மேற்கொள்ளல் ஆன்-ஊர்தல் இடபமாகும், என்னும் உலகு-என்று உலகத்தார் சொல்வர்.

வடக்கோடுதேர் - தென்றல். சூரியன் பற்களைத் தகர்த்தது-தக்கன் யாகத்தில். கேழல்முடக்கோடு அணிந்தது, திருமா லெடுத்தவராக ரூபத்தை யழித்தபோது.

9. சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங் கொளலா நூறுவயதாமளவும்
பேய்கொண்டாலுங் கொளலாம் பெண்கொள்ளலாகாதே.

இ-ள். சேய்கொண்டு ஆரும் - செந்நிறத்தைக் கொண்டிருக்கிற, கமலம்-தாமரைமலரில் வீற்றிருக்கும், செம்மலுடனே-பெரியோனாகிய பிரமனுடன், அரவப்பாய் கொண்டானும்-சர்ப்பசயநத்தை யுடையவனாகியதிருமாலும், பணியும்-வணங்குகின்ற, பட்டீச்சுரத்தானே - பட்டீச்சுரம் என்னும் திருப்பதியிலெழுந்தருளினவனே, நோய்கொண்டாலும்|கொளலாம்-நோய்கொள்ளப் பெற்றாலும்பெறலாம், நூறுவயது ஆம் அளவும் பேய் கொண்டாலும்கொளலாம்-நூறுபிராயம்வரையிலும் பேய்பிடிக்கப் பெற்றாலும் பெறலாம், பெண்கொள்ளல் ஆகாது - பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்ளலாகாது. எ-று.

10. நிட்டையிலேயிருந்துமனத் துறவடைந்தபெரியோர்க ணிமலன்றாளைக், கிட்டையிலே தொடுத்துமுத்திபெறுமளவும்பெரிய சுகங்கிடைக்குங்காம, வெட்டையிலேமதிமயங்கிச்சிறுவருக்கு மணம்பேசி விரும்பித்தாலி, கட்டையிலே தொடுத்துநடுக்கட்டையிலே கிடத்துபட்டுங் கவலைதானே.

இ-ள். நிட்டையிலே இருந்து-யோகத்திலிருந்து,மனத்துறவு அடைந்தபெரியோர்கள்-அகத்துறவடைந்த பெரியோர்கள், நிமலன்தாளை-நிர்மலனாகிய சிவபெருமானது திருவடியை, கிட்டையிலேதொடுத்து - அடுத்த

காலந் தொடங்கி, முத்திபெறுமளவும் - மோக்ஷமடையுமளவும், பெரிய சுகம் கிடைக்கும்-(அவர்களுக்கு) பேரின்பம் கிடைக்கும், காமவெட்டை யிலே மதிமயங்கி-காமச்சூட்டால் புத்திமயங்கி, சிறுவருக்கு மணம்பேசி-சிறுவருக்குக் கலியாணம்பேசி, விரும்பி தாலிகட்டையிலே தொடுத்து-விரும்பித்தாலிகட்டியதுமுதல், (இறந்தபின் சுடலையிற் கொண்டுபோய்த் தகனத்தின் பொருட்டுப் பரப்பிய) நடுக்கட்டையிலே கிடத்துமட்டும்-கட்டையின் மத்தியில் வளர்த்தும்வரையில், கவலைதான் - கவலையேயாகும்.

காளியின்தேர்சாய்ந்து முருங்கைமரம் ஒடிந்தபோதுபாடியது.

11. திருந்துதமி ழிலக்கணவைந் திணைக்கோவை விருத்தகிரிச்செ
ல்வற்கோதும்,பெருந்தகைமையுடையம்யாம்விடுமோலைவெங்
கணூர்ப்பிடாரிகாண்க, இரும்புவியி லொருமுருக்கைக்கொம்
பொடியாமற்காத்திங் கிருக்குநீநம், முருங்கைதனைவேரோடுங்
களைந்தனையென் றுனக்கு முறைநன்றாமோ.

இ-ள். திருந்துதமிழ் இலக்கணம் ஐந்திணைக்கோவை-திருத்தமாகிய தமிழிலக்கணமமைந்த ஐந்திணைக்கோவையை, விருத்தகிரி செல்வதற்கு ஓதும்-முதுகிரியிலுள்ள சிவபெருமான்மீதுபாடிய, பெருந்தகைமை உடையம் யாம்-பெருந்தன்மையை யுடையோம் யாம், விடும் ஓலை-அனுப்பும் ஓலையை, வெங்கணூர் பிடாரிகாண்க-வெங்கணூர் பிடாரி அறிவதாக, இரும் புவியில்-பெரிதாகிய இவ்வுலகத்தில், ஒரு முருங்கைக்கொம்பு ஒடியாமல் காத்து - நீவாழ்கின்ற முருங்கைமரத்தின் ஒருகிளையும் ஒடியாமல்காத்து, இங்கு இருக்கும்நீ-இங்கேயிருக்கிற நீ, நம்முருங்கைதனை வேரோடும் களைந்தனை யென்றால்-எமது முருங்கைமரத்தை வேருடன் களைந்தாயானால், உனக்குமுறை நன்று ஆமோ-உனக்கு அதுநல்ல முறைமையாகுமோ.

12. நாணிபென்பதை நாரியென் றுரைத்திடு நசையாய்
வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றாற்
காணலாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளைய ரென்பதும் புதிதோ.

இ-ள். நாணி என்பதை - நாணி என்னும் மொழியை, நாரி என்று-நாரியென்று, உரைத்திடும்நசையால்-சொல்லப்படுதலா லுளதாகிய விருப்பத்தால்; வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது என்றால் - மூங்கிலானது வளைந்துபோயிற்றென்றால்; காணலாவது-காணக்கூடுவதாகிய; ஓர் உருவம்-ஒப்பற்ற உருவத்தையுடைய; மெய்நாரியைக்கண்டால் - உண்மையாகிய நாரியைக்கண்டால்; காளையர்-இளைஞர்; மயல்பூணுவார் என்பதும்-மயல்கொள்ளுவா ரென்பதும், புதிதோ-புதுமையோ. எ-று.

நாரி-பெண். நாணி என்பதை நாரியென்று உலகத்தார் சொல்லக் கேட்டு, நாரியென்னுஞ்சொல் பெண்ணைக்குறித்தலால் ஓரறிவினதாகிய

மூங்கிலும்வளைந்ததென்றால், உண்மையாகிய பெண்ணுருவைக்கண்டால் காளையர் மயங்குவர் என்பது புதுமையோ. எ-று

கருணைப்பிரகாசர் இறந்தபோது மூத்தவராகிய
சிவப்பிரகாசர் பாடியது.

13 முன்னமொருதமிழ்ப்புலவன் றனையுண்டுகெண்டசுவைமுதிர்ச்சி யாலே, தன்னியலை முழுதுமுரைத்தமையாமுன் னினைக்கவர்ந்து தடங்காளத்தி மன்னவனுண்டானெனது மாதவத்தின்வலிதீர மண்ணின்மீதே, என்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப்பிர காசனென்னுங்கோவே.

இ-ள். மண்ணின்மீது - மண்ணுலகின்மேல், என்னுடன்வந்து அவத ரித்த இளங்கருணைப்பிரகாசன் என்னுங்கோவே - என்னோடுகூடப்பிறந்த என்தம்பியாகிய கருணைப்பிரகாசன் என்னும் இறைவனே, முன்னம் ஒரு தமிழ்ப்புலவன் தன்னை உண்டுகெண்டசுவை முதிர்ச்சியாலே-முற்காலத்தில் ஒருதமிழ்ப்புலவனை யுண்டறிந்தசுவை மிகுதியால், தன் இயலைமுழுதும் உரைத்து அமையாமுன்-தன் தன்மையை முழுதுஞ்சொல்லியமையாமுன் னமே, நினை கவர்ந்து-உன்னைப்பற்றி, தடம்காளத்தி மன்னவன்-பெரிய காளத்திநாதன், என்மாதவத்தின்வலிதீர உண்டான்-என் பெருந்தவத்தி னது வலிமைநீங்கும்படி உண்டுவிட்டான். எ-று.

முன்னமொரு தமிழ்ப்புலவன் றன்னை உண்டது என்றது அப்பர் சுவாமிகளைத் திருக்காளத்திச் சிவலிங்கப்பெருமான் விழுங்கிய சரித்திரத் தைக்குறித்தது, கருணைப்பிரகாசர் ஸ்ரீ காளத்திபுராணத்தைப் பாடத் தொடங்கி அது முடிவுபெறுமுன்னமே இறந்தமையால்இவ்வாறுகூறினார்.

இது இரண்டாந்தமையனாராகிய வேலையசுவாமிகள் பாடியது.

14. ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற் றமையனினுமதி கமென்றே, பூண்டவுலகதனிலுள்ளோர் புகல்வதுகேட் டிருந்து மென்ன புதுமைதானோ, காண்டருகண் மணியேநல் லிளங்கரு ணைப் பிரகாசக் காளாய்நீதான், மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன் யானுமிரு வன்னெஞ்சேனே.

இ-ள். காண்தருகண்மணியே - நோக்குதற்குரிய கண்மணியே, நல்- அழகாகிய, இளமை - இளமைப்பருவமுள்ள, கருணைப் பிரகாசக்காளாய் கருணைப் பிரகாசன் என்னுங்காளையே, நீதான் - நீ, ஆண்டு அதனால் எனை ஒவ்வாய்-வயதினால் என்னைநிகர்க்காய், வித்தையினில் தமையனிலும் அதி கன் என்று - கல்வியில் தமையனைக்காட்டிலும் அதிகப்பட்டவனென்று, பூண்ட உலகதனில் உள்ளோர்-நிரம்பிய உலகத்திலுள்ளவர்கள்,புகல்வது-

சொல்லுவதை, கேட்டிருந்தும் - நான்கேட்டிருந்தும், என்னபுதுமைதானோ-இதென்ன ஆச்சரியமோ, மாண்டனை யென்று - நீ இறந்தாயென்று, அறிந்திருந்தும்-நான் அறிந்திருந்தும், உயிர்தரித்தேன் - உயிர்தாங்கி நின்றேன், யானும் மிகுவல்நெஞ்சேன்-நானும் மிக்கவலிய மனமுள்ளவன்.

தமையனாராகிய சிவப்பிரகாசரும், தம்பியாகிய கருணைப்பிரகாசரும்

இறந்தபோது வேலையசுவாமிகள் பாடியது.

15. அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லுமிருவரிடைத் தோன்றியயான்-முல்லை
அரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்.

இ-று. முல்லை அரும்பின்-முல்லையரும்புபோல, பொலியும் - விளங்குகின்ற, அணிமுறுவல் நல்லாய்-அழகிய பல்வரிசையையுடைய பெண்ணே, அல்லிமலர் பண்ணவனும்-அகவிதழ்களையுடைய தாமரைமலரில்வீற்றிருக்கிற பிரமதேவனும், ஆராய்ந்து அறி-ஆராய்ந்தறிதற்குரிய, கவிதைசொல்லும் இருவர் இடைதோன்றிய யான் - கவிபாடவல்ல இருவருக்கிடையே பிறந்தநான்; கரும்பில்கணு நிகர்த்தேன் - கரும்பின்கண்ணுள்ள கணுவை நிகர்த்திருந்தேன். எ-று.

தனக்குமூத்தவராகிய சிவப்பிரகாசசுவாமிகளையும்; இளையவராகிய கருணைப்பிரகாசரையும்; கரும்பின்முதலும் கடையுமாக வைத்து இவ்வாறுகூறினார்.

இவர்கள்பிதா குமாரசுவாமிகள் பாடியது.

16. கயல்வாய்த்தகண்ணி யுலகீன்ற வல்லிபங்கா வுனது
செயல்வாய்த்த வன்பர்க்கு மல்லாதவர்க்குஞ் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த வெந்தைக்கியான் வாய்த்ததுவுமிங்கென் றனக்கு
வயல்வாய்த்தது மனைவாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே.

இ-ள். கயல்வாய்த்தகண்ணி - சேல்போன்ற கண்களையுடையவளும், உலகு ஈன்றவல்லி-உலகங்களெல்லாவற்றையும்பெற்ற கொடிபோல்பவளுமாகிய உமாதேவியை, பங்கா-ஒருபாகத்தில்உடையவனே, இயல்வாய்த்த எந்தைக்கு யான் வாய்த்ததுவும்-இல்லறவியல்படைத்த என் தந்தைக்கு நான் உண்டானதும், இங்கு என்றனக்கு - இவ்விடத்தில் எனக்கு, வயல் வாய்த்ததுவும்-வயல்கிடைத்ததும், மனைவாய்த்ததும் - மனைவிகிடைத்ததும், மைந்தர்கள் வாய்த்ததும் - புதல்வர் கிடைத்ததும், உனது செயல் வாய்த்த அன்பர்க்கும்-உன் திருவருள்பெற்ற அன்பர்க்கும், அல்லாதவர்க்கும்-மற்றவர்க்கும், சிரிப்பு அல்லவோ-நகைப்பல்லவோ. எ-று.

சத்திமுத்தப் புலவர்பாடல்.

ஒருநாள் பாண்டியன் தன்சபையிலிருந்த வித்வான்களைநோக்கி நாரையின் வாய்க்கு எதனை உவமிக்கலாம் என்று வினவ, அவர்கள் அதற்குமறு மொழி சொல்லாதிருக்க அன்றிரவில் அரசன்நகர்சோதனைவரும் போது, வறுமையால் மெலிந்து பொருள்தேடிவரப் புறப்பட்ட இந்தப்புலவர், மதுரைப்பதியின் ஓர் பாழ்ஞ் சத்திரத்தில் படுத்துக்கொண்டு தமது வறுமையை நினைத்துக் கூறியது.

1. நாராய் நாராய் செங்கா லாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா லாராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றிவா டையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழையா ளனைக் கண்டன மெனுமே.

இ-ள். நாராய் நாராய் - நாரைகளே நாரைகளே, செங்கால் நாராய்- செங்கால்நாரையே, பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன-பழம்பழுக்கின்ற பனையினது கிழங்கைப் பிளந்தாற்போன்ற, பவளம் கூர்வாய்-பவளம் போன்ற கூர்வாயையும், செங்கால்-செவந்த கால்களையுமுடைய, நாராய்- நாரையே, நீயும்நின்மனைவியும் - நீயும் உன்மனைவியும், தென்திசைக் குமரி ஆடி-தென்றிசையிலுள்ள குமரியாற்றில்மூழ்கி,வடதிசைக்குஏகுவீராயின்- வடதிசைக்குப் போவீரானால்; எம் ஊர்சத்திமுத்தம் வாவியுள் தங்கி - எமது ஊராகிய சத்தி முத்திலுள்ள தடாகத்தில்தங்கி, நனைசுவர் கூரை - நனைந்தசுவரின் கூரையில், கனைகுரல்பல்லி பாடு பார்த்திருக்கும் - ஒலிக்கின்ற குரலையுடைய பல்லியின் ஓசையையே பார்த்திருக்கிற, எம்மனைவியைக்கண்டு-எம்மனைவியைக்கண்டு, எம்கோன்மாறன் வழுதி கூடலில்-எம் மிறையவனும்மாறனுமாகிய பாண்டியனது மதுரைப்பட்டணத்தில்,ஆடை இன்றி வாடையின் மெலிந்து-ஆடையில்லாமல் குளிர்காற்றினல் மெலிவடைந்து, கையதுகொண்டு மெய்யது பொத்தி-கையினல் உடம்பைப்போர்த்து, காலதுகொண்டு மேலது தழீஇ-காலால்மேலே தழுவி, பேழையுள்

இருக்கும்-பெட்டகத்துள் இருக்கின்ற, பாம்பு என உயிர்க்கும் - பாம்பைப்போல மூச்செறிகின்ற, ஏழையாளனை-ஒரு எளியவனை, கண்டனம் எனும் கண்டோமென்று சொல்லுங்கள், எ-று.

மேற்கூறிய பாடலைக்கேட்டு அரசன் மனமகிழ்ந்து இவருக்குவேண்டிய வெகுமதிசெய்ததுமன்றி, இவர் தம்மூரை அடைவதன் முன்னம், இவர் வீட்டில் செல்வம்மிகுத்திருக்கும்படி அமைத்து வைக்க, அதனைக்கண்டு மகிழ்ந்து பாடியது.

2. வெறும்புற்கையுமரிதாங்கிள்ளை சோருமென்வீட்டில்வரும்
எறும்புக்குமாற்பதமில்லை முன்னாளென்னிருங்கலியாம்
குறும்பைத்தவிர்த்தகுடிதாங்கியைச் சென்றுகூடியபின்
தெறும்புற்கொல்லியானை கவளங்கொள்ளாமற்றெவுட்டியதே.

இ-ள். முன்னாள்-முற்காலத்தில், என்வீட்டில் - என்வீட்டில், வெறும் புற்கையும் அரிதுஆம்-வெறுஞ்சோறு கிடைப்பதும் அருமையாகும், கிள்ளைசோரும் - வளர்க்கும் கிளிப்பிள்ளையும் பசியால்வாடும், வரும் எறும்புக்கும்-வருகிற எறும்புகளுக்கும், ஆற்பதம் இல்லை - ஆதாரமில்லை, என் இருகலியாம்-என்பெரிய வறுமையாகிய, குறும்பைதவிர்த்த-குறுநிலமன்னரையழித்த, குடிதாங்கியைச் சென்று கூடியபின்-அரசனைச்சென்று சேர்ந்தபிறகு, தெறும்புல் கொல்யானை-கொல்லுந் தொழிலையுடைய புலியைக் கொல்லுகின்ற யானையானது, கவளம் கொள்ளாமல் தெவுட்டியது-கவளத்தை உட்கொள்ளாமல் உமிழ்ந்துவிட்டது, எ-று.

வரதுங்க பாண்டியர்.

:*:

இவர் சரமதசையில் இவர்மனைவி இவரை நோக்கிப்பயப்படுகிறீரோவென்று கேட்டபோது பாடியது.

1- அஞ்சலென்ற கரதலமுங் கணபணகங் கணமும்
அரைக்கசைந்த புலியுடையு மம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகழலுஞ் சிலம்பும்
கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியு மறிமானு மழுவும்
·ஞ்சடிச்சிற் றிடையுமையா ளொருபங்கா கமுமாய்ப்
பால்வண்ண ருளத்திருக்கப் பயமுண்டோ வெனக்கே.

இ-ள். அஞ்சல் என்ற கரதலமும்-அஞ்சாதே யென்றமைந்த கையும், கணபண கங்கணமும்-கூட்டமாகிய படங்களையுடையபாம்பாகிய கங்கணமும், அரைக்கு இசைந்த புலி உடையும்-அரைக்கேற்ற புலித்தோலாடையும், அம்புலி செஞ்சடையும் - சந்திரனையணிந்த செவந்தசடையும், கஞ்சமலர் சேவடியும்-தாமரைமலர்போன்ற திருவடியும், கனைகழலும் சிலம்பும்-ஒலிக்கின்ற வீரக்கழலும் சிலம்பும், கருணைபொழி திருமுகமும் - அருள்மழையைச் சொரிகின்ற திருமுகமும், கண்கள் ஒருமூன்றும்-ஒப்பற்றமூன்றுகண்களும், நஞ்சையுண்ட மணிமிடறும்-விஷத்தையுண்ட நீலமணிபோலுங் கண்டமும், முந்நூலும்-முப்புரிநூலும், மார்பும் - திருமார்பம், நலம்திகழ் வெண்ணீற்று ஒளியும்-அழகுவிளங்காநின்ற திருவெண்ணீற்றினொளியும், மறிமானும்-மான்கன்றும், மழுவும்-மழுவாயுதமும், பஞ்ச அடி சிற்றிடை உமையாள்-பஞ்சுபோன்ற பாதத்தையும் சிற்றிடையையும் உடைய உமாதேவியாகிய, ஒப்பனைபாகமும் ஆய் - ஒப்பனையம்மை பாகமுமாகி, பால்வண்ணன் உள்ளத்து இருக்க - பால்வண்ணநாதர் எம்மனத்தி லிருக்கும்போது, எனக்குப் பயம் உண்டோ-எனக்குப் பயமுளதோ. எ-று.

2. யாக்கையெனும்புழுக்குரம்பையணைந்தணையாப்பொருளை
அருளொளியைப்பராபரத்துக்கப்புறவாமறிவை
நீக்கமலமயிர்முனைக்குமிடமறவெங்கெங்கும்
நிறைந்துநின்றமுழுமுதலைநினைவிலெழுஞ்சுடரைப்
பாக்கியங்கள்செய்தனந்தந்தவங்குறைகண்முடிக்கும்
பழவடியார்தமக்குதவும்பசுந்துணர்க்கற்பகத்தை
வாக்குமனவிகற்பத்தாலளவுபடாவொன்றை
மாசற்றவெறுவெளியைமனவெளியிலடைப்பாம்.

இ-ள். ஆக்கை என்னும் புழுக்குரம்பை அணைந்து அணையாபொருளை உடம்பென்கின்ற புழுக்கூட்டைச் சேர்ந்தும் சேராத பரம்பொருளை, அருள் ஒளியை - அருட்பிரகாசத்தை, பராபரத்துக்கு அப்புறம் ஆம் அறிவை-பரம் அபரம் என்பவைகளுக்கு அப்பாற்பட்ட அறிவை, நீக்கம் அற-நீங்குதலின்றி, மயிர்முனைக்கும் இடம் அற - மயிர்முனையை யூன்றுதற்கும் இடமில்லாமல், எங்கெங்கும் நிறைந்து நின்ற முழுமுதலை - எவ்விடத்தும் நிறைந்துநின்ற முழுமுதற்பொருளை, நினைவில் எழும்சுடரை - நினைப்பினுண்டாகின்ற ஒளியை, பாக்கியங்கள்செய்து - அதிர்ஷ்டங்கள்செய்து, அநந்தம் தவக்குறைகள் முடிக்கும் - அளவற்ற தவக்குறைகளை நிறையப் பண்ணுகிற, பழ அடியார்தமக்கு உதவும்-பழ அடியார்க்கு வேண்டும்பொருளைக் கொடுக்கிற, பசுதுணர் கற்பகத்தை-பசுமையாகிய பூங்கொத்துக்களையுடைய கற்பகவிருக்ஷத்தை, வாக்குமனவிகற்பத்தால் - வாக்குமனங்க

ளின் வேறுபாட்டால், அளவுபடா ஒன்றை - அளவிடப்படாத ஒருபொருளை, மாசு அற்ற வெறுவெளியை - களங்கமற்ற வெட்டவெளியை, மனவெளியில் அடைப்பாம்-மனமாகிய ஆகாயத்தில் அடைத்து வைப்போம்.

பரம்-ஆதி. அபரம்-அந்தம்.

—*—

முன்னொருகாலத்தில் திருவள்ளுவரும், ஔவையாரும்; இடைக்காடரும் சந்தித்தபோது, திருவள்ளுவரை ஔவையாரும், இடைக்காடரும் நோக்கி, நீர்செய்தநூல் எத்தன்மையது என்றுவினவ, அவர் அதற்கு விடையாகப் பாடியது.

1. குறுமுனிவன் முத்தமிழு மென்குறளுநங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.

இ-ள். குறுமுனிவன்-அகத்தியராற் செய்யப்பட்ட, முத்தமிழும்-இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும், என்குறளும் - என்னாற் செய்யப்பட்ட குறளும், நங்கை-உடைய நங்கையின் சிறுமுனிவன் - குமாரனாகிய சடகோபராற் செய்யப்பட்ட, வாய்மொழியின்-திருவாய்மொழி யினது, சேய்-பிள்ளைகள், என்றவாறு.

பிறந்தபோதே முனிவேடமா யிருந்தமையால், சிறுமுனிவன்என்றார். திருவள்ளுவர்கூறிய மேற்பாடலைக்கேட்டு ஔவையார் பாடியது.

2. ஐம்பொருளுநாற்பொருளுமுப்பொருளும்பெய்தமைத்த [ச்
செம்பொருளையெம்மறைக்குஞ்சேட்பொருளைத்-தண்குருகூர்
சேய்மொழியதென்பர்சிலரியானிவ்வுலகில்
தாய்மொழியதென்பேன்றகைந்து.

இ-ள். ஐம்பொருளும்-அர்த்த பஞ்சகத்தையும், நாற்பொருளும்-சதுர்வித புருஷார்த்தங்களையும், முப்பொருளும்-தத்துவத் திரயத்தையும், பெய்து அமைத்த-அமைத்துச்சொன்ன, செம்பொருளை-செவ்விய பொருளை; எம்மறைக்கும் சேட்பொருளை - எல்லா வேதங்களுக்கும் எட்டாத பொருளை, சிலர்-சிலர், தண்குருகூர் - குளிர்ச்சியாகிய திருக்குருகூரி லெழுந்தருளிய, சேய்மொழியது என்பர் - ஆழ்வார் திருவாய்மொழியென்று சொல்லுவர், யான் - நான், தகைந்து-அவர்சொல்வதைத் தடுத்து, இவ்வுலகில்-இந்த வுலகிலுள்ள, தாய்மொழி என்பேன் - (எல்லாப் பொருள்களுக்கும்) தாய்மொழியாகிய வேதமென்று சொல்லுவேன். எ-று.

அர்த்தபஞ்சகமாவது-பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை என்பன, பரம்-பரமபதத்தில் இருக்கும் இருப்பு. வியூகம் - சங்கர்ஷணன்,

பிரத்தியும்னன், அநிருத்தன், வாசுதேவன் என்னும் நான்கு வகுப்புக்களோடுகூடித் திருப்பாற்கடலில் எழுந்தருளி யிருக்கும் இருப்பு. விபவம்-ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். அந்தரியாமி - எங்கும் நிறைந்திருக்கும் இருப்பு. அர்ச்சை - விக்கிரகரூபமா யிருக்கும் இருப்பு. முப்பொருள்—சித்து, அசித்து, ஈச்வரன் என்பன.

இவைகளைக்கேட்ட இடைக்காடர் பாடியது.

3. செய்மொழியோ தாய்மொழியொ செப்பிலிரண்டுமொன்றே
வாய்மொழியையாருமறையென்பர்-வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சாலவுளவெனினுமம்மொழியும்
சாய்மொழியவென்பேன் றகைந்து

இ-ள். வாய்மொழியை - திருவாய்மொழியை, யாரும் மறை என்பர்-யாவரும் வேதமென்றுசொல்லுவர், வாய்மொழிபோல்-அத்திருவாய்மொழிபோல, ஆய்மொழிகள்சால உள எனினும் - ஆராயப்பட்ட மொழிகள் மிகவுமுள்ளனவென்று பிறர்சொல்லினும், தகைந்து-தடுத்து, அம்மொழியும்-அந்தமொழிகளும், சாய்மொழிய என்பேன் - இம்மொழியின் சாயையானமொழிகளேயாம் என்பேன், சேய்மொழியோ - குழந்தைவடிவாயிருந்த ஆழ்வார்வாக்காகிய திருவாய்மொழியையும், தாய்மொழியோ-எல்லா நூல்களுக்கும் மாதுர்ஸ்தானமாயிருக்கிற வேதத்தையும், செப்பில் - சீர்தூக்கிச் சொல்லு மிடத்தில், இரண்டும் ஒன்றே - அவ்விரண்டும் (பாஷையால் இரண்டாயிருப்பினும் பொருளால்) ஒன்றேயாகும். எ-று.

சங்கத்தார் நம்மாழ்வாரைப் புகழ்ந்து பாடியது.

4. சேமங்குருகையோ செய்யதிருப்பாற்கடலோ
நாமம்பராங்குசனோ நாரணனோ-தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமானுனக்கு.

இ-ள். பெருமான் உனக்கு-பெருமானாகிய உனக்கு, சேமம்-இனிதாகிய இடம், குருகையோ - திருக்குருகூரோ, செய்யதிருப்பாற்கடலோ-செவ்விய திருப்பாற்கடலோ, நாமம்-திருநாமம், பராங்குசனோ - பராங்குசனோ, நாரணனோ-நாராயணனோ, தாமம்-மாலை, துளவோ - துழாயோ, வகுளமோ - மகிழம் பூவோ, தோள்-புயங்கள், இரண்டோ - இரண்டோ, நான்கோ-நான்கோ, உள-உள்ளன. எ-று.

ஆழ்வார் ஸ்ரீமந்நாராயணனுடைய அவதாரம் என்பதுகருத்து.

—:*:—

மதுரைச் சொக்கநாதர் தருமி என்னும் பிராமணனுக்குப் பாடிக் கொடுத்தது.

1. கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ
பயிலியதுகெழீ இயநட்பின்
மயிலியற்செறியெயிற்றரிவைகூந்தலின்
நறியவுமுளவோநீயறியும்பூவே.

இ-ள். கொங்குதேர் வாழ்க்கை - பூமணத்தை யாராய்கின்ற வாழ்க்கையையும், அம்சிறை - அழகிய சிறகுகளையுமுடைய, தும்பி - வண்டே, காமம்செப்பாது-விருப்பத்தின்படி சொல்லாமல், கண்டதுமொழி-கண்டதைச் சொல்வாயாக, பயிலியது கெழீஇயநட்பின் - பழகினபொருளோடு பொருந்திய நட்பினால், மயில் இயல் - மயிற்சாயலையும், செறி எயிறு - நெருங்கிய பற்களையுமுடைய, அரிவைகூந்தலின்-மாதினது கூந்தலின் இயற்கைமணம்போல, நீஅறியும்பூ நீயறிந்த மலர்களுள், நறியவும் உளவோ-மணமுள்ளனவும் உளவோ. எ-று.

சண்பகபாண்டியன் ஒருநாள் தன்மனைவியின் கூந்தலின் நறுமணங் கண்டு, இம்மணம் இவள் கூந்தலுக்கு இயற்கையால் அமைந்ததோ செயற்கையால் அமைந்ததோவெனச் சந்தேகித்து, எனது இக்கருத்தறிந்து கவிகூறுவோர் ஆயிரம்பொன்னைப் பெறக்கடவரெனச்சங்கமண்டபத்தில் முடிப்புக்கட்டிவைத்தனன். இதனை அறிந்த ஆதிசைவனுகிய தருமி என்னும் ஓர்ஏழைப்பிராமணன் ஆலவாயடிகளையடைந்து, என்வறுமைதீர அரசன்கருத்தறிந்து பாசுரம்பாடியருள்க வென்றிரக்க, எம்மிறைவன் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் இப்பாசுரத்தைப் பாடியருளினர். அதனைப்பெற்ற அந்தணன் சங்கமண்டபமடைந்துகாட்ட, நக்கீரர் ஒழிந்த புலவரும், தன்மனக்கருத்து ஒத்திருந்தமையால் அரசனும், ஒத்துக்கொண்டு பொன்முடிப்பைக் கொடுக்கப்போகும் தருணத்தில் நக்கீரர்வந்து தடுத்து, இப்பாசுரத்தில் சொற்குற்றமில்லையாயினும்பொருட்குற்றமுண்டு அதாவது கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டென்று கூறியதேயாம் என்றனர். அதைக்கேட்ட அந்தணன் வாடிக் கடவுள்சந்நிதானம் அடைந்து முறையிட, எமது இறைவன் அந்தணன் வேடங்கொண்டு சங்கமண்டபம் வந்து நக்கீரரைநோக்கி, பதுமினி ஸ்திரீகளின் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டென்றுகூறியும் நக்கீரர்மறுத்து, கூந்தலுக்குமணம் செயற்கையதே என்றுமறுக்க, சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணைக்காட்டியும் நக்கீரர் நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமேயென்றனர். அப்போது நெற்றிக்கண்ணின் வெப்பத்தால் நக்கீரர் வெதும்பிப் பொற்றாமரைக்குளத்தில் அழுந்தக் கபிலர்முதலிய மற்றபுலவர் வணங்கித் துதிக்க, நக்கீரரைக்கரையேறப்பண்ண, கரையேறியநக்கீரனும்கர்வமொழிந்துகடவுளைவணங்கி, அவராணையால் அகத்தியரிடம்போய் இலக்கணம் கற்றனர் என்பது.

நக்கீரர் கூந்தலுக்கு இயற்கைமணம் இல்லையென்றும், மேற்கூறிய பாடல் தவறு என்றும் சொன்னதைக்கேட்ட சொக்கநாதர் பாடியது.

2. அங்கம்வளர்க்கவரிவாளினெய்தடவிப்
பங்கம்படவிரண்டுகால்பரப்பிச்-சங்கதனைக்
கீருகீறென்றறுக்குங்கீரனோவெங்கவியைப்
பாரிற்பழுதென்பவன்.

இ-ள். அங்கம்வளர்க்க-உடம்புவளர்க்கும் பொருட்டு-அரிவாளில்நெய்தடவி-அரிவாளில் நெய்யைப் பூசி, பங்கம்பட இரண்டுகால்பரப்பி-இழிவுண்டாக இரண்டுகால்களையும் விரித்து, சங்கதனை-சங்கை, கீருகீரு என்று அறுக்கும் கீரனோ-கீரு கீரு என்றோசை யுண்டாம்படி யறுக்கின்ற கீரன்தானோ, பாரில்-உலகத்தில், என்கவியைப்பழுது என்பவன்-என்கவியைக் குற்றமென்று சொல்லவல்லவன், எ-று.

இதைக்கேட்ட நக்கீரர்பாடியது.

3 சங்கறுப்பதெங்கள்குலஞ்சங்கரனார்க்கேதுகுலம
பங்கமுறச்சொன்னாற்பழுதாமே-சங்கை
அரிந்துண்டுவாழ்வோமரனாரைப்போல
இரந்துண்டுவாழோமினி.

இ-ள். சங்கு அறுப்பது எங்கள்குலம்-சங்கையறுத்துச் சீவிப்பதேஎங்கள்குலம், சங்கரனார்க்கு ஏதுகுலம்-சிவனுக்குக்குலம்யாது பங்கம்உறசொன்னால் பழுதுஆமே-இழிவுண்டாகச் சொன்னால் குற்றமாமே, சங்கை அரிந்து உண்டுவாழ்வோம், சங்கை அறுத்து உண்டு உயிர்வாழ்வோம்; அரனாரைப்போல - சிவனைப்போல, இரந்து உண்டுவாழோம் இனி-இனியிரந்துண்டு-உயிர் வாழமாட்டோம், எ-று.

மதுரைச் சொக்கநாதர் பாணபத்திரர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த திருமுகப்பாசுரம்.

4. மதிமலிபுரிசைமாடக்கூடல்
பதிமிசைநிலவும்பாணிறவரிச்சிற்
கன்னம்பயில்பொழிலாலவாயின்
மன்னியசிவன்யானமொழிந்திடுமாற்றம்
கன்னம்பயில்பொழிலாலவாயின்
மன்னியசிவன்யான்மொழிந்திடுமாற்றம்
பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க்
கொருமையினுரிமையினுதவியணிதிகழ்

குருமாமணிதிகழ்குலவியகுடைக்கீழ்ச்
செருமாவுகைக்குஞ்சேரலன்காண்க
பண்பால்யாழ்பயில்பாணபத்திரன்
தன்போலென்பாலன்பன்றன்பால்
காண்பதுகருதிப்போந்தனன்
மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பதுவே.

இ-ள். மதிமலிபுரிசை - சந்திரன் தவழ்கின்றமதிலும், மாடம்-மாளிகைகளுஞ்சூழ்ந்த, கூடல்பதியிசை நிலவும் - மதுரைப்பதியில் வாழ்கின்ற, பால்நிறம்-வெண்ணிறத்தையும், வரிச்சிறகு-கீற்றுகளையுமுடைய சிறகையுமுடைய, அன்னம் பயில்பொழில்-அன்னப்பறவைகள் வாழ்கின்ற சோலைசூழ்ந்த, ஆலவாயில் மன்னியசிவன் யான்- திருவாலவாயில் நிலைபெற்றிருக்கும் சிவனாகியயான், மொழிந்திடும் மாற்றம் - சொல்லுஞ் சொல்லாவது யாதெனின், பருவக்கொண் மூப்படியென - கார்ப்பருவ மேகம்போல, பாவலர்க்கு-புலவர்களுக்கு, ஒருமையின் உரிமையின் உதவி - மனவொருமையோடு அவரவர்க்குத் தக்கபடிகொடுத்து, அணிதிகழ்-அழகாக விளங்குகின்ற; குருமாமணிதிகழ்-நிறமுள்ளபெரிய ரத்நங்கள் ஒளிசெய்கிற; குலவிய குடைக்கீழ்-சூழ்ந்த குடையின்கீழ், செருமா உகைக்கும் - போரிற்சிறந்த யானையைச்செலுத்திவருகின்ற, சேரலன்காண்க - சேரலர்கோன் (இத்திருமுகத்தை) காணக்கடவன்; பண்பால்-பண்ணின் பகுதியமைந்த; யாழ்பயில்-வீணைவாசிக்கிற; பாணபத்திரன் - பாணபத்திரன் என்பவன்; தன்போல் உன்னைப்போலவே; என்பால் அன்பன் - என்னிடத்து அன்புடையான்; தன்பால்-உன்னிடத்தில்; காண்பது கருதிபோந்தனன் - (உன்னைக்) காண்பது கருதிவந்தான் (அவனுக்கு) மாண்பொருள் கொடுத்து-மிகுதியாகிய பொருளைக்கொடுத்து; வரவிடுப்பது-வரவிடல்வேண்டும்.

மதுரைச் சொக்கநாதர் சந்நிதியில் யாழ்வாசிக்கும் அடியாராகிய பாணபத்திரர் என்பவர் வறுமையால்மெலிந்து; ஆலவாய் அடிகளை இரக்க; அவர்கருணைகூர்ந்து சேரர்பிரானுக்கு; இத்திருமுகப் பாசுரத்தைப்பாடிக்கொடுக்க; அதனைக்கண்ட சேரர்பிரான் அடியாருக்கு வேண்டிய நிதிகளை அளித்து உபசரித்தனன் என்பது.

திருஞானசம்பந்தரும்; திருமங்கையாழ்வாரும் சந்தித்தபோது
ஆழ்வார்மீது சம்பந்தர் பாடியது.

5. கடியுண்டநெடுவாளைகராவிற்றப்பிக்
கயத்துக்குளடங்காமல்விசும்பிற்பாய
அடியுண்டவுயர்தெங்கின்பழத்தாற்பூகம்
அலையுண்டுகுலைசிதறுமாலிநாடா

படியுண்டபெருமானைப்பறித்துப்பாடிப்
பதம்பெற்றபெருமானே தமியேன்பெற்ற
கொடியொன்றுநின்பவனிக்கெதிரேசென்று
கும்பிட்டாளுயிரொன்றுங்கொடுவந்தாளே.

இ-ள். கடி உண்ட நெடுவாளை - மணம் பொருந்திய நெடிய வாளை மீன்கள்; கராவில்தப்பி-முதலையினின்றும் தவறி; கயத்துக்குள் அடங்காமல் - குளத்திலடங்கியிராமல்; விசும்பில்பாய - ஆகாயத்தில் பாய்தலால்; அடியுண்ட-அவற்றால் அடிபட்ட; உயர்தெங்கின்பழத்தால்-உயர்ந்த தென்னம்பழங்களால்; பூகம் அலையுண்டு-கமுகமரங்கள் அசைதலைப் பொருந்தி; குலைசிதறும்-குலைகளைச் சிந்துகின்ற; ஆலிநாடா - திருவாலிநாடனே; படி உண்ட பெருமானை-உலகத்தையுண்ட பெருமாளை; பறித்து - வழிகட்டிப் பறித்து; பாடி-கவிபாடி; பதம்பெற்ற பெருமானே - உயர்ந்த பதத்தைப் பெற்ற பெருமையுடையோனே; தமியேன் பெற்றகொடி - தனியனேன் பெற்றகொடிபோல்வாளாகியமாது; ஒன்றும்நின்பவனிக்கு எதிரேசென்று கும்பிட்டாள் - அழகுபொருந்திய உன்பவனிக்கெதிரேவந்து கும்பிட்டு; உயிர்ஒன்றும் கொடுவந்தாள்;உயிரொன்றையுமேகொண்டுமீண்டுவந்தாள்.

திருமங்கையாழ்வார் காட்டில் செல்வோரை வழிகட்டிப் பறித்து; அப்பொருளைக்கொண்டு பாகவதர்களுக்குக் கைங்கரியஞ் செய்துவருகையில்; ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாரோடு பிராமணத் திருவுருக்கொண்டு அம்மார்க்கமாய்வந்தபோது; எம்பெருமானையும் அவ்வாறே வழிகட்டிப் பறித்து; அப்பொருளை எடுக்கப்போகையில் அது எடுபடாமைகண்டு; ஆழ்வார் பிராமணவேடங்கொண்டுவந்த இறைவனைநோக்கி நீர் ஏதோ மந்திரஞ்செபித்திருக்கின்றீர்; அதனை எனக்கு உபதேசஞ்செய்யாவிட்டால்; உம்மை உயிரோடுவிடேன் என்று பயமுறுத்துகையில்; பிராமணராகிய எம்பெருமான் ஆழ்வாரை அருகில் அழைத்துத் திரு அஷ்டாக்ஷரமந்திரத்தை உபதேசித்துச் சேவைசாதித்தனர். அப்போது ஆழ்வார் அடியற்ற பனைபோல் நிலத்தில்விழுந்து, தேவரீர் திருவாபரணங்களைக் கழற்றத் துணிந்தேனே யென்று பலபலசொல்லித் துக்கித்தபோது; எம்பெருமானவர் அடியார்கள் பக்தியால் செய்தவையெல்லாம் நமக்கிஷ்டமே யென்று கருணையோடுநோக்கி; இனிச்சேகரிக்கும் பொருளைக்கொண்டு திருவரங்கத்தில் கைங்கரியஞ் செய்து நமது விஷயமாகத் தமிழில் தோத்திரங்களைப் பாடுகவென்று ஆக்ஞாபிக்க; ஆழ்வாரும் அவ்வாறே செய்து திருமந்திரார்த்தங்களைப் பக்தர்களுக்கு உபதேசித்து அவர்கள் வல்வினையையும் போக்கியருளினர். இதனை; குறள்வேடத்தும்மை வழிபறித்து மந்திரங்கொண்டன்பர் தங்கள் வல்வினையைப் பறித்தபிரான்—என மேலோர் கூறியவாற்றானுமறிக.

உயிரொன்றே கொடுவந்தாள் என்றமையால்; கைவளை ஆழிமுதலியவற்றை இழந்துவந்தாள் என்பதுகருத்து.

இதனைக்கேட்ட திருமங்கையாழ்வார் திருஞானசம்பந்த
சுவாமிகள்மீது பாடியது.

6. வருக்கைநறுங்கனிசிதறிச்செந்தேன்பொங்கி
மடுக்கரையிற்குளக்கரையின்மதகிலோடப்
பெருக்கெடுத்துவண்டோலஞ்செய்யுங்காழிப்
பிள்ளையார்சம்பந்தப்பெருமாள்கேளீர்
அருட்குலவுமயிலைதனிலனலால்வெந்த
அங்கத்தைப்பூம்பாவையாக்கினோமென்
றிருக்குமதுதகவன்றுநிலவால்வெந்த
இதனையுமோர்பெண்ணாக்கலியல்புதானே.

இ-ள். வருக்கை நறுகனிசிதறி-பலாவின் மணமுள்ளகனிகள்சிந்துத லால்; செந்தேன்பொங்கி-செந்தேன்பெருகி; மடுக்கரையில்-மடுவின்கரை யிலும்; குளக்கரையில்-குளத்தின்கரையினும்; மதகில்-மதகுகளிலும்; ஓட ஓடும்படி; பெருக்கெடுத்து - பெருகுதலால்; வண்டு ஓலம்செய்யும் வண்டு கள் ஒலிக்கின்ற; காழிப்பிள்ளையார்-காழிப்பிள்ளையாராகிய; சம்பந்தப்பெ ருமான்-சம்பந்தப்பெருமானே; கேளீர்-கேட்பீராக; அருள்குலவும் மயிலை தனில்-அருள் விளங்குகின்ற திருமயிலையில்; அனலால்வெந்த - நெருப்பி னால்வெந்த; அங்கத்தை-எலும்பை; பூம்பாவை ஆக்கினோம் என்று இருக்கு மது-பூம்பாவை யென்னும் பெண்ணாக்கினோமென்று நீர் இறுமாந் திருப் பது; தகவு அன்று-தகுதியல்ல, நிலவால் வெந்த - நிலவினால்வெந்த, இத னையும்-இந்த எலும்பையும், ஓர்பெண் ஆக்கல்-ஒருபெண்ணாக்கல், இயல்பு தான்-உமக்குரிய குணமேயாகும். எ-று.

அனலால்வெந்த எலும்பைப் பெண்ணாக்கித்ததுபோல உன்விஷயத் தில் மோகங்கொண்டு நிலவால்வெந்த இந்தப் பெண்ணையும் காத்தருளல், நும் கடனும் என்பது கருத்து.

திருமழிசையாழ்வார் திருக்கச்சியில் சயனத்திருக்கோலங்
கொண்டருளிய பெருமானைநோக்கிக்கூறியது.

7. கணிகண்ணன்போவென்றான்காமருபூங்கச்சி
மணிவண்ணாநீயிங்கிராதே—துணிவுடனே
செந்நாப்புலவன்யான்செல்கின்றேனீயுமுன்றன்
பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்.

இ-ள். கணிகண்ணன் போவென்றான்-கணிகண்ணன்போவென்றான், காமர் பூகச்சி - அழகும்பொலிவுமுள்ள திருக்கச்சியிலெழுந்தருளிய, மணி வண்ணா - நீலரத்நம்போன்ற நிறத்தையுடையவனே, நீ இங்கு இராதே-நீ இவ்விடத்திலிருக்கவேண்டாம், துணிவுடனே-மனவுறுதியுடன்; செந்நாப்

புலவன் யான் செல்கின்றேன் - செங்காப்புலவனுகிய நான்போகின்றேன், நீயும்-நீயும், உன்றன்-உனது, பைநாகம் பாய்-படத்தையுடைய சர்ப்பமாகி யபாயை, சுருட்டிக்கொள்-சுருட்டிக்கொள்வாயாக. எ-று.

திருமழிசை யாழ்வார் திருக்கச்சியில் யோகத்தில் எழுந்தருளி யிருக்குங்காலத்தில் அவர் திருவடிகளிலே கணிகண்ணன் ஆசிரயித்திருக்க, அவ்வளவிலே ஒருகிழவி ஆழ்வாரை வழிபட்டு வருகையில் ஒருநாள் ஆழ்வார் திருவுளமுகந்து அவளைநோக்கி உன் அபீஷ்டத்தைச் சொல்லாயென அவள் 'அடியேனுக்கு இந்த வார்த்திகம் போம்படி கடாட்சித்தருள வேண்டு மென்ன' ஆழ்வார் கடாக்ஷத்தால் அவளும் யௌவனமடைந்து தேவஸ்த்ரீபோல் விளங்கினுள். அப்போது அந்நாட்டை ஆண்டுவந்த பல்லவராயன் இவளைக் கண்டு மோகித்துத் தனக்குப் பத்தினியாக வேண்டுமென்று பிரார்த்திக்க, அவளும் சம்மதித்து அவனுடனே போகங்களை அனுபவித்து வருகையில், பல்லவராயன் தனக்கு வார்த்திகம்வரக்கண்டு இவளைநோக்கி யுனக்கு இந்த யௌவனம் எங்ஙனம் உண்டாயிற்றென்று கேட்க, அவளும் ஆழ்வாராலே தனக்குண்டான விதத்தைக்கூறி, நீயும் உன்வீட்டுக்கு அநுதினமும் உபாதானத்துக்குவருகிற ஆழ்வாருடையசிஷ்யராகிய கணிகண்ணரைப் புருஷகாரமாகக்கொண்டு ஆழ்வார் திருவடிகளை வணங்குவாயானுல் உனக்கும் இப்படிப்பட்ட யௌவனம் உண்டாகுமென்றனள். அதுகேட்டு அரசன் கணிகண்ணரை அழைத்து உம் ஆசாரியரை நாம் சேவிக்கவேண்டும், அவரை நம்மிடத்து அழைத்துவாரும் என்ன, கணிகண்ணரும் நம்மாசாரியார் ஒருவரகத்துக்கு எழுந்தருளார் என்ன, அதன்மேல் அரசன் தன்மீது கவிபாடவேண்டுமென்று கணிகண்ணரை அபேக்ஷிக்க, அவர் பகவத்பாகவத விஷயமொழிய நான் நரஸ்துதி பண்ணி ஒருவரைப் பாடுவதில்லையென்று மறுக்க, அரசன் கோபித்து நம்மைப் பாடீராயின் நம்மிராச்சியத்தைவிட்டுப் போமென்றனன். உடனே கணிகண்ணர் ஆழ்வார்முன் சென்று தண்டம்சமர்ப்பித்து, அரசன்சொன்னதை விண்ணப்பஞ்செய்து, அடியேன் இவ்விடத்தில் நின்றும் விடைகொள்ளுகின்றே னென்ன, ஆழ்வாரும் நீர்போகிறீர் ஆகில் நாமும்பெருமாளும் இங்கிருக்கப் போகின்ருமோவென்று பெருமாளை நோக்கி மேற்செய்யுளைக்கூற, ஆழ்வார் சொன்னவண்ணமே பெருமாள் இவர் பின்னே எழுந்தருள, காஞ்சிமா நகரில் அந்தகாரம் கவிந்து உதயாஸ்த மயந்தெரியாதே பாழ்பட்டபடியைக்கண்டு, ராஜாவும் மந்திரிகளும்மிகக்கிலேசித்து இவர்களைப்பின்தொடர்ந்து ஓரிரவிருக்கையென்கிற ஊரிலே இவர்களைக் கண்டுவணங்கி, கணிகண்ணரை வேண்டிக்கொள்ள, ஆழ்வாரும் மீண்டெழுந்தருளத் திருவுள்ளமாய்ச் சொன்னவண்ணஞ் செய்த பெருமாளைப் பார்த்து 'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி-மணிவண்ணு நீகிடக்கவேண்டும் - துணிவுடைய, செந்நாப் புலவனும்போக் கொழிந்தேனியுமுன்றன்-பைந்நாகப் பாய்படுத்துக்கொள்' என்று அதையே மாற்றிப்

பாட, அப்படியே அங்கு சயனித்தருளினர். இதுகாரணத்தாலே வடமொழியில் 'யதோக்தகாரி' என்றும், தென்மொழியில் 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்றும், பெருமாளுக்குப் பெயர்வழங்கும்.

இ ர ட் டை ய ர்.

—*—

இருவர் திருவாங்கூருக்குச்சென்று சிவதரிசனம்செய்து அன்றிரவில் தமக்குப் பசித்திருக்க நேர்ந்தமையால், சிவபெருமானை நிந்தாஸ்துதியாகப் பாடியது.

1. தேங்குபுகழாங்கூர்ச்சிவனேயல்லாளியப்பா
நாங்கள்பசித்திருக்கைஞாயமோ-போங்காணும்
கூறுசங்குதோல்முரசுகொட்டோசையல்லாமல்
சோறுகண்டமூளியார்சொல்.

இ-ள். தேங்குபுகழ்-நிறைந்த புகழையுடைய, ஆங்கூர்சிவனே - திருவாங்கூரில்வாழ்கின்ற சிவபெருமானே, அல்லாளியப்பா,—நாங்கள் பசித்திருக்கை-யாங்கள் பசித்திருத்தல், ஞாயமோ - நீதியோ, (என்று ஒருவர் சொல்ல, மற்றொருவர்) போங்காணும்,— கூறு சங்கு - ஒலிக்கின்ற சங்கினோசையையும், தோல்-தோலையும், முரசு-முரசத்தையும், கொட்டு-அறைகின்றதனு லுண்டாகிற, ஓசை-ஓசையையும், அல்லாமல்-கண்டதேஅன்றி, சோறுகண்டமூளி-சோற்றைக்கண்டமூளி, யார்-யாவர், சொல்-சொல்வாயாக என்றார். எ-று.

சிதம்பரத்திற்சென்று ஓர் அறிவிலியைப்புகழ்ந்துபாடி அவன் சம்மானியாதபோது கூறியது.

2. மூடர்முன்னேபாடன்மொழிந்தாலறிவரோ
ஆடெடுத்ததென்புலியூரம்பலவா-ஆடகப்பொன்
செந்திருவைப்போலணங்கைச்சிங்காரித்தென்னபயன்
அந்தகனேநாயகனானால்.

இ-ள். ஆடு எடுத்த-நடனத்தை மேற்கொண்ட, தென்புலியூர் அம்பலவா-தென்புலியூரில் பொன்னம்பலத்தையுடையவனே, நாயகன் அந்தகன் ஆனால்-கணவன் குருடனானல், ஆடகம்பொன் - ஆடகமென்னும் பொன்போன்ற, செந்திருவைப்போல்-திருமகளை நிகர்த்த, அணங்கை - பெண்ணை, சிங்காரித்து-அலங்கரித்ததனால், என்னபயன் - பிரயோஜநம்யாது, (ஒன்றுமில்லை அதுபோல என்று ஒருவர்சொல்ல, அதற்கு மற்றொருவர்) மூடர் முன்னே பாடல் மொழிந்தால் - மூடருக்கெதிரில் கவியைச்சொன்னால், அறிவரோ - (அதின்சாரத்தை அவர்) அறியவல்லவரோ, என்றார்.

திருநெல்வேலியில் சிவதரிசனம்செய்தபோது பாடியது.

3. வேயீன்றமுத்தர்தமைவெட்டினனேயிடையன்
தாயீன்றமேனிதயங்கவே-பேயாகேள்
எத்தனைநாளென்றேயிடறுவான்பாற்குடத்தை
அத்தனையும்வெண்டுமவர்க்கு.

இ-ள். இடையன்-இடையனானவன், தாய் - தாயினது, ஈன்றமேனி-பெற்றவுடம்பு, தயங்க - அசையும்படி, வேயீன்ற முத்தர்தமை வெட்டினனே. விண்டுமுத்தரை வெட்டினனே, (இதென்ன பரிதாபம் என்று ஒருவர்சொல்ல, மற்றொருவர்) பேயாகேள் - பேயனேகேட்பாயாக, (இடையன்) பால்குடத்தை—, எத்தனை நாளென்றே இடறுவான் - எத்தனைநாளாய்த்தான் இடறிக் கவிழ்ப்பான், அவர்க்கு - அந்தவிண்டு முத்தர்க்கு, அத்தனையும்வேண்டும்-அவ்வளரும்தகும் என்றார். எ-று.

விண்டு - மூங்கில். திருநெல்வேலியில் ஓர் இடையன் அரசன்வீட்டுக்குப் பாற்குடம் கொண்டுபோகிறது வழக்கம், அப்படியிருக்கையில் அவ்வழியில் சிவபெருமானைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருந்த ஓர் மூங்கிலானது இவனது பாற்குடத்தை ஒருநாள்போலவே பலநாளும் இடறிவிழச்செய்து பாலை நிலத்தில் சிந்திவந்தது அவ்விடையன் அந்த அரசனுக்குத் தெரிவிக்க, அவன் ஆட்களைக்கொண்டு அம்புதலைவெட்டிச் சோதிக்க அதனுள் சிவலிங்கப்பெருமான் தோன்றினர். இக்காரணத்தால் அப்பெருமானுக்கு விண்டுமுத்தரென்றுபெயர். சிவபெருமானுக்குத்தாய் மூங்கில் என்பதற்கும் காரணம் இதுவே. இதனைத் திருநெல்வேலிப் புராணத்தில் பரக்கக்காண்க.

ஓர் வேளாளன் தன்மகளை மருமகன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும்வழியில், அன்பின்மிகுதியால் அவளைத் தழுவிச்செல்வதைக்கண்டு பாடியது.

4. மாங்காட்டுவேளானமகளைமருமகன்பால்
போங்காட்டிலின்பம்புணர்ந்தானே-ஆங்காணும்
மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு.

இ-ள். மாங்காட்டு வேளான்-மாங்காட்டு வேளாளன், மகளை-தன்மகளை, மருமகன்பால் போம்காட்டில் மருமகனிடத்தில் செல்லும்வழியாகியகாட்டில், இன்பம்புணர்ந்தானே-சுகமநுபவித்தானே (இதென்ன முறைகேடு என்று ஒருவர்சொல்ல. அதற்கு மற்றொருவர்) ஆம்காணும்—மக்கள்மெய்தீண்டல்-மக்களுடம்பைத் தீண்டுதல், உடற்கு இன்பம்-(தாய்தந்தையரது) உடம்புக்கு இன்பமாகும், அவர்சொல்கேட்டால் - அவரதுசொல்லைக் காதினாற்கேட்டல், செவிக்கு இன்பம்-காதுக்கு இன்பமாகும். எ-று.

மருமகன் வீட்டுக்குத் தன்மகளை அழைத்துச்செல்லும் வேளாளன் தான்போகும் காட்டுவழியில் இனி இவளை அடிக்கடி கண்டுகளிக்க நேராதேயென்று இன்மொழிகூறி எடுத்தணைத்துச் சென்றான் என்பதுகருத்து.

இவர் மலையும் மலைச்சாரலுமாகிய காட்டுவழியில்சென்று வருந்தியபோது பாடியது.

5. குன்றுங்குழியுங்குறுகிவழிநடப்ப
தென்றுவிடியுமெமக்கென்கோவே-லொன்று
கொடாதானைக்கோவென்றுங்காவென்றுக்கூறில்
இடாதோநமக்கிவ்விடி.

இ-ள். குன்றும் குழியுங்குறுகி-மலைகளையும் பள்ளங்களையும் கிட்டிவழிநடப்பது-வழிநடத்தலாகிய இத்தொழில், எமக்கு என்று விடியும் - நமக்கு என்றுமுடிவுபெறும், (என்று ஒருவர்சொல்ல, அதற்கு மற்றொருவர்) என்கோவே-எள்னிறைவனே, ஒன்றும் கொடாதானை-சிறிதும் கொடாதவனை, கோ என்றும் கா என்றும் கூறில்-காமதேனு என்றும் கற்பகத்தரு என்றும் புனைந்துசொன்னால், இவ்விடி நமக்கு இடாதோ-இந்தத் துன்பம் நமக்கு நேரிடாதோ என்றார். எ-று.

இரட்டையரும் காளமேகப் புலவரும் பாடியது.

6. நாணென்றானஞ்சிருக்குநற்சாபங்கற்சாபம்
பாணந்தான்மண்டின்றபாணமே-தாணுவே
சீராரூர்மேவுஞ்சிவனேநீயெப்படியோ
நேரார்புரமெரித்தநேர்.

இ-ள். நாண் என்றால்-நாணென்றாலோ, நஞ்சு இருக்கும். நைந்திருக்கும், நல்சாபம் கல்சாபம் - நல்லவில்லென்றாலோ கல்வில்லாகும், பாணம் தான்மண்தின்ற பாணம்-அம்பென்றாலோ மண்ணுண்ட அம்பாகும், (இப்படி யிருக்க) தாணுவே-சிவபெருமானே, சீர் ஆரூர் மேவும் - சிறப்புள்ள திருவாரூரிலெழுந்தருளிய, சிவனே - சிவனே, நீ-நீ, நேரார்-பகைவரது, புரம்-முப்புரத்தை, எரித்தநேர்எப்படியோ-நீறுபடுத்தினவிதம் எவ்வாறோ அறியோம். எ-று.

இவர்கள் திருவாரூருக்குச் சென்று சிவதரிசனஞ்செய்துமண்டபத்துக்குவந்து தங்கியிருக்குங் காலத்தில், இவருள் ஒருவர் "நாணென்றால்" என்று தொடங்கி "பாணந்தான்" என்னுமளவும்பாடிவிட, மற்றொருவருக்கு அவ்விட்டவிடந் தொடங்கி மற்றதைப் பூர்த்திசெய்யத் தோற்றாமையால், இதனை அம்மண்டபச்சுவரில் எழுதிவைத்து, மற்றுஞ்சில திருப்பதிகள் சென்று வணங்கி மீண்டுவந்தபோது, காளமேகப்புலவரால் மண்டின்ற என்றுதொடங்கி நேர் என்று மற்றதும் பூர்த்திசெய்து, அடியில் காளமேகன் என்று கையெழுத்திருட்டிருப்பதைக்கண்டு வியந்தார்கள்.

பின் இவ்விருவரும் இவ்வருமைப் புலவரைக்கண்டு களிக்கவேண்டும், இவர், எங்குளர் என்று அங்குள்ளாரைவினவ, அவர்கள் இப்புலவர் இன்றுதான் தேகவியோகமடைந்து அவரது பிரேதம் மயானத்தில் வெந்துகொண்டிருக்கின்றது என்றார்கள்; இதைக்கேட்ட இவர்கள் மயானத்திற் சென்று அவரது வாய் வேகிறதைக்கண்டு பாடியது.

7. ஆசுகவியாலகிலவுலகெங்கும்
வீசுபுகழ்க்காளமேகமே-பூசுரா
விண்கொண்டசெந்தழலில்வேகுதேயையோ
மண்டின்றபாணமென்றவாய்.

இ-ள். ஆசுகவியால்-ஆசுகவிபாடுந் திறத்தால், அகில உலகு எங்கும்-எல்லா வுலகங்களாகிய எவ்விடத்தும், வீசுபுகழ் - பரிமளிக்கிற கீர்த்தியையுடைய, காளமேகமே-காளமேகப்புலவரே, பூசுரா - வேதியா, மண்தின்ற பாணம் என்றவாய்-மண்தின்ற பாணம் என்று சொன்ன உன் வாயானது, விண்கொண்ட செந்தழலில் வேகுதே - ஆகாயத்தை யளாவியசெந்தீயில் வேவா நின்றதே, ஐயையோ-அந்தோ இது என்னபரிதாபம். எ-று.

பாண்டியனைநோக்கிக் கூறியது.

8. புராதமானதமிழ்ப்புலவீரிந்தப்புன்குரங்கு
மராமரம்விட்டிங்குவந்ததென்னேவகைகேட்டிலேயோ
தராதலம்வென்றதமிழ்மாறனையுந்தன்றம்பியையும்
இராகவனென்றுமிலக்குவனென்றுமிருந்ததுவே.

இ-ள். புராதநம் ஆனதமிழ்ப்புலவர்-பழமையாகிய தமிழ்வித்வான்களே, இந்தபுல்குரங்கு-இந்த அற்பமான குரங்கு, மராமரம்விட்டு இங்குவந்தது என்னே-மராமரத்தைவிட்டு இவ்விடத்திற்கு வந்ததற்குக் காரணம் யாதோ, வகைகேட்டிலேயோ - இதற்கு விவரம்கேட்கவில்லேயோ, தராதலம்வென்ற-உலகமுழுதும் வென்ற, தமிழ்மாறனையும் தன் தம்பியையும்-தமிழ்ப்பாண்டியனையும் அவன்தம்பியையும், இராகவன் என்றும் இலக்குவன் என்றும் இருந்தது-ஸ்ரீராமனென்றும் லக்ஷ்மணனென்றும் எண்ணி இங்கேயிருந்துவிட்டது.

இவர்கள் பாண்டியன் சமுகத்திற்சென்று அவனால் பரிசில்பெறுஞ் சமயத்தில் துர்மந்திரியாகிய ஒருவன்விலக்க, அவன்மீதுகோபங்கொண்டு ஒருவர் மற்றொருவரைநோக்கி இந்தப்புன்குரங்கு மராமரம்விட்டு இங்கு என்வந்ததென வினவ, அதற்கு விடையாக மற்றொருவர், பாண்டியனை இராமனாகவும் அவன்தம்பியை இலக்குமணனாகவும், புகழ்ந்தும், தடுத்தவனைக்குரங்கு என்று நிந்தித்தும்பாடினர் என்பதுகருத்து.

வீரசம்பு என்பவர் கொத்தபரிசை இரட்டையர் இடதுகையால் வாங்கினதற்கு வீரசம்பு வினவாகப் பாடியது.

9 பதிவீரசம்புவென்றுபாராமற்கல்விக்
கிதமுடையிரட்டையரேயீகை-உதவில்வலக்
கைத்தலத்திற்கொண்டுகளிக்காமலும்மிடது
கைத்தலத்திற்கொள்ளுவதேன்காண்.

இ-ள். கல்விக்கு இதம் உடை இரட்டையரே - கல்வியால் உலகத்துக்கு நன்மைசெய்தலையுடைய இரட்டையரே-வீரசம்பு-வீரசம்பு என்கிற என்னை, பதி என்று பாராமல்-உமக்குப்பிரபு என்றுநோக்காமலும், ஈகை உதவின்-யாம் கொடைப்பொருளைக்கொடுத்தால், (அதனை) வலக்கைதலத்தில் கொண்டு களிக்காமல்-வலக்கையிலேற்று மகிழாமல், உம் - உமது, இடதுகைத்தலத்தில் கொள்ளுவது-இடக்கையி லேற்றுக்கொள்வதற்குக் காரணம், என்-யாது. எ-று.

இரட்டையர் விடை.

10. கூவராயன்றியாகங்கொள்வோம்வலக்கைமுடி
யாவர்தரினுமிடக்கைகொள்வோம்-பூவுலகில்
மின்பணிமின்னார்மதனேவீரசம்புவேயினிநாம்
இன்பமுநேரோமினி.

இ-ள். பூவுலகில்-பூலோகத்தில், மின்பணி - மின்கொடியும் வணங்குதற்குரிய, மின்னார்-மாதருக்கு, மதனே-மன்மதனே, வீரசம்புவே-வீரசம்புவே, கூவராயன் தியாகம்-கூவராயன்தருகிற கொடைப்பொருளை, வலக்கைகொள்வோம்-வலக்கையால் வாங்குவோம், முடி-மகுடமணிந்த,யாவர் தரினும்-எவர்கொடுத்தாலும், இடக்கைகொள்வோம், இடக்கையால்வாங்குவோம், இனி-இனி, நாம்-யாம், இன்பமும் நேரோம்-சுகத்தை வேண்டிலோம். எ-று.

வீரசம்பு வினா.

11. என்னுடையபேரும்புகழுமிருஞ்சீரும்
என்னுடையவீகையுங்கண்டெப்படிநம்-முன்னவனை
ஆவலுடனேயதிகமாய்ச்சொன்னீரிரட்டையரே
கூவராயன்னிபல்லென்கூறு.

இ-ள். என்னுடையபேரும்-என்பெயரையும், புகழும்-கீர்த்தியையும், இருஞ்சீரும்-பெருஞ்சிறப்பையும், என்னுடைய ஈகையும்-எனது ஈகையையும், கண்டு-பார்த்தும், எப்படி-எவ்வாறு, நம்முன்னவனை -நம்தமையனை';

ஆவலுடனே - விருப்பத்துடனே, அதிகமாய்ச் சொன்னீர். அதிகமாய்ச் சொன்னீர், இரட்டையரே-இரட்டைப்புலவரே, கூவராயன் இயல்புஎன்- கூவராயனது தன்மையாது, கூறு-சொல்வீராக. எ-று.

கொடையில் தன்னினும் சிறந்தவனுகையால் முன்னவன் என்முன்.

இரட்டையர் விடை.

12. மாதாபிதாவுமவன்மன்னுகுருதெய்வமவன்
தாதாவவனே தருங்கீர்த்திக்-காதாரன்
தியாகசமுத்திரன்றண்கூவராயன்றன்
ஈகைதனைச்சொல்லவெளிதோ

இ-ள். மாதாபிதாவும் அவன் -(எமக்கு) தாய்தந்தையரும் அவனே, மன்னும்-நிலைபெற்ற, குருதெய்வம் அவன் - குருவும் தெய்வமும் அவனே, தாதா-கொடையாளி, அவனே-அவனே, தரும்கீர்த்திக்கு ஆதாரன் (அவனே)-உண்டாகின்ற கீர்த்திக்கு ஆதாரமானவன் அவனே, தியாக சமுத்திரன்-தியாகம் கொடுப்பதில் சமுத்திரம்போல அளவிடற்கு அரியவன், தண்-சாந்தகுணமுள்ள, கூவராயன் தன் ஈகைதனை - கூவராயனுடைய ஈகையை, சொல்ல எளிதோ-சொல்லுதல் எளிமையுடையதோ. எ-று.

சொக்கநாதப் புலவர்பாடல்.

கறுப்பனென்னும் சீமானைப்புகழ்ந்து பாடியது.

1. சீர்கறுத்தமுகிற்கரத்தன்கஸ்தூரிபூபனருள்சேயாவென்றும்
ஓர்கறுப்புமில்லாததொண்டைவளநாட்டிருக்குமுசிதவேளே
ஆர்கறுப்பனென்றுசொல்லியழைத்தாலுநாமுன்னையன்பினாலே[மே
பேர்கறுப்பனிறஞ்சிவப்பன்கீர்த்தியினால்வெளுப்பனெனப்பேசுவோ

இ-ள். சீர்-சிறப்புள்ள, கறுத்த முகில் - கரிய மேகம்போன்ற, கரத்தான் - கொடைக்கையினை யுடையவனாகிய, கஸ்தூரிபூபன் அருள்சேயா- கஸ்தூரி பதிபெற்ற புதல்வனே, என்றும்-எக்காலத்தும், ஓர்கறுப்பும் இல்லாத-ஒரு களங்கமுமில்லாத, தொண்டைவளநாடு இருக்கும் - வளமாகிய தொண்டைநாட்டில் வாழ்கின்ற, உசிதவேளே-சிறந்த மன்மதனே, ஆர்- யாவர், கறுப்பன் என்றுசொல்லி அழைத்தாலும் - கறுப்பன் என்று கூப்பிட்டாலும், நாம்-யாம், உன்னை-உன்னை, அன்பினாலே-அன்பினாலே, பேர் கறுப்பன் என-பேரால் கறுப்பனென்றும், நிறம் சிவப்பன் என-நிறத்தால் சிவப்பன் என்றும், கீர்த்தியினால் வெளுப்பன் என - புகழினால் வெளுப்பனென்றும், பேசுவோம்-சொல்வோம். எ-று.

என்றும் ஓர் கறுப்புமில்லாத தொண்டைவளநாடு என்றது, எக்காலத்தும் சிறுவிலைக்காலம் முதலிய குற்றமில்லாத தொண்டைவளநாடு என்றபடி இவன் செந்நிறமுடையவனாதலால் நிறஞ்சிவப்பனென்றும், கீர்த்திக்கு நிறம் வெண்மையாதலாலும், இவன் அதனை யுடையவனாதலாலும், கீர்த்தியினால் வெளுப்பன் என்றும் கூறினர்.

இதுவுமது.

2. பிள்ளைவயதினிற்கல்விகற்றோம்பின்பு
பெரியநரவாகனமும்பெற்றோம்பூமி
உள்ளளவுங்கீர்த்திநிலைநிறுத்திக்கொண்டோம்
ஒருகுறையுமில்லையினியுரைப்பக்கேண்மோ
தெள்ளிலகுசிதம்பரத்தைத்தெரிசித்தோம்பின்
சேற்கருங்கட்டளவநகைத்தெய்தயானை
வள்ளிபுணர்சிவப்பனையுந்துதித்தோமெங்கள்
மாவைவளர்கறுப்பவுன்னைவாழ்த்தினோமே.

இ-ள். பிள்ளைவயதினில்-பிள்ளைப்பருவத்திற்றானே, கல்விகற்றோம்-கல்விகற்றோம், பின்பு பெரிய நரவாகநமும் பெற்றோம்-பின்னர் பெரிதாகிய சிவிகையையும் பெற்றோம், பூமி உள்ள அளவும் கீர்த்திநிலை நிறுத்திக்கொண்டோம்-பூமி உள்ளவரையில் புகழை நிலைபெற்று விளங்கச்செய்துகொண்டோம், ஒரு குறையும் இல்லை-எமக்கு ஒரு குறையும் இல்லை, இனி உரைப்பக்கேள்-இனிசொல்லக்கேள், தெள் இலகு சிதம்பரத்தை-ஞானம் விளங்குகின்ற சிதம்பரத்தை, தெரிசித்தோம்-சேவித்தோம், பின் - அதன் பின், சேல்கருங்கண்-சேல்மீன்போன்ற கரியகண்களையும், தவளம் நகை-முல்லையரும்புபோன்ற பற்களையுமுடைய, தெய்வயானை வள்ளி - தெய்வயானை வள்ளியம்மை ஆகிய (இவர்கள்), புணர்-புணர்கின்ற, சிவப்பனையும் துதித்தோம்-முருகக்கடவுளையும் துதித்தோம், எங்கள்மாவைவளர்கறுப்ப எமது மாவையில் வளர்கின்ற கறுப்பனே, உன்னைவாழ்த்தினோம்-உன்னையும்வாழ்த்தினோம். எ-று.

தெள் இலகு சிதம்பரம் என்பதற்கு, எல்லாத்திருப்பதிகளுள்ளும் சிறந்ததென்று தெளிந்தெடுக்கப்பட்டு விளங்குகின்ற எனினும்பொருந்தும். செவப்பு நிறமுடையவனாகையால் முருகனை சிவப்பன் என்றார். கல்விகற்றல்முதல் சிவப்பனைத்துதித்தல் ஈறாயுள்ள இகலோகபரலோக சாதனங்களுக்கு கறுப்பன் என்னும்சீமான் துணையாய் நின்றமையால், "கறுப்ப உன்னை வாழ்த்தினோம்" என்றார்.

3. எல்லப்பனம்மையப்பன்றருதிருவேங்கடராமனெழிற்சீராமன் வல்லக்கொண்டவனுடனேமாதை வெங்கடேசனைப்போல்வரிசைதந்தான், செல்லத் தம்பியருடனே மாவையில்வாழ் கறுப்பண்ணன்

றெருவீதிக்கே, பல்லக்குத்தான்சுமந்தானது நமக்கோராயிரம்பொன்பரிசுதானே.

இ-ள். எல்லப்பன் அம்மையப்பன்-எல்லம்பனம்மையப்பன், தரு-பெற்ற, திருவேங்கடராமன்-திருவேங்கடராமனையும், எழில்-அழகுள்ள,சீராமன்-சீராமனையும், வல்லக்கொண்டமனுடனே-வல்லக்கொண்டமனென்பவனோடு, மாதை வெங்கடேசனைப்போல-மாதைவெங்கடேசனைப்போல, வரிசைதந்தான்-வரிசைகொடுத்தான், செல்லத் தம்பியருடனே-செல்வத்தம்பியரோடு, மாவையில்வாழ்கறுப்பண்ணன்-மாவையில் வாழ்கின்ற கறுப்பண்ணனென்பவன், தெருவீதிக்கு - தெருவீதியளவும், பல்லக்குத்தான் சுமந்தான், பல்லக்கையும் தானேசுமந்து சென்றான், அது - அச்செயல், நமக்கு ஓர் ஆயிரம் பொன் பரிசுதான் - நமக்கு ஒரு ஆயிரம் பொன்னைப் பரிசிலாகத் தந்ததுபோலாகும். எ-று.

4 மெய்யிலேயொருபாதி யுமைக்களித்த செங்காட்டுவிமலனுரே, மய்யிலே தோய்ந்தவிழிச் சந்தனமான் றலைக்கறியை வளமாயாவின், நெய்யிலேதான்சமைத்துங் கொடுத்திருந்தும்படைத்திருந்து நீர்தானின்று, கய்யிலேமழுவெடுத்தாற் பொய்யாமோ பிள்ளை கொன்றகளவுதானே.

இ-ள். மெய்யிலே ஒருபாதி-உடம்பில் ஒருபாதியை, உமைக்கு அளித்த-உமாதேவிக்குக் கொடுத்த,செங்காட்டு விமலனுரே-திருச்செங்காட்டிலெழுந்தருளிய பரிசுத்தரே, மய்யிலே தோய்ந்தவிழி-அஞ்சனத்திலேபடிந்தகண்களையுடைய, சந்தமான் - சந்தநங்கையானவள், தலைக்கறியை-தலைக்கறியை, வளமாய் - சுவையுண்டாக, ஆவின்நெய்யிலேதான் சமைத்துக்கொடுத்திருந்தும்-பசுவின் நெய்யிலே சமைத்துக் கொடுத்திருந்தும், படைத்திருந்தும்-(இலையில்) பரிமாறியிருந்தும், நீர்தான் இன்று கய்யிலே மழு எடுத்தால் - நீர் இன்று கையில் மழுவைத்தாங்கி யிருந்தால், பிள்ளை கொன்றகளவு பொய்யாமோ-பிள்ளையைக்கொன்ற குற்றம் மறையுமோ.

சந்தனநங்கை-சிறுத்தொண்டன்மனைவி.

5. துப்பரையுமரகதத்தின் கொழுந்தரையுமொன்றாகத் துலங்குமெய்யா, செப்பரிய புலியதனைத் தரிக்குமுத்தராபதியிற் சிவனேநீதான், அப்பரையும்விழுங்கியொரு பிள்ளையுந்தின்றாற்றாமலே போவின்னும், கப்பரையுங் கையுமாய்ப் புறப்பட்டாய் நல்லதிருக்காட்சிதானே.

இ-ள். துப்பரையும்-பவளத்தையும், மரகதத்தின் கொழுந்தரையும்-மரகதத்தின் கொழுந்தையும், ஒன்றுஆக-ஒன்றாகும்படி, துலங்கும்-விளங்குகின்ற, மெய்யா-திருமேனியையுடையவனே, செப்பு அரியபுலி அதனை

தரிக்கும்-சொல்லுதற்கரிய புலித்தோலை யணிகின்ற உத்தராபதியில் சிவனே-உத்தராபதியி லெழுந்தருளிய சிவபெருமானே, அப்பரையும் விழுங்கி-அப்பர்சுவாமியையும் விழுங்கி ஒருபிள்ளையும் தின்று - ஒரு பிள்ளையையும் தின்று, ஆற்றாமல்-பசியைச் சகிக்காமல், ஐயோ - அந்தோ, இன்னும் கப்பரையும் கையுமாய் புறப்பட்டாய்-இன்னும் கப்பரையும் கையுமாய் வெளிப்பட்டாய், நல்லதிருக்காட்சிதானே-(இது) நல்ல தரிசநந்தான். எ-று.

"செழுந்தமிழப்பரைச் சிவலிங்கமாகி. விழுங்கிய" என்றார் மேலோரும் ஒருபிள்ளையென்றது சிறுத்தொண்டன் மகனாகிய சீராளனை.

6. அடிபட்டீர்கல்லாலுமெறிபட்டீரத்தனைக்கு மாளாயந்தப், படிபட்டும் போதாம லுதைபட்டீ ரிப்படியும் படுவாருண்டோ,முடிபட்டசடையீர் கழுக்குன்றீர் முதற்கோணன் முட்டக்கோணல், இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவாவும்மைத் தெய்வ மென்னலாமே.

இ-ள். அத்தனைக்கும் ஆளாய் - அவ்வளவு பாடுகளுக்கும் உட்பட்டு, அடிபட்டீர்-பிரம்படிபட்டீர், கல்லாலும் எறிபட்டீர்-கல்லினாலும் எறியப்பட்டீர், அந்தப்படி பட்டும் போதாமல் உதைபட்டீர் - அந்தவிதமாய் அடிபட்டதும்போதாமல் உதையும்பட்டீர், இப்படியும்படுவார் உண்டோ-இப்படியும் படுவாருளரோ, முடிபட்ட சடையுடையீர்-முடியோடுகூடிய சடையுடையவரே, கழுக்குன்றீர் - திருக்கழுக்குன்றத்தையுடையவரே, முதல் கோணல் முட்டக்கோணல்-முதலில் கோணலுண்டானால் முழுதும் கோணலாகவே முடியும், இடிபட்டும்பொறுத்துஇருந்தீர்-இடிபட்டும் பொறுத்திருந்தீர், சிவசிவா - சிவனே சிவனே, உம்மை தெய்வமென்னல் ஆமோ-உம்மைத்தெய்வமென்று சொல்லுதல் பொருந்துமோ. எ-று.

பிரம்படிபட்டது - வைகை யாற்றங்கரையில் பிட்டுக்கு மண்சுமக்க வந்தபோது. கல்லாலெறிபட்டது - சாக்கிய நாயனாரால். உதைபட்டது-கண்ணப்ப நாயனாரால். முதலில் ஒருவனால் அடிபட்டுப் பின்பலராலும் அடியும் உதையும்பட்டதனால் "முதல்கோணல்முட்டக்கோணல்"என்றார்.

7. செல்லாரும்பொழில்புடைசூழ் புலியூரம்பலவாணதேவா வும்மைக், கல்லாலும் வில்லாலுஞ்செருப்பாலும்பிரம்பாலுங் கடிந்துசாடும், எல்லாருநல்லவரென் றெண்ணியரு ளீந்ததென்ன விகழ்ச்சியொன்றும்,சொல்லாமன் மலரால்விட் டெறிந்தவனைக் காய்ந்ததென்னசொல்லுவீரே.

இ-ள். செல்ஆரும் - மேகங்களில் படிகின்ற, பொழில் - சோலைகள் புடைசூழ்-பக்கங்களில் சூழப்பெற்ற, புலியூர் அம்பலவாணதேவா-புலியூரிலுள்ள பொற்சபையில் வாழ்பவனாகிய தேவனே, உம்மை-தேவரீரை, கல்லாலும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும்-கல்முதலியவற்றால், கடிந்

துசாடும், கோவித்து அடித்த, எல்லாரும்நல்லவர் என்று எண்ணி - யாவரும் நல்லவர் என்று நினைத்து, அருள் ஈந்தது என்ன-அருள்செய்த தென்ன, இகழ்ச்சி-பழிமொழிகள், ஒன்றும் சொல்லாமல்-சிறிதும்சொல்லாமல்; மலரால் விட்டெறிந்தவனை - புஷ்பங்களைக்கொண்டெறிந்தவனை, காய்ந்தது என்ன-எரித்துவிட்டதென்ன, சொல்லுவீர் - சொல்லுவீராக. எ-று.

வில்லா லடித்தவன்-அருச்சுனன்.

8. நல்லாளையிடமருவுந் தியாகையா வுமதிடத்தி னியாயங்காணோம், கல்லாலேயெறிந்தோர்க்குஞ் செருப்படியாலுதைத்தோர்க்குங் கடிந்துபோரில், வில்லாலேயடித்தோர்க்குங் கொடுத்தீரேயல்லாமல் விழிநீர்சோர, எல்லாமுன்செயலென்றே யிருப்போருக்கியாதேனு மீகிலீரே.

இ-ள். நல்லாளை-உமாதேவியை, இடம்மருவும்-இடதுபாகத்திற்பொருந்திய, தியாகையா-தியாகராயரே, உமது இடத்தில்-உம்மிடத்தில், நியாயம்காணோம்-நீதியைக்கண்டிலோம், கல்லாலே எறிந்தோர்க்கும் - சாக்கியநாயனருக்கும், செருப்பு அடியால் செருப்புக்காலால், உதைத்தோர்க்கும்-உதைத்த கண்ணப்பருக்கும், கடிந்து-கோவித்து, போரில் - யுத்தத்தில், வில்லாலே அடித்தோர்க்கும், அருச்சுனனுக்கும், கொடுத்தீரேயல்லாமல்-அவர்கள் விரும்பினவற்றை கொடுத்தீரே யல்லாமல், விழிநீர்சோர - கண்ணீர் ஒழுக, எல்லாம் உன்செயல் என்றே இருப்போருக்கு-யாவும் உன்செயலென்று இருப்பவர்களுக்கு, யாதேனும்-யாதாயினும், ஈகிலீர்-கொடுக்கிலீர்—, ஏ-இதென்ன அநியாயம். எ-று.

9. பண்காணுந் தமிழ்ப்புலவீ ரினத்தோடே யினஞ்சேரும்பரிசேபோலத், தண்காவி மலர்த்தடஞ்சூழ் காவிரிநாட் டொருபுதுமைசாற்றக்கேளீர், கண்காண நரையான்மேல் வெண்காடை வீற்றிருக்கக்கண்டோமிந்த, வெண்காடையிடப்புறத்தே பச்செயன்னங் கலந்திருக்கும் விதங்கண்டோமே.

இ-ள். பண்காணும் தமிழ்ப்புலவீர்-பண்ணைக்கொண்ட தமிழையாராய்ந்த புலவர்களே, இனத்தோடே இனம்சேரும் பரிசேபோல-சாதியோடு சாதிசேருந் தன்மையேபோல, தண்காவி மலர்த்தடம்சூழ்-குளிர்ச்சியாகிய குவளை மலர்த்தடாகங்கள் சூழ்ந்த, காவிரிநாட்டு - காவிரிநதி பாய்கின்ற சோழநாட்டில், ஒருபுதுமை-ஒருபுதுமையுண்டு, சாற்றக்கேளீர் - அதைச் சொல்லக்கேளுங்கள், கண்காண-பிரத்தியக்ஷமாய்,நரையான்மேல்-காகத்தின்மீது, வெண்காடை வீற்றிருக்கக்கண்டோம்-வெள்ளியகாடை வீற்றிருக்கப்பார்த்தோம், இந்த வெண்காடை இடப்புறத்தே - இந்தவெள்ளியகாடையின் இடதுபக்கத்தில், பச்சை அன்னம் கலந்து இருக்கும் விதம் கண்டோம்-பச்சையன்னம் சேர்ந்திருக்கப்பார்த்தோம். எ-று.

நரை-மீன்குத்தி எனினுமாம். நரையான்-(நரைஆன்)வெள்ளை எருது. வெண்காடை - வெண்காடு ஐ, திருவெண் காட்டிலுள்ள சிவபெருமான். பச்சை அன்னம்-பச்சை நிறமுள்ள அன்னம்போல்பவளாகிய உமாதேவி.

10. இந்திரன்கலையா யென்மருங்கிருந்தா னக்கினியுதரம் விட்டகலான், எமனெனைக்கருதா னரனெனக்கருதி நிருதிவந்தென்னை யென்செய்வான், அந்தமாம் வருண னிருகண்விட்டகலா னகத்தினின் மக்களும்யானும், அநிலமதாக மமுதினைக் கொள்வோம் யாரெதிரெமக்குளாருலகில், சந்ததமிந்தவரிசையைப்பெற்றுத் தரித்திர ராசனைவணங்கித், தலைசெயுமெம்மை நிலைசெய்சற்கீர்த்திச்சாளுவ கோப்பையனுதவும், மந்தரபுயத்தான் றிப்பையராயன் மகிழ்வொடுவிலையில்லாவன்னோன், வாக்கினாற்குபேர னாக்கினனவனே மாசிலீசானபூபதியே.

இ-ள். இந்திரன்-தேவேந்திரன், கலைஆய் - ஒருகூறாகி, என்மருங்கு இருந்தான்-என்னிடத்திலிருந்தான், அக்கினி - தீக்கடவுள், உதரம்விட்டு அகலான்-வயிற்றைவிட்டு நீங்கான், என்னை அரன் எனக்கருதி - என்னைச் சிவனென்று நினைத்து, எமன்கருதான் - எமன் நினைக்கமாட்டான், நிருதி வந்து என்னை என்செய்வான் - நிருதியானவன்வந்து என்னையாது செய்யமாட்டுவான், அந்தம் ஆம் வருணன் - அழகாகியவருணன், இருகண்விட்டு அகலான்-இரண்டுகண்களையும்விட்டு நீங்கமாட்டான், அகத்தினில் - வீட்டில், மக்களும் யானும் அநிலமது ஆகும் அமுதினைக் கொள்வோம்-காற்றாகிய அமிர்தத்தையுட்கொள்வோம், உலகில் - உலகத்தில், எமக்கு எதிர்-எமக்கு நிகராவார், யார் உளார்-யாரிருக்கின்றார்கள், சந்ததம்-எப்பொழுதும், இந்த வரிசையைப்பெற்று-இந்தமுறைமையைப்பெற்று, தரித்திராசனை வணங்கி-தரித்திராஜனைத்தொழுது, தலைசெயும் எம்மை-வாழ்ந்து தழைக்கின்ற எங்களை, நிலைசெய்-நிலைப்படுத்திய, சற்கீர்த்தி-நல்ல கீர்த்தியையுடைய, சாளுவகோப்பையன் உதவும்-சாளுவகோப்பையன் பெற்ற, மந்தரபுயத்தான்-மந்தரமலைபோலும் தோள்களையுடையவனாகிய, திப்பையராயன்-திப்பையராயனென்பவன், மகிழ்வொடு-சந்தோஷத்துடன்,அன்னோன்வாக்கினால்-அவனது சொல்லினால், குபேரன் ஆக்கினன்-குபேரனாகப்பண்ணினான், அவனேமாசு இல்-அவனே குற்றமில்லாத, ஈசானபூபதி-ஈசானதிக்குக்கதிபதியாவன். எ-று.

தான் உடுத்த ஆடைகந்தையாய்ப் பலதொளைகள் உள்ளது என்பது தோன்ற, ஆயிரங்கண்களையுடைய இந்திரனைக்கலையாக உவமித்தார்.கலை-வஸ்திரம் (வாசம்). மருங்கு-பக்கம். அக்கினி உதரம்விட்டு அகலான்-பசி வயிற்றை விட்டொழியவில்லை. அரன்-வறியன். வருணன் இருகண்விட்டு அகலான்-நீர் இருகண்ணை விட்டொழியவில்லை. அநிலமதாகும் அமுது-வாயு இதில் இந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலர்களும் என்வசமாயிருக்

கிளூர்களாதலால் எனக்கு நிகராவார் உலகத்தில்ஒருவருமில்லையென்றும், பசிமுதலியனவருத்துகின்றன என்றும், இருபொருள்தோன்றுதல்காண்க.

11. வண்டுகிண்டியதொங்கலோதிகுணக்கெழுந்திடுமநிலமோ
மன்னுநூபுரமோபயோதரமூறுவானவர்கணிகையோ
அண்டர்பூபதிவனிதையோமுகமமுதவாயிதழ்தும்பியோ
அரிகையாயுதமோபிறந்திடமன்னமென்னவுலாவுவீர்
கொண்டநண்புமுதாரமுந்தவறாதகோகனகானனன்
குத்திபல்லவராயமேருகுணாளதிப்பையன்வரையின்மேல்
துண்டவெண்பிறைவேணிகைச்சிலைநாணெனப்புகலாவிடின்
தூரமோவதிபாரமோவுயர்சேரனுக்கொருதொங்கலே.

இ-ள். கொண்டநண்பும் உதாரமும்-கொண்டநட்பிலும் உதாரகுணத்திலும், தவறாத - பிழைபடாத, கோகனக ஆனனன் - தாமரைமலர்போலும் முகத்தையுடையவனும், குத்தி பல்லவராயன்-குத்திபல்லவராயனும், மேருகுணாளன்-மேருமலைபோல அசையாத பெருங்குணத்தை யுடையவனுமாகிய, திப்பையன் வரையின்மேல்-திப்பையனது மலையின்மீது, அன்னம் என்ன உலாவுவீர் - அன்னம்போல உலாவுகின்ற மாதரசே, (உமது) வண்டுகிண்டிய தொங்கல் ஓதி-வண்டுகள்கிளறுகின்ற பூமாலையையணிந்த கூந்தலானது, குணக்கு எழுந்திடும் அநிலமோ-கிழக்கேயுண்டாய் வருகிற காற்றோ, பயோதரம்-தநங்கள், மன்னும் நூபுரமோ-நிலைபெற்ற சிலம்போ ஊறுவானவர் கணிகையோ-தொடை தேவவேசையோ, முகம் அண்டர் பூபதிவனிதையோ - முகமானது தேவராஜனாகிய இந்திரன் மனைவியோ, அமுதவாய் இதழ் தும்பியோ-அமிர்தமூறுகின்ற வாயிதழானது வண்டோ, பிறந்திடம்-பிறந்த இடமானது, அரிகை ஆயுதமோ-திருமாலின்கையிலுள்ள ஆயுதமோ, துண்டம்-கண்டமாகிய வெள்பிறை-வெள்ளிய பிறையைத்தரித்த, வேணி-சடையையுடைய பரமசிவனது, கைசிலைநாண் என புகலாவிடின் - கைவில்லின் நாணென்று நீர் சொல்லாவிடின், உயர் சேரனுக்கு ஒருதொங்கல்-உயர்ந்தசேரனது ஒப்பற்ற மாலையானது, தூரமோ-எனக்கு தூரமாயிருப்பதோ, அதிபாரமோ-பெருஞ்சுமையோ. எ-று.

குணக்கெழுந்திடுமனிலம்-கீழ்காற்று, இதற்குக்கொண்டல் என்பது பரியாயம், கொண்டல் மேகத்தையு முணர்த்துமாதலால் உமது கூந்தலானது மேகமோ என்றபடி சிலம்பு - மலையையுமுணர்த்து மாதலால் உமது தனம்மலையோ என்றபடி. வானவர்கணிகை - அரம்பை, இதுவாழையையுணர்த்துமாதலால் உமது தொடைவாழைத்தண்டோஎன்றபடி அண்டர் பூபதி வனிதை-சசி, இது சந்திரனையும் உணர்த்துமாதலால் உமதுமுகம் பூர்ணசந்திரனோ என்றபடி தும்பி-வண்டு, இது தேனுக்கும் பரியாயமொழியாதலால் உமது இதழ் தேனோ என்றபடி அரிகையாயுதம் - சக்கரம்,

(ஆழி): இதுகடலையுமுணர்த்து மாதலால் உமதுபிறப்பிடம் திருப்பாற்கடலோ என்றபடி. துண்டவெண்பிறை வேணிகைச் சிலைநாண்-ஆதிசேஷன்; இதுவாசுகியையு முணர்த்து மாதலால். வாசுகி என்று நீர்சொல்லாவிடின் என்றபடி. உயர்சேரனுக்கொரு தொங்கல் - பனம்பூமாலை. தாரமோ வதி பாரமோ என்றது-இந்தப்பனைமடலாற் செய்த குதிரையை நானூர்ந்தாயினும் உன்னைப்பெறுவேன். (மடலேறுவேன்) என்றபடி.

12. சந்திரனுக் குடலூனந் தனதனுக்கோர் கண்ணூனந் தருவினீழல், இந்திரற்கோ பகக்குறியா மியமனுக்கோ புழுக்காலா மிரவியீன்ற, மைந்தனுக்கோ கான்முடமாம் வனசனுக்கோர் தலைகுறையாம் வரலாறீதேல், பந்தமுளமானிடரை விதிவிடுமோ வாலவாய்ப் பதியுளானே.

இ-ள். ஆலவாய் பதி உள்ளானே-திருவாலவாய் என்னுந் திருப்பதியிலெழுந்தருளி யிருப்பவனே, சந்திரனுக்கு- சந்திரனுக்கு, உடல் ஊனம் - உடற்பழுது, தனதனுக்கு ஓர்கண் ஊனம் - குபேரனுக்கு ஒருகண்பழுது, தருவின் நீழல் இந்திரற்கோபகக்குறி ஆம் - கற்பகத்தருவின் நிழலிலிருக்கிற இந்திரனுக்கோ (உடம்புமுழுதும்) யோனிக்குறி, இயமனுக்கோ புழுக்கால் ஆம், யமனுக்கோ புழுத்தகாலுண்டு, இரவி ஈன்ற மைந்தனுக்கோ கால் முடம் ஆம்-சூரியன்பெற்ற புதல்வனுக்கோ கால்முடமாகும், வனசனுக்கு ஓர் தலைகுறை ஆம்-தாமரைமலரை யாசநமாகவுடைய பிரமனுக்கு ஒருதலை குறையாகும், வரலாறு ஈதேல் - வரலாறு இதுவாயின், பந்தம் உளமானுடரை-பாசக்கட்டுள்ள மனிதரை, விதிவிடுமோ - ஊழ்வினையானது விடுமோ. எ-று.

உடலூனம் - களங்கமும் வளைவும்; கண்ணூனம் - குருட்டுத்தன்மை; இரவியீன்ற மைந்தன்-சனி.

சொக்கநாதப்புலவர் பல்லக்கின்மேல் ஆடம்பரத்தோடு வருவதைக்
கண்டு, தட்டானாகிய அரிகரபுத்திரன் என்னும் வித்வான்,
மனம்பொறாது அவரைப் பலகேள்விகள்கேட்டு அவ
மானஞ்செய்து, அவர்பல்லக்குக்கொம்பை
முறித்தெறிந்தபோது பாடியது.

13. அட்டாவதானமுந்தொல்காப்பியமுமகப்பொருளும்
தொட்டாதிதொட்டப்ரபந்தமெல்லாநம்மைச்சொல்லச்சொல்
ஒட்டாரங்கட்டிநம்பல்லக்குக்கொம்பையொடித்தெறிந்த [வி
தட்டாரப்பையலரிகரபுத்ரனைச்சண்ணினனே.

இ-ள். அட்டாவதானமும்-அஷ்டாவதானமும், தொல்காப்பியமும்-தொல்காப்பிய மென்னும் இலக்கணமும், அகப்பொருளும் - அகப்பொருளிலக்கணமும், தொட்டாதிதொட்ட பிரபந்தம் எல்லாம்-மேலான நூல்களெல்லாம், நம்மை சொல்லச்சொல்லி - நம்மைச் சொல்லும்படி நிர்ப்பந்

தித்து, ஒட்டாரம்கட்டி-பிடிவாதம்பண்ணி, நம்பல்லக்குக்கொம்பை ஒடித்தெறிந்த; நமதுபல்லக்குக் கொம்பை முறித்தெரிந்த; தட்டாரப்பையலாகிய; அரிகரபுத்திரனைசண்ணினன்-அரிகரபுத்ரனைச் சாடினேன்.

14. பண்டனைப்பண்டனையோதுபெம்மானைப்பனிவரைக்கோ
தண்டனைத்தண்டனைசெய்யுமுத்தண்டனைத்தண்டனைமூ
தண்டனையண்டர்தொழுந்திருமாற்பேறமர்ந்தமணி
கண்டனைக்கண்டனையாயினெஞ்சேமுத்திகண்டனையே.

இ-ள். நெஞ்சே-மனமே; பண்டனை - பழையோனை; பண்தனை ஓதுபெம்மானை-பண்ணைப்பாடுகின்ற பெருமானை; பனிவரைகோதண்டனை - மேருமலையாகிய வில்லையுடையவனை; தண்டனைசெய்யும் உத்தண்டனை-(துஷ்டர்களை) சிக்ஷைசெய்கின்ற உக்கிரமூர்த்தியை, தண்டனை-கதையையுடையவனை, மூதண்டனை-பழமையாகிய அண்டங்களையுடையவனை;அண்டர்தொழும்-தேவர்கள்வணங்குகின்ற; திருமாற்பேறு அமர்ந்த-திருமாற்பேறு என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருக்கிற; மணிகண்டனை - நீலமணிபோலும்கண்டத்தை யுடையவனை; கண்டனையாயின்-கண்டாயானால் முத்திகண்டனை-மோக்ஷத்தைக் கண்டவனானாய். எ-று.

15. துளைபடுமாமரமோரேழுமெய்தவன்றாதுகவி
உளைபடுவாரிதியொன்றேகடந்ததொளிர்தாள
வளைபடுவாவிமணவைமன்கூத்தன்வகுத்தகவி
தளைபடுகாலுடனேகடலேழையுந்தாண்டினதே.

இ-ள். துளைபடும் மாமரம் ஓர் எழும் எய்தவன்-தொளையாதற் குரிய பெரிய மராமரங்கள் ஓரேழையும் அம்பெய்து தொளைத்தவனாகிய ஸ்ரீராமபிரானது; ஆதுகவி-ஆதாகியகவி; உளைபடு - சேறுபொருந்திய; வாரிதி ஒன்றேகடந்தது-ஒருகடலை மாத்திரம் தாண்டினது; ஒளிர்தாள வளைபடு வாவி-பிரகாசிக்கிற முத்துக்களைப்பெறுகின்ற சங்கம்பொருந்திய தடாகங்கள் சூழ்ந்த; மணவை-மணவைநகரத்துக்கு, மண் - தலைவனாகிய; கூத்தன்-ஒட்டக்கூத்தன்; வகுத்த-செய்த; கவி - கவியானது; தளைபடுகாலுடனே-தளைபொருந்திய காலோடு; கடல் எழையும் தாண்டினது-எழுகடலையும். தாண்டினது. எ-று.

கவியிரண்டில் முன்னது வாநரம் (அநுமான்), பின்னது செய்யுள் தளை பிணிப்பு; கால்-செய்யுளடி, ஒட்டக்கூத்தருடைய கவியின்புகழ் எழுகடலையும் கடந்துசென்று விளங்குகின்றது என்பது கருத்து.

16. துங்காதராதலமெல்லாமொருமிக்கத்துய்த்தநர
சிங்காதராதரந்தானறிந்தேநல்கச்சேலம்வந்த
கெங்காதராநின்புகழ்கேட்டசைப்பன்கிரீடமென்றே
வெங்காதராவுக்குச்செய்தானிலைமலர்வேதத்தனே.

இ-ள். துங்கா-பரிசுத்தனே; தராதலம் எல்லாம் - பூமிமுழுதும்; ஒரு மிக்கத்துய்த்த-ஒருமிக்கவிழுங்கின; நரசிங்கா-நரசிங்கனே; தாரதரம் அறிந்து-(வருவோருடைய) தாரதரங்களை யாராய்ந்துணர்ந்து; நல்க - அவரவர்க்குத் தகுதியாக கொடுக்க; சேலம்வந்த-சேலத்தில் அவதரித்த; கெங்காதரா-கெங்காதரனே; நின்புகழ்கேட்டு-உன்கீர்த்தியைக்கேட்டு; கிரீடம் அசைப்பன் என்றே-மகுடத்தை யசைப்பனென்று நினைத்தே; மலர்வேதத்தன்-தாமரைமலரையுடைய பிரமன்; அராவுக்கு - ஆதிசேடனுக்கு; வெம்காதுசெய்தான் இல்லை-கொடிய காதைப்படைத்தானில்லை. எ-று.

ஆதிசேஷனுக்கு காது உண்டாயின்; அவன்புகழ்கேட்டு ஆயிரம்முடிகளையும் அசைக்கவருமெனக்கருதிக் காதைப்படைக்காது விட்டனன். புகழைவியந்தமை அறிக.

17. புரசைவடமலைப்பாவிருட்கயம்பூண்டுகொண்டு
முரசைவடமலையப்பாலுஞ்செல்லமுழக்கஞ்செய்தோய்
சிரசைவடமலையப்பாம்பில்வைத்துத்திருக்கண்வளர்
இரசைவடமலையப்பாவிப்பாருக்கொரிந்திரனே.

இ-ள். புரசைவடம் அலைய - கழுத்திடுகயிறாகிய வடமசைய; பாவு இருள்; பரவிய இருளைநிகர்த்த; கயம்பூண்டுகொண்டு - யானையை யூர்ந்துகொண்டு; வடமலை அப்பாலும்செல்ல - மேருமலைக் கப்புறத்திலுஞ் செல்லும்படி; முரசை-பேரிகையை; முழக்கம் செய்தோய் - முழக்கினவனே, வடம் அலை அப்பாம்பில் சிரசைவைத்து-ஆலிலையின்மீதும் திருப்பாற்கடலிலும் அந்த ஆதிசேடன்மீதும் சிரத்தைவைத்து; திருக்கண்வளர்கின்ற; இரசை வடமலையப்பா-இரசையென்னும் ஊரில்வாழ்கின்ற வடமலையப்பனே; இப்பாருக்கு ஓர் இந்திரனே-இந்தப்பூமிக்கு ஒரு இந்திரனாயிருப்பவனே. எ-று.

அரசர்காத்தற்றொழில் பூண்டமைபற்றித் திருமாலாகக்கூறுதல் மரபாதலால்; இங்கு வடமலையப்பனை "வடமலையப்பாம்பில் வைத்துத் திருக்கண்வளர்" என்றார்.

18. சோதிச்சவரிவிழிக்கோரவில்லை தூயகுழல்
கோதிச்சவரிமுடிக்கறியாள்கொண்டகோலமென்னோ
நீதிச்சவரிப்பெருமாளென்றேதினைந்துருகப்
போதிச்சவரிவட்காரோவறிகிலன்பூங்கொடியே.

இ-ள். சோதிச்ச-(பிரமனால்) ஆராய்ந்து படைக்கப்பட்ட; வரிவிழிக்கோ-இரேகைகளையுடைய கண்களுக்கோ; கரவு இல்லை-வஞ்சனையுண்டாகவில்லை; தூயகுழல்கோதி-பரிசுத்தமாகிய கூந்தலைவாரி, சவரிமுடிக்க அறியாள்-கவரிமாமயிர்க் கற்றையைமுடித்துக்கொள்ளவும் அறிந்திலள்; (இப்படியிருக்க) கொண்டகோலம் என்னோ-(இவள்) கொண்டவேஷம்என்னை

யோ-பூங்கொடியே-பூங்கொடிபோல்பவளாகிய தோழியே, நீதி - நீதியை யுடைய, சவரிப்பெருமாள் என்று - சவரி நாராயணனேயென்று, ஓதி- துதித்து, (அவனை) நினைந்து உருக-நினைந்துருகும்படி - இவட்கு போதிச் சவர் ஆரோ-இவளுக்குப் போதித்தவர்யாரோ அறிகிலன் - அறிகிலேன்.

19. சொல்லுக்கினியகழுக்குன்றரேயுமைச்சொல்லவென்றால்
அல்லற்பிழைப்புப்பிழைத்துவிட்டீர்முப்புராதியர்மேல்
வில்லைக்குனித்தெய்யமாட்டாமனீரிந்தவேளையிலே
பல்லைத்திறந்துவிட்டீரிதுவோநும்படைத்தொழிலே.

இ-ள். சொல்லுக்கு இனிய கழுக்குன்றரே - (அன்பர்) துதித்தற்கு இனிமையாயிருக்கும் திருக்கழுக்குன்றரே, உமைசொல்ல என்றால் - உம் மைப் புகழ்ந்து சொல்லவென்றாலோ, அல்லல் பிழைப்பு பிழைத்துவிட் டீர்-துன்பவாழ்க்கை வாழ்ந்துவிட்டீர்-முப்புராதியர்மேல் - திரிபுராதியர் மீது, வில்லை குனித்து எய்யமாட்டாமல்-வில்லைவளைத்து அம்பெய்யமாட் டாமல், நீர்-நீர், அந்தவேளையிலே-அந்தச்சமயத்தில், பல்லைத்திறந்து விட் டீர் - பல்லைக்காட்டினீர், நும் படைத்தொழில் இதுவோ-உமது போர்த் தொழில் இதுதானோ. எ-று.

பல்லைத் திறந்துவிட்டீர் என்றது, சிரித்துவிட்டீர் என்றபடி.

20. துயிலையிலேயிடர்துன்னேயிலேதெவ்வர்சூழையிலே
பயிலையிலேயிருட்பாதியிலேபசும்பாலனத்தை
அயிலையிலேவயதாகையிலேநமக்கார்துணைதான்
மயிலையிலேவளர்சிங்காரவேலர்மயிலையிலே.

இ-ள். மயில் அயில்வளர் சிங்காரவேலர் மயிலையிலே-மயிலையும் கூர் மைவளர்கின்ற அழகியவேலையு முடையவரது திருமயிலையில், துயிலையி லே-நித்திரை செய்யும்போதும், இடர்துன்னையிலே - துன்பம் மிகும்போ தும், தெவ்வர்சூழையிலே - பகைவர்வளைந்து கொள்ளும்போதும், பயிலை யிலே-சஞ்சரிக்கும்போதும், இருள்பாதியிலே - பாதியிரவிலும், பசுபால் அன்னத்தை அயிலையிலே-பசும்பாற்சோற்றை உண்ணும்போதும், வயது ஆகையிலே - ஆயுள்முடியும்போதும், நமக்கு ஆர் துணை - நமக்கு யாவர் துணையாவர். எ-று.

மயிலைச் சிங்காரவேலவரே எப்போதும் நமக்குத்துணை என்றபடி

21. போதாசிவகுருநாதாகலவைபுழுகொடுசெவ்
வாதார்ந்தகொங்கைக்குறமாதுவள்ளிக்குவாய்த்திடுமின்
பாதாருகற்செற்றவேல்விடுத்தாவென்பகையையறுக்
காதாமனமிரங்காதாசிவகிரிக்காங்கெயனே,

இ-ள். போதா-ஞானத்தை யுடையவனே, சிவகுருநாதா-சிவனுக்குத் தேசி கோத்தமனே, கலவைபுழுகொடு சவ்வாது ஆர்ந்த-கலவைச் சந்தநமும் புனுகுசவ்வாதும் பூசப்பட்ட, கொங்கை - தனங்களையுடைய, குறமாது வள்ளிக்கு-குறப்பெண்ணாகிய வள்ளிநாயகிக்கு,வாய்த்திடும்-இடத்த, இன்பா-சுகானுபவத்துக் குரியவனே, தாருகன் செற்றவேல் விடுத்தால்-தாருகனைக்கொன்ற வேலாயுதத்தைப் பிரயோகித்தால், என்பகையை அறுக்காதா-என் பிறவிக் கேதுவாகிய ஐம்புலப்பகையைச் சேதிக்காதா மனம் இரங்காதா-உனக்குமன மிரங்கமாட்டாதா, சிவகிரி - சிவகிரியிலெழுந்தருளிய, காங்கெயனே-காங்கேயனே. எ-று.

22. காப்பிட்டபிள்ளைக்கறிக்கிச்சைப்பட்டுவையைக்கரைமேல்
மாப்பிட்டுவந்தமயிலேசனேமலையானநின்னைக்
கூப்பிட்டுநின்றுகுனிந்தொருகோலக்கொம்பாற்றடவிப்
பூப்பட்டகண்ணிச்சயமாக்கினான்மைப்புயல்வண்ணனே.

இ-ள். காப்பு இட்ட-(கையில்) காப்புத்தரித்த, பிள்ளைக்கறிக்கு இச்சைப்பட்டு-பிள்ளைக்கறிக்கு ஆசைப்பட்டு, வையைக் கரைமேல் - வையையாற்றின் கரைமீது, மாப்பிட்டு-மாவினாற்செய்தபிட்டை, உவந்த-விரும்பியுண்ட, மயிலேசனே-திருமயிலையீசனே, மைபுயல்வண்ணன்-கரியமேகம் போலும் நிறத்தையுடையவனாகிய திருமால், மலை ஆனநின்னை - மலையுருவாய் நின்ற உன்னை, கூப்பிட்டுநின்று-கூப்பிட்டு நின்று, குனிந்து - குனிந்து, ஒரு கோலக்கொம்பால் தடவி-ஒரு அழகிய கொம்பினால் தடவி, பூபட்டகண் - (தனக்கு) பூபட்டகண் உண்டென்பதை நிச்சயம்ஆக்கினான்-உண்மையாக்கினான், எ-று.

கூப்பிட்டு-மண்ணைப்பிளந்து, கோலக்கொம்பால் - பன்றிக்கொம்பினால், பூப்பட்டகண்-தாமரைமலர்போலுங்கண்.

23. உம்பரைவாழ்வித்தநஞ்சங்கண்டோமொண்புரமெரித்த
அம்பரையேற்றியசூலங்கண்டோமருளுங்குறைவில்
நம்பரைபாகமுங்கண்டோமவர்திருநாமஞ்சொல்லா [ளே.
வம்பரையுங்கண்ணிற்கண்டோம்வெண்காடனைவாழ்த்துங்க

இ-ள். உம்பரை வாழ்வித்த - தேவர்களை வாழச்செய்த, நஞ்சம்கண்டோம் விஷத்தைப் பார்த்தோம், ஒள்புரம் எரித்த - அழகிய முப்புரத்தையெரித்த, அம்பரை-அம்பை, ஏற்றிய-ஏற்றின, சூலம்கண்டோம் - சூலத்தைப்பார்த்தோம், அருளும் குறைவு இல்-அருளினாலும்குறைவு இல்லாத, நம்பரைபாகமும் கண்டோம்-நமது உமாதேவிபாகத்தையும் பார்த்தோம், அவர் திருநாமம் சொல்லா-அவரது திருநாமத்தை உச்சரியாத, வம்பரையும்-வீணரையும், கண்ணில் கண்டோம்-கண்ணில் பார்த்தோம், வெண்காடனை வாழ்த்துங்கள்-திருவெண்காடனைப் புகழுங்கள். எ-று.

புரமெரித்த அம்பர் - திருமால். அம்பு-அம்பர் எனப்போலியாயிற்று.

24. மாடேறுதாளுமதியேறுசென்னியுமாமலரோன்
ஓடேறுகையுமுடையார்தமக்கிடமோங்கியநெற்
சூடேறுசங்கஞ்சொரிமுத்தைமுட்டையென்றேகமலக்
காடேறுமன்னஞ்சிறகாலணைக்குங்கழுக்குன்றமே.

இ-ள். மாடு ஏறுதாளும் - இடபத்தின்மீதேறுகின்ற திருவடியையும், மதி ஏறு சென்னியும்-பிறையேறிய சிரசையும், மாமலரோன் ஓடு ஏறுகையும் - பெருமையுள்ள பிரமகபாலமேறிய கையையும், உடையார்தமக்கு-உடையவராகிய சிவபெருமானுக்கு, இடம் - இடமாயிருப்பது, ஓங்கிய-உயர்ந்த, நெல்சூடு ஏறுசங்கம்-நெற்போர்மீதேறிய சங்குகள், சொரிமுத்தை-ஈன்றமுத்தை, முட்டை என்றே-தமது முட்டையென்று நினைத்தே, கமலக்காடு ஏறும் அன்னம்-தாமரை மலர்க்காட்டி லேறிய அன்னங்கள், சிறகால் அணைக்கும்-தமது சிறகுகளால் அணைத்தற் கிடமாகிய, கழுக்குன்றமே-திருக்கழுக்குன்றமேயாம். எ-று.

25. நெருப்புக்கறுக்கச்சிவப்புள்ளமேனியர்நீள்கனகப் [ன்
பொருப்பைக்குனித்துப் புரமெரித்தார்க்கிடம்போர்க்களிற்றி
மருப்புக்கண்முத்தும்வளர்கழைமுத்தும்வளைக்கண்முத்தும்
கருப்புக்கண்முத்துமதிக்குலங்காட்டுங்கழுக்குன்றமே.

இ-ள். நெருப்பு கறுக்க-நெருப்புக் கறுக்கும்படியாகிய, சிவப்புஉள்ள மேனியர்-செந்நிறமுள்ள திருமேனியையுடையவரும், நீள் கனகப்பொருப்பைக் குனித்து - நீண்ட பொன்மலையை (வில்லாக) வளைத்து, புரம் எரித்தார்க்கு-முப்புரத்தை எரித்தவருமாகிய சிவபெருமானுக்கு, இடம் - இடமாயிருப்பது, போர்களிற்றின் மருப்பு கண் முத்தும் - போர்த்தொழிலையுடைய யானையின் கொம்பிலுண்டாகிய முத்துகளும், வளர் கழைமுத்தும்-உயர்ந்த மூங்கிலிலுண்டாகிய முத்துகளும், வளைக்கண்முத்தும் - சங்கிலுண்டாகிய முத்துகளும், கருப்பக்கண் முத்தும் - கரும்பினிடத்துண்டாகிய முத்துகளும், மதிக்குலம் காட்டும் - சந்திரருடைய கூட்டத்தன்மையைக்காட்டுகின்ற, கழுக்குன்றமே-திருக்கழுக்குன்றமேயாம். எ-று.

26. ஆலங்கிடக்குமனத்தார்க்கொருநன்றியம்பிலிட்ட
கோலங்கிடக்குங்கிடக்குங்கண்டாய்குறையாதகுண
சீலங்கிடக்குமனத்தார்க்கொருநன்றிசெய்யில்வெகு
காலங்கிடக்குங்கிடக்குங்கண்டாய்செந்திலகாத்தவனே.

இ-ள். ஆலம்கிடக்கும் மனத்தார்க்கு-விஷந்தங்கிய மனத்தையுடையவர்க்கு, ஒருநன்றி செய்யில் - ஒருதவி செய்தால், (அது) அம்பில் இட்ட கோலம் கிடக்கும் கிடக்கும்-நீரிலெழுதிய எழுத்துப்போல அழியும் அழியும், குறையாத குணசீலம் கிடக்கும் மனத்தார்க்கு - குறையாத நற்குண நல்லொழுக்கங்கள் தங்கிய மனத்தை யுடையார்க்கு, ஒருநன்றிசெய்யில்-

ஒருதவிசெய்தால், வெகுகாலம் கிடக்கும் கிடக்கும் - (கல்லின்மேலெழுதிய எழுத்துப்போல) நெடுங்காலம் நிலைத்திருக்கும் நிலைத்திருக்கும், கண்டாய்,-செந்தில்காத்தவனே - திருச்செந்தில் நகரத்தில் வசிக்கும் முருகக்கடவுளே. எ-று.

27. சிந்தாமணிசங்குதேனுமலர்த்தாமரைசீர்
ஐந்தருவுநின்னவேயாயிருக்க-வந்தேதான்
கச்சவிடமேயுண்டகண்டாகடைதோறும்
பிச்சையிரந்துண்டதென்னபேசு.

இ-ள். சிந்தாமணி-சிந்தாமணியும், சங்கு-சங்கநிதியும், தேனு - காமதேனுவும், மலர்த்தாமரை-பதுமநிதியும், சீர்ஐந்தருவும்-சிறப்புள்ள பஞ்சதருக்களும், நின்னவே ஆய் இருக்க - உன்னுடையனவேயாயிருக்க, வந்து, (அவைகளைவிட்டு) வந்து, கச்சவிடம் உண்டகண்டா - கசந்த விஷத்தையுண்ட கண்டத்தையுடையவனே, கடைதோறும் - வாயில்கள்தோறும் சென்று, பிச்சை-பிச்சைச்சோற்றை, இரந்து உண்டது - இரந்து உண்டமைக்குக் காரணம், என்ன-யாது, பேசு-சொல். எ-று.

28. அந்திக்கார்வந்துமயலற்றுவாரன்னையிடு
வந்திக்கார்வந்துவழக்குரைப்பார்-நந்திக்கார்
கச்சிக்காளத்திக்கார்காதலுரைப்பார்கனகக்
கச்சிக்காளத்திக்கார்காண்.

இ-ள். அந்திக்கு-அந்திக்காலத்தில், வந்துமயல் ஆற்றுவார்ஆர்-வந்து காமமயக்கத்தைத் தணிப்பவர்யாவர், அன்னை இடுவந்திக்கு-தாய்செய்யும் நிந்தைக்கு, வந்து வழக்கு உரைப்பார் ஆர் - வந்து வழக்குப் பேசுவோர் யாவர், நந்து இக்கு ஆர்கச்சி-சங்குகளும் கருப்பந் தோட்டங்களும் நிறைந்த கச்சிநகரில் வாழ்கின்ற, காளத்தி - காளத்தியென்னும் வள்ளலுக்கு, காதல் உரைப்பார்ஆர் - எம்பெண்ணினது ஆசைப்பெருக்கத்தைச் சொல்லுவோர் யாவர், கனகம்கச்சிக்கு - பொன்வேலையமைந்த கச்சணிந்தவளுக்கு, ஆளதிக்குஆர்-ஆளுதற்குத்திக்காவார் யாவர். எ-று.

29. இருப்போமென்றாலுமிராதுளமானேயிக்
கருப்போமென்றாலுங்கசக்கும்-விருப்பாரும்
காசண்முகனைக்கடல்புடைசூழ்கோவளம்வாழ்
மாசண்முகனைமறந்து.

இ-ள். மானே-பெண்ணே, விருப்புஆரும்-யாவருடைய விருப்பமும் நிறைந்த, காசுஅண்மு-மணிகள்பொருந்திய, கனைகடல் புடைசூழ்-ஒலித்தலையுடைய கடல்பக்கத்தில் சூழப்பெற்ற, கோவளம்வாழ்-கோவளத்தில் வாழ்கின்ற, மா-பெருமையுள்ள, சண்முகனை மறந்து இருப்போம் என்றாலும்-சண்முகனென்பவனை மறந்திருப்போமென்றாலும், உள்ளம் இராது-

என்மனமிராது, இக்கருப்போ - இந்தக்கரும்போ, மென்றாலும் கசக்கும்-மென்று தின்றாலும் கசக்கின்றது. எ-று.

நாயகன் கூடப்பெருமையால், இனிக்கும் இயல்புள்ள கரும்பும் கசக்கின்றது என்பது கருத்து.

30. பாரவிளநீர்சுமக்கப்பண்டேபொறாதவிடை
ஆரவடஞ்சுமக்கவாற்றுமோ-நேரே
புடைக்கனத்தகொங்கையின்மேற்பூங்களபஞ்சாத்தி
இடைக்கனத்தம்வைத்தவாரின்று.

இ-ள். பாரம்-பளுவாகிய, இளநீர்சுமக்க-இளநீர்களைத் தாங்குதற்கு, பண்டேபொறாத-முன்னமேயாற்றாத, இடை - இடையானது, ஆரவடம் சுமக்க ஆற்றுமோ-முத்துமாலையைச் சுமக்கலாற்றுமோ, நேரே - நேராக, புடைகனத்த - பக்கங்கனத்திருக்கிற, கொங்கையின்மேல் - தனங்களின் மேல், இன்று—, பூகளபம்சாத்தி - பொலிவாகிய கலவைச் சந்தனத்தைப் பூசி, இடைக்கு-மருங்குலுக்கு, அனத்தம்வைத்தவர் ஆர்-அனர்த்தம் உண்டாக்கி வைத்தவர்யார். எ-று.

31. வெங்காயஞ்சுக்கானால்வெந்தயத்தாலாவதென்ன
இங்கார்சுமந்திருப்பாரிச்சரக்கை-மங்காத
சீரகத்தைத்தந்தீரேற்றேடேன்பெருங்காயம்
ஏரகத்துச்செட்டியாரே.

இ-ள். ஏரகத்து செட்டியாரே-திருவேரகத்திலுள்ள செட்டியாரே; வெங்காயம் சுக்கு ஆனால்—, வெந்தயத்தால் ஆவது என்ன—, இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - இங்கு இச்சரக்கை ஆர் சுமந்திருப்பார், மங்காத சீரகத்தை தந்தீரேல்-குறையாத சீரகத்தைத் தந்தீராயின், பெருங்காயம்தேடேன்-பெருங்காயத்தைத் தேடமாட்டேன். எ-று.

திருவேரகத்தி லெழுந்தருளிய முருகக்கடவுளே, கொடிதாகிய உடம்பு சுக்குப்போலுலர்ந்தால் வெவ்விய வினையினால் ஆவதென்ன, இந்தவுடம்பாகிய சரக்கை இவ்விடத்தில் யார் சுமந்திருப்பார், அழியாத சிறப்புள்ள இடமாகிய மோக்ஷத்தைக் கொடுத்தீராயின், மிகுதியாகிய உடம்புகளைத்தேடிப் பிறக்கம்போகேன், என வேறுமொருபொருள் தோன்றுதல்காண்க. வெம்காயம்-கொடியசரீரம்; வெந்தை அத்தால்-வெப்பமாகிய அவ்வினையினால்; சீர் அகம்-சிறந்த இடம் (மோட்சம்); பெருங்காயம்-பல சரீரம்; செட்டியார்-முருகர்.

32. முன்னேயிரண்டுமுற்றியபின்னுமுலை
எந்நேரமென்மதலைக்கெட்டுமுலை-எந்நாளும்
பைந்நாகஞ்சூழ்மதுரைப்பாணநின்பாகனுக்கிங்
கென்னகமென்னுமினி.

இ-ள். முன்னே இரண்டுமுலை-முற்காலத்தில் இரண்டுமுலைகளாயிருந்தன, முற்றியபின்-முதிர்ந்தபிறகு,நாலுமுலை-நாலுமுலைகளாயின, முற்றியபின்-முதிர்ந்தபிறகு, நாலுமுலை-நாலுமுலைகளாயின; எந்நேரம்-எப்பொழுதும், என்மதலைக்கு-என் குழைந்தையின் பொருட்டு; எட்டுமுலை-எட்டுமுலைகளாயின; எந்நாளும்-எக்காலமும்; பைநாகம் சூழ் படத்தையுடைய பாம்பினால் வளைக்கப்பட்ட; மதுரை-மதுரையிலுள்ள; பாணா-பாணனே; நின் பாங்கனுக்கு-உன்தோழனுக்கு; என் ஆகம்-என்னுடம்பு; இங்கு இனி என் ஆம்-இவ்விடத்தில் இனியென்ன பயன்படும். எ-று.

நாலுமுலை-தொங்குகின்றமுலை; எட்டுமுலை-எட்டுகின்றமுலை எனவேறுபொருள்தோன்றலறிக.

படுக்கையிலிருக்கும்போது தலைவனுக்குப் பரத்தையர்மீதுள்ள நினைவையறிந்து தலைவிசொல்லியது.

33. நங்கையொருத்தியொடுநாமிருவர்மூவரையும்
பொங்குமமளிபொறுக்குமோ-சங்கம்
குழையவரால்பாயுங்குருநாடர்கோவே
பழையவராலென்னபயன்.

இ-ள். சங்கம்குழைய-சங்குகள் வருந்தும்படி, வரால்பாயும் - வரால் மீன்கள் குதித்தற்கிடமாகிய, குருநாடர்கோவே-குருநாட்டார்க்கரசனே; நங்கை ஒருத்தியொடு-என்தங்கை யொருத்தியோடு; நாம் இருவர்-நாமிருவராக; மூவரையும்-மூன்றுபேரையும்; பொங்கும் அமளி - விளங்குகின்ற சயநம்; பொறுக்குமோ-தாங்குமோ; பழையவரால் என்னபயன் - பழையவர்களால் என்னபிரயோசனம். எ-று.

என்தங்கையாகிய புதியவளோடிணங்கியிரு; நான் பழையவள்; என்னால் பிரயோஜநமில்லை யென்பதுகருத்து.

இதுவுமது.

34. ஒருவர்க்கிடமாயுகந்திருந்தபாயல்
இருவர்க்கிடமாயதென்னோ-மருவலரைக்
கன்னாட்டவின்னாட்டுங்கண்டன்கரிகாலன்
தன்னாடிதுபுதுமைதான்.

இ-ள். உகந்து ஒருவர்க்கு இடமாயிருந்தபாயல்-விரும்பி ஒருவருக்கிடமாயிருந்த சயநம்; இருவர்க்கு இடம் ஆயது என்னோ-இருவருக் கிடமானதற்குக் காரணம்யாதோ; மருவலரை-பகைவரை; கல் நாட்ட-கல்லில் நிலைபொறுத்தும்பொருட்டு; வில்நாட்டும்-வில்லையெடுத்துநிறுத்தின; கண்டன் கரிகாலன் தன்நாடு-கரிகாற்சோழனதுநாட்டில்; இது புதுமைதான்-இது ஆச்சரியமேயாம். எ-று.

கண்டன்-ஓர் சோழன் தலைவனாகிய நீ ஒருவனே இருத்தற்குரிய என் பாயலில் பரத்தையோடுகூடி இருவராகியிருத்தல் தகாதுஎன்பதுகருத்து.

35. நங்கைபயணநமக்கென் றுரைத்தளவில்
அங்கம்பசலைநிறமானதே-செங்கை
வளைநெகிழப்பாதிமறுத்தேனென்றோத
வுளநெகிழப்பாதியுடைந்து.

இ-ள். நங்கை-பெண்ணே; நமக்கு பயணம் என்றுஉரைத்தஅளவில்-நமக்குப்பிரயாணம் நேரிட்டதென்று சொன்னமாத்திரத்தில்; அங்கம் பசலை நிறம் ஆனது-(நம்தலைவியின்)உடம்பு பசலைநிறங்கொண்டது; (அன்றியும்) செம்கைவளை பாதிநெகிழ-செவந்தகையிலணிந்த வளையலில் பாதி நெகிழ்ந்து கழல; மறுத்தேன் என்றுஓத - (பிரயாணத்தை) நிறுத்தினே னென்று சொல்லவே; பாதி உடைந்து நெகிழஉள-பாதி உடைந்துகழல வுள்ளன. எ-று.

பிரயாண மென்றதனு லுண்டாகிய விசனத்தால் உடல்மெலிதலால் பாதிவளையல் கழன்றுபோயின; பிரயாணம் நின்றுவிட்டது. என்றதனு லுண்டாகிய சந்தோஷத்தால் உடல்பூரித்தலால் பாதிவளையல் உடைந்து போயின என்பதாம்.

36. அம்பலவாவின்னொருகாலாடினாலாகாதோ
இம்பரெலாங்கண்டதெனக்கொப்பாமோ-சம்புவே
வெற்றிப்பதஞ்சலிக்கும்வெம்புலிக்குந்திந்தியென
ஒற்றிப்பதஞ்சலிக்குமூர்.

இ-ள். சம்புவே-சிவபெருமானே; வெற்றி பதஞ்சலிக்கும் - வெற்றி யையுடைய பதஞ்சலியின்பொருட்டும்; வெம்புலிக்கும் - கொடிய புலிக்கா லர்பொருட்டும்; தி தி என ஒற்றி-திதியென்று ஒற்றியாடி; பதம்சலிக்கும் பாதம் ஓய்தற்குரிய; ஊர் - ஊராகிய; அம்பலவா - பொன்னம்பலவனே; இன்னொருகால் ஆடினால் ஆகாதோ-இன்னொருதரம் ஆடினால் தகாதோ; உம்பா எல்லாம் கண்டது - தேவர்களெல்லாம் பார்த்தது; எனக்கு ஒப்பு ஆமோ-எனக்குச் சம்மதியாகுமோ. எ-று.

37. இந்தவிடைநிற்பதரிதென்னாணையும்மாணை
சந்தேகமாகச்சமைத்தானே-அந்தவயல்
பாரதிராமன்வரையிற்பைங்கொடியீர்கொங்கையிள
நீரதிராமன்னடமின்னீர்.

இ-ள். இந்த இடை நிற்பது அரிது-இந்த மருங்குல் நிற்பது அருமை; என் ஆணை-என்மேல் ஆணைப்படி; உம் ஆணை-உம்மேல் ஆணைப்படி; அந்த

அயன்-அந்தப்பிரமன்; சந்தேகமாகச்சமைத்தானே-(உண்டோஇல்லையோ என்று) சந்தேகமுண்டாகும்படி படைத்தானே; பாரதிராமன்வரையில்-பாரதிராமனது மலையிலுள்ள; பைகொடியீர் - பசியகொடிபோல்பவரே; நீர்-நீங்கள்; கொங்கை - தனங்களாகிய; இளநீர்-இளநீர்கள்; அதிராமல் - அசையாமல்; நடமின்-நடப்பீர்களாக. எ-று.

38. உன்னுயிருமென்னுயிருமொன்றென்பதின்றறிந்தேன்
மன்னுபுகழ்மச்சத்தார்மன்னவா-உன்னுடைய
பொன்னாகத்தெங்கையர்தம்போகநகச்சின்னங்கள்
என்னாகத்தேயெரிகையால்.

இ-ள். மன்னுபுகழ்-நிலைபெற்ற கீர்த்தியையுடைய; மச்சத்தார் மன்னவா மச்சதேசத்தார்க்கரசனே; உன்னுடைய பொன் ஆகத்து-உனது அழகாகிய நெஞ்சில்; எங்கையர்தம் - எமது தங்கைமாராகிய பரத்தையரது; போகம் நகம் சின்னம்கண்டு-போககாலத்தில் பட்ட நகக்குறியைக்கண்டு; என் ஆகத்து எரிகையால் - என்நெஞ்சில் எரிவதனால்; உன் உயிரும் என் உயிரும் - உனதுயிரும் எனதுயிரும்; ஒன்று என்பது - ஒன்றே என்பதை; இன்று அறிந்தேன்-இன்றையதினம் அறிந்தேன்: எ-று:

39. காளத்திகண்டத்தேகாளத்திநெற்றியிலே
காளத்தியுன்றன்கரத்திலே-காளத்தி
அங்கமெங்கும்வெவ்வழலையாற்றினாண்ஞானப்பூம்
கங்கையென்னும்பெண்ணொருத்திகண்டு.

இ-ள்: கண்டத்தே காளத்தி-கண்டத்தில் காளத்தி உண்டு, நெற்றியிலே காளத்தி-நெற்றியில் காளத்தி உண்டு; உன்றன்கரத்திலே காளத்தி-உன்கையில் காளத்தி உண்டு; அங்கம் எங்கும் காளத்தி - உடல்முழுதும் காளத்தி யுண்டு; வெம் அழலை - (இந்த) வெம்மையாகிய நெருப்பை; ஞானம்-ஞானத்தையும்; பூ-பொலிவையுமுடைய; கங்கை என்னும் - கங்கையென்கிற; பெண் ஒருத்திகண்டு-ஒரு பெண்ணானவள்பார்த்து; ஆற்றினாள்-தணித்தாள்: எ-று:

ஞானப்பூ - ஞானமாகிய அழகு எனினுமாம்: காளத்தி நான்கனுள்; முன்னையது, பாற்கடலில்பிறந்த ஆலகாலவிஷத்தையும், இரண்டாவது நெற்றிக்கண்ணெருப்பையும், மூன்றாவது நெருப்புருவமாகிய மழுவையும், நான்காவது திருமேனிமுழுதும் நெருப்புருவாயிருத்தலையும் உணர்த்தின, காளத்தி-விஷாக்கினி.

40. மேவினுடனேவிடியும்விடியாது
கோவைமணிமார்பாகூடாநாள்-தேவர்
திரண்டாதரிக்கின்றதென்னரங்கமாலே
இரண்டாலும்பொல்லாதிரா.

இ-ள். கோவை மணிமார்பா-மணிவடத்தையணிந்த மார்பினையுடையவனே, தேவர்திரண்டு-தேவர்கள்கூடி, ஆதரிக்கின்ற-அன்புசெய்கின்ற, தென் அரங்கம்மாலே - தென்னரங்கத்தி லெழுந்தருளிய திருமாலே, மேவில்-நீ கூடினால், உடனேவிடியும் - உடனே விடிந்துபோம், கூடாநாள்-கூடாநாளில், விடியாது - பொழுதுவிடியாது (ஆதலால்) இரண்டாலும்-இருவகையாலும், இரா-இரவானது-(எனக்கு) பொல்லாது - கெட்டதாயிருக்கின்றது. எ-று.

தலைமகன் கூடியிருக்குங்காலத்தில் இரவானது சுகரூபமாயும் அற்பகாலமாயும் இருத்தலையும், கூடாதகாலத்தில் அவ்விரவு துக்கரூபமாயும் நெடுங்காலமாயும் இருத்தலையும்பற்றித் தலைமகள் வருந்திக்கூறியது.

பொற்களந்தை படிகாசுத் தம்பிரான்.

---

1. அடகெடுவாய்பலதொழிலுமிருக்கக்கல்வி
அதிகமென்றேகற்றுவிட்டோமறிவில்லாமல்
திடமுளமோகனமாடக்கழைக்கூத்தாடச்
செப்பிடுவித்தைகளாடத்தெரிந்தோமில்லைத்
தடமுலைவேசையராகப்பிறந்தோமில்லைச்
சனியானதமிழைவிட்டுத்தையலார்தம்
இடமிருந்துதூதுசென்றுபிழைத்தோமில்லை
என்னசென்மமெடுத்துலகிலிரக்கின்றோமே.

இ-ள். அடகெடுவாய்-அடகெடுவாய் (மனமே,) உலகில்-உலகத்தில், பலதொழிலும் இருக்க-அனேகவேலைகளுமிருக்க, (அவற்றினும்) அறிவில்லாமல் கல்வியே அதிகம் என்றுகற்றுவிட்டோம்-அறிவில்லாமல் கல்வியே சிறந்ததென்று கற்றுவிட்டோம், திடம் உள்ள மோகனம்ஆட-உறுதியுள்ள மோகனவித்தைகள் செய்யவும், கழைக்கூத்து ஆட-கழைக்கூத்தாடவும், செப்பிடு வித்தைகள் ஆட - செப்பிடுவித்தைகள் செய்யவும், தெரிந்தோம் இல்லை - தெரிந்துகொண்டோமில்லை, தடம்முலை வேசையர் ஆக பிறந்தோம் இல்லை மலைபோலும் தனங்களையுடைய வேசையராகப் பிறந்தோமில்லை, சனி ஆன தமிழை விட்டு-இந்தச் சனியன்போன்ற தமிழைவிட்டு, தையலார் தம் இடம் இருந்து - அம்மாதரிடத்திலிருந்துகொண்டு, தூது சென்று பிழைத்தோம் இல்லை - தூதுபோய் பிழைத்தோமில்லை, என்ன சன்மம் எடுத்து-என்னபிறவி யெடுத்து, இரக்கின்றோம்-யாசிக்கின்றோம்.

கறவைப்பசுவை யாசித்துக்கூறியது.

2. பெற்றாளொருபிள்ளையெனமனையாட்டியப்பிள்ளைக்குப்பால்
பற்றாதுகஞ்சிகுடிக்குந்தரமல்லவாவிரக்கச்

சிற்றாளுமில்லையிவ்வெல்லாவருத்தமுந்தீரவொரு
கற்றாதரவல்லையோவல்லமாநகர்க்காளத்தியே.

இ-ள். என்மனையாட்டி ஒருபிள்ளைபெற்றாள்-என்மனைவி ஒருபிள்ளையை ஈன்றாள், அப்பிள்ளைக்குப் பால்பற்றாது-அக்குழந்தைக்குப் பால்போதாது, கஞ்சிகுடிக்கும் தரம் அல்ல - கஞ்சிகுடிக்கும் பருவமுமல்ல, பால் இரக்க-பால் யாசித்துக்கொண்டு வருதற்கு, சிற்றாளும் இல்லை - ஒரு சிறுபையலுமில்லை, இ-இந்த, எல்லாவருத்தமும்தீர-இந்த எல்லாத் துன்பங்களும் நீங்கும்படி, ஒருகன்று ஆதரவல்லையோ-ஒரு கன்றையுடையபசுவைக் கொடுக்க வல்லையோ, வல்லமாநகர் காளத்தியே-வல்லம் என்னும் பெரிய நகரத்திலுள்ள காளத்திவள்ளலே. எ-று.

கன்று-கற்று என வலித்தல்பெற்றது.

பசுப்பெற்று மகிழ்ந்து பாடியது.

3 வழிமேல்விழிவைத்துவாடாமலென்மனையாளுமற்றோர்
பழியாமற்பிள்ளையும்பாலென்றழாமற்பகீரெனுஞ்சொல்
மொழியாமலென்னைவரவிட்டபாவிமுசித்துச்சதை
கழியாமலாவளித்தாய்வல்லமாநகர்க்காளத்தியே.

இ-ள். என்மனையாளும்-என்மனைவியும், வழிமேல் விழிவைத்து வாடாமல்-நான்வரும் வழியின்மீது கண்வைத்து வாடாமலும், மற்றோர் பழியாமல்-அயலார் பழிக்காமலும், பிள்ளையும் பால என்று அழாமல் - குழந்தையும் பாலென்றழாமலும், பகீர் என்னும்சொல் மொழியாமல் - (மனம்) திடுக்கிடும் சொல்லை (அயலார்) சொல்லாமலும், என்னை வரவிட்டபாவி-என்னை இங்கே யனுப்பின பாவியாகிய என் மனைவி, முசித்து சதைகழியாமல் - மெலிவித்து என்சதையைக் கழிக்காமலும், ஆ அளித்தாய் - பசுவைத்தந்தாய், வல்லமாநகர் காளத்தியே. எ-று.

சீதக்காதிமீது பாடியது.

4. ஓர்தட்டிலேபொன்னுமோர்தட்டிலேநெல்லுமாகவிற்கும்
கார்தட்டியபஞ்சகாலத்திலேதங்கள்காரியப்பேர்
ஆர்தட்டினுந்தட்டுவாராமலேயன்னதானத்துக்கு
மார்தட்டியதுரைமால்சீதக்காதிவரோதயனே.

இ-ள். ஓர்தட்டிலேபொன்னும் ஓர்தட்டிலே நெல்லும் - ஒரு துலையிலே பொன்னையும் ஒருதுலையிலே நெல்லையும், ஒக்க-சமமாயிட்டுநிறுத்து, விற்கும்-விற்கின்ற, கார்தட்டிய-மேகம் (மழைபெய்தலை) தவறிப்போன, பஞ்சகாலத்திலே - சிறுவிலைக்காலத்தில், தங்கள்காரியப்பேர் ஆர்தட்டினும்-தமது சுயகாரியத்தில் நோக்கமுள்ள யாவர்தடுத்தாலும், தட்டுவாரா

மல்-தடையுண்டாகாமல், அன்னதானத்துக்கு-அன்னதானம்செய்வதற்கு, வார்தட்டியதுரை- நானிருக்கிறேன் வறியரே அஞ்சவேண்டாம் என்று) மார்தட்டித் தைரியவார்த்தை சொன்ன துரைமால்-(கைம்மாறு கருதாத கொடையால்) மேகம்போன்ற, சீதக்காதி - சீதக்காதி யென்னும்பெயருள்ள, வரோதயனே-வரத்தினால் தோன்றினவனே (ஆவன்) எ-று.

5. நேசித்துவந்தகவிராசர்தங்கட்குநித்தநித்தம்
பூசிக்குநின்கைப்பொருளொன்றுமேமற்றப்புல்லர்பொருள்
வேசிக்குஞ்சந்துநடப்பார்க்கும்வேசிக்குவேலைசெயும்
தாசிக்குமாகுங்கண்டாய்சீதக்காதிதயாநிதியே.

இ-ள். நித்தநித்தம்-நாள்தோறும், பூசிக்கும் நின்கைப்பொருள் ஒன்றுமே-புகழப்படுகிற உன்கைப்பொரு ளொன்றுமாத்திரமே, நேசித்துவந்த கவிராசர் தங்கட்கு - விரும்பிவந்த புலவர்களுக்கு உதவும், மற்ற புல்லர் பொருள்-மற்ற அற்பருடையபொருள், வேசிக்கும்-தாசியின்பொருட்டும், சந்துநடப்பார்க்கும் - (அத்தாசிகளிடத்து) தூதுபோவார்க்கும், வேசிக்கு வேலைசெய்யும் தாசிக்கும்-வேலைசெய்யும் அடியாளுக்கும், ஆ-உதவும், சீதக்காதி தயாநிதியே.—எ-று.

6. ஈயாதபுல்லரிருந்தென்னபோயென்னவெட்டிமரம்
காயாதிருந்தென்னகாய்த்தும்பலனென்னகைவிரித்துப்
போயாசகமென்றுரைப்போர்க்குச்செம்பொன்பிடிபிடியாய்
ஓயாமலீபவன்வேள்சீதக்காதியொருவனுமே.

இ-ள். ஈயாதபுல்லர்-கொடாத அற்பர், இருந்து என்ன போய்என்ன-உயிரோடிருந்தாலென்ன லாபம் இறந்தாலென்ன நஷ்டம், எட்டிமரம் காயாது இருந்து என்ன-எட்டிமரம் காய்க்காம லிருந்து என்ன, காய்த்து பலன் என்ன-காய்த்துப் பலன்யாது, கைவிரித்துப்போய் - கையைவிரித்துச் சென்று, யாசகம் என்று உரைப்போர்க்கு - யாசகமென்று சொல்லுவோருக்கு, செம்பொன் - செம்பொன்னை, பிடி பிடி ஆய் - பிடி பிடியாக, ஓயாமல் ஈபவன்-இடையறாமல் கொடுப்பவன், வேள் சீதக்காதி ஒருவனுமே-(அழகினால்) மன்மதனை நிகர்த்த சீதக்காதி என்கிற ஒருவன்மாத்திரமே. எ-று.

7. காய்ந்துசிவந்ததுசூரியகாந்திகலவியிலே
தோய்ந்துசிவந்ததுமின்னார் நெடுங்கண்தொலைவில்பன்னூல்
ஆய்ந்துசிவந்ததுபாவாணர்நெஞ்சமனுதினமும்
ஈய்ந்துசிவந்ததுமால்சீதக்காதியிருகரமே.

இ-ள். சூரியகாந்தி காய்ந்து சிவந்தது-சூரியகிரணம் காய்ந்து சிவந்தது-மின்னார் நெடுகண் - மாதருடைய நெடியகண், கலவியிலேதோய்ந்து சிவந்தது, புணர்ச்சியிற்படிந்து சிவந்தது, பாவாணர் நெஞ்சம்-புலவோர்களுடைய மனம், தொலைவு இல்பல்நூல் ஆய்ந்து சிவந்தது-அழியாத அனே

நூல்களை ஆராய்ந்து சிவந்தது, மால்சீதக்காதி இருகரம்-மேகம்போலும் சீதக்காதியின் இருகைகளும், அனுதினமும் ஈந்து சிவந்தது - நாள்தோறும் கொடுத்துச் செவந்தது, என்றவாறு.

இடைவிடாது காய்தலால் சூரியகிரணமும், கலவியின்வெட்டத்தால் மாதர்கண்களும், நூலாராய்ச்சியால் பாவாணர்மனமும், பொன்முதலியவற்றைப் பலகாலும் அள்ளிக்கொடுத்தலால் சீதக்காதியின் கையும்,செவந்தன என்பது கருத்து.

8. தேட்டாளன்காயற்றுரைசீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்பநாட்டி வைத்தான்றமிழ்நாவலரை
ஒட்டாண்டியாக்கியவர்கடம்வாயிலொருபிடிமண்
போட்டானவனுமொளித்தான்சமாதிக்குழிபுகுந்தே.

இ-ள். தேட்டாளன்-திரவிய சேகரிப்பில் சிறந்தவன், காயல்துரை-காயற்பட்டணத்துக்கிறைவன், சீதக்காதி - சீதக்காதி, சிறந்த வச்ரநாட்டான் - மேன்மையாகிய வச்ர நாட்டையுடையவன், புகழ் கம்பம் நாட்டி வைத்தான் - கீர்த்தியாகிய கம்பத்தை நிலைபொறுத்திவைத்தவன், இவன் தமிழ்நாவலரை-தமிழ்ப்புலவரை, ஓட்டாண்டி ஆக்கி-இரந்துண்ணும் ஓட்டைக் கையிலுடைய பிச்சைக்காரர்களாக்கி, அவர்கள் தம்வாயில்-அவர்களுடையவாயில், ஒரு பிடிமண்போட்டான் - ஒருபிடி மண்ணைப்போட்டு, அவனும்-அச்சீதக்காதியும், சமாதிக் குழிபுகுந்து ஒளித்தான்-சமாதிக்குழியிற்புகுந்து வறைந்தான் (இறந்தான்,) என்றவாறு.

இவன் இறந்தபின் புலவர்களுக்குக் கொடுப்பார் இல்லாமையைக் குறிப்பித்தற்கு "ஓட்டாண்டியாக்கி" முதலியவாகக் கூறினர்.

சீதக்காதியின்பேரில் தாசிபாடியது.

9. தினங்கொடுக்குங்கொடையானே
தென்காயற்பதியானேசீதக்காதி
இனங்கொடுத்தவுடைமையல்
தாய்கொடுத்தவுடைமையல்ல
மனங்கொடுத்துமிதழ்கொடுத்துமபிமானந்
தனைக்கொடுத்துமருவிரண்டு
தனங்கொடுத்துமீட்டுடைமைகள்ளர்கையிற்
பறிகொடுத்துத்தவிக்கின்றேனே.

இ-ள். தினம் கொடுக்கும் கொடையானே - நாள்தோறும் கொடுக்குங் கொடையையுடையவனே, தென்காயல் பதியானே-தென்காயற்பட்டணத்தையுடையவனே, சீதக்காதி-சீதக்காதியே, இனம்கொடுத்த உடை

மை அல்ல - உறவினர்தந்த உடைமையல்ல, தாய்கொடுத்த உடைமை அல்ல-தாய்கொடுத்த உடைமைகள் அல்ல, எளியாள்-எளியவளாகியநான், ஆசைமனம்கொடுத்தும்-விருப்பமுள்ள மனத்தைக்கொடுத்தும், இதழ்கொடுத்தும்-அதரத்தைக் கொடுத்தும், அபிமானந்தனைகொடுத்தும்-மர்மஸ்தானத்தைக் கொடுத்தும், மருவு இரண்டுதனம்கொடுத்தும்-பொருந்திய இரண்டுதனங்களைக்கொடுத்தும், ஈட்டு உடைமை-சம்பாதித்த உடைமைகளை கள்ளர்கையில் பறிகொடுத்து - திருடர்கையில் பறிகொடுத்து, தவிக்கின்றேன்-திகைக்கின்றேன். எ-று.

தலைவன் பொருளீட்டற்குக் கப்பலேறிப் போயினனாக, தலைவி அவன் பிரிவாற்றாது வருந்திக்கூறல்.

10. தரைகண்டமட்டும்படர்ந்தண்டகோளமுந்தாவியெங்கும்
உரைகண்டகீர்த்திபெறுஞ்சீதக்காதியுலகினில்வெண்
டிரைகண்டெழுங்கடன்மீதேதன்வங்கத்தைச்செல்லவிட்டுக்
கரைகண்டவனின்னங்காணனென்னாசைக்கடற்கரையே.

இ-ள். தரைகண்டமட்டும் படர்ந்து - பூமிகாணப் படுமளவும்பரவி, அண்டகோளமும்தாவி - அண்டகோளத்தையுந் தாண்டி, எங்கும் உரைகண்ட கீர்த்திபெறும் - எவ்விடத்தும் சொல்லக்கண்ட புகழைப்பெற்ற, சீதக்காதி-சீதக்காதியின், உலகினில் - நாட்டில், வெள்திரைகண்டு எழும் கடல்மீதே-வெண்மையாகிய அலைகள்தோன்றி மேலெழாநின்ற கடலின் மீது, தன்வங்கத்தைச் செல்லவிட்டு - தனது மரக்கலத்தைச் செலுத்தி, கரை கண்டவன்-தான் நினைத்தகரையிற் சென்றவன், என் ஆசை - என் ஆசையாகிய, கடல்-கடலினது, கரை-கரையை, இன்னம் காணன் - இன்னம் காணாதவனாயிருக்கிறான். எ-று.

கடலெல்லை கண்டவன், என் ஆசையின் எல்லையை அறியாதிருக்கிறான் என்பது கருத்து.

உமாதேவியைநோக்கி முருகர்முதலியோர்க்கு வேல்முதலியவற்றைக் கொடுத்த நீ, எனக்கு யாதொன்றுங் கொடுத்திலையேயென்று இரக்கம் உண்டாகப் பாடியது.

11. வேல்கொடுத்தாய்திருச்செந்தூரர்க்கம்மியின்மீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின்மணவாளனுக்குக்கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய்மதவேளுக்குமூவர்பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்கேதுங்கொடுத்திலையே.

இ-ள். திருச்செந்தூரர்க்கு வேல்கொடுத்தாய்-திருச்செந்தூரிலுள்ள முருகக்கடவுளுக்கு வேலாயுதத்தைத் தந்தருளினாய், நின்மணவாளனுக்கு அம்மியின்மீதுவைக்கக் கால்கொடுத்தாய் - உன்கணவனாகிய சிவபெருமா

னுக்கு (விவாஹகாலத்தில்) அம்மிமீது வைத்தற்பொருட்டுத் திருவடியைத் தந்தனை, கவுணியர்க்குப் பால்கொடுத்தாய்-கவுணியர்குலத்துதித்த திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலைத் தந்தருளினை, மதவேளுக்கு-மன்மதனுக்கு, மூவர்பயப்பட-மும்மூர்த்திகளும் அஞ்சும்படி, செங்கோல் கொடுத்தாய்-செங்கோலைத்தந்தருளினை, அன்னையே - தாயே, எனக்கு ஏதும் கொடுத்திலையே-எனக்கு ஒன்றையுங் கொடுத்தாயில்லையே. எ-று.

உமாதேவியார் முருகக்கடவுளுக்கு வேற்படை கொடுத்தார் என்பதை "உமைக்கண்ணின்று, தற்பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த அமையாவென்று அரத்தநெடுவேலோய்" என்னும் கல்லாடத்துக் காப்புச் செய்யுளானுணர்க. செங்கோல்-செவ்வியபாணம்.

முடியாத காரியங்கள் இவைஎனப் பாடியது.

12. பொல்லாதமூர்க்கருக்கெத்தனை தான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டானகுணம்வருமோநடுச்சாமத்திலே
சல்லாப்புடவைகுளிர்தாங்குமோபெருஞ்சந்தையினில்
செல்லாப்பணஞ்செல்லுமோதில்லைவாழுஞ்சிதம்பரனே.

இ-ள். பொல்லாத மூர்க்கருக்கு - பொல்லாத மூர்க்கபுத்தியுடையவர்க்கு, எத்தனை தான் புத்திபோதிக்கினும் - பலபுத்திகளைப் போதித்தாலும், நல்லார்க்கு உண்டான குணம்வருமோ-நல்லோர்க்குண்டானகுணம் வருமோ, நடுச்சாமத்திலே-நடுராத்திரியில், சல்லாப்புடவை குளிர்தாங்குமோ-மெல்லிய புடவை குளிர்தாங்குமோ, பெருஞ்சந்தையினில் - பெரிய சந்தைகூடுமிடத்து, செல்லாப்பணம் செல்லுமோ-செல்லாதபணம் செல்லுமா, தில்லைவாழும் சிதம்பரனே. எ-று.

13. மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றுடெட்டுக்
கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்திரதாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே.

இ-ள். மூவேந்தரும் அற்று - (தமிழினது அருமையறிந்த) மூவேந்தருமழிந்து, சங்கமும்போய் - சங்கமுமழிந்து, பதின்மூன்றுடு எட்டுகோவேந்தரும் அற்று-இருபத்தொருவள்ளல்களும் அழிந்து, மற்றொருவேந்தன்கொடையும்அற்று-வேறெந்த அரசனது ஈகையுமொழிந்து,பாவேந்தர்-கவிராஜர்கள், காற்றில் இலவம்பஞ்சு ஆகபறக்கையிலே - பெருங்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சுபோலப் பறக்கும்போது, தேவேந்திரதாரு ஒத்தாய் - இந்திரனது கற்பகத்தருவை நிகர்த்திருந்தாய், ரகுநாதசெயதுங்கனே-ரகுநாதனென்னும் வெற்றியிற் சிறந்தவனே. எ-று.

மூவேந்தர்-சேரசோழபாண்டியர்.

திருச்செந்தூர்முருகர்மீது பாடியது.

14. முன்னநின்னன்னைமுலையூட்டிமையிட்டுமூக்குச்சிந்திக்
கன்னமுங்கிள்ளியநாளல்லவேயென்னைக்காப்பதற்கே
அன்னமுமஞ்ஞையும்போலிருபெண்கொண்டவாண்பிள்ளைநீ
இன்னமுஞ்சின்னவன்றானோசெந்தூரிலிருப்பவனே.

இ-ள். செந்தூரில் இருப்பவனே-திருச்செந்தூரில் எழுந்தருளியிருப்பவனே, முன்னம்-முற்காலத்தில், நின் அன்னை-உன் தாயாகிய உமாதேவி, முலையூட்டி-தன் திருமுலைப்பாலை யுண்பித்து, மை இட்டு - (கண்ணுக்கு) மையெழுதி, மூக்குசிந்தி - மூக்கைச்சிந்தி, கன்னமும் கிள்ளியநாள் அல்லவே-கன்னத்தையுங் கிள்ளின இளமைப்பருவ மல்லவே, அன்னமும் மஞ்ஞையும்போல்-அன்னமும் மயிலும்போல, இருபெண்கொண்ட - இரண்டு மனைவியரைப் படைத்த, ஆண்பிள்ளை நீ - ஆண்பிள்ளையாகியநீ, என்னைக் காப்பதற்கு-என்னைக்காத்தருள, இன்னமும் சின்னவன் தானோ - இன்னமும் சிறுபிள்ளைதானோ. எ-று.

அன்னம்தெய்வயானையார்க்கும், மஞ்ஞை-வள்ளிநாயகியார்க்கும் உவமையாகக் கொள்க.

இதுவுமது.

15. முற்கரையப்பரையேறவிட்டாட்கொண்முதல்வருள்ளக்
கற்கரைக்கும்படிபோதித்திடுங்கருணைக்கடலைச்
சிற்பரைக்குட்டியையெங்கெங்குந்தித்திக்குஞ்செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக்கண்டேன்செந்தூரெனுந்தானத்திலே.

இ-ள். அப்பரை-திருநாவுக்கரசரை, முன்-முற்காலத்தில், கரை ஏற விட்டு-கடற்கரையிலேறப்பண்ணி, ஆட்கொள்-(அவரை) ஆட்கொண்டருளிய, முதல்வர்-தலைவராகிய சிவபெருமானாரது, உள்ளம் கல்கரைக்கும்படி-மனமாகிய கல்லை யுருக்கும்படி, போதித்திடும்-(பிரணவார்த்தத்தை) உபதேசித்தருளிய, கருணைக்கடலை - அருட்கடலை, சிற்பரைக்குட்டியை-ஞானசத்தியின் புதல்வனை, எங்கெங்கும் தித்திக்கும் - எந்தப்பாகத்திலும் இனிக்கிற, செங்கரும்பின்-செங்கரும்பிலுண்டாகிற, சர்க்கரைக்கட்டியை-சர்க்கரைக்கட்டியை, செந்தூர் என்னும் தானத்திலே கண்டேன் - திருச்செந்தூர் என்னும் திருப்பதியில்கண்டுகொண்டேன். எ-று.

இதுவுமது.

16 சின்னஞ்சிறுபிள்ளைசெங்கோட்டுப்பிள்ளைசிவந்தபிள்ளை
பொன்னன்மணிப்பிள்ளைபூலோகமெங்கும்புகழும்பிள்ளை
சொன்னெஞ்சமுலகின்றசூரனைக்கொன்றசொக்கேசர்பிள்ளை
வன்னக்கிளிப்பிள்ளைசெந்திற்குறத்திக்குமாப்பிள்ளையே.

இ-ள். சின்னஞ் சிறுபிள்ளை-மிகச்சிறுபிள்ளை, செங்கோட்டுப்பிள்ளை-திருச்செங்கோட்டி லெழுந்தருளிய பிள்ளை, சிவந்தபிள்ளை-சிவந்தபிள்ளை, பொன்னல் மணிபிள்ளை-பொன்னாலும் மணியினாலும் அலங்கரிக்கப்பட்ட பிள்ளை, பூலோகம் எங்கும் புகழும்பிள்ளை-பூமிமுற்றும்புகழ்பெற்றபிள்ளை, சொல் நெஞ்சு அழல்கின்ற-சொல்லும் மனமும் சுடுகின்ற, சூரனை-சூரபன்மனை, கொன்ற-முடிவுசெய்த, சொக்கேசர் பிள்ளை - மதுரைச் சொக்கநாதர்பிள்ளை, (இத்தன்மைகளையுடைய இவரே) வன்னக்கிளிப்பிள்ளை - அழகாகிய கிளிப்பிள்ளைபோன்ற, செந்தில் குறத்திக்கு-திருச்செந்திற் குறத்தியாகிய வள்ளிநாயகியார்க்கு, மாப்பிள்ளை - மணவாளரா யிருப்பவர். எ-று.

சொன்னெஞ் சழலுதல்-வன்சொல்லும் வன்மனமு முடையனாதல்.

திருமலைநாய்க்கன் சிறைப்படுத்திவைத்தகாலத்தில் பாடியது.

17 நாட்டிற்சிறந்ததிருமலையாதுங்கநாகரிகா
காட்டில்வனத்திற்றிரிந்துழலாமற்கலைத்தமிழ்தேர்
பாட்டிற்சிறந்தபடிக்காசனென்றொருபைங்கிளியைக்
கூட்டிலடைத்துவைத்தாயிரைதாவென்றுகூப்பிடுதே.

இ-ள். நாட்டில் சிறந்த திருமலையா-உலகத்திற்சிறந்த திருமலையனே, துங்கம் நாகரிகா - உயர்வாகிய நாகரிகமுள்ளவனே, காட்டில் வனத்தில் திரிந்து உழலாமல்-காட்டிலும் சோலையிலும் அலைந்து வருந்தாமல், கலைத் தமிழ்தேர் - தமிழ் நூல்களில் தெளிந்த, பாட்டில் சிறந்த - கவிபாடுவதிற் சிறந்த, படிக்காசன் என்ற ஒரு பைங்கிளியை-படிக்காசனென்று சொல்லப்பட்ட ஒருபசுங்கிளியை, கூட்டில் அடைத்து வைத்தாய் - கூட்டில் அடைத்து வைத்தனை, இரை தா என்று கூப்பிடுதே-(அது) உணவுகொடு என்று கூவா நின்றதே.

சீதக்காதி இறந்தற்கிரங்கிப் பாடியவை.

18 விண்ணுக்குமண்ணுக்கும்பேராய்விளங்குந்தேவேந்தரனென்னு
கண்ணுக்கினியதுரைசீதக்காதிகமலநிகர் [ங்
தண்ணுக்கிசைந்தவதனசந்த்ரோதயசாமியிந்த
மண்ணுக்குள்ளேயொளித்தான்புலவோர்முகம்வாடியவே.

இ-ள். விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய் விளங்கு-விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் பிரபலமாய் விளங்குகின்ற, தேவேந்த்ரன் என்னும்-தேவேந்திரனென்று சொல்லப்பட்ட, கண்ணுக்கு இனிய துரை சீதக்காதி-கண்ணுக்கினியனாகிய துரையாகிய சீதக்காதி என்கிற, கமலம் நிகர்-தாமரை மலரை நிகர்த்த, கண்ணுக்கு இசைந்த - குளிர்ச்சிபொருந்திய, வதன சந்த்ரோதய சாமி-சந்த்ரோதயம்போன்ற முகத்தினையுடைய சாமியானவன், இந்த மண்ணுக்குள்ளே ஒளித்தான் - இந்த மண்ணுக்குள்ளே மறைந்தான், (மறையவே) புலவோர்-புலவரது, முகம் வாடிய-முகங்கள் வாடிப்போயின. எ-று.

19. மறந்தாகிலுமரைக்காசுங்கொடாமடமாந்தர்மண்மேல்
இறந்தாவதென்னவிருந்தாவதென்னவிறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங்காயற்றுரைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப்பிழைப்பில்லையே.

இ-ள். மறந்தாகிலும் அரைக்காசும்கொடா - மறந்தாயினும் அரைக் காசையும் ஒருவர்க்குக்கொடாத, மடமாந்தர் - அறியாமையுள்ள மக்கள், மண்மேல், உலகில், இறந்து ஆவது என்ன - இறந்தால் உண்டாவதாகிய நஷ்டம் யாது-இருந்து ஆவது என்ன - உயிர்வாழ்தலா லுண்டாவதாகிய லாபம் யாது, இறந்து-செத்து, விண்போய் சிறந்து ஆளும்-விண்ணுலகிற் சென்று மேன்மையை யடைந்து (அவ்வுலகையும்) ஆளுகின்ற, காயல் துரை-காயற்பட்டணத்துக்கிறைவனாகிய சீதக்காதி, திரும்பிவந்து பிறந் தாலொழிய-மீண்டுவந்துபிறந்தாலன்றி, புலவோர்தமக்குபிழைப்புஇல்லை-புலவர்களுக்குப் பிழைப்பில்லை. எ-று.

20. கல்லடிக்குமுளியிரண்டு காதடிக்குளடிப்பதெனக்கவிதை கேட்டுப், பல்லடிக்கக்கிடுகிடெனப்பறையடிக்கு நெஞ்சர்தமைப்பா டுவேனோ, வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும் விரும்பிநின்ற மெய்யனீன்ற, செல்லடிக்குந்தடவரையிற் சேறடிக்கவலையடிக்குஞ் செந்திலானே.

இ-ள். வில் அடிக்கும்-(அருச்சுனனது) வில்லடிக்கும், பிரம்பு அடிக் கும்-(பாண்டியனது) பிரம்படிக்கும், கல் அடிக்கும் - (சாக்கியநாயனாரது) கல்லடிக்கும், விரும்பிநின்ற-விரும்பியிருந்த, மெய்யன்-உண்மைப் பொரு ளான பரமசிவன், ஈன்ற - பெற்ற, செல் அடிக்கும் தடவரையில் சேறு அடிக்க-மேகங்கள் தவழ்கின்ற பெரியமலையின்மீது சேறுபடும்படி, அலை அடிக்கும்-அலைகள்மோதுகின்ற, செந்திலானே-திருச்செந்தூரானே, கல் அடிக்கும் உளி-கல்லை வெட்டுகின்ற உளியானது, இரண்டு காது அடிக் குள் அடிப்பது என-இரண்டு காதுகளின் அடியில் அடிப்பதுபோல, கவி தைகேட்டு-புலவர்களுடைய கவிகளைக்கேட்டு, பல் கிடுகிடு என அடிக்க-பற்கள் ஒன்றோடொன்று கிடுகிடென் றடிபட, பறையடிக்கும் நெஞ்சர்த மை-நடுங்குகின்ற மனத்தையுடையவரை, பாடுவேனோ - நான் பாடுவே னோ. எ-று.

திருச்செந்திலானே, என்கவிகளைக்கேட்டு மகிழும் உன்னைப் பாடா மல், அவற்றை காதடியில் உளிவைத்தறைந்தாற்போல் வெறுப்பாய்க் கேட்கும்லோபரைப்பாடுவேனோ என்பது கருத்து.

முன்போலச் சிறந்த வித்வான்கள் இப்பொழு தில்லையென்பதை புணர்த்தற்குப் பாடியது.

21. குட்டுதற்கோபிள்ளைப்பாண்டியனிங்கில்லைக்
குறும்பியளவாய்க்காதைக்குடைந்துதோண்டி
எட்டினமட்டறுப்பதற்கோவில்லியில்லை
இரண்டொன்றாய்முடிந்துதலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக்கூத்தனில்லை
விளையாட்டாய்க்கவிதைதனைவிரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவில்லாத்துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத்திரியலாமே.

இ-ள். குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியன் இங்கு இல்லை - கேட்ட கேள்விக்குத்தக்க விடைசொல்லாதவரை தலையில்குட்டி யனுப்புதற்குப் பிள்ளைப்பாண்டியன் இவ்வுலகத்தில் இல்லை, குறும்பி அளவாய் காதை குடைந்துதோண்டி எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லி இல்லை-குறும்பியினளவும் காதைக்குடைந்து தோண்டிக் கைக்கு எட்டினமட்டும் அறுப்பதற்கோ வில்லிபுத்தூரர் இல்லை, இரண்டு ஒன்றாய்முடிந்து தலையிறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தன் இல்லை- (நவராத்திரிகாலத்தில்) இருவர் தலைகளை ஒன்றாகமுடிந்து வெட்டுதற்கு ஒட்டக்கூத்தனென்னும் கவிஞனில்லை, விளையாட்டாய் கவிதைதனை விரைந்துபாடி-விநோதமாய்க் கவிகளை விரைவாகப்பாடி, தெட்டுதற்கோ அறிவு இல்லா துரைகள் உண்டு-ஏமாற்றுதற்கோ அறிவில்லாத பிரபுக்கள் உளர், (ஆதலால்) தேசம் எங்கும் புலவர் எனத் திரியலாம்-எந்தத்தேசத்திலும் புலவரென்று சொல்லிக்கொண்டு திரியலாகும். எ-று.

—*—

சவ்வாதுப்புலவர் பாடல்.

இரகுநாத சேதுபதியின்மீது பாடியது.

1. கிளையாளன்சேதுபதிரகுநாயகன்கிஞ்சுகவாய்
இளையார்கலவியிடத்துநம்மீசரிடத்துமென்றும்
வளையாதபொன்முடிசற்றேவளையுமகுடமன்னர்
தளையாடிமைகயிற்காளாஞ்சிறியேங்கஞ்சமபதத்துமே.

இ-ள். கிளையாளன்-உறவினரைக் காப்பவனாகிய, சேதுபதி ரகுநாயகன்-ரகுநாத சேதுபதியின, என்றும்வளையாத பொன்முடி-என்றும்வணங்காத பொன்முடியானது, கிஞ்சுகம் வாய்-முருக்கம்பூப்போன்ற வாயினையுடைய, இளையார்-மாதரது; கலவியிடத்தும்-புணர்ச்சிகாலத்திலும்; நம் ஈச

ரிடத்தும்-நமது சிவபெருமான் சந்நிதியிலும்; மகுடமன்னர்-முடிவேந்தர்; தளையாடிய கையில்-விலங்குபூண்டகையில்; காளாஞ்சி எந்தும்சமயத்தும்-படிக்கந்தாங்கிநிற்கும் சமயத்திலும்; சற்றேவளையும்-சிறிது வணங்கும்.

புதுவை-ஆநந்தரங்கப் பிள்ளையின்மீது பாடியது.

2. பானுகிரணம்பார்க்கும்பங்கேருகநிலவு
தானும்வரப்பார்க்குஞ்சகோரங்கள்-வானமரும்
மையைப்பார்க்கும்மயில்கண்மாவிசயாநந்தரங்கன்
கையைப்பார்க்கும்புலவோர்கண்.

இ-ள். பங்கேருகம்-தாமரை, பானுகிரணம் பார்க்கும்-சூரியகிரணத்தை நோக்கும், சகோரங்கள் - சகோரபக்ஷிகள், நிலவுதானும் வரப்பார்க்கும் - நிலவுண்டாக நோக்கும், மயில்கள் வான் அமரும் மையைபார்க்கும்-மயில்கள் ஆகாயத்திலுள்ள மேகங்களை நோக்கும், புலவோர்கண் - வித்துவான்களுடைய கண்கள், மாவிசயம் - மிகுந்தவெற்றியையுடைய, ஆநந்தரங்கன்-ஆனந்தரங்கப்பிள்ளையின், கையைப்பார்க்கும் - கையைநோக்கும்.

3. பாலையிலாள்பின்னங்காற்பஞ்சுளியென்றேசுளிப்பாள்
பாலையிலாள்பின்னென்படுவளோ-சோலையிலே
ஆடுமயிற்பிரம்பூரானந்தரங்கதுரை
நாடுதனிலென்னிளமின்னாள்.

இ-ள். சோலையிலே மயில் ஆடும்-சோலைகளில் மயில்கள் நடனம்பண்ணுகின்ற; பிரம்பூர்-பிரம்பூரில் வாழ்கின்ற; ஆநந்தரங்கதுரை-ஆநந்தரங்கதுரையின்; நாடுதனில்-நாட்டில்; என்-எனது, இளமின்னாள்-இளமைப்பருவமுள்ள பெண்ணானவள், பால் அயிலாள் - பாலுண்ணாள்; பின்னங்கால் பஞ்சு-பின்னங்காலில் வைத்துக் கட்டிய செம்பஞ்சை; உளிஎன்றே சுளிப்பாள்-உளியென்றே கோபிப்பாள், (இத்தன்மையள்) பாலையில்-பாலைநிலத்தில்; ஆள்பின்-தலைவன் பின்னே; என்படுவளோ-என்னபாடுபடுவாளோ.

ஆநந்தரங்கப்பிள்ளை புதுவையிலிருந்த ஓர்யாதவப்பிரபு.

4. அலையான்கவடுபடானரிடத்துங்காயான்
இலையென்பதோர்நாளுமில்லை-கலைதேர்ந்த
சாலைமுத்துகிருஷ்ணனருள்சற்குணசிந்தாமணியைச்
சோலையென்றுசொன்னவரார்சொல்.

இ-ள். அலையான்-அலையான்; கவடுபடான்-கவடுபடான்; ஆரிடத்தும் காயான்-எவரிடத்தும்காயான்; இலையென்பது ஓர்நாளும் இல்லை-இலையென்பது ஓர்நாளுமில்லை; (இப்படியிருக்க) கலைதேர்ந்த-நூல்களில் தெளிந்த;

சாலை முத்துகிருஷ்ணன் அருள் - சாலை முத்துக்கிருஷ்ணன்பெற்ற; சற்குணசிந்தாமணியை-நற்குணமமைந்த சிந்தாமணியை நிகர்த்தவனை; சோலை என்றசொன்னவர் ஆர்-சோலையென்று சொன்னவர்யாவர்; சொல்-சொல்லுவாய். எ-று.

சோலைக்கு: அலைதல் - அலைதலெனவும்; கவடுபடல் - கிளைத்தலென வும்; காய்த்தல்-காய்விடுதலெனவும்; இலையின்மை - இலைகளை யுடைத்தாதலின்மை எனவும்; (இலைதெரியாதபடி மலர்களை யுடைத்தாதல்) சோலையப்பனுக்கு: அலைதல்-சலித்தல் எனவும்; கவடுபடல் - கபடமுடைத்தாதல் எனவும்; காய்தல் - கோபித்தல் எனவும்; இலையென்பது - இல்லையென்று சொல்லுதல் எனவும் பொருளுரைத்துக்கொள்க.

கச்சிச் செல்லப்பன்மீது பாடியது.

5. செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பின் மணிகள்
நல்லதருமேகநவநிதியம்-சொல்லவே
முட்டின்றியொன்றிரண்டுமூன்றுநான்கைந்தாறேழ்
எட்டொன்பான்பத்தானவே.

இ-ள். செல்லப்பன்-செல்லப்பன் என்பவன்; கச்சியிலே சேர்ந்ததற்பின்-கச்சியில் தோன்றினபிறகு; முட்டு இன்றி-தடை இல்லாமல்; ஆ ஒன்று இரண்டு ஆன-பசு ஒன்று இரண்டாயின, மணிகள் மூன்று நான்கு ஆன-ரத்நங்கள் மூன்றுநான்காயின, நல்லதரு ஐந்து ஆறு ஆன - நல்லதருக்கள் ஐந்து ஆறுயின, மேகம் எழ் எட்டு ஆன-மேகங்கள் எழு எட்டாயின, நவநிதியம் ஒன்பான் பத்து ஆன-நவநிதியம் ஒன்பது பத்தாயின. எ-று.

செல்லப்பன் தோன்றினபின் ஒன்றுயிருந்த காமதேனு இவனோடு இரண்டெனவும், மும்மணிகள் நான்மணியெனவும், ஐந்தருக்கள் ஆறுதருக்கள் எனவும்; எழுமேகங்கள் எட்டுமேகங்கள் எனவும், ஒன்பது நிதியம் பத்துநிதியங்கள் எனவும் சொல்லும்படியாயின என்பது கருத்து; மும்மணிகள்-சோமசூரியாக்கினிகள், இவை ஒளியுடைப் பொருள்களாகையால் மணியெனப்பட்டன. ஐந்தருக்கள்-அரிசந்தனம் கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. எழுமேகங்கள்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பன. ஒன்பது நிதியம்-சங்கநிதி, பதுமநிதி முதலியன.

நமச்சிவாயப்புலவர் பாடல்.

தஞ்சைச் செவிசெட்டிமீது பாடியது.

1. அவிசெட்டிவாங்குசுரர்க் கிறைநிகராய்வளமருவுமமரரென்றே, தவிசெட்டிமரம்போல வளர்ந்திருப்போர் தமைப்பாடோந்தனிநக்கீரன், கவிசெட்டிதிருவடியைப் புகழ்வணிகனிசையுடனற்கவிஞர்தஞ்சைச், செவிசெட்டிபாலடைந்தா னமதுகுறை விட்டோடுஞ் சேற்கண்மானே.

இ-ள். எட்டிமரம்போல வளர்ந்து-எட்டிமரம்போல் ஓங்கிவளர்ந்து, அவிசு எட்டிவாங்கு-அவிர்ப்பாகத்தை எட்டிவாங்குகின்ற, சுரர்க்கு இறை நிகராய்-தேவராசனுக்கு நிகராகி, வளம் மருவும் - வளம்பொருந்திய, அமரர் என்றே-(தம்மைத்) தேவர் என்று கருதியே, தவிசு-ஆசநத்தில், இருப்போர் தம்மை-இருப்பவரை, பாடோம் - பாடமாட்டோம், தனி நக்கீரன் கவி-ஒப்பற்ற தன்மைபொருந்திய நக்கீரனதுகவியால், செட்டி திருவடியை - முருகனது திருவடியை, புகழ் வணிகன் - புகழ்கின்ற வணிகனாய், இசையுடன்-கீர்த்தியோடு, நல்கவின் ஆர் - நல்ல அழகுநிறைந்த, தஞ்சை-தஞ்சைமாநகரத்தில் வாழ்கின்ற, செவிசெட்டிபால் அடைந்தால் - செவிசெட்டியினிடத்தைச் சேர்ந்தால், நமது குறைவிட்டு ஓடும்-நமதுகுறைகள் யாவும் நம்மைவிட்டு ஓடிப்போம், சேல்கண்மானே - சேல்மீன்போலும் கண்களையுடைய மான்போல்வாளே. எ-று.

நக்கீரன்கவி - திருமுருகாற்றுப்படை. எட்டிமரம்போலப் பயனற்ற செல்வரைப்பாடாமல், திருமுருகாற்றுப்படையைக் கொண்டு முருகக்கடவுளை வழிபடுகிற தஞ்சைச் செவிசெட்டியை யடைந்தால் நமது குறை நீங்கும் என்பது கருத்து.

திருக்கோவலூர் தாண்டவராயப் பிரபுவின்மேல் பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

௨. பாங்குயர்பளிக்கு மேடைகொல்லுலையா மாருதந்துருத்தியாநீடும்,பகர்நிலாக்கற்றைபதடியாமூடும்படரிருட்குழாங்குடைகரியா,ஓங்கியசெக்கருள்ளிடுங்கனலாவுயர்பெரும்பனிகொடும்புகையா, உருவிலியென்னுங் கொல்லனென்பொன்னை யுருக்குமாறென்கொலோவுரையாய், தூக்கியவிழியுந்தாம்புடைக்கயிறுந் தூம்புறுகாய்பியற்குழலும், துவருடைத்துகிலுங் கவருடைக்கழியுந்தொறுவியருறிபடுகுடமும், தாங்கியகையுமெய்யுமாய்நின்றுதண்ணளிபெய்யுமாமுகிலே, தாண்டவராயா பாண்டவர்தூதா தாழ்வில்சீர்க்கோவலூதிபனே.

இ-ள். பாங்கு உயர்-பக்கத்தில் உயர்ந்துதோன்றுகின்ற, பளிக்குமேடை-பளிங்குமேடையானது, கொல் உலையா-கொல்லனுலைக்களமாகவும், மாருதம்-காற்றானது, துருத்தி ஆ-துருத்தியாகவும், நீடும் - நீண்ட, பகர்-சொல்லப்பட்ட, நிலாக்கற்றை-நிலவின் தொகுதியானது, பதடி ஆ - உமியாகவும், மூடும்-மூடுகின்ற, படர் இருள் குழாம் - பரவிய இருட்கூட்டமானது, குடைகரி ஆ-குடைந்த கரியாகவும், ஓங்கியசெக்கர் - அதிகரித்த செவ்வானமானது, உள்ளிடும் கனல் ஆ - உலையிலிடுதற்குரிய நெருப்பாகவும், உயர்பெரும்பனி-உயர்ந்த பெரும்பனியானது, கொடும்புகை ஆ-கொடிய புகையாகவும் கொண்டு, உருவிலி என்னும்-மன்மதனென்கிற, கொல்லன் - கொல்லனானவன், எம் பொன்னை-எனதுபொன்னை நிகர்த்தமகளை,

உருக்கும் ஆறு-உருக்கும்விதம், என்-யாது, உரையாய்-சொல்லாய், தூங்கியவிழியும் - உறங்கியகண்ணும், தாம்பு உடைக்கயிறும் - தாம்புக்கயிறும், தூம்பு உறு - துளைபொருந்திய, காம்பு இயல்குழலும் - மூங்கிலாலியன்ற வேய்ங்குழலும், துவர்உடைதுகிலும் - செந்நிறத்தையுடைய ஆடையும, கவர் உடைகழியும் - பிளவையுடைய மாட்டாங்கோலும், தொறுவியர்-இடைச்சியரது, உறிபடு குடமும்-உறியிற்பொருந்திய குடமும், தாங்கிய-ஏந்திய, கையும் மெய்யும் ஆய் நின்று - கையும் உடம்புமாய் நின்று, தண் அளிபெய்யும்-கருணைமழையைப்பொழிகின்ற,மாமுகிலே-பெரியமேகமே, தாண்டவராயா-தாண்டவராயன் என்னும் பெயரையுடையவனே,பாண்டவர் தூதா-பாண்டவர்களுக்குத் தூதுவனே,தாழ்வு இல்சீர்-குறைவில்லாத சிறப்புடைய, கோவல்-திருக்கோவலூருக்கு,ஆதிபனே-இறைவனே.எ-று.

உருக்குதல்-மெலிவித்தல். தன்மகளைப்பொன் என்றதற் கேற்பபளிக்கு மேடை முதலியவற்றைக் கொல்லுலை முதலியவாக்கிக்கூறினாள். குடைகரி தோண்டினகரி.

திருக்கருவைக் களவீசர்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

3. மெய்யாரப்புலிகாணப்பொதுவிலாட்டை
மிகவெடுத்தீருமையாளுக்கொருபங்கீந்தீர்
பையாரப்பணமெடுத்தீரையாநீர்தாம்
பாரறியச்சக்கரத்தைமாலுக்கீந்தீர்
செய்யாரத்தடம்புடைசூழ்கருவைவாழும்
திருக்காளவீச்சுரரேதேவரீர்தாம்
கையாரமழுவெடுத்துக்காட்டினாலும்
களவும்மைக்கொண்டேநான்காண்பிப்பேனே.

இ-ள். மெய்ஆரம் புலி காண - உம்முடைய திருமேனியி லாரமாகப் பூண்ட பாம்பும் புலியும்காணும்படி, பொதுவில்ஆட்டை-பொதுவிலுள்ள ஆட்டை, மிகஎடுத்தீர்-மிகவும்தூக்கினீர், (அந்தஆட்டில்) உமையாளுக்கு-உமையவளுக்கு, ஒருபங்கு ஈந்தீர்-ஒருபாகம் கொடுத்தீர், பைஆர்-பசுமைநிறைந்த, அ-அந்த, பணம்எடுத்தீர்-பணத்தையெடுத்தீர் (அதில்) ஐயா நீர் தாம்-ஐயனே, நீர்தாம், பார்அறிய-உலகமறியும்படி, சக்கரத்தை - சக்கரப் பணத்தை, மாலுக்கு ஈந்தீர்-திருமாலுக்குக் கொடுத்தீர், செய்ஆர-கழனிகள் நிறைய, தடம்-தடாகங்கள், புடைசூழ் - அயலிற்சூழ்ந்த, கருவைவாழும்-கருவாபுரியில் வாழ்கின்ற, திருக்காள ஈச்சுரரே - திருக்காளவீசரே, தேவரீர்-தேவரீர், கையார - கையிற்பொருந்த, மழுஎடுத்துகாட்டினாலும்-மழுவேந்திக்காட்டினாலும், நான்-யான், உம்மைக்கொண்டே களவு காண்பிப்பேன்-உமது திருட்டுத்தனத்தைக்காட்டுவேன். எ-று.

பாம்பும் புலியும் என்றது பதஞ்சலி வியாக்கிரபாதர்களை. பொது-பொன்னம்பலம். ஆட்டு-நடனம் நடிக்கும்போது ஒருபங்கமர்ந்த இறைவியு

மாடுதலால் உமையாளுக் கொருபங்கீந்தீர் என்றார். பை ஆர் அப்பணம் என்பதற்கு பசுமைநிறைந்த அந்தப்பொன்பணம் எனவும், பசுமையாகிய அப்பாம்பின்படம் எனவும் பொருள்கொள்க. சக்கரம் - சக்கரப்படைஎன வேறொருபொருள் மழுவெடுத்துக்காட்டுதல் - சத்தியஞ்செய்தல். களவு-களாமரம் என வேறொருபொருள்.

திருக்காளத்தி நாதர்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

4. மான்பிடித்தீர்முயன்மிதித்தீரெவருங்காண
மன்றுதனிலாடெடுத்தீர்மகத்துவந்த
வூன்பெருத்தயானையைக்கொன்றுரித்தீரிப்பால்
உரப்பானதலைக்கறிக்குமுவந்தீரையா
மீன்பொதிந்தவிழிமடவாட்கொருபங்கீந்தீர்
மேலானவேடனெச்சின்மிகவேகொண்டீர்
கான்பொதிந்தகாளத்திநாதாவும்மைக்
கழுக்கள்வந்துசுற்றுவதுங்காணத்தானே.

இ-ள். மான் பிடித்தீர் - மானைப்பற்றினீர், முயலைமிதித்தீர் - முயலை மிதித்தீர், எவருங்காண-யாவரும்பார்க்க, மன்றுதனில் - பொதுவில், ஆடு எடுத்தீர்-ஆட்டையெடுத்தீர், மகத்துவந்த - யாகத்தில்தோன்றின, ஊன் பெருத்த யானையை-சரீரம் பருத்தயானையை, கொன்று உரித்தீர்-கொன்றுதோலையுரித்தீர், இப்பால் - இதற்குமேல், உரப்புஆன - உறுதியாகிய, தலைக்கறிக்கும்-தலைகறிக்காகவும், உவந்தீர் - விரும்பினீர், (அதில்) ஐயா-ஐயனே, மீன்பொதிந்த-மீனின்தன்மையமைந்த, விழிமடவாட்கு - கண்களையுடைய உமாதேவிக்கு, ஒருபங்கு ஈந்தீர்-ஒருபாகம்கொடுத்தீர், மேலானவேடன் எச்சில்-மேன்மையாகிய வேடனெச்சிலை, மிகவேகொண்டீர்-அதிகமாகவேகொண்டீர், கான்பொதிந்த-காடுமூடிய, காளத்தி-திருக்காளத்திக்கு, நாதா-இறைவனே, உம்மைக்காணத்தான்-உம்மைத் தரிசிக்கத்தான், கழுக்கள்வந்து சுற்றுவதும்-கழுக்கள்வந்து சூழ்வதும். எ-று.

முயல்-முயலகன். ஆடெடுத்தல்-நடித்தல். மகத்துவந்த யானை-கஜாசுரன். தலைக்கறிக்குவந்தது சிறுத்தொண்டன் மனையில். ஒருபங்கீதல்-அர்த்தநாரீச்சுரனுயிருத்தல். வேடன்-கண்ணப்பநாயனார். மான், முயல், யானை, தலைக்கறி, வேடனெச்சில் முதலியவற்றின் பொருட்டுக் கழுக்கள் வந்து சுற்றுகின்றன என்பதுகருத்து. ஐ ஆம்மீன் எனப்பிரித்து அழகாகிய மீன் எனினும் பொருந்தும்.

முத்திருளப்பன் என்னும் பிரபுவின்மீது அவன்செய்த சிவாலயத் திருப்பணியைக்குறித்துப் புகழ்ந்து பாடியது.

5. பருப்பதங்க ளொவ்வொருதூண் பாவுக்கல்வளையாத பார மேரு, சுரிப்படங்காப்போதிகைநீ செய்தபணி விடையை யென்ன சொல்வேனையா, தருப்பொலியுங்கரதலமுத்திருளப்பசாமிநின் றாய் பாலுன்னைக், கருப்பண்ணிமுன் றிருப்பணிக்கென் றுருப்பணினான் மருப்பொலியுங் கமலத்தோனே.

இ-ள். ஒவ்வொரு தூண் - ஒவ்வொரு தூணும், பருப்பதங்கள் - மலையை நிகர்க்கும், பாவுக்கல்-ஒவ்வொரு பாவுகல்லும், வளையாத-வணங்காத, பாரமேரு - பளுவாகிய மேருமலையை நிகர்க்கும், போதிகை - ஒவ்வொரு குறுந்தறியும், சுரிப்பி அடங்கா - சொல்வதற்குச் சுருங்கி யடங்காதனவாகும், நீசெய்த பணிவிடையை - நீ செய்த திருப்பணியை, என்னசொல்வேன்-என்னென்றுபுகழ்ந்து உரைப்பேன், ஐயா-ஐயனே, தரு - கற்பகத்தருவின் தன்மை, பொலியும்-விளங்குகின்ற, முத்திருளப்பசாமி - முத்திருளப்பதுரையே, நின்தாய்பால்-உன்தாயினிடத்து, உன்னை கருபண்ணி-உன்னைக் கருத்தரிக்கப்பண்ணி, முன்-முன்னமே, திருப்பணிக்கு என்று-திருப்பணிக்குரியனாகுக வென்றே, உருபண்ணினான் - உருவமாக்கினான், (யாவனெனின்) மருபொலியும்-மணமிகுந்த, கமலத்தோன் - தாமரைமலரை யிடமாகவுடைய பிரமன். எ-று.

சிவாலயத் திருப்பணியின் பொருட்டே உன்னைப் பிரமன் படைத்தான் என்பது கருத்து.

இராமநாதபுரம் முத்துராமலிங்க துரைமீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

6. சேதுபதிகாத்தமுத்துராமலிங்கதுரைராஜசிங்கமந்திரி
மாதுபதிமுத்திருளப்பன்கொடியவரிவேங்கைவளராதிக்கம்
கோதுறுபாமரக்காடுகருணீகர்மும்மதக்கொல்யானைமற்றோர்
மோதுபெரும்புலிக்காடுகல்விமான்களுந்திரிந்தான்மோசந்தானே.

இ-ள். சேதுபதிகாத்த - சேதுபதிவளர்த்த, முத்துராமலிங்கதுரை-முத்து ராமலிங்கதுரை, ராஜசிங்கம் - ராஜசிங்கமாவான், மந்திரி - (அவனுக்கு) மந்திரியாகிய, முத்திருளப்பன்-முத்திருளப்பன், கொடிய-கொடுமையாகிய, வரிவேங்கை-கோடுகளையுடைய வேங்கைப்புலியாவன், வளர்-விருத்தியடைகின்ற, ஆதிக்கம்-உயர்வாகிய அரசாட்சி, கோது உறு-குற்றமிகுந்த, பாமரக்காடு-துன்மார்க்கர்களுடையகாடாகும், கருணீகர்-கணக்கர், மும்மதம் - மும்மதங்களையுடைய, கொல்யானை - கொலைத்தொழிலமைந்த யானைகளுக்கு நிகராவர், மற்றோர் - மற்றையோர், மோது - பாய்

கின்ற, பெரும்புலிகாடு - பெரியபுலிகள் வாழ்கின்ற காட்டுக்கு நிகராவர், (இவற்றினிடையே) கல்விமான்களும் திரிந்தால்-கல்வியாகிய மான்களும் உலாவினால், மோசம்தான்-(அது) பிழையேயாகும். எ-று.

கல்விமான்கள்-வித்துவான்கள். முத்துராமலிங்கதுரை, முத்திருளப்பன் முதலியோராகிய ராஜசிங்கம் வேங்கைப்புலி முதலியவைகளுக்கிடையே, வித்துவான்களாகிய மான்கள் சஞ்சரிப்பது அபாயத்துக் கேதுவாகும் என்பது கருத்து.

திருக்குடந்தைச் சிவபெருமானைப் புகழ்ந்து பாடியது.

7 ஞாலத்தெவரும்புகழ்குடந்தாபுரிநாதனெங்கோன்
காலப்புயல்வண்ணன்கண்மலர்சாத்தக்கருத்திலுன்னிச்
சீலத்தவனம்மடியானென்றியார்க்குந்தெரியவிட்ட
சூலக்குறியல்லவோநாமம்யாதெனச்சொல்லுவதே.

இ-ள். ஞாலத்து - உலகத்திலுள்ள, எவரும்-யாவரும், புகழ் - புகழ்கின்ற, குடந்தாபுரிநாதன் - திருக்குடந்தைக்கிறைவனாகிய, எம்கோன்-எமது சிவபெருமான், காலப்புயல் வண்ணன் - கார்கால மேகம்போன்ற நிறத்தையுடையவனாகிய திருமால், கண்மலர் சாத்த-தன் கண்ணாகியதாமரைப்பூவைச் சாத்துதலும், கருத்தில் உன்னி - திருவுளத்தில் எண்ணி, சீலத்தவன் - நல்லொழுக்கமுள்ளவனாகிய இவன், நம் அடியான் என்று-நம்மடியவனென்று, யார்க்கும் தெரிய-எல்லார்க்கும் தெரியும்படி, இட்ட-வைத்த, சூலக்குறி அல்லவோ - சூலத்தின் அடையாளமல்லவா, நாமம்-நாமமானது, யாது என சொல்லுவது - வேறு யாதென்று சொல்லுவது.

திருமால் கண்மலர் சாத்த மகிழ்ந்து தன் சூலக்குறியை அடையாளமாக அவனது நெற்றியிலிட்டதன்றோ நாமமென்றுசொல்லப்படுவது என்பது கருத்து. கண்மலர் என்பதைக் கள்மலர் எனப்பிரித்துத் தேனையுடைய மலர் எனினும் பொருந்தும்.

திருக்கழுக்குன்றத்தைப் புகழ்ந்துபாடியது.

8. வியந்தநிசாசரனாமென்றுசந்த்ரனும்வெஞ்சனிக்குப்
பயந்தவனாமென்றுபானுவும்வந்துபணியச்செம்பொன்
நயந்தருசெல்வக்கழுகாசலமதுநண்புவைத்துச்
செயந்தந்ததான்மதியாதவரென்னத்திரிந்தனரே.

இ-ள். வியந்த-அதிசயித்த; நிசாசரன் ஆம் என்று - இரவிற் சஞ்சரிப்பவனென்று; சந்த்ரனும்-சந்திரனும்; வெம்-கொடிய; சனிக்கு-சனியென்னும் கிரகத்துக்கு; பயந்தவன் ஆம் என்று - அஞ்சினவனாமென்று; பானுவும்-சூரியனும்; வந்து பணிய-வந்து வணங்க; செம்பொன்-செம்பொன்னி

னது; நயம் தரு-நன்மையைத்தந்த; செல்வம்-செல்வமிகுதியுள்ள; கழுகாசலமது-கழுக்குன்றமானது; நண்புவைத்து - பக்ஷம் வைத்து; சயம் தந்தால் - வெற்றியைக்கொடுத்ததனால், மதி ஆதவர் என்ன - சந்திரசூரியரென்று சொல்லும்படி, திரிந்தனர்-திரிந்தார்கள். எ-று.

பயந்தவன் - பெற்றவன் (தந்தை) என்றொருபொருள். கழுகாசலம் சந்திரசூரியர் வந்துவணங்க, அவர்களுக்கு வேண்டியவற்றை அருள்செய்தமையால், அவர்கள் ஒருவரையும் மதிக்காமல் திரிகின்றார்களென்பது கருத்து.

திருத்தில்லைக் கற்பகவிநாயகரைப் புகழ்ந்து பாடியது.

9. பொருகோட்டுவாரிநிலத்திற்குணங்கெட்டபூரியரைத்
தருகோட்டுக்கொம்பென் றுரைத்தென்பயன்வருந்தண்டமிழீர்
வருகோட்டுத்திங்கண்முடிக்கூத்தர்தில்லைவனத்தில்வளர்
ஒருகோட்டுக்கற்பகமெல்லாந்தருந்தன்னையுற்றவர்க்கே.

இ-ள். கோட்டு - கரையில், பொரு - அலைகள் மோதுகின்ற, வாரி-கடல் சூழ்ந்த, நிலத்தில்-மண்ணுலகத்தில், குணம் கெட்ட - குணத்தாற் கெட்ட, பூரியரை-கீழ்மக்களை, கோடு கொம்பு தரு என்று - வளைவாகிய கிளைகளையுடைய கற்பகமரமென்று, உரைத்து - புகழ்ந்துசொல்லி, என்பயன் வரும்-என்னபயன் உண்டாகும், வண் தமிழீர்-வளமாகிய தமிழ்ப்புலவர்களே, வருகோட்டு திங்கள் - உண்டாகிய வளைவையுடைய சந்திரனை, முடி-சிரசிலணிந்த, கூத்தர்-நடராசரது, தில்லைவனத்தில் வளர் - தில்லைவனத்தில் வளராநின்ற ஒருகோட்டு - ஒருகிளையுள்ள, கற்பகம் - கற்பகமானது, தன்னை உற்றவர்க்கு - தன்னையடைந்தவர்களுக்கு, எல்லாம் தரும் - (அவர் விரும்பிய) எல்லாப்பொருள்களையும் கொடுக்கும்.

தில்லைவனம்-தில்லை மரக்காடு, ஒருகோடு-ஒற்றைக்கொம்பு, கற்பகம்-கற்பகமரம், கற்பகவிநாயகர். தமிழ்ப்பாவலர்களே! அற்பரைப்பாடியென்னபயன், தில்லைவனத்துக் கற்பகவிநாயகரையடைந்தால் நீங்கள் விரும்புவனயாவும் கிடைக்கப்பெறுவீர்கள் என்பது கருத்து.

திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது பாடியது.

துறை-வெறிவிலக்கல்.

10. வண்டுறைசோலைமலைப்பரிகாரிவந்தாலிவளுக்
கண்டுபடாதவிக்காமச்சுரம்விடுமாதலினால்
பண்டுபழகினர்போலிந்தவேளையிற்பாயசத்தைக்
கொண்டுவந்தீரிதிற்றோஷம்பிறந்திடுங்கோதையரே.

இ-ள். வண்டு உறை-வண்டுகள் வாழ்கின்ற, சோலை மலை - சோலைமலையிலுள்ள, பரிகாரி வந்தால் - வைத்தியன் வந்தால், இவளுக்கு - இவளுக்குண்டாயிருக்கிற, அண்டுபடாத-அணுகப்படாத, இ - இந்த, காமச்சு

ரம்-காமமாகிய சுரம், விடும்-நீங்கும், ஆதலினால்-ஆதலால், பண்டு-முன்னமே, பழகினர்போல்-பழகினவர்போல, இந்த வேளையில் - இச்சமயத்தில், பாயசத்தை-பாயசத்தை, கொண்டுவந்தீர்கள்-கொண்டுவந்தீர்கள், இதின்-இதனால், தோஷம்பிறந்திடும் தோஷமுண்டாகும், கோதையரே-பெண்களே. எ-று.

பாயசம் என்பதனை-பாய் அசம் எனப் பிரித்து, பாய்கின்ற ஆடு என வெறிவிலக்குக் கேற்பப்பொருள் கொள்க. தோஷம்-பாவம்.

மதுரைச் சொக்கநாதர்மீது பாடியது.
துறை-செவிலியிரங்கல்.

11. படைத்தாமம்வேற்கண்ணிகண்ணீர்ப்ரவாகப்பரவைபொங்கி
உடைத்தாலடைத்தற்குபாயமுண்டோநறையூற்றிதழித்
தொடைத்தார்மவுலியிற்சும்மாடுகட்டிச்சுமந்துசுமந்
தடைத்தாலடைபடச்சொக்கேயிதுவையையாறல்லவே.

இ-ள். தாமம் வேல்படை-ஒளியுள்ள வேலாயுதம்போன்ற, கண்ணி-கண்களையுடையாளது, கண்ணீர் ப்ரவாகம்-கண்ணீர் வெள்ளமாகிய, பரவை-கடலானது, பொங்கி-மேலெழுந்து, உடைத்தால்-(நிறைவாகியகரையை) உடைத்தால், அடைத்தற்கு-தடுத்தற்கு, உபாயம் உண்டோ-உபாயமுளதோ, நறை-தேனை, ஊற்று-உமிழ்கின்ற, இதழி - கொன்றை மலர்களால், தொடை-தொடுத்தலமைந்த, தார் - மாலையையணிந்த, மவுலியில்-சடாமகுடத்தின்மீது, சும்மாடு கட்டி சுமந்து சுமந்து - சும்மாடு கோலிச் சுமந்து சுமந்து, அடைத்தால்-தடுத்தால், அடைபட-தடைபட, சொக்கே-சொக்கலிங்கரே, இது வையையாறு அல்ல-இது வையைநதி யன்று.

சொக்கநாதரே, நீர் முற்காலத்தில் வையைப்பெருக்கை யடைத்தாற்போல எமது பெண்ணின் காமப்பெருக்கை யடைக்க வொண்ணாதென்பதுகருத்து.

மானிடரைநோக்கி சொக்கநாதரது பெருமையை யறியீரெனப் பாடியது.

12. ஏழேழுசங்கத்துடனிருந்தானென்றியம்புகின்றீர்
பாழேழ்மையுற்றிடுமானிடரேசொக்கர்பண்பறியீர்
ஆழேழுலகத்துக்கப்பாலிருந்தவடிகளும்பர்
வாழேழுலகத்துக்கப்பாலிருந்தபணிமுடியே.

இ-ள். பாழ் எழ்மை உற்றிடும் மானிடரே - பாழாகிய அறிவின்மையைப் பொருந்திய மனிதரே, சொக்கர்-சொக்கநாதரது, பண்பு-தன்மையை, அறியீர்-அறியீராகி, ஏழேழு சங்கத்துடன் - நாற்பத்தொன்பதின்மராகிய சங்கத்தாரோடு கூடி, இருந்தான் என்று-இருந்தாரென்று, இயம்புகின்றீர்-சொல்லுகின்றீர், (அவரது) அடிகள்-திருவடிகள், ஆழ் எழுலகத்துக்கு-ஆழ்ந்த எழுலகங்களுக்கு, அப்பால் இருந்த-அப்புறத்தே யிருந்த,

மணிமுடி-அழகிய சடாமகுடம், உம்பர்வாழ் எழுலகத்துக்கு - தேவர்கள் வாழ்கின்ற எழுலகங்களுக்கும், அப்பால் இருந்த-அப்புறத்தே யிருந்தது.

ஆழேழுலகம் என்றது கீழேழுலகங்களை. உம்பர் வாழேழுலகம் என்றது மேலேழுலகங்களை. அடி முடிகள் இவ்வாறிருந்தது, பிரமவிட்டுணுக்கள் முடியடிகளைக் காணப்புக்க காலத்தில்.

தமக்கு மோதிரமிட்ட செல்லூரனைப்புகழ்ந்து பாடியது.

13. காவொன்றுங்கைத்தலத் தண்ணல்செல்லூரன் கனிந்துநம்மை
வாவென்றழைத்திட்டமோதிரமேவண்மையான தமிழ்ப்
பாவென்றுஞ்சற்றுமறியாதபுல்லர்தம்பக்கலிற்போய்த்
தாவென்றுகையெடுத்தேற்காமலிட்டதடையிதுவே

இ-ள். கா ஒன்றும்-பஞ்ச தருவின் கொடைத் தன்மையமைந்த,கைத் தலத்து-கைத்தலத்தையுடைய, அண்ணல்-பெரியோனாகிய, செல்லூரன்-செல்லூரான், கனிந்து-மனங்கனிந்து, நம்மை வாவென்று அழைத்து-நம்மை வாவென்றழைத்து, இட்ட-விரலில் பூட்டிய, இது-இது; மோதிரமே மோதிரமா, (அன்று, மற்றென்னெனில்) வண்மையானவளமாகிய, தமிழ்ப்பா-தமிழ்ப்பாடல்களை, என்றும்-எப்பொழுதும், சற்றும் அறியாத-சற்றுமுணராத, புல்லர் தம் பக்கலில்போய் - அற்பரிடத்திற்சென்று, தா வென்று-தரவேண்டுமென்று, கையெடுத்து எற்காமல்-கையேந்தி; இரக்காமல் இட்ட தடை-செய்த தடையேயாகும். எ-று:

செல்லூரான் நமக்கு மோதிரம்பூட்டியது, இந்தக்கையானது இனியொருவரிடத் தேற்காதிருத்தற்கேயாமென்பது கருத்து.

சீதக்காதியைச் சிறப்பித்துப் பாடியது.

14 தடக்கும்பகிம்புரிக்கொம்பாசலப்பெருந்தந்திபட
நடக்குந்துரங்கத்துரைசீதக்காதிநன்னாட்டிநல
வடக்குங்குமக்கொங்கைமின்னேயவன்றெருவாயிலிலே
கிடக்குங்கவியும்பராராஜரத்நகிரீடமுமே.

இ-ள். தடம்பெரிய, கும்பம்-மத்தகத்தையும்; கிம்புரி கொம்பு - பூணணிந்த கொம்புகளையுமுடைய, அசலம்-மலைபோன்ற, பெருதந்திபட-பெரியயானைகள் இறக்க, நடக்கும்-நடக்கின்ற துரங்கம்-குதிரைகளையுடைய, துரை - பிரபுவாகிய, சீதக்காதி - சீதக்காதியின், நல் நாட்டில் - நல்நாட்டின்கண், நலம் - அழகாகிய, வடம் - முத்துவடத்தையும், குங்குமம் - குங்குமக் குழம்பையு மணிந்த, கொங்கை - ஸ்தநங்களையுடைய, மின்னே-மின்கொடி போல்வாளே; அவன் - அவனது, தெருவாயிலிலே-தெருவாசலில், கவியும்-பாடல்களும், பராராஜர் - வேற்றுத்தேயத்தேயத்தரசருடைய, ரத்ந கிரீடமும்-மணிமுடிகளும், கிடக்கும்-கிடக்கும். எ-று.

சீதக்காதியைப் புகழ்ந்து பாடாத புலவர்களும், அவனுக்குத்தோற்று வணங்காத அரசர்களும் இல்லையென்பது கருத்து.

சீதக்காதி யிறந்ததற்கு இரங்கிப்பாடியது.

15. பூமாதிருந்தென் புவிமாதிருந்தென்ன பூதலத்தில்
நாமாதிருந்தென்ன நாமிருந்தென்ன நன்னாவலர்க்குக்
கோமானழகமர் மால்சீதக்காதி கொடைமிகுந்த
சீமானிறந்திட்டபோதே புலமையுஞ் செத்ததுவே.

இ-ள். பூமாது இருந்து என்-திருமகள் இருந்தாலென்னபயன், புவிமாது இருந்து என்ன-நிலமகள் இருந்தாலென்னபயன், பூதலத்தில் - உலகத்தில், நாமாது இருந்து என்ன-கலைமகள் இருந்தாலென்னபயன், நாம் இருந்து என்ன-நாமிருந்தால் என்னபயன், நல் நாவலர்க்கு - நல்ல வித்துவான்களுக்கு, கோமான்-தலைவன், அழகு அமர்-அழகு அமைந்த, மால்-பெருமையுள்ள, சீதக்காதி - சீதக்காதி, கொடைமிகுந்த - ஈகைமிகுந்த, சீமான் - பெருஞ்செல்வன், (அவன்) இறந்திட்டபோதே - இறந்தபொழுதே, புலமையும் செத்தது-புலமையும் இறந்தது. எ-று.

சீதக்காதி யிறந்தபோதே புலமையும் இறந்தது என்பது கருத்து.

நற்றாய் சோதிடரை நினைத்துப் பாடியது.

16. மாகத்தத்தும்புகழான் பகைவேந்தர் மகுடம்பொடி
ஆகத்தத்தும்பரியான் சீதக்காதியணிமலரின்
ஏகத்தத்தும்பியிசைபாடுமார்பினிலென் மகட்கோர்
மோகத்தத்துண்டென்று சொன்னாரில்லை முன்மொழிந்தவரே.

இ-ள். மாகம் தத்துவம்புகழான்-விண்ணுலகத்தினும் தாவிச்செல்லுகின்ற புகழையுடையவன், பகைவேந்தர் மகுடம் - பகையரசருடையமுடிகள், பொடியாக-பொடிபட, தத்தும்-தாவி நடக்கின்ற, பரியான்-குதிரைகளையுடையவன், சீதக்காதி - சீதக்காதியாகிய, அணிமலரினே - அணிந்த மலர்மாலையின் கண்ணே, கத்து-ஒலிக்கின்ற, அ-அந்த, தும்பி இசைபாடும் வண்டுகள் இசைபாடுகின்ற, மார்பனில்-மார்பையுடையவனால், என்மகட்கு என்புதல்விக்கு, ஓர்-ஒரு மோகம் தத்து - மோகமாகிய கண்டம், உண்டு என்று-உளதென்று, சொன்னார் இல்லை-சொன்னார்களில்லை, முன்மொழிந்தவர்-முன்னே சாதகஞ்சொன்ன சோதிடர்கள். எ-று.

என்மகளுக்கு சீதக்காதியின் மோகத்தா லிறக்கத்தகுந்த ஒரு கண்டமுண்டென்று சோதிடர் சொன்னாரில்லையே என்பது கருத்து.

உலோபரிடத்திற் சென்றுவருந்திச் சீதக்காதியின் கொடையை நினைத்திரங்கிப் பாடியது.

17. மைப்போதகமும் வளநாடுஞ் செந்தமிழ்வாணர்க்கருள்
கைப்போதகமன்னயான் சீதக்காதியைக்காத்திருந்து

அப்போதறிந்திலமிப்பாழ்ம்பணத்தினருமையெல்லாம்
இப்போதறிந்தனமீயாதலோபரிடத்திற்சென்றே.

இ-ள். மை-கருமையாகிய, போதகமும் - யானைகளையும், வளநாடும்-வளமாகிய ஊர்களையும், செந்தமிழ் வாணர்க்கு-செந்தமிழ்ப் புலவருக்கு, அருள் - கிருபை செய்கிற, கை - துதிக்கையையுடைய, போதகம் அனையான் - யானையை நிகர்த்தவனாகிய; சீதக்காதியை - சீதக்காதி துரையை; காத்திருந்த-காத்துக்கொண்டிருந்த; அப்போது - அந்தக்காலத்தில்; இ-இந்த; பாழ்-பாழாகிய; பணத்தின் அருமையெல்லாம்-பணத்தருமை முழுதும்; அறிந்திலம் - அறிந்தோமில்லை; இப்போது - இப்பொழுது; ஈயாத் லோபர் இடத்தில்சென்று-கொடுக்காத லோபிகளிடத்திற்போய்; அறிந்தனம்-அறிந்துகொண்டோம். எ-று.

திருப்பரங்குன்ற முருகர்மீது பாடியது.
செவிலி கூற்று.

18. கிட்டாதுபெண்குடிமார்க்கங்கணவன்கிழவனல்ல
பட்டாணிச்சேவகனல்லும்பகலுமப்பாற்பிசக
ஒட்டான்பொய்யல்லமலைமேலிருக்குமுமக்குமிவள்
எட்டாதகொம்பிற்கனிகாண்பரங்குன்றிருப்பவனே.

இ-ள். பரங்குன்று இருப்பவனே-திருப்பரங் குன்றத்தில் இருப்பவனே, பெண்கிட்டாது-பெண்கிடையாது; குடிமார்க்கம் - குடும்பமார்க்கம்; கணவன் கிழவன் அல்ல-நாயகன் முதியோனல்ல; பட்டாணிச் சேவகன்-பட்டாணி வீரன்; அல்லும் பகலும் - இரவும் பகலும், அப்பால் பிசக ஒட்டான் அப்புறம் நழுவவொட்டான்; பொய் அல்ல - இதுபொய் அன்று; மலைமேல் இருக்கும் உமக்கும்-மலைமீதிருக்கிற உமக்கும்; இவள் - இந்தப் பெண்ணானவள்; எட்டாத கொம்பில் கனி - எட்டாத கிளையிலுள்ள கனியை நிகர்ப்பாள். எ-று.

ஒருபெண்ணின் கண்ணழகை வியந்து பாடியது.
துறை-கண்ணயந் துரைத்தல்.

19. மஞ்சுமஞ்சுங்கைப்பரராஜசேகரமன்னன்வெற்பில்
பஞ்சுமஞ்சும்பதப்பாவைநல்லாய்படைவேள்பகழி
அஞ்சுமஞ்சுங்கயலஞ்சுமஞ்சுங்கடலஞ்சுமஞ்சும்
நஞ்சுமஞ்சும்வெற்றிவேலோவுனதுநயனங்களே.

இ-ள். மஞ்சும்-மேகமும்; அஞ்சும்-அஞ்சும்படியான; கை-கொடைக் கையினையுடைய; பரராஜ சேகர மன்னன் வெற்பில்-பரராஜசேகரன் என்னும் அரசனது மலையில் உள்ள; பஞ்சும்-செம்பஞ்சும்; அஞ்சும் - அஞ்சும்படியான; பதம்-பாதங்களையுடைய; பாவை நல்லாய் - பிரதிமைபோன்ற மாதே; படை-சேனையையுடைய; வேள்-மன்மதனது; பகழி அஞ்சும் அஞ்சும்-பாணங்களும் அஞ்சும் அஞ்சும்; கயல் அஞ்சும் அஞ்சும் - சேல்மீன்களும் அஞ்சும் அஞ்சும்; கடல் அஞ்சும் அஞ்சும்-கடலும் அஞ்சும் அஞ்சும்;

நஞ்சும் அஞ்சும்-நஞ்சமும் அஞ்சும்; உன்கண்கள்;வெற்றிவேலோ-வெற்றி வேல்களோ. எ-று.

பிரம்பை ஆநந்த ரங்கனைப்புகழ்ந்து பாடியது.

20. பாரார்சொல்லாரார்பறவைக்குலங்கடம்மில்
சீராருங்கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா
இரம்பையானந்தரங்கனின்பரங்கனன்பன்
பிரம்பையானந்தரங்கன்பேர்.

இ-ள். ஓர் ஆயிரம் பையான்-ஓராயிரம் படங்களையுடையவனாகிய ஆதிசேஷனுக்கு; அந்தரங்கன்-பிரியமுள்ளவன்; இன்பரங்கன் அன்பன்-இன்பத்தைத்தருகிற ரங்கநாதனுக்கு அன்பன்; பிரம்பை - பிரம்பூரில் வாழ்கின்ற; ஆனந்தரங்கன்-ஆனந்தரங்கனது; பேர்-பெயரை; பறவைக்குலங்கள் தம்மில் - பறவைக்கூட்டத்தில்; சீர் ஆரும்-சிறப்புமிகுந்த; கிள்ளை முதல்-கிளிமுதலியவை; செப்பலால் - சொல்லுதலால்; பாரார் - உலகத்தாருள்; சொல்லார் ஆர்-சொல்லாதவர் யாவர். எ-று.

ஓராயிரம் பையான் அந்தரங்கன் என்பதற்கு; கல்வியிற்சிறந்தவன் என்பது கருத்து.

திருத்தணிகைப் பதியைப் புகழ்ந்து பாடியது.

21. பங்கயமுமேரிகளும்பாவையர்கையும்மணியும்
தங்கவளைசூழுந்தணிகையே—திங்கணுதற்
செந்திலகத்தாள்புணிதன்செல்வன்கடற்கரைசேர்
செந்திலகத்தாழ்புனிதன்சேர்பு.

இ-ள். திங்கள்-அர்த்த சந்திரன்போன்ற; நுதல் - நெற்றியில்; செம்திலகத்தாள் - செவந்ததிலகத்தை யணிந்தவளாகிய உமாதேவியை; புல்-தழுவிய; நிதன் - நித்தனாகிய சிவபெருமானுக்கு; செல்வன் - புதல்வனும்; கடல்கரைசேர்; கடற்கரையிற்பொருந்திய; செந்திலகத்து - திருச்செந்திலில் எழுந்தருளி; ஆள் - எல்லாவுயிர்களையும் ஆண்டருளுகின்ற; புனிதன்-பரிசுத்தனுமாகிய முருகக்கடவுளது; சேர்பு-சேரிடம்; பங்கயமும் - தாமரைகளும்; எரிகளும்-எரிகளும்; பாவையர் கையும்-பாவைபோலும் உருவமுள்ள மாதர்களுடைய கைகளும்; மணியும் - ரத்நங்களும்; தங்கவளை சூழும்-தங்கவளை சூழ்கின்ற; தணிகையே-திருத்தணிகைப் பதியே. எ-று.

நித்தன் என்பது நிதன் எனத் தகரவொற்றுக்குறைந்துநின்றது. பங்கயம் தங்கவளை சூழ்தலாவது - தங்கும்படி சேறுபொதிந்திருத்தல்; எரிகள் தங்கவளை சூழ்தலாவது-தங்கும்படி சங்குகள்சூழ்ந்திருத்தல்; அன்றி வள்ளைக்கொடிகள் சூழ்ந்திருத்தல்; பாவையர்கைதங்கவளை சூழ்தலாவது-பொற்றொடியில் பதிக்கப்பட்டிருத்தல்.

பாண்டியனைப் புகழ்ந்து பாடியது.

22 கோலெடுத்துக்கோத்துரத்துங்கோப்பாண்டிமன்னன்வடி
வேலெடுத்துக்கோத்துரத்தல்விட்டிலனே—சால்படுத்த
பூபாலனானாலும்போமோபுராதனத்திற்
கோபாலனானகுணம்.

இ-ள். கோல் எடுத்து-செங்கோலைக் கைக்கொண்டு; கோதுரத்தும்-பகையரசரை யோட்டுகின்ற; கோபாண்டிமன்னன் - அழகாகிய பாண்டிய ராஜன்; வடிவேல் எடுத்து - வடித்தவேலாயுதத்தைத் தாங்கியும்; கோதுரத்தல் விட்டிலனே - கோக்களைத் துரத்துந் தொழிலை விட்டானில்லையே; சால்பு அடுத்த - பெருமைபொருந்திய; பூபாலன் ஆனாலும் - பூபதியாயினும்; புராதனத்தில்-முற்காலத்தில்; கோபாலன் ஆனகுணம்-கோபாலனாயிருந்த குணமானது; போமோ-நீங்குமோ. எ-று.

கோல் அம்பு எனினுமாம். கோத்துரத்தல்-பசுக்களைத்துரத்தல் எனவும்; கோல்-மாட்டாங்கோல் எனவும் வேறுமொருபொருளைக் கோபாலனுக்கேற்க உரைத்துக்கொள்க. கோபாலன் - பசுக்களைக் காப்பவன் (இடையன்); கிருஷ்ணன்.

புதுவையம்பதி வேங்கடராயன்மீது பாடியது.
துறை-பூவைவிடுதூது.

23 விதுவையம்பதி யோசையைப்பேரிகவிகையெனும்மதன்வில்லில்வண் டேற்றினான், மதுவையம்பதிவேகமோடெய்துகுவலயமீது கைவைக்கவென் னுள்ளநோ, குதுவையம்பதி னாலும்புகழ் பெறுங்குமுணன் கன்னன் கொடைகளைமாற்றிய, புதுவையம்பதிவேங்கடராயன்பாற் புகலிவ் வேளையி னென்றன்கைப் பூவையே.

இ-ள். என்றன்கை-என்கையிலுள்ள;பூவையே-நாகணவாய்ப்புள்ளே; விதுவை-பூர்ண சந்திரனையும்; அம்பு அதி ஓசையை-கடலினது மிக்க ஒலியையும்; கவிகை பேரி என்னும் - (முறையே) குடையும் முரசுமெனக்கொண்ட; மதன்-மன்மதன்; வில்லில்-தனது கருப்பு வில்லில்; வண்டு ஏற்றினான்-வண்டாகிய நாணையேற்றி; மது-தேனோடுகூடிய; வை-கூர்மையாகிய; அம்பு-புஷ்பபாணங்களை; அதிவேகமோடு எய்து - மிகுவேகத்துடன் எய்து; குவலயம்மீது-குவளை மலரின்மேல்; கைவைக்க-கை வைத்தலால்; என் உள்ளம்நோகுது - என்மனம் வருந்தாநின்றது; (ஆதலால் இச்செய்தியை) வையம் பதினாலும் புகழ்பெறும் - பதினான்கு லோகங்களினும் புகழ்பெற்ற; குமுணன்-குமுணன்; கன்னன் - கர்னன்; (இவர்களுடைய) கொடைகளை-ஈகைகளை; மாற்றிய-நீக்கிய; புதுவையம்பதி-புதுவையம்பதியில் வாழ்கின்ற; வேங்கடராயன்பால் - வேங்கடராயனிடத்தில் சென்று; இவ்வேளை புகல்-இந்தச்சமயத்திற் சொல்வாய். எ-று.

குமுணன்-முதலெழு வள்ளல்களி லொருவன். குவளை மலர்க்கணையிறந்து படுதற்கேதுவாதலால் குவலயமீது கைவைக்க வென்னுள்ள நோகுது என்றாள். நீலக்கணையிற் கைவைத்தானினிச் சற்றுநேரத்திற்பிற் காலற் கிரையிடு மென்னுவியை என்றார் பிறரும்.

சுப்பிரமணியப்புலவர் பாடல்.

சிவசுப்பிரமணியப் பிரபுவின்மேல் பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

1. வாரிட்டு விம்மிப் புடைத்திறுகி யிளகிமணி மார்பிடமெலாங் கவர்ந்து, வட்டமிட்டடியிட்டு நாளுக்குநாண்மேல் வளர்ந்துபூரித்து முத்து, மாலையிட் டிறுமாந்து பட்டவர்த்தனயானை மத்தகத் தோடெதிர்த்து, வாதிட்டுமல்லிகைப் பூச்செண்டினைத்தினம் வாட்டப் படுத்திவரையைப், போரிட்டுமைந்தர்கண் மனஞ்சூறை யிட்டுமேற் புளகித்துவச்ரரத்நப், புதுச்செப்பினைத் தோழமைக்கொண்டு பொன்னினைப் பொடியாவராவிமீதிற், போட்டிட்ட தென்னவே தேமற் படாந்துசெம் பொற்சரிகை வேலையிட்டுப், புனைதரு ரவிக்கையை யிறுக்கிக்கிழித்துப் புறப்பட்டு வாசனைப்பூந், தாரிட்டுவராவரப் பளபளப்பாகியுயர் தங்கக் கிணத்தைபொத்துச், சந்தனம் புழுகு கஸ்தூரிகர்ப்பூரஞ்சவ்வாது குங்குமமணிந்து, சந்த்ரகாவிச்சேலை வல்லவாட்டுக்குட் ததும்பியண்ணாந் திடையினிற், றுங்கா தெனக்கனத் தோங்கிமன்மதனுஞ் சலாமிட்டுநிற்கவுந்தான், சீரிட்டுநின்றுதந்தலை வணங்காமற் றிரண்டபூண் முலைகளுநன்றன், திருமார்பிலணையவோ ருசிமேலேதவஞ் செய்கின்ற தொக்குமென்னுஞ், சிறுரோம ரேகையாள் வந்தாள்பார்க்கென்று சேவித்துநிற்கிறாள்பார், திகழ்வடுகநாதநுரை மெச்சுப்பிரதானிசிவ சுப்பிரமண்ணியராசனே.

இ-ள். வார் இட்டு - கச்சணியப் பெற்று, விம்மி-பருத்து, புடைத்து-புடைகொண்டு, இறுகி-வன்மையாகி, இளகி-குழைந்து, மணிமார்பு இடம் எல்லாம் கவர்ந்து-அழகியமார்பினிடமுழுமையும் கவர்ந்துகொண்டு, வட்டமிட்டு-வட்டவடிவாகி, அடியிட்டு-அடிகோலி, நாளுக்குநாள் மேல்வளர்ந்து-நாளுக்குநாள் அபிவிர்த்தியாகி, பூரித்து - நிரம்பி, முத்துமாலையிட்டு-முத்துவடமணியப்பெற்று, இறுமாந்து - நிமிர்ந்து, பட்டவர்த்தந யானை மத்தகத்தோடு எதிர்த்து வாதிட்டு-பட்டவர்த்தந யானையின்மத்தகத்தோடெதிர்த்துச் சண்டைசெய்து, மல்லிகைப்பூ செண்டினை-மல்லிகைமலர்ச்செண்டை, தினம் வாட்டப்படுத்தி-நாடோறும் வாட்டமடைவித்து,வரையைபோரிட்டு-மலைகளோடு போர்செய்து, மைந்தர்கள் மனம் - இளைஞருடைய மனங்களை, சூறையிட்டு-கொள்ளையிட்டு, மேல் புளகித்து-மேல் புளகங்கொண்டு, வச்ரரத்நம்-வயிரத்தானும் மற்றை மணிகளானும் செய்யப்பட்ட, புதுசெப்பினை-நூதநமாகிய செப்புகளை, தோழமைகொண்டு - நட்புக்கொண்டு, பொன்னினை - பொன்னை, பொடியா அராவி - பொடியாகராவி, மீதில்-மேல், போட்டிட்டது என்ன-தூவிவிட்டாற்போல, தேமல்

படர்ந்து-தேமல்பரவி, செம்பொன் சரிகை வேலையிட்டு - செம்பொற் சரிகை வேலையமைந்து, புனை தரு ரவிக்கையை-தரித்த ரவிக்கையை, இறுக்கிக்கிழித்து புறப்பட்டு - இறுக்கிக்கிழித்து வெளிப்பட்டு, வாசனை - மணமுள்ள, பூதார் இட்டு - பூமாலையையணிந்து, வரவர பளபளப்பு ஆகி-வரவரப் பளபளப்புடைத்தாகி, உயர் - உயர்ந்த, தங்கக்கிண்ணத்தை ஒத்து-தங்கக்கிண்ணத்தை நிகர்த்து, சந்தநம் புனுகு கஸ்தூரி கற்பூரம் சவ்வாது குங்குமம் அணிந்து-சந்தன முதலியவற்றைப் பூசப்பெற்று, சந்த்ர காவிச் சேலை வல்ல வாட்டுக்குள்-சந்த்ரகாவிப் புடவை மார்புக்குள்ளே, ததும்பி-நிறைந்து, அண்ணாந்து - மேல்நோக்கி, இடை இனி தாங்காது, இடை இனி பொறுக்காது, என - என்று கண்டோர் சொல்லும்படி, கனத்து ஓங்கி-பருத்துயர்ந்து, மன்மதனும் சலாம் இட்டு நிற்கவும்-மன்மதனும் கும்பிட்டு நிற்கவும், சீர் இட்டு நின்று-சிறப்படைந்து நின்று, தம்தலைவணங்காமல்-தமதுசிரம் வளையாமல், திரண்ட - திரட்சியாகிய, பூண் - ஆபரணங்களணிந்த, முலைகள்-தனங்கள், உன்றன் திருமார்பில் அணைய-உனது அழகிய மார்பில் அணையும்பொருட்டு, ஓர்-ஊசிமேலே தவம் செய்கின்றது ஒக்கும்-ஒரு ஊசிமுனையில் நின்றுதவஞ்செய்வதை நிகர்க்கும், என்னும்-என்று சொல்லுதற்குரிய, சிறுரோம ரேகையாள்-சிறிய மயிரொழுங்கையுடையவளாகிய என்பெண், வந்தாள்-வந்து, பராக்கு என்று - பராக்குகூறி, சேவித்துநிற்கிறாள்-வணங்கிநிற்கின்றாள், பார்-(இவளை) நோக்குவாய், திகழ்-விளங்குகின்ற, வடுகநாததுரை-வடுகநாத துரையானவர், மெச்சும்-மெச்சுகின்ற, ப்ரதானி - ப்ரதானியாகிய, சிவசுப்ரமண்ணிய ராசனே - சிவசுப்ரமணிய ராஜனே. எ-று.

நையாண்டிப்புலவர் பாடல்.

திருவாரூர்ச் சிவபெருமானை வணங்குவோர்க்கு உண்டாகும்

பயன் இன்னதெனக் கூறியது.

1. விற்கம்பத் தடியானு மடியுண்டான் விண்ணவரை வேலை கொள்ளும், நற்கம்பத்தடியானுந் தூக்கவசை யானூரூர் நாதன்கோயில், பொற்கம்பத் தடியினின்று வன்மீகத் தானையுன்னிப் போற்றினோர்க்குச், சொற்கம்பத் தடியப்பான் மோக்ஷம்பத்தடியாகத் தோற்றுந்தானே.

இ-ள். (அருச்சுனனது) வில்-வில்லாகிய, கம்பம் தடியானும் - தூண்போன்ற தண்டினாலும், அடி உண்டான்-அடியுண்டவனும், விண்ணவரை வேலைகொள்ளும்-தேவரை வேலை கொள்ளுகின்ற, நல்கம்பத்து அடியா

னும்-அழகிய பத்துத் தலைகளையுடைய அடியவனாகிய ராவணனும், தூக்க அசையான் - தூக்க அசையா திருந்தவனும் ஆகிய ஆரூர்நாதன்கோயில்- திருவாரூர்ச் சிவபெருமானது திருக்கோயில், பொன் கம்பத்து அடியில் நின்று-பொற்றூணின் அடியினின்று, வன்மீகத்தானை-புற்றிடங்கொண்ட பிரானை, உன்னி-நினைத்து, போற்றினோர்க்கு - வணங்கினவர்களுக்கு, சொற்கம்பத்து அடி சொர்க்கலோகம் பத்தடி தூரமாகவும், அப்பால்மோக்ஷம் பத்து அடியாக-அப்பால் மோக்ஷம் பத்தடி தூரமாகவும், தோற்றும்- காணப்படும். எ-று.

திருவாரூர் வன்மீகநாதனை வணங்குவோர்க்கு சொர்க்க மோக்ஷங்கள் சமீபம் என்பது கருத்து.

பள்ளிகொண்டான் என்னும் பிரபுவின் கொடைச் சிறப்பைப் புகழ்ந்து பாடியது.

2. செங்கைவரிச்சிலைதங்கமதைச்சம்புதீவுதன்னில்
எங்குவைத்தாலும்பள்ளிகொண்டான்றமிழ்க்கீவனென்றே
திங்களிரவிதினஞ்சுற்றிக்காக்கத்திரைசுருட்டும்
கங்கைக்குமுத்தரத்தேயொளித்தானுமைகாதலனே.

இ-ள். உமை காதலன்-உமாதேவிக்குப் பிரியனாகிய சிவபெருமான், செங்கை-தனது செவந்த கையிலேந்துதற்குரிய, வரிசிலை - கட்டமைந்த வில்லானது, தங்கம்-தங்கமாயிருக்கிறது, இதை - இதனை, சம்புத்தீவுதன்னில்-ஜம்பூத்வீபத்தில், எங்கு வைத்தாலும் - எவ்விடத்தில் வைத்தாலும், அ-அந்த, பள்ளிகொண்டான் - பள்ளிகொண்டான் என்பவன், தமிழ்க்கு- தமிழ்ப்பாடல்களுக்கு, ஈவன் என்றே - (பரிசிலாக்க) கொடுப்பானென்றெண்ணியே, திங்கள் இரவி - சந்திர சூரியர்கள், தினம் - நாள்தோறும், சுற்றிகாக்க-வலம்வந்து காக்கும்படி, திரைசுருட்டும்-அலைகள் சுருட்டப்படுகிற, கங்கைக்கும் உத்தரத்தே - கங்கை நதிக்கும் வடபுரத்தில், ஒளித்தான்-(அதனை) ஒளித்துவைத்தான். எ-று.

பள்ளிகொண்டான்-ஒரு கொடையாளி (பிரபு) தங்கம் என்றதுமேரு மலையை; இது திரிபுர சங்கார காலத்தில் இறைவனுக்கு வில்லாயிருந்தமையால் "செங்கை வரிச்சிலை தங்கம்" என்றார்.

ஆடைச்சிறப்பில்லாதவர்க்கு உலகத்தில் மதிப்பில்லையெனப்பாடியது.

3. மேலாடையின்றிச்சபைபுகுந்தாலிந்தமேதினியோர்
நூலாயிரம்படித்தாலுமெண்ணார்நுவல்பாற்கடலோ
மாலானவாணிபொன்னாடைகண்டுமகளைத்தந்தே
ஆலாலமீந்ததுதோலாடைசுற்றுமரன்றனக்கே

இ-ள். நுவல் - சொல்லப்பட்ட, பாற்கடலோ - திருப்பாற்கடலோ, மால் ஆனவர்-திருமாலானவர், அணி-தரித்திருந்த, பொன் ஆடைகண்டு-

பொன்வஸ்திரத்தைப் பார்த்து, மகளைத்தந்து - தன் மகளாகிய இலக்குமியை (அவருக்குக்) கொடுத்து, தோல் ஆடை சுற்றும் - தோலாகிய வஸ்திரத்தை அரையிற் சுற்றுகிற, அரன் தனக்கு-சிவபெருமானுக்கு, ஆலாலம் தந்தது-ஆலகாலவிஷத்தைக் கொடுத்தது. (ஆதலால்) நூல் ஆயிரம் படித்தாலும் - (ஒருவன்) ஆயிர நூல்களைப் படித்திருந்தாலும், (அவன்) மேல் ஆடை இன்றி - தன்னுடம்பின்மேல் (சிறந்த) வஸ்திரமில்லாமல், சவை புகுந்தால்-சபையில் பிரவேசித்தால், இந்த மேதினியோர் - இந்த உலகத்தார், எண்ணார் (அவனை) மதியார்.

பொன் ஆடை-பீதாம்பரம். (பீதம்-பொன், அம்பரம்-வஸ்திரம்)

பள்ளிகொண்டான் என்னும் பிரபுவின் கீர்த்தியைச் சிறப்பித்துப் பாடியது.

4. வள்ளிகொண்டான்மயி லேறிக்கொண்டான்மதி போலுமலை,
வெள்ளிகொண்டான்விடை யேறிக்கொண்டான் விண்ணவர்க்கமுதம், துள்ளிகொண்டான் புள்ளி மேலறிக்கொண்டான்சுப சோபனஞ்சேர், பள்ளிகொண்டான்புக ழேறிக்கொண்டானென்று பார்க்க வென்றே.

இ-ள். சுப சோபநம் சேர்-சுப சோபனம்பொருந்திய; பள்ளிகொண்டான் - பள்ளிகொண்டான் என்பவன், புகழ் ஏறிக்கொண்டான் என்று-புகழ்மீது ஏறிக்கொண்டானென்று, பார்க்க என்றே - (அதனை) பார்க்க வேண்டுமென்றெண்ணியே, வள்ளிகொண்டான்-வள்ளியை மனைவியாகக் கொண்டவனாகிய சுப்பிரமணியக் கடவுள், மயில் ஏறிக்கொண்டான்-மயிலின்மீதேறிக்கொண்டான், மதிபோலும் வெள்ளி மலைகொண்டான்-சந்திரன்போன்ற வெள்ளிமலையாகிய கைலாயத்தை தனக்கிருப்பிடமாகக்கொண்டவனாகிய சிவபெருமான், விடை ஏறிக்கொண்டான் - இடபத்தின்மீதேறிக்கொண்டான், விண்ணவர்க்கு-தேவர்கள்பொருட்டு, அமுதம் துள்ளிகொண்டான்-அமுதத்தைத் துளித்தவனாகிய திருமால், புள்ளில் ஏறிக்கொண்டான்-கருடன்மீதேறிக்கொண்டான். எ-று.

எல்லீசுதுரை பாடல்.

இராமசந்த்ர கவிராயர்மீது பாடியது.

1. செந்தமிழ்ச்செல்வனுமோராயிரந்தலைச்சேடனும்யாழ்
சுந்தரத்தோடிசைவல்லோனும்யாவருந்தோத்திரஞ்செய்
கந்தனைச்சொல்லுங்கவிராமசந்த்ரனைக்கண்டுவெட்கி
அந்தரம்வெற்பிழிபாதாளத்தோடியடங்கினரே.

இ-ள். யாவரும்-எல்லாரும், தோத்திரம் செய் - துதிசெய்கின்ற, கந்தனை-முருகக்கடவுளை, சொல்லும்-புகழ்ந்து சொல்லுகின்ற, கவிராமசந்த்ரனை-இராமசந்த்ர கவிராயனை, செந்தமிழ்ச் செல்வனும்-அகத்திய முனிவனும், ஓர் ஆயிரம் தலை சேடனும் - ஒப்பற்ற ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷனும், யாழ்-வீணையை, சுந்தரத்தோடு-அழகோடு, இசைவல்லோனும் வாசிக்கவல்லோனாகிய தும்புருவும், கண்டு-பார்த்து, வெட்கி-நாணி, அந்தரம் வெற்பு இழியாதாளத்து - விண்ணுலகத்திலும் பொதிய மலையிலும் ஆழ்ந்த பாதாளலோகத்திலும், ஓடி அடங்கினர்-ஓடிமறைந்தார்கள்.எ-று.

இராமச்சந்திர கவிராயனைக்கண்டு நாணி, அகத்தியன் மலையிலும், சேடன் பாதாளத்திலும், தும்புரு விண்ணுலகத்திலும் ஓடிமறைந்தார்கள், என்பது கருத்து.

இராமசந்த்ர கவிராயர் பாடல்.

திருப்பரங்குன்றத்து முருகர்மீது பாடியது.

2. வணக்கம்வருஞ்சிலநேரங்குமாரகண்ட
வலிப்புவருஞ்சிலநேரம்வலியச்செய்யக்
கணக்குவருஞ்சிலநேரம்வேட்டைநாய்போற்
கடிக்கவருஞ்சிலநேரங்கயவர்க்கெல்லாம்
இணக்கம்வரும்படித்தமிழைப்பாடிப்பாடி
எத்தனைநாடிரிந்துதிரிந்திளைப்பேனையா
குணக்கடலேயருட்கடலேயசுரரான
குரைகடலைவென்றபரங்குன்றுளானே.

இ-ள். ஐயா-ஐயனே, குணக்கடலே - மங்கள குணசாகரமே, அருள் கடலே-அருட்சமுத்திரமே, அசுரர் ஆன-ராக்ஷதராகிய, குரைகடலை-ஒலிக்கின்ற கடலை, வென்ற-சுவறச்செய்த, பரங்குன்று - திருப்பரங் குன்றத்தில், உள்ளானே-எழுந்தருளியிருப்பவனே, சிலநேரம்-சிலசமயம், வணக்கம் வரும்-வணக்க முண்டாகும், சிலநேரம்-சிலசமயம், குமரகண்டவலிப்புவரும்-குமரகண்டவலியுண்டாகும், சிலநேரம் - சிலசமயம், வலியச்செய்யக் கணக்குவரும் - வலியப்பண்ணும்படியான கணக்குண்டாகும், சிலநேரம்-சிலசமயம், வேட்டைநாய்போல் கடிக்கவரும்-வேட்டை நாய்போலக் கடிக்கநேரிடும், (இப்படிப்பட்ட குணங்களுள்ள) கயவர்க்கு எல்லாம்-கீழ்மக்களுக்கெல்லாம், இணக்கம் வரும்படி சம்மதியுண்டாகும்படி, தமிழை பாடி பாடி-தமிழ்ப் பாடல்களைப் பாடிப்பாடி, எத்தனைநாள் திரிந்து திரிந்து இளைப்பேன்-எத்தனை நாள் அலைந்தலைந்து மெலிவேன். எ-று.

அருணாசலராயன் என்னும் பிரபுவின்மீது பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

1. மாசற்றிடுதிருமேனியின்மறுவுற்றதுபோல
மாரப்பயல்கணைதைத்திடவந்தெய்தனனையோ
காசத்தனைபுண்ணானது துட்டத்தனையளவாய்க்
கையத்தனையானான்மகள்மெய்யெத்தனைநோமோ
வாசற்படிகடவாதவண்மனதெப்படியானாள்
மதனன்சிலுகறியாதவண்மயலெப்படியானாள்
ஆசைப்படுவாரோபுருடரின்மேன்மடவார்கள்
அருணாசலராயாதமிழறியும்பெருமானே.

இ-ள். மாசு அற்றிடு-களங்கமற்ற, திருமேனியில்-அழகியவுடம்பில், மறு உற்றது போல-களங்கமுண்டானாற்போல, மாரப்பயல்கணை தைத்திட - மன்மதப்பையல் அம்புகள் தைக்கும்படி, வந்து எய்தனன் - வந்து எய்தான், ஐயோ-அந்தோ, காசு அத்தனை புண்ணானது-காசளவாகியபுண், துட்டு அத்தனை அளவு ஆய் - துட்டின் அளவாகி, கை அத்தனை ஆனால் - பின்பு கையினளவானால், மகள் மெய் - என் மகளது உடம்பு, எத்தனை நோமோ - எவ்வளவு நோகுமோ, வாசல்படி கடவாதவள் - வாசற்படியைக் கடந்து போகாதவள், மனது எப்படி ஆனாள் - மனமெப்படிவிணங்கினாள், மதநன்சிலுகு அறியாதவள்-மன்மதனதுவேதனையையறியாதவள், எப்படி மயல் ஆனாள்-எப்படி மயங்கினாள், மடவார்கள் - மாதர்கள், புருடரின் மேல்-புருஷர்மீது, ஆசைப்படுவாரோ-ஆசைப்படுவார்களோ, அருணாசல ராயா-அருணாசல ராயனே, தமிழ் அறியும் பெருமானே - தமிழருமையறிந்த பெருமையுடையவனே. எ-று.

பொதியமலைச் சாரலிலுள்ள பெரியம்மைமீது பாடியது.

3. புல்லுக்கட்டும்விறகுஞ்சுமந்தபேர் பூர்வகாலததுப்புண்யவசத்தினால், நெல்லுக்கட்டும பணக்கட்டுங் கண்டபின் நீலக்கல்லிற்கடுக்கனுமம்பாடுவார், சொல்லுக்கட்டுமபுலவரைக்கண்டக்கால் றாரிப்பாய்ந்து கதவை யடைத்தெகிர், மல்லுககட்டும மடயரைப் பாடமேவா மலயச்சாரலில் வாழ்பெரியமமையே.

இ-ள். புல்லுகட்டும் - புற்கட்டையும், விறகும் - விறகுக்கட்டையும், சுமந்தபேர்-சுமந்த பேர்கள், பூர்வ காலத்து - முன்னாளில் செய்த, புண்ய வசத்தினால்-புண்யவசத்தால், நெல்லு கட்டும், நெல்லின் திரளையும்,பணக்கட்டும்-பணத்திரளையும், கண்டபின் - பார்த்தபிறகு, நீலக்கல்லின் கடுக்கனும் போடுவார்-நீலரத்திநத்தாற் செய்த கடுக்கனையும் தரிப்பார்கள், மலயச் சாரலில்-பொதியமலையச்சாரலில், வாழ்-வாழ்கின்ற, பெரியம்மையே, சொல்லுக்கட்டும்-சொற்களைச் சேர்த்துப் பாடலாகச் செய்கிற, புலவரை

கண்டாக்கால்-வித்வான்களைப் பார்த்தால், தூறி-பழி கூறி, பாய்ந்து-குதித்து, கதவை அடைத்து-கதவை மூடி, எதிர்-எதிரேநின்று; மல்லுகட்டும்-மற்போர்செய்கிற; மடையரை - அறிவிலாரை; பாடவோ - பாடல் தகுதியோ. எ-று.

உன்னையன்றி அறிவில்லாத மூடரை நான் பாடுதல் தகுதியாமோ என்பதாம்.

திருப்பழனி வேலவர்மீது பாடியது.

4. வெண்ணெய்க்கட்டியுஞ்சீனியுமூட்டலாம்
விக்கிக்கொள்வதற்கென்செய்யலாமொரு
பெண்ணைக்கட்டிக்கொடுத்திடலாம்பிள்ளை
பெறுவதற்குமுடன்படுவார்களோ
பண்ணைக்கட்டியமென்மொழியாளுந்தம்
படுக்கைவீட்டில்வந்தாளேயவடனைக்
கண்ணைக்கட்டியணையாமலேன்விட்டீர்
கழனிசூழும்பழனியில்வேலரே.

இ-ள். கழனி சூழும்-வயல்கள் சூழ்ந்த; பழனியில் வேலவரே-திருப்பழனியிலெழுந்தருளியிருக்கிற வேலவரே; வெண்ணெய்க் கட்டியும்-வெண்ணெய்த் திரளையும்; சீனியும்-சர்க்கரையையும்; ஊட்டலாம் - உண்பிக்கலாம்; விக்கிக் கொள்வதற்கு - விக்கிக்கொள்ளுதலுக்கு; என் செய்யலாம்-யாது செய்யலாம்; ஒரு பெண்ணை-ஒரு பெண்ணை; கட்டிக் கொடுத்திடலாம்-மணஞ்செய்துகொடுக்கலாம்; பிள்ளை பெறுவதற்கும்-பிள்ளைபெறுதலுக்கும்; உடன்படுவார்களோ - உடன்படுவாரோ; பண்ணைக் கட்டிய-இராகங்களை வென்ற; மெல்மொழியாளும் - மெல்லிய மொழிகளையுடைய் என் பெண்ணும்; தம் படுக்கை வீட்டில் வந்தாளே - உமது பள்ளியறைக்குள் வந்தாளே; அவள்தனை-அவளை, கண்ணைக்கட்டி-கண்ணைமூடி; அணையாமல்-தழுவாமல்; ஏன்விட்டீர்-என் விட்டுவிட்டீர். எ-று.

தஞ்சைக் குருவப்ப பூபன் கடுக்கனிட்டபோது பாடியது.

5. எதிலேவறியவர்க்குமினியகவிப்புலவருக்குமிரங்கியந்தப்
போதிலேதனங்கொடுக்குந்தஞ்சைநகர்க்குருவப்பபூபனெற்குக்
கோதிலேகிடந்துழலும்பலரிடத்திறசென்றுதமிழ்கூறுவண்ணங்
காதிலேபொட்டிட்டுத்தாடையின்மேதக்கடுக்கன்றானிட்டானே.

இ-ள். எதிலே வறியவர்க்கும்-எப்பொருளிலும் வறியராயிருப்பவர்க்கும்; இனிய கவி புலவருக்கும்-மதுரமாகிய பாடல்களைப் பாடுகின்ற வித்வான்களுக்கும்; இரங்கி-மனமிரங்கி, அந்தப்போதிலே - அந்தக்ஷணத்திற்றானே; தனம் கொடுக்கும் (அவர்களுக்கு வேண்டும்) பொருளைக்கொடுக்

கிற; தஞ்சைநகர்-தஞ்சைநகரத்தில் வாழ்கின்ற; குருவப்ப பூபன்-குருவப்பன் என்னும் பூபதி; கோதிலேகிடந்து உழலும் தீநெறியில் கிடந்துழல்கின்ற; பலர் இடத்தில் சென்று-பலரிடத்தில்போய்; தமிழ்கூறுவண்ணம்-தமிழ்ப்பாடல்களைப்பாடாவண்ணம்; எற்கு-எனக்கு; காதிலே ஒட்டுஇட்டு-காதில் ஆணியிட்டு; தாடையில் மோத - கன்னத்தில் அறைய; கடுக்கன் இட்டான்-வண்டிக் கடுக்கனையுந் தரித்தான்.

ஒட்டு-ஒட்டுக் கடுக்கன் எனவும் ஒருபொருள்

திருநாகைக் காரோணர்மீது பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

6. வம்பிறைக்குங் கடம்பிறைக்கும் பெரும்பிறைக்குநிகராக வளர்ந்தவொற்றைக், கொம்பிறைக்குந்தாதையராங் கடனாகைக்காரோணர்கொன்றை நல்கார், அம்பிறைக்கும் விழிப்பாவை யாயர்குழல் கொல்லனுலை யனலிற்காய்ந்த, செம்பிறைக்கும் வெண்பிறைக்குங் கரும்பிறைக்கு மொருத்திதனித்தென்செய்வாளே.

இ-ள் வம்பு இறைக்கும்-வாசனையை வீசுகின்ற; கடம்பு-கடப்பமலர் மாலையைத் தரித்த; இறைக்கும்-முருகக்கடவுளுக்கும்; பெருபிறைக்கு நிகராகவளர்ந்த-பெரியபிறைக்குச் சமானமாகவளர்ந்த; ஒற்றைக்கொம்பு-ஒரு கொம்பையுடைய; இறைக்கும்-விநாயகமூர்த்திக்கும்; தாதையர் ஆம்-தந்தையராகிய; கடல் நாகை காரோணர்-கடல்சூழ்ந்த திருநாகையி லெழுந்தருளிய காரோணர்; கொன்றை நல்கார்-தமது கொன்றை மலர் மாலையை அருள் செய்யார்; அம்பு இறைக்கும் விழிபாவை ஒருத்தி-நீரைச்சிந்துகின்ற கண்களையுடைய என்பெண்ணொருத்தி; தனித்து-தனியே யிருந்து; ஆயர் குழல்-ஆயர் ஊதுகின்ற வேய்ங்குழலானது - (தன்னுசையை); கொல்லன் உலை-கொல்லனுலைக்களத்திலுள்ள; அனலில் காய்ந்த-நெருப்பில் காய்ந்த; செம்பு இறைக்கும் - செம்புநீர்போல எடுத்து வீசாநிற்கும்; (இதுவுமன்றி) வெண்பிறைக்கும் - வெண்மையாகிய சந்திரனுக்கும்; கரும்பு இறைக்கும் - கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கும். என்செய்வாள்-என்னபரிகாரம் செய்வாள். எ-று.

செப்பு-தாமிரம்.

திருமயிலை வேங்கடசாமியென்னும் பிரபுவின்மீது பாடியது.

7. மூங்கிலிலேயொளித்திருந்தான் முக்கண்சாமி
முதிருகடற்போய்ப்படுத்தான் முகுந்தசாமி
தாங்கமலப்பொகுட்டிறைந்தான் றலைநாற்சாமி
தடவரையிலுழன் றுநின்றான் றகப்பன்சாமி

வாங்கியுண்ணவழிகாத்தான்வயிற்றுச்சாமி
வாணருக்கிங்குதவுவாரார்மற்றோர்சாமி
ஓங்கியசீர்மயிலையிற்பொன்னப்பசாமி
உதவியவேங்கடசாமியுசிதவேளே.

இ-ள். ஓங்கிய சீர்-உயர்ந்த, கீர்த்தியையுடைய, மயிலையில்-திருமயிலையிலுள்ள, பொன்னப்பசாமி உதவிய - பொன்னப்பசாமிபெற்ற, வேங்கடசாமி-வேங்கடசாமி யென்னும், உசிதவேளே-சிறந்த மன்மதனே; முக்கண் சாமி-மூன்று கண்களையுடைய கடவுளாகிய சிவபெருமான், மூங்கிலிலே ஒளித்திருந்தான் - மூங்கிலிலே மறைந்திருந்தான், முகுந்தசாமி- திருமாலானவன், முதிய கடல்போய்படுத்தான் - பழமையாகிய பாற்கடலிற் சென்று சயனித்தான், தலைநால் சாமி - நான்கு தலைகளையுடைய பிரமதேவன், கமலப்பொகுட்டு உறைந்தான் - தாமரைப்பொகுட்டில் தங்கினன், தகப்பன் சாமி-முருகன், தடவரையில் உழன்று நின்றான்-பெரியமலை நிலங்களில் உழன்று நின்றான், வயிற்றுச்சாமி - விநாயகன், வாங்கி உண்ண-வாங்கியுண்ணும்பொருட்டு, வழிகாத்தான் - வழிகாத்திருந்தான், (இப்படியாயினமையால்) வாணருக்கு-கவிவாணருக்கு, இங்கு - இவ்வுலகத்தில், மற்று ஓர் சாமி-வேறொரு கடவுளாயிருந்து, உதவுவர் ஆர்-(அவர்வேண்டுமவற்றை) கொடுப்பவர் யாவர். எ-று.

கவிவாணருக்குக்கொடுக்க உன்னையன்றி வேறொருவருமில்லையென்பதாம். சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை யுபதேசித்ததனால் முருகக்கடவுளைத் தகப்பன்சாமி என்றார்.

திருப்பரங்கிரி கற்பகவிநாயகர்மீது பாடியது.

8. வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத் திரண்டானை வணங்காருள்ளே, அஞ்சரண மூன்றானை மறைபொழிநால் வாயானை யத்தனாகித், துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி யாறானைத் துகளெழானைச், செஞ்சொன் மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ் கற்பகத்தை நச் சிந்தைசெய்வாம்.

இ-ள். வஞ்சகத்தில் ஒன்றானை - கபடமனத்தில் பொருந்ாதவனை, துதிக்கை மிகத் திரண்டானை - துதிக்கை மிகவுந் திரண்டிருப்பவனை, வணங்கார் உள்ளே-தொழாதவர்களுடைய மனத்தில், அம் சரணம் ஊன்றானை-அழகிய திருவடியைப் பதியாதவனை, மறைபொழி நால்வாயானை-வேதங்களைச் சொரியாநின்ற தொங்குகின்ற வாயையுடையவனை, அத்தன் ஆகி-கடவுளாகி, துஞ்சு அவுணர்க்கு அஞ்சானை - நிலைபெற்ற அவுணர்களுக்கு அஞ்சாதவனை, சென்னி அணி ஆறானை-சிரசிலணிந்த நதியையுடையவனை, துகள் எழானை - குற்றமுண்டாகாதவனை, செம் சொல்மறைக்கு எட்டானை-செவ்விய சொற்களையுடைய வேதங்களுக்கும் எட்டாதவனை,

பரங்கிரிவாழ் கற்பகத்தை-திருப்பரங்கிரியில் வாழ்கின்ற கற்பகப் பிள்ளையாரை, சிந்தை செய்வாம்-சிந்திப்போம். எ-று.

இதில் ஒன்றுமுதல் எட்டெண்களும் வந்தமைகாண்க.

அருணசலேச்சுரன்மீது பாடியது.

துறை-தலைவியிரங்கல்.

திரிபங்கி-மூன்றுவெண்பா.

9. சலமேதோசங்கந்தாபூணாரந்தாமே
கலைதாநற்புங்கவன்மால்காணப்-புலவுடைய
கங்கராகோணகலாமதியக்கோடீர
சங்கராசோணசலா.

இ-ள். நல் புங்கவன்மால் காண-உயர்ந்த தேவனாகிய திருமாலுங்காணாத, புலவு உடைய-புலால் நாற்றத்தையுடைய, கம் - பிரமகபாலத்தைத் தாங்கிய, கரா-கையையுடையவனே, கோண - மாறுபடாத, கலாமதியம்-ஒருநிலையாகிய சந்திரனையணிந்த, கோடீர - சடாபாரத்தையுடையவனே, சங்கரா-சங்கரனே, சோணசலா-அருணசலனே, சலம் ஏதோ-கோவத்திற்குக்காரணமேதோ, சங்கம் தா-சங்கவளையலைக்கொடு, பூணாரம்தா - ஆபரணங்களைக்கொடு, மேகலைதா-மேகலையைக்கொடு. எ-று.

கோணகலாமதியம் என்பதனை, கோண் ஆகு அல் ஆம் மதியம் எனப் பிரித்து, கோணலாகிய இரவில் தோன்றும் பிறைச்சந்திரன் எனவும் வேறொருபொருள் கொள்ளலாம். இது, அருணசலேச்சுரருடையபவனியைத் தரிசித்து வளையல் முதலியவற்றை யிழந்த தலைமகள் கூறியது. சோணசலம் என்பதைசோணம் அசலம் எனப்பிரிக்க. செவந்த மலையென்பது பொருள். அருணசலமென்பதற்கும் பொருளிதுவேயாம். சங்கந்தா என்றும், பூணாரந்தா என்றும் தொடங்கிவாசிக்கப் பொருள் வேறுபடாமல் இரண்டு வெண்பாக்களாய் முடிதல் காண்க.

தில்லைக் கோவிந்தராஜர்மீது பாடியது.

துறை-வண்டுவிடுதூது.

10. சீரிலங்குமாடகூடவீதிவீறுதில்லையான்
திருவிருக்குமார்பனெங்கடிருமலைக்குமுன்புபோய்
நீரிருந்துமாலைகேளுமவன்மறுத்துரைக்கிலென்
நெஞ்சுசொல்லும்வார்த்தையாகநீங்கள்சொல்லும்வண்டு
வாரியொன்றுபாயிரண்டுமாலைமூன்றுநாலுமேவய் [காள்
மதியமைந்துகங்குலாறுமாரனேழுவாடையெட்
டாரமொன்பதன்றில்பத்தடங்கலும்மொறுக்குமா
லத்தனைக்கெலாமிலக்கெனுவியொன்றுகாணுமே.

இ-ள். வண்டுகாள்-வண்டுகளே, சீர் இலங்கும்-மேன்மையாய் விளங்குகின்ற, மாடகூடவீதி-மாடகூடவீதிகள், வீறு - மிகுந்திருக்கிற, தில்லையான்-தில்லைப்பதியிலுள்ளவன், எங்கள் திரு இருக்கும் மார்பன் - எங்கள் திருமகள் தங்குகின்ற மார்பையுடையவன், (அவனது) திருமலைக்கு முன்புபோய்-அழகிய மலைக்கெதிரேசென்று, நீர் இருந்து - நீர் தங்கி, மாலைகேளும் - (அவனது திருத்துழாய்) மாலையைக் கேளுங்கள், அவன் மறுத்துரைக்கில்-அவன் தடுத்துச்சொன்னால், என்நெஞ்சு சொல்லும் வார்த்தையாக-என்மனஞ் சொல்லும் சொல்லாக, நீங்கள் சொல்லும்-நீங்கள் சொல்லுங்கள், (என்னெனின்) வாரி ஒன்று-கடலொன்று, பாய் இரண்டு-சயனமிரண்டு, மாலைமூன்று-மாலைக்காலம்மூன்று, வேய்நாலு-வேய்ங்குழல்நாலு, மதியம் ஐந்து-சந்திரன் ஐந்து, கங்குல் ஆறு-ராத்திரி ஆறு, மாரன் ஏழு-மன்மதன் ஏழு, வாடை எட்டு-வாடைக்காற்று எட்டு, ஆரம் ஒன்பது-முத்துமாலை ஒன்பது, அன்றில்பத்து - அன்றிலோசை பத்து, (ஆகிய) அடங்கலும்-எல்லாம், ஒறுக்கும்-வருத்தாநின்றன, அத்தனைக்கு எல்லாம் - அவ்வளவு பொருள்களுக்கும், இலக்கு - லக்ஷ்யமாயிருப்பது, என் ஆவி ஒன்று-என்னுயி ரொன்றேயாம். எ-று.

ஆரம்-சந்தனமுமாம். தலைவனைப்பிரிந்து தனித்திருக்கும் தலைவியர்க்குக் கடலோசைமுதலியன துன்பஞ்செய்த வியல்பாதலால் இவ்வாறுகூறினள். "முத்துங்களபமுந்தண்பனிநீரு முயங்குமலர்த், தொத்துங்குளிரியுந் தூமலர்ப்பாயலுஞ் சூழ்ந்துபுறங், கத்துங்கடலுங் கதலியுமாலியுங் கங்குலுமிப், பத்தும் பெரும்பகை யாய்விட்டவா வொருபைந்தொடிக்கே" என்றார் பிறரும்.

திருவானைக்காவில் சிவபெருமான் பவனியைத் தரிசித்துப் பாடியது.

தலைவி கூற்று.

11. ஓரானைவனத்தேதிருவொண்ணாவனிழற்கீழ்
உறையும்பெருமான்வீதியுலாவும்பவனிக்கே
நேராகநடப்பேன்வளைபறிபோனதுகேட்பேன்
நில்லென்றுதடுத்தால்வகைசொல்லென்றுமறிப்பேன்
போரானையைவிட்டான்முலையிரானையைவிடுவேன்
பொழியம்புதொடுத்தாலிருவிழியம்புதொடுப்பேன்
தோராவழக்கிட்டால்வகைவாராவழக்கிடுவேன்
தொல்லைக்கணைகொண்டேவகைவெல்லப்பெறுவேனே.

இ-ள். ஓர்-ஒப்பற்ற, ஆனைவனத்தே - திருவானைக் காவின்கண்ணே, திரு-அழகிய, ஒள்-ஒட்பமாகிய, நாவல்நிழல்கீழ் - நாவல்மரத்தினது நிழலில், உறையும்-எழுந்தருளியிருக்கிற, பெருமான் - சிவபெருமான், வீதி உலாவும்பவனிக்கு-தெருவில் உலாவுகின்ற பவனிக்கு, நேராக நடப்பேன் நேரே போவேன், வளை பறிபோனது கேட்பேன்-பறிபோன வளையலைக்

கேட்பேன், நில்லென்று தடுத்தால் - நில்லென்று தடைசெய்தால், வகை சொல் என்றுமறிப்பேன்-இதற்குவகைசொல்லென்று மறிப்பேன், போர்-போர்செய்தற்குரிய, ஆனையைவிட்டால்-ஒருயானையை யேவினல், முலை-தனங்களாகிய, ஈரானையை விடுவேன் - இரண்டியானைகளை யேவுவேன், பொழி அம்புதொடுத்தால்-சொரிதற்குரிய ஒருபாணத்தைத்தொடுத்தால், இருவிழி அம்பு தொடுப்பேன், இருகண்ணுகிய அம்புகளைத் தொடுப்பேன், தோரா வழக்கு இட்டால்-தொடர்ச்சியாகிய வழக்காடினல், வகைவாரா-ஒருவகையிலுஞ் சேராத, வழக்கிடுவேன்-வழக்குத் தொடுப்பேன், தொல் லைக் கணைகொண்டே - பழமையாகிய கரும்பைக்கொண்டே, வகையாய் வெல்லப்பெறுவேன்-வகையாக வெல்லப்பெறுவேன். எ-று.

திருவாரூர்ச் சிவபெருமான்.

பிக்ஷாடநவேடமாய் வந்ததைக்குறித்துப் பாடியது.

12. அடல்கொண்டெழுசூலப்படையாரூர்ப்பெருமானர்
ஐயம்பகரென்றேஎமதகவாசலில்வந்தார்
கடுகும்படிசென்றேபலிகொண்டேயெதிர்நின்றேன்
கைவந்தனமென்ருரிதுகைவந்தனமென்றேன்
மடவன்னமதென்ருரிதுமடவன்னமதென்றேன்
வல்லோதனமென்ருரிதுமடவன்னமதென்றேன்
கொடுவந்தனமென்ருரிதுகொடுவந்தனமென்றேன்
கொள்ளார்பலிசெல்லாரவர்கோட்பாடறியேனே.

இ-ள். அடல்கொண்டு எழு - வலிகொண் டெழுகின்ற, சூலப்படை-சூலாயுதத்தையுடைய, ஆரூர்பெருமானர் - திருவாரூர்ச் சிவபெருமானன வர், ஐயம்பகர் என்று - பிச்சையிடென்று, எமது அகவாசலில் வந்தார்-எமது வீட்டுவாசலில் வந்தார், கடுகும்படி சென்று - விரைவாகப்போய், பலிகொண்டு - சோற்றைக்கொண்டு, எதிர்நின்றேன் - அவருக்கெதிரில் நின்றேன், கைவந்தனம் என்ருர் - கையால் நமஸ்காரமென்றனர், இது கைவந்த அனம் என்றேன-இதுகைக்கொண்ட சோறென்றேன், மட அன்னம் அது என்ருர் - இளமையாகிய அன்னம் அது என்றனர், இது மட அன்னமது என்றேன் - இது மடத்துச் சோறென்றேன், வல்லோதனம் என்ருர் - சூதாடு கருவியோ தனம் என்றனர், இது அல் ஓதனம் என் றேன் - இது இராச்சோறென்றேன், கொடு உவந்தனம் என்ருர்-எற்றுக் கொண்டு களித்தோம் என்றனர், இது கொடுவந்த அனம் என்றேன்-இது கொண்டுவந்த சோறென்றேன், கொள்ளார்பாவி - பலியை ஏற்க வுமாட்டார், செல்லார் - போகவுமாட்டார், அவர் கோட்பாடு அறியே ன்-அவரது கொள்கையை அறிந்திலேன். எ-று.

பொன்வண்ணத் தந்தாதியில், "பண்டங்கன் வந்து பலிதாவென் ருன் பலோற்கிடென்றேன், அண்டங்கடந்தவனன்னமென்ருனையனூர்தி

என்றேன், கொண்டிங்குனையம் பெய்யென்றான் கொடித்தோநங்கனென்றேன், உண்டிங்கமைந்ததென்றாற் கதுசொல்ல வுணர்வுற்றதே" என்பதும் இக்கவிபோலச் சிவபெருமானோடு அசதியாடற் பொருளதே.

முறைமாறாகத்தோன்றப் பாடியது.

13. வீமனுக்கு மைந்தனார் வேதனாகும் வேதனுக்குமைந்தனாரீசனாகும், காமனுக்கு மைந்தனார் வீமன்றம்பி கந்தனுக்குமாமனார் காமன்றானே, மாமனுக்கு முன்றமையன் றந்தைகாலன் வையகத்தி லிம்முறைமைவழங்கலாலே, ராமனுக்குச் சீதைதங்கையாகவேண்டும் ராவணனுக்குத்தகப்பன் ராமன்றானே.

இ-ள். வீமனுக்கு மைந்தனார்-வீமனுக்குப் புதல்வனார், வேதன் ஆகும்-பிரமனாவான், வேதனுக்கு மைந்தனார் - பிரமனுக்குப் புதல்வனார், ஈசன் ஆகும்-சிவனாவான், காமனுக்கு மைந்தனார்-காமனுக்குப் புதல்வனார், வீமன் தம்பி-அருச்சுனனாவான், கந்தனுக்கு மாமனார்-முருகருக்கு மாமனார், காமன்தானே-காமனேயாவான், மாமனுக்கு முன்-மாமனுக்கு முன்னே, தமையன் தந்தை - தமையனுந் தந்தையுமா யிருப்பவன், காலன் - யமனாவான், வையகத்தில்-உலகத்தில், இம் முறைமை வழங்கலாலே-இந்த முறைமை வழங்குதலால், ராமனுக்கு-இராமனுக்கு, சீதை - சீதையானவள், தங்கை ஆகவேண்டும்-தங்கை முறையாதல் வேண்டும், ராவணனுக்கு - இராவணனுக்கு, தகப்பன்-தந்தை, ராமன்தான்-ஸ்ரீராமனே யாவான். எ-று.

வீமன்-கருடனுக்கிறைவனாகிய திருமால். வே - மூங்கில். மைந்தன்-சிவன், (சிவன் திருநெல்வேலியில் ஓர் மூங்கிலிற் பிறந்தார் என்பதுகதை) காமன்-கற்பகத்துக் கிறைவனாகிய இந்திரன், வீமன் தம்பி - அருச்சுனன். கந்தனுக்குமாமன் - காமன் இந்திரன் மாமன், குதிரைக்கிறைவனாகிய நகுலன்-தமயன், தருமன், தந்தை-யமன். ராமன்-ராத்திரிக்கிறைவனாகிய சந்திரன். ராவணன், ராத்திரி நிறமுள்ள மன்மதன்.

தமது பாக்குவெட்டி காணாமற்போனபோது பாடியது.

14. விறகுதறிக்கக்கறிநறுக்கவெண்சோற்றுப்புக்கடகுவைக்கப்
பிறகுபிளவுகிடைத்ததென்றாலாறாகப்பிளந்துகொள்ளப்
பறகுபறகென்றேசொறியப்பதமாயிருந்தபாக்குவெட்டி
இறகுமுளைத்துப்போவதுண்டோவெடுத்தீராயிற்கொடுப்பீரே

இ-ள். விறகு தறிக்க-விறகைத் துண்டாக்கவும், கறி நறுக்க-கறியை நறுக்கவும், வெண் சோற்று உப்புக்கு-வெண்மையாகிய சோற்றிற்போடும் உப்பின்பொருட்டு, அடகு வைக்க-அடகு வைக்கவும், பிறகு-அதின்பிறகு, பிளவுகிடைத்தது என்றால்-பாக்குப்பிளவு கிடைத்ததாயின், நால் ஆறுஆக

பிளந்துகொள்ள-நாலாறுகப்பிளந்துகொள்ளவும், பறகு பறகு என்றுசொறிய-பறகுபறகென்று சொறியவும், பதமாய் இருந்த-உபயோகமாயிருந்த, பாக்குவெட்டி-பாக்குவெட்டியானது, இறகு முளைத்து - இறகு முளைக்கப்பெற்று, போவது உண்டோ-பறந்துபோவதுண்டோ, எடுத்தீராயின்-எடுத்திருப்பீராயின், கொடுப்பீர்-கொடுத்து விடுவீராக. எ-று.

திருவேங்கிடநாதன் என்னும் பிரபுவின்மீதுபாடிய வினுவுத்தரம்.

15. இரவலனேயுனக்கில்லாததென்னவிதயமென்ன
பரவுணவேதுசுவையற்றதென்னசொற்பான்மையென்ன
தரவுரைசெய்திடவென்றானதற்கொன்றுஞ்சாற்றிலன்யான்
வரதிருவேங்கடனாதாவென்றேன்பொன்வழங்கினனே.

இ-ள். இரவலனே-யாசகனே, உனக்கு இல்லாதது என்ன - உனக்கு இல்லாதது யாது, இதயம் என்ன-உன்மன மெத்தன்மையது, பர உணவு எது - மேன்மையாகிய உணவுக்கு ஆதாரம் யாது, சுவையற்றது என்ன-உனக்கு சுவையற்ற வுறுப்புயாது, சொல் பான்மை என்ன-நீ சொல்லுதற்குரிய தன்மையது யாது, தர-நான் கொடுக்கும்படி, உரைசெய்திட-சொல்லக்கடவை, என்றான்-என்று வினவினன், அதற்கு - அவ்வினுவுக்கு, யான் ஒன்றும் சாற்றிலன் - நான் ஒன்றும் உத்தரம் சொல்ல வில்லை, (ஆயினும்) வரதிருவேங்கடனாதா என்றேன் - சிரேஷ்டமாகிய திருவேங்கடனாதா என்று சொன்னேன், (சொல்லுதலும் அந்தச் சொல்லின் பொருளையுணர்ந்து) பொன்வழங்கினன்-பொன்னைக் கொடுத்தான்.

உனக்கில்லாத தென்ன-வினு,	திரு - உத்தரம்	(செல்வம்)
இதயமென்ன ...	வேம் ...	(புழுங்கும்)
உணவேது ...	கடன் ...	(கடன்பட்டபொருள்)
சுவையற்றதென்ன ...	நா ...	(நாக்கு)
சொற்பான்மையென்ன ...	தா ...	(கொடு)

இவ்வாறு வினு வுத்தரமாகப் பொருளுரைத்துக்கொள்ளும்படி நிற்றலால், இப்பாடல் வினு வுத்தர மெனப்படும். இது சித்திரகவியினென்று.

தன்குற்றத்திற் கிரங்கிப் பாடியது.

16. கல்லாதவொருவனைநான்கற்றாயென்றேன்
காட்டிறியுமறவனைநாடாள்வாயென்றேன்
பொல்லாதவொருவனைநானல்லாயென்றேன்
போர்முகத்தையறியானைப்புலியேயென்றேன்
மல்லாரும்புயமென்றேன்சூம்பற்றோளை
வழங்காதகையனைநான்வள்ளலென்றேன்

இல்லாதுசொன்னேனுக்கில்லையென்றான்
யானுமென்றன்குற்றத்தாலேகின்றேனே

இ-ள். நான்-யான், கல்லாத ஒருவனை-கல்விகல்லாத ஒருவனை நோக்கி, கற்றாய் என்றேன்-கல்விமானேயென்று புகழ்ந்தேன், காடு எறியும் மறவனை-காட்டைவெட்டுகின்ற மறவனை, நாடு ஆள்வாய் என்றேன்-நாட்டையாள்பவனேயென்று புகழ்ந்தேன், நான் - யான், பொல்லாத ஒருவனை-பொல்லாதவனாகிய ஒருவனை, நல்லாய் என்றேன்-நல்லவனேயென்றுபுகழ்ந்தேன், போர்முகத்தை அறியானை - யுத்தமுகத்தை அறியாதவனை, புலியேறு என்றேன்-ஆண்புலியே யென்றுபுகழ்ந்தேன், சூம்பல்தோளை-சுருங்கித்திரைந்த தோள்களை, மல் ஆரும் புயம் என்றேன் - மற்போர்க்குரிய புஜங்களென்று புகழ்ந்தேன், நான்-யான், வழங்காதகையனை - கொடாத கையையுடையவனை, வள்ளல் என்றேன்-வரையாது கொடுப்பவனாகியவள்ளலென்று புகழ்ந்தேன், (இவ்வாறு) இல்லாது சொன்னேனுக்கு - (ஒருவனிடத்தில்) இல்லாத குணத்தைச்சொன்ன எனக்கு, இல்லை என்றான்-(ஒன்றும்) இல்லைபோவென்றான், யானும்-நானும், என்றன் குற்றத்தால்-என்பிழையால், ஏகின்றேன்-போகா நின்றேன். எ-று.

துன்பம் வருங்காலத்தில் எல்லாம் ஒருமிக்கவேவருமெனப் பாடியது.

17. ஆவீனமழைபொழியவில்லம்வீழ
அகத்தடியாண்மெய்நோவவடிமைசாவ
மாவீரம்போகுதென்றுவிதைகொண்டோட
வழியிலேகடன்காரர்மறித்துக்கொள்ளச்
சாவோலைகொண்டொருவனெதிரேசெல்லத்
தள்ளவொண்ணாவிருந்துவரச்சர்ப்பந்தீண்டக்
கோவேந்தருழுதுண்டகடமைகேட்கக்
குருக்களோதட்சணைகள்கொடுவென்றாரே

இ-ள். ஆ ஈன-பசுவானது கன்றையீன, மழைபொழிய - மழைசொரிய, இல்லம்வீழ-வீடு இடிந்துவிழ; அகத்து அடியாள்மெய்நோவ - வீட்டு வேலைக்காரி உடம்புநோவ; அடிமைசாவ-வேலைக்காரன் இறக்க; மா ஈரம் போகுது என்று - மிகுந்த ஈரம் உலர்ந்து போகின்றதேயென்று; விதைகொண்டு ஓட - (விதைக்கும்பொருட்டு) விதையைக்கொண்டு ஓட; வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள - வழியில் கடன்காரர் தடுக்க; ஒருவன் சாவோலைகொண்டு எதிரேசெல்ல - ஒருவன் சாவோலையெடுத்தெதிரேவர; தள்ளவொண்ணா விருந்து வர-நீக்கக்கூடாத விருந்தாளிவர-சர்ப்பம் தீண்ட-(அவனை) பாம்புகடிக்க; கோவேந்தர்-பூமியையாளுகின்ற அரசர்; உழுது உண்ட கடமைகேட்க-நிலத்தை உழுது பயிர்செய்துண்ட கடமையைக்கேட்க; குருக்களோ தட்சணைகள் கொடு என்றார் - ஆசாரியரோ தக்ஷிணைதாவென்றார். எ-று.

வறுமைத்துன்பத்தால் வருந்திப் பிரமனை நிந்தித்துப் பாடியது.

18. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா, இல்லைத்தான் பொன்னைத்தா னெனக்குத்தான் கொடுத்துத்தா னிரட்சித்தானா, அல்லைத்தான் சொல்லித்தா னாரைத் தானோவத்தா னையோவெங்கும், பல்லைத்தான் றிறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினானே.

இ-ள். பதுமத்தான் - தாமரைமலரை யிடமாகவுடைய பிரமன், புவியில்-இவ்வுலகத்தில்; கல்லைமண்ணை-கல்லையும்மண்ணையும்;காய்ச்சிக்குடிக்க காய்ச்சிக்குடிக்கும்படி, கற்பித்தானா-ஏற்படுத்தினானா; இல்லை - அப்படியன்றி; எனக்கு பொன்னைகொடுத்து இரட்சித்தானா-எனக்குப் பணத்தைக் கொடுத்துக் காப்பாற்றினானா; அல்லைசொல்லி - துன்பத்தைச்சொல்லி; ஆரைநோவ - யாரைநொந்து கொள்ளட்டும்; ஐயோ - அந்தோ; எங்கும்-(போகத்தகாத) எவ்விடத்திலும்போய்; பல்லைத் திறக்கப்பண்ணினான்-பல்லைத்திறந்து கெஞ்சும்படி. சிருஷ்டிசெய்தான். எ-று.

தம்மினும் சிவபெருமான் அதிகதுன்பமுள்ளவரெனப் பாடியது.

19. வஞ்சகர்பானடந்தலைந்தகாலிற்புண்ணும்
வாசறொறுமுட்டுண்டதலையிற்புண்ணும்
செஞ்சொல்லைநினைந்துருகுநெஞ்சிற்புண்ணும்
தீருமென்றேசங்கரன்பாற்சேர்ந்தேனப்பா
கொஞ்சமல்லபிரம்படியின்புண்ணும்வேடன்
கொடுங்காலாலுதைத்தபுண்ணுங்கோபமாகப்
பஞ்சவரிலொருவன்வில்லாலடித்தபுண்ணும்
பாரென்றேகாட்டினின்றான்பரமன்றானே.

இ-ள். வஞ்சகர்பால்-வஞ்சகரிடத்தில்; நடந்து அலைந்த-நடந்தலைந்ததனாலுண்டாகிய; காலில் புண்ணும்-என் காலிலுள்ள புண்ணையும்; வாசல்தோறும்-வீட்டுவாசற்படிகள்தோறும், முட்டுண்ட-முட்டுண்டதனால் உண்டாகிய, தலையில் புண்ணும்-தலையிலுள்ள புண்ணையும்;செஞ்சொல்லை (கவிபாடுதற்கு) செம்மையாகிய சொற்களை; நினைந்து உருகும்-ஆலோசித் துருகுதலா லுண்டாகிய; நெஞ்சில் புண்ணும் - மனத்திலுள்ள புண்ணையும்; தீரும் என்று - நீக்கியருளுவீரென்று; சங்கரன் பால் - சிவபெருமானிடத்தில்; சேர்ந்தேன்-அடுத்தேன்; (சேர்தலும்) பரமன் - சிவபெருமான் - (என்னைநோக்கி); அப்பா-அய்யா; கொஞ்சம் அல்ல - (உன்போலச்) சிறிதல்ல; பிரம்படியின் புண்ணும்-(பாண்டியனது) பிரம்படியாலுண்டாகிய புண்ணையும்; வேடன்-வேடனாகிய கண்ணப்பன்; கொடுகாலால் - வலியகாலினால்; உதைத்த புண்ணும்-உதைத்ததனாலுண்டாகிய புண்ணையும்; பஞ்சவரில்ஒரு

வன்-பாண்டவர் ஐவருள் ஒருவனாகிய அருச்சுனன்; கோபம்ஆக-தனக்குக் கோபமுண்டாகி, வில்லால் அடித்த புண்ணும் - (பாசுபதாஸ்திரம் பெற வந்தபோது) வில்லினால் அடித்ததனா லுண்டாகிய புண்ணையும், பார்என-பாரென்று; காட்டிநின்றான்-எனக்குக் காட்டிநின்றான். எ-று.

மழவரங்கள் என்பவனை விழித்துப் பாடியது.

20. கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன் கடிவாளங் கறுப்பில்லாத, உள்ளிக்கேன் பரிமளங்க ளுவர்நிலத்துக் கேன்விதைக ளொடித்துப்போடும், சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற் கேன் கவசஞ் சும்மாபோகும், பள்ளிக்கேனதிவீர மழவரங்கபூபனெனும் பட்டந்தானே.

இ-ள். கள்ளிக்கு-கள்ளிச்செடிக்கு, முள்வேலி என்-முள்ளினாற்செய்த வேலியாதுக்கு, கழுதைக்கு கடிவாளம் என் - கழுதைக்கு கடிவாளம் யாதுக்கு, கறுப்பு இல்லாத உள்ளிக்கு-வெள்ளைப் பூண்டுக்கு, பரிமளங்கள் என்-பரிமள திரவியங்கள் யாதுக்கு, உவர் நிலத்துக்கு - களர்நிலத்துக்கு, விதைகள் என்-விதைகள் யாதுக்கு, ஒடித்துப்போடும் - ஒடித்தெறிகின்ற, சுள்ளிக்கு-சுள்ளி விறகுக்கு, கோடாலி என்-கோடாலி யாதுக்கு, துடைப்பத்திற்கு-விளக்குமாறுக்கு, கவசம் என் - மூடல்யாதுக்கு, சும்மாபோகும் பள்ளிக்கு-பயனில்லா திறக்கப்போகிற பள்ளிச்சாதியானுக்கு, அதிவீரம்மிகுந்த பராக்கிரமமுள்ள, பழவரங்க பூபன் என்னும் - மழவரங்க பூபதியென்கிற, பட்டம் என்-பட்டப்பெயர் யாதுக்கு. எ-று.

ஆரோதன் மைந்தன்மீது பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

21. கயக்காவிநாறுங்குழம்பிற்பிரசண்டா
காரார்கொடைச்செங்கையாரோதன்மைந்தா
இயக்காநின்மார்பிற்செழும்புன்னைபந்தார்
இப்போதுநல்கலென்பேதைமார்பில்
சயக்காமவேளம்புதையாதுமுத்துத்
தாமஞ்சுடாசந்தநம்பூசினாலும்
செயக்காதுவேயோசெவிக்கும்பொறுக்கும்
தீயென்னமீளாதுதிங்கட்கொழுந்தே.

இ-ள். கயம்-ஓடையிற்பூத்த, காவி-குவளை மலர்மாலையையும், நாறும்-பரிமளிக்கிற, குழம்பின்-சந்தனக் குழம்பையுமணிந்த, பிரசண்டா-ப்ரசண்டனே, கார்-மேகத்தின் தன்மை, ஆர்-பொருந்திய, கொ[illegible] -கையுள்ள

செங்கை - செவந்த கையினையுடைய, ஆரோதன்மைந்தா - ஆரோதனது புதல்வனே, இயக்கு ஆய்-விளக்கமுண்டாகிய, நின்மார்பில் - உன்மார்பில் தரித்த, செழு-செழுமையாகிய, புன்னையர்தார்-புன்னைமலர்மாலையை, இப்போது நீ நல்கின்-இப்பொழுது நீ அருள்செய்தால், என் பேதைமார்பில்-என் பெண்ணினது மார்பில், சயம்-வெற்றியையுடைய, காமவேள்-மன்மதனது, அம்பு-பாணம், தையாது-தைக்காது, முத்துத்தாமம் சுடா-முத்துமாலைகள் சுடமாட்டா, சந்தநம் பூசினாலும்-சந்தனக்குழம்பைப் பூசினாலும், செயக்காது-வருத்தாது, வேயோ - வேய்ங்குழலோசையோ, செவிக்கும் பொறுக்கும்-காதுக்கும் பொறுத்திருக்கும், திங்கள் கொழுந்து - இளம்பிறையானது, தீயென்ன மீளாது-நெருப்புப்போல மீண்டும்வராது. எ-று.

உன் புன்னைமலர்மாலையைத் தந்தாயாயின், என்பெண் மன்மதபாணம் முதலியவற்றால் வருந்தாள், என்பது கருத்து.

திருக்கடன் மல்லையில் சிவந்தான் என்னும் பிரபுவின்மீது பாடியது.

22. சொன்னமன்ன மாடைதந்தான் வீதியில் வெற்றிலைமடித்துச் சுருளுந்தந்தான், கன்னலின் மோதிரந்தந்தான் சரப்பணி தந்தானிரட்டைக் கடுக்கன்றந்தான், செந்நெல்விளை யூர்தந்தான் பேர்தந்தான் மல்லையில்வாழ் சிவந்தானுங்கட், கென்னதந்தா னென்றவர்கட் கெத்தனையுத் தரந்தந்தா னியம்பத்தானே.

இ-ள். மல்லையில் வாழ்-திருக்கடன் மல்லையில்வாழ்கின்ற,சிவந்தான்-சிவந்தான் என்னும் பெயருள்ள கொடையாளன், சொன்னம் அன்னம் ஆடைதந்தான் - பொன்னையும் நல்லபோஜநத்தையும் நல்லவஸ்திரத்தையும் கொடுத்தான், வீதியில்-தெருவில்நின்று, வெற்றிலைச்சுருளும்-வெற்றிலைச் சுருளையும், மடித்து தந்தான்-மடித்துக்கொடுத்தான், கல்நவில் மோதிரம் தந்தான் - கல்லிழைத்த மோதிரத்தையும் கொடுத்தான், சரப்பணி தந்தான்-சரப்பணியென்னும் ஆபரணத்தையும் கொடுத்தான், இரட்டைக் கடுக்கன் தந்தான்-இரட்டைக் கடுக்கனையும் கொடுத்தான், செந்நெல்விளை ஊர்தந்தான் -செந்நெல் விளைதற்குரிய ஊரையும் கொடுத்தான், பேர்தந்தான்-சிறப்புப் பெயரையும் கொடுத்தான், உங்கட்கு - உங்களுக்கு, என்ன தந்தான் என்பவர்கட்கு - என்ன கொடுத்தானென்று வினவுவோர்க்கு, இயம்ப-சொல்லுதற்கு, எத்தனை உத்தரம் தந்தான்-எத்தனை மறுமொழிகளைக் கொடுத்தான். எ-று.

பரிசில்பெற்று வரும்போது கண்டவர் யாவரும் கேட்க மறுமொழி கூறி அலுத்துக் கூறியது. மல்லையில்வாழ் சிவந்தான் சொன்ன முதலியவற்றைக் கொடுத்தானேயன்றி வினவுவோர்க்குச் சொல்லும் உத்தரங்களைக் கொடுத்திலன் என்பது கருத்து.

சீதாராமன் என்னும் பிரபுவின்மீது பாடியது.

23. அத்திரம்வேலாவலயமிராசியொன்றிற்
கமைந்தபெயர்மூன்றினிடையக்கரத்தால்
மெத்தநடுக்குற்றுனைவந்தடைந்தேனிந்த
விதனமகற்றிமற்றையெழுத்தோராறில்
பத்துடையானைத்தடிந்துபெண்ணாச்செய்து
பரிவினுகர்வோனிருதாள்பணிந்துபோற்றும்
சித்தசனேதெளியசிங்கன்றவத்திற்றோன்றுஞ்
சீதாராமப்ரபலதியாகவானே.

நடுவெழுத்தலங்காரம்.

இ-ள். அத்திரம்-பகழி (அம்பு), வேலாவலயம் கடல், இராசி ஒன்றிற்கு அமைந்தபெயர் - ஒருராசிக் கமைந்தபெயராகிய கன்னி, மூன்றின்-இந்த மூன்றில், இடை அக்கரத்தால் - நடுவெழுத்துக்களால், மெத்தநடுக்குற்று-மிகவும் நடுக்கமடைந்து, உன்னைவந்து அடைந்தேன்-வந்துஉன்னையடுத்தேன், இந்தவிதனம் அகற்றிடு - இந்த விசனத்தை நீக்கிவிடுவாயாக, மற்றை எழுத்து ஓர் ஆறில்-மற்றைய ஆறெழுத்துக்களினால், பத்து உடையானை தடிந்து - பத்துத் தலைகளை உடையவனைக் கொன்று, பெண் ஆக செய்து-பெண்ணுருவாக்கி, பரிவின் நுகர்வோன்-அன்போடுண்டவனாகிய திருமாலின், இருதாள்-இரண்டுதிருவடிகளை, பணிந்துபோற்றும் - வணங்கித் துதிக்கின்ற, சித்தசனே-அழகினால் மன்மதனை நிகர்த்தவனே, தெளியசிங்கன்-தெள்ளியசிங்கனது, தவத்தின்தோன்றும்-தவப்பேற்றா லவதரித்த, சீதாராம-சீதாராமனெனும் பெயருள்ள, பிரபலதியாகவானே-பிரசித்தமான கொடையாளனே. எ-று.

பகழி, கடல், கன்னி - இந்த மூன்றிலுமுள்ள நடுவெழுத்துக்களைச் சேர்த்தால் கடன் என்றாகும், மற்றைமுதலிறுதி யெழுத்துக்களைச் சேர்த்தால், பழி, கல், கனி என்றாகும். இவற்றில் முன்னையதாகிய பழியினால் ராவணனைக்கொன்று, இரண்டாவதாகிய கல்லை அகலிகையென்னும் பெண்ணாக்கி, மூன்றாவதாகிய கனியை சவரிசமர்ப்பிக்க உண்டவன் எனப் பொருளுரைத்துக்கொள்க.

உலுத்தனாகிய ஒருவனை யிழித்துப் பாடியது.

24. கல்லாலையமாந்தேவருமாங்கழுதைகசடர்பொதிசுமக்கும்
கடாம்வாவுழுதுபயிரிடற்காங்கட்டம்பன்றிக்கிரையாகும்
புல்லேலறீசர்வசகனமாம்பொதியுஞ்சுமக்கும்பிணமெனிலோ
பூசிமுடித்துமறையோர்க்குப்பொருளையீந்துபுகழெய்தும்

மல்லார்குட்டிச்சுவரெனிலோமாடுரைஞ்சுமறைவாகும்
மதியாத்துடைப்பந்தானெனிலோமாடகூடங்களைவிளக்கும்
அல்லாதுலுத்தன்றனக்கிணையாயாரையுரைப்பேன்புவிமீதில்
அவனைக்குறித்துக்கூறுமிடத்தவனுக்கவனேசரிதானே.

இ-ள். கல்-கல்லானது, ஆலயம் ஆம் - கோயிலாகும், தேவரும் ஆம்-தெய்வங்களுமாகும், கழுதை-கழுதையானது,கசடர் பொதிசுமக்கும்-இழிஞருடைய பொதியைச்சுமக்கும், கடாவோ-எருமைக்கடாவோ, உழுதுபயிரிடற்கு ஆம்-(நிலத்தை) உழுது பயிர்செய்ய உதவும், கட்டம் - மலமானது, பன்றிக்கு இரை ஆகும்-பன்றிக்கு உணவாகும், புல் எறு - அற்பமாகிய எருது, ஈசர்வாகனம் ஆம்-சிவபெருமானுக்கு வாகனமாகும், பொதிசுமக்கும்-மற்றையர்க்குப் பொதிசுமந்தும் உதவிசெய்யும், பிணம் எனிலோ-பிணமென்றாலோ, பூசி-சந்தனமுதலியவற்றைப்பூசி, முடித்து - மலர்முதலியவற்றை யணிந்து, மறையோர்க்கு-வேதியருக்கு, பொருளையீந்து-பணத்தைக்கொடுத்து, புகழ் எய்தும் - கீர்த்தியையடையும், மல் ஆர் குட்டிச்சுவர் எனிலோ - வளமாகிற குட்டிச்சுவரென்றாலோ, மாடும் உரைஞ்சும்-மாடுகளும் உரைஞ்சுதற் குதவும், மறைவு ஆகும், மறைவு ஆகும், மதியா-ஒருபொருளாக மதிக்கப்படாத, துடைப்பம் எனிலோ - விளக்குமாறு என்றாலோ, மாடகூடங்களை விளக்கும்-மாடமாளிகைகளை விளக்கஞ்செய்யும், அல்லாது-இவைகளன்றி; உலுத்தன் தனக்கு இணையாய்-லோபிக்குச் சமானமாக, புவிமீதில்-பூமியின்மீது, யாரை உரைப்பேன் - யாரைச்சொல்லுவேன், அவனைக்குறித்துக் கூறுமிடத்து-அவனைப்பற்றிச்சொல்லுமிடத்தில், அவனுக்கு அவனேசரி-அவனுக்கு அவனே சமானமாவான். எ-று.

திருவாரூர்த் தியாகராயப்பெருமான் பவனியைத்தரிசித்த

தலைவி தன்னிலைமையை பூவைகிள்ளைகளோடுசொல்லி யிரங்கல்.

25. வீரவெண்டையப்ரதாபர்தியாகராசர்கமலைசூழ்
 வீதிகண்டுபவனிகண்டுவிந்தைகண்டுபக்தியாய்த்
தூரநின்றபூவைகாளடுத்துநின்றகிள்ளைகாள்
 துன்பமேயலாதுபாவிசுகமறிந்ததில்லையால்
மாரனம்புபட்டகாயமாறுதில்லையிரவெலாம்
 மங்கைமார்தொடுத்தசண்டைமாறுதில்லையென்செய்வேன்
ஆர்இருந்துமுதவியில்லையென்றனாசையொழியுமோ
 அதுவுமில்லைவிதியைநொந்துயாவதில்லைகாணுமே.

இ-ள். வீரவெண்டையம்-வீரக்கழலையுடைய, பிரதாபர் - மிகுவீரர், தியாகராஜர்-தியாகராயர், கமலைசூழ்-கமலாலயத்தைச்சூழ்ந்த,வீதிகண்டு-வீதியைநோக்கியும், பவனிகண்டு-அவரது பவனியைநோக்கியும், விந்தை

கண்டு-வைபவத்தை நோக்கியும், பந்தியாய்-வரிசையாக, ஆரநின்ற பூவைகாள்-ஆரத்தில் நின்ற நாகணவாய்ப் பறவைகளே, அடுத்துநின்ற கிள்ளைகாள்-கிட்டிநின்றகிளிகளே, துன்பமே அல்லாது - துன்பமேயன்றி, பாவி-பாவியாகிய நான், சுகம் அறிந்தது இல்லை - இன்பத்தை யநுபவித் தறிந்ததில்லை, மாரன் அம்புபட்ட காயம் - மன்மதபாணம் தைத்தகாயமானது, ஆறுது இல்லை-ஆறுவதில்லை, இரவு எல்லாம் - இராமுழுதும், மங்கைமார் தொடுத்த சண்டை-பெண்கள் தொடங்கினபோர், மாறுவதில்லை-நீங்குதவில்லை, என்செய்வேன்-நான் யாதுசெய்வேன், ஆர்இருந்தும்உதவியில்லை-யாரிருந்தும் சகாயமில்லை, என்றன் ஆசை ஒழியுமோ - என்னுசைப்பெருக்கம் நீங்குமோ, அதுவும் இல்லை - அதுவுங்கிடையாது, விதியைநொந்தும் ஆவது இல்லை - என்விதியை நொந்துகொண்டாலும் உண்டாவதோர் பயனுமில்லை. எ-று.

முருகர்மீது பாடியது.

சத்தபங்கி.

26. திமிரமருதபுலாதிகளைதருதேடரிதாய்மாறுஞ்
சென்னமகாமால்வசமேமமதமுறுசிறுமையின் மதியாலே
குமரசிகாமணியேகனிவாயருள்கூடெனவேகூறுங்
குருபரகோலாகலனேவிதியொடுகுறுகியமிடிதீராய்
நமதுவிநாயகதேவசகோதரநாடோறுந்தேறும்
நவிமகள்சேர்வேடுவனேபுதுமணநறுமலர்புனைமார்பா
அமரர்பிரானருள்குஞ்சரிதோள்புணராடவனேமீறும்
அரகரவேலாயுதனேமுதுமறையறுமுகமுருகோனே.

இ-ள். குமர-குமாரக்கடவுளே, சிகாமணியே-யாவருக்கும் சிரோரத்நமே, கனிவாய்-பரிவுகொண்டு, அருள்கூடு எனகூறும் - திருவருளைப் பெறக்கடவையென்றுசொல்லுகின்ற, குருபர - குரு சிரேஷ்டனே, கோலாகலனே-சம்பிரமமுடையவனே, நமது விநாயகதேவ சகோதர-நமது விநாயகமூர்த்திக்குத் திருத்தம்பியே, நாள்தோறும் தேறும் - தினந்தோறும் சராசரங்களை தேர்ந்தறிந்த, நவ்விமகள்-மான்மகளாகிய வள்ளிநாயகியை, சேர்-புணர்ந்த, வேடுவனே - வேடனே, புதுமணம் - புதியவாசனையுள்ள, நறுமலர்-நறுவிய புஷ்பமாலைகளை யணிந்த, மார்பா-திருமார்பையுடையவனே-அமரர்பிரான் அருள்-தேவேந்திரன்பெற்ற, குஞ்சரி - தெய்வயானையின், தோள்புணர் - தோள்களைத்தழுவிய, ஆடவனே - மஹாபுருஷனே, மீறும் அர அர-உயர்ந்த அரனுக்கரனே, வேலாயுதனே - வேற்படையையுடையவனே, முதுமறை-பழமையாகிய வேதப்ரதி பாத்யனாகிய, அறுமுக ஷண்முகனே, முருகோனே-முருகக்கடவுளே, திமிரம் அருத-அஞ்ஞான இருள் நீங்காத, புலாதிகள்-ஐம்புலன் முதலியவைகள், தரு - தந்த; தேடு அரிது ஆய்-தேடிக் கண்டுகொள்ளல் அருமையாகி, மாறும் - மாறி மாறி வருகின்ற; சென்னம் - பிறவிகளிலுண்டாகிய, மகாமால்வசம் - சிறுமை

யின் மதியாலே-சிற்றறிவால் உளதாகிய விதியொடு - ஊழினால்;குறுகிய-நேர்ந்த, மிடி-வறுமையை, தீராய்-நீக்கி யருள்வாயாக. எ-று.

திமிரமறுதபுலாதிகளைதரு - - தேடரிதாய்
மாறுஞ்செனனமகாமால்வசமே - மதமுறு - சிறுமையின் மதியாலே

குமரசிகாமணியேகனிவாயருள் - - கூடெனவே
கூறுங்குருபரகோலாகலனே - விதியொடு - குறுகியமிடிதீராய்

நமதுவிநாயகதேவசகோதர - - நாடொறுமே
தேறுங்கவிமகள்சேர்வேடுவனே - புதுமண - நறுமலர்புனைமார்பா

அமரர்பிரானருள்குஞ்சரிதோள்புணர் - - ஆடவனே
மீறும்மரகரவேலாயுதனே - முதுமறை - அறுமுகமுருகோனே.

சத்தபங்கியின் பிரிவு.

கட்டளைக்கலித்துறை.

1. திமிரமறுதபுலாதிகளைதருதேடரிதாய்
குமரசிகாமணியேகனிவாயருள்கூடெனவே
நமதுவிநாயகதேவசகோதரநாடொறுமே
அமரர்பிரானருள்குஞ்சரிதோள்புணராடவனே.

கொச்சகம்.

2. தேடரிதாய்மாறுஞ்செனனமகாமால்வசமே
கூடெனவேகூறுங்குருபரகோலாகலனே
நாடொறுமேதேறுங்கவிமகள்சேர்வேடுவனே
ஆடவனேமீறும்மரகரவேலாயுதனே.

கலிவிருத்தம்.

3. மாறுஞ்செனனமகாமால்வசமே, கூறுங்குருபரகோலாகலனே,
தேறுங்கவிமகள்சேர்வேடுவனே, மீறும்மரகரவேலாயுதனே.

சிந்தடி வஞ்சிவிருத்தம்.

4. மதமுறுசிறுமையின்மதியாலே, விதியொடுகுறுகியமிடிதீராய்
புதுமணநறுமலர்புனைமார்பா,முதுமறையறுமுகமுருகோனே.

குறளடி வஞ்சிவிருத்தம்.

5. சிறுமையின்மதியாலே, குறுகியமிடிதீராய்
நறுமலர்புனைமார்பா, அறுமுகமுருகோனே,

வெண்பா.

6. தேடரிதாய்மாறுஞ்செனனமகரமால்வசமே
நாடொறுமேமேதுறுநவிமகள்சேர்—வேடுவனே
ஆடவனேமீறுமாகரவேலாயுதனே
கூடென்வேகூறுங்குரு

இவற்றிற்கு மேலுள்ள முதற்பாட்டின் பொருளையே உரைத்துக்கொள்க. இந்தப்பாடல் ஏழுவகையாய்ப் பிரிக்கப்பட்டு ஏழுபாடலா யமைதலால் சத்தபங்கி எனப்பட்டது.

மயிலாசல முருகர்மீது பாடியது.

நவபங்கி.

7. அரிமருகாகருணாலயனேதிடவாரணனேபோதன்
அரியிமையோர்சூழ்புனிதாபுலவடாயிலமர்பொற்கரனே
கரிமுகனேயசகோதரனேபடிகாரணனேநாதங்
கதியுறவேவானவனேநலமிகுகயிலையனற்குருவே
குரவலர்நீபமணிப்புயனேவடிகூரமுதேயோதுங்
குருமணிசேர்மார்பினனேயுலகருள்குயிலுதவுத்தமனே
மரகதமாமயில்வாகனனேகொடிவாரணனேகோதின்
மதியகமேவாழ்குமராகுலவியமயிலமலைக்குகனே.

இ-ள். அரிமருகா-திருமாலுக்கு மருமகனே; கருணாலயனே-கருணைக் கிருப்பிட மானவனே; திட ஆரணனே - எல்லாருக்கும் த்ருடதரப்ரமாண மாகிய வேதப்ரதி பாத்யனே; போதன்-பிரமனும்; அரி-திருமாலும்; இமையோர்-மற்றைத்தேவரும்; சூழ்-சூழ்ந்து வணங்குகின்ற; புனிதா - பரிசுத்தனே; புலவு அடர் அயில்-மாமிசம் பொருந்திய வேலாயுதம், அமர்-பொருந்திய, பொன்கரனே-அழகிய கையை யுடையவனே, கரிமுகன்-யானைமுகத் தோனாகிய விநாயகனுக்கு, நேய சகோதரனே - அன்புள்ள சகோதரனே; படிகாரணனே-உலககாரணனே; நாதம் கதி உறவே-நாதவீடாகிய சுற்றமே; வானவனே-தேவனே; நலம்மிகு-நன்மைமிகுந்த; கயிலையன்-கயிலாய பதியாகிய சிவபெருமானுக்கு; நல்குருவே - சிறந்த ஆசாரியனே, குரவு அலர்-குராமலர்மாலையையும்; நீபம் - கடப்பமலர் மாலையையும் அணிந்த; மணிபுயனே-அழகிய தோள்களையுடையவனே; வடிகூர் அமுதே-தெளிவு மிகுந்த அமிர்தமே; ஓதும் குருமணிசேர்-சொல்லப்பட்ட நிறமுள்ள மணி மாலைகள் பொருந்திய; மார்பினனே - திருமார்பையுடையவனே, உலகு அருள்-உலகங்களையெல்லாம் ஈன்ற; குயில்-குயில்போல் பவளாகிய உமாதேவி; உதவு-பெற்ற; உத்தமனே - நல்லோனே; மர்கதம் - மரகத மணி போன்ற; மா-பெரிய; மயில்-மயிலை, வாகநனே-வாகநமாக வுடையவனே;

கொடிவாரணனே-கோழிக்கொடியை யுடையவனே; கோது இல்-குற்றமற்ற; மதி அகம்-(அன்பாது) அறிவில்; வாழ்-வாழ்கின்ற; குமரா-குமரனே; குலவிய - விளங்கிய; மயிலமலை - மயிலாசலத்திலுள்ள; குகனே-குகனே.

அரிமருககருணாலயனே - திட - ஆரணனே
போதன்னரியிமையோர்சூழ்புனிதா - புலவடர் - அயிமலர்பொற்கா
கரிமுகனையசகோதரனே - படி - காரணனே [னே
நாதங்கதி - யுறவேவானவனே - நலமிகு - கயிலையனற்குருவே,
குரவலர்நீபமணிப்புயனே - வடி - கூரமுதே
ஓதுங்குருமணிசேர் மார்பினனே - உலகருள் - குயிலுதவுத்தமனே
மரகதமாமயில்வாகனனே - கொடி - வாரணனே
கோதின்மதியகமேவாழ்குமாரா - குலவிய - மயிலமலைக்குகனே

நவபங்கியின் பிரிவு.

சிந்தடிவஞ்சி விருத்தம்.

1. அருமருககருணாலயனே, கரிமுகனையசகோதரனே.
குரவலர்நீபமணிப்புயனே, மரகதமாமயில்வாகனனே.

சிந்தடிவஞ்சி விருத்தம்.

2. புலவடாயிலமர்பொற்கானே, நலமிகுகயிலையனற்குருவே,
உலகருள்குயிலுதவுத்தமனே, குலவியமயிலமலைக்குகனே.

கட்டளைக்கலித்துறை.

3. அரிமருககருணாலயனேதிடவாரணனே
கரிமுகனையசகோதரனேபடிகாரணனே
குரவலர்நீபமணிப்புயனேவடிகூரமுதே
மரகதமாமயில்வாகனனேகொடிவாரணனே.

கொச்சகம்.

4. ஆரணனேபோதனரியிமையோர்சூழ்புனிதா
காரணனேநாதங்கதியுறவேவானவனே
கூரமுதேயோதுங்குருமணிசேர்மார்பினனே
வாரணனேகோதின்மதியகமேவாழ்குமரா.

சந்தவிருத்தம்.

5. போதன்னரியிமையோர்சூழ் புனிதாபுலவடாயிலமர்பொற்கா
நாதங்கதியுறவேவானவனேநலமிகுகயிலையனற்குருவே [னே

ஓதுங்குருமணிசேர்பின்னையுலகருள்குயிலுதவுத்தமனே
கோதின்மதியகமேவாழ்குமாரகுலவியமயிலமலைக்குகனே.

கலிவிருத்தம்.

6. போதன்னரியிமையோர்சூழ்புனிதா
நாதங்கதியுறவேவானவனே
ஓதுங்குருமணி சேர்மார்பினனே
கோதின்மதியகமேவாழ்குமரா.

குறளடிவஞ்சி விருத்தம்.

7. அயிலமர்பொற்கரனே, கயிலையனற்குருவே
குயிலுதவுத்தமனே, மயிலமலைக்குகனே.

இதுவுமது.

8. திடவாரணனே, படிகாரணனே
வடிகூரமுதே, கொடிவாரணனே.

வெண்பா.

9. ஆரணனேபோதன்னரியிமையோர்சூழ்புனிதா
கூரமுதேயோதுங்குருமணிசேர்-மார்பினனே
வாரணனேகோதின்மதியகமேவாழ்குமரா
காரணனேநாதங்கதி.

இவற்றிற்குமேலுள்ள முதற்பாட்டின் பொருளையே உரைத்துக்கொள்க, இந்தப்பாடல் ஒன்பதுவகையாய்ப் பிரிக்கப்பட்டு ஒன்பதுபாடலாயமைதலால் நவபங்கி எனப்பட்டது.

மதுரகவிராயர் பாடல்.

துரைரங்கன் என்னும் பிரபுவின்மீதுபாடியது.

1. துங்கவரைமார்பா துரைரங்கபூபதியே
இங்கோர்புதுமையியம்பக்கேள்-பங்கயக்கை
ஆயிழைக்குநான்குநுதலைந்துகுழையாறுமுலை
மாயவிழியேழாமதி.

இ-ள். துங்கம்-பரிசுத்தமாகிய, வரை - மலைபோன்ற, மார்பா - மார்பையுடையவனே, துரைரங்க பூபதியே - துரைரங்கன் என்னும் பூபனே, இங்கு-இவ்விடத்தில், ஓர்புதுமை-ஒருபுதியசெய்தி உண்டு, இயம்பக்கேள்-அதை நான் சொல்லக் கேட்பாயாக, (என்னெனின்) பங்கயம்கை - தாமரை மலர்போலுங் கையினையுடைய, ஆயிழைக்கு - பெண்ணுக்கு, நுதல் நான்கு-நெற்றி நான்கு, குழை ஐந்து-காதணி ஐந்து, முலை ஆறு-தனங்கள் ஆறு, மாயம் விழி எழ்-வஞ்சகமுள்ள கண்கள் எழு, ஆம்-ஆகும், மதி-(இந்தப்புதுமையை நீயே) ஆலோசித் தறிவாயாக. எ-று.

ஆயிழை-கன்னி-(ராசி), இதற்கு நான்காவது ராசி தநுசு-(வில்)

... ... ஐந்தாவது ராசி, மகரம்-(மகரமீன்)
... ... ஆறுவது ராசி-கும்பம்-(குடம்)
... ... எழாவதுராசி-மீனம்-(கெண்டைமீன்)

ஒருபெண்ணுக்கு வில்லை நிகர்த்த நெற்றியும்,
மகரமீனுருவமைந்த காதணியாகிய மகரகுண்டலமும்,
குடம்போலுந் தனங்களும்,
கெண்டைமீன்போலுங் கண்களும் உளவென்பது கருத்து.

கொண்டுவந்துபோட்டுக் கொளுத்துஎன்று முடிவுபெற, ஒரு
வெண்பாப் பாடவேண்டுமென்று ஒருபுலவர்மிசை
கொடுக்கப் பாடியது.

2. அந்திவெடி முல்லையரும்பெடுத்துநான்வந்தேன்
விந்தையதாநாயகற்குமெல்லியலே சுந்தரஞ்சேர்
செண்டுகட்டவேண்டுந்திருவிளக்கிலேதிரியைக்
கொண்டுவந்துபோட்டுக்கொளுத்து.

இ-ள். மெல்லியலே - மிருதுவாகிய சுபாவமுள்ளதோழியே, அந்திமாலைக்காலத்தில், வெடி-மலர்கின்ற, முல்லைஅரும்பு - முல்லைமுகைகளை, நான் எடுத்துவந்தேன்-நான் பறித்துவந்தேன், (அவற்றை) விந்தை ஆக-ஆச்சரியமுண்டாக, நாயகற்கு-தலைவனுக்கு, சுந்தரம் சேர்-அழகுபொருந்திய; செண்டுகட்டவேண்டும் - செண்டாகக் கட்டவேண்டும், திருவிளக்கிலே-திருவிளக்கின்கண், திரியை கொண்டுவந்துபோட்டுக்கொளுத்து-திரியைக்கொண்டுவந்துபோட்டுக் கொளுத்திவிடு. எ-று.

தலைவியிரங்கல்.

3. சித்திரமாமண்டபங்களென்றல்வருசாளரங்கள்
பத்தியுலாவும்பளிக்கறைகள்-இத்தனைவிட்
டிக்குச்சிலயானிருப்பிடமென்றார்சொன்ன
ரிக்குச்சிலையானுக்கின்று.

இ-ள். சித்திரம்-சித்திரவேலையமைந்த, மாமண்டபங்கள்-பெரியமண்டபங்களும், தென்றல்வரு சாளரங்கள் - தென்றற்காற்று வருவதற்குரிய சாளரங்களும், பத்தி உலாவும் பளிக்கு அறைகள் - வரிசைகளாய் உலாவுதற்குரிய பளிங்கினாற்செய்யப்பட்ட அறைகளும் ஆகிய; இத்தனைவிட்டு-இத்தனையும் விட்டு, இ-இந்த; குச்சிலை - சிறுகுடிலை, யான் இருப்பு இடம் என்று-நானிருத்தற்குரிய இடமென்று, இக்குசிலையானுக்கு-கரும்புவில்லையுடையவனாகிய மன்மதனுக்கு; இன்று ஆர்சொன்னார் - இன்றுயார்சொன்னார். எ-று.

திருநின்றவூரில் காளத்தியப்ப முதலியாரென்பவர் ஒருவரிருந்தார். அவர் நாள்தோறும் தம்மிடத்துவரும் வித்வான்களுக்கு அவர்கள் மனமகிழும்படி வேண்டியபொருள்களைப் பரிசிலாகக்கொடுத்துவருவது வழக்கம் இவர் இப்படிக் கொடுத்துவருவதை அந்தநாட்டரசன் கேள்வியுற்று, பொறாமைகொண்டு, அவரிடத்திலிருந்த திரவியமுழுதும் கவர்ந்துகொண்டனன். அதனால் அவர் வறுமையடைந்து அந்தவூரைவிட்டு வேறுதேசத்துக்குப்போக எண்ணிப்புறப்பட்டுப்போய் அன்றுசாயங்காலம் வழியிலிருந்த ஓர்சத்திரத்தின் ஒரு புறத்தில் படுத்திருந்தார். அப்போது வேறொரு ஊரிலுள்ள ஒருவித்வான் இவரது கொடைச்சிறப்பைக்கேள்வியுற்று இவரிடத்தில்போய்ப் பரிசில்பெற்றுவரலாமென்று எண்ணிவந்தவர், அந்தச்சத்திரத்தில் இவரிருந்த இடத்திற்கருகே ஒருபுறத்தில் படுத்திருந்தார். அந்த இரவில்; அந்தவித்வான்பசி அதிகரிக்கவருந்தி தன்சரித்திரத்தை நோக்கிச் சொல்லியது.

4. நீளத்திரிந்துழன்றாய்நீங்காநிழல்போல
நாளைக்கிருப்பாயோநல்குரவே-காளத்தி
நின்றைக்கேசென்றக்கானீயெங்கேநானெங்கே
இன்றைக்கேசற்றேயிரு.

இ-ள். நல்குரவே - வறுமையே, நீள - நெடுங்காலமாக நீங்கா நிழல் போல-என்னைவிட்டு நீங்காத சாயைபோல, திரிந்து உழன்றாய் - நீயும்திரிந்து உழன்றனை, நாளைக்கு இருப்பாயோ - நாளைக்கும் இருக்கப்போகிறாயோ, நின்றைகாளத்திக்கு-நின்றவூர் காளத்தியப்ப முதலியாரிடத்துக்கு, சென்றக்கால்-போனால், நீ எங்கே-நீ-எவவிடமோ. நான் எங்கே-நான் எவ்விடமோ, இன்றைக்குசற்றே இரு-இன்றைக்குச்சற்றுநேரம் என்னிடத்திருப்பாயாக.

இந்தப்பாடலை முதலியார்கேட்டு, இந்தவித்வான் நம்மைநோக்கிச்சென்று நம்மூரில் நம்மைக்காணாது வருந்துவரேயென்று இரக்கமுற்று, அவ்வித்வான்பொருட்டாக, அன்றிரவிற்றானேதம்மூரைவந்துசேர்ந்து தமது மனைவியின் திருவாபரணங்களைவிற்று, வித்வானை உபசரித்தற்கு வேண்டியபொருள்களெல்லாம் சித்தப்படுத்திவைத்திருந்தார் மறுநாள்வித்வான் வந்து தம்மைக்கண்டவுடன அவருக்கு எதிர்கோடல் இன்சொற்கூறல் முதலிய உபசாரங்களைச்செய்து, விருந்துண்பித்த பிறகு, இப்படிப்பட்ட

வித்வான்களுக்குக் கொடுக்கப்பொருளில்லாதிருப்பதினும் இறப்பதே நல மென்றெண்ணி, தமதுவீட்டின்பின்புறத் தோட்டத்திலுள்ள ஒருபுற்றில் கையை வைத்தார், அந்தப்புற்றிலிருந்தபாம்பு அவர்கையில் தன்தலையிலிருந்த மாணிக்கத்தை உமிழ்ந்துபோய்விட்டது. முதலியார் மனமகிழ்ந்து அதனை அந்தவித்வானுக்குப் பரிசிலாகக்கொடுத்தனுப்பினர், அவர் அதை வாங்கிக்கொண்டு விக்ரயஞ்செய்தற்காக அந்நாட்டரசனிடத்திற் சென்றனர். அரசன் இந்த ரத்நம் உமக்குக் கிடைத்ததெப்படியென்று வினவ, அவர்நடந்த செய்தியைச்சொல்லக்கேட்ட அரசன் கோபங்கொண்டு காளத்தியப்ப முதலியாரை, வரவழைத்து, நாம் உமதுபொருள்களைக் கவர்ந்தபோது இதையெவ்விடத்தில் ஒளித்து வைத்திருந்தீர்; இன்னும் இதுபோன்ற எவ்வெப்பொருள்களை ஒளித்து வைத்திருக்கின்றீர் என்றுவருத்த, முதலியார்நடந்தசெய்தியை உண்மையாய்ச்சொன்னர் அதுகேட்ட அரசன் நீர்சொன்னது உண்மையாயின் நாம்பார்க்க அந்தப்பாம்புவந்து தன்னிடத்துள்ள சீவரத்னத்தை உமிழும்படி செய்வீராயின் ஒப்புக்கொள்வோம், அப்படிசெய்யாதிருந்தால் உமதுசிரசை வாங்கிவிடுவோமென்றான் அதுகேட்ட முதலியார் அப்படியேசெய்கிறேனென்றுஅரசனையழைத்துப் போய் அந்தப் புற்றைவலம்வந்து நீமுன்னே எனக்கு இந்தரத்நத்தைக் கொடுத்தது உண்மையானல் உன்னிடத்திலுள்ள ஜீவரத்நத்தையும் இவ்வரசன்காண எனக்குக்கொடுத்தருள வேண்டுமென்றுவணங்கி நிற்க, அப் பாம்பு புற்றினின்றும் வெளிப்பட்டுவந்து முதலியாரைப் பிரதக்ஷிணஞ் செய்து அவர்க்கெதிரே தன் ஜீவரத்நத்தை யுமிழ்ந்து இறந்துபோயிற்று, அதுகண்ட அரசன் அச்சமுற்று அவரை நமஸ்கரித்து அவரிடத்திலிருந்து தான் முன்கவர்ந்த பொருள்களையும் தன்னிடத்திலிருந்த திரவியங்களையும் கொடுத்து, சிறியேன் உமது மகிமையை அறியாதுசெய்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கிச்சென்றனன். பிறகு முதலியார்வழக்கம்போலவே வருகிற வித்வான்களுக்கு வேண்டும் பொருள்கொடுத்து அவர்களை மனமகிழ்வித்துக் கொண் டிருந்து, இறுதிக் காலத்தில் சிவபதமடைந்தார் என்பது கர்ணபரம்பரையாய்க் கேட்ட செய்தி.

பிரம்பூர் ஆநந்தரங்கப் பிள்ளையின்மீது பாடியது.

5. உலங்கொண்ட மணிப்புயனேபிரம்பூரானந்தரங்காவுன்பாற்செல்ல,வலங்கொண்டகருடனையா மிடங்கண்டோமெழினரையான்வலத்தேகண்டோம், பொலங்கொண்டமணிமாட மீமிசையிற்புயறவழும்புதுவையென்னும், தலங்கண்டோ நின துநகை முகங்கண்டோமினிவேண்டுந்தனங்கண்டோமே.

இ-ள். உலம்கொண்ட - திரள் கல்லினுருவத்தைக்கொண்ட, மணி-அழகாகிய, புயனே-தோள்களையுடையவனே, பிரம்பூர் ஆனந்தரங்கா-பிரம்பூர் ஆநந்தரங்கனே, உன்பால்செல்ல - உன்னிடத்திற்குவர, வலங்கொண்ட கருடனை-வலமாகவந்தகருடனை, யாம் இடம்கண்டோம்-யாம் இடம்

வரப்பார்த்தோம், எழில்நரையான்-அழகாகிய சிச்சிலிக்குருவியை, வலத்தேகண்டோம்-வலப்பக்கத்தில் வரப்பார்த்தோம், பொலம்கொண்ட-பொன்வேலை செய்யப் பெற்ற, மணிமாடமீமிசையில் - ரத்நகசிதமாகிய மாளிகைகளின் மீது; புயல் தவழும்-மேகங்கள் தவழ்கின்ற, புதுவையென்னும்-புதுவையென்கிற, தலம்கண்டோம் - பட்டணத்தைப்பார்த்தோம், நினது நகைமுகங்கண்டோம்-உனது நகைமுகத்தைப் பார்த்தோம், இனிவேண்டும் தனங்கண்டோம் - இனியாம் விரும்புகின்ற திரவியத்தையும் பார்த்தோம். எ-று.

பிரம்பூர் - புதுவையின் ஓர்பிரிவு.

இதுவுமது.

6: கார்படைத்த கரதலத்தான் றுரைதிருவேங் கடமளித்த கன்ஞெவெங்கும், பேர்படைத்த வானந்த ரங்கமகிபாலாநின் பிரம்பூர்நாட்டில், நேரிழைக்கு விழியேழு முலையாறுகாதைந்து நெற்றிநான்கு, பாரிடத்திலிப்புதுமை கண்டுவந்தேனிதன்பயனைப் பகர்ந்திடாயே.

இ-ள். கார்படைத்த - மேகத்தின் தன்மையைக் கொண்ட, கரதலத்தான்-கையையுடையவனும்,துரை-பிரபுவும்ஆகிய, திருவேங்கடம்அளித்த-திருவேங்கடம் என்னும் பெயருள்ள வள்ளல் ஈன்ற, கன்ஞ - கர்ணனே, எங்கும்பேர்படைத்த - எவ்விடத்திலும் பேர் பிரபலமாகப் பெற்ற, ஆனந்தரங்கமகிபாலா-ஆனந்தரங்க பூபாலனே, நின்பிரம்பூர் நாட்டில்-உன்பிரம்பூர் நாட்டின் கண், நேரிழைக்கு-ஒரு பெண்ணுக்கு,விழிஏழு-கண்கள்ஏழு, முலைஆறு-தனங்கள் ஆறு, காது ஐந்து, நெற்றிநான்கு-நெற்றிநான்கு,பார் இடத்தில்-பூமியினிடத்தில், இப்புதுமை கண்டுவந்தேன் - இந்தப்புதுமையைக் கண்டுவந்தேன், இதன்பயனை-இதன்பொருளை, பகர்ந்திடாய், சொல்வாய். எ-று.

விழியேழு முதலியவற்றின்பொருள் "துங்கவரைமார்பா" என்னும் பாட்டுரையில்காண்க.

அரங்கன் என்னும் பிரபுவினிடத்திற்போய் அவசரப்பட்டதனுல் அவன் என்பறக்கிறுய் என்றதற்குவிடையாகப்பாடியது.

7. கொக்குப்பறக்கும்புறுப்பறக்குங்குருவிபறக்குங்குயில்பறக்கும்
நக்குப்பொறுக்கிகளும்பறப்பர்நானேன்பறப்பேனராதிபனே
திக்குவிசயஞ்செலுத்தியுயர்செங்கோனடாத்துமரங்காநின்
பக்கமிருக்கவொருநாளும்பறவேன்பறவேன்பறவேனே.

இ-ள். கொக்கு பறக்கும்-கொக்குப்பறவாநிற்கும், புறுபறக்கும்-புறுப் பறவாநிற்கும், குருவி பறக்கும்-குருவி பறவாநிற்கும், குயில் பறக்கும்-குயில்பறவாநிற்கும், நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்-எச்சிற் பொறுக்கிகளும் பறப்பர், நான் ஏன் பறப்பேன் - நானேன் பறக்கிறேன், நர அதிபனே-நரேந்திரனே, திக்குவிஜயம்செலுத்தி-அஷ்டதிக்குகளிலும் வெற்றியைச்

செலுத்தி, உயர்-உயர்ந்த, செங்கோல்நடாத்தும் - செங்கோல் நடாத்து கின்ற, அரங்கா-அரங்கனே, நின்பக்கம் இருக்க-உன்பக்ஷமிருக்கும்போது, ஒருநாளும் பறவேன் பறவேன் பறவேன் - ஒருகாலத்திலும் பறவேன் பற வேன் பறவேன். எ-று.

ஒருபெண்ணைக்கண்டு மோகித்துப் பாடியது.

8. மூவொன்பதென்பதிலோர்நாளில்லைமொய்வனத்தில்
தாவுந்தனிமிருகந்தானில்லை-நேரே
வளையாநடையில்லைவாரிறுகவிம்மும்
முலையாளையான்முயங்குதற்கு.

இ-ள். வார்இறுக-கச்சு இறுகும்படி, விம்மும் முலையாளை-பருத்ததனங் களை யுடையவளை, யான் முயங்குதற்கு-நான் தழுவுதற்கு, மூவொன்பது என்பதில்-இருபத்தேழு நக்ஷத்திரங்களில் ஓர் நாள் இல்லை - ஒருநக்ஷத் திரமில்லை, மொய்வனத்தில்-நெருங்கியகாட்டில், தாவும்-தாண்டித்திரிகிற; தனி மிருகம் இல்லை-ஒப்பற்றம்ருகமில்லை, நேரேவளையாநடை இல்லை-நே ராக வளையா நடையுமில்லை, எ-று.

மூவொன்ப தென்பதி லோர்நாள்-உத்தரம் (மறுமொழி) மொய்வன த்தில் தாவுந் தனிமிருகம்-வேங்கை (பொன்) நேரேவளையா நடை-அன் னம் (சோறு) இந்தப்பெண்ணை நான்தழுவுதற்கு ஒரு மறுமொழியுஞ் சொ ல்லாள். என்னிடத்தில் பொன்னும் அன்னமும் இல்லை; எப்படித் தழுவு வேன் என்பது கருத்து.

வேதாசலம் என்னும் பிரபுவின்மீது பாடியது.

9. தனம்பொன்பணம்படைத்தசம்பரிபாப்பின்னோர்
முனம்பிச்சைகள்வனிலமூட்டை-கனம்பெற்ற
மீதலத்தும்போற்றுகின்றவேதாசலாநினைப்போல்
ஈதலத்தமார்கிலரேயென.

இ-ள் தனம்படைத்தசம்பு-தனத்தைப்படைத்தசிவனும்,பொன்படை த்த அரி-பொன்னைப்படைத்த திருமாலும், பணம் படைத்தபாம்பு-பணத் தைப்படைத்த ஆதிசேடனும் ஆகிய-இன்னோர்இத்தன்மையோர்; முன்னம் முற்காலத்தில் (முறையே) பிச்சை-பிச்சையேற்பவராயும்; கள்வன்-திருட ராயும்; நிலமூட்டை-பூமியாகிய மூட்டையைச்சுமப்பவராயும் (இருந்தார்க ளேயன்றி); கனம்பெற்ற-பெருமைபெற்ற; மீதலத்தும் போற்றுகின்ற வி ண்ணுலகத்திலும் புகழ்படுகிற; வேதாசலா-வேதாசலனே; நினைப்போல்-உன்னைப்போல்; ஈதல் அத்தம் ஆர்கிலர்-கொடைக்கையைப் பெற்றிலர்; என்-(காரணம்) யாது.

தன்னம்-மான்கன்று. இதுதனம்எனத்தொகுத்தது.பொன்-இலக்குமி பணம்-படம்பாப்புஎனவலித்தது மானைத்தரித்தசிவன் பிச்சையெடுத்தான்

இலக்குமியைப்படைத்த திருமால் திருடினன்; படத்தைப்பெற்ற ஆதிசேஷன் பூமிபாரத்தைச் சுமந்தான் என்பது கருத்து.

சீனிவாசையன்என்னும் அந்தணன்மீது பாடியது.

துறை-தலைவியிரங்கல்.

10 சேராநாளெல்லாம்வெண்டிங்களனமேசேர்ந்தால்
ஆராவமுதாமென்னுச்சரியம்-ஓராமல்
நானிவாசைமேவநரசையன்றந்தருளும்
சீனிவாசையன்மணஞ்செய்து.

இ-ள். அன்னமே-அன்னமே; ஓராமல் - ஆராயாமல்; நான்-யான், இ ஆசை மேவ-இந்தப் பழிக்குற்றத்தையுடைய; நரசையன் தந்தருளும் - நரசையன்பெற்றருளிய; சீனிவாசஐயன் - சீனிவாசையன் என்பவன்; மணம் செய்து-விவாகஞ்செய்து; சேராநாள்-என்னைக் கூடாதநாளில்; வெள் திங்கள்-வெண்மையாகிய சந்திரன்; எல் ஆம் - சூரியனுகின்ருன்; சேர்ந்தால்-கூடினுல்; ஆரா அமுது ஆம்-தெவிட்டாத அமுதம் ஆகிருன்; என் ஆச்சரியம்-என்ன ஆச்சரியம். எ-று.

அன்னம்-சோறு என்றலுமொன்று. நானிவாசைமேவ என்பதற்கு-நானிந்த ஆசையைப்பொருந்த எனினுமாம்.

கலசை வேதாசலன்மீது பாடியது.

11. அஞ்சம்பினுலெய்துமன்னநடைக்கன்னிகையை
அஞ்சம்பினுலெய்யும்பாவி-நெஞ்சமுறும்
காவிக்கணந்தார்கலசைவேதாசலனே
காவிக்கணந்தார்கடந்து.

இ-ள். அஞ்சம் - அன்னங்கள், பின்னுல் எய்தும் - பின்தொடர்தற்குரிய; அன்ன-அப்படிப்பட்ட; நடை-நடையையுடைய; கன்னிகையை-பெண்ணை; அஞ்சு அம்பினுல் எய்யும்-பஞ்சபாணங்களால் எய்கின்ற; அப்பாவி அந்தப்பாவியாகிய மன்மதன்; நெஞ்சம் உறும்-மனத்தில் பொருந்தி யிருக்கிருன்; காவிக்கண்-கருங்குவளைமலர்மீது; நந்து ஆர்-சங்குகள் தவழ்கின்ற; கலசை வேதாசலனே-கலசையில் வாழும் வேதாசலனே; இக்கணம்-இந்த க்ஷணமே; தார்கள் தந்து-உன்மாலைகளைக்கொடுத்து-கா-ரக்ஷி. எ-று.

காவி கள் நந்து ஆர் எனப்பிரித்து - குவளை மலர்த்தேனைச் சங்குகள் உண்ணுகின்ற என்றலுமாம். காவிக்கணந்தரர்-குவளைமலர்த் தொகுதியாமற் சமைத்த மாலையைத்தரித்த எனப்பொருள் கூறுதலும் ஒருவாறு பொருந்துமாயினும்; ஈற்றடியில் தார் என்பது மாலையென்றே பொருள்கொள்ளக் கிடத்தலால் பொருத்தப் பொருளன்றென்க.

இதுவுமது.

12 மதுமேவுகுவளையணிபுயனென்றேனே
மருவனஞ்சூழ்கலசைநகர்மன்னென்றேனே
முதுநீதிதெய்வசிகாமணிமாலுக்கு
மூத்தவொருமகனெனநான்மொழிந்திட்டேனே
பதுமாசனத்திமகனென்மேற்சண்டை
பண்ணுகின்றானவனாற் படுந்துன்பத்தால்
இதுவேதாசலமென்றேனிதற்கென்னன்னை
ஏதேதோவைதுபழியிடுகின்றாளே.

இ-ள். மதுமேவு-தேன் பொருந்திய; குவளை-குவளை மலர்மாலையை; அணி-அணிந்த; புயன் என்றேனே - தோள்களையுடையவன் என்றுசொன்னேனே மருவனம் சூழ்-வாசனை பொருந்திய சோலை சூழ்ந்த கலசை நகர் மன் என்றேனே - கலசைநகரத்துக்கு இறைவனென்று சொன்னேனே; முதுநீதி-உயர்ந்த நீதிமார்க்கத்தையுடைய; தெய்வசிகாமணி மாலுக்கு-தெய்யவசிகாமணியென்னும் பெரியோனுக்கு; ஒரு-ஒப்பற்ற;மூத்தமகன் என-மூத்தகுமாரன் என்று; நான்மொழிந்திட்டேனே-நான் சொன்னேனே;பதுமஆசனத்திமகன்-தாமரை மலரை ஆசனமாகவுடைய திருமகளுக்கு புதல்வனாகிய மன்மதன்; என்மேல் சண்டை பண்ணுகின்றான்-என்னோடு போர் செய்கிறான்; நான் அவனால்படும் துன்பத்தால்-நான் அவனால்படுகிற துன்பத்தினால்; இதுஎது ஆசலம் என்றேன்-இது என்னதுன்பம் என்று சொன்னேன்; இதற்கு-இதைச் சொன்னதற்கு; என் அன்னை-என்தாயானவள் ஏதோவைது - ஏதேதோதிட்டி; பழி இடுகின்றாள் - நிந்தை சுமத்துகின்றாள்; எ-று.

இதுவே தாசலம் என்பதை இதுவேதாசலம் எனபிரித்துப் பிரபுவின் பெயராகக்கொள்க.

இதுவுமது.

13. பூங்கமலன் கலசைவேதாசலன்போ லுருவமைக்கும் பொற்பிலானென், றாங்கயலார் சொலக்கேட்டு வாணியரிபாலுரைக்க வடைந்தாளன்னோன், தூங்குவனம் போயிருந்தா னரனிடத்திற்சொலப்பித்தாய்ச் சுழலலுற்றான், ஏங்கியந்தத்திறங்கற்பானிவளாவில்வீற்றிருந்தா ளெழிற்கண்மானே.

இ-ள். பூகமலன்-பொலிவாகிய தாமரைமலரை யிடமாகவுடையபிரமன்; கலசை-கலசைநகரில் வாழ்கின்ற;வேதாசலன்போல்-வேதாசலன்போல; உரு அமைக்கும்- உருவ முண்டாக்குகின்ற; பொற்பு இல்லான் என்று-திறமை யில்லாதவ னென்று ஆங்கு அயலார் சொல்லக் கேட்டு-பிறர்சொல்லக்கேட்டு; வாணி-சரசுவதி; அரிபால் உரைக்க அடைந்தாள்-திருமாலினிடத்தில் சொல்லப்போனாள்; அன்னோன்-அந்தத்திருமால்; தூங்கும்வன

போய் இருந்தான்-அங்குதற்குரிய வனத்துக்குப் போயிருந்தான், அரனிடத்தில் சொல்ல-சிவனிடத்தில் சொல்ல; பித்தாய் சுழலல் உற்றான்-அவன்பித்தனாகிச் சுழலாநின்றான்; எங்கி-எக்கமுற்று, அந்ததிறம்கற்பான்-அந்தத் திறமையைக் கற்கும்பொருட்டு, இவன் நாவில் வீற்றிருந்தாள் - இந்த வேதாசலனது நாவில்வீற்றிருந்தாள், எழில் கண்மானே-அழகிய கண்ணையுடைய சரசுவதி, எ-று.

—*—

ஒப்பிலாமணிப்புலவர் பாடல்.

குமுணராஜன் தன் தமையனோடு விரோதப்பட்டு காட்டில் இருந்த

போது, அவனிடம் சென்று பாடிய அகவல்.

1. ஆடெரிபடர்ந்தகோடுயரடுப்பில்
ஆம்பிப்பூப்பத்தீம்பசியுழல
இல்லிதூர்ந்தபொல்லாவறுமுலை
சுவைதொறுஞ்சுவைதொறும்பால்காணாமல்
குழவிதாய்முகநோக்க
மனைவியென்முகநோக்க யாமும்
நின்முகநோக்கிவந்தனங்குமுணா.

இ-ள். குமுணா-குமுணராஜனே, ஆடு எரிபடர்ந்த-அசையாநின்ற அக்கினிச்சுவாலைபரந்த, கோடு உயர் அடுப்பில்-கொம்புயர்ந்த அடுப்பில், ஆம்பி பூப்ப-காளான் பூக்கவும், தீபசி உழல-கொடியபசியென்னும்பொருள்நீங்காதுழலவும், இல்லி தூர்ந்த பொல்லாவறுமுலை - துளை தூர்ந்தனவாகிய அழகற்ற வெறுமுலைகளை, சுவைதொறும் சுவைதொறும்-சுவைக்குந் தோறும் சுவைக்குந் தோறும், பால்காணாமல்-பால்சுரக்கக்காணாமல், குழவி தாய் முகம் நோக்க-மனையாள் என்முகத்தைப்பார்க்க, யாமும்நாமும், நின்முகம் நோக்கி வந்தனம்-உன்முகத்தைப்பார்த்துவந்தேம், எ-று.

அதைக்கேட்ட குமுணராஜன் சொல்லிய அகவல்.

2. அந்தநாள்வந்திலையருந்தமிழ்ப்புலவோய்
இந்தநாள்வந்துநீநொந்தெனையடைந்தாய்
தலைதனைக்கொடுபோய்த்தம்பிகைக்கொடுத்ததன்
விலைதனைப்பெற்றுன்வெறுமைநோய்களையே.

இ-ள். அருங்கவி புலவோய்-அருமையாகிய கவிபாடுதலில் வல்லபுலவனே, நீ அந்தநாள் வந்திலை-நீ அந்தநாளில் வந்தாயில்லை, இந்தநாள்-இந்நா

ளில், நொந்துவந்து என்னை அடைந்தாய் - வருந்திவந்து என்னைச் சேர்ந்தாய், (ஆயினும் அஞ்சவேண்டாம்) தலைதனை கொடுபோய்-என் தலையைக் கொடுபோய், தம்பிகை கொடுத்து-என் தம்பியின் கையில் கொடுத்து, அதன் விலைதனை பெற்று-அதன்கிரயப் பொருளைப்பெற்று உன்வெறுமை நோய்களை-உன் வறுமையாகிய பிணியை, நீக்குவாயாக, எ-று.

அந்நாள் என்றது தன் தமையனோடுகூடி அரசாண்டுகொண்டிருந்த காலத்தை, இக் குமுணராஜனிடத்தில் பொருளில்லாமையாலும்; தன்னிடத்தில் உள்ளபகையால்; தன் தலையை வெட்டிக்கொண்டுபோய்க் கொடுப்பவர்களுக்கு ஆயிரம்பொன் தருவதாக அரசாளும் தன் தம்பி பறைசாற்றியதை யறிந்திருந்தமையாலும், புலவன் வறுமையைக் களையும்பொருட்டுத் தன்தலையைக் கொடுக்க இசைந்தான்.

புலவர் குமுணராஜன் தலைபோல் பொய்த்தலை செய்வித்துக்கொண்டு போய்க் கொடுத்து பொன்னைப்பெறவிரும்பி, மாந்தையென்னும் ஊரில் வாழ்கின்ற கம்மாள னொருவனைக் கண்டு, குமுண ராஜன் தலைபோல் செய்துதரவேண்டும் என்று கேட்க, அவன்செய்துகொடுத்த பொய்த் தலையை வியந்து பாடியது.

3. மாந்தையிலேவாழுமகுடத்தியாகியுனக்
கேந்துதழும்போவிரண்டுண்டு-வேந்தர்
முடித்தழும்புன்காலிலேமுத்தமிழோர்க்கீயும்
படித்தழும்புன்கையிலேபார்.

இ-ள். மாந்தையிலே வாழும்-மாந்தையென்னும் ஊரில் வாழ்கின்ற, மகுடத்தியாகி-மகுடதானம் செய்வோனே, உனக்கு ஏந்துதழும்போஇரண்டு உண்டு - உனக்குத் தாங்குதற்குரிய வடுக்கள் இரண்டுண்டு, (எவ்விடத்துண்டெனின்) உன்காலிலே-உன்பாதத்தில், வேந்தர் முடித்தழும்பு - அரசரது முடிபட்ட வடுக்களுண்டு, உன்கையிலே-உன்கையில், முத்தமிழோர்க்கு ஈயும்-முத்தமிழ்ப் புலவருக்கு அளந்து கொடுக்கின்ற, படித்தழும்பு-படிபட்ட தழும்பு உண்டு, பார்நோக்கு, எ-று.

அரசன் தன்தம்பியாகிய குமுணனை வியந்துபாடியது.

4 வெம்புங்காலைவெதும்பிவிழுஞ்சிரம்
செம்பொன்கோடிவிலையெனச்-சிந்தித்தான்
உம்பர்நாடுமுலகினுந்தேடினும்
எம்பிபோலெமக்கியாவருரியரே

இ-ள். வெம்புங்காலை-பகைவர் வெட்டுங்காலத்தில் வெதும்பிவிழுஞ்சிரம்-கொதித்துவிழுகின்ற தலையானது, கோடிசெம்பொன் விலையெனச்சிந்

தித்தான்-கோடி செம்பொன் விலைபெறுமென்று கருதினன், (ஆதலால்) உம்பர்நாடும்-தேவலோகத்திலும், உலகினும்-இவ்வுலகத்திலும், தேடினும் தேடினாலும், எம்பிபோல்-என் தம்பியைப்போல, எமக்கு உரியவர் யார்-எமக்குரியராவார் யாருளர், எ-று.

புலவர் குமுணராசன்மீது பாடியது.

5. ஆறுபெருக்கற்றருந்திடர்தான்பட்டாலும்
ஊறலமையாதோவுலகாற்றத்-தேற
வறியையேயானுமென்கலியைமாற்றச்
சிறியையோசீர்க்குமுணசெப்பு.

இ-ள். சீர்க்குமுண - சிறப்புள்ள குமுணனே, ஆறுபேருக்கு அற்று-ஆறானது நீர்பெருகுதலொழிந்து, அருதிடர்தான் பட்டாலும்-மிக்க மணல்மேடுகளாய் விட்டாலும், உலகு ஆற்ற-உலகத்தாருடைய தாகந்தணித்தற்கு, ஊறல் அமையாதோ-அதன் கண்ணுள்ள ஊற்றுப்போதாதோ, (அதுபோன்றநீயும்) தேறவறியையே ஆனாலும்-விசாரிக்க வறியனே யாயினும், என் கலியைமாற்ற-என் வறுமையைத் தீர்க்க, சிறியையோ-சிறியையாவையோ, எ-று.

முருகர்மீது பாடியது.

மன்மதனைநோக்கித் தலைவிகூறியது.

6. வில்லைவளையாதேமீசைமுறுக்கிச்சினந்து
முல்லைமலரம்பையென்மேன்மோதாதே-நில்லடா
வந்தாரடாமுருகர்வந்துகடப்பந்தாரைத்
தந்தாரடாமன்மதா.

இ-ள். மன்மதா-மன்மதனே, முருகர்-முருகக் கடவுளானவர், வந்தார் அடா-வந்தாரேடா; வந்து கடப்பந்தாரைத்தந்தார் அடா-வந்து கடப்பமலர்மாலையைத் தந்தாரேடா, (ஆதலால்இனி நீ) வில்லை வளையாதே-உன் கரும்பு வில்லை வளைக்காதே, சினந்து-கோபித்து, மீசை முறுக்கி-உன் மீசையை முறுக்கி, முல்லைமலர் அம்பை-முல்லைப் பூவாகிய பாணத்தை என்மேல் மோதாதே-என்மேல் ஏவாதே; நில்லடா-நில்லேடா, எ-று.

முருகர் தமது மாலையைத் தந்தாராதலால் இனிஉன் ஆண்மை பயன் படாதென்பதாம்.

திருச்செந்தூர் முருகர்மீது பாடியது.

அன்னவிடு தூது.

7. செந்திற்குமாரன் றிருவழகைக்கண்டவுடன்
வந்திக்குமாரன் வதைக்கிறன் - அந்திகு

முன்னமேசென்றெனதுமோகமெலாஞ்சொல்லிவந்தால்
அன்னமேகும்பிடுவேன்யான்.

இ-ள். அன்னமே-அன்னப்பறவையே, செந்தில்குமாரன்-திருச்செந்தூர்க்குமாரவேளின்; திரு அழகை கண்டவுடன்-சிறந்த அழகைப்பார்த்தவுடனே, இக்குமாரன்-கரும்பு வில்லையுடைய மன்மதன்; வந்துவதைக்கிறான்-வந்துவருத்துகின்றான்; (ஆதலால்) அந்திக்கு முன்னமே சென்று-அந்திக்காலம் வருவதற்கு முன்பேபோய், எனது மோகம் எல்லாம் சொல்லிவந்தால்-என்விருப்பத்தை யெல்லாம் அவருக்குச் சொல்லி மீண்டுவருவையாயின், யான் கும்பிடுவேன்-நானுன்னை நமஸ்கரிப்பேன்; எ-று.

தூதுவனோடு தலைவி கூறியதாகப் பாடியது.

8. தங்கடனமிருக்கத்தார்வேந்தரெல்லோரும்
எங்கடனத்துக்கேயிச்சிப்பார்-எங்கடனம்
கச்சிருக்கும்பாலிருக்குங்காமபாணங்கள்பட்டுப்
பிச்சிருக்கும்வேண்டாம்பிளாய்.

இ-ள். பிள்ளாய்-குழந்தாய், தார்வேந்தர் எல்லோரும்-மாலையையணிந்தஅரசரெல்லாம், தங்கள் தனம் இருக்க-தங்கள் பொருளிருக்க; எங்கள் தனத்துக்கே இச்சிப்பார்-எங்கள் பொருளையே விரும்புவார்கள், எங்கள் தனம்-எங்கள்பொருள், கச்சு இருக்கும்-வெறுக்கப்பட்டிருக்கும், பால் இருக்கும்-பாகங்களுக் குரியதாயிருக்கும்; காமபாணங்கள்பட்டு பிச்சு இருக்கும்-மன்மதபாணங்கள் படுதலால் பிதிர்ந்திருக்கும், (ஆதலால்) வேண்டாம்-(எங்கள் பொருள் உம்மரசுக்கு) வேண்டாம்.

எங்கள்தனம்-எங்கள் முலையென வேறொருபொருள்; இப்பொருட்கு கச்சு-ரவிக்கை; பால்-அமுதம்; பிச்சு-பிக்கப்பட்டு என்றுரைகூறுக,

கூவத்து நாரணன் என்னும் பிரபு இறந்ததற்கிரங்கி
யமனைக்குறித்து நிந்தித்துப் பாடியது.

9. இடுவோர்சிறிதிரங்கிரப்போர்பெரிது
கெடுவாய்நமனேகெடுவாய்-படுபாவி
கூவத்துநாரணனைக்கொன்றாயேகற்பகப்பூங்
காவெட்டலாமோகரிக்கு.

இ-ள். கெடுவாய்நமனே-கெடுவோனாகிய யமனே, இங்கு-இவ்வுலகத்தில், இடுவோர் சிறிது - கொடுப்போர் சிலர், இரப்போர் பெரிது-யாசிப்போர்பலர்; (அப்படியிருக்க) படுபாவி-மிகுபாவியே, கூவத்து நாரணனைக் கொன்றாயே—,கரிக்கு-கரியின்பொருட்டு; கற்பகப்பூ காவெட்டல்ஆமோ கற்பகப்பூஞ் சோலையை வெட்டுதல் தகுமோ; எ-று.

செய்யூர் நயினுன்மீது பாடியது.

தலைவி கூற்று.

10. மையூருங்கண்ணுர்மயங்கப்பொருகரும்பு
கையூருங்காமாவுன்கண்ணுனே-செய்யூர்
வளவனை யினுன்பிரிந்தவாறுனக்குச்சொன்ன
உளவனையினுனென்றுரை.

இ-ள். மைஊரும் கண்ணுர்மயங்க-அஞ்சநம் எழுதிய கண்களையுடைய மாதர் மயங்கும்படி, பொரு-போர்செய்கிற, கரும்பு-கரும்புவில்லை, கைஊரும்-கைக்கொண்ட, காமா-மன்மதனே, செய்யூர் வளவன் நயினுன்-செய்யூரில் வாழ்கின்ற சோழனை நிகர்த்தநயினுன் என்பவன், பிரிந்த ஆறு-என்னைப்பிரிந்த விதத்தை. உனக்குச்சொன்ன உளவனை-உனக்குச்சொல்லிய உளவாளனை, இன்னுன் என்று-இன்னவனென்று, உரை-எனக்குச் சொல்வாயாக, எ-று.

துறை-இரவுநீடத் தலைவியிரங்கல்.

11. ஆழிவாய்ச்சத்தமடங்காதோயான்வளர்த்த
கோழிவாய்மண்கூறுகொண்டதோ-ஊழி
திரண்டதோகங்குறினகரனுந்தேரும்
உருண்டவோபாதாளத்துள்.

இ-ள். ஆழிவாழ்ச் சத்தம் அடங்காதோ-கடலினிடத் துண்டாகின்ற ஓசையானது அடங்கமாட்டாதா, யான்வளர்த்தகோழிவாய் மண்கூறுகொண்டதோ-நான்வளர்த்த சேவலின் வாயில் மண் திணிக்கப்பட்டதோ, கங்குல்-இந்த இராத்திரியானது, ஊழி திரண்டதோ-அநேக கற்பங்கள் திரண்டொரு வடிவமாயிற்றோ, தினகரனும் தேரும் பாதாளத்துள் உருண்டவோ - சூரியனும் அவனதுதேரும் பாதாளத்தில் உருண்டு போயினவோ,

இராக்காலம் நீடித்தலால் வருந்தி இவ்வாறு கூறினுள்.

இதுவுமது.

12. அரவங்கரந்ததோவச்சுமரமிற்றுப்
புரவிகயிறுருவிப்போச்சோ-இரவிதான்
செத்தானேவில்லையோதீவினையோபாங்கியெனக்
கெத்தால்விடியுமிரா.

இ-ள். அரவம் கரந்ததோ-பாம்புமறைந்ததோ, அச்சுமரம் இற்று-அச்சுமரம் முறிந்து, புரவி-தேர்க் குதிரைகள், கயிறு உருவிப்போச்சோ-கயிறுருவிப்போயிற்றோ, இரவிதான்-சூரியன்தான், செத்தானே இல்லையோ-

இறந்தானோ இல்லையோ, திவினையோ-என்தீவினைப்பயன்தானோ,பாங்கி-தோழீ, எனக்கு எத்தால்-எனக்கு எவ்வகையால், இராவிடியும்-இரவுவிடியும், எ-று.

துறை-நற்றுயிரங்கல்.

13. முலையுங்குழலுமுளைப்பதற்குமுன்னே
கலையும்வளையுங்கழன்றாள்-மலையில்
சிராப்பளியானேறிவருஞ்சேவின்மணியோசைக்
கிராப்பளியுங்கொள்ளாளிவள்.

இ-ள். முலையும்குழலும் முளைப்பதற்குமுன்னே-தனங்களும்கூந்தலும் அரும்புதற்கு முன்பே, கலையும் வளையும் கழன்றாள் - ஆடையும் வளையலும் கழலப்பெற்றாள், மலையில் சிராப்பள்ளியான் ஏறிவரும் - மலைபோல்கின்ற சிராப்பள்ளியான் ஏறிவருகிற, சேவின் மணி ஓசைக்கு-இடபத்தின் மணியொலிக்கு, இவள் இராபள்ளியும் கொள்ளாள் - இவள் இரவிலும் தூங்காள், எ-று.

துறை-தலைவி தலைவனோடு புலத்தல்.

14. பாண்டியன்றாரானேன்பசலைமுலைபாலானேன்
ஆண்டிகையிலேந்தியதொன்றானேனே-வேண்டியபோ
துள்ளங்கைத்தேனானேனோர்மதலைபூத்தபின்
புள்ளங்கைத்தேனுனக்கு.

இ-ள். உனக்கு-உனக்கு, நான்-யான், பாண்டியன்தார்ஆனேன்-பாண்டியன் மாலையானேன், பசலை முலைபால் ஆனேன்-பசலை நிறம்போர்த்த தனங்கள்பாலாகப்பெற்றேன், ஆண்டிகையில் ஏந்தியது ஒன்று ஆனேன்-ஆண்டிகையி லேந்தியதோர் பொருளானேன், வேண்டியபோது - நீ விரும்பினபோது, உள்ளங் கைத்தேன் ஆனேன்-உள்ளங் கைத்தேன்போன்றேன், ஓர்மதலை பூத்தபின்பு - ஒரு புதல்வனைப் பெற்ற பிறகு, உள்ளம் கைத்தேன்-மனங்கசந்து போனேன், எ-று.

பாண்டியன்தார்-வேம்பு; ஆண்டிகையி லேந்தியதொன்று-ஓடு.

திருமுட்டத்து ஸ்ரீவராஹப் பெருமான்மீது பாடியது.

15. முட்டத்துப்பன்றிமுளரித்திருப்பதத்தைக்
கிட்டத்துப்பன்றிக்கிடந்தேனே-தொட்டு
மருங்கிலேசங்கெடுத்தமாலேயெனக்கு
வருங்கிலேசங்கெடுக்கவா.

இ-ள்- முட்டத்துப்பன்றி - திருமுட்டத்தி லெழுந்தருளிய வராஹப் பெருமானே, முளரி திருப்பதத்தை - உன் தாமரைபோலும் திருவடியை, கிட்டசேர, துப்பு அன்றி கிடந்தேன் - திறமையின்றிக் கிடந்தேன்,

தொட்டுமெருங்கிலேசங்கு எடுத்தமாலே-தீண்டி இடப்பாகத்தில் சங்கத்தை யேந்திய திருமாலே, எனக்குவரும்-எனக்குண்டாகின்ற, கிலேசம் - துன் பத்தை, கெடுக்க-அழிக்க, வா - நீ யெழுந்தருளாய், எ-று.

அறிவுடையோர் செய்யும் ஆண்மைகள்

இவையெனப்பாடியது.

16. மாதர்க்கிதங்கவிவாணர்க்குச்சாலவணக்கங்குரு
நாதர்க்குநீதியொடாசாரநண்பினயந்தவர்க்குக்
கோதற்றவாசகம்பொய்க்குப்பொய்கோளுக்குக்கோளறிவி
லாதர்க்கிரட்டிப்பறிவுடையோர்செய்யுமாண்மைகளே.

இ-ள். அறிவுடையோர் செய்யும் ஆண்மைகள்-விவேகிகள் செய்கின்ற ஆண்மைகளாவன, மாதர்க்கு இதம்-மாதருக்கு இன்சொற் சொல்லுதலும், கவிவாணர்க்கு சாலவணக்கம்-வித்வான்களுக்குப் பணிவுடைமையும்-குரு நாதர்க்கு நீதியொடு ஆசாரம்-குருதேசிகர்க்கு நீதியுடன் ஆசாரமா யிருத்த லும், நண்பின் நயந்தவர்க்கு கோது அற்றவாசகம் - சிநேகத்தோடு விரும் பினவருக்குக் குற்றமற்ற நல்வார்த்தையும், பொய்க்கு பொய்-பொய்க்குப் பொய்யும், கோளுக்கு கோள்-கோளுக்குக் கோளும், அறிவு இல் ஆதர்க்கு இரட்டிப்பு - விவேகமில்லாத மூடருக்கு-அவரினும் இரட்டிப்பா யிருத்த லுமேயாம். எ-று.

அறிவுடையோர் மாதர் முதலியோரை இதுமுதலியவற்றால் வசப்படு த்திக்கொள்ளுவர் என்பது கருத்து.

பாண்டியன்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

17. சூழற்காலரவிந்தங்கூம்பக்குமுதமுகையவிழ
நிழற்கான்மதியமன்றோநின்றிருக்குலநீயவன்றன்
அழற்காலவிர்சடைமீதேயிருந்துமவ்வந்திவண்ணன்
கழற்காலவணங்குதியோவணங்காமுடிக்கைதவனே.

இ-ள். வணங்காமுடி கைதவனே-வணங்கா முடியையுடைய பாண்டி யனே, நின் திருக்குலம் - உன் திருக்குலமானது, குழல்கால் அரவிந்தம் கூம்ப - தொளையோடு கூடிய நாளத்தையுடைய தாமரைமலர்கள் குவிய வும், குமுதமுகை அவிழ - அல்லிமொட்டுகள் விரியவும், நிழல் கால் மதி யம் அன்றோ-ஒளியைக் கக்குகின்ற சந்திரனல்லவா, நீ அவன் தன்-நீ அவ னது, அழல்கால்-நெருப்பினொளியை வீசுகின்ற, அவிர்சடை மீதே இருந் தும்-விளங்குகின்ற சடைமீதிருந்தும், அந்திவண்ணன் - அந்தப் பரமசிவ னது, கழல்கால் வணங்குதியோ-வீரக்கழலையணிந்த திருவடியை வணங் குகின்றாயோ, எ-று.

சண்பகவல்லியம்மையை வணங்கின செருக்காற் பாடியது.

18 பாட்டானதைவண்டுபாடுங்குழற்சண்பகவல்லிதன்
தாட்டாமரையைத்தொழுதேனினியென்றலையில்விதி
தீட்டான்கருமுகில்போலேவருமந்தச்சேட்டெருமை
மாட்டானினிவரமாட்டான்வந்தாலும்வணங்குவனே.

இ-ள். வண்டு பாட்டானதைப்பாடும் குழல்-வண்டுகள் இசையைப் பாடுகின்றகூந்தலையுடைய, சண்பகவல்லி தன்-சண்பகவல்லி யம்மையின், தாள்தாமரையை தொழுதேன் - பாததாமரையை வணங்கினேன், இனி-இனி, விதி-பிரமன், என்தலையில் தீட்டான்-என்சிரசில் எழுதமாட்டான்; கருமுகில்போலேவரும்-கருமேகம்போல்வருகிற, அந்தசேட்டெருமைமாட்டான் - அந்தப்பெரிய எருமைமாட்டையுடையவனாகிய யமன்; இனி வர மாட்டான்-இனியென்னிடம் வரமாட்டான்; வந்தாலும் வணங்குவன்-வந்தாலும் என்னைப்பணிவான். எ று.

ரத்நசபாபதியின் திருவடியில் பாமாலைசமர்ப்பித்த களிப்பாற் பாடியது.

19. சீமானுநாமகள்கோமானுமேத்தித்தினம்பணிந்து
பூமாலைசாத்தியரத்நசபாபதிபொன்னடிக்குப்
பாமாலைசாத்திநின்றேனவனான்மிகப்பாடுபட்ட
ஏமாவுன்னாலினியாமாவென்பாற்சினந்தெய்துதற்கே.

இ-ள். சீமானும்-திருமாலும், நாமகள் கோமானும்-பிரமனும்; ஏத்தி-துதித்து; தினம் பணிந்து-நாள்தோறும் வணங்கி; பூமாலைசாத்திய-புஷ்பமாலை சமர்ப்பிக்கப்பெற்ற; ரத்நசபாபதி பொன்னடிக்கு-ரத்நசபாபதியின் திருவடியின் மீது, பாமாலை சாத்தி நின்றேன்-கவிமாலையைச் சமர்ப்பித்து நின்றேன்; அவனால் மிகப்பாடுபட்ட - அவனால் மிகவும் துன்பமடைந்த; ஏமா-யமனே; என்பால் சினந்து எய்துதற்கு - என்னிடத்தில் கோவித்து வருகைக்கு; இனி-இனி; உன்னால் ஆமா-உன்னாலாகுமா. எ-று.

திருவொற்றியூர்த் தியாகராயர்மீது பாடியது.

20. தடங்கொண்டகல்வில்லின்மெல்லெனப்பூட்டித்தமதுரத்தில்
வடங்கொண்டுசாத்திவிடங்கொண்டுபார்த்துமணிகிளரும்
படங்கொண்டபாம்பிற்பழகியபின்மலைப்பாவைதன்னை
இடங்கொண்டவொற்றித்தியாகேசர்புற்றினிடங்கொண்டதே

இ-ள். மலைப்பாவை தன்னை-மலையரையன் பெண்ணாகிய உமாதேவியை; இடம்கொண்ட-இடப்பாகத்திற் கொண்ட; ஒற்றி தியாகேசர்-திருவொற்றியூர்த் தியாகேசர்; புற்றினிடம்கொண்டது-புற்றையிடமாகக்கொ

ண்டது, தடம்கொண்ட கல்லில் வில் மெல்லெனப்பூட்டி - பெருமைகொண்ட மேருமலையாகிய வில்லில் (நாணியாக) மெல்லெனப்பூட்டி, தமது உரத்தில் வடம்கொண்டுசாத்தி - தமது திருமார்பில் ஆரமாகக் கொண்டணிந்து, விடம்கொண்டு பார்த்து-நஞ்சையுட்கொண்டு பார்த்து, மணிகிளரும் படம்கொண்ட-மாணிக்கம் விளங்குகின்ற படத்தைக்கொண்ட, பாம்பின் பழகியபின்-பாம்போடு பழகின பின்பேயாம். எ-று.

கல் வில்லிற்பூட்டினது திரிபுர சங்காரகாலத்தில். உரத்தில் வடமாகச் சாத்தினது தாருகாவனத் திருடியர்செய்த யாகத்தில் தோன்றின காலத்தில், விடங்கொண்டுபார்த்தது பாற்கடல் கடையப்பட்டகாலத்தில்.

திருவாரூர் தியாகராயர்மீது பாடியது.

21. விடங்காட்டிக்கண்டத்திற்றோலுரிகாட்டித்தன்மெய்யினைப்புற்
றிடங்காட்டிவாலையொருபுறங்காட்டிவண்டேறுமலர்த்
தடங்காட்டியபொழிலாரூர்த்தியாகர்தமதுபொற்றாட்
படங்காட்டியாடிநின்றாருலகேழும்பணியென்னவே.

இ-ள். வண்டு ஏறும் மலர்த்தடம் காட்டிய பொழில்-வண்டுகளேறப்பெற்ற பூம்பொய்கைகளையுடைய சோலைசூழ்ந்த, ஆரூர் தியாகர் - திருவாரூர்த் தியாகராயர், கண்டத்தில் விடம் காட்டி-கழுத்திலுள்ள நஞ்சத்தைக் காட்டி, தோல் உரி காட்டி-யானைத்தோலைக்காட்டி, தன் மெய்யினை புற்றிடம் காட்டி-தம் திருமேனியைப் புற்றிடமாகக்காட்டி, வாலை ஒருபுறம் காட்டி - உமாதேவியை ஒரு பக்கத்திற்காட்டி, தமது பொன்தாள் படம் காட்டி-தமது திருவடியாகிய எழுது படத்தைக்காட்டி, உலகு ஏழும் பணி என்ன-எழுலகமும் பணிகவென்று, ஆடி நின்றார் - நடித்து நின்றார். எ-று.

பணியென என்பதற்குப் பாம்புபோலெனக்கொண்டு சிலேடித்துரைக்க. தோலுரி-தோலுரித்தல். வாலை-வாலினை.

திருவொற்றியூர்த் தியாகராயர்மீது பாடியது.

22. புரந்தனைமாலைச்சதுராননத்தனைப்போகியைமுப்
புரந்தனைச்சாதித்திமையாதநாட்டப்புலோமசைவாழ்
புரந்தனைமானுந்திருவொற்றியூரநின்பொன்மணிக்கோ
புரந்தனைக்கண்டனன்காணேனுதிக்கும்புரந்தனையே.

இ-ள். இமையாத நாட்டம் - இமையாத கண்களையுடைய, புலோமசைவாழ்-இந்திராணிவாழ்கின்ற, புரம் தனை மானும்-அமராவதி நகரத்தை நிகர்க்கின்ற, திருவொற்றியூர்-திருவொற்றியூரை யுடையவனே, முப்புரம்தனை சாதித்து-முப்புரத்தைவென்று, மாலை - திருமாலையும், சதுரான

நத்தனை-நான்முகனாகிய பிரமனையும், போகியை-இந்திரனையும், புரந்தனை-ரக்ஷித்தாய், நின்பொன்மணி கோபுரம் தனை கண்டனன்-பொன்னினாலும் மணிகளாலும் அலங்கரித்துச் செய்யப்பட்ட உனது கோபுரத்தைத் தரிசித்தேன், (இனி) உதிக்கும் புரம் தனை காணேன் - (நான் சென்று) பிறத்தற்குரிய சரீரத்தைக் காணமாட்டேன். எ-று.

திருவொற்றியூர்த் தியாகராயரே, உமது கோபுரத்தைத் தரிசித்த எனக்கு இனிப் பிறவியில்லை யென்பது கருத்து.

நாணிக்கண்புதைத்தல் (இடையூறுகிளத்தல்.)

23. நல்லம்புலியணிந்தோனாளதனுக்கெட்டாநாள்
வில்லம்புடன்கூடிவிட்டாலும்-வல்லி
இடையாளேமுன்னுலகுமேழளந்தோன்மைந்தன்
குடையானதன்றேகொடிது.

இ-ள். வல்லி இடையாளே - கொடிபோலும் இடையையுடையவளே, நல் அம்புலி அணிந்தோன்-அழகாகிய சந்திரனை யணிந்தோனாகிய சிவபெருமானது, நாளதனுக்கு-திருநக்ஷத்திரத்துக்கு, எட்டாம் நாள் - எட்டாவதாகிய நக்ஷத்திரம், வில் அம்புடன் கூடிவிட்டாலும் - வில்லம்புகளோடு சேர்ந்துவிட்டாலும், முன் உலகம் ஏழ் அளந்தோன் மைந்தன்-முற்காலத்தில் ஏழுலகத்தையும் திருவடியா லளந்தோனாகிய திருமாலின் புதல்வனாகிய மன்மதனது, குடையானது அன்றே கொடிது-குடையல்லவா கொடியதாயிருக்கின்றது. எ-று.

அம்புலியணிந்தோனாள்-திருவாதிரை, இதற்கு எட்டாநாள் அஸ்தம். (கை) வில்-புருவம், அம்பு-கண், மன்மதனது குடை-பூர்ண சந்திரன். கையால் புருவம் கண் இவைகளை மூடினாலும் சந்திரன் செய்யும் உபத்திரவம் கொடிதாயிருக்கின்றது என்பதாம். சந்திான் முகமெனினும் பொருந்தும்.

தென்புன்னைவனத்தான்மீது பாடியது.

24. வாழ்நிலைசேர்பொன்னுலகம்வண்களந்தைகோபுரத்தின்
ஏழ்நிலைமேலேறிடினுமேறலாம்-பாழ்மனமே
அன்புன்னைக்காட்டவரனறிவதேயருமை
தென்புன்னைக்காட்டனடிசேர்.

இ-ள். வாழ்நிலைசேர்பொன்னுலகம்-வாழ்தற்குரிய பொன்னுலகுபோன்ற, வள்-வளம்பொருந்திய, களந்தை-களந்தைப்பதியிலுள்ள, கோபுரத்தின்-கோபுரத்தினது, ஏழ் நிலைமேல் ஏறிடினும் ஏறலாம்-ஏழு நிலைகளின் மீதும் ஏறவிரும்பினாலும் ஏறலாம், பாழ் மனமே-பாழ் நெஞ்சமே, உன்னை அன்பு காட்ட-உன்னை அன்புருவமாகக்காட்ட, அரன் அறிவதே அருமை-சிவபெருமானை அறிவதே அருமை, (ஆதலால்) தென்புன்னைக்காட்டான் அடி-தென்புன்னைக்காட்டானது திருவடியை, சேர்-நீ அடைவாயாக. எ-று.

திருக்கச்சிக் காமாக்ஷியம்மையின்மீது பாடியது.

25. கஞ்சிகுடியாளேகம்பன்சோறுண்ணாளே
வெஞ்சினங்களென்றும்விரும்பாளே-நெஞ்சதனில்
அஞ்சுதலையாவாருக்காறுதலையாவாளே
கஞ்சமுககாமாட்சிகாண்.

இ-ள். கஞ்சிகுடியாள் - கஞ்சிகுடியாதவளும், கம்பன் சோறு உண்ணாள் - கம்பஞ்சோற்றை யுண்ணாதவளும், வெஞ்சினங்கள் என்றும் விரும்பாள் - பதார்த்தங்களை யென்றும் விரும்பாதவளும், நெஞ்சதனில் அஞ்சுதலை ஆவாருக்கு-மனத்தில் அச்சமுள்ளவர்க்கு, ஆறுதலை ஆவாள் - அந்த அச்சத்தைத் தணிப்பவளும், கஞ்சமுகம்-தாமரைமலர்போன்ற முகத்தினை யுடைய, காமாக்ஷிகாண்-காமாக்ஷியம்மையேயாம். எ-று.

காஞ்சீநகரத்திற் குடிகொண்டிருப்பவள், திருவேகம்பனது சோற்றை யுண்ணாதவள், கொடிதாகிய கோவத்தை விரும்பாதவள், ஐந்து சிரங்களையுடைய சிவபெருமானுக்கு மநோஹரமா யிருப்பவள், என வேறுமொருபொருள் தோன்றுதல் காண்க.

துறை-வெறிவிலக்கல்.

26. சீதாரவிந்தைபுயன்றென்னவன்றன்றிண்சிலம்பிற்
போதாலுங்கண்ணாலும்போர்செய்வோர்க்-கோதும்
கொடியிடையார்தம்மாற்குணமாமோவிந்தத்
துடியிடையார்கொண்டதுயர்

இ-ள். இந்த துடி இடையார் கொண்ட துயர் - இந்த உடுக்கைபோலும் இடையையுடைய மாது கொண்ட துன்பம், சீதம் - குளிர்ச்சிபொருந்திய, அரவிந்தை-தாமரைமலரை யாசநமாகக்கொண்ட விஜயலக்ஷ்மியை, புயன்-தோளிலுடையவனாகிய, தென்னவன் தன் திண்சிலம்பில் - பாண்டியனது வலிமையாகிய மலையின்கண், போதாலும் கண்ணாலும் போர் செய்வோர்க்கு-பூவைக்கொண்டும் கண்ணைக்கொண்டும் போர் செய்வோராகிய மன்மதன் பரமசிவன் என்னும் இருவருக்கும், ஓதும் - உரியனவென்று) சொல்லப்பட்ட, கொடி - கொடிகளாயிருக்கிற மீனத்துக்கும் இடபத்துக்கும், இடையார் தம்மால்-இடையிலுள்ளவரால், குணம் ஆமோ - நிவர்த்தியாகுமோ. எ-று.

மீனத்துக்கும் இடபத்துக்கும் இடையிலுள்ளது மேஷம் (ஆடு); ஆட்டைக்கொல்வதனால் இந்த மாதினது விரகத்துன்பம் நீங்காதென்பது கருத்து.

தோவத்தி ஆற்றிலடித்துக்கொண்டு போனபோது பாடியது.

27. அம்பிலேதோய்த்திட்டடுத்தடுத்துகாமதனைத்
தப்பினனம்மையதுதப்பாதோ-இப்புவியில்

இக்கலிங்கம்போனலென்னேகலிங்கமாமதுரைச்
சொக்கலிங்கந்தானிருக்கச்சொல்.

இ-ள். அப்பிலே தோய்த்திட்டு - நீரிலே தோய்த்து, அடுத்து அடுத்து-அடிக்கடி, நாம் அதனைத் தப்பினல்-நாம் அதைத் தப்பினல், அது நம்மைத் தப்பாதோ-அது நம்மைத்தப்பாதோ, இப்புவியில் - இவ்வுலகத்தில், சொல் - சொல்வாயாக, இ கலிங்கம் போனல் என்-இந்த ஆடை போனலென்ன, ஏகலிங்கம் ஆம் - ஒப்பற்ற லிங்கமாகிய, மதுரைச் சொக்கலிங்கந்தான் இருக்க-மதுரைச் சொக்கலிங்கப்பெருமானிருக்கும்போது.எ-று.

தப்புதலிரண்டில் முன்னது வெளுத்தலென்றும், பின்னது கைவிட்டுப்போதலென்றும் பொருள்கொள்க.

காளிமுத்துப்புலவர் பாடல்.

இதுமுதலிய ஆறுசெய்யுளும் மயிலைக் குழந்தைவேலுமுதலியார் மீது பாடியதுறைகள்.

தோழிகூற்று.

1. நெல்லைச்சொன்னுபரணத்தைக்கைம்மாவைநிதநிதமும்
வெல்லச்சொன்னவலர்க்கீயுங்குழந்தைவிசயநின்பால்
செல்லச்சொன்னளென்னையிப்போதென்மையலைத்தீர்த்திடென்று
சொல்லச்சொன்னளந்தமின்னள்பன்னுண்மலர்ச்சோலையிலே.

இ-ள். நெல்லை-நெல்லினையும், சொன்னுபரணத்தை-பொன்னுபரணங்களையும்; கைம்மாவை-யானைகளையும், வெல்லச்சொல் - மேம்படப் புகழ்கின்ற, நாவலர்க்கு-புலவருக்கு, நித நிதமும்-நாள்தோறும், ஈயும்-பரிசிலாகத் தருகிற, குழந்தை விசய-குழந்தை வேல் என்னும் வெற்றியையுடையவனே, அந்த மின்னள்-அந்தப்பெண்ணனவள், பல்நாள்-பலநாளும், மலர்ச்சோலையிலே பூஞ்சோலையின் கண்ணேநின்று, என்னை - என்னைநோக்கி, நின்பால் சொல்லச்சொன்னள் - உன்னிடத்திற்குப் போகச்சொன்னள், இப்போது-இப்பொழுதே, என்மையலை தீர்த்திடு என்று-என்காம மயக்கத்தை நீக்குவாயென்று, சொல்லச் சொன்னள்-உனக்குச் சொல்லச் சொன்னள், (ஆதலால்) அவளை யாதரிக்கவேண்டும். எ-று.

தலைவிகூற்று.

2. பழுத்தான்மரத்திற்பறவையைப்போலுநற்பாவலர்க்குக்
கொழுத்தான்வழங்குங்குழந்தையென்சொன்னையைக்கூறுகிரால்

அழுத்தாதவேளையில்வெந்நீர்பன்னீர்மதியும்மழல்சேர்
கொழுந்தான்மதனுங்கொழுத்தான்பருவக்குறிப்பறிந்தே.

இ-ள். பழுத்த ஆலமரத்தில் பறவைகள்போலும் - பழுத்த ஆலமரத்திற்கூடிய பறைவைகளை நிகர்க்கிற, நல்பாவலர்க்கு - நல்ல வித்துவான்களுக்கு, கொழுத்த ஆன்வழங்கும் - வளமாகிய பசுக்களைத் தாநம்பண்ணுகிற, குழந்தை-குழந்தைவேலன், என் கொங்கையை-என் தனங்களை, கூர் உகிரால்-கூர்மையாகிய நகங்களால், அழுத்தாத வேளையில்-பதியாத காலத்தில், பன்னீர் வெந்நீர்-பனிநீரும் வெந்நீர்போலச் சுடாநின்றது, மதியும்-சந்திரனும், அழல் சேர் கொழுதான்-நெருப்பைச்சேர்ந்து காய்ந்திருக்கிற கொழுவேயாகும், பருவக்குறிப்பு அறிந்து-சமயக்குறிப்பை யுணர்ந்து, மதனும் கொழுத்தான்-மன்மதனும் கொழுத்துப் போனான். எ-று.

பழுத்தான் கொழுத்தான் என்பவைகளின் நிலைமொழிகளாகிய பழுத்த கொழுத்த என்னும் பெயரெச்சங்களின் அகரவிகுதி தொகுத்தல்.

தாய்க்கூற்று.

3. பொன்னார்மருமத்தன்பூம்பாவைவேலப்பூபனருள்
மன்னகுழந்தைக்குருநாதநீதவரோதயனே
பன்னண்மலர்க்குழற்பின்னளெந்நாளும்பரிந்தணைய
நன்னளிந்நாள்வரச்சொன்னண்மின்னண்மணநாளென்னவே.

இ-ள். பொன் ஆர் மருமத்தன்-திருமகள் வாழ்கின்ற மார்பையுடையவனாகிய, பூம்பாவை வேலப்ப பூபன்-பூம்பாவை வேலப்பன் என்னும்பூபதி, அருள்-பெற்ற, மன்ன-அரசனே, குழந்தைக் குருநாத - குழந்தைவேலன் என்கிற முருகவேளே, நீத-நீதிமானே, வரோதயனே-வரத்தினால் அவதரித்தவனே, பல்-பலவாகிய, நாள்மலர் - புதியமலர்களைத் தரித்த, குழற்பின்னள் - கூந்தற்பின்னலை யுடையவளாகிய, மின்னள்-என் பெண்ணானவள், மண நாள் என்னவே - மணம்புரிந்த நாளிற்போலவே, எந்நாளும் பரிந்து அணைய - எந்நாளும் விரும்பித் தழுவுதற்குரிய, நல்நாள் இந்நாள்-சுபதினமாகிய இந்த தினத்தில், வரச்சொன்னள் - (உன்னை) வரச்சொன்னள். எ-று.

துறை-புறங்காட்டல் (முதுகுகாட்டல்.)

4. மாகமழைக்கரன்பூம்பாவைவேலப்பன்மைந்தன்மின்னார்
மோகன்குழந்தைக்குருநாதன்வெற்பினின்மோடிவைத்துப்
பாகமொழிக்குழன்மாதேவிரித்துப்படமெடுக்கும்
நாகம்மறைத்துக்குழனமக்கீதனலமல்லவே.

இ-ள். பாகு அம்-சர்க்கரைப்பாகின் சுவையும், மொழிக்கு உழல்-உன்மொழிச் சுவையைப் பெறும்பொருட்டு உழலாநின்ற, மாதே-பெண்ணே மாகம் மழைகரன் - ஆகாயத்திலுள்ள மேகத்தை நிகர்த்த கொடைக்கை,

னையுடையவன், பூம்பாவை வேலப்பன் மைந்தன்-பூம்பாவை வேலப்பனுக்குப் புதல்வன், மின்னார் மோகன் - மாதர்களுக்கு ஆசையை யுண்டாக்குவோன், குழந்தைக் குருநாதன் வெற்பினில்-குழந்தைக் குருநாதனதுமலையில், மோடிவைத்து-மோடிவைத்து, விரித்து படம் எடுக்கும்-படம் விரித்தெடுத் தாடுகின்ற, நாகம்மறைத்து-பாம்பை மறைத்து, குழல் - வேய்ங்குழலை, நமக்கு ஈதல்-எமக்குக் கொடுத்தல், நலம் அல்ல-நன்மையல்ல.எ-று.

நாகம்-மலை, இது தனத்தை யுணர்த்தும். குழல்-கூந்தல். மோடிவைத்தல்-பிணங்கல். தலைவனுக்கு நாணிப்புறங்காட்டி நின்ற தலைவியின் முதுகு முதலியவற்றைக்கண்ட தலைமகன் அல்குலின்பம் பெறவந்த எனக்கு அதனை மறைத்துக் கூந்தலைத்தருதல் நன்மையன்று எனக் கூறியது.

துறை-கிள்ளைவிடுதூது.

5. போதத்தைமேவுமயிலைக்குழந்தைக்குப்போர்மதன்செய்
கேதத்தையுங்குயினாதத்தையுந்தனக்கிண்ணத்தினால்
மோதத்தையுந்துயிலாதத்தையும்மயன்மூட்டுதென்றல்
வாதத்தையுந்தரியாதத்தையுஞ்சொல்லிவாதத்தையே.

இ-ள். போதத்தை மேவும் - ஞானத்தைப் பெற்றிருக்கிற, மயிலைக் குழந்தைக்கு-மயிலைக்குழந்தை முதலியாருக்கு, போர்மதன் செய் கேதத்தையும்-காமப்போர் விளைக்கின்றமன்மதன்செய்கிறதுன்பத்தையும், குயில் நாதத்தையும்-குயிலோசையால் வருந்துன்பத்தையும், தனக்கிண்ணத்தின் ஆமோதத்தையும் - கிண்ணம்போன்ற தனங்களின் மிகுமணத்தால் வரும் துன்பத்தையும், துயிலாதத்தையும்-தூங்காமையால் வருந்துன்பத்தையும், மயல்மூட்டு தென்றல் வாதத்தையும் - காமமயக்கமாகிய நெருப்பை மூள்விக்கிற தென்றற்காற்றினால் வருந்துன்பத்தையும், தரியாதத்தையும்-(இத்துன்பங்களால் நான்) சகித்திருக்க வொண்ணாமையையும், சொல்லி வா-சொல்லிமீண்டு வருவாயாக. எ-று.

துறை-வெறிவிலக்கல்.

6. வண்டாங்கிசைபயின்மாலையன்வேலப்பன்மைந்தனிதி
கொண்டான்கிளையைவளர்த்தான்குழந்தைக்குவட்டின்மின்னே
பண்டாங்கிசையினன்மால்கொண்டுபாம்பன்குளத்தினடுக்
கண்டாங்கியைக்கிழித்தாலென்னபாவங்கருதுவதே.

இ-ள். வண்டு ஆங்கு இசைபயில் மாலையன் - வண்டுகள் அவ்விடத்து இராகம்பாடுதற் கிடமாகிய பூமாலையை யணிந்தவனாகிய, வேலப்பன்மைந்தன்-வேலப்ப முதலியாருக்குப் புதல்வனும், நிதிகொண்டான்-எல்லா நிதிகளையுந் தன்னிடத்துக் கொண்டவனும், கிளையை வளர்த்தான் - உறவினரை வளர்த்தவனும் ஆகிய, குழந்தைவேலனது, குவட்டில் மின்னே-மலையிலுள்ளமாதே, பண்தாங்கு இசையினள்-பண்ணின் தன்மையைக்கொண்ட

சொல்லையுடையவளாகிய தலைவி, மால்கொண்டு-காமமயக்கத்தைக்கொள்ள, பாம்பன்-பாம்பை யணிந்தவனாகிய சிவபெருமானது, குளத்தின்-நெற்றியிலுள்ள, நடுக்கண்-நடுக்கண்ணாகிய அக்கினிதேவனை, தாங்கியை - சுமக்கின்ற வாகனமாகிய ஆட்டை, கிழித்தால்-கொன்றால், என்ன-என்னபயன்? பாவப்-உண்டாவது பாவமே யாகும், கருதுவதே (இந்தப்பாவம்) மனத்தினாலும் நினைக்கத் தகுவதோ. எ-று.

கண்டாங்கி-உத்தரீயம் எனச்சொன்னயம்.

பூஞ்சோலைத் தஞ்சியென்னுந் தாசியின் தனங்களைப் புகழ்ந்து பாடியது.

7. வனக்குந்தளவஞ்சிபூஞ்சோலைதஞ்சிவளருமிரு
தனக்குன்றுசெய்யுந்தொழில்சொல்லவோதமியேனைக்கண்டால்
கனக்கும்புளகிக்கும்பாரிக்கும்பூரிக்குங்கண்கறுக்கும்
சினக்குந்தமக்குமெனக்குமுண்டாக்குந்தினஞ்சண்டையே.

இ-ள். வனம்-அழகாகிய, குந்தளம்-கூந்தலையுடைய, வஞ்சி - கொடி போன்ற-பூஞ்சோலைத்தஞ்சி - பூஞ்சோலைத் தஞ்சி யென்பவளுடைய, வளரும் இருதனக்குன்று-வளராநின்ற இரண்டு தனங்களாகிய மலைகள், செய்யுந்தொழில்-செய்யும் செய்கைகளை, சொல்லவோ - சொல்லட்டுமோ, தமியேனைக்கண்டால்-என்னைக்கண்டால், கனக்கும் - பருக்கும், புளகிக்கும்-புளகங்கொள்ளும், பாரிக்கும்-பளுவாகும், பூரிக்கும் - விம்மும், கண்கறுக்கும்-கண்கள் கறுக்கப்பெறும், சினக்கும்-கோவிக்கும், தமக்கும் எனக்கும் தினம் சண்டை உண்டாக்கும்-அத்தனங்களுக்கும் எனக்கும் நாடோறும் சண்டை யுண்டாக்கும். எ-று.

—*—

பாண்டியன் மீதுபாடியபாடல்.

1. சரராஜசம்புவயிரியென்மாதுசரீரமெல்லாம்
பொரராசரத்துக்கிவள்பொருளோபசும்பொற்கிரண
சுரராசதிவ்யகிரீடவிபாடத்தொடித்தடக்கைப்
பரராஜராவணராமாபராக்கிரமபாண்டியனே.

இ-ள். சரராசன்-அஸ்த்ர ராஜனென்று சொல்லப்படுகிற, சம்புவயிரி-சிவசத்துருவாகிய காமதேவர், என்மாது சரீரம் எல்லாம்-என் பெண்ணின் உடம்பு முழுவதும், பொர-(புதையும்படி அம்பெய்து) போர்செய்ய, ராசர் சிறந்தவராயிருக்கிறார், அத்துக்கு-அந்தப் போருக்கு, இவள்பொருளோ-இவள் ஒருபொருளாவளோ, பசும்பொன்கிரணம் - பசும்பொன்னினொளி வீசுகின்ற, சுரராஜ திவ்ய கிரீடவிபாட-தேவேந்திரனது அற்புதமானமுடி

யின்மீது வளை வீசினவனே, தொடி-வாகுவலயமணிந்த, தடம்கை-பெரிய கையினையுடைய, பரராஜ ராவணராமா - வேற்றரசராகிய ராவணர்க்கு ஸ்ரீராமனை நிகர்த்தவனே, பராக்கிரம பாண்டியனே. எ-று.

பாண்டியனே, இவள் மன்மதன்கணைக்கு எதிர்நிற்க மாட்டுவளோ என்பது கருத்து.

இதுவுமது.

2 காளைமுகிற்குலமெல்லாம்விலங்குகடிந்திட்டநீ
வேளையுமப்படிச்செய்திலையேவிளைநெல்வயலில்
வாளைகுதித்துவளர்பூங்கமுகின்மடலொடியம்
பாளைமுறிக்குந்துறைவாபராக்கிரமபாண்டியனே.

இ-ள். விளை நெல்வயலில்-விளைகின்ற நெற்கழனிகளில், வாளைகுதித்து-வாளைமீன்கள் தாவி, வளர்-வளர்ந்த, பூ-பொலிவாகிய, கமுகின்-கமுக மரங்களின், மடல் ஒடிய-மடல்கள் ஒடிய,பாளைமுறிக்கும்-பாளைகளைமுறிக்கின்ற, துறைவா-துறையை யுடையவனே, பராக்கிரம பாண்டியனே-பராக்கிரமபாண்டியனே, காளைமுகில் குலம் எல்லாம் - கருமையாகிய மேகத்தொகுதியை யெல்லாம், கடிந்து விலங்கு இட்ட நீ - கோவித்து விலங்கு பூட்டின நீ, வேளையும் அப்படி செய்திலையே-மன்மதனையும் அவ்வாறுசெய்தாயில்லையே. எ-று.

முகிற்குலத்தை தளைசெய்தது இவன் முன்னோர் தொழிலாயினும், மரபுபற்றி இவன்மேல் ஏற்றிக்கூறப்பட்டது.

துறை-நற்றாயிரங்கல்.

3. ஆர்க்குங்குளிருநிலவுயர்கோனின்னலங்கல்பெறு
வார்க்குங்குமமுலையாட்கனலாகும்வடக்குந்தெற்கும்
மேற்குங்கிழக்குமொருவெளுப்பாய்நின்றுவிண்ணையெட்டிப்
பார்க்கும்புகழுக்கிறைவாபராக்கிரமபாண்டியனே.

இ-ள். வடக்கும் தெற்கும் மேற்கும் கிழக்கும்-வடக்கு முதலிய நான்குதிசைகளிலும், ஒருவெளுப்பாய் நின்று-ஒரேவெளுப்பாய் வெளுத்துநின்று, விண்ணை எட்டிப்பார்க்கும் புகழுக்கு - சுவர்க்க லோகத்தை யெட்டிப்பார்க்கிற புகழுக்கு, இறைவா - தலைவனே, பராக்கிரம பாண்டியனே—, உயர்கோல்-உயர்ந்த செங்கோலைத் தாங்கிய, நின்-உனது, அலங்கல்பெறு-மாலையைப்பெறுத, வார் - கச்சணிந்த, குங்குமம் - குங்குமக் குழம்பு பூசப்பட்ட, முலையாட்கு-தனங்களையுடையவளாகிய என் பெண்ணுக்கு, ஆர்க்கும் குளிரும் நிலவு-யாவருக்கும் குளிர்ந்திருக்கிற நிலவானது, அனல் ஆகும்-நெருப்பா யிராநின்றது. எ-று.

கீர்த்திக்கு நிறம் வெண்மையாதலால் "ஒருவெளுப்பாய்நின்று"என்றார்

இதுவுமது.

4. கூரம்பொறுத்தவிழியாள்கதலிக்குருத்திலிட்ட
ஈரம்பொறுக்கவறிந்திலளேயிந்த்ரனிட்டசெம்பொன்
ஆரம்பொறுத்தபுயமீதிலாயிரநாவுரக
பாரம்பொறுத்தபுயலேபராக்கிரமபாண்டியனே.

இ-ள். இந்த்ரன் இட்ட-இந்திரன் தந்த, செம்பொன்-செம்பொன்னினாற்செய்த, ஆரம் பொறுத்த-ஆரத்தைத்தாங்கிய,புயமீதில்-தோளின்மீது ஆயிரம் நா உரகம் பாரம் பொறுத்த-ஆயிரம் நாக்களையுடைய பாம்பாகிய ஆதிசேடன் தாங்குகின்ற பூபாரத்தைத் தாங்கிய, புயலே-மேகமே, பராக்கிரமபாண்டியனே—, கூர் அம்பு ஒறுத்த கூர்மையாகிய அம்புகளைவருத்திய, விழியாள் - கண்களையுடையவளாகிய என்-பெண்ணனவள், கதலிக் குருத்தில் இட்ட-வாழைக்குருத்திலுள்ள, ஈரம் பொறுக்க அறிந்திலளே ஈரத்தைச் சகிக்கவும் தெரிந்திலளே. எ-று.

நெருப்பினால் வெந்தவர்களை வாழைக்குருத்தில் கிடத்துவதுமரபு ஆதலால் விரகாக்கினியால் வெந்த இவளுக்கும் "கதலிக்குருத்திலிட்ட" எனக்கற்பித்துக் கூறப்பட்டது. கூறம்பொறுத்த என்பதனை கூர் அம் பொறுத்த எனப்பிரித்து கூர்மையையும் அழகையும் தாங்கிய எனினும் அமையும்.

இதுவுமது.

5. வெறிக்குங்குமக்கொங்கைமீதேயிளம்பிறைவெள்ளைநிலா
எறிக்கும்பொழுதுவந்தாயிலையேயிலங்காபுரியைக்
குறிக்கின்றராவணன்பொன்முடிபத்துங்குரக்கைவிட்டுப்
பறிக்கின்றசண்பகமாறபராக்கிரமபாண்டியனே.

இ-ள். இலங்கா புரியை-இலங்கை நகரத்தை, குறிக்கின்ற - (தன்னதென்று) நினைத்திருந்த, ராவணன் - இராவணனுடைய, பொன்முடி பத்தும்-பொற்கிரீடம்பத்தினையும், குரங்கைவிட்டு பறிக்கின்ற - வானரத்தையனுப்பிப்பறித்த, சண்பகமாற - சண்பகமாறனே, பராக்கிரம பாண்டியனே, வெறிகுங்குமக் கொங்கைமீதே-மணம்பொருந்திய குங்குமக் குழம்பணிந்த தனங்களின்மேலே, இளம்பிறையானது, வெள்ளை நிலா எறிக்கும்பொழுது-வெண்மையாகிய நிலவை வீசும்போது, வந்தாயிலையே-வந்தனை யில்லையே. எ-று.

இதுவுமது.

6. சுரும்பேய்க்கும்வாட்கண்ணிபங்காளர்கண்கொண்டுசுட்டுவிட்ட
பெரும்பேய்க்குவேப்பிலைக்காப்புதவாய்பிணர்சேர்பசுங்கோங்

கரும்பேய்க்குமென்முலையாரமுதூட்டியடர்ந்துகொல்ல
வரும்பேய்க்குவானுதவுங்குலசேகரமன்னவனே.

இ-ள். பிணர்சேர்-சருச்சரை பொருந்திய, பசுங்கோங்கு அரும்பு எய்க்கும்-பசியகோங்கினது அரும்பை நிகர்த்த, மெல் முலை-மெல்லிய தனங்களின், ஆர் அமுது ஊட்டி-அரிய அமிர்தத்தையுண்பித்து, அடர்ந்துகொல்லவரும்-நெருங்கிக் கொல்லும்பொருட்டுவந்த, பேய்க்கு - பூதனையென்னும் அரக்கிக்கு, வான் உதவும்-மேலுலகங்கொடுத்த, குலசேகரமன்னவனே—, சுரும்பு எய்க்கும்-வண்டுகளை நிகர்க்கின்ற, வாள் கண்ணி - வாள்போலுங் கண்களையுடையவளாகிய உமாதேவியை, பங்காளர் - பாகத்தில் வைத்தாள்பவராகிய சிவபெருமானுனவர், கண்கொண்டு சுட்டுவிட்ட-நெற்றிக்கண்ணினுல் எரித்துவிட்ட, பெரும்பேய்க்கு - பெரியபேய்க்கு, வேப்பிலைக்காப்பு உதவாய்-வேப்பிலைமாலையாகிய காவலைத் தருவாயாக.

பெரும்பேய் என்றது-மன்மதனை.

பாண்டியனது கல்வித்திறத்தைப் புகழ்ந்து பாடியது.

7. பூணித்திலத்துப்புயல்வீரமாறன்புகல்கவிக்கு
நாணிப்புலவர்செல்லாதென்செய்வாரிந்தநானிலத்தில்
ஆணிக்கனகமணந்தரிற்பூமணம்யார்கொள்ளுவார்
மாணிக்கந்தித்திக்கிலெனுகுமற்றமதுரங்களே.

இ-ள். இந்த நானிலத்தில்-இந்த வுலகத்தில், பூண் நித்திலத்துபுயல்-முத்துமாலையையணிந்த மேகம்போன்ற, வீரமாறன் புகல் கவிக்கு - வீரபாண்டியன் சொல்லுங் கவிக்கு, புலவர் நாணிச்செல்லாது - புலவர்கள் நாணிப்போகாமல், என் செய்வார்-யாது செய்வார், ஆணிக்கனகம் மணம் தரின்-ஆணிப்பொன்னுனது வாசனையை வீசுமாயின், பூமணம் யார்கொள்ளுவார்-புஷ்பவாசனையை யார் ஏற்பார், மாணிக்கம் தித்திக்கின் - மாணிக்கம் இனிக்குமாயின், மற்றமதுரங்கள்-மற்ற இனிமைகள் என் ஆகும் - யாதாகும். எ-று.

பாண்டியன் செல்வத்தாலன்றிக்கல்வியாலும் சிறந்தவன் என்பதுகருத்து.

இதுவுமது.

8. எண்ணீர்மைநூலுக்ககத்தியனுமிவனென்பதெல்லாம்
வெண்ணீர்மையன்றிவிரகல்லவேயிவ்வியனுலகல்
பண்ணீர்மைதரும்பராகிரமமாறன்பதங்கழுவும்
தண்ணீர்குடித்தல்லவோகும்பயோனிதமிழ்கற்றதே.

இ-ள். என் நீர்மை நூலுக்கு-மதித்தற்குரிய குணமுள்ள நூலாராய்ச்சியில், இவன் அகத்தியன் ஆம் என்றது எல்லாம்-இவன் அகத்தியனேயாவனென்று சொல்லுவதெல்லாம், வெள் நீர்மை அன்றிவிரகு அல்ல - அறி

யாமைக்குணமேயன்றி நியாயமன்று, (என்னெனின்) இரவியின் உலகில்- இந்த விசாலமாகிய பூமியில், பண் நீர்மை தேரும்-பண்களின் குணங்களை யாராய்ந்த, பராக்கிரமமாறன் - பராக்கிரம பாண்டியனது, பதம் கழுவும்- பாதங்களைக் கழுவின, தண்ணீர் குடித்தல்லவோ, கும்பயோனி-தண்ணீரைக் குடித்தல்லவோ, அகத்தியர், தமிழ்கற்றது-தமிழ்ப்பாஷையைக் கற்றது. எ-று.

துறை-நற்றாயிரங்கல்.

9. காம்புவனம்புக்கதோளாட்குநின்றன்கழுத்திலிட்ட
வேம்புதனக்கும்விதியில்லையோவெகுண்டாய்ச்சியர்கள்
தாம்பினடிக்கவுரலோடுகட்டத்தடைப்பட்டுச்சிப்
பாம்பினடிக்கின்றமாலேபராக்கிரமபாண்டியனே.

இ-ள். காம்பு - மூங்கில், வனம்புக்க வனத்திற்புகுதற் கேதுவாகிய, தோளாட்கும்-தோள்களையுடைய என் பெண்ணுக்கும், நின்றன் கழுத்தில் இட்ட-உன்கழுத்திலணிந்த, வேம்பு தனக்கும்-வேப்பமாலைக்கும், விதியில்லையோ-பொருத்த முறையில்லையோ. ஆச்சியர்கள் வெகுண்டு - இடைச்சியர் கோவித்து, தாம்பின் அடிக்க-தாம்பினு லடிக்கவும், உரலோடுகட்ட- உரலோடு கட்டவும், தடைபட்டு-தடைபட்டு நின்று, உச்சி-உச்சிக்கொண்டையையுடைய, பாம்பில் நடிக்கின்ற - காளிங்கனென்னும் பாம்பின்மீது நடநம் பண்ணின, மாலே-திருமாலே, பராக்கிரம பாண்டியனே. எ-று.

பாண்டியனே, என் பெண்ணுக்கு உன் வேப்பம் பூமாலையைத் தருதல் தகாதோ என்பது கருத்து.

இதுவுமது.

10. கடந்தூங்குவேழப்பிடர்க்கேவரக்கண்டுகண்கண்முத்து
தடந்தூங்கவாடுங்கிளிக்கென்செய்வேன்மணிவாய்திறக்க
விடந்தூங்குபாம்பின்படத்தின்மிசைதிமிதித்தியெனப்
படந்தூங்கவாடும்புயலேபராக்கிரமபாண்டியனே.

இ-ள். கடம்தூங்கு வேழப்பிடர்க்கு - மதமொழுகாநின்ற யானையின் பிடரில், வரக்கண்டு-நீவரப்பார்த்து, கண்கள-கண்கள்,முத்துவடம்தூங்க- முத்துமாலைகள்தொங்க, வாடும்-வாடுகின்ற, கிளிக்கு - கிளிபோல்வாளாகிய என்பெண்ணுக்கு, என்செய்வென-யாதுசெய்வேன், மணிவாய்திறக்க மாணிக்கமுள்ள வாயைப் பிளக்கவும், படம்தூங்க-படம்தொங்கவும்; விடம் தூங்கு பாம்பின் படத்தின்மிசை - விஷம்பொருந்திய காளிங்கனென்னும் பாம்பின்படத்தின்மீது, திமிதித்தி எனஆடும்-திமிதித்தியென்று நடநம்பண்ணின; புயலே-மேகமே; பராக்கிரம பாண்டியனே. எ-று.

பாண்டியனே, நீ யானைமீது பவனிவரக்கண்டு என்பெண் கண்ணீர் சிந்தி வாடுகிறாள் இதற்குயான் என்செய்வேன் என்பதுகருத்து

தலைவிகூற்று-நாரைவிடுதூது.

11. சடம்பழுக்குங்கிழட்டுக்குருகீர்தலைசாய்த்துநின்று
முடம்பழுக்குங்கைதைநற்றுறையிற்றெங்குமுப்புடைக்காய்
குடம்பழுக்குங்கொற்கையான்குலசேகரன்கூடலிலென்
உடம்பழுக்குஞ்சிறையும்பழிகாரருணர்ந்திலரே.

இ-ள். சடம்பழுக்கும்-உடம்புமுதிர்ந்த, கிழட்டுக் குருகீர்-கிழநாரைகளே, கைதை-தாழைகள், தலைசாய்த்து நின்று-தலைவணங்கி நின்று, முடம்பழுக்கும்-வளைவாகப் பழுத்துத் தொங்குகிற, துறையில் - துறைகளில், தெங்கு-தென்னமரங்கள், முப்புடைக்காய் - முப்புடைப்புள்ள காய்களை, குடம்பழுக்கும்-குடம்போலப் பழுக்கின்ற, கொற்கையான்-கொற்கை நகரத்தையுடையவன், குலசேகரன்-குலசேகரபாண்டியனது, கூடலில்-மதுரையில் இருக்கின்ற, என்உடம்பு அழுக்கும்-என் உடம்பின் அழுக்கையும், சிறையும்-சிறையா யிருத்தலையும், பழிகாரர் உணர்ந்திலர் - பழிகாரராகிய தலைவர் அறிந்திலர். எ-று.

தலைவனைப் பிரிந்தமையால் அழுக்கும் சிறையும் அமைந்தனவென்பது கருத்து.

உனக்கடங்காதவை யிரண்டுளவெனப் பாடியது.

12. மற்றொப்பிலாக்கொடைச்சண்பகமாறவரோதயநின்
வெற்றிக்கிரண்டுண்டடங்காதகாரியமேருகிரிச்
சுற்றிலுங்கீர்த்தியடங்காதுநின்னுடைத்தோடழுவாக்
கற்றைக்குழலிக்குமாலடங்காதிதுகைகண்டதே.

மற்றுஒப்பு இலாகொடை-வேறொரு உவமையில்லாத கொடையையுடைய, சண்பகமாற-சண்பக பாண்டியனே, வரோதய - வரத்தினால் அவதரித்தவனே, நின்வெற்றிற்கு-உன்வெற்றிக்கு, அடங்காதகாரியம் இரண்டு உண்டு - அடங்காத காரியங்கள் இரண்டுள்ளன, (அவையாவையெனின்) கீர்த்தி உன்புகழானது, மேருகிரி சுற்றிலும் அடங்காது - மேரு மலையின் சுற்றுப்புறத்தினும் அடங்கமாட்டாது. நின்னுடைய தோள்தழுவா - உன்னுடைய புயங்களைத் தழுவாத, கற்றைக்குழலிக்கு - கூந்தற் கற்றையையுடைய என் பெண்ணுக்கு, மால் அடங்காது - காமமயக்கம் அடங்கமாட்டாது, இது கைகண்டது-இவ்விஷயங் கைகண்டது. எ-று.

உன்கீர்த்தியும், இவள் விரகநோயும் உன் ஆணையில் அடங்குகின்றனவில்லை என்பதுகருத்து.

விருத்தம்.

துறை-நற்றாயிரங்கல்

13 ஒருவானுதல்பண்டுளங்களிக்கவுபர்வான்முகடுகிழித்தெழுந்து
மருவார்தருவின்மரங்கொணர்ந்தமதுரைவடிவேலதிதீரா

அரவார்வேம்பின்பசுங்கண்ணியந்திஇறைவிக்கருளென்று
இரவாதிருக்கநீயளித்தற்கிரங்காதிருந்தாயிதுநாளே.

இ-ள். ஒருவாணுதல்-ஒருபெண்ணானவள், பண்டு-முற்காலத்தில், உள்ளம் களிக்க-மனமகிழும்படி, உயர்வான் முகடுகிழித்து எழுந்து - உயர்ந்த அண்டமுகட்டைக் கிழித்தெழுந்து, மருஆர் தருவின்மரம் கொணர்ந்த-மணம் நிறைந்த கற்பகச் சோலையிலுள்ள பாரிசாத மரத்தைக் கொண்டுவந்த, மதுரை வடிவேல் அதிதீரா-மதுரையில் வாழ்கின்ற வடித்த வேற்படையையுடைய மிக்கதீரனே, அரவு ஆர்வேம்பின் பசுங்கண்ணி - ஒலிக்கின்ற வேம்பின் பசியமாலையை, அந்தி - அந்திக்காலத்தில்; இறைவிக்கு-எமது தலைமகளுக்கு, அருள் என்று-அருள் செய்கவென்று, இரவாதிருக்க - யாம்பிரார்த்தியாம லிருக்கும்படி, நீ அளித்தற்கு இரங்காது இருந்தாய்-நீ யருள்செய்தற் பொருட்டு இரக்கஞ்செய்யாமலிருந்தாய். எ-று.

யாம் நாள்தோறும் அந்திக்காலத்தில் உன் வேப்பமாலையை இரவாமல் இருக்கும்படி நீ இவளைக் காக்கும்பொருட்டு இரங்கி யருளவேண்டும். அவ்வாறு நீ செய்யாமைக்குக் காரணம் என்னோ என்பது கருத்து.

கடிகைமுத்துப்புலவர் பாடல்.

வெங்கடேசு ரெட்டன்மீது பாடியது.

துறை-நற்றாயிரங்கல்.

1. கராமடியச்சக்கரந்தொட்டெய்தவெங்கடேசுரெட்டன்கமலப்பூநி
கராமடிதொட்டாலும்வரவழைப்பார்காணேனங்கனைமார்சேவ
கராமடிபட்டிடுபேரிவாரிதியாமிவளையெவர்காப்பாரோசங்
கராமடிவிட்டிறங்காதபேதையின்மேற்கணைதொடுத்தான்காமவேளே

இ-ள். கராமடிய - (மடுவில் கஜேந்திராழ்வானைப் பற்றின) முதலையிறக்கும்படி, சக்கரம் தொட்டு எய்த - சக்கராயுதத்தை யெடுத்துப் பிரயோகித்த, வெங்கடேசு ரெட்டன் - வெங்கடேசு ரெட்டனது, கமலப்பூநிகர் ஆம் - தாமரைப்பூவுக்கு நிகராகிய, அடி - பாதத்தை, தொட்டு ஆலும்-நீட்டிவணங்கியாயினும், வர அழைப்பார்-வரவழைப்பவரை, காணேன்-கண்டிலேன், அங்கனைமார் சேவகராம்-மாதர் சேவகர்களாம், வாரிதி-கடலானது, அடிபட்டிடுபேரி ஆம் - அடிபடுகின்ற முரசாம், இவளை எவர் காப்பாரோ-இவளை யாவர் காப்பாற்றுவரோ, சங்கரா-சிவனே, மடிவிட்டு இறங்காத-என்மடியைவிட்டுக் கீழிறங்காத, பேதையின்மேல் - பேதைப் பெண்மீது, காமவேள்-மன்மதன், கணைதொடுத்தான் - அம்புகளைப் பிரயோகித்தான். எ-று.

துறை-தலைவியிரங்கல்.

2 கன்றுகொட்டுக்கனியுகுத்த கீர்த்திவெங்க டேசுரெட்டாக மலக்கண்ணு, கன்றுதொட்டதத்தனையுங் கைநெகிழ்ந்ததறியாயோ கலையுஞ்சோர்ந்த, கன்றுதொட்டரவிக்கையெல்லாங்காமனம்புகிழித்ததுபார்கருத்துக்தானே, கன்றுதொட்டுப்பட்டசிட்டுப் போல் மெலிந்துவாடுவதுங்கண்டிலாயே.

இ-ள். கன்றுதொட்டு - கன்றைக் கல்லாகக் கொண்டெறிந்து, கனி உகுத்த (விளாங்) கனியை உதிர்த்த, கீர்த்தி-புகழையுடைய, வேங்கடேசுரெட்டா வெங்கடேசு ரெட்டனே, கமலக்கண்ணு - தாமரை மலர்போலுங் கண்களையுடையவனே, தொட்டது கன்று அத்தனையும் - அணிந்த வளையல்முழுதும், கைநெகிழ்ந்தது அறியாயோ - கைகழன்றதை யறிந்திலையோ, கலையும் சோர்ந்து அகன்று - ஆடையும் தளர்ந்து நீங்க, தொட்டரவிக்கை எல்லாம் தரித்த ரவிக்கை முழுதும், காமன் அம்பு கிழித்தது பார்-மன்மத பாணங்கள் கிழித்ததைப்பாராய், கருத்தும் தானேகன்றுது-என்மனமும் தானே புழுங்குகின்றது, ஒட்டுப்பட்ட - ஒட்டில் அகப்பட்ட, சிட்டுபோல்-சிட்டுக்குருவிபோல, மெலிந்து வாடுவதும்-நான் இளைத்துவாடுவதையும், கண்டிலாயே-பார்த்திலையோ. எ-று.

விளாங்கனியை யுதிர்த்தது கிருஷ்ணாவ தாரத்தில். அரசர் முதலியோரைத் திருமாலாக்கியுரைத்தல் வழக்காதலால், கன்றுதொட்டுக் கனியுகுத்த கீர்த்தி வெங்கடேசு ரெட்டா, என்றார்.

துறை-தோழிவண்டுகளை நோக்கிக் கூறியது.

3. வளவனைநேராகவிசை வளர்த்தவெங்க டேசுரெட்டன் மருவாநாளில், வளவனைமாரையும் வெறுத்தாண் மாரனும்பூங் கணையேவவருந்தியேய, வளவனையே நினைத்திருந்தாண் மடலெழுத வறியாளாய் மருங்கிலேது, வளவனையா டையுமிழந்தாள் வண்டினங்காள் கண்டசெய்திவழுத்துவீரே.

இ-ள். வளவனைநேர் ஆக - சோழனைநிகர்க்க, இசைவளர்த்த கீர்த்தியைவளர்த்த, வெங்கடேசு ரெட்டன்-வெங்கடேசு ரெட்டனுனவன், மருவாநாளில்-பொருந்தாநாளில், வளவு-வீட்டிலுள்ள, அன்னைமாரையும் வெறுத்தாள்-தாய்மாரையும் வெறுத்தாள், மாரனும்-மன்மதனும், பூகணைஎவ-புஷ்பபாணங்களை பிரயோகிக்க, வருந்தி - வருத்தமடைந்து; அவள் அவனையே நினைந்து இருந்தாள் - அவள் அவனையே நினைத்துக்கொண்டிருந்தாள், மடல் எழுத அறியாளாய்-மடல் எழுதவும் அறியாதவளாகி, மருங்கிலே துவள - இடையிலே துவளும்படி, வனை - உடுத்த, ஆடையும் இழந்தாள்-வஸ்திரத்தையும் நழுவவிட்டாள், வண்டு இனங்காள்-வண்டின் கூட்டங்களே, கண்டசெய்தி கண்டசெய்தியை, வழுத்துவீர் - (அவனுக்கு) சொல்லுவீராக. எ-று.

துறை-நற்றாயிரங்கல்.

4. பாகப்பாவருமையறி யிளசைவெங்க டேசுரெட்டா பகரக் கேண்மோ, பாகப்பாமொழிவிழியாணீ யேறிவருங்களிற்றைப் பார்த்தாளாங்கொம், பாகப்பாமதிக்கவரா வென்றாளம் மதியுதிக்கப் பசந்தேயீசன், பாகப்பாவையினுகமானாள்யா னீன்றெடுத்தபாவைதானே.

இ-ள். பாகப்பா அருமை அறி-செம்பாகமமைந்த பாடல்களின் அருமையை உணர்ந்த, இளசை-இளசைநகரில் வாழ்கின்ற, வெங்கடேசுரெட்டா-வெங்கடேச ரெட்டனே, பகரக்கேள் - சொல்லக்கேள், பாகு-சர்க்கரைப்பாகும்; அம்பு-கடலும், ஆம்-போல்கின்ற, மொழிவிழியாள்-சொல்லையும் கண்ணையும் உடையவள், நீ எறிவரும் களிற்றை-நீயேறிவரும் யானையை, பார்த்தாளாம்-நோக்கினாளாம், கொம்பா கப்பா-தந்த மாமரக்கப்பா, மதிக்கவரா என்றாள்-மதிக்கவொண்ணா வென்றாள், அ மதி உதிக்க-அந்தச்சந்திரன் உதிக்க, பசந்து-பசலை நிறமடைந்து, ஈசன்பாகம்-சிவபெருமானது இடப்பாகத்திலுள்ள, பாவையின் - பாவைபோலும் உருவமுடைய உமாதேவியின், ஆகம் ஆனாள்-உடம்புபோலாயினாள், (யாரெனின்) யான் ஈன்றெடுத்த பாவை-நான் பெற்றெடுத்த பெண். எ-று.

மதிக்கவரா என்பதற்குச் சந்திரகண்டமா எனினுமாம், ஈசன் பாகப் பாவையி னுகமானாள் என்பதற்கு அரையுடம் பானாள் என்பது கருத்து.

துறை-தலைவி தோழியோடு கூறல்.

5. கருக்கோட்டையாளும் வெங்கடேசுரெட்ட மேந்த்ரனென்னைக்கலந்தபோகக், கருக்கோட்டைகாணுமடி சகியேமுன் போலின்னுங்காமனுந்த, கருக்கோட்டைநிகர்வீசை முறுக்கிவரக்காணிலவன்கங்குன்மாவைக், கருக்கோட்டையம்பினையும் பறிவெருட்டு தலைவாசல்கடக்கத்தானே.

இ-ள். அடிசகியே - அடிதோழியே, கருக்கோட்டை ஆளும் - கருக்கோட்டையை யாளுகின்ற, வெங்கடேசு ரெட்டமேந்த்ரன்-வெங்கடேசு ரெட்டமன் என்னும் இந்திரன், என்னைக்கலந்த - என்னைச்சேர்ந்த, போகக்கருக்கு-போகத்தின் கூர்மையானது, ஓட்டைகாணும் - கெடும், (ஆதலால்) முன்போல் இன்னும்-முன்போலவே யின்னமும், காமனும் - மன்மதனும், தகருகோட்டை நிகர்வீசை - ஆட்டுக்கடாவின் கொம்பை நிகர்த்த வீசையை, முறுக்கிவரக்காணில்-முறுக்கி வரப்பார்த்தால், அவன் கங்குல் மாவை கருக்கு-அவனது இருளாகிய யானையைக் கருக்கிவிடு, ஓட்டு-துரத்து, ஐ அம்பினையும்பறி - பஞ்சபாணங்களையும் பறித்துக்கொள், தலைவாசல் கடக்க வெருட்டு-தலைவாசலைக்கடக்கும்படி வெருட்டிவிடு. எ-று.

துறை-தலைவி தோழியோடு கூறல்.

6. சந்தானமேநிகர்குமாரமுத்துசாமிசகோதரவான்பொன்னே
சந்தானமேருவெனநிறைந்தகுமாரெட்டனென்னைத்தழுவாவாயா
சந்தானமேதரிக்ககூடுதில்லையவன்மருங்கிற்சகியேநீபோய்
சந்தானமேலேறியுபரிசெய்தாற்றீருமடிதனக்குத்தானே.

இ-ள். சந்தானம் நிகர் - சந்தானமரத்தை நிகர்த்த; குமாரன் முத்து சாமி சகோதரன்-குமாரமுத்து சாமிக்கு சகோதரன், வான்பொன், மேன்மையாகிய பொன்னை யொப்பவன், நேசந்தான் அ மேரு என நிறைந்த-அன்பு அந்த மேருமலைபோல் நிரம்பிய, குமாரெட்டன் - குமார எட்டன், (அவன்) என்னைத்தழுவா - என்னையணையாமையா லுண்டாகிய, ஆயாசந் தான்-வருத்தந்தான், தரிக்கக்கூடுதில்லை-சகிக்கமுடியவில்லை, (அது) சகியே-தோழீ; அவன்மருங்கில்-அவனிடத்தில்; நீபோம் சந்தால் நீபோகின்ற தூதினால்; நம்மேல்எறி-நம்மீதேறி; உபரிசெய்தால் - உபரிலீலைகள் செய்தால்; தனக்குத்தானேதீரும் அடி-தனக்குத்தானே நீங்குமடி. எ-று.

துறை-தலைவி தோழி யோடு கூறல்.

7. திருமாலையம்புதொட்டசிலைமாரனம்புவிக்குட்டிடவான்முல்லைத்
திருமாலையம்புயஞ்சூழ்குமாரவெட்டமனைச்சேரச்செய்தாலுள்ள
திருமாலையந்தெளிந்துசுபசோபனம்பொருந்திச்சிவனைநேசித் [ளே.
திருமாலயந்தொறும்போயுனைநினைத்துத் தெரிசிப்பேன்றிருமின்ன

இ-ள். திருமால் - (காத்தற் றொழிலால்) திருமாலை நிகர்த்தவனும்; (அழகினால்) ஐ அம்புதொட்ட - பஞ்சபாணங்களைப் பிரயோகித்த; சிலை-வில்லையுடைய; மாரன் மன்மதனை நிகர்த்தவனும்; அம்புவிக்குள்திடவான்-உலகத்தில் வலியிற் சிறந்தவனும் ஆகிய; முல்லை - முல்லைமலரால் தொடுத்த; திருமாலை - அழகிய மாலையை; அம்புயல்சூழ் - அழகியதோள்களில் அணிந்த; குமார எட்டமனை-குமாரஎட்ட மேந்திரனை; சேரச்செய்தால்-அணையச்செய்தால்; உள் அதிரும்-மனம் நடுங்குவதற் கேதுவாகிய; மால் ஐயம்தெளிந்து; மயக்கம் சந்தேகம் என்பவை தீர்ந்து; சுபசோபநம் பொருந்திய-சுபசோபநத்தை யடைந்து; சிவனை நேசித்து - சிவனை அன்புசெய்து; இரும்-பெரிய; ஆலயந்தொறும் போய்-கோயில்கள் தோறும்போய்; உன்னை நினைத்து தெரிசிப்பேன்-உன்னை நினைத்துக்கொண்டே தரிசநம் பண்ணுவேன்; திருமின்னளே-திருமகளை நிகர்த்த தோழியே. எ-று.

முதலடியில் திருமாலை என்பதைத் திரும் ஆலை எனப்பிரித்து; திருமுகின்றகரும்பை என்றும்; அம்புதொட்ட சிலை என்பதற்கு அம்புதொடுக்கும் வில்லாகக்கொண்ட என்றும் பொருள் கூறினுமமையும்.

துறை-நற்றாயிரங்கல்.

8. மாதங்கங்கோடிநிலவறைக்குளொளித்தாலுமந்தவழியேகம்ப
மாதங்கங்கோடிவிடச்சென்றடிக்குமுயிர்தரிக்குமாசிவாரா
மாதங்கங்கோடிகலுங்கடலொலிக்கென் செய்வனினிவந்துசேர்வாய்
மாதங்கங்கோடிதமிழ்க்குதவும்வசுவப்பமதிமந்திரிநீயே.

இ-ள். மாது-என்பெண்ணானவள், அங்கு அங்கு ஓடி-அங்கங்கே ஓடி, நில அறைக்குள் ஒளித்தாலும்-நிலவறையில் ஒளித்துக்கொண்டாலும், அந்தவழி-அவ்வழியாக, ஏகு-போகின்ற, அம்பு-பாணங்கள், அ-அந்த, மாது-பெண்ணினது, அங்கம்-உடம்பு, கோடிவிட-குறையும்படி, சென்று அடிக்கும்-போய்ப்படும், உயிர்தரிக்குமா-பிராணன் தரித்திருக்குமோ, சிவா-சிவனே, ராமா-ராமனே, தங்கு-பொருந்திய, அம்கோடு - அழகிய கரையை, இகலும்- அழிக்கின்ற, கடல்-கடலினது, ஒலிக்கு-ஓசைக்கு, என்செய்வள்-யாதுசெய்வாள், இனி-இனியாயினும்,வந்துசேர்வாய்-வந்துகூடுவாய், தமிழ்க்கு-தமிழ்ப் பாடலுக்கு, கோடி மாதங்கம் - கோடி யானைகளை, உதவும்-கொடுக்கிற, வசுவப்ப-வசுவப்பனென்னும், மதிமந்திரிநீ - அறிவையுடைய மந்திரியாகிய நீ. எ-று.

துறை-நற்றாயிரங்கல்.

9. தமிட்டராணுவம்பெருக்கிவந்தெதிர்த்தவேண்முரசுசத்தங்காது
தமிட்டராவெனப்புலம்புஞ்சிறுபேதைவிரகமதுதணியவேமுத்
தமிட்டராமதிமுகத்தின்முகமழுந்தவேபுணரச்சமயம்வாணர்
தமிட்டராதரந்தெரியுமெங்களெட்டேந்திரமகிபாதமிழரேறே.

இ-ள். வாணர்-கவிவாணரது, தமிழ்-தமிழ்ப் பாடல்களின், தராதரம் தெரியும்-தராதரத்தை அறிந்துகொள்ளுகின்ற, எங்கள் - எங்களுடைய, எட்டேந்திர மகிபா-எட்டேந்திர பூபதியே, தமிழர் ஏறே - தமிழ்நாட்டாருள் சிறந்தவனே, தமிட்டப்-பறையறைகின்ற, ராணுவம் பெருக்கி-சேனைகளைப் பெருக்கி, வந்து எதிர்த்த-வந்தெதிர்த்த, வேள் - மன்மதனுடைய, முரசுசத்தம்-பேரிகை யொலி, காதுதம் இட்டு - காதுகளில் கேட்டு, அரா என-பாம்புபோல, புலம்பும்-வருந்துகின்ற, சிறுபேதை-எனது சிறுபெண்ணின், விரகமது தணிய-விரகமடங்க, முத்தமிட்டு-முத்தமிட்டு, அ ராமதி முகத்தில் - அந்த இரவில் தோன்றுகின்ற சந்திரன்போன்ற முகத்தில், முகம் அழுந்த-முகம்பொருந்த, புணர - தழுவுதற்கு, சமயம் - (இது) தருணம். எ-று.

துறை-நற்றாயிரங்கல்.

10. பரத்துவசத் துருத்தாயர் பாயன்மிசைப் பூவைமுலைப் பணிப்பிலேம, கரத்துவசப்பாவிமலர் தூற்றுவர்நா ணற்றுவனே

காட்டிலேழு, மரத்துவசத் தொருகணையா லெய்தவெங்கடேசு ரெட்டன் மருவாநாளிற், சரத்துவசக் குரங்கெனவே தனித்திருந்து முடியாது சாற்றினனே.

இ-ள். பரத்துவசத்துரு-அன்னிய சத்துருவையொத்த, தாயர்-தாய்மார், பூவை-இப்பெண்ணினது, பாயல்மிசை-பாயலின் மீதும், மகரத்துவசப்பாவி-மீனக்கொடியையுடைய மன்மதன், முலைப்பணைப்பிலே - பருத்த ஸ்தநதடங்களிலும், மலர்-புஷ்பங்களை, தூற்றுவர் - இறைப்பார்கள், நான் ஆற்றுவனோ-(அதைக்கண்டு) நான் சகிப்பேனோ, காட்டில்-காட்டிலுள்ள, எழுமரத்துவசத்து-எழு மராமரங்களின்மீது, ஒருகணையால் எய்த-ஒருபாணத்தால் எய்த, வெங்கடேசு ரெட்டன் - வெங்கடேசுர எட்டன், மருவா நாளில்-சேராத காலத்தில், சரத்துவசக் குரங்கு என-சத்ரகாலத்தில் அகப்பட்ட குரங்குபோல, தனித்து இருந்து - தனியாகி இருந்து, முடியாது-முடிவுபெறாது, சாற்றினேன்-சொன்னேன். எ-று.

பூவை - பூவைபோல்வாள், இது உவமையாகுபெயர் பூவை, நாகணவாய்ப்புள் (மைநா).

துறை-நற்றாயிரங்கல்.

11. நிலமாதுதிலகனெங்க ளிளசைவெங்கடேசுரெட்டனின்னைப்பார்த்த, பலமாதுவதனமும்பொற் பசலைகொண்டாய் மகளே பெண்படையாமேகங், குலமாதுரங்கமென்ற கிள்ளையின்மேன் மாரன்வருங் குறியைப்பார்த்துச், சொலமாது துகிலுங் கையிலேதொடுவளையுந் தோற்றுநின்ற துணிவுதானே.

இ-ள். மகளே-மகளே, பெண்படை ஆம் - பெண்கள் சைனியமாம், கங்குல்-இருளானது, அம்-அழகிய; மா-யானையாம்; துரங்கம் என்ற - குதிரை என்றுகொண்ட, கிள்ளையின்மேல்-கிளியின்மீது, மாரன்வரும் - மன்மதன் வருகின்ற; குறியை-அடையாளத்தை; பார்த்துச்சொல்ல - பார்த்துச் சொன்ன அளவில்; மா-அழகிய; துகிலும்-ஆடையையும்; கையிலே தொடுவளையும்-கையிலே அணிந்த வளையலையும்; தோற்றுநின்ற - இழந்துநின்ற; துணிவு-நிச்சயம்; நிலமாது திலகன் - பூமிதேவிக்குத் திலகம் போன்றவனாகிய; எங்கள் இளசை - எங்கள் இளசை நகரில் வாழ்கின்ற; வெங்கடேசு ரெட்டன்—; நின்னைப்பார்த்த-உன்னைநோக்கின; பலமா-பயனா; துவதனமும்-இருதனங்களிலும்; பொன்-தேமலையும்; பசலை - பசலை நிறத்தையும்; கொண்டாய்-அடைந்தாய். எ-று.

தலைவிகூற்று-மன்மதனை யச்சுறுத்தல்.

12. கலக்கடமா னத்தொனியை முழக்கமனமலைந்தடையார் கால்சாய்ந்தோடப், பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும்வெங்க

டேசுரெட்டன் பிணையலீய்ந்தான், சிலக்கடமா மரக்குயிலே யொடுக்குகடற்றொனியடக்கு தென்றற்றேரை, விலக்கடமா மதப்பயலே தலைக்கடைவாசலைக்கடக்க வெருட்டுவேனே.

இ-ள். கலக்க - (பகைவர்சேனையை) கலக்கும்பொருட்டு; டமானத்தொனியைமுழக்க - பேரி ஒலியை முழக்க; அடையார் - பகைவர்; மனம் அலைந்து-மனம்கலங்கி; கால்சாய்ந்து ஓட-அடியற்று ஓட; பெலம் - பலமாகிய; கடம்-மதம்பொழிகின்ற; மா-பெரிய; நகம்-மலைபோன்ற; களிற்றை-யானையை; நடத்து-செலுத்துகின்ற; வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுரெட்டனுனவன்; பிணையல்-தன்மாலையை; ஈந்தான் - கொடுத்தான்; (ஆதலால்)-மா-அழகாகிய; மதப்பயலே-மன்மதனுகிய பையலே; சில-சிலவாகிய; கடம்-சோலையிலுள்ள; மாமரம்-மாமரங்களில் தங்கிய; குயிலை - குயில்களை; ஒடுக்கு-வாயடக்கு; கடல்தொனி அடக்கு-கடலோசையை அடக்கு, தென்றல் தேரைவிலக்கு-தென்றலாகிய ரதத்தைநீக்கு; அட-அடே; தலைக்கடை வாசலைக்கடக்க-தலைக்கடைவாசலைக்கடக்கும்படி;வெருட்டுவேன்-துரத்திவிடுவேன். எ-று.

தாயிரங்கல்.

13 திருக்கரங்கம் வகுத்தவயில் செலுத்துபடை யான்கமலச்சேக்கையாமா, தருக்கரங்கம்பயிற்றுதுரை யிளசைவெங்கடேசுரெட்டன் றழுவாநாளில், அருக்கரங்கம்புரந்திடவு மம்புலியும் வெம்புலிபோலாச்சேகண்டாய், உருக்கரங்கம்பரந்துடைக்க வுருக்காமம் பிதந்தானென் றருகுவாளே.

இதன்பொருள் நன்கு புலப்படவில்லை.

தாயிரங்கல்-வண்டுவிடுதூது.

14. பொரக்கலக்க முற்றவருக் கிரங்கும்வெங்க டேசுரெட்டன் புயங்கண்டாண்மேல், உரக்கலக்கமற்றகணை மதன்விடுத்தலென்னசெய்வா ளோகோகிண்ணச், சரக்கலக்கம் மியன்கடைந்துசெப்பலத்தானேதிரண்ட தனத்தினூடே, வரக்கலக்கண் ணீருகுத்தாள் வண்டினங்காள் கண்டசெய்தி வழுத்துவீரே

இ-ள். பொர-போர்செய்ய; கலக்கம் உற்றவருக்கு - கலங்கினவர்களுக்கு; இரங்கும்-இரக்கஞ்செய்கின்ற; வெங்கடேசு ரெட்டன் - வெங்கடேசு ரெட்டனது; புயம்-தோள்களை; கண்டாள்மேல் - பார்த்தவள்மீது; உரக்க-உறுதியாக; லக்கம் அற்றகணை-கணக்கிலாத அம்புகளை, மதன்விடுத்தால் - மன்மதன் எவினுல்; என்னசெய்வாள் - யாதுசெய்வாள்; ஓகோ-ஓகோ; கிண்ணச்சரக்கு அல்ல - கிண்ணமாகிய பொருளல்ல; கம்மியன் கடைந்தசெப்பு அல்ல-கம்மாளன் கடைச்சலிட்ட செப்பு அல்ல; தானே-தனக்குத்தானே; திரண்ட-திரட்சியாகிய; தனத்தினூடேவர - தனத்தின்

மீதே ஒழுக; கலக்கண்ணீர்-கலக்கண்ணீரை; உகுத்தாள்-சிந்தினாள்; வண்டு இனங்காள்-வண்டின் கூட்டங்களே; கண்ட செய்தி-நீங்கள் கண்ட சமாசாரத்தை; வழுத்துவீர்-(அவருக்கு) சொல்லுங்கள். எ-று.

தலைவிகூற்று-சந்திரோபாலம்பநம்; (சந்திரனை நிந்தித்தல்.)

15. இத்தரமேசத்துணிவா ரென்சகிமார்வஞ்சகிமா ரென்றால் வேளம்பு, புத்தரமேவத்தனமே புண்படுமேயென்புகல்வேன் புலவோர்க்கேபோ, தத்தரமே கத்திணையாய்த் தழைத்தவெங்கடேசுரெட்டன் றழுவினாலே, துத்தரமே தித்தனையு முன்னாலே விளைந்ததன்றோ வொருநிலாவே.

இ-ள். என் சகிமார்-என்தோழிமார்; இத்தரம் - இந்தத்தன்மையாக; ஏசத்துணிவார்-வையத்துணிவார்கள்; வஞ்சகிமார் என்றால் - (இவர்கள்) வஞ்சனைக்காரிகளென்றால்; உத்தரம்-பின்னே; வேள் - மன்மதன்; அம்பு ஏவ-அம்பை பிரயோகிக்க; தனம்புண்படும் - தனங்கள் புண்பட்டுப்போம்; என்புகல்வேன்-யாதுசொல்வேன்; புலவோர்க்கே - வித்துவான்களுக்கே, போததர-மிகுதியாய்க்கொடுக்க; மேகத்து இணையாய்-மேகத்துக்குச் சமானமாய்; தழைத்த-செழித்த; வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுரெட்டன்; தழுவினால்-என்னைச்சேர்ந்தால்; உத்தரம் ஏது ஏது - மறுமொழி யாது யாது; இத்தனையும்-இவ்வளவும்; உன்னாலே விளைந்தது அன்றோ-உன்னால் விளைந்ததல்லவா; ஒரு நிலாவே-ஒப்பற்ற நிலாவே. எ-று:

தலைவிகூற்று:

சந்திரோபாலம்பநம்:

16. கொட்டமிடு மருவலர்க ளிட்ட கற்கோட்டைக ளனைத்துங்கொழுதூளாக, வட்டமிடும் பரிநகுல னெட்டமரா சேந்தரனென்னை மருவாநாளில், துட்டமதன் கணை துளைத்த துளைவழியே தென்றல்வந்து சுவைத்துத்தள்ளி, விட்டவெறுங் கூட்டையினிச் சுட்டதனா லென்னபயன் வெண்ணிலாவே.

இ-ள்: கொட்டமிடும்-கொட்டமிடுகின்ற; மருவலர்கள்-பகைவர்கள்; இட்ட-அமைத்த; கல்கோட்டைகள் அனைத்தும் - கற்கோட்டைகளெல்லாம்; கொழிதூள் ஆக-கொழிக்கப்படுகிற தூளி ஆக; வட்டமிடும்-சாரிவருகின்ற; பரி-குதிரைகளுக்கு; நகுலன் - நகுலன்போன்றவன்; எட்டமராசேந்திரன்-எட்டமராஜேந்திரன்; என்னைமருவாநாளில் - என்னைச்சேராத காலத்தில்; துட்டமதன் - துஷ்டனாகிய மன்மதன்விட்ட; கணைதுளைத்த-அம்புகள் துளைத்த; துளைவழியே - துவாரத்தின்வழியே; தென்றல்வந்து-தென்றற்காற்றுவந்து; சுவைத்து-ருசிபார்த்து; தள்ளிவிட்ட - தள்ளிவிட்டுப்போன; வெறுங்கூட்டை - வெறுமையாகிய சரீரத்தை; இனிசுட்ட

ஞல்-இனிச்சுவெதனுல், என்னபயன்-என்னபிரயோஜனம், வெள்நிலாவே-வெண்மையாகிய சந்திரனே. எ-று.

வட்டமிடுதல்-வையாளிவருதல் (சாரிவருதல்.)

செவிலிகூற்று.

17. புவிக்காதி பதியிளசை புரந்தவெங்க டேசுரெட்டன் புலவோர்சொல்லும், கவிக்காதி வள்ளலைக்கண் டாசைகொண்டா ளுக்கமுதைக் கரைத்துப்பால்வார்த், துவிக்காதிவ் வளவேனும் புகட்டு சகியேமுகத்தைத துடைதண்ணீரு, தவிக்காதி லேசுக்காஞலும் வைத்திவள்காமத் தகைக்குத்தானே.

இ-ள். சகியே-தோழியே, புவிக்கு-பூமிக்கு, அதிபதி - அதிபதி, இளசைபுரந்த-இளசைநகரத்தைக்காத்த, வெங்கடேசுரெட்டன் - வெங்கடேசுர எட்டன், புலவோர் சொல்லும் கவிக்கு - வித்வான்கள் சொல்லுகின்ற பாடல்களுக்கு, ஆதிவள்ளலே-முதல்வள்ளலா யிருப்பவனுமானவனே, கண்டு-பார்த்து; ஆசைகொண்டாளுக்கு-ஆசைகொண்ட இவளுக்கு, அமுதைக் கரைத்து-சோற்றைக்கரைத்து, பால்வார்த்து-பால்விட்டு, விக்காது - விக்காமல், இவ்வளவேனும்-இவவளவாயினும், புகட்டு - குடிப்பி, முகத்தைத் துடை-முகத்தைத்துடை, இவள்காமத்தகைக்கு-இவளுடைய காமவிடாய்க்கு, தண்ணீர் உதவி-தண்ணீர்கொடுத்து, காதிலே சுக்குஆனுலும்வைத்து ஊது-காதில் சுக்குவைத்தாயினும் ஊது. எ-று.

விடாய்ப்பட்டார் காதில் சுக்குநறுக்கிவைத்தூதல் வழக்கமாதலால்' காதிலே சுக்காஞலும்வைத் தூது என்றார்.

தாயிரங்கல்.

18. பொருவாசிக் கொருநகுல னிளசைவெங்க டேசுரெட்டன்புயங்கண்டாயோ, இருவாசிக் கெனக்கலையை யுடுத்துபணி திருத்துவளை யெங்கேதேடு, மருவாசிக் குங்குழலை முடியுனக்குத் தரிப்பிடந்தான் மகளேசிச்சீ, தெருவாசிச் சினந்துமவன் கைம்மருந்தான் மெய்மறந்து திரிகின்றாயே.

இ-ள். பொரு-போர்செய்கின்ற, வாசிக்கு - குதிரைகளுக்கு, ஒருநகுலன்-ஒப்பற்ற நகுலன்போன்றவன், இளசை வெங்கடேசுரெட்டன் - இளசை வெங்கடேசுர எட்டனது, புயம்-தோள்களை, கண்டாயோ - பார்த்தாயோ, இரு-இரு, வா-வா, சிக்கெனக்கலையையுடுத்து உறுதியாக ஆடையையுடுத்திக்கொள், பணிதிருத்து-ஆபரணங்களை திருத்திக்கொள், வளை எங்கேதேடு-வளையலை எங்கேசிந்தினுய் தேடு, மருவாசிக்கும் குழலைமுடி-பரிமளம் வீசுகின்ற கூந்தலைமுடி, மகளே-மகளே, உனக்கு - உனக்கு, தரிப்பு

இடம் சிக்கினதும் தெருவா - தங்குமிடமாகக் கிடைத்ததும் வீதிதானு, அவன் கைமருந்தால் - அவனது கைமருந்தினுல், மெய்மறந்து திரிகின்ருயே-உடம்புமறந்து திரிகின்றனையே.

குதிரை நடத்துவதில் நகுலன் சிறந்தவனுதலால், பொருவாசிக் கொருநகுலன் என்ருர். நகுலன்-பாண்டவர் ஐவருள் ஒருவன்.

தலைவி குயிலொடுகூறி யிரங்கல்.

19. பொரவிசையஞ் செலுத்துவெங்கடேசுரெட்ட மேந்திரன்மேற் புதுமால்கொண்டேன், கரவிசையங் கசமாரன் கருப்புவில்லை வளைத்துவலக் கையாலெய்யும், சரவிசையங் கத்தில்வந்துதைத்துருவி யப்புறம்போஞ் சகிக்கமாட்டேன், இரவிசையம் புகுந்தொளித்தா னிளங்குயில்கா ணீருமெனக் கிரங்குவீரே.

இ-ள். பொர-(பகைவர்வந்து) போர்செய்ய, விசயம்செலுத்து - தன் வெற்றியைச் செலுத்துகின்ற, வெங்கடேசுரெட்ட மேந்திரன்மேல்-வெங்கடேசுரெட்டேந்திரன்மீது, புதுமால்கொண்டேன் - புதிய ஆசைகொண்டேன், கரவிசை-கைவேகத்தையுடைய, அங்கசமாரன்-அங்கசனென்னும் மன்மதன், கரும்புவில்லைவளைத்து-கரும்புவில்லைவளைத்து, வலக்கையால்-வலதுகையினுல் எய்யும்-பிரயோகிக்கிற, விசைசரம் - வேகத்தையுடைய அம்பானது, அங்கத்தில் வந்துதைத்து - உடம்பில் வந்துதைத்து, உருவி-உருவிக்கொண்டு, அப்புறம்போம்-அப்பால்செலுத்தும், சகிக்கமாட்டேன்-பொறுக்கமாட்டேன், இரவி-சூரியன், சையம்புகுந்து ஒளித்தான் - சையமலையின்கண் போய்மறைந்தான், இளங்குயில்காள்-இளங்குயில்களே,நீரும்-நீங்களாயினும், எனக்கு இரங்குவீர்-எனக்கு இரங்குவீர்களாக. எ-று.

தலைவி மன்மதனைநோக்கிக் கூறல்.

20. புடவிகடகடெனவுடை படவடவை சிதறவருபொருதார்ச்சீறும், தடவிகடகளிற்றுதயனிளசை வெங்கடேசுரெட்டன் றருவான்முல்லை, அடவிகடவுனதுகுடை யகலமதகயமேக வனிலத்தேரை, நடவிகடனிமிர்முகடுதொடுபரிதியுதயமிதோநான்கண்டேனே.

இ-ள். புடவி-பூமியானது, கடகடென உடைபட-கடகடென்று வெடிக்கவும், வடவைசிதற-வடவைத்தீயானது சிதறவும், வரு-வருகின்ற,பொருதார்-பகைவரை, சீறும்-கோபிக்கின்ற, தடம்-பெரிதாகிய, விகடம்-மாறுபாடு உள்ள, களிற்று-யானைமீதேறிவருகின்ற, உதயன்-சூரியன், இளசை வெங்கடேசுரெட்டன்-இளசை வெங்கடேசுவர எட்டன்; (அவன்) முல்லை தருவான்-தனது முல்லைமாலையைக் கொடுப்பான், அட-அடா, விகட-அனங்கனே, உனது குடை அகல-உன்குடை நீங்குக, மதகயம் ஏக - மதயானை செல்லுக, அனிலத்தேரைநடவு - தென்றற்காற்ருகிய தேரைநடத்து, இ-

இந்த, கடல்-கடலினது, நிமிர் முகடு - உயர்ந்த முகட்டை, தொடுகின்ற, பரிதி உதயம்-சூரிய உதயத்தை, இதோ நான் கண்டேன் - இதோ நான் பார்த்தேன்.

கடகட-ஒலிக்குறிப்பு. வடவை-கடலின்நடுவேயிருப்பதோர் நெருப்பு. இது பெண்குதிரைவடிவாயிருக்கும்படி, படைப்புக்காலத்தில் வைக்கப் பட்டது.

தலைவி நெஞ்சொடுகூறி யுவத்தல்.

21. கற்றனமின்னுவதென்சொன் முனியென்றான் றநயனம்பா ற் கலங்கித்தாபம், உற்றனமின்னாரமுதங் கசந்தணையா ராதநெஞ் சே யுணர்ந்தோர்க்கங்கை, யிற்றனமிந்நாளுதவு மிளசைவெங்கடே சுரெட்டனினியநோக்கம், உற்றனமின்னுமையின்றே டொழிந்தத யன்மாதரலர் பேசார்தாமே.

கல்-கல்லானது, தனம்-தனங்களையுடைய, மின் ஆனது - பெண்ணவ தற்கு, என் - காரணம்யாது, முனி - (விசுவாமித்திர) முனிவனே, சொல் என்றான்-சொல்லென்றவனாகிய திருமாலினது, தநயன்-புத்திரனாகிய மன் மதனது, அம்பால்-அம்பினால், கலங்கி-கலக்கமடைந்து, தாபம் உற்றனம்-வெப்ப மடைந்தோம், இன்-இனிய; ஆர் அமுதம் கசந்து - அரிய அமிர்த மும் கசந்து, அணை ஆராதநெஞ்சே - படுக்கையிற் பொருந்தாத மனமே, உணர்ந்தோர்க்கு-அறிஞருக்கு, அங்கையில்-அகங்கையில்; தனம் - தனத் தை. இந்நாள் உதவும்-இக்காலத்தில் தருகின்ற; இளசை வெங்கடேசு ரெ ட்டன்—; (அவனது) இனியநோக்கம் பெற்றனம் - இனிதாகிய கருணை நோக்கத்தைப்பெற்றோம்; இன்னுமை - (நமது) துன்பமானது; இன்றோடு ஒழிந்தது-இன்றோடு நீங்கினது; (இனி) அயல்மாதர்-பிறபெண்கள்; அலர் பேசார்-பழிமொழியைப்பேசமாட்டார்கள். எ-று.

தாயிரங்கல்.

22. ஆளுக்கேயழகனெங்க ளிளசைவெங்கடேசுரெட்டனன் பையீசன், தாளுக்கே விருந்திட்டா னொன்..லர்கள் செங்குருதித் தசையைச்செங்கை, வாளுக்கே விருந்திட்டான் மாதரா ராவியெல் லா மலர்க்கைவாளி, வேளுக்கே விருந்திட்டான் வெண்மதிக்கென் பெண்மதியை விருந்திட்டானே.

இ-ள். ஆளுக்கு அழகன்-புருஷர்களுள் அழகன்; எங்கள் இளசைவெ ங்கடேசுரெட்டன்—; அன்பை - தனது விசுவாசத்தை; ஈசன் தாளுக்கு விருந்திட்டான்-சிவபெருமானது திருவடிக்கு விருந்துசெய்தான்; ஒன்ன லர்கள்-பகைவருடைய; செங்குருதிதசையை செவந்த உதிரத்தையுடைய மாமிசத்தை; செங்கைவாளுக்கு-தன்செவந்த கையிலுள்ளவாளுக்கு; விருந் திட்டான்-விருந்து செய்தான்; மாதரார் ஆவியெல்லாம்-மாதருயிரையெல் லாம்; கைமலர்வாளி - கையில் புஷ்பபாணங்களைக்கொண்ட, வேளுக்கு-

மன்மதனுக்கு, விருந்திட்டான் - விருந்துசெய்தான், என்பெண்மதியை-என்பெண்ணறிவை, வெண்மதிக்கு-வெண்மையாகிய சந்திரனுக்கு, விருந்திட்டான்-விருந்துசெய்தான். எ-று.

இதனைத் தலைவிகூற்றாக்கினும் பொருந்தும். ஈசன்தாளுக்கே விருந்திட்டான் என்றதொடரில்; விருந்திட்டான் என்றது சமர்ப்பித்தான் என்றபடி.

செவிலி யிரங்கல்.

23. அனங்கலக் கணங்தெரியாள் சிறுபேதைவிரகமிவட் கதிகமையோ, மனங்கலக்கப்பக்கமில்லை யுன்னையன்றிலாதலினால் வாராதாலே, தினங்கலக்கணீருகுத்துத் தேடுகிறாள்வாடுகிறாடிரண்டகும்பத், தனங்கலக்க வருள்புரியா யிளசைவெங்கடேசுரெட்ட தமிழ்க்கோமானே.

இ-ள். இளசை வெங்கடேசு எட்டா - இளசை வெங்கடேசுர எட்டனே; தமிழ்க்கோமானே - தமிழ்வேந்தனே; அனங்கலக்கணம்தெரியாள்-மன்மதலக்ஷணங் தெரியாதவளும்; சிறுபேதை-சிறுபேதைப் பெண்ணுமாகிய; இவட்கு-இவளுக்கு; விரகம் அதிகம்-மோகம் அதிகம்; ஐயோ - அந்தோ; உன்னையன்றி-உன்னையல்லது; மனம்கலக்க-மனங் கலந்துசொல்ல. பக்கம் இல்லை-பக்கத்துணையில்லை, ஆதலினால்-ஆதலால்; வாராதாலே-நீவாராமையால்; தினம்-நாள்தோறும்; கலக்கண்ணீர் உகுத்து - கலக்கண்ணீரைச்சிந்தி; தேடுகிறாள்-தேடாநின்றாள்; வாடுகிறாள் - வாடாநின்றாள்; திரண்ட-திரட்சியாகிய; கும்பத்தனம்-குடம்போலும் தனங்களை; கலக்க-சேர அருள்புரிவாய் கிருபைசெய்வாயாக. எ-று.

தலைவி தோழியோடுகூறி யிரங்கல்.

24. எனக்குடந்தை யானவெங்கடேசுரெட்ட னருகிலழைத் திருத்திவைத்துத், தனக்குடங்கை யாரவெனைத்தழுவாத மனக்குறையைச் சகியேசொன்னேன், உனக்குடம் பெலாம்பசக்கும் பாலனமுங்கசக்குமழ குற்றகொங்கை, கனக்குடங்காத் தொனிகேட்கு மதன்படையும் வந்தினிக்கை கலக்குந்தானே.

இ-ள். எனக்கு உடந்தை ஆன-எனக்கு அநுகூலமாகிய; வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுவர எட்டன்; அருகில்அழைத்து-சமீபத்தில் அழைத்து; இருத்திவைத்து-இருக்கச்செய்து; தன்-தனது; அ-அந்த; குடங்கை ஆர-குடங்கைநிறைய; என்னை தழுவாத-என்னைச்சேராத; மனக்குறையை-மனவருத்தத்தை; சகியே-தோழீ; உனக்கு சொன்னேன்-உனக்குச்சொல்லினேன்; உடம்பெல்லாம் பசக்கும்-உடல்முழுவதும் பசலிநிறமுண்டாகின்றது; பால் அன்னமும் கசக்கும்-பாற்சோறும் கசக்குகின்றது; அழகு உற்ற அழகுபொருந்திய; கொங்கை கனக்குடம் காதொனிகேட்கும்-தனமாகிய பெரியகுடத்தில் சோலையோசை கேளாநிற்கும்; இனி-இனி; மதன்படையும்வந்து-மன்மதனுடைய சேனையும்வந்து; கைகலக்கும்-கைகலந்து போர்செய்யும். எ-று.

தாயிரங்கல்.

25. மாலைமணிமுடி தரித்தமருவலர்கள் சேனைதனைமடியத் தாக்கும், கோலமதகளிற்றுதய னிளசைவெங்க டேசுரெட்டன் கூடாநாளில், பாலனந்திவலையருந்தாள் சிறியாட்குமதிக்குமென்ன பகையேரமேனி, வேலைநடுக்கலத்தைவிட்டே யெழுந்தலைந்தகாகமென மெலிகின்றாளே.

இ-ள். மாலை-பூமாலையணிந்த; மணிமுடிதரித்த-ரத்நகிரீடத்தைத்தரித்த, மருவலர்-பகைவருடைய, சேனைதனை-படையை,மடியதாக்கும்-இறக்கும்படிதாக்குகிற, கோலம்-அலங்காரத்தையுடைய, மதகளிறு-மதயானைகளையுடைய, உதயன்-சூரியன், இளசை வெங்கடேசு ரெட்டன் - இளசை வெங்கடேசுர எட்டன், கூடாநாளில்-சேராதநாளில், பால் அன்னம்-பாற்சோற்றையும், திவலை-நீர்த்துளியையும், அருந்தாள் - உண்ணாள், சிறியாட்கும்-இந்தச்சிறுபெண்ணுக்கும், மதிக்கும்-சந்திரனுக்கும், என்னபகையோ என்னவிரோதமோ, வேலைநடு - கடலின்நடுவில், கலத்தைவிட்டு எழுந்து அலைந்த-கப்பலைவிட்டெழுந்தலைந்த, காகம்என - காகம்போல, மேனிமெலிகின்றாள்-உடம்பிளைக்கின்றாள். எ-று.

கலம்-மரக்கலம்.

தாயிரங்கல்.

26. ஓங்கியராமாமதியாதவன்போல்வரவுமிடையுடையுந்தன்னால்
நீங்கியரர்மாரசரத்தால்வருந்துவதற்கிரங்கநேமியாத [வாள்
பாங்கியராமாவெனக்கண் பார்த்துமருவாய்கவந்தன்படக்கையால்
வாங்கியராமாபூமாவிளசைவெங்கடேசுரெட்டமன்னரேறே.

இ-ள். ஓங்கிய-நீண்ட, ரா-இரவில், மாமதி-பூர்ணசந்திரன், ஆதவன்போல் வரவும்-சூரியன்போல வருதலும், இடை உடையும்-இடையிலுடுத்த ஆடையும், தன்னால் நீங்கி-தனக்குத்தானே அவிழ்ந்து, அரா - சிவனே, மாரசரத்தால்-மன்மதபாணத்தால், வருந்துவதற்கு - துன்பப்படுவதற்கு, இரங்க-இரக்கஞ்செய்ய, நேமியாத பாங்கியர்-நியமிக்காத தோழியர்,ஆமா என-ஆகுமாவென்று, கண்பார்த்து - கண்ணினால் கடாக்ஷித்து, மருவாய்-(இவளைச்) சேர்வாய், கவந்தன்பட - கவந்தன்மடிய, கையால் வாள்வாங்கிய-கையில் வாளையெடுத்த, ராமா-ஸ்ரீராமனே, பூமா-பூபதியே, இளசைவெங்கடேசுரெட்ட-இளசை வெங்கடேசுரெட்டனே,மன்னர்ஏறே-ராஜாதிராஜனே. எ-று.

மன்னர் ஏறு-அரசரிற் சிறந்தவன்.

தாயிரங்கல்.

27. கனத்துவரைபோற்புடைத்த கொங்கைமங்கை கொண்டமையல்கண்டுநொந்தா, வனத்துவரைச் சென்றுமலர் கொய்திவளையெ

ய்யவந்தான் வந்தானெப்போ, துனத்துவரைப்புரந்திதவுசொல்லா ரைத்தாக்கியவர்த் துருவனேட்டிற், சனத்துவரை யாக்கும்வெங்க டேசுரெட்டமேந்திரனே தளசிங்கேறே.

இ-ள். எப்போது-எப்பொழுதும், உன்-உன்னை, நத்துவரை-விரும்பு வோரை, புரந்து-காத்து, இதவு சொல்லாரை-இதவசனம் சொல்லாதவர் களை, தாக்கி-அடித்து, அவர்-அவர்களை, துருவன் எட்டில்-பிரமனது எட் டில், சனத்துவரை ஆக்கும்-க்ஷணிக்காலத்தில் சேர்க்கின்ற, வெங்கடேசு ரெட்டமேந்திரனே-வெங்கடேசரெட்டம இந்திரனே, தளசிங்கேறே-தள வாயாகிய ஆண்சிங்கமே, கனத்து-பருத்து,வரைபோல்புடைத்த-மலைபோ ல் புடைகொண்ட, கொங்கை-தனங்களையுடைய, மங்கை-என்பெண்ணான வள், கொண்ட-அடைந்த, மையல்கண்டு - மோகத்தைப்பார்த்து, நந்தா வனத்துவரைசென்று-நந்தவனத்தினளவும் போய், மலர் கொய்து-புஷ்ப ங்களைப்பறித்து, இவளை எய்யவந்தான்-இவள்மீது பிரயோகிக்கவந்தான், (யாவனெனில்) வந்தான்-தென்றற்காற்றைத் தேராகவுடைய மன்மதன்

நத்துதல்-விரும்புதல்.

தலைவியைச் செவிலிதேற்றல்.

28. தரும்பலிக்குமருவலரைத்தாக்கும்வெங்கடேசுரெட்டசாமி மாலை, வரும்பலிக்குநினைத்தபடிக் கிப்போதுதப்பாதுவலத்திருந்த, திரும்பலிக்குரலைப்பார்க்கிற் செயமடிபெண்ணேமதனன் செங்கை யாலெய், அரும்பலிக்குமென்னபயஞ் சுகமாகவாழ்வாயுன் னதிட் டந்தானே.

இ-ள். தரும்பலிக்கு - பலிகொடுத்தற்கு, மருவலரை- சத்துருக்களை, தாக்கும்-மோதுகின்ற; வெங்கடேசுரெட்டசாமி-வெங்கடேசுரெட்டசாமி யின், மாலை-மாலையானது, வரும்-கிடைக்கும், இப்போது - இப்பொழுது, நினைத்தபடிக்கு-எண்ணினபடியே, தப்பாது பலிக்கும் - தப்பாமல் சித்திக் கும், வலத்து இருந்து-வலப்பக்கத்தில் இருந்து; அதிரும் ஒலிக்கின்ற, பல் லிக்குரலைப்பார்க்கின்-கெவுளிக்குரலைப் பார்க்குமிடத்தில், ஜெயமடி-ஜெ யமடி; பெண்ணே-மகளே, மதனன் செங்கையால்-மன்மதன் தன் செவந் தகையினால், எய்-பிரயோகிக்கிற, அரும்பு அல்லிக்கும் - குவளை அரும்புக் கும், என்னபயம்-என்ன அச்சம், சுகமாகவாழ்வாய் - சுகமாய் வாழக்கட வை, உன் அதிட்டம்தான்-இது உனது அதிர்ஷ்டபலமேயாகும். எ-று.

மருவலர்-சத்துருக்கள்; பல்லி அல்லி என்பன, பலி அலியெனத்தொ குத்தல் பெற்றன.

தாயிரங்கல்.

29. மின்னமருங்கொடியனைய சின்னமருங்கொடியமுலைவிம்ம மாளுள், முன்னமரும்பெடுத்துமதன் றன்னமருந் தொடுக்கவெகு

மோகமாகி, அன்னமருந்தென்னினுமீ தென்னமருந் தென்னவுண் ணுதயர்கின்ருளே, சொன்னமருந் தமிழ்ப்புலவர்க் குதவும்வெங்க டேசரெட்ட சுகுணமாலே.

இ-ள். மின் அமரும்-மின்னலும் விரும்புகின்ற, கொடிஅனைய-கொடி போன்ற, சின்னமருங்கு ஒடிய-சிறிய இடையானது ஒடியவும், முலைவிம்ம-தனங்கள் பூரிக்கவும், மாணுள் என்பெண்ணுனவள், முன்னம்-முன்னமே, அரும்பு எடுத்து-பூவரும்புகளைப்பறித்து, மதன் - மன்மதன், தன் அமரும் தொடுக்க-தனது யுத்தத்தையும் ஆரம்பிக்கவும், வெகுமோகமாகி-மிகுந்த மோகம்கொண்டு, அன்னம் அருந்து என்னினும்-அன்னத்தை உண்ணென்று சொன்னுலும், ஈது-இது, என்ன மருந்து என்ன - என்ன மருந்தோ என்று, உண்ணுது-உண்ணுமல், அயர்கின்ருள்-சோர்கின்ருள், அரு - அருமையாகிய, தமிழ் புலவர்க்கு-தமிழ் வித்வான்களுக்கு, சொன்னம் - சொர்னத்தை, உதவும்-கொடுக்கின்ற, வெங்கடேசரெட்ட-வெங்கடேசரெட்டனே, சுகுணமாலே-நற்குணத்தாற் சிறந்தவனே. எ-று.

தாயிரங்கல்.

30. சடங்கலாமகட்கிளமார் தளிரேமுத்தம் பொரியச்சகிக்கு மாவன், மடங்கலானையைப் பாயுமாறுபோற் சீறுதென்றல் வருமா சொர்னக், குடங்கலாமதிதன மானனமாஞ் சேர்வாய் மருவார்கூடியுத்தம், தொடங்கலாற்பவுரிகொண்ட தருமவெங்கடேசரெட்ட சுகுணமாலே.

இ-ள். மருவார்-பகைவர், கூடி - சேர்ந்து, யுத்தம் தொடங்கலால்-போரைத் தொடங்குதலால், பவுரிகொண்ட-அவர்களோடு சுழன்று யுத்தம்பண்ணுகிற, தரும-தர்மசிந்தைபுள்ள, வெங்கடேசரெட்ட-வெங்கடேசரெட்டனே, சுகுணமாலே-நற்குணத்தாற் சிறந்தவனே, மகட்கு-என்பெண்ணுக்கு, சடம்-உடம்பு, கல்லா-கல்லாகுமா, இள-இளமைஆகிய, மார்தளிரே - மார்தளிரே ஆகும், முத்தம்பொரிய - முத்துமாலைகள் பொரிந்துபோக, சகிக்குமா-சகிப்பாளா, வல்-வலிமைஆகிய, மடங்கல்-சிங்கம், ஆனையை பாயும் ஆறுபோற்-ஆனையைப்பாய்கின்ற தன்மைபோல், சீறு - சீறுகின்ற, தென்றல்வரும் - தென்றற்காற்றுவரும், ஆ-ஐயோ, தனம் ஆனனம்-தனமும் முகமும், சொர்னக்குடம் கலாமதிஆம்-பொற்குடத்தையும் பூர்ண சந்திரனையும் நிகர்க்கும், (ஆதலால்) சேர்வாய்-இவளைத் தழுவுவாய். எ-று.

முதலடியில்கல்லா என்பது, கலா எனத் தொகுத்தலாயிற்று.

தலைவியிரங்கல்.

31. திருவிருக்குமணிபார்ப னிளசைவெங்கடேசரெட்ட தீரனென்னை, மருவிருக்குமணிகணவ னெனச்சேராநாண்மோக மயக்கத்தான்மேல், விருவிருக்கு மணிவளையுமேகலையுஞ் சோர்ந்திடுமே

ன்மேலுந்தேன்பால், அருவிருக்கு மணியலுங்காந் துந்தரள மென வருங்கண் ணருவிதானே.

இ-ள். திருஇருக்கும்-திருமகள்வாழ்கின்ற, மணி - கௌஸ்துவமணியைத்தரித்த, மார்பன் - மார்பையுடையவன், இளசைவெங்கடேசுரெட்டதீரன்-இளசை வெங்கடேசுரெட்டனென்கிற தைரியவான்,என்னைமருவி-என்னைக்கூடி, ருக்குமணி கணவனென - ருக்குமணிநாயகனாகிய கிருஷ்ணன்போல; சேராநாள்-தழுவாதநாளில், மோகமயக்கத்தால் - காமமயக்கத்தால், மேல்-உடம்பானது, விருவிருக்கும்-விருவிருக்கின்றது; அணிவளையும்மேகலையும் சேர்ந்திடும் - அணிந்தவளையலும் மேகலையும் கழன்றுபோம், மேல்மேலும்-மேலு மேலும், தேன்பால்-தேனும்பாலும், அருவிருக்கும்-தெவிட்டும், அணியலும் காந்தும் - ஆபரணங்களுஞ்சுடும், கண் அருவி-கண் ணீரருவியானது, தரளம் எனவரும்-முத்துப்போலச்சிந்தும்.எ-று.

அருவருக்கும் என்பது எதுகையின்பம்நோக்கி, அருவிருக்கும்எனவந்தது.

செவிலி தலைவியைநோக்கிக்கூறல்.

32. குருவடியை வணங்கும்வெங்க டேசுரெட்டமேந்திரன்முன்கூசாமற்போய், இருவடிவெல்லாம்பாரு வீணையைமீட்டனுராக மிசைத்தனேகந், தருவடிதெள்ளமுத நவரசமொழுகும்படிபடிசவ்வாதுபூசி, மருவடிபெண்ணேயினிமேன் மகராசியாய்ச்சுகித்துவாழ்குவாயே.

இ-ள். குரு அடியைவணங்கும்-குருபாதத்தைத் தொழுகின்ற, வெங்கடேசுரெட்ட மேந்திரன்முன்-வெங்கடேசுரெட்ட மேந்திரருக்கெதிரே, கூசாமல்போய்-நாணுமல்போய். இரு-உட்காரு, வடிவுஎல்லாம்பாரு-(அவனது) உருவமுழுதும்பார், வீணையை மீட்டு - வீணையைவருடு, அனுராகம் இசைத்து-இச்சையையுண்டாக்கி, அனேகம்தரு-அனேகம்தருக்களை;வடி-வடித்த; தெள்-தெளிவாகிய, அமுதம் - அமிர்தம்போல; நவரசம் ஒழுகும்படி-நவரசம்வழியும்படி படி-பாடு, சவ்வாதுபூசி - சவ்வாதணிந்து, மருவு-அவனைச்சேர், அடிபெண்ணே-அடிமகளே; இனிமேல் மகராஜியாய் சுகித்து வாழ்குவாய் - இனிமேல் மகராஜியாய்ச் சுகமடைந்து. வாழக்கடவை.

தாயிரங்கல்.

33. கன்னியுன் றன்மேற்பிரியமையாமற்றோரையிவள் கண்டான்மூன று, மன்னர்தமிலேயொருவன் பெயரையடிக்கடிவழுத்துவாளனத்தைத், தென்னவன் றன்மாலையென்பாண் மதியையதிற்கடையெழுததாய்த்திர்த்தாளையா, நன்னயகுணாகரகுமாரவெட்டராசேந்த்ர நளினமர்லே.

இ-ள். ஐ ஆம்-அழகாகிய, நல்நயகுணாகர-நல்ல இனியகுணங்களுக்கு ஆகரமாயிருப்பவனே, குமார எட்டராசேந்த்ர - குமாரஎட்ட ராஜேந்திர

னே, நளினமாலே-நயகுணத்தாற்பெரியோனே, கன்னி உன்றன்மேல்பிரியம் ஐயா - என்கன்னிக்கு உன்மீதுபிரியமையா, மற்றோரை இவள்கண்டால்-மற்றவரை இவள்பார்த்தால், மூன்றுமன்னர்தம்மிலே-மூவேந்தர்களுள், ஒருவன்பெயரை-ஒருவேந்தனது பெயரை, அடிக்கடி - கணந்தோறும், வழுத்துவாள்-சொல்லுவாள், அன்னத்தை-சோற்றை, தென்னவன் தன்மாலே என்பாள்-பாண்டியனது மாலேயென்றுசொல்வாள்; மதியை-சந்திரனே, அதில் கடை எழுத்தாய்தீர்த்தாள்-அதிலுள்ள கடையெழுத்தாய் நிச்சயித்தாள். எ-று.

மூன்றுமன்னவர்-சேரன்சோழன் பாண்டியன்என்பவர். இவருள் ஒருவன்பெயர் சேரன், சேரேன்; தென்னவன் மாலே - வேம்பு, (கசப்பு.) மதி என்பதில் கடையெழுத்து. தி - இது தீயென்பதின் குறுக்கம் (நெருப்பு.)

தாய்க்கூற்று.

34. பொன்னிலங்கைராவணனேவென்றவிடைபாட்களகம்புளகக்கொங்கை, தென்னனேநேராயிருக்குஞ் சொல்வார்த்தை கண்டு பயந்தேன்மகாவிற், பன்னிவடிவூர்கணிதம்பம்மரம்பையாகுமிவட் பரிந்துசேர்வாய், சொன்னமொழிதவறாத குமாரவெட்டராசேந்தர சுகுணமாலே

இ-ள். சொன்னமொழி தவறாத-சொன்னசொல்தவறாத, குமார எட்டராசேந்த்ர சுகுணமாலே - குமார எட்டராஜேந்திர சுகுணமாலே, நை வென்ற இடையாட்கு-நையுமென்று சொல்லுதற்குரிய இடையையுடையவளுக்கு, கை-கையானது, பொன் இல்லம் - திருமகள் வீடாகிய தாமரை மலருக்கும், அளகம்-கூந்தலானது, ராவணன்-ராத்திரியின்நிறத்துக்கும், புளகக்கொங்கை-பூரிப்பையுடைய தனங்கள்,தென் நனே-தென்னம் குரும்பைக்கும், நேராய் இருக்கும்-சமானமாயிருக்கும், சொல் வார்த்தை-சொல்லுகின்ற சொல்லானது; கண்டு பயம் தேன்-கற்கண்டையும் பாலேயும் தேனேயும் நிகர்க்கும், மகாவிற்பன்னி - பெரியகல்வியுடையவள், வடிவு ஊரு கண் நிதம்பம்-உருவும் தொடையும் கண்ணும் அல்குலும்,அரம்பை ஆகும்-அரம்பையை நிகர்க்கும்; இவள்-இவளே; பரிந்து சேர்வாய் - விரும்பியணேவாய். எ-று.

சுகுணம்-நற்குணம்; மால் பெரியோன்; அரம்பை - தெய்வப்பெண்; இதுவடிவுக்கும்; அரம்பை-வாழை, இது தொடைக்கும்; அரம்-இரும்பராவுக்கருவி; இது கண்ணுக்கும்; பை-பாம்பின்படம்; இதுஅல்குலுக்கும் உவமையாகக்கொள்க.

தலைவிகூற்று.

35. மெலக்கணக்காப் பொருந்துவோமெனவேளே மனங்குறிக்கும்வேளேபார்த்து, நிலக்கணக்கா மனம்புகுந்து குந்தாகப்பாயவென்மே னிரைத்தா னெண்ணிச், சொலக்கணக்கா வழக்கானனிந்தவளாதெரிந்தவளா துயரமெல்லாம், இலக்கணக்காரிகைதேர்ந்த குமாரவெட்டபூபதிபா லியம்புவாயே.

இ-ள். மெல்ல-மெதுவாக; கணக்கா-அளவாக;பொருந்துவோமென-கூடுவோமென்று; வேளை மனங்குறிக்கும் வேளையார்த்து - விருப்பத்தை மனத்தில்கொள்ளுகின்ற சமயம்பார்த்து; நில்-நில்லு; அ-அந்த; கணம்-கூட்டமாகிய; காமன் அம்பு-மன்மதபாணங்கள்; குந்துகுந்து ஆகபாய - நேர் நேராய்ப் பாயும்படி; என்மேல் நிறைத்தான்-என்மீதுநிரப்பினான்; எண்ணிச்சொல்ல-(அந்தஅம்புகள்இத்தனையென்று) எண்ணிச்சொல்வதற்கு; கணக்கா வழக்கா - கணக்குவழக்குண்டா; நான் அறிந்தவளா தெரிந்தவளா-நான் அறிவுள்ளவளா விவரம்தெரிந்தவளா; துயரம் எல்லாம் - என்துன்பம் முழுதும; இலக்கணக் காரிகைதேர்ந்த-இலக்கண நூலாகிய காரிகை படித்துத் தெளிந்த, குமார எட்டபூபதிபால் - குமாரவெட்ட பூபதியினிடத்தில்; இயம்புவாய்-சொல்வாய். எ-று.

வேள்-விருப்பம்.

செவிலிகூற்று.

36. அரைத்தசந்தனம்பொருந்தாளமளியின்மேற் கண்டுயிலாளரக்கன்மௌலி, நிரைத்தசந்தனம்பாலேதுடைத்தமருதப்பன்வர நினையாளன்னை; இரைத்தசந்தனம்பசலைக்காற்றுமென்றாளேபரவையிடத்திலசென், றுரைத்தசந்தனம்பாருக்குள்ளில்லையோதிவாகரனொளிக்கின்றாரே.

இ-ள். அரைத்த சந்தனம் பொருந்தாள்-தேய்த்த சந்தனத்தையேற்கமாட்டாள்; அமளியின்மேல்-சயனத்தின்மீது; கண் துயிலாள்-கண்ணுறங்கமாட்டாள்; அரக்கன் மௌலி அரக்கனாகிய ராவணனுடையகிரீடங்களை; நிரைத்த-வரிசையாகிய; தம்-வெற்றியையுடைய; தன் அம்பாலே - தனது பாணத்தினால்; துடைத்த-அழித்த; மருதப்பன்-மருதப்பதுரை; வர-வரும்படி; அன்னை நினையாள்-தாய் நினைக்கமாட்டாள்; இரைத்த-ஆரவாரிக்கிற; சந்தன்-அழகனாகிய மன்மதனது; அம்பு அசலைக்கு-அம்புமலைக்கு; ஆற்றும் என்றாளே-பொறுப்பாளென்றாளே; பரவையிடத்திலே சென்றுஉரைத்த-கடற்கரையிற் போய்ச்சொன்ன; சந்து அன்னம் - தூதுக்குரிய அன்னமானது; பாருக்குள் இல்லையோ-பூமிக்குள்ளேயில்லையோ; திவாகரனார் ஒளிக்கின்றாரே-சூரியன் மறைகின்றாரே. எ-று.

சந்திரன் வந்தால் துன்பம் அதிகரிக்குமே யென்றற்கு திவாகரனொளிக்கின்றாரே என்றிரங்கினாள். சந்தம்-அழகு.

தோழிகூற்று.

37. அரமியஞ்சேர்த் திளவாழைக் குருத்தைவிரித்ததிற்கிடத்தவதுவுஞ்சூடா,காமியங்கொள்ளாதெழுந்து தரையில்விழுந் தாளதனைக்கண்டுதாய்மார், சாமியங்குதோவிலையோ வெனமூக்கிற்கையை

த்தார் சத்யவாமைத், திரமியங்கும் கிளுவைமருதப்பனுக்கிச்செய் திசொல்லித் தெளிவிப்பீரே.

இ-ள். அரமியம் சேர்த்து - நிலாமுற்றத்தில் சேர்த்து; இளவாழைக் குருத்தை விரித்து-இளமையாகிய வாழைக்குருத்தைப்பரப்பி; அதில்கிடத்த-அதில்படுக்கவைக்க; அதுவும்சூடாக - அதுவும் உஷ்ணமாக; ரமியம் கொள்ளாது-களிப்புக்கொள்ளாமல்; எழுந்து தரையில் விழுந்தாள் - எழுந்து பூமியின்மீது விழுந்தாள்; அதனைக்கண்டு-அதைப்பார்த்து; தாய்மார்-தாய்மார்கள், சரம் இயங்குதோ இல்லையோ என-மூச்சுநடக்கிறதோ இல்லையோவென்று; மூக்கில்-இவளது நாசியில்; கையைவைத்தார் - கையை வைத்தார்கள், சத்தியவாய்மை திரம் இயங்கும்-உண்மை மொழிகள் திடமாய் விளங்குகின்ற; கிளுவை மருதப்பனுக்கு-கிளுவை மருதப்பதுரைக்கு; இச்செய்திசொல்லி-இந்தச்செய்தியைச்சொல்லி; தெளிவிப்பீர் - தேற்றக்கடவீர். எ-று.

தலைமகள்கூற்று.

38. திருந்தலரிகலைபடக்கும் கிளுவைமருதப்பசெய சிங்கமென்னைப், பொருந்தலரிதாயிருந்தாற் பூத்தானஞ்செய்யானோ போர்வேளையோ, வருந்தலரிகுளையலரி மாவலரிபூவலரி மாதர்கீழ்பால், இருந்தலரிவாராமுன்னிரவிதனின் மதியம்வந்தாலென்செய்வேனே.

இ-ள். திருந்தலர்-பகைவரது; இகலை அடக்கும்-வலியையடக்குகின்ற கிளுவை மருதப்ப செயசிங்கம்-கிளுவை மருதப்ப ஜெயசிங்கம்;என்னைப் பொருந்தல்-என்னைச்சேர்தல்; அரிதாய் இருந்தால்-அருமையாயிருந்தால்; போர்வேள் - போர்த்தொழிலையுடைய மன்மதன்; பூ அஞ்சு எய்யானோ-புஷ்பபாணங்கள் ஐந்தையும் பிரயோகியானோ; ஐயோ - அந்தோ; இகுளை வருந்தலர்-தோழியர் வருந்தார்; அலர் - பழிதூற்றுதலாகிய; இமாவலர்-இந்தப்பெரிய தொழிலில் வல்லவர்; ரிபுவலர் - பகைத்தன்மையில் வல்லவர்; இ-இந்த; மாதர் - அழகிய; கீழ்பால் இருந்து - கீழ்த்திசையிலிருந்து; அலரி வாராமுன்-சூரியன் வருமுன்னே; இரவுஇதனில்-இரவாகிய இதில், மதியம்வந்தால்-சந்திரன்வந்தால்; என்செய்வேன்-என்னசெய்வேன்.எ-று.

பூத்தானஞ் செய்யானோ என்பதில் தான் சாரியை ரிபு என்பது; ரிபூ என நீட்டல் பெற்றது.

தலைவியிரங்கல்.

39. வரைத்தூற்று நெடுங்காட்டு வழுப்புலவோரலையாமல்வளர்த்ததாய்போல், உரைத்தூற்று மலைபுரந்த துங்கமருதப்பனொருநாளுஞ்சேரான், கரைத்தூற்று நறும்பாலுமன்னமும்வேண்டேனதனைக்கண்டலோமா, தரைதூற்றுமெனவிடுத்துத் தாய்க்கிழவிகூடினின்றுசலஞ்செய்தாளே.

இ-ள். வரைஞறு - மலையும்பற்றைக் காடுமாயிருக்கிற; நெடுகாட்டு வழி-நெடியகாட்டு வழியில், புலவோர் அலையாமல்-வித்வான்கள் அலையாமலிருக்கும்படி, வளர்த்த தாய்போல் உரைத்து-வளர்த்த தாயைப்போல இதஞ்சொல்லி, ஊற்றுமலை-ஊற்றுமலையை, புரந்த-காத்த, துங்கம்-பரிசுத்தனுன மருதப்பன்-மருதப்பனுனவன், ஒருநாளும்-ஒருநாளாயினும், சேரான்-கூடான், கரைத்துஊற்றும்-கரைத்து வார்க்கிற, நறும்பாலும் அன்னமும்வேண்டேன்-நல்லபாலையும் அன்னத்தையும் விரும்பேன், தாய்க்கிழவி-தாய்க்கிழவியானவள், அதனைக்கண்டு அல்லோ - அதைப்பார்த்தல்லவோ, தூற்றும் என-பழிதூற்றுங்களென்று, மாதரைவிடுத்து - மாதரையேவி, கூடநின்று-தானுங்கூடநின்று, சலம்செய்தாள்-கோபஞ்செய்தாள்.

சலம்-கலக்கம் எனினுமமையும்.

தாயிரங்கல்.

40 செருத்தாக்குமதப்புலியே திருமலைவேலப்பாநின் செவ்வாயூறல், அருத்தாக்கு மரிக்கமுதங்கசப்பாகு மணைவேண்டாளையோவாழைக், குருத்தாக்கு மதைவிரித்துக் கிடத்தினுஞ்சூடெனவெழுந்து கொள்வாள்காமக், கருத்தாக்குமுதநாதன் கங்குல்வரக் கண்டுமுனைக் கண்டிலாளே.

இ-ள். செரு-போரில், தாக்கும்-(பகைவரைத்) தாக்குகின்ற, மதப்புலியே-மதப்புலிபோன்றவனே, திருமலை வேலப்பா-திருமலைவேலப்பனே, நின்செவ்வாய் ஊறல்-உன் செவந்தவாயமுதத்தை, அருத்து-ஊட்டு, ஆ-ஐயோ; குமரிக்கு-இந்தப்பெண்ணுக்கு, அமுதம் கசப்பு ஆகும்-அமுதம்கசப்பாகின்றது, அணைவேண்டாள்-படுக்கையை விரும்பாள், ஐயோ-அந்தோ, வாழைக்குருத்து ஆக்கும் அதை விரித்து - வாழைக்குருத்தாகிய அதனை விரித்து, கிடத்தினும் - அதில் படுக்கை வைத்தாலும், சூடு என எழுந்து கொள்வாள் - அதுவும் சூடென்று எழுந்துகொள்ளுவாள், காமக்கருத்து ஆ-காம எண்ணம் உண்டாக; குமுதநாதன்-சந்திரன், கங்குல்வரக்கண்டும் இரவில் வரப்பார்த்தும், உன்னை கண்டிலாள்-உன்னைப்பார்த்திலள். எ-று.

குமுதநாதன் - அல்லிமலர்களுக்குத்தலைவன் (சந்திரன்).

தாயிரங்கல்.

41. எடுத்துவரிமுறத்தினிலிட்டிழைத்தகுறி பலித்ததெனவெண்ணித்தந்த, வடுத்துவரிதழுக்கேறு மெனக்கனிவாய் மடுத்துநிஞ்சுமாதைப்பாடு, படுத்துவரிம்மாதரென்றூற்சொல்பவரார் வளத்திலங்கைப்பதிமேற்சென்று, கடுத்துவரிதனைப்பொருத திருமலைவேலப்பனிதைக்கண்டிலானே.

இ-ள். வரி எடுத்து-நெல்லையெடுத்து, முறத்தினில் இட்டு-முறத்தில் வைத்து, இழைத்த குறிபலித்தது என எண்ணி-எண்ணினஎண்ணம்பலித்ததென்று நினைத்து, தந்தவடு-(தலைவனது) பற்சுவடு, துவர் இதழுக்கு ஏறும்என-(நமது) பவளம்போலும் அதரத்தில் ஏறும் என்று, கனிவாய்-கொவ்வைக்கனிபோலும் வாயை, மடுத்து உறிஞ்சும் - மடுத்துறிஞ்சுகிற, மாதை-பெண்ணே,இம்மாதர்-இந்தப்பெண்கள், பாடு படுத்துவர் என்றால்-துன்பப்படுத்துவரெனில், சொல்பவர் ஆர்-சொல்வோர் யாவர், வளத்து-வளத்தையுடைய, இலங்கைப்பதிமேல் சென்று - இலங்கை நகரின்மீது போய், கடுத்து-கோவித்து, உவரிதனைப்பொருத-கடலொடு போர்புரிந்த திருமலை வேலப்பன் - திருமலை வேலப்பனானவன், இதைக் கண்டிலான்-இதைநோக்கிலன். எ-று.

தலைவிகூற்று-வண்டுவிடுதூது.

42. பொருந்தமரங்கசசரத்துக் கல்லாமலம்புலிக்கும் புறம்போவென்ன, இருந்தமரஞ்சிதமொழியா ளிப்பாடு படமுறையோ வெமதூதாணி, கருந்தமருமெனையளியே யென்னளியே யாய்ச்சியர் தங்கலையைவாரிக், குருந்தமரங்குழைத்தேறுந் திருமலைவேலப்பனிடங் கூறுவாயே.

இ-ள். பொருந்து அமர் - பொருந்திய போரையுடைய, அங்கசசரத்துக்கு அல்லாமல்-மன்மத பாணத்துக்கன்றி,அம்புலிக்கும்-சந்திரனுக்கும், புறம்போ-அயலானவளோ, என்ன-என்று சொல்லும்படி, இருந்து அமர்-அமர்ந்திருந்த, ரஞ்சிதமொழியாள்-(கேட்போர்) களித்தற்குரிய சொல்லையுடையவள், இப்பாடுபட முறையோ-இந்தப்பாடு படுதல் முறையாகுமோ-எமதூதாள் நிகரும்தமரும் - எமதூதரை நிகர்க்கிற உறவினரும், என்னை அளி-என்மீது என்னதயையா யிருக்கின்றனர், என் அளியே-என்வண்டே, ஆய்ச்சியர்தம் கலையைவாரி - இடைச்சியருடைய ஆடைகளை வாரிக்கொண்டு, குருந்தமரம்-குருந்தமரத்தில், குழைத்து ஏறும்-வளைத்தேறின,திருமலைவேலப்பன் இடம் - திருமலைவேலப்பனிடத்தில், கூறுவாய் - (இந்தச் செய்தியைச்) சொல்வாயாக. எ-று.

அமர்-சண்டை, குழைத்தல்-வளைத்தல்.

தலைவி தோழியையிரத்தல்.

43. திருகலகுவாய்ப்பறந்து சிறகொடுக்கி யிருந்துகடற் சேலைவாரிக், குருகலகுவளையொதுக்குங் கூடலில்வாழ்திருமலைவேல்கொவினீபோய், இருகலகு தலைமொழியா ளித்தனைமாலானாளென்றிசைத்தேயன்னம், பருகலகுவளைத்தாரை யாகிலுங்கேட்டாளெனச் சோபனஞ்சொன்மானே.

இ-ள். மானே-பெண்ணே, திருக-சுழல, லகுவாய் பறந்து-லேசாகப் பறந்து, சிறகு ஒடுங்கியிருந்து-சிறகை யொடுக்கியிருந்து,கடல்சேலைவாரி-

கடலிலுள்ள சேல்மீன்களை அள்ளிக்கொண்டு, குருகு - நாரைகள், அலகு வளை ஒதுக்கும்-மூக்கினால் வளைகளில் ஒதுக்குகின்ற, கூடலின்வாழ்-மதுரையில் வாழ்கின்ற,திருமலைவேல்-திருமலைவேலப்பனது,கொலுவில்-கொலுமண்டபத்தில், நீபோய் இரு-நீபோய் உட்காரு, கல-கலந்துகொள், குதலைமொழியாள்-மழலைச்சொல்லையுடையவள், இத்தனைமால் ஆனாள் என்று இசைத்து-இவ்வளவு ஆசைகொண்டா ளென்றுசொல்லி, அன்னம் பருகு-அன்னத்தை உண்ணு, அல்ல-அல்லவென்றால், குவளைத் தாரையாகிலும் கேட்டாள் என-குவளைமாலையையாயினும் கேட்டாளென்று, சோபனம் சொல்-சுபவார்த்தையைச் சொல்லு. எ-று.

திருகுதல்-சுழலுதல்.

தாயிரங்கல்.

44. சருக்கரையமுதுகனிதேன்கலந்த தமிழ்முனிநிகர்வான்றரியார்பெண்டீர், கருக்கரையமுனிவிசயகிரிவேலைச்சின்னப்பகனவானாசைப், பெருக்கரையவளவலவென்றலைக்கேறிமயக்கினதுபித்தமூர்ச்சைத், திருக்கரையவுடதமொடு கரைத்துமெல்லப் புகட்டமுது செலுத்தென்றாளே.

இ-ள். சருக்கரை அமுது கனி தேன்-சர்க்கரை அமிர்தம் முப்பழம் தேன் (ஆகிய இவற்றின்சுவை), கலந்த-சேர்ந்த, தமிழ்-தமிழ்க்கு முதல்வனாகிய, முனி-அகத்தியமுனிவனை, நிகர்வான்-நிகர்ப்பவன், தரியார்-பகைவரது, பெண்டீர்-மனைவியரது, கருகரைய - கருப்பம்கரையும்படி, முனி-கோவித்த,விசயகிரி-விசயகிரியில் வாழ்கின்ற, வேலைசின்னப்பகனவான்-வேலைசின்னப்ப கனவான், (அவன்மீதுள்ள) ஆசைப்பெருக்கு - ஆசைப் பெருக்கை, அரைய-சொல்ல, அளவுபடுவதல்ல, பித்தமூர்ச்சை திருக்கு-பித்தமூர்ச்சையாகிய மாறுபாடு, என்தலைக்கு ஏறி மயக்கினது-என் சிரசுக்கேறி மயக்கியது, (ஆதலால்) அரை-அரைக்கப்பட்ட, அவுடதம் எடு-மருந்தையெடு, கரைத்து மெல்லப்புகட்டு - நீரில்கரைத்துப் பையப்புகட்டு, அமுதுசெலுத்து-சோற்றைச் செலுத்து, என்றாள்-என்று சொன்னாள்.

அறைய என்பது எதுகையின்பொருட்டு அரையஎனவந்தது. கனி-முக்கனி, அவை-வாழை மா பலா என்பன.

தலைவிகூற்று-வண்டுவிடுதூது.

45. பொருவதற்குச்சிலைக்காமன் வருமுனமேமதுரையிற்போய்ப்பொறிவண்டீர்காள், செருவதற்குப்புகழ்விசயன் திருமலைநரேந்திரன்வரச் செய்வீரிங்கு, வருவதற்குதாமதித்தான் மாலையொன்று கேளுமந்தமாலைதானுந், தருவதற்குமதியானேன் மையலையாயினுந் திரும்பத்தாரச்செய்வீரே.

இ-ள். பொறி வண்டீர்காள்-புள்ளிகளையுடைய வண்டுகளே, சிலைகாமன்-(கரும்பு) வில்லையுடைய மன்மதன், பொருவதற்கு - போர்செய்வதற்கு, வருமுன்னமே-வருமுன்னே, மதுரையில் போய்-மதுரையிற்சென்று, செருவதற்கு-போர்க்கு, புகழ்விசயன்-கீர்த்தியையுடைய அருச்சுநனாகிய, திருமலைநரேந்திரன்-திருமலைராயன், வரச்செய்வீர் - இவ்விடம் வரப்பண்ணுவீர், இங்குவருவதற்கு தாமதித்தால் - இவ்விடம் வருவதற்குத் தாமதமானால், மாலை ஒன்றுகேளும்-(அவனது) மாலையொன்றையாயினும் கேளுங்கள், அந்த மாலைதானும்-அந்த மாலையையும், தருவதற்கு மதியானேல்-தருவதற்கு நினையானாயின், மையலை ஆயினும்-என் காமமயக்கத்தையாயினும், திரும்பத்தரச்செய்வீர்-மீளப்பண்ணுங்கள். எ-று.

நரேந்திரன்-அரசன். மதித்தல்-நினைத்தல்.

தலைமகள் தோழியரோடு கூறியிரங்கல்.

46. தெந்தனம்பேசுங்கொழுநர் மயல்கொள்ளுஞ்சேல்விழியீர் திரண்டமேரு,பந்தனம்போற்றனமுடையீரின்சொலுரையானுரைக்கும்படிநீர்கேண்மின், எந்தனஞ்சேராதவெங்கடேசுரெட்டன்றனையழைக்கவெழுந்துபோன, சந்தனஞ்சும்மாவந்தாற்பூசலாமெனக்கு மதன்றனக்குந்தானே.

இ-ள். தெந்தனம் பேசும் கொழுநர்-தெந்தனம் பேசுகின்ற கணவர், மயல்கொள்ளும்-மையல் கொள்ளுதற்குரிய, சேல் விழியீர்-சேல்மீன்போலும் கண்களையுடையவரே,திரண்ட-திரட்சியாகிய, மேருபந்தனம்போல்-மேருமலையைக் கட்டிவைத்தாற்போன்ற,தனம்உடையீர்-தனங்களைஉடையவரே, இன்சொல் உரை-இனிய மொழிகளை, யான் உரைக்கும்படி-நான் சொல்லும்விதத்தை, நீர் கேண்மின்-நீங்கள் கேளுங்கள்,எம்தனம்சேராத-எமது தனங்களைத் தழுவாத, வெங்கடேசுரெட்டன்தனை அழைக்க-வெங்கடேசுரெட்டனை அழைக்கும்பொருட்டு, எழுந்துபோன-பறந்துசென்ற, சந்து அன்னம்-தூதாகியஅன்னம், சும்மாவந்தால்-சும்மா திரும்பினால்,எனக்கும்-எனக்கும், மதன் தனக்கும்-மன்மதனுக்கும், பூசல் ஆம்-போர்விளையும். எ-று.

சந்தனம் சும்மாவந்தால்-கந்தம் சும்மாகிடைத்தால், பூசலாம் - பூசிக்கொள்ளலாம், எனச் சொன்னயந் தோன்றுமாறு காண்க. பந்தனம்-கட்டு.

தாயிரங்கல்.

47. விருத்தப்பாகலித்துறையும்வெண்பாவுங்கொச்சகமும் விரிவாய்ச்சொல்லக், கருத்தப்பாவெனதுமகள் காமனரவிந்தமலர்க்கணையாலெஞ்சில், இருத்தப்பாலனம்வெறுத்தாளெனையுமவள்சகிதனையுமேசுருணீ, வருத்தப்பாத்திரமலவே யணைந்திடுவாய் திருமணிமேல் வரிசைமாலை.

இ-ள். திருமலைவேல் வரிசைமாலே-திருமலைவேலப்பன் என்கிற சிறப்பையுடைய பெரியோனே, விருத்தப்பா - விருத்தப்பாவையும், கலித்துறையும் வெண்பாவும் கொச்சகமும்-கலித்துறையையும் வெண்பாவையும் கொச்சகத்தையும், விரிவாய் சொல்ல - விஸ்தாரமாய்ச்சொல்ல, கருத்து-எண்ணமாம், அப்பா-அப்பா, எனது மகள்-என் பெண்ணானவள்; காமன்-மன்மதன், அரவிந்தமலர்-தாமரைமலராகிய; கணையால்-அம்பினுல், நெஞ்சில் இருத்த-மார்பில் அழுத்த, பால்அன்னம் வெறுத்தாள்-பாற்சோற்றை வெறுத்தாள், என்னையும் அவள் சகிதனையும் ஏசுருள் - என்னையும் அவள் தோழியையும் வைகிருள்; நீவருத்த பாத்திரம் அல்லவே-நீயும் இவளைவருத்துதற்கு உரியனல்லவே; (ஆதலால்) அணைந்திடுவாய் - இவளைத் தழுவுவாய். எ-று.

வரிசை-சிறப்பு.

தலைவி தோழியையிரத்தல்.

48. வீறுதரமேவலரைவென்றவெங்கடேசுரெட்டன் மேவவேண்டி, நூறுதரமாகவண்டைத்தூதுவிட்டாளனமருந்தாணொந்தாள் கண்ணீர், ஆறுதரமேற்பாயவனங்கன்பூவாளிமுலையானையூடே, ஏறுதரமாச்செவியைத் துளைக்குதென்றேயோலமிட்டாளெனச்சொல் மாதே.

இ-ள். மாதே-பெண்ணே; வீறுதர-மேவலரை வென்ற-மிகுதியாகப் பகைவரைவென்ற; வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுர எட்டன்; மேவவேண்டி-உன்னைத் தழுவவிரும்பி; நூறுதரமாக - நூறுதரமாய்; வண்டை அதுவிட்டாள்-வண்டைத்தூதனுப்பினுள்; அன்னம்அருந்தாள்-சோறுண்ணுள்; நொந்தாள்-மனம்வருந்தினுள்; கண்ணீர்-கண்ணீரானது; ஆறுதரம் மேல்பாய-நதியின்தரத்தினும் அதிகரித்துப்பாயவும்; அனங்கன் - மன்மதனது; பூவாளி-புஷ்பபாணங்கள்; முலையானையூடே - தனமாகியயானையின் மீது; ஏறுதர-தைக்கவும்; மா-வண்டுகள்; செவியைத்தொளைக்குதுஎன்று-காதுகளைத் தொளையாநின்றனவென்று; ஓலம் இட்டாள்-முறையிட்டாள், எனச்சொல்-என்றுசொல்வாய். எ-று.

அனங்கன்-சரீரமில்லாதவன்; (மன்மதன்).

தாயிரங்கல்.

49. இக்கோடிவளைப்பனென விருகோடியிளம்பிறைக்கீற்றெமுந்துவானில், முக்கோடிவளைப்பமதனுற்கோடி கணைதொடுத்தான் முன்னிற்பாளோ, கொக்கோடியிரையெடுக்கு மிளசைநகர்செழிக்கவருங்குமுணுவெட்டுத், திக்கோடிப்புகழ்படர்ந்த வடமலையாகடமலைமுன்சென்றமாலே.

இ-ள். கொக்கு ஓடி இரைஎடுக்கும் - கொக்குகள் விரைந்து சென்று இரையெடுக்கின்ற; இளசைநகர் செழிக்கவரும்-இளசைநகரமானது செழி

க்கும்படிதோன்றிய; குமுணு-குமுணனே; புகழ் எட்டுதிக்கு ஓடிபடர்ந்த-கீர்த்தியானது எட்டுத்திக்கிலும் ஓடிப்பரவின;வடமலையா-வடமலையானே; கடமலைமுன்சென்ற - மதலைக்கு (யானைக்கு) முன்னே பிரத்தியக்ஷமான; மாலே-திருமாலே; மதன் இக்கு ஒடிவளைப்பன் என-மன்மதன் கரும்புவில்லை விரைந்து வளைப்பானென்று; வானில்-ஆகாயத்தில்; இளம்பிறைக் கீற்று இளம்பிறைக்கொழுந்து; எழுந்து-தோன்றி; இருகோடி-இருமுனைகளையும்; முக்கோடிவளைப்ப - மிகவுங் கோணிவளைக்க; மதன் நாற்கோடிகணை தொடுத்தால்-மன்மதன் நாலுகோடி பாணங்களைப் பிரயோகித்தால்;|முன் அவற்றின் முன்; நிற்பாளோ-(இவள்) நிற்பாளோ. எ-று.

குமுணன்-வள்ளல்களில் ஒருவன்.

தாயிரங்கல்.

50. கெஞ்சுமாதங்கமுகம்பார்த்திரங்குந்திருமலைவேற்கிரியினனீ
ரஞ்சுமாதஞ்சுமந்துபெற்றபலன்கிடைத்ததெனக்காறுமாதங்
கஞ்சுமாதந்தனைப்பெற்றிழந்தோர்போற்றிரிந்துகலங்குதேழை
நெஞ்சுமாதம்பலுக்குநேர்ந்தொருவன்பின்றொடர்ந்துநேர்கின்றாளே

இ-ள். கெஞ்சும் - (இரவலர்) கெஞ்சுகின்ற; ஆதங்கம்முகம்பார்த்து-வருத்தத்தோடுகூடிய முகத்தைப்பார்த்து; இரங்கும்-இரங்குகின்ற; திருமலைவேல்கிரியில்- திருமலைவேலப்பனது மலையில்; நான் ஈரஞ்சுமாதம் சுமந்து-நான்பத்துமாதம் சுமந்து; பெற்ற-ஈன்ற; பலன்-பயன்;எனக்குகிடைத்தது-எனக்கு வாய்த்தது; ஆறுமா-(இந்தத்துன்பம்) எனக்கு ஆறுமா; தங்கம்சும்மாதந்தனை-சும்மாதரப்பட்டபொன்னை; பெற்றுஇழந்தோர்போல்-பெற்றிழந்தவர்போல; ஏழை நெஞ்சு-ஏழையேனது மனம்; திரிந்து கலங்குது-சுழன்று கலங்காநின்றது; மாது - (இந்தப்) பெண்; அம்பலுக்குநேர்ந்து-பழிமொழிக்கு இலக்காகி; ஒருவன் பின் தொடர்ந்து நேர்கின்றாள்-ஒருவன்பின்னே தொடர்ந்து மெலிகின்றாள். எ-று.

அம்பல்-பழிச்சொல்; (நிந்தனை).

தோழிமன்மதனைநோக்கிக்கூறல்.

51. திடக்குவடக்களிற்றான்கம் பளவல்லக்கர்குலன்றெற்குப்பூர்வ, குடக்குவடக்கடற்கரசன் மலையாண்டிராஜன்முல்லைகொடுவந்துன்னை, மடக்குவடக்கனசெய்வண்மதப்பயலே யுனக்கினியெவ்வாறுபேரி, அடக்குவடக்கயமீனின் சடக்குநடக்காதினிமே லறிந்துபாரே.

இ-ள். இவள்-இவள்; திடம்-உறுதியாகிய; குவடு - மலைபோன்ற; அ-அந்த; கடம் களிற்றான் - மதயானையையுடையவன்; கம்பள வல்லக்கர்குலன்-கம்பள வல்லக்கர் குலத்தில் அவதரித்தவன்; தெற்கு பூர்வம் குடக்கு

வடக்கு கடற்கும் அரசன்-இதற்கு கிழக்கு மேற்கு வடக்கு என்னும் நாற்றிசைக்கடற்கும் அரசன்; மலையாண்டிராஜன் - மலையாண்டிராஜன்; (அவனது) முல்லைகொடுவந்து-முல்லைமாலையைப் பெற்றுவந்து; உன்னை மடக்குவள்-உன்னை மடங்கப்பண்ணுவள்; தக்கனசெய்வள் - தகுந்தவற்றைச் செய்வள்; மதப்பயலே-மன்மதப்பயலே; உனக்கு இனிபேரிஒவ்வாது-உனக்கு இனிபேரிகை தகாது; அடக்கு-அடக்கிக்கொள்; டக்கயம்-உன்கொடியிலுள்ள; மீனின்-மீனினது; சடக்கும்-செருக்கும்; இனிமேல் நடக்காது-இனிமேல் செல்லாது; அறிந்துபார்-உணர்ந்து நோக்கு. எ-று.

தலைவிகூற்று.

52. இலக்காரமணியாள்கண் ணிமைபொருந்தாண் மன்மதனெய்தபுண்ணில், கலக்காரம்பெய்ததெனக் கதிர்மதியுஞ்சுழன்றெரிப்பக்கனன்றாளென்றே, சொலக்காரம்மியமாக விலக்கணநாற்கவிப்புலமைத் தொன்னூலோர்க்குப், பலக்காரமருள்விசய கிரிவேலாஞ் சின்னேபபதிச்செவ்வேட்கே.

இ - ள். இலக்கணம் - இலக்கணமமைந்த; நாற்கவிப்புலமை - நாற்கவிப்புலமையையுடைய; தொல் நூலோர்க்கு - பழைய நூலாராய்ச்சியுள்ள வித்துவான்களுக்கு; பலக்காரம் அருள் - பலபொருள்களையும் கொடுக்கின்ற; விசயகிரிவேல்ஆம் - விஜயகிரிவேலப்பனுகிய; சின்னேபபதி-சின்னேபபதியென்கிற; செவவேட்கு-குமாரன்பொருட்டு; இலக்கு-விளங்குகின்ற; ஆரம் அணியாள்-முத்துவட மணியாள்; கண் இமைபொருந்தாள் - கண்ணிமை மூடாள், மன்மதனுர் எய்த புண்ணில் - மன்மதன் அம்பு எய்தலாலுண்டாகிய புண்ணில், கலக்காரம் பெய்தது என-கலக்காரத்தை வைத்தாற்போல; கதிர் மதியும்சுழன்று எரிப்ப-கிரணங்களையுடைய சந்திரனும் சுழன்று எரிக்க; கனன்றாள் என்று - வெதும்பினளென்று; அக்கா-தமக்காய்; ரம்மியமாகச் சொல்-(அவனுக்கு) மனரம்மிய முண்டாகும்படி சொல்வாய். எ-று.

நாற்கவி-ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்பன.

தலைமகள்கூற்று.

53. இப்பளப்பாறையிற்படுக்கச்சொல்லுகிறீர்செடிமறைவோவில்லைச்சூழ, உப்பளப்பாறையுமாச்சுக் கணவனேவெகுகோபியும் மைக்கண்டால், கொப்பளப்பார்க்கினும்பார்ப்பன் பேனைப்பார்க்கினும்பார்ப்பன்குணமில்லாத, தப்பளப்பாவிருக்குதையா கிளுவைமருதப்பமன்ன தமிழ்க்கோமானே.

இ-ள். ஐயா-ஐயனே; கிளுவை மருதப்பமன்ன - கிளுவை மருதப்பமன்னனே; தமிழ்க்கோமானே-தமிழரசனே; இ-இந்த; பள்ளப்பாறையில்-பள்ளமாகிய பாறையின்மீது; படுக்கச்சொல்லுகிறீர்-படுக்கச்சொல்லுகின்

தீர்; செடிமறைவோ இல்லை-செடிமறைவும் இல்லை; சூழ-சுற்றிலும், உப்ப ளப்பாறையும் ஆச்சு - உப்பளத் திண்ணைகளுமாயின, கணவனோ வெகு கோபி-என்கணவனோ மிகுந்த கோவக்காரன், உம்மைக்கண்டால் - உம் மைப்பார்த்தால், கொப்பு அள்ளபார்க்கினும் பார்ப்பன்-கொண்டையறுத் தாலும் அறுப்பன், பேனைப்பார்க்கினும். பார்ப்பன் - பேன் பார்த்தாலும் பார்ப்பன்; (ஆதலால் இது) குணம் இல்லாத-நன்மையில்லாத, தப்பு அள ப்பா இருக்குது-தப்பளப்பா யிருக்கின்றது. எ-று.

தப்பளப்பு-பிழையாகிய காரியத்தைச்செய்தல்.உப்பளம்உப்புவிளைநிலம்.

தாயிரங்கல்.

54. ஆரசந்திரணத்துமட்டுண்டிலாளருவருத்து விருவிருப்பா கியே, ஊரசந்திரவிற்பாதிசென்றுமே யுறங்கிலாண் மகட்கென்செ ய்குவேனையா, தீரசந்திரகாவியிடக்கயாசிங்கவுத்தண்ட தூர்த்தண் டனேரண,வீரசந்திரகிரிநகராதிபாவெங்கடேசுரவெட்டமராஜனே.

இ-ள். ஐயா-ஐயனே; தீரசந்திர - தைரிய சந்திரனே, காவி இடக்க யா-காவிக்கொடியை யுடையவனே, சிங்கஊர்த்தண்டதூர்த்தனே - ரண வீர-ரணவீரனே, சந்திரகிரிநகர்க்கு ஆதிபா-சந்திரகிரிநகர்க்கதிபனே,வெ ங்கடேசுரஎட்டமராஜனே - வெங்கடேசுர எட்டமராஜனே, ஆ-அந்தோ; ரசம்-நீர், திரணத்துமட்டு உண்டிலாள் - திரணந்தளவாயினும் உண்ணுள், அருவருத்து விருவிருப்பு ஆகி - வெறுத்து விருவிருப்பையடைந்து, ஊர் அசந்து-ஊரார் அயர்ந்து; இரவில் பாதி சென்றும் - இரவில் பாதிகழிந் தும், உறங்கிளாள்-கண்ணுறங்காள், மகட்கு-(இந்த என்) பெண்ணுக்கு, என்செய்குவேன்-என்னபரிகாரஞ் செய்வேன். எ-று.

செவிலி வெறிவிலக்கல்.

55. தடக்கயத்தலரெல்லாமெடுத்துவேள்சமரச்சோலையில்வந் தானெனவதை, அடக்கபத்தையுந் தாயர்கொன்றல் வெறியாட்டுத் தானிவளாசையைத்தீர்க்குமா, கடக்கயத்தடையார்புவி கைக்கொ ண்டு கட்டுஞ்சந்திர காவியிடாலெனும், இடக்கயத்தந்நிலைநாட்டுமா மண்ட லேசராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். கடக்கயத்து-மதயானைகளையுடைய, அடையார் புவி-பகைவர் பூமியை, கைக்கொண்டு-கைப்பற்றி, கட்டும்-கட்டின, சந்திரகாவி இடால் என்னும் இடக்கயத்து-சந்திரகாவிடால் என்னுங் கொடியை,அம்நிலைநாட் டும்-அழகாகநிலைபெறச்செய்த,மாமண்டலேசுரா-பெரியமண்டலாதிபனே வெங்கடேசுரெட்டேந்திரனே-வெங்கடேசு எட்டேந்திரனே; வேள்-மன் மதன், தடம்-பெரிய, கயத்து அவர் எல்லாம் எடுத்து-தடாகத்தின் மலர்க

ஊயெல்லாம் எடுத்து; சமரச்சோலையில்வந்தான் என - யுத்தஞ்செய்யும் சோலையில் வந்தானென்று; அதை அடக்க - அதை யடக்கும்பொருட்டு, தாயார்-தாய்மார், அயத்தையுங்கொன்றால்-ஆட்டையுங்கொன்றால்; வெறியாட்டுத்தான் - (அந்த ஆட்டைக்கொன்று செய்கிற) வெறியாடல்தான்; இவள் ஆசையை தீர்க்குமா-இவள் காமத்தைத் தணிக்குமா. எ று.

நீ இவளைத் தழுவினால் இவளது ஆசைதீரும் என்பது கருத்து.

செவிலியிரங்கல்.

56. கலக்கைவாளியை யார்தடுப்பார் தென்றற்காற்றுக் காற்றுவளோமடவார்வசை, சொலக்கைவாய்பொத்தி மெய்சோர்ந்திருக் கவுந்தோகைமோகந் தொலையாதுபாரைய, உலக்கைவாரியடிக்குங் கடாசலத் துதயனேகணை யொன்றின்மராமரத், திலக்கைவாலியைப்பார்த்தெய்தமாமண்டலேசுரா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். ஐய-ஐயனே, உலக்கைவாரி அடிக்கும்-உலக்கையை யெடுத்தடிக்கின்ற, கடஅசலத்து-மதமலையையுடைய, உதயனே - சூரியனே, கணை ஒன்றின்-ஒருபாணத்தால்; மராமரத்து இலக்கை - மராமரத்துக் குறியையும்; வாலியை-வாலியையும்; பார்த்து எய்த-பார்த்துப் பிரயோகித்த,மாமண்டலேசுவரா-பெரியமண்டலாதிபனே, வெங்கடேசு ரெட்டேந்திரனே வெங்கடேசுர எட்டேந்திரனே; கலம் - களத்தளவாகிய, கைவாளியை-(மன்மதன்) கையம்புகளை; யார் தடுப்பார்-யார் தடுப்பவர், தென்றற்காற்றுக்கு ஆற்றுவளோ-(அதுவுமன்றி) தென்றற்காற்றையும் சகிப்பாளோ, மடவார்-மாதர், வசைசொல்ல - பழிசொல்ல, கைவாய்பொத்தி - கையையும் வாயையும்மூடி மெய்சோர்ந்து இருக்கவும் - உடம்புவாடியிருக்கவும், தோகை-(இந்தப்) பெண்ணின், மோகம் தொலையாது-மோகம் நீங்காது, பார்-நோக்கு. எ-று.

நற்றாயிரங்கல்.

57. குரங்கிக்காய்ந்திளந்தென்றலுமன்றிலுங்கோபங்கொண்டதனுன்மாதரேதுசெய், வரங்கிக்காபொர வாவென்றழைப்பர்கள் மறுத்துப்பேசவும்வாயிலைமாங்குயில், அரங்கிக்காவென் றிருந்திசை பாடவுமாற்றுமோமயலாற்றுதபேதைக்கே, இரங்கிக்காவிக்ர மார்க்காசெகமண்டலேசுரா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். விக்ரமார்க்கா-விக்ரமாதித்தனே, ஜெகமண்டலேசுரா-பூமண்டலேசுவரனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே-வெங்கடேசுர எட்டேந்த்ரனே குரங்கி-சந்திரனால், காய்ந்து-சுடப்பட்டு,இளந்தென்றலும்-இளமையாகிய தென்றற்காற்றும், அன்றிலும் - அன்றிற்பறவையும், கோபம் கொண்டதனால்-கோவங்கொண்டிருத்தலால், மாதர் எதுசெய்வர்-மாதர் என்

னசெய்வார்கள்; அங்கு-அவ்விடத்து, இக்கா-கரும்புவில்லை யுடைய மன்ம தனே, பொரவா என்று அழைப்பார்கள்-போர்செய்யவா வென்றழைப் பார்கள், மறுத்துப்பேசவும் வாய் இல்லை-தடுத்துப்பேசவும் வாயில்லை, மா ங்குயில்-மாமரத்திலுள்ள குயில்கள்; இக்கா-இந்தச்சோலையே, அரங்குஎன்று இருந்து-தமதிருப்பிடமென்றிருந்து, இசைபாடவும்-இராகத்தைப்பாடவும், மயல் ஆற்றுமோ-காமமயக்கத்தைச் சகிப்பாளோ, ஆற்றாத பேதைக்கு இரங்கி-சகிக்காத என் பேதைப்பெண்ணுக்கிரங்கி, கா-காப்பாய், எ-று.

குரங்கம்-மான், அதனைத் தன்னிடத்திலுள்ளவனாதலால் சந்திரன் குரங்கியெனப்பட்டான்.

தாயிரங்கல்.

58. தானவாரணமாமுலையாளுக்குத் தானவாவெண்டளப்பத் திலேமையல்,ஆனவாறுமறியாளிவள்கண்ணீரானவாறுமறியார்மின் னாரந்தோ, வானவாகண்டலாமண்டலாதிபா வானவாவளவாமதுரா புரி, மீனவாவிசயாமீனகேதனவெங்கடேசுரவெட்டமராஜனே.

இ-ள். வானம்-சுவர்க்கலோகத்தையுடைய ஆகண்டலா-இந்திரனே, மண்டலாதிபா-பூபதியே, வானவா-சேரனே, வளவா-சோழனே, மதுரா புரிமீனவா-மதுராபுரி பாண்டியனே, விசயா-அருச்சுநனே, மீனகேதனா-மீனக்கொடியையுடைய மன்மதனே, வெங்டேசுர எட்டமராஜனே - வெங்கடேசுரஎட்டமராஜனே, தானவாரணம்-மதயானைபோன்ற,மா-பெரிய, முலையாளுக்கு-தனங்களை யுடையாளுக்கு, அவா-ஆசை, வெண்தளப்பத்திலே-வெள்ளியமுல்லைமாலையிலேதான்; மையல் ஆன ஆறும் அறியாள்-காமமயக்கமுண்டானவிதத்தையும் அறியாள், இவள் கண்ணீர் ஆன ஆறும்-இவள்கண்ணீர் ஆறானதையும், மின்னார் அறியார் - மாதர் அறியார், அந்தோ-ஐயோ, எ-று.

தலைமகனுக்கு செவிலிகூறல்.

59. துரையத்தந்தி தலைமுலைமேல்வைத்துத் தோயுநாளெந்த நாளோவிரகத்தை, விரையத்தந்திவளவுஞ்செய்தாலிந்தமெல்லியற் கென்னசொல்லியான்தேற்றுவேன், தரையத்தந்திவரையேந்து மேகம்போற் றணிந்தகொம்புபடத்தன்னிழலைப்பாய்ந், திரையத்தந்தி நடாத்தியமாமண்டலேசுரா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தரையத்து-பூமியில், அந்திவரை எந்தும் மேகம்போல்-அஸ்த மகிரியினால் தாங்கப்பட்ட மேகத்தைப்போல, தணிந்த கொம்புபட-தாழ்ந்தகொம்புபடும்படி, தன்நிழலைபாய்ந்து-தனதுநிழலைப்பாய்ந்து, இரைய ஆரவாரிக்க; தந்தி நடாத்திய-யானையை நடத்திய; மாமண்டலேசுரா-பெ

ரிய மண்டலேசுவரனே, வெங்கடேசு ரெட்டேந்த்ரனே - வெங்கடேசுர எட்டேந்த்ரனே, துரை அத்தம்-துரையாகிய உனதுகையை, திதலே முலை மேல்வைத்து-தேமல்படர்ந்த தனங்களின்மீதுவைத்து, தோயும்நாள்-தழுவும் நாள்,எந்தநாளோ-எந்நாளோ, விரகத்தை-மோகத்தை, விரையத்தந்து-விரைவாகக்கொடுத்து, இவ்வளவும் செய்தால்-இத்தனையும்செய்தால், அந்த மெல்லியற்கு-அந்தப் பெண்ணுக்கு, என்னசொல்லியான் தேற்றுவேன்-என்னசொல்லி நான்தெளிவிப்பேன்; எ-று.

தரையத்து என்பதில் அத்துச்சாரியை.

செவிலிகூறல்.

60. அந்திராமனமுன்மேலென்றூற்பக லடங்குமோமையலானு லுமையநீ,வந்திராமனம்பேதைக்கு வேளம்புவச்சிராயுதம்போல்வந் துதைக்குமே, முந்திராமனம்பாலுண்டவாரிதிமுழக்கமேசகியாளே யிளசைவாழ், இந்திராமனுவேந்தா செகமண்டலேசுராவெங்கடேசு ரெட்டேந்த்ரனே.

இ-ள். இளசைவாழ்-இளசைநகரில்வாழ்கின்ற, இந்திரா-இந்திரனே, மநுவேந்தா-மநுவேந்தனே; செகமண்டலேசுரா - பூமண்டலேசுவரனே, வெங்கடேசு ரெட்டேந்த்ரனே -வெங்கடேசுர எட்டேந்திரனே; அந்தி-அந்திக்காலந்தொடங்கி, ரா-இராமுழுதும், நம்பேதைக்கு - நமது பெண்ணுக்கு, உன்மேல் மனம் என்றூல்-உன்மீது மனமென்றூல், மையல்-மையலானது, பகல் அடங்குமோ பகற்காலத்திலும் அடங்குமோ, ஆனாலும்-ஆயினும், ஐயா-ஐயா, நீ வந்து இராமல்-நீவந்து சேர்ந்திராமல், வேள்அம்பு-மன்மதபாணம், வச்சிராயுதம்போல் -வயிரப்படைபோல, வந்துதைக்கும்-வந்துதைக்கின்றது, முந்து-முற்காலத்தில்,-இராமன் அம்பால்உண்ட இராமபாணத்தால் சூடுண்ட, வாரிதி - கடலின், முழக்கமே சகியாளே - ஓசையையே சகிக்கமாட்டாளே, எ-று.

தாயிரங்கல்.

61. கொடிக்கத்தத்தும்மலேயுமடக்கிநெற் குறியும்பார்த்துக்கு ணம்பார்த்துப்பார்த்திந்தப், படிக்கத்தத்துவளே சோரச்சோருமெ ன்பாலனத்துக்குன் பாலனம்வேண்டுங்காண், அடிக்கத்தத்துகளே யும்பரப்பிமூ தண்டகூடமுக டும்படீரென, வெடிக்கத்தத்தும் பரி யாதிருமலேவேலுராஜவிவேகருலேசனே.

இ-ள். அடிக்கு-பாதங்களால், அத்தம்துகளேயும் பரப்பி-வழிமுழுதும் தூளியையும் பரவச்செய்து, மூதுஅண்ட கூடமுகடும்-பழமையாகிய அண்டகடாகத்தின் உச்சியும், படீர் எனவெடிக்க-படீரென்று வெடிக்கும்படி, தத்தும்-தாவிச்செல்லுகின்ற, பரியா-குதிரையையுடையவனே, திருமலே

வேலுராஜ-திருமலைவேலப்ப பூபதியே, விவேககுலேசனே-விவேக குலாதிபனே, கொடிகத்த-காக்கைகத்த, தும்மலையும் அடக்கி-தும்மலையும்அடக்கி,நெல்குறியும் பார்த்து-நெற்குறியையும் பார்த்து, குணம்பார்த்து பார்த்து-குணத்தையும் பார்த்துப் பார்த்து, இந்தப்படிக்கு - இந்தவண்ணம், அத்தத்துவளைசோர-கையிலுள்ள வளைகழலும்படி, சோரும்-மெலிகின்ற, என்பால் அன்னத்துக்கு - என்னிடத்திலுள்ள பெண்ணுக்கு, உன்பாலனம் வேண்டும்-உன்காத்தற்றொழில்வேண்டும் எ-று.

என்பால் அன்னத்துக்கு-என்னிடத்துள்ள அன்னப்பறவைக்கு; உன்பால் அன்னம்வேண்டும்-உன்னிடத்துள்ள பாற்சோறு வேண்டும்-என்பது சொன்னயம். பால்அன்னம் வெள்ளியஅன்னமுமாம். தத்துதல்-தாவுதல்.

தாயிரங்கல்.

62. பூசத்தந்தி முலையும்புண்ணுக்கினீர் போதும்போதும்புழுகும்சவ்வாதுமா, காசத்தந்திமதியுஞ்சுடுமென்ற காமப்பேய்கொண்ட கள்ளிக்கென்சொல்லுவேன், மாசத்தந்திசையெல்லாமதிரவே மந்தரத்தை மருப்பிட்டிடித்தள்ளி, வீசத்தந்திநடாத்துந்திருமலைவேலுராஜவிவேககுலேசனே.

இ-ள். மாசத்தம்-பேரொலியால், திசையெல்லாம் அதிர-திக்குகளெல்லாம் அதிரும்படி, மந்த்ரத்தை - மந்தரமலையை, மருப்புஇட்டு இடித்து-கொம்பைக்கொண்டு இடித்து,அள்ளிவீச-வாரியெறிகிற, அ-அந்த, தந்தி-யானையை, நடாத்தும்-செலுத்துகின்ற, திருமலைவேலுராஜ-திருமலை வேலப்பபூபதியே, விவேககுலேசனே-விவேககுலாதிபனே, பூசத்தந்து-பூசக்கொடுக்க, இ முலையும் புண்ஆக்கினீர்-இந்தத் தனங்களையும் புண்ணுக்கிவிட்டீர், புழுகும் சவ்வாதும் போதும்போதும் புழுகும் சவ்வாதும் போதும் போதும், ஆகாசத்து-ஆகாயத்தில்தோன்றின,அந்திமதியும்-அந்திக்காலத்துப்பிறைச்சந்திரனும், சுடும் என்ற-சுடுகின்ற தென்கிற, காமப்பேய்கொண்ட கள்ளிக்கு-காமப்பேய்பிடித்த திருடிக்கு, என்சொல்லுவேன் - யாது சொல்வேன் எ-று.

தந்தி-கொம்புள்ளது (யானை,) தந்தம்-கொம்பு.

தாயிரங்கல்.

63. ஓராவுண்டுமிழுமதிப்பிள்ளை யூராவுறங்காத பெண்பிள்ளைமால், கூராவுகணைகடொட்டான்மதன்கும்பராசி கொழிப்பது முத்தமாம், சூராவிதுடிப்பத்துடிப்பத்திண்டுணைக் கராசலந்துண்டிக்கக்கண்டிக்கும், வீராகவராமா திருமலை வேலுராஜவிவேககுலேசனே.

இ-ள். சூரர் ஆவி துடிப்ப துடிப்ப-சூரரது உயிர் பதைக்கப்பதைக்கவும், திண்-திடமான, துணைக்கரம்-இருதோள்களாகிய, அசலம் -மலைகள்,

துண்டிக்க-அறுபடவும், கண்டிக்கும்-அறுக்கின்ற, வீரராகவ ராமா-வீரராகவராமனே, திருமலைவேலுராஜ விவேககுலேசனே - திருமலைவேலுராஜ விவேககுலாதிபனே, ஓர் அரா-ஒப்பற்ற பாம்பினால், உண்டுஉமிழும்-விழுங்கியுமிழப்பட்ட, மதிப்பிள்ளை ஊர-இளம்பிறைதவழ, ராவுறங்காத-இராமுழுதும்தூங்காத, பெண்பிள்ளைமேல்-என் பெண்ணின்மீது, கூர் அராவு கணைகள்-கூர்மையாக அராவிய பாணங்களை, மதன் தொட்டான் - மன்மதன் பிரயோகித்தான், கும்பராசி - இருகுடங்களின்மீதும், கொழிப்பது-கொழிக்கப் படுவது, முத்தம் ஆம்-முத்துக்களேயாகும், எ-று.

கும்பம் ராசி-குடங்களின் கூட்டம் (இருதனங்கள்.) முத்தம்-முத்தமாலை, அன்றி முத்துப்போலும் கண்ணீர்த்துளி. அசலம் - அசையாதிருப்பது (மலை.) ஓர் அரா என்றது இராகுவை.

தாயிரங்கல்.

64. சங்கராவையகமும்பழிக்கு மாந்தாயர்தூற்றிலெனும் பேதைநெய்முடை, அங்கராவையழைக்குங்கழைக்குர லனங்கவேளையழைக்குமென்றேங்குமால், கங்கராவையடர்வதுபோலொருகைக்கடாசலங் கால்சாயத்தாக்கிய, வெங்கராவையிடறுந் திருமலைவேலுராஜ விவேககுலேசனே.

இ-ள். கங்கு-செம்பருந்தானது (கருடன்), அராவைஅடர்வதுபோல்-பாம்பைக் கொல்வதுபோல, ஒருகை கடாசலம்-ஒருதுதிக்கையை யுடையயானையானது, கால்சாய-அடிசாய, தாக்கிய-வந்துமோதின, வெம்கராவை-கொடிய முதலையை, இடறும்-சக்கராயுதத்தால் இடறின, திருமலைவேலுராஜ விவேககுலேசனே-திருமலைவேலுராஜ விவேககுலாதிபனே, சங்கரா-சிவனே, தாயர்தூற்றில் - தாய்மார்தூற்றினால், வையகமும்பழிக்கும் - உலகமும்பழிக்கும், என்னும்-என்கிற பேதை - என்பேதைப் பெண்ணானவள்; நெய்முடை அங்கர் - நெய்யினது முடைநாற்றம் பொருந்திய உடம்பையுடைய இடையர், ஆவைஅழைக்கும் - பசுக்களை யழைக்கிற; கழைக்குரல் - மூங்கிலின்னோசை; அனங்கவேளை அழைக்கும் என்று - மன்மதனை யழைக்குமென்று; எங்கும்-இரங்குவாள்; எ-று.

முடை-துர்க்கந்தம்.

தாயிரங்கல்.

65. சந்தனத்தைவிடுக்குமுன்னேவில்வ சந்தனத்தையலைப்பசைத்தெய்வன, சந்தனத்தைத்துளைக்குதுபாலுங்க சந்தனத்தையுமப்படிச்செய்ததே, சந்தனத்தையணிதிண்புயாசலத் தாருவேதண்டமிழ்க்கவிஞோர்தம்வ, சந்தனத்தைத்துசங்கட்டி யீந்தருடந்திரனேமுத்துமந்திரி நரேந்திரனே.

இ-ள். சந்தனத்தை அணி-சந்தனத்தைப் பூசின, திண் - வலிய, புய அசலம்-மலைபோலுந் தோள்களையுடைய, தாருவே-கற்பகத்தருவே, தண் தமிழ் கவிஞோர்தம்வசம் - குளிர்ந்த தமிழ்ப்புலவர் வசமாக, தனத்தை-திரவியத்தை, துசம்கட்டி ஈந்தருள்-கொடிகட்டித் தந்தருள்கின்ற, தந்திரனே-தந்திரனே, முத்து மந்த்ரி நரேந்த்ரனே - முத்து மந்த்ரியென்னும் நரேந்திரனே, அன்னத்தை சந்து விடுக்குமுன்னே - அன்னத்தைத் தூது விடுமுன்னமே, வில்வசந்தன்-கரும்புவில்லையுடைய மன்மதன், அதையலை பகைத்து எய்-அந்தப்பெண்ணைப் பகைத்து எய்கின்ற, வனசம்-தாமரைக் கணை, தனத்தை துளைக்குது-தனத்தைத் தொளைக்கின்றது,பாலும்கசந்து-பாலும்கசப்பாக, அன்னத்தையும்-சோற்றையும், அப்படிசெய்தது-அவ்வாறு கசக்கப்பண்ணினது. எ-று.

வசந்தன்-வசந்தகாலத்திற்குரியவன் (மன்மதன்).

தாயிரங்கல்.

66. பூரிக்குஞ்சரமாவாரமார்கொங்கைபூவைதாங்கப்பொருத த்தொனிக்கடல்,பேரிக்குஞ்சரபம்போலுந்தென்றற்கும்பெருமயக் குற் றுருகக்கண்டாங்குவேள், நேரிக்குஞ்சரமுங் கொண்டுவந்து போர்நிறைத்திட்டானினிநீவந்துசேர்மத, மாரிக்குஞ்சரமீதாகுமிந் திராவன்யராய வசுவப்பதூயனே.

இ-ள். மதமாரி-மதமழையையுடைய, குஞ்சரம்மீதுஆகும்-யானைமே லேறிவருகிற, இந்திரா-இந்திரனே, வன்யராய-வன்னியராஜனே, வசுவப் பதூயனே-வசுவப்பனென்னும் பரிசுத்தனே, பூரிக்கும்-பருக்கின்ற, சரம் ஆ ஆரம் ஆர்கொங்கை-சரங்களாக முத்துவடம் பொருந்திய தனங்களையுடைய, பூவை-(இந்தப்) பெண்ணானவள், தாங்கப்பொருது - தாங்கப்பொறுக்காமல், அ-அந்த, தொனிக்கடல் பேரிக்கும்-ஓசையையுடைய கடலாகிய பேரிகைக்கும், சரபம்போலும் தென்றற்கும்-சரபத்தைநிகர்த்ததென்றலுக்கும், பெருமயக்கு உற்று-பெரியமயக்கத்தையடைந்து, உருகக்கண்டு-உருகப்பார்த்து, ஆங்கு-அவ்விடத்தில், வேள்-மன்மதன், நேர் இக்கும்-நேர்மையாகிய கரும்புவில்லையும், சரமும் - (புஷ்ப) பாணங்களையும், கொண்டுவந்து-எடுத்துவந்து, போர்நிறைத்திட்டான் - போரில் நிறைத்துவிட்டான், இனி நீவந்துசேர்-இனி நீவந்து கூடுவாயாக. எ-று.

சரபம், எட்டுக்காலுள்ள ஓர்பறவை.

தாயிரங்கல்.

67. நக்த்துவார யிலசங்கண்ணிகொங்கைக ணையவாரறத்தைத் தவழித்தென்றல், புகத்துவாரஞ்செய்தாலந்தவேளம்பைப்பொறுக் கவாரம்புயக்கண்ணிதந்துசேர், சகத்துவாரஞ்செயுந் தென்னிளசை

ராசத்துவாரத்துக்கோர் மந்த்ரியாய்வந்த, மகத்துவாரஞ்சிதவசனு நரவாகனுநம்வசுவப்பதீரனே.

இ-ள். சகத்து-உலகத்தின்மீது, வாரம்செய்யும்-அன்புசெய்கிற, தென் இளசை-தென் இளசைநகரத்திலுள்ள, ராசத்துவாரத்துக்கு-அரண்மனைவாயிலுக்கு, ஓர்மந்த்ரியாய் வந்த-ஒருமந்திரியாகவந்த, மகத்துவா-பெருமையுடையோனே, ரஞ்சிதவசனு-இனிய வசனங்களையுடையவனே, நரவாகனு - நரவாகநத்தை யுடையவனே; நம் வசுவப்பதீரனே, அயில் ஆம் கண்ணி-வேல்போலுங்கண்களையுடையாளது, நகத்துஆர்-மலையினுருவத்தைப்பொருந்திய; கொங்கைகள்-தனங்கள், நைய-வருந்தவும், வார்அறகச்சுஅறுபடவும், தைத்தவழி - தைத்தவழியில், தென்றல்புக - தென்றல் நுழையவும், துவாரம்செய்தால்-தொளைபண்ணினால்,அந்தவேள் அம்பை-அந்த மன்மதனுடைய பாணத்தை, பொறுக்க ஆர் - தாங்க யாவர் வல்லவர்; அம்புயம்-அழகிய (உன்) தோளிலணிந்த, கண்ணிதந்து சேர்-பூமாலையைக்கொடுத்து (இவளைக்) கூடுவாயாக. எ-று.

நரவாகனம்-பல்லக்கு. நகம்—மலை.

தாயிரங்கல்.

68 கருத்தவாவில்லை யாள்கரனாய்வரும் காமனாலுடல் வாடாதின்றின்பத்தை, அருத்தவாவில்லையாயினிப்பேதையோ வாவிதாங்கரிதாகுமையாகண்பார், திருத்தவாவில்லையாத்தன்னைநல்கிய செந்தமிழ்க்குத் தியாகாநிணப்புலால், மருத்தவாவில்லையாரயில்வேற்கராவன்யராயவசுவப்பதீரனே.

இ-ள். திரு-அழகாகிய; தாவில்லை-பெருவில்லையுள்ள; ஆதன்னை-பசுக்களை; செந்தமிழ்க்கு-செந்தமிழ்ப் பாடலுக்கு; நல்கிய-பரிசிலாகக்கொடுத்த; தியாகா கொடையாளனே, நிணம்புலால் மருதவா - கொழுப்போடுகூடிய மாமிசமணம் நீங்காத, இலை ஆர்-இலையுருவமைந்த, அயில் வேல்-கூர்மையுள்ள வேற்படையை யேந்திய, கரா - கையையுடையானே, வன்யராய-வன்னியராஜனே, வசுவப்பதீரனே-வசுவப்பதீரனே, கருத்த-கர்த்தனே, வா-வருவாயாக, வில்லை ஆள்கரன் ஆய்வரும்-(கரும்பு வில்லையாள்கின்ற) கையையுடையவனாய் வருகின்ற, காமனால் - மன்மதனால், உடல்வாடாது-உடம்பு மெலியாமல், இன்று-இப்பொழுது; இன்பத்தைஅருத்து-சுகத்தையூட்டு அவா அல்லையாயின்-(உனக்கு இவளிடத்தில்) ஆசையில்லையானால்; இப்பேதையோ - இந்தப்பேதைப்பெண்ணோ; ஆவிதாங்கு அரிது ஆகும்-உயிர்தாங்கியிருத்தல் அருமையாகும்; ஐயா-ஐயனே; கண்பார் - கிருபைக் கண்ணால் நோக்கு. எ-று.

காமன்-காமத்தை யுண்டாக்குவோன்.

தலைவியிரங்கல்.

69. நேற்றிருந்தநிலவுமன்னேரமென்னினைவிருந்த நினைப்புமிளந்தென்றற், காற்றிருந்தசுகமுமுன்னாணையென் கருத்திருந்ததும் யாதென்றுசொல்லுவேன், சேற்றிருந்தசெந்தாமரைப் பூவின்மேற் றிருவிருந்ததுபோலச்சிங்காசனம், வீற்றிருந்ததுரையே திருமலைவேலுராஜவிவேகருலேசனே.

இ-ள். சேற்று இருந்த-சேற்றின்கண்ணிருந்த; செந்தாமரைப்பூவின் மேல்-செந்தாமரை மலரின்மீது; திரு இருந்ததுபோல-அழகுவீற்றிருந்தாற்போல; சிங்காசனம் வீற்றிருந்த-சிங்காதனத்தில் வீற்றிருந்த; துரையே-பிரபுவே திருமலைவேலு ராஜவிவேக குலேசனே -திருமலைவேலு ராஜவிவேக குலாதிபனே; நேற்று இருந்தநிலவும்-நேற்றிருந்த நிலாவும்; அந்நேரம்-அப்பொழுது; என் நினைவு இருந்த-என்மனத்திலிருந்த; நினைப்பும்-எண்ணமும்; இளந்தென்றற்காற்று இருந்த சுகமும் - இளமையாகிய தென்றற்காற்றிருந்த சௌக்கியமும்; உன் ஆணை-உன்னாணையாக; என்கருத்து இருந்ததும்-என் எண்ணமிருந்த நிலையும், யாது என்றுசொல்வேன்-என்னவென்று சொல்வேன். எ-று.

சிங்காசநம்-சிங்கங்களால் தாங்கப்பட்ட ஆசநம்.

தாயிரங்கல்.

70. நிருதராகவனந்தநகங்குலிந்நேரத்தேமதனேறிய வூர்திமேல், வருதராகவனந்தமங்கையை மருவுவாய்மலர் மஞ்சத்தின் மீதிலே, விருதராகவனந்தளஞ்செறி வேந்தன்ராவணன்சென்னி பத்தீர்ந்திடப், பொருதராகவனந்தகுஞ்செய பூபனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். விருதர் ஆக - விருதுடையவர்களாக; அனந்தம் தளம்செறி-முடிவற்ற சேனைகள் நெருங்கின; வேந்தன் ராவணன் - அரசனாகிய ராவணனது, சென்னிபத்து-பத்துத்தலைகளையும்;ஈர்ந்திட-(கணையானது)அறுத்திடும்படி; பொருத - போர்செய்த; ராகவன் ஸ்ரீராமனே; அந்தம்தகும்-அழகு பொருந்திய செயபூபனே-விஜயபூபதியே; வெங்கடேசு ரெட்டேந்திரனே-வெங்கடேசுர எட்டேந்திரனே; நிருதர்-அரக்கரது; ஆகம்-உடம்பின்; வன்னம் தந்த - நிறத்தைக்கொடுக்கிற; கங்குல் இரவில்; இந்நேரத்தே-இந்தநேரத்திலே; மதன் ஏறிய ஊர்தி-மன்மதனேறிய|தேராகியதென்றல்; மேல்வருதராக-மேலிட்டுவாராதாக; வனம் தந்த மங்கையை-பாற்கடல்தந்த பெண்ணை; மலர் மஞ்சத்தின்மீதிலே - புஷ்பக்கட்டிலின்மேல்; மருவுவாய்-தழுவுவாயாக. எ-று.

வனம்-நீர். அது இவ்விடத்தில் பாற்கடலை யுணர்த்திற்று. வனம்தந்த மங்கை-இலக்குமி.

தாயிரங்கல்.

71. தடக்கடக்கய லோவிடமோவிழி தாமரைக் குமிழோசிமி ழோதிரண், டிடக்கடக்குடமாமுலைமாமத னெய்யவாடியுருகுதல் பாரையா, உடக்கடக்குக்ரமாங்கும்பகன்னனை யுசிதவிந்திரசித்தை ச்செயங்கொண்ட, திடக்கடக்கயங்காத்தமனோகரா சீதராவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். உடக்கு அடக்கு -(பகைவர்) கூட்டத்தைவென்றடக்குகின்ற, உக்ரம் ஆம் கும்பகன்னனை-உக்கிரமாகிய கும்பகர்ணனையும்; உசிதம்இந்திரசித்தை-தகுதியாகிய இந்திரசித்தையும்; செயம்கொண்ட-வேற்றிகொண்ட; திடம்கடம்-திடத்தையும் மதத்தையுமுடைய; கயம்-யானையை (கஜேந்திரனை); காத்த-காத்தருளிய;மனோகரா-மனோஹரனே;சீதரா-ஸ்ரீதரனே, வெங்கடேசு ரெட்டேந்த்ரனே - வெங்கடேசுர எட்டேந்திரனே; விழி-கண்கள்; தடம்-தடாகத்திலுள்ள;கடம்- பெரிய;கயலோ-சேல்மீன்களோ; விடமோ-நஞ்சோ; திரண்டு-திரட்சியாகி; இடக்கடம் - இடத்தினுற் பெருமைகொண்ட;குடம்ஆம்முலை-குடம்போலும்தனங்கள்;தாமரைக்குமிழோ-தாமரை யரும்புகளோ; சிமிழோ-சிமிழ்களோ; (இத்தன்மையவாகிய அவயவங்களையுடைய இப்பெண்) மாமதன் எய்ய - அழகிய மன்மதனெய்ய; வாடி உருகுதல்-வாடி யுருகுவதை; பார்-நோக்கு; ஐயா-ஐயனே. எ-று.

உடக்கு-கூட்டம். கும்பகர்ணன் - குடம்போன்ற காதையுடையவன்.

தாயிரங்கல்.

72. உரைக்கத்தத்துவத் துட்பொருளாகிய வொருவன்கைவில்லுக்கொப்பாமிவள்கொங்கை, வரைக்கத்தத்துவசக்கரன்போரிது மட்டுண்டோவந்துமுட்டுதல்பார்கிலாய், தரைக்கத்தத்துகளையுமெழுப்பிப் பூச்சக்ரவாளத்தைத்தாக்கிக்கடல்கடந், திரைக்கத்தத்துவயப்பரியாமண்டலேசுராவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தரைகத்த-பூமிவெடித்தொலிக்க; துகளையும்எழுப்பி-தூளியையும் எழுப்பி; பூசக்ரவாளத்தை தாக்கி-அழகிய சக்ரவாளகிரியை மோதி; கடல்கடந்து இரைக்க-பெரும்புறக் கடல்எல்லைகடந்தொலிக்கும்படி; தத்து-தாவுகின்ற; வயம்பரியா வெற்றிக்குதிரையை யுடையவனே;மண்டலேசுரா-மண்டலாதிபனே; உரைக்க-சொல்ல; தத்துவத்து உட்பொருள்ஆகிய-உண்மைநூல்களின் உட்பொருளாகிய; ஒருவன்-ஒப்பற்றவனாகிய சிவபெருமானது; கைவில்லுக்கு-கைவில்லாகிய (மேருமலைக்கு); இவள் கொங்கைவரை ஒப்புஆம்-இவள் தனமலைகள் நிகராகும்; கத்தத்துவசம்-மீனத்துவசத்தைப் பிடித்த; கரன்-கையையுடையவனாகிய மன்மதனது; போர் இது மட்டு உண்டோ-சண்டையாகிய இதற்கு ஒரு அளவுண்டோ; வந்து-தென்றற்காற்றானது; முட்டுதல்-மோதுவதையும்; பார்க்கிலாய்-நோக்கிலாய்; எ-று.

73. விகடத்தந்திமதிகாயமாரவேள்விடுத்தவத்திரத்தைத்தூடு ருவியென், மகடத்தந்திவலையாகுங்கட்புனல் வடித்துத்தந்தியிசை வெறுப்பாவளோ, சகடத்தந்திபரித்திரள்கூட்டிய சத்துருத்திரட் டைக்குத்திடத்திரும், புகடத்தந்திக்குதயாசெயதா பூதராவெங்க டேசரெட்டேந்த்ரனே.

இதன்பொருள் நன்கு புலப்படவில்லை.

74. பருதியாகமகமாகமூர்மதிபணையெக்காளம்வெடியாமலரம்பு விருதியாகமகன்வச்ரமாயிவை மின்பொறுத்திடுமோசேர்திருவருட், கொருதியாகமகவாசகங் கற்றோர்க்குற்பனுவேங்கள் குப்பணவேள் மைந்தா, வருதியாகமகமேருநேர்செல்வ வன்யாயவசுவப்ப தூய னே.

இதன்பொருள் நன்கு புலப்படவில்லை.

செவிலியிரங்கல்.

75. பண்ணப்பம்பர மன்னமுண்ணுமலே பாற்றுப்பம்பாஞ் சோர்ந்துமயல்கொடு, வண்ணப்பம்பரமாங்குயமீறிமேவ விரும்பம் பரக்கண்ணினட்சேரையா, தண்ணப்பம்பரவைசூழ்பதியரசருங்கப் பம்பரந்தேகொடுவந்தடி, விண்ணப்பம்பரமென்றேதொழுஞ் செக வீரராமகுமாரவெட்டேந்த்ரனே.

இ-ள். தண் அப்பு-குளிர்ந்த நீரையுடைய, அம்-அழகிய, பரவைசூழ்-கடல்சூழ்ந்த, பதி-உலகிலுள்ள, அரசரும்-எல்லா அரசரும், கப்பம்-திறை யை, பரந்து கொடுவந்து-விரைந்து கொண்டுவந்து, அடி - அடிகளுக்கு, விண்ணப்பம்-விண்ணப்பம், பரம் என்று-(எம்மைக் காப்பது) உமது பார மென்று, தொழும்-வணங்குகின்ற, செகவீரராமகுமார எட்டேந்த்ரனே-செகவீரராமகுமார எட்டேந்திரனே, பண் -செய்த, அப்பம் - அப்பத்தை யும், பரமன்னம்-பரமான்னங்களையும், பால்துப்பு-பால்சோற்றையும், உண் ணுமல்-அருந்தாமல், அம்பரம்சோர்ந்து - ஆடையவிழ்ந்து, மயல் கொடு-மையல்கொண்டு, வண்ணம்-நிறமுள்ள,பம்பரம் ஆம்-பம்பரத்தை நிகர்த்த, குயம் மீறி-தனம்பூரித்து, மேவ-உன்னைத்தழுவ, விரும்பு - விரும்புகின்ற, அம்பு அரம் கண்ணினள்-அம்பையும் அரத்தையும் நிகர்த்த கண்களையுடை ய இவளை, சேர்-சேர்வாய், ஐயா-ஐயனே. எ-று.

தோழியிரங்கல்.

76. உனக்காவடிப்பூப்பறியாண்நதியும் புகாள்வடிபாலையருந் தென, என்னக்காவடிவேண்டாமென்றோதினு லேதுக்காவடியங்கா

மற்சேருவாய், அன்னக்காவடியாற்கழுகாசலத் தாதிக்காவடிமைத் திறம்பூண்டுக, வின்னக்காவடிவேலாவென்றுன்செகவீரராமகுமார வெட்டேந்த்ரனே.

இ-ள். அன்னக் காவடியால் - அன்னக்காவடியோடு, கழுகாசலத்து ஆதிக்கா - திருக்கழுக்குன்றத்து முதல்வனுக்கு, அடிமைத்திறம்பூண்டு-தொண்டு பூண்டு, கவின - அழகாக, கா-காப்பாற்று, வடிவேலா என்று-வடிவேலனே யென்று, உன்-நினைக்கின்ற, செகவீரராமகுமார எட்டேந்த்ரனே-செகவீர ராமகுமார எட்டேந்திரனே, உன் - யாவரும் மதித்தற்குரிய, அ-அந்த, கா அடி-சோலையினடியில் சென்று, பூபறியாள்-மலர்களைப் பறியாள், நதியும்புகாள்-நதிக்கும்போகாள், வடி பாலை அருந்து என-வடித்த பாலைக்குடியென, என் அக்கா-என்தமக்காய், அடி-அடி; வேண்டாம் என்று ஓதினால்-வேண்டாமென்று சொன்னால், எதுக்கு ஆவள் - எதுக்காவாள், தியங்காமல்-இவள் மயங்காமல், சேருவாய் - (இவளைத்) தழுவுவாயாக. எ-று.

தாயிரங்கல்.

77. ஆரிச்சந்தநயம்படிப்பார்மதனலச்சந்தனக்குண்டாகியேபின்னும்
தேரிச்சந்தமமேசொலுவாயெனச்செப்பிச்சந்தநங்கைதனைச்சேருவாய்
பூரிச்சந்தனம்விம்மியமாதரைப்புலம்பச்சந்தனமாகவுளத்தில்வை
வேரிச்சந்தனமார்பகத்தாய்செகவீரராமகுமாரவெட்டேந்த்ரனே.

இ-ள். அம்தநம்-அழகிய தனங்கள், பூரிச்சு - பூரித்து, விம்மியமாதரை-அழுதமாதரை, புலப்பு அச்சம் தனது ஆக - பிணக்கத்துக்கு காரணமாகிய அச்சம் தனதாக, உளத்தில் வை-மனத்திற்கொண்ட, வேரி - வாசனையுள்ள,சந்தனம்-சந்தனமணிந்த, மார்பகத்தாய்-மார்பிடத்தையுடையவனே, செகவீர ராமகுமார எட்டேந்த்ரனே - செகவீரராமகுமார எட்டேந்திரனே, இ-இந்த, சந்தம்-சந்தத்தை, நயம் படிப்பார்-இனிமையாகப் படிப்பவர், ஆர்-யார், மதனால்-மன்மதனால்; தனக்கு அச்சம் உண்டாகி - தனக்கு அச்சமுண்டாகியும், பின்னும்தேரி - பின்னும் ஆராய்ந்து, அன்னமே-அன்னமே, சந்துசொல்லுவாய் என-தூது சொல்வாயென்று, செப்பு-சொல்லுகின்ற, இ-இந்த, சந்தம்-அழகாகிய, நங்கைதனை-என் பெண்ணை, சேருவாய்-அணைவாய். எ-று.

தாயிரங்கல்.

78. சம்புதைக்குங்கருங்காலன்போற்கங்குல்சாரவேலையொலிக்குப்பயந்துநோக், கம்புதைக்கு மென்பெண்பிள்ளைமேலினிக்காமராஜனெடுத்துத்தொடுத்திடும், அம்புதைக்குமுன்னேயணைந்தாலிவளாவிதைக்குமிப்பூவிலிருக்குநம், பும்புதைக்குணிதியெனவாய்த்தவெம்புண்ணியாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். நம்பும்-நம்புதற்குரிய, புதைக்குள்-புதையலுக் குள்ளிருக்கிற, நிதிஎன-திரவியம்போல, வாய்த்த-கிடைத்த, எம் புண்ணியா-எமது புண்ணியவானே; வெங்கடேசு ரெட்டேந்த்ரனே—, கருகாலன்போல் - கரிய யமன்போல, கங்குல்சார-இரவுவர, வேலை ஒலிக்கு பயந்து-கடலோசைக் கஞ்சி, நோக்கம்புதைக்கும்-கண்களை மூடிக்கொள்ளுகின்ற, என் பெண்பிள்ளைமேல் - என்மகள்மீது, இனி-இனி, காமராஜன் - மன்மதன், எடுத்து தொடுத்திடும்அம்பு-எடுத்து எய்கின்ற பாணங்கள், தைக்குமுன்னே-தைக்குமுன்பே, அணைந்தால்-தழுவினால், இவள் ஆவி-இவளுயிர், தக்கும்-நிலைக்கும், இப்பூவில் இருக்கும்-(இவளும்) இந்தப்பூமியி லிருப்பாள், எ-று.

தாயிரங்கல்.

79. மாதானைவேந்தர்க்குமேலோன்பெரியசுவாமியையென்
மாதனைமேல்வரக்கண்டனள்கண்டுமயங்கியுஞ்சும்
மாதானையேவரக்காணேனெனதுவளவுக்குளம்
மாதானைபோச்சென்றுவந்தாளினிச்சொல்லவாயில்லையே.

இ-ள். மாதானை - பெரும்படைகளையுடைய; வேந்தர்க்கு மேலோன்-அரசரில்சிறந்தவன் ஆகிய, பெரியசுவாமியை-பெரியசாமியை, என்மாது-என்பெண், ஆனைமேல்வரக் கண்டனள் - யானைமீதேறிவரப் பார்த்தாள், கண்டுமயங்கியும்-பார்த்து மயங்கியும், ஐயோ சும்மாவரக்காணேன் - அந்தோ சும்மாவரக்கண்டிலேன், எனது வளவுக்குள் - என் வீட்டுக்குள், அம்மா-தாயே, தானைபோச்சுஎன்று-ஆடைபறிபோயிற்றுஎன்று, வந்தாள்-வந்தனள், இனிச்சொல்ல - இனிச்சொல்லுதற்கு, வாய் இல்லை - எனக்கு வாயில்லை, எ-று.

தலைமகள் இரங்கல்.

80. அச்சங்கபாணிபதம்போற்றிச்செந்தமிழ்க்கன்பியற்றி
அச்சங்கமேவுந்திருமலைராயனணைந்திலனுன்
அச்சங்கலாமதிக்கென்றிருந்தேனென்றனுகத்தைநூல்
அச்சங்கமாகத்துளைத்தான்மதப்பயலம்புகொண்டே.

இ-ள். அ-அந்த, சங்கபாணி-திருமாலின், பதம்போற்றி-திருவடியை வணங்கி, செந்தமிழ்க்கு அன்பு இயற்றிய - செந்தமிழ்க்கு அன்புசெய்து, அ-அந்த, சங்கம் மேவும்-சங்கத்தைப்பொருந்திய, திருமலைராயன்-திருமலைராஜன், அணைந்திலன் - என்னைத்தழுவிலன்; நான்-யான், கலாமதிக்கு-கலைகளையுடைய சந்திரனுக்கு, அச்சம் என்று இருந்தேன்-பயமென்றிருந்தேன், என்றன் ஆகத்தை-என்னுடம்பை, நூல் அச்சு அங்கம் ஆக-நூலச்சுருவமாக, மதப்பயல்-மன்மதப்பயல்; அம்புகொண்டு துளைத்தான்-பாணங்களால் துளைத்து விட்டான், எ-று.

தலைவியிரங்கல்.

81. அத்திக்குதையன் றிருமலைவேலப்பனன்புசொல்லத்
தித்திக்குதையன்கருத்தென்னவோமதிசென்றுகுணக்
குத்திக்குதையன்கதிர்காட்டுமோவிருகொங்கையின்மேல்
தத்திக்குதையமட்டேறுதுகாமன்சரங்கள்வந்தே.

இ-ள். அத்திக்கு உதையன்-கஜேந்திரனுக்குப் பிரத்தியக்ஷமானவன், திருமலைவேலப்பன்—. (அவனது) அன்புசொல்ல - அன்பைச் சொல்லுத லும், தித்திக்குது-இனிக்குது, ஐயன்கருத்து என்னவோ - ஐயன் கருத்து யாதோ, மதிசென்று-சந்திரன் அஸ்தமித்து, குணக்குதிக்கு - கீழ்த்திசை யில், உதையன்-சூரியன், கதிர்காட்டுமோ-ஒளியைக் காட்டுவனோ; காமன் சரங்கள்வந்து - மன்மதபாணங்கள்வந்து; இருகொங்கையின்மேல் தத்தி-இருதனங்கள்மீது தாவி, குதையம்மட்டு ஏறுது - குதையினளவும் பதியா கின்றன, எ-று.

செவிலி யிரங்கல்.

82. கலவளைக்குண்டிவள்கைவளைபோனதுங்காரிகையார்
சொலவளைக்குந்தத்தரம்போலத்தைப்பதுஞ்சொல்பவரார்
நலவளைக்குஞ்சரியாஞ்செவிச்சானகிநாண்புனைய
மெலவளைக்குஞ்சிலையானேதிருமலைவேலப்பனே.

இ-ள். இவள் கைவளைபோனதும்-இவள் கைவளையல்கழன்றதும்,கல வளைக்கு உண்டு-கலவளையலுக்குண்டு, காரிகையார் சொல்-மாதர்சொல், அவளை-அவளை, குந்தத்து அரம்போல - ஈட்டிபோலவும் அரம்போலவும், தைப்பதும்-தைப்பதையும், சொல்பவர் ஆர் - சொல்லுவோர் யாவர்,நலவ ளைக்கும் சரிஆம் செவி-நல்லவள்ளைத்தண்டுக்கு நிகராகிய காதுகளையுடை ய, சானகி-சீதை, நாண்புனைய-மங்கலநாண் அணியும்படி, மெலவளைக்கும்-மெதுவாக வளைத்த, சிலையானே-வில்லையுடையவனே, திருமலைவேலப்ப னே-, எ-று.

கலம்ஒருமுகத்த லளவைக்கருவி. சிலைஎன்றதுமிதிலையில் விசுவாமித் திரரோடு போனபோது வளைத்தவில்லை.

செவிலி யிரங்கல்.

83. முடிக்குமருப்புக்கிசையாப்பைங்கூந்தலம்மூரிமதன்
பிடிக்குமருப்புக்கிலக்கல்லவேயெதிர்பேசுமொன்னார்
குடிக்குமருப்புக்கடலேற்றுவித்துக்கொடிமதில்பாய்ந்
திடிக்குமருப்புக்களிற்றுனிளசையிலெட்டமனே.

இ-ள். எதிர்பேசும் ஒன்னார்-எதிர்பேசுகின்ற பகைவரது, குடி-குடிக ளை, குமர்-ஒலிக்கின்ற, உப்புக்கடல் ஏற்றுவித்து-உப்புக்கடலிலேறச்செய்

து, கொடிமதில்-கொடிகட்டிய மதிலின்மீது, பாய்ந்து இடிக்கும்-பாய்ந்து குத்துகின்ற, மருப்புக்களிற்றான்-கொம்புகளையுடைய யானையையுடையவனாகிய, இளசையில் எட்டமனே - இளசை எட்டமேந்திரனே, முடிக்கும்-முடிக்கின்ற, மரு-மருக்கொழுந்து, புக்கு இசையா-புகுந்து இசைந்திராத, பைகூர்தல்-பசுமையாகிய கூந்தலை யுடையவள், அ-அந்த, மூரிமதன்-வலிவுள்ள மன்மதன், பிடிக்கும்-கைக்கொண்டிருக்கிற, அரும்புக்கு-பூவரும்புகளுக்கு, இலக்கு அல்லவே-லக்ஷயமல்லவே. எ-று.

கடலேற்றுவித்து என்றது தீபாந்தரங்களிற்செலுத்தி என்றபடி.

செவிலிகூற்று.

84. தடத்தத்தளிச்சிறுநாண்பூட்டிமாரசரந்தனமு
கடத்தத்தளித்தலைதோற்றாட்குத்தோற்றுகடாசலத்தை
நடத்தத்தளிக்குட்பதைத்துக்கிடக்குமொன்னார்கண்முறை
இடத்தத்தளிக்கப்பொரும்வெங்கடேசுரெட்டேந்திரனே.

இ-ள். கடாசலத்தை-யானையை. நடத்த-நடத்தவே, தளிக்குள்-வீட்டுக்குள்ளே, பதைத்து கிடக்கும்-பதைத்துக் கிடக்கிற, ஒன்னார்கள்-பகைவர்கள், முறையிட-முறையிடவும், தத்தளிக்க-திகைக்கிடவும்,பொரும்-போர்செய்கிற, வெங்கடேசு ரெட்டேந்திரனே—, தடத்தத்து - அருகாயிருக்கிற, அளி-வண்டுகளாகிய, சிறுநாண்பூட்டி - சிறியநாணையேற்றி, மாரன்-மன்மதன், சரம் - புஷ்பபாணங்களை, அத்தத்து அள்ளி - கையினால்வாரி, தனமுகடு-தனமுகட்டின்மேல் எய்ய, தலைதோற்றாட்கு-தன்பெருமையையிழந்த என்பெண்ணுக்கு, தோற்று-பிரத்தியக்ஷமாக வேண்டும். எ-று.

செவிலிகூற்று.

85. செல்லுக்குமல்லுக்குநேரோதிமங்கலச்சித்தசவேள்
வல்லிக்கிணையிலைவல்லிக்கிணைகந்தமாதனஞ்சொன்
முல்லைக்குமானுக்குமாந்தளிருக்குமிம்மூன்றினுக்கும்
பல்லக்குமேல்வருமன்னவெட்டேந்திரபாண்டியனே.

இ-ள். பல்லக்கு மேல்வரும் மன்ன-பல்லக்கின்மீதேறிவருகிற அரசனே, எட்டேந்திரபாண்டியனே-எட்டமேந்திர பாண்டியனே, செல்லுக்கும்அல்லுக்கும் நேர்-மேகத்துக்கும் இரவுக்கும் சமமான, ஓதி - கூந்தலையுடைய, மங்கலம்-சுபகரமான, சித்தசவேள்-மன்மதனது, வல்லிக்கு-மனைவியாகிய ரதிதேவியை நிகர்ப்பவளாகிய என்பெண்ணுக்கு, இணை இல்லை-சமானமில்லை, இணை-இரண்டாகிய, கந்தம் - சந்தனக்குழம்பணிந்த, மாதனம்-பெரியதனங்களும், சொல்-சொல்லும், வல் இக்கு-(முறையே) சூதாடுகருவியையும் கரும்பினிரசத்தையும் நிகர்க்கும், முல்லைக்கும்-முல்லையரு

ம்புக்கும், மானுக்கும்-மானுக்கும்; மாந்தளிருக்கும் - மாந்தளிருக்கும், இம்மூன்றினுக்கும்-இந்தமூன்றுக்கும்; பல்லக்குமேல் - பல்லக்குமேல் நிகராவன். எ-று.

பல்லக்குமேல் என்பதை; பல் அக்கு மேல் எனப்பிரித்து; பல்முல்லைக்கும்; அக்குமானுக்கும்; மேல்மாந்தளிருக்கும் உவமையாம் எனவுரைக்க. அக்கு-கண்; மேல்-உடம்பு.

செவிலி வண்டொடு கூறியிரங்கல்.

86. கவளவளைக்குக்களவுசெய்தோன்வஞ்சகப்பிணைமேல்
துவளவளைக்குஞ்சிலையான்மருதப்பதுங்கன்வரான்
தவளவளைக்குத்தடையிடுவாரில்லைசந்துசொல்ல
அவளவளைக்கும்பிடப்படுமோதண்ணளிக்குலமே.

இ-ள். தண் அளிகுலமே-குளிர்ச்சியாகிய வண்டுக்கூட்டமே; கவளம் அளைக்கு-வாயளவினதாகிய தயிரின்பொருட்டு; களவு செய்தோன்-களவு செய்தவனாகிய கண்ணன்; வஞ்சகம் பிணைமேல்-வஞ்சவுருக்கொண்டுவந்த மானின்மீது; துவள வளைக்கும் சிலையான்-துவளும்படி வளைத்தவில்லையுடையவனாகிய ஸ்ரீராமன்;மருதப்பதுங்கன்-மருதப்பனென்னும்மேலோன், வரான்-வராதிருக்கிறான்; தளம் வளைக்கு-வெண்மையாகிய சங்கவளையலுக்கு; தடையிடுவார் இல்லை-தடைசெய்பவர் இல்லை; சந்துசொல்ல - தூது சொல்ல; அவள் அவளை கும்பிடப்படுமோ - அவளவளைக் கும்பிடத்தகுமோ. எ-று.

வஞ்சகப்பிணையென்றது மாரீசனை.

செவிலிகூற்று.

87. இந்திரச்செல்வன்றுரைபூலிக்காத்தப்பனிங்கிவள்பால்
வந்திலனின்னமும்வேள்கணையால்கண்வளர்ச்சிமு
கந்திரள்சானுவில்வைத்ததுமகரகர்க்கடக
சந்திரயோகங்களாமடவீர்கணிதந்திடமே.

இ-ள். இந்திரச்செல்வன்-இந்திரச்செல்வத்தையுடையவன்; துரை-பிரபுவாகிய பூலிக்காத்தப்பன்;இங்கு இவள்பால்-இங்கு இவளிடத்தில்,இன்னமும் வந்திலன்-இன்னமும் வந்தானில்லை; வேள்கணையால் - மன்மதபாணத்தால்; கண்வளர்-கண்வளர்கின்ற; சசிமுகம்-சந்திரன்போலுமுகத்தை சானுவில் வைத்தது-முழங்காலில் வைத்தது; மகரகர்க்கடக சந்திரயோகங்கள் ஆம்-மகரகர்க்கடக சந்திரயோகங்களே யாகும்; மடவீர் - பெண்களே; கணிதம் திடமே-கணித சாத்திரம் உறுதியேயாகும். எ-று.

மன்மதபாணத்துக்கு அஞ்சி முழங்காலில் முகத்தைவைத்த தலைவியைவியந்து; இதுவுமொரு மகரகர்க்கடக சந்திரயோகங்களாம் எனச்சொ

ன்னையந்தோன்றுமாறு கூறியது. மகரம்-காதணி, சந்திரன்-முகம், கர்க்கடகம்-முழங்கால், யோகம்-கூட்டம்.

செவிலி கடலொடு கூறல்.

88. வெஞ்சத்தமரந்துளேக்குந்திருமலைவேலுவந்தால்
வஞ்சத்தமரம்பலுக்குமஞ்சேனன்னைவாய்க்குமஞ்சேன்
நெஞ்சத்தமரங்கசப்போரைவெல்லுவனீயுமென்னை
அஞ்சத்தமரஞ்செய்வாயோவலைசெறியம்பரமே.

இ-ள். அலைசெறி அம்பரமே-அலைகள் நெருங்கிய கடலே, வெம்சத்தமரம் துளேக்கும்-விரும்புதற்குரிய எழுமராமரங்களைத் தொளைத்த, திருமலைவேலு வந்தால்-திருமலைவேலப்பன் வந்தால், வஞ்சம் தமர்-வஞ்சனையுள்ள உறவினரது, அம்பலுக்கும் அஞ்சேன்-பழிமொழிக்கும் அஞ்சமாட்டேன், அன்னைவாய்க்கும் அஞ்சேன்-தாயின்வாய்க்கும் அஞ்சேன், நெஞ்சத்து அமர்-மனத்திலமர்ந்திருக்கிற, அங்கசப்போரை-மன்மதன் சண்டையை, வெல்லுவன்-ஜெயிப்பேன், நீயும்-நீயும், என்னை அஞ்ச-என்னை அஞ்சுவிக்கும்பொருட்டு, தமரம்செய்வாயோ-ஒலிப்பாயோ. எ-று.

செவிலி யிரங்கல்.

89. புத்தியின்பேர்க்குள்ளாய்வேள்பொற்றொடிக்குமுன்புவந்து
சத்தியப்பேர்மீதுசரந்தொடுத்தான்-நித்தம்
குருபதம்பராவுமனுகூலாபொன்மாது
மருவும்வெங்கடேசுரெட்டமா.

இ-ள். நித்தம்-நாள்தோறும், குருபதம் பராவும்-குருபாதத்தை வழிபடுகின்ற, வெங்கடேசு ரெட்டமா-வெங்கடேசு ரெட்டமனே, வேள்-மன்மதன், புத்தியின்பேர்க்கு உன் அய் - புத்தியின்பேருக் குள்ளாகி, பொன்தொடிக்கு முன்புவந்து - பொன்வளையலை யணிந்தவளுக்கெதிரில்வந்து, சத்தியப்பேர்மீது சரம்தொடுத்தான் - சத்தியத்தின் பேர்மீதுபாணமெய்தான். எ-று.

புத்தி-மதி (சந்திரன்). சத்தியம்-மெய் (உடம்பு). மன்மதன்சந்திரனுடையகுடைநீழலில்வந்து உடம்பின்மீதுஅம்புதொடுத்தானென்பதுகருத்து.

தலைவி யிரங்கல்.

90. அத்திதனையூர்ப்பசுப்பேராக்கிச்சினந்தடித்துச்
சித்தசனென்மேற்சமரஞ்செய்தானே-முத்தமிழ்க்கெந்

நாளும்பசுங்கன கநல்கிமுதல்வள்ளலெனை
வாழும்வெங்கடேசுரெட்டமா.

இ-ள். முத்தமிழ்க்கு-முத்தமிழ்ப் பாடலுக்கு, எந்நாளும்-எக்காலமும், பசுகனகம் நல்கி-பசும்பொன்னைக் கொடுத்து, முதல்வள்ளல் எனவாழும்-முதல் வள்ளல்போல வாழ்கின்ற, வெங்கடேசு ரெட்டமா - வெங்கடேசு ரெட்டமனே, அத்திதனை-கடலை, ஊர்ப்பசு பேர் ஆக்கி-ஊர்ப்பசுவின்பெயராகச்செய்து, சினந்து அடித்து-கோபித்து அடித்து, சித்தசன் - மன்மதன், என்மேல்-என்மீது, சமரம்செய்தான்-போர் செய்தான். எ-று.

அத்தி-கடல், ஊர்ப்பசு-நகரா (முரசு).

தலைவிகூற்று.

91. மன்னன்வெங்கடேசுரெட்டமாநிதிபாற்றூதுரைத்துக்
கன்னிதார்வாங்கிவரக்காண்கிலனே-மின்னுபசும்
பொன்னவடிவாயிலங்குந்தோகைரதிகணவன்
கன்னல்வளைத்தெய்யுங்கணை.

இ-ள். மின்னு-மின்னுகின்ற, பசும்பொன்ன வடிவும் - பசும்பொன்னுருவாகி, இலங்கும்-விளங்குகின்ற, தோகை-மயிற்சாயலையுடைய, ரதிகணவன்-இரதிதேவி நாயகனாகிய மன்மதன், கன்னல் வளைத்து-கரும்பை வில்லாகவளைத்து, கணை எய்யும் - அம்புகளை யேவுகிறான், (இன்னமும்) மன்னன் வெங்கடேசு ரெட்டமாநிதிபால் - இறையவனாகிய வெங்கடேசு ரெட்டன் என்னும் பெருஞ் செல்வனிடத்தில்; தூதுஉரைத்து-தூதுசொல்லி, கன்னி-கன்னியானவள், தார் - மாலையை, வாங்கிவரக் காண்கிலன்-வாங்கிவரக்காணேன். எ-று.

கன்னிதார் வாங்கிவர, ரதிகணவன் கன்னல் வளைத்தெய்யுங் கணை காண்கிலன் என்றியைத் துறைப்பினு மமையும்.

செவிலி யிரங்கல்.

92. தண்ணமுதபாஷிதவிஸ்தாரவெங்கடேசுரெட்ட
புண்ணியவான்வந்துபுணராநாள்-உண்ணமுது
மாமனத்தையேகுமட்டவம்புவிட்டாள்பால்கொடுக்க
வீமனத்தைபேரெடுத்தாள்மின்.

இ-ள். தண்-குளிர்ந்த, அமுதம்-அமிர்தம்போன்ற, பாஷிதம்-சம்பாஷணத்தால், விஸ்தாரன் - விசாலன், வெங்கடேசுரெட்டபுண்ணியவான்-வெங்கடேசுரெட்டனென்னும் தருமசீலன்,வந்துபுணராநாள்-வந்துசேராநாளில்,மின்-என்பெண்ணானவள்,உண்-உண்ணுதற்குரிய, அமுதம்-அமு

தமும் (சோறும்), மாமனத்தைகுமட்ட-பெரிய மனத்தைக்குமட்டுதலால், வம்புவிட்டாள்-(கச்சு) கசந்துவிட்டாள், பால்கொடுக்க-பாலைக்கொடுக்க, வீமன் அத்தைபேர் எடுத்தாள்-வாந்தி யெடுத்தாள், எ-று.

வம்பு-கசசு, இதுகைத்து என்பதன் சிதைவு; வெறுத்துஎன்பது பொருள். வி-புஷ்பம் (தாமரை), மன்-இறைவன் (நிலையாக வுடையவன்). பிரமன் அத்தை-இவனுக்கு அத்தை-பார்வதி, (சத்தி வார்தி).

தாயிரங்கல்.

93. தண்டமிழ்தேருத்தமதயாளுவெங்கடேசுரெட்ட
மண்டலிகன்கூடிமருவாநாள்-செண்டு
முலைமாளுட்கின்னமுதுகொடுக்கவாட்டுத்
தலையாளுண்மான்மயக்கத்தால்.

இ-ள். தண் தமிழ்தேர் - தட்பமாகிய தமிழையாராய்ந்து தெளிந்த; உத்தம தயாளு-சிறந்த தயாவாளுகிய, வெங்கடேசுரெட்ட மண்டலிகன்-வெங்கடேசுரெட்ட பூபதி; கூடி மருவாநாள் - சேர்ந்தணையாத நாளில், செண்டு - பந்துபோன்ற; முலை - தனங்களையுடைய, மாமனுட்கு - என் பெண்ணுக்கு, இன் அமுதுகொடுக்க - இனிய அமிர்தத்தைக் கொடுக்க, (அவள்) மால் மயக்கத்தால் - காம மயக்கத்தால், ஆட்டுத்தலை ஆளுள் - ஆட்டுத்தலையை யுடையவளானுள், எ-று.

ஆட்டுத்தலை; ஆடுதலையுடைய தலை; ஆட்டுத்தலையாளுள் என்பதற்கு-வேண்டாமென்று தலையசைத்தாள் என்பது கருத்து.

தாயிரங்கல்.

94. தெள்ளுதமிழுக்கருடியாகிவெங்கடேசுரெட்ட
வள்ளன்மேலாசைகொண்டமாளுண்மேல்-துள்ளும்
கயவாளிவேட்குவரிகைமுரசாளுற்பங்
கயவாளியேவாளுேகாண்.

இ-ள். தெள்ளுதமிழுக்கு-தெளிந்த தமிழ்ப்பாடலுக்கு, அருள்-அருள் செய்கிற, தியாகி-கொடையாளனுகிய, வெங்கடேசுரெட்ட வள்ளல்மேல்-வெங்கடேசுரெட்ட வள்ளலின்மீது, ஆசைகொண்ட-விருப்பங்கொண்ட, மாளுள்மேல்-என் பெண்ணின்மீது, துள்ளும்-குதிக்கின்ற, கயவாளி-கீழ் மகனுகிய, வேட்கு-மன்மதனுக்கு, உவரி - கடலானது, கைமுரசு ஆளுல்-கைப்பேரிகையானல்; பங்கயவாளி-தாமரைமலராகிய பாணத்தை, எவானே-எய்யானே, எ-று.

இழிந்தவனுக்கு உயர்ந்தபொருள் கிடைத்தால் அவன்செருக்கடைந்து பிறரை வருத்தமாட்டானே என்பது கருத்து.

தாய்க்கூற்று.

95. கொங்கைகும்பகோணமாகூந்தனுவோகூடலா
தங்கும்விழியம்பாசமுத்திரமா-பைங்கனக

மேருவெங்கடேசுரெட்டமெந்த்ராவிவள்சசிபுற்
ருருடையானூரிடையதாம்.

இ-ள். பைகனகம்-பசும்பொன் மயமாகிய, மேரு-மேருமலையை நிகர்த்த, வெங்கடேசுரெட்ட மேந்த்ரா-வெங்கடேசுரெட்ட மேந்திரனே;இவள்சசி-இவள் இந்திராணிக்கு நிகராவாள், (இவளுடைய) கொங்கை-தனங்கள், கும்பகோணமா-கும்பகோணமா, கூந்தலோகூடலா - கூந்தலானது மதுரையா, தங்கும்விழி-பொருந்தியகண்கள், அம்பா சமுத்திரமா-அம்பா சமுத்திரமா; இடை-இடையானது; புல்தார் உடையான் ஊரா-பனைமாலையணிந்தவனாகிய சேரனது ஊராகிய கருவூரா, எ-று.

கும்பகோணம்-கும்பவட்டம் (கும்பம்-குடம்). கூடல்-(கூடு அல்) திரண்ட இருள். அம்பா சமுத்திரமா-அம்பர கடலா. கருவூர்-வஞ்சி (கொடி) கும்பகோணம் முதலியன சொன்னயந்தோன்ற வந்தன.

தலைவியைத் தாய்வியத்தல்.

96. மெய்யன்வெங்கடேசுரெட்டவேந்தன்பாற்சந்துரைத்துத்
தையல்கண்ணிவாங்கித்தரவிலையே-கையதினாற்
றுண்டித்தாண்மென்றுமென்றுதுப்பினாண்மாரனையும்
கண்டித்தாளச்சமற்றாள்காண்.

இ-ள். மெய்யன்-சத்தியசந்தனாகிய, வெங்கடேசுரெட்ட வேந்தன்பால்-வெங்கடேசுரெட்ட ராஜேந்திரனிடத்தில், தையல்-தோழிப்பெண்ணானவள், சந்து உரைத்து-தூதுசொல்லி, கண்ணிவாங்கித்தர-அவனது)மாலையை வாங்கிக்கொடுக்க; (என் பெண்ணானவள்) வில்லை-(மன்மதனது) வில்லாகிய கரும்பை, துண்டித்தாள்-துண்டுசெய்தாள்; மென்றுமென்று துப்பினாள்-மென்றுமென்று உமிழ்ந்தாள், மாரனையும்-மன்மதனையும் கண்டித்தாள்-வெறுத்துப் பேசினாள், அச்சம் அற்றாள்-பயமொழிந்தாள், எ-று.

தலைவனதுமாலை கிடைத்தமையால் மன்மதனது ஆண்மை இவளிடத்தில்செல்லவில்லை யென்பதாம்.

தாயிரங்கல்.

97. பூத்தூக்கியுண்டவனைப்போர்தேறிக்கொண்டவளே
மாத்தூக்கியைத்தூக்கிவந்தானே-நேர்த்திதரும்
பொன்னாபரணபுயசயிலாதென்னிளசை
மன்னாகுமாரவெட்டமா.

இ-ள். நேர்த்தி தரும்-அழகைக்தந்த, பொன் ஆபரண-பொன்னாபரணத்தையுடையவனே, புயசயிலா-தோள்களாகிய மலைகளையுடையவனே, தென் இளசை மன்னா - தென்னிளசை நகர்க்கரசனே, குமார எட்டமா-குமார எட்டமனே; பூ-பூமியை; தூக்கி-சுமந்தவனாகிய ஆதிசேடனால்உண்டவனை-உண்ணப்பட்டவனாகிய (தென்றல்) காற்றை, போர்து எதிர்கொ

ண்டவன்-(வாகநமாகக்) கொண்டேறிக்கொண்டவனாகிய மன்மதன்; மா-இலக்குமியை; தாக்கியை-சுமப்பதாகிய தாமரைமலரை; தாக்கிவந்தான்-எடுத்துவந்தான்; எ-று.

மன்மதன் தாமரைமலரை யெடுத்துவந்தான் இனி தாமதியாமல்இவளைத்தழுவவேண்டுமென்பது கருத்து.

வெறிவிலக்கல்.

98. நற்றமிழ்வாணர்க்குநிதிநல்கும்வெங்கடேசுரெட்ட
கொற்றவன்றாரன்றியரன்கோயிலின்முன்-உற்றகொடிக்
காலைவிட்டப்பாலேநீங்காததுமுன்றுண்டுபட
வேலையிட்டதேதுவிடு.

இ-ள். நல்-சிறந்த; தமிழ்வாணர்க்கு-தமிழ்ப்புலவருக்கு; நிதி நல்கும்-திரவியத்தைக் கொடுக்கின்ற வெங்கடேசுரெட்ட கொற்றவன் - வெங்கடேசுரெட்டேந்திரனது; தார் அன்றி - மாலையல்லது; அரன் கோயிலின் முன்உற்ற-சிவன் கோயிலின் முன் பொருந்திய; கொடிக்காலைவிட்டு அப்பாலே நீங்காதது-துஜஸ்தம்பத்தைவிட்டு அப்பால் விலகாதிருப்பதாகிய; ருஷபத்துக்குமுன்-முன்னிருப்பதாகிய மேஷம்; துண்டுபட-அறுபட; வேலையிட்டது எது-வேலையிட்டதற்குக் காரணம்யாது; விடு - (இதனை) ஒழிவாய், எ-று.

இவளதுமையல் வெங்கடேசுரெட்டனது மாலையாலன்றி இந்த ஆட்டின் கொலையால் நீங்காதென்பதாம்.

வெறிவிலக்கல்.

99. கன்னன்வெங்கடேசுரெட்டகாண்டிபன்மேன்மாமோக
சன்னதங்கொண்டாட்குமுல்லைத்தாரல்லா-தென்னசெய்தீர்
தையன்முன்பூமுன்னட்சரமுற்றதைத்தெரியச்
செய்யும்பேரென்னசெயும்.

இ-ள். கன்னன்-கர்ணனைநிகர்த்த; வெங்கடேசுரெட்டன்-வெங்கடேசுரெட்டன் என்கிற, காண்டிபன்மேல் - விசயன்மீது, மா பெரிய; மோக சன்னதம் கொண்டாட்கு - மோகவெறி கொண்டவளுக்கு, முல்லைத்தார் அல்லாது-(அவனது) முல்லைமலர் மாலையை அன்றி, என்னசெய்தீர்-என்னகாரியம் செய்தீர், தையல்முன்-தையல் என்னுஞ் சொல்லுக்குமுன்னே; பூ முன் அக்ஷரம்-பூ என்னும் எழுத்துக்கு முன்னெழுத்தாகிய பு என்னும் எழுத்து; உற்றதை-சேர்ந்ததாகிய புதையலை; தெரியச்செய்யும்பேர்-தெரியும்படிச் செய்யும் பேராகிய-மை (ஆடு); என்னசெய்யும்-என்ன காரியத்தைச் செய்யும்; எ-று.

வெறிவிலக்கல்.

100. தாண்டுபரிதூண்டிடசாலிவெங்கடேசுரெட்ட
பாண்டியன்மேலாசைகொண்டபைந்தொடியை-வேண்டியே

ஒன்றிரண்டாப்போகவொருத்தனையிங்கேன்கொணர்ந்தீர்
மின்றுயர்க்கென்செய்யும்விடும்.

இ-ள். தாண்டுபரி - தாவுகின்ற குதிரையை; தூண்டு - செலுத்துகிற; திடசாலி-பராக்கிரமசாலியாகிய; வெங்கடேசுரெட்ட பாண்டியன்மேல்-வெங்கடேசுரெட்ட பாண்டியன்மீது;ஆசைகொண்ட-விருப்பங்கொண்ட, பைந்தொடியை-பசும்பொன் வளையலணிந்தபெண்ணை; வேண்டி-விரும்பி; ஒன்று-ஒருருவம்; இரண்டு ஆபோக-இரண்டு பாகமாயொழிய; ஒருத்தனை-ஆட்டை; இங்கு என் கொணர்ந்தீர்-இவ்விடத்தில் என் கொண்டுவந்தீர்; மின்துயர்க்கு-(இது) என்மின்கொடிபோல்வாளாகிய பெண்ணினதுதுன்பத்துக்கு; என்செய்யும்-என்ன பயனைத்தரும்; விடும்-(இதனை) விடுங்கள்; எ-று.

ஒரு - ஆடு.

அலர்க்குறி.

101. கல்விகரைகண்டகும்பன்கம்பன்வெங்கடேசுரெட்ட
வில்விசயன்றென்னிளசைவெற்பிடத்திற்-சொல்லுவதென்
கட்செவியுமம்புலியுங்கங்கையுமோர்வெம்புலியிற்
பட்சமுறவைத்தார்பதி.

இ-ள். கல்வி கரைகண்ட-கல்விக்கடலைக் கரைகண்ட; கும்பன்-அகத்தியன்போன்றவன்; கம்பன் - கம்பனை நிகர்த்தவன்; வெங்கடேசு ரெட்ட வில் விசயன்—; (அவனது) தென்இளசை வெற்பிடத்தில்-தென்னிளசை நகரத்திலுள்ள மலையின்கண்; சொல்லுவது என்-(கண்ட அதிசயத்தை) சொல்லுவதெப்படி; கட்செவியும்-பாம்பையும்; அம்புலியும் - சந்திரனையும்; கங்கையும்-கங்கையையும்; ஓர் வெம்புலியில்-ஒருகொடியபுலியின்மீது; பட்சம்உற-அன்புமிகும்படி; பதி-தலைவர்; வைத்தார்-வைத்தனர்; எ-று.

பாம்பு-சந்திரன்-கங்கை (நீர்) அரவு-இந்து-அம்	இம்மூன்றையும் சேர்த்தால் அரவிந்தம் ஆகும். அரவிந்தம்-தாமரை.

புலி-வேங்கை. இது ஓர்மரம். வேங்கைமரத்தின்மீது தாமரைமலர் இருந்தது என்பது கருத்து.

அலர்க்குறி.

102. சங்கநிதியென்னத்தழைத்தவெங்கடேசுரெட்ட
சிங்கமிளசைச்செழுங்கிரியில்-அங்குகண்டேன்
மானிலத்தைமுற்றுமொருவள்ளனடுவாதியந்தந்
தானிருப்பதேந்திநிற்கத்தான்.

இ-ள். சங்கநிதி என்ன-சங்கநிதிபோல; தழைத்த-செழித்த; வெங்கடேசுரெட்டசிங்கம்-(அவனது)இளசைசெழுங்கிரியில்-இளசைநகரிலுள்ள

செழியமலையின்மீது, ஒருவள்ளல் நடு ஆதி அந்தம் தான் இருப்பது மானிலத்தைமுற்றும் ஏந்தி நிற்க-ஒருவள்ளலானவன் நடு ஆதி அந்தங்களிலும் தானேயிருப்பதாக உலகமுழுதும்தாங்கி நிற்க, அங்குகண்டேன்-அவ்விடத்துப் பார்த்தேன். எ-று.

மானிலம்-மால்நிலம், இதுமுல்லை. வள்ளல்-பாரி, நடு இதின் நடுவில், ஆதி-ஆதியென்னுஞ்சொல்லின், அந்தம்-கடையெழுத்தாகியது, இருப்பது இருப்பதாகிய பாதிரி. பாதிரி மரத்தின்மேல் முல்லைமலர் இருந்தது என்பது கருத்து.

அலர்க்குறி.

103. தாலமுற்றும்வாழ்த்துமிந்த்ரதாருவெங்கடேசுரெட்ட
வாலகிருஷ்ணவிம்பன்மணிவரையின்-மேலு
மருக்கமழுநன்மாமனையுமொருசந்தி
இருக்கவதிற்கண்டுகொண்டேனின்று.

இ-ள். தாலம் முற்றும் வாழ்த்தும் - உலகமுழுதும் வாழ்த்துகின்ற, இந்த்ரதாரு-கற்பகத்தருவைநிகர்த்த, வெங்கடேசுரெட்ட வாலகிருஷ்ண விம்பன்—, (அவனது) மணிவரையின் மேலும் - அழகிய மலையின்மீதும், மருகமழும்-வாசனை பரிமளிக்கின்ற, நல்-அழகிய மா - இலக்குமியின், மனையும்-வீடாகிய தாமரையும், ஒருசந்தியிருக்க-ஒருமூங்கிலின்மீதிருக்க, அதில்-அதினிடத்து, இன்றுகண்டுகொண்டேன்-இன்றுபார்த்தேன். எ-று.

மூங்கிலின்மீது தாமரைமலர் இருந்தது என்பது கருத்து.

அலர்க்குறி.

104. தங்கள்குலதீபமெனத்தாரணியோர்கொண்டாடும்
எங்கள்வெங்கடேசுரெட்டமெந்த்ரன்வெற்பில்-செங்கணரி
உண்டதுடனவனின்றூதினதுஞ்சேர்ந்தவன்பேர்
கொண்டதின்மேற்கண்டேன்குறி.

இ-ள். தாரணியோர்-உலகத்தார், தங்கள் குலதீபம் என-தங்கள்குலவிளக்கென்று, கொண்டாடும்-கொண்டாடுகிற, எங்கள் வெங்கடேசுரெட்டமேந்த்ரன்—, (அவனது) வெற்பில்-மலையில்; செங்கண் அரி உண்டதுடன்-செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய திருமால் உண்டதோடு அவன் நின்று ஊதினதும்சேர்ந்து—, அவன்பேர்கொண்டதின்மேல்-அவன்பேர்கொண்டதின்மீது, குறி-(தலைவனது) அடையாளமாயிருக்க, கண்டேன்-பார்த்தேன்.

திருமால் உண்டது-பூமி - கு. ஊதினது சங்கு, வளை. இவ்விரண்டும் சேர்ந்தது குவளை. அவன்பேர் விண்டு - மூங்கில். மூங்கிலின்மீது குவளை மலர் இருந்தது என்பது கருத்து,

செவிலிகூறல்.

105. அழகிசக்கதேவிக்கனந்தம்பணியால்
விழையுங்குமாரவெட்டவேந்தே-பழகுமொழி
கூந்தல்களமல்குலகடுசொன்னேன்கனகம்
ஏந்துதனமாந்தளிர்மெய்யாம்.

இ-ள். விழையும் - யாவரும் விரும்புகின்ற, குமார எட்டவேந்தே—, அழகி-அழகியாகிய இந்தப் பெண்ணினது, சக்கு-கண், ஏவு-அம்பை நிகர்க்கும், பழகுமொழி-பழகியசொல், இக்கு-கரும்பினிரசத்தை நிகர்க்கும், கூந்தல்-கூந்தலானது, அல்-இரவை நிகர்க்கும், களம்-கண்டம், நந்தம்-சங்கைநிகர்க்கும், அல்குல்-நிதம்பம், பணி-பாம்பின்படத்தை நிகர்க்கும், அகடு-வயிறு, ஆல்-ஆலிலையைநிகர்க்கும், ஏந்துதனம்-ஏந்துதனங்கள், கனகம்-பொன்மலையை நிகர்க்கும், மெய்-உடம்பு, மாந்தளிர் ஆம்-மாந்தளிரைநிகர்க்கும், சொன்னேன் - சொல்லினேன், (ஆதலால் இவளைவந்துசேர்வாய்), எ-று.

ஆம் என்பதனை ஏவுமுதலியவற்றோடுங் கூட்டுக.

வறுமையை யறிவித்தல்.

106. ஏகாம்பரரிடப்பேரில்லாததாழ்வுசொல்லப்
போகாதுவேறுபுகலில்லையே-பாகார்ந்த
சந்தமதுரத்தமிழுக்ககத்யனென
வந்தவெங்கடேசுரெட்டமா

இ-ள். பாகு ஆர்ந்த-பாகின்சுவைநிரம்பிய, சந்தம் - பலசந்தங்களையுடைய, மதுரத்தமிழுக்கு-இனியதமிழுக்கு, அகத்யன் எனவந்த-அகத்தியனென்னும்படி தோன்றின, வெங்கடேசுரெட்டமா—, ஏகாம்பரர்-ஏகாம்பரநாதரது, இடப்பேர்-இடத்தின்பேர், இல்லாததாழ்வு - இல்லாதகுறையை, சொல்லப்போகாது-சொல்லொண்ணாது, வேறுபுகல் இல்லை-வேறுபுகலிடமில்லை. எ-று.

ஏகாம்பரர் இடப்பேர் - கஞ்சி. கஞ்சியில்லாத குறையைச்சொல்லவொண்ணாதென்பது கருத்து.

இதுவுமது.

107. திரைக்கலைக்குத்தையலென்றேயிருபத்தேழென்
னரைக்கலைக்குத்தையலனேகம்-உரைக்கவொண்ணா
தந்தம்ப்ரசண்டாவரசர்சிரோரத்னமென
வந்தவெங்கடேசுரெட்டமா.

இ-ள். ப்ரசண்டா-பிரசண்டனே, அரசர்-அரசர்களுக்கு,சிரோரத்நம் என-சிரோமணியென்னும்படி, வந்த-அவதரித்த, வெங்கடேசுரெட்டமா-

திரைக்கலைக்கு-கடலிற்றோன்றிய கலைக்கு, தையல் என்பது-தையலென்பது, இருபத்தேழு-இருபத்தேழெயாகும், என் அரை கலைக்கு-என் அரையிலுள்ள கலைக்கு; தையல் அனேகம்-தையல் அனேகமாகும்;அந்தம்உரைக்கவொண்ணது-முடிவுசொல்லவொண்ணது. எ-று.

திரைக்கலை - கடலிற்றோன்றிய சந்திரன், (இவனுக்கு) தையல் இருபத்தேழு - மனைவியர் இருபத்தேழுபேர் (நக்ஷத்ரங்கள்). அரைக்கலை-அரையிலுடுத்தஆடை, தையல் அனேகம்-தைத்தல்அனேகம்(மிகவும் கிழிந்து பலவிடங்களில் தைக்கப்பட்டது).

செவிலி தலைவியைத் தேற்றல்.

108. சென்றலந்தார்சேர்முத்திருளப்பபூபதிபான்
மன்றலந்தார்வாங்கிவருமளவும்-குன்றமுலை
ஏழாயிரம்பண்ணையில்லுடம்புவாடாதே
ஏழாயிரம்பண்ணையில்.

இ-ள். குன்றம் முலை ஏழாய்-மலைபோலுந் தனங்களையுடைய பெண்ணே, அலந்தார்-(வறுமையால்) வருந்தினவர், சேர்-அடைகின்ற,முத்திருளப்ப பூபதிபால்-முத்திருளப்ப பூபதியினிடத்தில், சென்று-போய், மன்றல்-பரிமளமுள்ள, அம் அழகிய, தார் - மாலையை, வாங்கிவரும் அளவும்-வாங்கிவரும் வரையும், அம்பு அண்ணையில் - (மன்மதனது) அம்புகள்படுதலால், உடம்பு வாடாதே-உடல் மெலியாமல்,ஏழாயிரம் பண்ணையில்-ஏழாயிரம் பண்ணையென்னும் ஊரில், (இரு-இருப்பாயாக). எ-று.

தாயிரங்கல்.

109. கூன்கலைநிலாவின்குளிர்ச்சிபொறுக்காதுகல்வி
மான்கலையில்லாமன்மருளுமா-தேன்கலையச்
சந்தநறுங்காவின்மந்திதாவுமிளசைநகர்
வந்தவெங்கடேசுரெட்டமா.

இ-ள். மந்தி-குரங்குகள், மாதேன் கலைய - பெரிய தேன்கூண்டுகள் கலையும்படி, சந்தம்-அழகிய, நறு-வாசனையுள்ள, காவில் - சோலையில், தாவும்-குதிக்கின்ற, இளசைநகர்-இளசைநகரில், வந்த - அவதரித்த, வெங்கடேசுரெட்டமா—, கல்விமான் கல்விமிகுந்த என்பெண்ணனவள், கூன்கலை நிலாவின் - வளைவாகிய பிறைச்சந்திரன் பொழிகின்ற நிலவினது, குளிர்ச்சி பொறுக்காது-குளிர்ச்சியைத் தாங்காமல், கலை இல்லாமல் மருளும்-ஆடையில்லாமல் மயங்குகின்றாள்; (இவளை நீவந்து தழுவவேண்டும்) எ-று.

செவிலிகூறல்.

110. நீகாவிதுராநெருப்பாமிவட்குவிலக்
காகாவிதுராகதம்புரிவார்-கன்னியர்கள்

வாகாவிதுராமராமரதிமாரவச்ர
தேகாவிதுராதிருமலைவேலேந்திரனே.

இ-ள். ரதிமார-ரதிதேவியையுடைய மன்மதனை நிகர்த்தவனே, வச்ர தேகா-வஜ்ரசரீரத்தையுடையவனே, விதுரா-விதுரனுக்கு நிகரானவனே, திருமலைவேலேந்திரனே—, ரா-இரவில், விது-சந்திரன், இவட்கு-இவளுக்கு, நெருப்பு ஆம்-நெருப்பை நிகர்க்கும், விலக்கு - இதனை விலக்கு, கன்னியர்கள்-பெண்கள், ஆகாவி-ஆகாத மரணத்துக்கேதுவாகிய, துராகதம் புரிவார்-துராக்ருதத்தைச் செய்வார்கள் (துன்பம் செய்வார்கள்), நீ கா - நீ காக்கவேண்டும். எ-று.

111 அங்காவித்தாராவணைவதுகண்டின்பமொரு
பங்காவித்தாராபதியேயென்றேங்குவளோ
துங்காவித்தாராதுணைமுலையாராசைகொள்ளும்
செங்காவித்தாராதிருமலைவேலேந்திரனே.

இதன்பொருள் நன்கு புலப்படவில்லை.

நாகூர்முத்துப் புலவர்பாடல்.

---

1. தனதனுகநடாத்தியடர்ந்தபூச் சரத்தைவாங்கித் தனத்திற்றொடுக்கமத, தனதனுகத வில்லான்மின் போன்மெய் பசந்தசந்துசந்தேசொலென்றாண்மினாள், தனதனுகணத் தொம்மெனப்பை யினிர்த்தம்புரிந்த சரணசரோருகா, தனதனுகவளரும் ப்ரதாபவித்தாரனே வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தனது-தன்னுடைய, அல்-இருளாகிய, நாகம்-யானையை,நடாத்தி-நடத்திவந்து, அடர்ந்த-நெருங்கிய, பூ-மலராகிய,சரத்தைவாங்கி-பாணத்தையெடுத்து, தனத்தில்தொடுக்க-தனத்தின்மேல் பிரயோகிக்க, மதனது-மன்மதனுடைய, அனுகதம்-வரப்போவதாகிய, வில்லால்-கரும்புவில்லினால், மின்போல் மெய் - மின்னற்கொடிபோன்ற சரீரமானது, பசந்து-பசலைநிறமாகி, அசந்து-அயர்ந்து, மினாள்-என் பெண்ணானவள், சந்துசொல் என்றாள்-என்னைத் தூதுசொல் என்றாள், தன தனு - தன தனு, கண- கண, தொம்என-தொம்மென்று, பையில்-(காளிங்கன் என்னும் பாம்பின்) படத்தின்மீது, நிர்த்தம்புரிந்த-நடனம் செய்த, சரண சரோருகா-பாததாமரையை யுடையவனே, தனதன் ஆக-குபேரனுக்கு நிகராக, வளரும்விருத்தியடையாநின்ற, பிரதாப வித்தாரனே - விஸ்தாரமான செல்வத்தை யுடையவனே, வெங்கடேச ரெட்டேந்த்ரனே.

பாம்பின் படத்தின்மீது நிர்த்தம்செய்தது கிருஷ்ணவதாரத்தில்.

தாயிரங்கல்.

2. கனகனங்கம் பிளந்தளிர் கொந்தள கங்களந்திருக் காயமி ன்மேன்மற்ற, கனகனங்கம் பிளந்தலைகண்டுகொங் கைக்குளேவின ன் சேராத தென்கொலோ, கனகனங்கம் பளகோத்திராவருட் கா தலன்றனைக் காத்தடிமைகொண்டு, கனகனங்கம் பிளந்நரசிங்க காகுத்தாவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். கனம் கனம்-செறிவாகிய மேகமும், கம்பு-சங்கும், இளந்தளிர்-இளந்தளிரும் போன்ற, கொந்து அளகம்-பூங்கொத்துக்களை யணிந்த கூந் தலையும், களம்-கழுத்தையும், காயம்-சரீரத்தையும்உடைய, மின்மேல்-மின் கொடிபோல்வாளாகிய என் பெண்ணின்மீது, அகன் அகன் - நெஞ்சத் தைப் பிறப்பிடமாகிய வுடையவனாகிய மன்மதன், அங்கு-அவ்விடத்தில், அம்பு-தன்பாணத்தை, இளந்தலைகண்டு- (இவளது) இளக்காரத்தைப்பார் த்து கொங்கைக்குள்-தனத்தின்மீது, எவினன் - பிரயோகித்தான்,சேரா தது-நீவந்து இவளைக்கூடாதிருத்தற்குக் காரணம், என் கொல்-யாதோ, கனம் கனம்-விஸ்தாரமான சீர்மையையுடைய, கம்பள கோத்திரா-கம்பள கோத்திரத்தில் அவதரித்தவனே, அருள்-கிருபையுள்ள, காதலன்தன்னை-பாலகனாகிய பிரகலாதனை, காத்துஅடிமைகொண்டு-ரக்ஷித்துஆட்கொண்டு, கனகன்-இரணியனுடைய, அங்கம் - சரீரத்தை, பிளந்த-கிழித்த, நரசிங்க- நரசிங்கனே, காகுத்தா - காகுத்தனே, வெங்கடேசு ரெட்டேந்த்ரனே, எ-று.

வெறிவிலக்கல்.

3. கடகரிக்குமதனனவர்செயுங் காயந்தேர்ந்தன ரோவளவன் னைமார், கடகரிக்குமரிவாழவேலன்முன் கட்டினரதிலென்னுமொன் னார்க்குவி, கடகரிக்குரு விக்கன்றுகண்ணருள் கர்த்தர்தாளிணையை த்துதிநேமகா, கடகரிக்குநிருபா விளசைவாழ் கருணைமால் வெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள்.கடகர்-கைவளையையணிந்தமாதர்,இக்கு-கரும்புவில்லையுடைய, மதன் ஆனவர்-மன்மதனானவன், செய்யும்-செய்கின்ற; காயம்-காயத்தை, தேர்ந்தனரோ-தெளிந்தார்களோ,வள-வீட்டிலுள்ள,அன்னைமார்கள்-தாய் மார்கள், தகர்-ஆட்டை, இ-இந்த, குமரிவாழ-பெண்உயிர்வாழும்பொருட் டு; வேலன்முன்-பூசாரிக்கு எதிரில்; கட்டினர்-கட்டிவைத்தார்கள்,அதில்-அதனால்; என் ஆம்-என்னபயனுண்டாகும்; ஒன்னார்க்குவிகட-பகைவர்க்கு மாறுபட்டவனே; கரிக்குருவிக்கு-கரிக்குருவிக்கு; அன்று-அந்நாளில்;கண் அருள்-கண்ணருள் செய்த; கர்த்தர்-கர்த்தராகிய சிவபெருமானது; தாள் இணையை - இரண்டு திருவடிகளையும்; துதி-துதிக்கிற; நேம - நியமத்தை யுடையவனே; கா-நீகாத்தருளவேண்டும்; கடம் கரிக்கு-மதத்தையுடைய

யானைப்படைக்கு; நிருபா-தலைவனே; இளசைவாழ் - இளசைநகரில் வாழ்கின்ற; கருணை-கிருபையும்; மால்-பெருமையுமுடைய; வெங்கடேசு ரெட்டேந்த்ரனே; எ-று.

கரிக்குருவிக்கு அருள்செய்தசரித்திரத்தை திருவிளையாடற்புராணத்தில் காண்க.

செவிலியிரங்கல்.

4. தந்தப்பாதுகடீர்மருங்கம்பிரு தாரையாமிந்த மாதைமின்னார்சந்தம், தந்தப்பாதுகனற்றுவரம்புவே டானொளிக்கச் சரமுல்லை தாசர, தந்தப்பாதுகவிப்பட்டம்வாலியைத் தாக்கியேயவன்றம்பிக்குத் தந்துதந், தந்தப்பாதுகை தம்பிக்குநல்கிய தாருவேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அப்பா-அப்பா, துகள்தீர்-குற்றமற்ற; மருங்கு-இடையானது; தந்து-நூலிழையும்; இருதாரை-இருகண்களும்; அம்புஆம்-அம்பாகும்;இந்த மாதை-இந்தப்பெண்ணை; மின்னார்-மாதர்கள்; சந்தம் தந்து அப்பாது-சந்தனத்தைக்கொடுத்துப் பூசாமல்; கனற்றுவர் - வெதும்பச் செய்கிறார்கள்; அம்புவேள் தான் ஒளிக்க - புஷ்பபாணத்தையுடைய மன்மதன் ஒளித்துக்கொள்ளும்படி; சரமுல்லை-முல்லைமாலையை; தா-கொடுத்தருள்; சரதம்தப்பாது-சத்தியம்தவறாமல்; வாலியைதாக்கி-வாலியைப் போரிட்டுவென்று; அவன்தம்பிக்கு-அவன்தம்பியாகிய சுக்ரீவனுக்கு; கவிபட்டம்-வாநரராஜபட்டத்தை; தந்து-கொடுத்து; தம்-உமது; தந்தப்பாதுகை - தந்தப்பாதுகையை; தம்பிக்கு நல்கிய-தம்பியாகிய பரதனுக்குக்கொடுத்த; தாருவே-கற்பகத்தருவை நிகர்த்தவனே; வெங்கடேசு ரெட்டேந்த்ரனே; எ-று.

பாதுகை-திருவடிநிலை; இதனைத் தம்பிக்குக் கொடுத்தது ஸ்ரீராமாவதாரத்தில்.

தாயிரங்கல்.

5. கனதனந்தனதாவலினாலந்தக் கனிக்குமாமலை யாமிடைமின்னிலும், சினதனந்தனமாற்கூறரிதரி தென்னுமல்குற்றிருவையணைகுவாய், மனதந்தனன மாடைதமிழ்பகர் வாணர்க்கீந்துமகிழும்பிரதாயனே, தன. னந்தன வென்றுமேவோரு டங்கிவாழ்வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அந்தக் கன்னிக்கு - அந்தப்பெண்ணுக்கு; தனது ஆவலினால்-தன்விருப்பத்தால்; கனதனம்-பாரமாகிய தனங்கள்; மாமலை ஆம்-பெரியமலைபோலும்; இடை-இடையானது; மின்னிலும் - மின்னற் கொடியினும்; சின்னது-சிறியதாகும்; அனந்தன்-ஆதிசேஷனும்; நம்மால்கூறு - நம்மால் சொல்லப்படுதல்; அரிது என்னும்-அரிதென்று சொல்லும்படியான; அல்குல்-நிதம்பத்தையுடைய; திருவை அணைகுவாய் - திருமகள்போன்ற என்பெண்ணைத் தழுவுவாயாக; மனது அல்நந்து - மனோதுக்கம் கெடுதற்

கேதுவாகிய, அன்னம்-சோற்றையும், ஆடை-வஸ்திரத்தையும்,தமிழ்பகர்-தமிழ்ப்பாடல்களைப்பாடுகிற, வாணர்க்கு-கவிவாணருக்கு, ஈந்து-கொடுத்து, மகிழும்-சந்தோஷிக்கிற, ப்ரதாபனே - கீர்த்தியையுடையவனே, தனதனந் தன என்று-தனதனந் தனஎன்று, ஆடுவோர் - நடநஞ்செய்வோராகிய சிவபெருமானது, அருள் தங்கிவாழ்-கிருபை குடியிருந்து வாழ்கின்ற வெங்கடேசு ரெட்டேந்த்ரனே. எ—று.

தலைவியிரங்கல்.

6. இந்தக்காவனங்கற்கோாகவிகையா விருந்துகாந்துதியானென்னசெய்குவேன், பந்தக்காவன மம்மைகண்டப்பியெப் படியங்கேகுவன் பாங்கியென்முள்கலி, சிந்தக்காவன சத்திரசோமதியாகசற்குண பாகமனோகரா, சந்தக்காவனஞ்சூழிளசைப்பதித் தானமால் வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அக்கா-தமக்கையே, இந்து-சந்திரன், அநங்கற்கு-மன்மதனுக்கு, ஓர்-ஒப்பற்ற, கவிகைஆய்இருந்து-குடையாயிருந்து,காந்துத - எரிக்கின்றது, யான் என்னசெய்குவேன்- நான் என்னசெய்வேன், பந்தம்-காவல்கட்டுக்காவலாகிய, நம்அம்மை கண்தப்பி-நம்தாயினதுகண்ணுக்குத்தப்பி; அங்கு-அவ்விடத்துக்கு, எப்படிஏகுவன் - எப்படிபோவேன், பாங்கி-தோழீ, என்முள்-என்றுசொன்னாள், கலிசிந்த - இவளது வறுமை கெடும்படி, கா-காத்தருள், அன்னசத்திர சோம-அன்னசத்திரமமைத்துவைத்தசந்திரனே, தியாக-கொடையாளனே, சற்குணபாகே-நற்குணத்தால் பரிபாகமடைந்தவனே, மனோகரா-மனக்களிப்பைத்தருபவனே, சந்தம் காவனம் சூழ்-சந்தனச்சோலைசூழ்ந்த, இளசைப்பதி - இளசை நகரத்தை, தானம்-இருப்பிடமாகவுடைய, மால்-பெருமையமைந்த, வெங்கடேசு ரெட்டேந்த்ரனே. எ-று.

செவிலிகூறல்.

7. இருபத்தந்தமெனும்பொற் பயோதர மென்னசொல்லரதிக்கெண்மடங்கிவள், சொருபந்தந்தச் சிவிகையில்வந்தனள் சொந்தமாகவுவந்தணைவாய்சுடர், தருபந்தந்தமனியவெற்புப் பெற்றித்தாய்த்துலங்கித்தனை நம்புவோர்க்கெலாம், நிருபந்தந்தமணதின்படிக்கருணேசனேவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அந்தம் என்னும்-அழகாயிருக்கின்றனஎன்றுசொல்லப்படுகிற, பொன்பயோதரம்-தேமல்படர்ந்த தனங்கள், இருபந்து - இரண்டுபந்துகளேயாம், என்னசொல்ல-(அவற்றின் ஏற்றத்தை) என்னென்றுசொல்லட்டும் இவள்சொரூபம்-இந்தப்பெண்ணினதுஉருவம், ரதிக்கு-ரதிதேவிக்கு, எண்மடங்கு - (அழகால்) எட்டுப்பங்கு கொண்டிருப்பது, தந்தச் சிவிகை

யில் வந்தனள்-தந்தப்பல்லக்கி லேறிவந்தாள், சொந்தமாக-உமது சொந்தக்காரியாக, உவந்து - சந்தோஷித்து, அணைவாய் தழுவுவாய், சுடர்தரு பந்தம்-ஒளியைத்தருகிறபந்தம், தமனியவெற்பு - பொன்மலை இவற்றின், பெற்றித்தாய் - தன்மையை யுடைத்தாய், தனை நம்புவோர்க்கு எல்லாம்-தன்னை நம்புவோர்களுக்கெல்லாம், தம்தம்-தங்கள் தங்களுடைய,மனதின்படிக்கு - மனவிருப்பத்தின்படி, நிருபம் அருள் - நிருபங்கொடுத்தருளின; நேசனே-அன்புடையானே; வெங்கடேசு ரெட்டேந்திரனே. எ-று.

பந்தம்-தீவட்டி.

செவிலிகூறல்.

8. தரகலாதனங்கன் சமர்க்கோலஞ்சமைந்து பாணமெய்தான் பூவலவர, கரகலாதனகும்பம் பொறுக்குமாகன்னியே யென்னைக்கண் பாரென்ருள்புல, வரகலாதனன்மார்க்கசிலாக்கிய மாவசந்தியாக வரோதயா, பிரகலாதனன்புள்ளத்திருந்தருள் பெருக்குமால்வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தரு அகலாது - தருக்கள்நெருங்கிய மலர்ச்சோலையை நீங்காதிருந்து, அனங்கன்-மன்மதன்; சமர்க்கோலம்சமைந்து-யுத்தவேஷ மமையப்பெற்று, பாணம் எய்தான்-பாணம்பிரயோகித்தான்; பூஅல்ல-(அந்தப் பாணங்கள்) மலர்களல்ல; அரகர-ஹரஹர; கல்லா-கற்களா; தனகும்பம் பொறுக்குமா-தனங்களாகியகுடங்கள் தாங்குமோ,கன்னியே-பெண்ணே, என்னைக்கண்பார் என்ருள்-என்னைக் கண்பார்த்தருளவேண்டுமென்ருள்; புல்லவரகல்லாத-அணைக்க வரக்கல்லாத, நல்மார்க்க-நன்னெறியையுடையவனே, சிலாக்கிய-மேன்மையுடையவனே; மாவசந்த-அழகியமன்மதனே தியாக-கொடையாளனே, வரோதயா-வரத்தினுல் அவதரித்தவனே;பிரகலாதனன்-பிரகலாதனனுடைய; அன்பு உள்ளத்து இருந்து - அன்புள்ள மனத்திலிருந்து; அருள்பெருக்கும் - கிருபையைப் பெருகச்செய்த, மால்-பெரிய; வெங்கடேசு ரெட்டேந்திரனே. எ-று.

செவிலிகூறல்.

9. மாதமந்திரணம்போலிருந்ததை மலைக்கொப்பாக வளர்த்தமாரன்கைச், சூதமந்திரவோருகமாமதி சோர்ந்துதானிந்தவேந்திழைவாடுமோ, போதமந்திரசக்கனியைக்கவ்விப் பொழிலிற்ருவும் புகழ்க்கழுகாசல, வேதமந்திரமெய்க்குகனைத்தொழும் வேங்கடேசுர வெட்டமதீரனே.

இ-ள். மாதமம்-பெரியஇருள்; திரணம்போல் இருந்ததை - துரும்புபோலிருந்ததை; மாரன்கைசூதம்-மன்மதன் கையிலுள்ள மாமலர்; அந்த இரவு-அந்த இரவானது, ஓர்உகம்ஆம் - ஒருயுகமாகச்செய்யும்; (அதனுல்)

இந்த எந்திழை-இந்தப்பெண்ணானவள், மதிசோர்ந்து-அறிவு மயங்கி, வாடுமோ-வாடுவாளோ, போத-மிகுதியாக, மந்தி-குரங்குகள், ரசம் கனியை கவ்வி-சுவையுள்ள பழங்களைக் கவ்விக்கொண்டு, பொழிலில் - சோலைகளில், தாவும்-தாண்டுகின்ற, புகழ்-கீர்த்தியையுடைய, கழுகாசலம்-கழுகாசலத்திலெழுந்தருளியிருக்கிற, வேதமந்திரம்மெய்-வேதமந்திரப் பொருளாகிய, குகனை-முருகக்கடவுளை, தொழும் - வணங்குகின்ற, வேங்கடேசு எட்டம-வேங்கடேசுர எட்டமனாகிய, தீரனே-தைரியசாலியே. எ-று.

தலைவிகூற்று.

10. வருதுகட்டுமுட்டெல்லாங்கடந்துபூ வாளிவேள்கயவாழி முரசம, திருதுகட்டுவசனமலமலைத் தென்றலாங்கொடுந் தேரைநடாத்தியே, பொருதுகடடுவதனத்திற்சாடவே பூத்தொடுத்தனன் சந்திரகாவிடால், விருதுகட்டுமதிபா விளசைவாழ் வெங்கடேசுரெட்டேந்த்ரவசிரனே.

இ-ள். பூவாளி-புஷ்பபாணம், கட்டுமுட்டெல்லாம் கடந்து-கட்டுமுட்டெல்லாந்தாண்டி, வருவது-வருகின்றது, கயம் ஆழி - ஆழமாகிய கடலென்கிற, வேள்முரசம்-மன்மதனது பேரிகை, அதிருது-அதிராநின்றது, கட்டுவசனம் அல்ல-கட்டுவார்த்தையல்ல, மலை-பொதியமலையிற்பிறந்த, தென்றல் ஆம்-தென்றற்காற்றாகிய, கொடுதேரை நடாத்தி - கொடிய ரதத்தை நடாத்தி, பொருது - போர்செய்து, கண் துவதனத்தில் சாட - கண்களையுடைய இரண்டு தனங்களில் தாக்கும்படி, பூ தொடுத்தனன்-புஷ்பபாணங்களைப் பிரயோகித்தான். சந்திரகாவி - சந்திரகாவிச் சாயந்தோய்த்த, டால்-டால் என்கிற, விருது கட்டும் - விருது கட்டிக்கொண்ட, அதிபா-தலைவனே, இளசைவாழ்-இளசைநகரத்தில்வாழ்கின்ற, வெங்கடேசுரெட்டேந்த்ர - வெங்கடேசுரெட்டேந்திரனென்னும், வசீரனே - மந்திரியே. எ-று.

செவிலியிரங்கல்.

11. தந்துகந்துகந்தாகந்தணிக்குநீர்த் தடமருங்குதனமல்குற்றையலே, முந்துகந்துகந்தாகணப்போழ்திலுன் மோகத்தாதுமொழிவனென்றேவந்தேன், வந்துகந்துகந்தாகழுகாசல வாசகாவெனவாழ்த்துமுன்பாகட்டுங், கந்துகந்துகநதாகப்புரட்டுங்கடாசலாவெங்கம்டசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தந்து-நூலிழையும், கந்துகம் - பந்தும், தாகம் தணிக்கும் நீர் தடம்-தாகத்தை யடக்குகின்ற நீரையுடைய தடாகமும், ஆகிய- இவை போன்ற, மருங்கு-இடையையும்; தனம்-ஸ்தனங்களையும்,அல்குல்-நிதம்பத்தையுமுடைய, தையல்-என்பெண்ணானவள், முந்து கந்து - முற்பட்டு சந்தோஷிக்க, கந்து ஆ-ஆதாரமாக, கணப்போழ்தில்-க்ஷணகாலத்தில், உன்

மோகம்-உன் விரகத்தைப்பற்றி, தூதுமொழிவன் என்று தூதுசொல்வே னென்று, வந்தேன்-வந்தேன், வந்து-வந்து, கந்து - எங்களுக்குப் பற்றுக் கோடாகிய; கந்தா-கந்தனே, கழுகாசலவாசா - கழுகாசலத்தில் வசிப்பவ னே, கா என-காத்தருளென்று, வாழ்த்தும்-வாழ்த்துகின்ற, முன்பா-முத ல்வனே, கட்டும்-கட்டப்படுகிற, கந்து-கட்டுத்தறியானது, கந்து கந்தாக-துணிக்கையாக, புரட்டும் - புரட்டுகின்ற, கடாசலா - யானைகளையுடையவ னே, வேங்கடேசுரெட்டேந்த்ரனே. எ-று.

தலைவி யிரங்கல்.

12. நம்பரக்கரையானனராகிய நாதர்முன்புநமைவேண்டிச்செ ல்கவென், றும்பரக்கரையாயனுப்பத்தன துருவிலாமதன் யுத்தத் துக்கென்செய்வேன், அம்பரக்கரையானதிற்பாளய மன்றிறங்கியட் ர்ந்திலங்காபுரி, வம்பரக்கரையாசுகத் தால்வென்ற மாதவாவெங்க டேசுரெட்டேந்த்ரனே

இ-ள். நம்பர்-நம்பரும், அக்கர் - அக்குமாலையை யுடையவரும், ஐ ஆ னனர் ஆகிய-ஐந்து முகங்களையுடையவருமாகிய, நாதர் முன்பு - சிவபெரு மானுக்கெதிரில், நம்மைவேண்டி-எங்கள்பொருட்டு, செல்க என்று-போ கக்கடவையென்று, உம்பர்-தேவர்கள், அக்கரையாய்அனுப்ப-அக்கரையா யனுப்பப்போய், தனது உரு இல்லா - தனது வடிவம் இல்லாது திரும்பி வந்த, மதன்-மன்மதனது, யுத்தத்துக்கு-போருக்கு, என்செய்வேன்-யாது செய்யக்கடவேன், அம்பரம்-கடலின், கரை ஆனதில்-கரையில், பாளயம்-சேனை, அன்று இறங்கி-அந்நாளில் தங்கி, இலங்காபுரி - இலங்கைப்பட்ட ணத்திலுள்ள; வம்பு-வம்புசெய்கிற, அரக்கரை-ராட்சஸரை, ஆசுகத்தால்-பாணத்தால்; வென்ற-ஜயித்த, மாதவா-மாதவனே, வெங்கடேசுரெட்டே ந்த்ரனே. எ-று.

தலைவிகூற்று.

13. அத்தன்கண்ணுக்குத்தோற்றூன்றன்மாதலாலரிபிர்ம்மாதி க்குந்தோற்றூனவன்மகா, எத்தன்மாமனையென்றுந் தமையனென் றேசொல்வோன்கணை யெய்யாமலெய்கிறான், கத்தன்பூவுலகேழை யுமேயொரு கவிகைகீழலிற் காத்தருளும்பரி, சுத்தமன்னுங்குமார வெட்டேந்திரன் சோதராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அத்தன்-சிவபெருமானது, கண்ணுக்கு-நெருப்புக்கண்ணுக்கு, தோற்றூன்-தோற்றவனாகிய மன்மதன், தன் மாது அல்லால்-தன் மனைவி யாகிய ரதிதேவிக்கல்லாமல், அரிபிரமாதிக்கும்-விஷ்ணுபிரமா முதலான வர்களுக்கும், தோற்றூன்-காணப்படான், அவன் - அவன், மகா எத்தன்-பெரிய தந்திரக்காரன், மாமனை-லக்ஷ்மீநாதனாகிய விஷ்ணுவை, என்றும்-எப்பொழுதும், தம் ஐயன் என்றே சொல்வோன் - தம் தந்தையென்றே சொல்வோன், (அவன்) கணை-பாணங்களை, எய்யாமல்-இளைக்காமல், எய் கிறான்-என்மீது எய்யாநின்றான், கர்த்தன்-கர்த்தனும், பூ உலகு ஏழையும்-

ஏழுலகங்களையும், ஒருகவிகை நீழலில்-ஒருகுடை நீழலில் வைத்து, காத்தருளும்-ரக்ஷித்தருளுகின்ற, பரிசுத்தன்-பரிசுத்தன், மன்னும்-நிலைபெற்ற, குமார ஏட்டேந்திரன் - குமார எட்டேந்திரன், (அவனுக்கு) சோதரா-சகோதரனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே, எ-று.

தோழிகூறல்.

14. உபையராசியை யூரும்பிரான்வள ரோங்கனேருந்தனத்தாளுனைமகிழ்ந், துபையராசிய மாய்க்கூட்டிவாவென்று சொல்லியென்னையுன்பால்விடுத்தாள்பொன்னூர், சபையராசிற்சொரூபாவென்றீசரைத் தன்கையாற்றொழுதுங்கன்கைவீடணற், சபையராசியருள்வல்லவாபுக ழாகராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். உபையராசியை-இரண்டாவதுராசியாகியஇடபத்தை, ஊரும்-ஏறிநடத்துகின்ற, பிரான்-சிவபெருமான், வளர்-வாழ்கின்ற, ஓங்கல்-மலையை, நேரும்-நிகர்க்கின்ற, தனத்தாள்-ஸ்தனங்களை யுடையவள், உன்னை-உன்னை, மகிழ்ந்து-மனமகிழ்ந்து, பைய-மெல்லென, ராசியமாய் - ரகசியமாய், கூட்டிவா என்று சொல்லி-அழைத்துவாவென்றுசொல்லி, என்னை-என்னை, உன்பால் விடுத்தாள் உன்னிடத்திற்கு அனுப்பினாள், பொன்னூர் சபை-பொற்சபையை யுடைய, அரா-ஹரனே, சிற்சொரூபா-ஞானசொரூபனே, என்று-என்று, ஈசரை-சிவபெருமானை, தன்கையால் தொழும்-தன்கையினால் அஞ்சலிக்கின்ற, துங்கன் - மேலோனாகிய, கை-கையினால், வீடணற்கு-விபீஷணனுக்கு, அபையராசி - அபயத்தை, அருள் - கிருபைசெய்த, வல்லவா-வல்லவனே, புகழ்ஆகரா-கீர்த்திக்குப் பிறப்பிடமாயுள்ளவனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே, எ-று.

செவிலிகூறல்.

15. சங்கதாதாளங்கால்கமுகதா தன்கழுத்தினை யென்றாட்குன்றாரின்று, துங்கதாதரத்தாமதஞ் செய்யிலத் தோகைதேகத்தைமாரன்வருத்துவான், அங்கதாதரநீதூது செல்லென்ற வாரியாரணவீர்யப்ரதாபனே, வெங்கதாதர வீமாசெயதரா வெங்கடேசுர வெட்டமபூபனே.

இ-ள். தன்கழுத்து-தன்கழுத்துக்கு, இணை-சமானம், சங்கதா-சங்கா, தாளம்கால்-முத்துக்களையீனுகின்ற, கமுகதா-கமுகா, என்றாட்கு-என்று சொல்லப்பட்டவளுக்கு, உன்தார்-உன்மாலையை, இன்று - இப்பொழுது, துங்க-உயர்ந்தோனே, தா - கொடு, தரகொடுத்தற்கு, தாமதம் செய்யில்-தாமதம்செய்தால், அத்தோகை-அந்தப்பெண்ணின், தேகத்தை-சரீரத்தை மாரன்-மன்மதன், வருத்துவான்-உபத்திரவஞ்செய்வான், அங்கு-அவ்விடத்து, அது ஆதாரம்-அதுஅவளுக்கு உன்மீதுள்ள விருப்பம், நீ தூதுசெல் என்ற-நீ தூதுபோவென்ற பாண்டவர்சொன்ன, ஆரியா-ஆரியனே, ரண

வீரிய பிரதாபனே-ரணக்களத்தில்வீரத்தன்மையைச் செலுத்துகின்றபரா க்கிரமத்தையுடையவனே, வெம்-கொடிய, கதாதர-கதையைத்தரித்தவனு கிய, வீம-வீமனே, ஜெயதரா-ஜெயங்கொண்டவனே, வெங்கடேசுர எட் டம-வெங்கடேசுர எட்டமன் என்கிற, பூபனே-பூபாலகனே, எ-று.

செவிலிகூறல்.

16 பூவலாரைமுதலானகற்பங்கள் புரிந்துநிட்டைவசித்திருந் தாலுமென், ஆதவாரையும்விட்டுவிடாகந்த வரிப்பிர்ம்மாதிகளானு லுந்தானென்ன, மாவலாரைமலரதினுலெய்யின்மங்கையுள்ளமயங்கா திருக்குமா, மேவலாரையடக்கிச்செயம்பெற்ற விசயனேவெங்கடே சுரெட்டேந்த்ரனே.

இ-ள். பூ-உலகத்தில், வல்லாரைமுதலான கற்பங்கள் - வல்லாரை முதலான கற்பங்களை, புரிந்து-விரும்பியுண்டு, நிட்டை - நிஷ்டையில்,வசி த்திருந்தாலும்-வீற்றிருந்தாலும், என்-என்னபயன்,ஆவல் - ஆசையானது, ஆரையும்-எவரையும், விட்டுவிடாது - விட்டுநீங்காது, அந்த அரிபிர்மாதி கள் ஆனாலும் தான் என்ன - அந்த விஷ்ணு பிரமன் முதலியோரா யிருந் தாலுமென்ன, மாவல்லாரை-மிகவும்வல்லவராகிய சிவபெருமானுரை,மல ரதினுல்-புஷ்பத்தினுல், எய்யின்-மன்மதன்!எய்து மயங்கச்செய்வானுனுல், மங்கை உள்ளம்-இந்தப்பெண்ணின் மனம், மயங்காது இருக்குமா-மயக்க மடையாமலிருக்குமா, மேவலாரை அடக்கி-பகைவரையடக்கி, ஜயம்பெ ற்ற-ஜயமடைந்த, விசயனே-வெற்றியாளனே, வெங்கடேசுரெட்டேந்த்ர னே, எ-று.

தாயிரங்கல்.

17. அஞ்சக்கஞ்சனங்கைபாலகனந்தசோகமேவவடாவிடுகுமு, தஞ்சக்கஞ்சனமெல்லாங்கரைத்திரு தனத்தைநீலத்தடவரையாக்க மான், மிஞ்சக்கஞ்சனந்தாழக்குலுக்குமெய்ம் மின்னைமேவிவிரகந்த ணித்திடாய், வஞ்சக்கஞ்சனகத்தைத்துணித்தவர வாசவாவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அஞ்ச-பயப்படும்படி, கஞ்சாங்கை - பூகமளாகிய லக்ஷ்மிக்கு, பாலகன் - புதல்வனுகிய மன்மதன், அந்த சோகம்மேக - அந்த விரகதுக் கம் உண்டாம்படி, அடரவிடு - நெருங்கவிடுகின்ற, குமுதம் - குமுதமலரா னது, சக்கு - கண்ணிலுள்ள, அஞ்சநம் எல்லாம் கரைத்து - அஞ்சன முழுதையுங் கரையப்பண்ணி, இருதனத்தை - இரண்டு ஸ்தனங்களையும், தடம் - பெரிய, நீலவரை ஆக்க - நீலமலைகளாகச் செய்ய, மால் மிஞ்ச - ஆசை அதிகரிக்க, கஞ்சனம் தாழ - கண்ணுடியும் (ஒளிக்குத்தோற்று) வணங்கும்படி, குலுக்கும் - குலுக்குகின்ற, மெய்-சரீரத்தையுடைய, மின் னை - மின்போல்வாளாகிய என் பெண்ணை, மேவி - தழுவி, விரகம் - அவ

ளது விரகம்-அவளது விரகத்தை, தணித்திடாய்-தணியச் செய்வாய், வஞ்சம்-வஞ்சனையையுடைய, கஞ்சன்-கம்ஸனது, அகத்தை-மார்பை, துணித்தவா-பிளந்தவனே, வாசவா - வாசவனே, வெங்கடேசுரெட்டேந்திரனே. எ - று.

குமுதம், இவ்விடத்துக் குவளை மலரைக் குறித்தது.

தாயிரங்கல்.

18. கந்தரப்புயருஞ்சடையார்பகைக் காமன்வந்துகணை யேவவேமினுள், அந்தரப்புய லின்பேர்மிகுத்தன ளணையின்மீதணை வாயணைவாய்பர, தஞ்சாப்புயங்கப்பணமீதுதெய் தத்தென்றுடுஞ்சராணம்புயாதிட, மந்தரப்புய பாரசெயதர வாசவாவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். கந்தர்-ஜகத்காரணர், அப்பு உயரும் சடையார் - கங்கையையணிந்த உயர்வாகிய சடையை யுடையவர், (அந்தச் சிவபெருமானுர்க்கு) பகை-பகைவனுகிய, காமன்வந்து-மன்மதன்வந்து, கணைஎவ-புஷ்பபாணங்களைப் பிரயோகிக்க, மின்னுள்-மின்கொடிபோல்பவளாகிய என்பெண்; அந்தரம்-ஆகாயத்திலுள்ள, புயலின் பேர்மிகுத்தனள்-மேகத்தின்பேர்மிஞ்சினுள், (ஆதலால்) அணையின்மீது சயநத்தின்மீதுவந்து; அணைவாய்அணைவாய்-தழுவுவாய் தழுவுவாய், பரதம்-பரதசாஸ்திரப்படி, சரம் - மேலான, புயங்கம் பணம்மீது - பாம்பின் படத்தின்மீது, தெய்தத்து என்று ஆடும்-தெய்தத்து என்று நடித்த; சரணஅம்புயா-பாததாமரையையுடையவனே; திடம்-உறுதியாகிய; மந்தரம்-மந்தரமலைபோன்ற; புயபார - புயபாரத்தையுடையவனே, ஜெயதர-வெற்றியைத் தரித்தவனே; வாசவா-வாசவனே; வெங்கடேசுரனே. எ-று.

புயலின் பேர் மால்; இதுமயக்கத்தைக் குறித்தது.

தாயிரங்கல்.

19. அந்தராசல வன்பன்றிபோற்பகை யார்ப்பரிக்கவவர்க்கிசைந்தெய்துமின், பந்தராசல னேபயந்தாள்வெறுப் பாயுரைக்கிற்பிறரென்சொல்லாருல, கந்தராசலவாவூரின்வாய்மறைக் கவுலைமூடியுண்டாகொண்டகாதல்தீர், மந்தராசல வாகாசயதரா வாசவாவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அந்தர்-மூடராகிய; பகை-பகைவர்; ஆ-ஐயோ; சலம்-நீரில்புரள்கின்ற; பன்றிபோல்-பன்றியைப்போல; ஆர்ப்பரிக்க-ஆரவாரஞ்செய்ய; அவர்க்கு இசைந்து-அவர்களுக்கிணங்கி; எய்தும்-அடைதற்குரிய; இன்பம்தரா-சுகத்தைக்கொடுக்காத; சலனே-கோவத்தையுடையவனே;பயந்தாள் பெற்றதாயானவள்; வெறுப்பாய் உரைக்கின்-வெறுத்துப்பேசினுல்; பிறர் என்சொல்லார்-அயலார் என்னசொல்ல மாட்டார்கள்; உலகம் - உலகமா

ன்து; தராசு அல்லவா-நிறைகோல் அல்லவா; ஊரின்வாய் மறைக்க-ஊர் வாயைமூட; உலைமூடிஉண்டா-உலைமூடிஉளதா; கொண்ட-இவள் அடைந்திருக்கிற; காதல்-மோஹத்தை, தீர்-நீக்கு; மந்தர அசலம்-மந்தரமலைபோன்ற; வாகா-புயங்களையுடையவனே; சயதரா-வெற்றியைத் தரித்தவனே; வாசவா இந்திரனே; வெங்கடேசுரனே. எ-று.

நீயே இவளைப்பராமுகஞ் செய்தால் ஆதரிப்பவர்வேறு யாவரென்பது கருத்து.

தலைவியிரங்கல்.

20. முனசநங்கை முகன்கண்ணிருந்துற முற்றும்வெந்தவன் வந்திகல்செய்யவே, தினசநங்கைக்குதுகஞ்சிதட்டுது சேலைசோர்ந் திருகாலையும்பின்னவே, இனசநங்கை யதுகொட்டிக்கொட்டிவந் தேசவேமயன்மீசுரமாகுது, வனசநங்கைமருவும்புயாசலா வாசவா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். முன்-முற்காலத்தில்; அசன்-ஆட்டுவாகநத்தையுடையவனாகிய அக்கினிதேவன், அங்கு-அவ்விடத்தில்; ஐ முகன்-ஐந்துமுகங்களையுடைய சிவபெருமானது; கண் இருந்து-கண்ணிலிருந்து; உற - வெளிப்பட; முற்றும் வெதவன்-சரீரமுழுதும் வெந்தவனாகியமன்மதன்; வந்து இகல்செய்ய வந்துபோர்செய்ய; தின்-தின்னுகின்ற; அசநம் - உணவும்; கைக்குது கசக்குகின்றது; கஞ்சிதட்டுது - கஞ்சியும் தடைபடுகின்றது; சேலைசோர்ந்து-ஆடைநழுவி; இருகாலையும் பின்ன-இரண்டுகால்களையும் பின்னிக்கொள்ளவும்; இனசநம்-கூட்டமாகிய ஜநங்கள்; கையது கொட்டிகொட்டி - கைகளைப் பலதரமும் கொட்டிக்கொண்டு; வந்துஏச-வந்துவையவும்;மயல்-காமமயக்கம்; மீசுரம் ஆகுது-அதிகமாகின்றது; வனசம்நங்கை-தாமரையில்வாழ்கின்ற விஜயலக்ஷ்மி; மருவும் - பொருந்திய; புயம்அசலா - புயமலைகளையுடையவனே; வாசவா-இந்திரனே; வெங்கடேசுரனே. எ-று.

செவிலிகூறல்.

21. படங்குமாதங்கரேக்காற்சமைந்திட்டபாரக்கொங்கைக்குறியுஞ்சமீபந்தான், சடங்குமாதங்கழிக்குமுன்னுமிது சமயங்கட்டித்தழுவாவிடிலவா, அடங்குமாதங்கள் சித்தமென்பாக்கிய மணையவேண்டுமுன்னுண்மூலமென்னவே, தொடங்குமாதங்கமுன்வந்தமாதவா துங்கனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். படங்து-மேற்கட்டி; மா-பெருமையுள்ள;தங்கரேக்கால்சமைந்திட்ட-தங்கத்தகட்டால் அமைந்தது; பாரம்-பளுவாகிய; கொங்கைக்குறியும்-தம்நகக்குறியும்; சமீபம்தான் - சமீபமே; சடங்கு - சோபநச்சடங்கும்; மாதம்கழிக்குமுன் ஆம்-ஒருமாதங்கழிக்குமுன்னே ஆகிவிடும்; இதுசமயம்-இந்தச்சமயத்தில்; கட்டிதழுவாவிடில்-கட்டி யணையாவிட்டால்; அவா அட

ங்குமா-ஆசையடங்குமா, தங்கள்சித்தம் என்பாக்கியம்-தமது சித்தம் என் பாக்கியம், அணையவேண்டும்-தழுவவேண்டும், முன்னாள்-முற்காலத்தில், மூலம் என்ன தொடங்கும்-ஆதிமூலமேயென்று அழைக்கத் தொடங்கின, மாதங்கம்முன்வந்த-யானைக்கெதிரே பிரத்தியக்ஷமாய்வந்த, மாதவா-மாதவனே, துங்கனே-பரிசுத்தனே, வெங்கடேசுரனே, எ-று.

செவிலிகூறல்.

22. வாசக்காந்தண்மலர்க்கையினாலன்னை வாரிவாரிப்பன்னீரொடுசந்தனம், பூசக்காந்தல்பொருமலயர்ந்துவாய் புலம்பத்தாமமும் வெம்பமின்னார்களும், ஏசக்காந்தமுரைக்கிலென்செய்குவாளெய்து வாய்குறமாதுதெய்வானைக்கோர், நேசக்காந்தரருள்பெற்றுவாழ்மனு நீதனேவெங்கடேசரெட்டேந்த்ரனே.

இ-ள். வாசம்-மணமுள்ள, காந்தள்மலர்-காந்தள்மலரை, கையினால்-கிகர்த்த கையால், அன்னை-தாயானவள், பன்னீரோடு-பனிநீரோடுகூடிய, சந்தனம்-சந்தனத்தை, வாரிவாரி-அள்ளி அள்ளி, பூச-பூசுதலால், காந்தல்-உடல்வெதும்புதலை, பொருமல்-பொறுக்காமல், அயர்ந்து-சோர்ந்து,வாய் புலம்ப-வாய்புலம்பவும், தாமமும்வெம்ப-மாலையும்கருகவும்,மின்னார்களும்-மாதர்களும்,ஏசக்காந்தம் உரைக்கில்-பரிகாச வார்த்தைகளைச்சொன்னால், என்செய்குவாள்-யாதுசெய்வாள், குறமாது - வள்ளிநாயகிக்கும், தெய்வானைக்கு-தெய்வயானைக்கும், ஓர்நேசம் ஒப்பற்ற நேசத்தையுடைய,காந்தர்-நாயகராகிய முருகக்கடவுளுடைய, அருள்பெற்று - திருவருளைப்பெற்று, வாழ்-வாழ்கின்ற, மனுநீதனே - மனுநீதியை யுடையவனே, வெங்கடேசுரனே, எ-று.

செவிலிகூறல்.

23. வந்துவாரவையநடத்திச்சிலைவளைத்தூச்சித்தசன் கமாங்கணையேவப்பு, குந்துவாரவளவும்பிதிர்ந்திடக் குடைந்துகொங்கைக்குடத்தையுமேயனே, கந்துவாரமதாக்கிவிட்டாலிந்தக் கன்னியென்செய்குவாள் கவியினால், சிந்துவாரமதிலணைகண்டவா சீதராவெங்கடேசரெட்டேந்தரனே.

இ-ள். வந்து-தென்றற்காற்றாகிய, வார-பெருமையையுடைய,வையம் நடத்தி-தேரைநடத்தி, சிலைவளைத்து-கரும்பு வில்லைவளைத்து, சித்தசன் - மன்மதன், மாங்கணை - மாமலர்ப்பாணத்தை, ஏவ-பிரயோகிக்க, புகுந்து-அவைவந்து, வார் அவ்வளவும் பிதிர்ந்திட - கச்சுமுழுதும் பொடியாயுதிர, குடைந்து-தோண்டி, கொங்கை குடத்தையும் - தனங்களாகிய குடங்களையும், அநேகம்துவாரமது ஆக்கிவிட்டால்-அநேகம் தொளைகள்செய்துவிட்டால், இந்தக்கன்னி-இந்தப்பெண்ணானவள், என்செய்குவாள்-யாதுசெய்வாள், கவியினால்-வானரங்களைக்கொண்டு, சிந்துவாரமதில் - கடற்கரையிலிருந்து, அணைகண்டவா-அணைகட்டினவனே, சீதரா-ஸ்ரீதரனே, வெங்கடேசுரனே, எ-று.

செவிலிகூறல்.

24. அரிசிராவணத்தாலடைத்துந்தொனியமருதில்லையதைமுனியுண்ணவும், கரிசிராவகலப்பகலோன்வருங் காலமானதெக்காலமென்றுடரும், பரிசிராமுழுலோபாகுடாரிநீ பாரவில்வளைத்துக்கரதூஷண, திரிசிராவிழவோர்பாணந்தொட்டவா சீதராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அரி கடலாகிய, அதை-அதனை; முனி உண்ணவும் - அகத்திய முனிவன் ஆசமநம்பண்ணவும்; சிராவணத்தால் அடைத்தும் - கற்களால் அடைத்தும்;தொனிஅமருதில்லை-ஓசையடங்கவில்லை; கரிசு-துன்பத்தைச் செய்கிற; இராஅகல-இரவானது நீங்கும்படி; பகலோன்-சூரியன்;வரும்காலம்ஆனது-வருகிறகாலமானது; எக்காலம்என்றாள்-எந்தக்காலமென்றாள்; தரும்பரிசு இரா-கொடுக்குந் தன்மையில்லாத; முழுலோபர் - முழுலோபிகளுக்கு; குடாரிநீ-கோடாரிநீ; பாரவில்வளைத்து - பெரியவில்லைவளைத்து; கரதூஷணதிரிசிரா - கரதூஷண திரிசிரசுக்கள்; விழ-மடிந்து விழும்படி, ஓர் பாணம் தொட்டவா-ஒப்பற்ற பாணங்களைப் பிரயோகித்தவனே; சீதரா-ஸ்ரீதரனே; வெங்கடேசுரனே; எ-று.

செவிலிகூறல்.

25. தொடுக்கவத்திரம் வேளதுதானிந்தத்தோகைமெய்யைத்துளைந்தூடுருவவே, கடுக்கவத்திரண்மேல்விழுமீயெனக் கறங்குவாட்குன்னலங்கலின்றீகுவாய், இடுக்கவத்திரங்காவென் றழைக்கவந்திடங்கரைத்திகிரிக்கிரையிட்டவா, உடுக்கவத்திரமில்லாதவர்க்கருளுத்தமா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். வேள்-மன்மதனானவன்; அத்திரம்தொடுக்க - பாணத்தைப்பிரயோகிக்க; அதுதான்-அந்தபாணந்தான்; இந்தத்தோகைமெய்யை-இந்தப் பெண்ணினது சரீரத்தை; துளைத்து-தொளைத்து; ஊடுஉருவ-உள்ளேயுருவிப்போக;கடு-கடுமையாகிய; கவத்திரள்மேல்விழும் - கபத்திரள்மீதுவிழுகின்ற; ஈஎன-ஈயைப்போல; கலங்குவாட்கு-கலங்குமவளுக்கு; உன் அலங்கல்-உன்மாலையை; இன்று ஈகுவாய்-இன்று தருவாயாக; இடுக்கவத்திரம்-சிறியமுகத்தையுடையயானை; கா என்று அழைக்க-காக்கவேண்டு மென்றழைக்க; வந்து-அதற்கெதிரே வந்து.இடங்கரை-(அதைக்கவ்விப்பற்றின) முதலையை;திகிரிக்கு-சக்ராயுதத்துக்கு; இரையிட்டவா-உணவாக்கினவனே; உடுக்க-உடுத்துக்கொள்ள;வத்திரம்இல்லாதவர்க்கு-ஆடையில்லாதவர்களுக்கு; அருள்-அருள்செய்த; உத்தமா-உத்தமனே; வெங்கடேசுரனே;எ-று.

தலைவி யிரங்கல்.

26. சீதமாரம்பனங்கன்றொட்டான்றனத் தினைத்துளைத்துததடாரிக்குதந்தப்பு, சூதமாரம்பம்ராமராமாவென் சொல்லுமேவன்சந்துசொல்லவிம்மாதர்க்குள், நீதமாரம்பலாதிசெய்வாரென்றன்னே

மக்காமந்தணிமூலமென்னவே,போதமாரம்பஞ்செய்யமுன்வந்தவா போசனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். சீதம்ஆர்-குளிர்ச்சிபொருந்திய; அம்பு-புஷ்பபாணங்களை, அநங்கன்தொட்டான்-மன்மதன் எவினன்; அந்த அம்பு-அந்தபாணம், தனத்தினைதொளைத்து-தனத்தைத்துளைத்து; தடாரிக்குது - உருவிப்போகின்றது; சூதமா-இதுமாமலர்ப் பாணமா, ரம்பம்-வாளேயாம், ராமராமா - ராமராமா, என்னசொல்லுவேன் யாதுசொல்வேன், சா்துசொல்ல-தூதுசொல்ல; இம்மாதர்க்குள்-இந்தப் பெண்களுக்குள்ளே, நீதம்ஆர்-நியதமாக ஏற்படுத்துதற்குரியவர் யாவர், அம்பல் ஆதிசெய்வார் - அலர்தூற்றுதல் முதலானவற்றைச் செய்வார்கள், என்றன்-என்னுடைய, நேமக்காமம் - நியமமாகிய காமத்தை, தணி-தணிவிப்பாயாக, மூலம் என்ன - ஆதிமூலமேயென்று, போதம்-யானையானது, ஆரம்பம்செய்ய-தொடங்க, முன்வந்தவா-முற்காலத்தில் அதற்கெதிராக வந்தவனே, போசனே-போஜனே, வெங்கடேசுரனே. எ-று.

செவிலி கூறல்.

27. பூசுகந்தந்தனத்திற் பொரிந்தது பொருக்கெழும்பியிப் பூவைதன்மாலுக்கே, நீசுகந்தந்தடங்கலின்றித்தர நேமஞ்செய்திவள் காமந்தணித்திடாய்,தேசுகந்தந்தராவணன்சேய்தலைசிக்கெனக்கொண்டுவாவென்றிலக்குவற், காசுகந்தந்தராமாபெரும்புக ழாகராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். தனத்தில்-தனங்களில், பூசு-பூசப்பட்ட, கந்தம்-சந்தனமானது, பொருக்கெழும்பி-பொருக்குகளாயெழும்பி, பொரிந்தது-பொரிந்துபோயிற்று, இப்பூவை தன்மாலுக்கு-இந்தப்பெண்ணின் ஆசைக்கு,நீசுகம்தந்து நீயின்பத்தைக் கொடுத்தும்; அடங்கல் இன்று-அடங்குதலில்லை,இத்தரம் இந்தத்தடவை, நேமம்செய்து-நியமம்பண்ணி; இவள்காமம்-இவளுடைய காமத்தை, தணித்திடாய்-தணியப் பண்ணுவாயாக, தேசுஉகந்து-புகழை விரும்பி, அந்த ராவணன் சேய் - அந்தராவணன் மகனாகிய இந்திரசித்தனுடைய, தலை-தலையை, சிக்கென-விரைவாக. கொண்டுவா என்று-கொண்டுவரக்கடவையென்று, இலக்குவற்கு - லக்ஷ்மணனுக்கு, ஆசுகம்தந்த-பாணத்தைக்கொடுத்த, ராமா-ஸ்ரீராமனே,பெரும்புகழ்-பெருங்கீர்த்திக்கு, ஆகரா-பிறப்பிடமா யிருப்பவனே, வெங்கடேசுரனே. எ-று.

தாயிரங்கல்.

28. பொருப்புக்குஞ்சரியாகப் புடைத்தெழும்பூண்முலைக் கன்னிமீதேசமர்செய்யத், துருப்புக்குஞ்சரியேறிமெய் யெங்கணுந் துளைக்கமாரன்வளைக்கவவன்செங்கைக், கருப்புக்குஞ்சரிசாமநிழற்றுந்திங்கட்குடைக்குங்கலங்குவளோமன, விருப்புக்குஞ்சரிகாந்தற்கு வைத்தவா வீரனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். பொருப்புக்கும் சரியாக-மலைக்குச்சமானமாக, புடைத்துஎழும்-புடைகொண் டெழாநின்ற பூண்முலை-ஆபரணமணிந்த தனங்களையுடைய, கன்னிமீது-என்பெண்ணின்மீது, சமர்செய்ய-போர்செய்தற்கு, துருப்புதனதுராணுவத்துடனே, குஞ்சு அறிஎறி-தென்றற் காற்றாகியதேரிலேறி, மெய்எங்கணும்-சரீரமுழுதும், துளைக்க-பாணங்கள்தொளைக்கும்படி, மாரன்வளைக்க-மன்மதன் வளைக்க, அவன் செங்கை-அவனது செவந்த கையிலுள்ள, கருப்புக்கும்-கரும்பு வில்லுக்கும், சரிசாமம் - எல்லாச் சாமங்களிலும், நிழற்றும்-நிழலைச்செய்கிற, திங்கள் குடைக்கும்-சந்திரனாகியகுடைக்கும், கலங்குவளோ-மனங் கலங்குவாளோ, மனவிருப்பு-உள்ளன்பை குஞ்சரி காந்தற்கு வைத்தவா - தெய்வயானையின் கணவனாகிய முருகக்கடவுளிடத்தில் வைத்தவனே, வீரனே-வீரமுடையவனே, வெங்கடேசுரனே.

செவிலிகூறல்.

29. அடிதங்கச்சி யிவளென்னமோதெரியாது சிந்தையயருகிறாளிந்தா, பிடிதங்கச்சிவிகையிலிருந்தநம்பிள்ளைதான்கிளிப் பிள்ளையல்லோமயல், கொடிதங்கச்சிப்பரி போர்சென்றேவரக் கூறென்றாளிகல் கொண்டோரமர்கண்டு, துடிதங்கச்சிமையப்புயங் கொட்டுமுத்துங்கனே வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அடி தங்கச்சி - அடி தங்காய், இவள் என்னமோ தெரியாது-இவள் என்ன காரணத்தாலோ தெரியமாட்டாது, சிந்தை அயருகிறாள்-மனஞ்சோருகிறாள், இந்தாபிடி - இதோபிடி, தங்கச்சிவிகையில் இருந்த-தங்கப்பல்லக்கில் இருந்த; நம்பிள்ளைதான் - நமது குழந்தைதான்; கிளிப்பிள்ளை அல்லோ-கிளிப்பிள்ளையல்லவா; மயல் கொடிது-காமமயக்கம்கொடியது; அங்கு-அந்தத்தேயத்திலுள்ள; அச்சிப்பரிப்போல் சென்று - அச்சிமட்டம்போலப்போய்; வர-அவர் வரும்படி; கூறு ஏன்றாள் - சொல்லென்றாள்; இகல்கொண்டோர்-பகைகொண்டவருடைய; அமர்கண்டு - யுத்தத்தைப்பார்த்து; துடி-துடிக்கிற; தங்கச் சிமையம்-தங்கமலைபோன்ற; புயம்-தோளை; கொட்டும்-தட்டுகிற; உத்துங்கனே-உயர்ந்தவனே; வெங்கடேசுரனே. எ-று.

தலைவி கூறல்.

30. அரகதத்தை மதன்சிந்தைதன்னில்வைத தம்பரத்தையடித்தார்ப்பரித்துமே, துரகதத்தைநடத்தியம்பாலுமென்று வதனத்தைத்துளைத்துவிட்டான்கொண்ட, விரகதத்தை யெவர்தணிப்பார் மலர்மெத்தைமீதினில்வைத் தணைவாய்மணி, மரகதத்தையணியும் புயாசலா வாசவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அர-அரனே; கதத்தை-கோவத்தை; மதன்-மன்மதனனவன்; சிந்தைதன்னில்வைத்து-மனத்தில்வைத்து; அம்பரத்தைஅடித்து-கடலாகியபேரிகையைக்கொட்டி; ஆர்ப்பரித்து-ஆரவாரித்து; துரகதத்தைநடத்தி-

தனக்கு குதிரையாகிய கிளியை நடத்தி, அம்பாலும் - பாணங்களாலும், என்-என்னுடைய, துவதனத்தை-இரண்டு ஸ்தனங்களையும், துளைத்துவிட்டான்-தொளைத்துவிட்டான், கொண்ட-நான்கொண்ட, விரகம் - விரகத்தாலுண்டாகிய, தத்தை-விபத்தை, எவர்தணிப்பார்-யாவர் தணிவிப்பவர், மலர்மெத்தைமீதினில்வைத்து-புஷ்பசயனத்தின்மேலிருத்தி, அணைவாய்-தழுவுவாய், மணிமரகதத்தை அணியும் - மரகதமணியையணிகின்ற, புயம் அசலா-புயமலையையுடையவனே, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரனே, எ-று.

தாயிரங்கல்.

31. அனங்கனம்பனந்தந்தொடமெய்பசந் தசந்துவாடுவதல்லாலிடைக்கிரு, தனங்கனம்பனம்பனந்தாரானிருக்குநற்றலத்தின் பேர்க்கொடிதாங்காதுபெற்றதாய், மனங்கனம்பனம்பின்போமிகுத்தந்த மாதர்சொல்லும்வசைக்கிலக்காகிய, மினங்கனம்பனஞ்சேர் சூதமாயினுள்வெங்கடேசுரவெட்டநரேந்திரனே.

இ-ள். அனங்கன்-மன்மதன், அம்பு அனந்தம்-பாணங்கள் அனேகங்களை, தொட-பிரயோகிக்க, மெய்பசந்து - சரீரம் பசலைநிறமடைந்து, அசந்து-அயர்ந்து, வாடுவதல்லால்-வாடுவதல்லாமல், இடைக்கு - இடைக்கு, இருதனம்-இரண்டுஸ்தனங்களும், கனம் - பளுவாயிராநின்றன, பனந்தாரான்-பனமாலையை யுடையவனுகிய சேரன், இருக்கும் - வசிக்கின்ற; நல்-அழகான, தனத்தின்பேர்க்கொடி - இடத்தின்பேரைக் கொண்டகொடி, தாங்காது - தாங்கமாட்டாது, பெற்றதாய்மனம் - பெற்றதாயின்நெஞ்சம், கல்-கல்லாயிருக்கின்றது, நம்பு-நம்புவாயாக, அன்னம் - அன்னப்பறவைகள், மிகுத்து-மிகுதியாய், பின்போம்-பின்றொடர்ந்துசெல்லுகின்ற,அந்தம்-அழகுவாய்ந்த, மாதர் - பெண்கள், சொல்லும்-சொல்லாநின்ற, வசைக்கு-நிந்தைக்கு, இலக்கு ஆகிய-லட்சியமாகிய, மின்-என்பெண்ணனவள், அங்கனம் - அவ்விடத்தில், பன்னம்சேர்-இலைகளடர்ந்த, சூதம் ஆயினுள்-மாமரமாயினுள், வெங்கடேச எட்ட நரேந்திரனே, எ-று.

தாயிரங்கல்.

32. மாதவாவினமட்டலர்நீள்புயமாலைமாலையகற்றுவதாசடை, யாதவாவினஞ்சொல்லுந்துராகத வன்னைவாயை யடக்குவதார்மலர்ச், சீதவாவினந் தங்கந்தரமெனுஞ் செல்விக்கோர்மொழி சொல்லியணைந்திடாய், போதவாவினங் காத்தருண்மாதவா போசனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். மாது - இப்பெண்ணினது, அவா-ஆசையானது, இன்ன-இத்தன்மையானது; மட்டுஅலர்-தேனேடுமலர்கின்ற; நின்-உனது, புயமாலை-தோளிலணிந்த மாலையானது;மாலைஅகற்றுவது-இவளதுகாமமயக்கத்தை

நீக்குவதாகும்; ஆசு அடையாதவா-குற்றஞ்சேராதவனே; இன்னம்-இன்னமும்; துராகதம் - சொல்லும் வசவுகளைச் சொல்லுகின்ற; அன்னைவாயை-தாயின் வாயை; அடக்குவது-அடங்கப்பண்ணுவது; ஆர்-யார்; மலர்-மலர்களையுடைய; சீதம்-குளிர்ச்சிபொருந்திய; வாவி-தடாகத்திலுள்ள; நந்து-சங்கமே; அம்கந்தரம்-அழகிய கழுத்தாம்; எனும் என்றுசொல்லுதற்குரிய; செல்விக்கு-என்பெண்ணுக்கு, ஓர் மொழிசொல்லி - ஒரு உறுதிவார்த்தை சொல்லி, அணைந்திடாய்-தழுவுவாயாக, போத-மிகுதியாக; ஆஇனம்-பசுக்கூட்டத்தை; காத்தருள்-காத்திரக்ஷித்த; மாதவா-மாதவனே; போஜனே-போஜராஜனே; வெங்கடேசுர-எட்டேந்த்ரனே; எ-று.

தாயிரங்கல்.

33. இருதனங்கனிக்குச்சிலைபோற்புடைத் தெழுந்துவிம்மியிறுமாந்திடக்கயல், விருதனங்களிக்குச்சிலைவாங்கிமாவிசைகொண்டூடுருவிப்பாய்வாளியாற், பொருதனங்கனிவர்க்கமுண்ணுமன்மால்பூண்டிருக்கச்செய்தான்றமிழ்வாணர்க்கு, வருதனங்கனிவாய்த்தருமன்னவாவாசவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். இருதனம்-இரண்டு ஸ்தனங்களும், கன்னிக்கு - என்பெண்ணுக்கு சிலைபோல்-மலைபோல் புடைத்து எழுந்து - புடைகொண்டெழுந்து, விம்மி-பருத்து, இறுமாந்திட - செருக்க, கயல்விருது - சேற்கொடியாகிய விருதையுடைய, அனங்கன்-மன்மதன், இக்குசிலை-கரும்புவில்லை வாங்கி-வளைத்து, மாவிசைகொண்டு-மிகுதியாகிய வேகங்கொண்டு, ஊடு உருவிப்பாய்-உள்ளே உருவிப்பாயும்படி, வாளியால்-புஷ்பபாணத்தால், பொருது-போர்செய்து, அன்னம்-அன்னத்தையும்,கனிவர்க்கம்-பழவர்க்கங்களையும், உண்ணுமல்-உண்ணவொட்டாமல், மால்பூண்டிருக்க - காமமயக்கத்தைக் கொண்டிருக்கும்படி; செய்தான்-பண்ணினான், தமிழ்வாணர்க்கு-தமிழ்ப் புலவருக்கு, வரு-விர்த்தியடைவதற்குரிய, தனம்-செல்வத்தை,கனிவாய்-மனவிரக்கத்தோடு, தரும்-கொடுக்கின்ற, மன்னவா-வேந்தனே, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரெட்டேந்திரனே. எ-று.

தாயிரங்கல்.

34. என்னிலங்குச்சலராசராசருக் கேற்றதாமவரிங்கேவரீபோய், முன்னிலங்குநங்காரியம்யாவதுமொழியென்றுள்பைங்கிளிதான்மருவுவாய், நன்னிலங்குவலயத்தலீதெனநாட்டுந்தென்கருக்கோட்டைக்கதிபனே, பொன்னிலங்குமணிமார்பனேதிடபோசனே வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். பைங்கிளிதான்-பச்சைக்கிள்ளைபோன்ற என்பெண்தான், என் இல்லம்-என்வீடு, குச்சு அல்ல - குச்சுவீடல்ல; ராசராசருக்கு-அரசர்க்கர

கருக்கு; ஏற்றது ஆம் - தகுதியானதாகும்; அவர் அத்தலைவர்; இங்கேவர- இங்கேவரும்படி; நீபோய்-நீசென்று; முன் அவர்க்கெதிரில்; நில்-நிற்பாய்; அங்கு-அவ்விடத்து; நம் காரியம் யாவதும்-நம்காரியம் முழுவதும்; மொழி-சொல்லு; என்றாள்-என்று சொல்லினாள்; மருவுவாய்-(ஆதலால்) நீவந்து அவளைத் தழுவுவாயாக; குவலயத்தில்-பூமியில்; நல் நலம்-நல்ல நிலம்; ஈதுஎன-இதுவென்று; நாட்டும்-நிலைநிறுத்துதற்குரிய; தென் கருக்கோட்டைக்கு-தெற்கிலுள்ள கருக்கோட்டையென்னுமூருக்கு; அதிபனே-வேந்தனே; பொன் இலங்கும்-திருமகள் விளங்குகின்ற; மணி மார்பனே-கௌஸ்துப மணியணிந்த மார்பையுடையவனே; திடபோஜனே-திடமானபோஜராஜனே; வெங்கடேசுர எட்டேந்த்ரனே. எ-று.

குச்சு-இலைகளால் வேய்ந்த சிறுகுடில்.

தலைவிகூறல்.

35. அரகராசலங்கொண்டபுண்போன்முலையானை விம்மவதிற்றென்றறாவவே, உரகராசலவன்குளிராதனனுக்கிருனந்தமாரற்கிம்மாதரும், தாகராசலராசியதாமயருனென்னைப்புணர்வாய் மூலமென்றதோத், திரகராசலங்காத்தசக்ரேசுவரா சீதரா வெங்கடேசு ரெட்டேந்திரனே,

இ-ள். அரரா-அரகரா; சலம்கொண்ட புண்போல் - நீர்கோத்த புண்ணைப்போல; முலையானை-ஸ்தனங்களாகிய யானைகள்; விம்ம-பருக்க;அதில் அதினிடத்து; தென்றல் தாவ-தென்றற்காற்று வீச; உரகர்-ராகு கேதுக்களென்னும் சர்ப்பங்களின், ஆசு-பயத்தையுடைய, அலவன் - சந்திரன், அந்தமாரற்கு-அந்த மன்மதனுக்கு, இம்மாதரும்-இந்தப்பெண்களும், தர கரா-தரகரோ, மயல்தான்-காமமயக்கந்தான், சவராசியதா-கடலா, என்னைப் புணர்வாய்-என்னைத்தழுவுவாயாக, மூலம் என்ற-ஆதிமூலமேயென்றழைத்த தோத்திர-துதியையுடைய,கராசலம்-கைம்மலையை (யானையை) காத்த-காத்தருளின, சக்ரேசுவரா - சக்கராயுதத்தையுடைய மாலே, சீதரா-ஸ்ரீதரனே, வெங்கடேசுர எட்டேந்த்ரனே. எ-று.

செவிலிகூறல்.

36. கஞ்சாஞ்சப்பெடைபோலுமென்னடை கமலத்தாளிருங்கண்ணிணையானது, பஞ்சரஞ்சர்க்கரைவட்டுரைமுலைப்பருப் பதத்திலறுபதத்தான்றெட்டான், வெஞ்சரஞ்சப்பிரமஞ்சகோளமைமீதிருந்திந்தமின்னாளைமேவுவாய், வஞ்சாஞ்சப்பொருஞ்செய தோர்த்தண்டாவாசவா வெங்கடேசுரெட்டேந்திரனே.

இ-ள். மெல் நடை-மிருதுவாகிய நடையானது, கஞ்சர் - பிரமதேவ ரது, அஞ்சப் பெடைபோலும்-அன்னப்பெடையை நிகர்த்திருக்கின்றது, கமலம் தாள்-தாமரைமலர்போன்ற பாதங்கள், பஞ்சு - செம்பஞ்சுபோன் றது, இருகண் இணை ஆனது-பெரிதாகிய இரண்டு கண்கள், அரம்-அரத் தை நிகர்க்கின்றது. (இப்படிப்பட்ட இவளுடைய) முலைப்பருப்பதத்தில்-மலைபோன்ற ஸ்தனங்களின்மீது, அறுபதத்தான் - வண்டுநாணையுடைய மன்மதன், வெம்சரம்-கொடிதாகிய பாணங்களை, தொட்டான் - பிரயோ கித்தான், (ஆதலால்) சப்ரமஞ்சகோளகைமீது இருந்து-சப்ரமஞ்சகோள கைமேலிருந்து, இந்தமின்னை-இந்தமின்கொடிபோல்வாளை, மேவுவாய்-தழுவுவாயாக, வஞ்சகர்-வஞ்சகர், அஞ்ச-அஞ்சும்படி, பொரும்-போர்செ ய்கின்ற, செயம்-வெற்றியையுடைய, தோர்த்தண்டா-புயங்களையுடையவ னே, வாசவா-வாசவனே, வெங்கடேசுரனே. எ-று.

சப்ரமஞ்சகோளகை-வட்டக்கட்டில்.

செவிலிகூறல்.

37. மாமனுக்குமகனுய்வந்த காமனுக்கும்பெற்றுவளர்த்தவட் குங்கலைச், சோமனுக்குமினத்தார்க்குமஞ்சிமெய்சோர்ந்து வாடின ள்சேர்ந்தணைவாயினி, தாமனுக்குமினியகுமாரெட்ட தருமனுக்கு குமாரமுத்தேந்திர, பூமனுக்குஞ்சகோதரனேதிட போசனேவெங்க டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். மா-திருமகளுக்கு, மன்னுக்கு-நாயகனாகிய விஷ்ணுவுக்குமகன் ஆகவந்த-புதல்வனாகத் தோன்றின, காமனுக்கும்-மன்மதனுக்கும், பெற்று வளர்த்தவட்கும்-பெற்றுவளர்த்த தாய்க்கும், கலைசோமனுக்கும்-கலைகளை யுடைய சந்திரனுக்கும், இனத்தார்க்கும்-உறவினர்க்கும், அஞ்சி - பயந்து மெய்சோர்ந்து வாடினள்-உடலயர்ந்து வாடினாள்;(ஆதலால் இவளை) இனி சேர்ந்து அணைவாய்-இனிக்கூடித் தழுவுவாய்; தாமனுக்கும்-தாமனென்ப வனுக்கும், இனிய இனிதாகிய; குமாரெட்ட தருமனுக்கும் - குமாரெட்ட தருமனென்பவனுக்கும்; குமார முத்தேந்திரன்-குமார முத்தேந்திரனெ ன்கிற; பூமனுக்கும்-பூபாலனுக்கும்; சகோதரனே-சகோதரனே, திடபோ சனே-திடத்தையுடைய போஜராசனே. வெங்கடேசுரனே. எ-று.

தாயிரங்கல்.

38. என்னவாவிதுராசியமாநடையேனுமாமகள்காலொடுகொ மிகப், பின்னவாவிதுரானவறாவவா பிரமனிப்படிச்செய்தா னை ஞர்கள்வாய், கொன்னவாவிதுராகத்தென்றிசை குடிபுகக்கையி கோதண்டம்வாங்கிய, மன்னவாவிதுராபுகழாகரா வாசவாவெங் டேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். என் அவா இது-என்ன ஆசை இது, ராசியம் ஆம்நடை-ரகசியமாகிய இந்தக்கள் வொழுக்கமானது, எனுமா-பொருந்துமா, மகள்-என் மகளுடைய, கால்ஒடுகால்-காலுடன்கால், மிகமின்னவா-மிகுதியாகப்பின்னிக்கொள்ளவா, விது-சந்திரன், ரா - இராக்காலத்தில், அனல்தூவவா-நெருப்பைச்சிந்தவா, பிரமன் இப்படி செய்தான்-பிரமன் இப்படி பண்ணினன், ஒன்னார்கள் - பகைவருடைய வாய்-வாய்கள், கொன்ன-குழறவும், ஆவி-அவர்களுயிரானது, துராகதம்-தீமையாகிய; தென்திசை - தென்றிசையில், குடிபுக-குடியேறவும், கையில் கையினிடத்து, கோதண்டம்-கோதண்டமென்னும் வில்லே, வாங்கிய-வளைத்த, மன்னவா - வேந்தனே, விதுரா-விதுரனே, புகழ் ஆகரா-கீர்த்திக்குப்பிறப்பிடமா யிருப்பவனே, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரனே. எ-று.

தென்றிசை-யமபுரம்.

தோழியிரங்கல்.

39. சொலங்கக்காகொண்டமோகத்தினல்வருஞ் சோபதாபந் துலேக்கவென்றாட்குமே, விலங்கக்காமசரத்தாலும்பூந்தளிர் மெய்யிளேத்தனளல்லாமலொப்பிலா, நலங்கக்காரிசுகக்காரிமேவவிந் நாளுமேநல்லநாளடையார்மனம், மலங்கக்கால்கொண்டடர்புரிமேல்வரும் வாசவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அக்கா-தமக்கையே, கொண்ட-நான்கொண்டிருக்கிற, மோகத்தினல், மிகுவிருப்பத்தினல், வரும்-உண்டாகின்ற, சோபதாபய்-சோபதாபத்தை, தொலேக்க-நீக்கும்பொருட்டு, அங்கு - அவ்விடத்துச்சென்று, சொல்-அவர்க்குச்சொல்லு, என்றாட்கு-என்றுசொன்னவளுக்கு, வில்லங்கம்-துன்பத்தைச்செய்கிற, காமசரத்தாலும் - மன்மதபாணத்தாலும், பூதளிர்-அழகிய தளிர்போன்ற, மெய்-சரீரம், இளேத்தனள்-மெலிந்தாள், அல்லாமல்-அதுவல்லாமலும், ஒப்பு இல்லா - சமானமில்லாத, நல்-அழகாகிய, அங்கக்காரி-அவயவங்களேயுடையவள், சுகக்காரி- இன்பத்தைச்செய்பவள், மேவ-அவளேத்தழுவ, இந்நாளும் நல்லநாள்-இந்த நாளும் நல்லநாளாகும், அடையார்-பகைவருடைய, மனம் மலங்க - மனங்கலங்கும்படி, கால்கொண்டு அடர்-காலேக்கொண்டு சொல்லுகின்ற, பரிமேல்வரும் - குதிரைமேலேறிவருகிற, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே. எ-று.

தாயிரங்கல்.

40. சரந்தராதரங்சண்டாமதன்விடுத்தசமென்னது குழிந்தைதனியேமால், பரந்தராதாளக்கச்சிறுக்கும் பொற்பார்பயோதபாரத்தைத்தாங்கவே, உரந்தராதரவம்போற்றுவண்மருங்கொசியுமுள்ளம்வசியாயுணேந்திடாய், புரந்தராதரணிக்கதிபாசெய பூதராவெங்கடேசுரெட்டேந்திரனே.

இ-ள். மன்-மன்மதனானவன், தராதரம் கண்டா-தராதரம்பார்த்தா, சரம் விடுத்தான்-பாணமேவினான், எனது குழந்தை - என்குழந்தையானவள், தனியே-தனியாகவே, மால்பரந்த-ஆசை அதிகரித்து,அரா-அரனே, தாளக்கச்சு-முத்துக்கச்சினால், இறுக்கும்-இருக்கிக்கட்டுகிற, பொற்பூர்-அழகுபொருந்திய, பயோதரபாரத்தை - ஸ்தனபாரத்தை, தாங்க-சுமக்க, உரம்தராது-பலந்தராது, அரவம்போல்-சர்ப்பம்போல், துவள் - துவளாநின்ற, மருங்கு-இடையானது, ஒசியும்-ஒடியும், (ஆதலால்) உள்ளம்வசியாய்-(இவளது) மனத்தை வசீகரிப்பாய், அணைந்திடாய்-தழுவுவாய், புரந்தரா-புரந்தரனே, தரணிக்கு அதிபா-பூமிக்கு அதிபனே, செயபூதரா-ஜயமலையையுடையவனே, வெங்கடேசுர ரெட்டேந்த்ரனே. எ-று.

முத்துக்கச்சு-முத்துவேலையமைந்த கச்சு.

செவிலிகூறல்.

41. பீலிக்குஞ்சரவங்கணைக்கொத்திப் பிடித்துத்தாக்கப் பெரும்பகையின்றிக்கா, லாலிக்குஞ்சரபஞ்சிங்கமீதுசென் றடிப்பபோல்வந்தடிக்குது தாயென்ற, நீலிக்குஞ்சரசம்பேச்சுமாச்சிவனினைவுங் காணுங்கனவுமிங்கேயொரு, வாலிக்குஞ்சரமேவியராகவா வாசவா வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். பெரும்பகை இன்றி - பெரும்பகையில்லாமலே, பீலிக்குஞ்சு-மயிற்குஞ்சுகள், கால்-காலினால், அரவங்களை-பாம்புகளை, கொத்தி-மூக்கினால்கொத்தி, பிடித்து-பற்றி, தாக்கும்-அடிக்கும், (அதுபோலவும்) ஆலிக்கும்-ஆரவாரிக்கின்ற, சரபம்-சரபமானது, சிங்கம்மீது - சிங்கத்தின்மேல் சென்று,அடிப்பபோல்-சென்றடிப்பனபோலவும், கால் - தென்றற்காற்றானது, வந்து அடிக்குது-என்மீதுவந்து மோதாநின்றது, தாய்என்ற நீலிக்கும்-தாயென்றுசொல்லப்பட்ட நீலிக்கும், சரசம்பேச்சும்ஆச்சு-சரசவார்த்தைகளுமுண்டாயின, இவள் நினைவும்-இவள் நினைப்பும், காணும்கனவும்-காண்கின்றசொப்பனமும், இங்கே-இப்படியே, ஒருவாலிக்கும் - ஒப்பற்ற வாலியின்மீதும், சரம் ஏவிய-பாணம் பிரயோகித்த, ராகவா - ராகவனே, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரனே. எ-று.

செவிலிகூறல்.

42. அராவுக்கேகணையே செவியென்பரதல்ல பெற்றவனைக்கேமின்னாரும்வம், பராவுக்கேகணையேகுழலாக்கிய பண்ணுக்கேநொந்தபெண்ணுக்கிரங்கியின், நிராவுக்கேகணைமேற்சென்றிருந்துநல் லின்பலீலைசெய் தன்பாய்மருவுவாய், மராவுக்கேகணையேவியராகவா வாசவாவெங்கடேசுரெட்டேந்திரனே.

இ-ள். அராவுக்கே-பாம்புக்கே, கண்ணையே செவி என்பவர்-கண்ணையே செவியாகக்கொண்டிருப்பதென்பர், அது அல்ல-அதுசரியல்ல, பெற்ற

அன்னைக்கே பெற்றதாய்க்கே அத்தன்மை உள்ளது, மின்னாரும்-மாதரும், வம்பர்-வம்புக்காரர்கள், ஆவுக்கே-பசுக்களுக்காகவே, கண்ணையே-மூங்கிலையே, குழல்ஆக்கிய-குழல் செய்த, பண்ணுக்குஇராகத்துக்கு, நொந்த-மனம்-வருந்தின, பெண்ணுக்கு இரங்கி - இந்தப் பெண்ணுக்கு இரக்கமுற்று, இன்றுஇராவுக்கு-இன்றிரவில், ஏகு-போ, அணைமேல்சென்று இருந்து-சயனத்தின்மீது போயிருந்து, நல் இன்பம்-நல்லசுகத்தைத் தருகிற, லீலைசெய்து-மன்மதலீலைகளைச் செய்து, அன்பாய் மருவுவாய் - அன்போடு தழுவுவாய், மராவுக்கு-ஏழ்மராமரங்களின்மீது, கணை ஏவியபாணம் பிரயோகித்த, ராகவா-ராகவனே, வாசவா-இந்திரனே, வெங்கடேசுரனே எ-று.

தலைவிகூறல்.

43. அல்லைமாலைமருதங்கிளியை மின்னாரைநால்வகைத்தானையதாக்கிவிட், டெல்லைமாலையும்விட்டடார்ந்தேறிநா னிருக்குமாலயத்துட்புகுந்தேதன்கை, வில்லைமாலைவிளைத்துவளைக்கம்பை விட்டுவேண்மட்டுமீறினன்மேவுவாய், குல்லைமாலையணிமாலைப் போற்றிவாழ் குமுணனேவெங்கடேசுரெட்டேந்திரனே.

இ-ள். அல்லை-இருளையும், மாலை-தென்றற்காற்றையும்; மருதங்கிளியை-மருதநிலத்திலுள்ள கிளியையும், மின்னாரை-மாதரையும், நால்வகை-நான்குவகையாகிய, தானையது ஆக்கிவிட்டு-படையாக்கிவிட்டு, எல்லை-சூரியனை, மாலையும் விட்டு-மாலைக்காலத்திலும் அனுப்பி, அடர்ந்து ஏறி - நெருங்கியேறி; நான் இருக்கும் ஆலயத்துள்-நானிருக்குமிடத்திலும், புகுந்து பிரவேசித்து, தன் கைவில்லை வளைத்து - தன் கையிலுள்ள வில்லை வளைத்து, மாலை விளைத்து-ஆசையையுண்டாக்கி, அம்பைவிட்டு-அம்பையேவி, வேள்-மன்மதனானவன், மட்டு மீறினன்-அளவுக்குமிஞ்சினான், (ஆதலால்) மேவுவாய்,-தழுவுவாயாக, குல்லைமாலை அணி- துளசிமாலையைத்தரித்த, மாலை-திருமாலை, போற்றிவாழ்-தொழுது வாழ்கின்ற, குமுணனே - குமுணவள்ளலே; வெங்கடேசுரெட்டேந்த்ரனே எ-று.

தாயிரங்கல்.

44. தடிக்கவில்லை முலைதிரண்டேமகள் சமையவில்லை மணந்தான்குமுகுமென், றடிக்கவில்லை பொடிபுனுகத்தர்சேர்த் தணியவில்லையதற்குமுன்மாரன்போர், முடிக்கவில்லை வளைத்தாற்குழந்தைதான்மோகந்தாங்கவுமுற்றுதொன்னார்துடி, துடிக்கவில்லைவளைக்குமகோரவுத் துங்கனேவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். முலைதிரண்டு தடிக்கவில்லை-தனங்கள் திரண்டு பருக்கவில்லை, மகள்-என்பெண்ணானவள், சமையவில்லை - பக்குவமடையவில்லை, மணந்தான்-பரிமளந்தான், குமுகுமென்று அடிக்கவில்லை-குமுகுமு என்று வீசவில்லை, பொடி-கதம்பப்பொடியையும், புனுகு-புழுகையும், அத்தர்சேர்த்து-

அத்தருடன்கலந்து, அணியவில்லை-பூசவில்லை, அதற்குமுன்-அதற்குமுன்னே,மாரன்-மன்மதன், போர்முடிக்க-போரை முடிக்க.இல்லைவளைத்தால்-வீட்டைவளைத்தானுனால், குழந்தைதான்-என்பெண்தான்; மோகம்தாங்க-மோகத்தைப் பொறுக்க, முடியாது-முடியாது, ஒன்னூர்-பகைவர், துடிதுடிக்க-மிகவும்துடிக்கும்படி, வில்லைவளைக்கும் - வில்லைவளைக்கிற, அகோர-உக்கிரனே, உத்துங்கனே-உயர்ந்தோனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே.

செவிலிகூறல்.

45. மஞ்சலக்கணங்கண்புறம்வகட்டி மருவுதற்குளவாவைத்திருக்குநாள், அஞ்சலக்கணலார்க்கேதெரியுநின்னுவலோவடங்காதிரங்காதவன், நெஞ்சலக்சணப்பெற்றியின்வெண்ணெயாநிலவில்வந்துகலவிசெய்வாயையா, பஞ்சலக்கண முத்தமிழாகரபாஷிதாவெங்கடேசுரெட்டெந்த்ரனே.

இ-ள். மஞ்சுஅலங்கு-அழகு விளங்குகின்ற, அணங்கு-தெய்வப்பெண் போல்பவள், அன்புஉற-அன்புமிகும்படி, கட்டிமருவுதற்கு-கட்டித்தழுவுதற்கு, உள்அவா வைத்துஇருக்கும் நாள்-மனவிருப்பம் வைத்திருக்கும்நாள், அஞ்சு-ஐந்து, அலக்கண்-அவளுடைய துன்பம், நல்லார்க்கே தெரியும்-மாதருக்கேதெரியும், நின் ஆவலோ அடங்காது-உன் ஆசையோ தணியாது, இரங்காத-இரக்கமுண்டாகாத, வல்நெஞ்சுஅல்ல-கடினமனதல்ல, கணப்பெற்றியின்-க்ஷணகாலத்தில், வெண்ணெய் ஆம்-வெண்ணெய்போலுருகிவிடும்,நிலவில்வந்து-நிலாவில்வந்து, கலவிசெய்வாய் - புணர்ச்சிசெய்வாய், ஐயனே—, பஞ்சலக்கணம்-பஞ்சலக்ஷணங்களோடு கூடிய முத்தமிழ்-முத்தமிழுக்கும், ஆகரபாஷிதா-பிறப்பிடமாய் வசிக்கிறவனே, வெங்கடேசுரனே எ-று.

தாயிரங்கல்.

46. சத்திக்கும்பணிலக்கையினுன்பெற்ற நயன்போர்க்குவிநயமின்னுரைச்சு, மத்திக்கும்பணியாய்நிரைத்துச்சரமாரிபெய்யவென்மானுரைத்தானுமைக், கத்திக்கும்பணிசோர்ந்ததுங்காண்கிலாள் காதல்தீரவிப்போதணைவாயையா, எத்திக்கும்பணிவேந்தமகாமண்டலேசுராவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். சத்திக்கும்-ஒலிக்கின்ற, பணிலம்-சங்கையேந்திய, கையினுன்-கையையுடையவனுகிய திருமால், பெற்ற-ஈன்ற, தநயன்-புதல்வனுகியமன்மதன், போர்க்கு-யுத்தத்துக்கு, விநயன்மின்னுரைசுமத்தி - வஞ்சகத்தையுடைய மாதரைச் சுமப்பித்து, கும்பு அணியாம் நிரைத்து-கும்பாகவும் வரிசையாகவும் சோடித்து, சரமாரிபெய்ய-பாண மழையைப்பொழிய, என்மான்-என்பெண்ணுனவள், உரைக்க-பேச, திக்கும்-குழறுவாள், பணிசோர்ந்ததும் காண்கிலாள்-ஆபரணம் கழன்றதையும் நோக்கிலள், காதல்தீர-அவளுடைய ஆசையடங்கும்படி இப்போது அணைவாய்-இப்பொழுது தழு

வுவாய், ஐயா - ஐயனே எத்திக்கும்-எந்தத் திசையிலுள்ளாரும், பணி-வணங்குகிற,வேந்த-அரசனே, மகாமண்டேலேசுவரா- மகாமண்டலேசுரனே, வெங்கடேசுரனே.

செவிலிகூறல்.

47. தனதுமெய்க்குமலரணையானது தழலிறைக்குந் தனச்சுமையாலிடை, மினதுமெய்க்குந் துவளுமிம்மானந்த மேனகைக்கும் வெகுமிச்சநானுண்மை, சொனதுமெய்க்குமரன் பொற்பதாம்புயந் தொழுந்தொழும்பன் குமரெட்டபாண்டியன், மனதுமெய்க்குமுயிர்த்துணைவாபுகழ் வாசவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். மலர் அணையானது-புட்பசயநமானது, தனது மெய்க்கு-தன்னுடம்பின்மேல், தழல் இறைக்கும்-நெருப்பைவீசும், தனச்சுமையால்-தனங்களின்பளுவினுல்-மின்னது இடையும்-மின்போல்வாளது இடையும், எய்க்கும்-இளைக்கும், துவளும்-துவளாநிற்கும், இம்மான்-இந்தப்பெண், அந்த மேநகையைப்பார்க்கிலும்-வெகு மிச்சம்-மிகவும் அதிகம், நான் சொன்னது உண்மை-நான் சொன்னதுமெய், குமரன்-முருகக்கடவுளுடைய; பொன்-அழகாகிய, பதம் அம்புயம்-பாததாவரையை, தொழும் - வணங்குகிற, தொழும்பன்-தொண்டனுகிய, குமாரெட்டபாண்டியன் - குமாரெட்டபாண்டியனுடைய, மனது மெய்க்கும்-மனம் மெச்சுகின்ற, உயிர்த்துணைவா-உயிர்ப்பாங்கனே, புகழ் வாசவா - கீர்த்தியையுடைய இந்திரனே, வெங்கடேசுரெட்டேந்த்ரனே. எ-று.

செவிலிகூறல்.

48. இட்டங்கட்டியவாறேயல்லாதுவே றில்லைசிந்தையிதெல்லாஞ்சுவாமிய, திட்டங்கட்டியபரஞ்சியாற்செய்த சித்ரமஞ்சத்திற் சேர்வாய்தினஞ்சட்ட, வட்டங்கட்டியங்கக்குடிக்கின்ற ராவணனை வென்றன்பு வைத்தவன்றம்பிக்குப், பட்டங்கட்டியராமாநவரச பாஷிதாவெங்கடேசுரெட்டேத்ரனே.

இ-ள். இட்டம் கட்டியவாறே அல்லாது, இஷ்டமான-வழியேயல்லது, வேறு சிந்தையில்லை-வேறுமனக்கவலையில்லை, இது எல்லாம் - இதுமுழுதும்; சுவாமி அதிட்டம்-சுவாமி அதிஷ்டமேயாம், கட்டி அபரஞ்சியால் செய்த-தங்கக்கட்டியாற்செய்யப்பட்ட, சித்ரமஞ்சத்தில்-ஆச்சரியகரமான கட்டிலில். சேர்வாய் (இவளைக்) கூடுவாய், தினம் - நாள்தோறும்; சட்டவட்டம்-சட்டவட்டமாக, கள்-கள்ளை; தியங்க-மயங்கும்படி, குடிக்கின்ற-குடிக்கிற; ராவணனை வென்று-ராவணனைசெயித்து; அவன் தம்பிக்கு-அவன்தம்பியாகிய விபீஷணன்மேல், அன்புவைத்து - தயைவைத்து; பட்டங்கட்டிய-பட்டங்கட்டின; ராமா-ஸ்ரீராமனே; நவரசபாஷிதா-நவரசமொழுகப் பேசுவோனே; வெங்கடேசுரெட்டேந்த்ரனே. எ-று.

ராக்ஷசர்கட்குடியிற் சிறந்தோராதலால்; கட்டியங்கக் குடிக்கின்ற ராவணனை என்றார்.

நற்றாயிரங்கல்.

49 பருதியானவரீராறுபேருங்கோபாக்னிமிஞ்சிவருவதுபோன்மதி, வருதியானதாற்காற்றேனென்றாளேயோ மலடிருந்துபெற்றேனிந்தப்பிள்ளையை, ஒருதியானதுமதுகுலதீபம்போலுதித்துமோகத்துக்குள்ளாகினளையா, குருதியானமறவாதவாபுகழ்க் கொற்றவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். பருதி ஆனவர் - சூரியரானவர், ஈராறுபேரும் - பன்னிரண்டுபேரும் கோபாக்கினிமிஞ்சி-கோபநெருப்பு அதிகரித்து; வருவதுபோல்-வருதல்போல; மதிவருது-சந்திரன் வருகின்றது; யான் - நான்; அதற்கு; ஆற்றேன் என்றாள்-சகியேனென்றாள், ஐயோ - அந்தோ; மலடு இருந்து-வெகுகாலம் மலடியாயிருந்து; (பிறகு) இந்தப் பிள்ளையைப்பெற்றேன்-இந்தக் குழந்தையைப்பெற்றேன்; ஒருதியால்-ஆராய்வாயாக; நமது குலதீபம்போல்-நமது குலவிளக்குப்போல, உதித்து-தோன்றி; மோகத்துக்கு உள் ஆகினள்-மோகத்துக்கு உட்பட்டவளானாள்; ஐயனே - ஐயனே; குருதியானம் மறவாதவா - குருத்தியானத்தை மறவாதவனே; புகழ் கொற்றவா-கீர்த்தியையுடைய அரசனே; வெங்கடேசு ரெட்டேந்த்ரனே. எ-று.

செவிலிகூறல்.

50. அம்பமாமுனி வாய்முலைக்கண்ணைச் சல்லடைக்கண்ணாக வனங்கனெய்யச்சொர்ண, விம்பமாமுனிருந்தபடிக்கில்லை மேனிமாகலைக்யானியிவளையா, கம்பமாமுனிதம்பெறவந்துதற்காத்தவாவெகு நேர்த்தியதாந்தமிழ்க், கும்பமாமுனிபோல்வந்துதித்தவா கொற்றவாவெங்கடேசுரெட்டேந்த்ரனே.

இ-ள். அம்மா-அம்பா; அநங்கன்-மன்மதன்; முனிவுஆய்-கோபங்கொண்டு; முலைக்கண்ணை-முலைக்கண்களை; சல்லடைக்கண் ஆக - சல்லடைக்கண்களாகும்படி; அம்புஎய்ய-அம்புகளைப் பிரயோகிக்க; (அதனால்) மேனி-இவளுடம்பு; சொர்ண விம்பமா-ஸ்வர்ண பிம்பம்போல; முன்னிருந்த-பிரகாரமாக; இல்லை-இல்லை, இவள் - இந்தப்பெண்ணனவள்; மாகலைக்யானி-பெரிய கலைஞானமுள்ளவள்; ஐயா-ஐயனே; கம்பம்-கட்டுத்தறியிற் கட்டப்படுகிற; மாமுன்-கஜேந்திரனென்னும் யானைக்குமுன்பு;இதம்பெறவந்து சுகமுண்டாகவந்து; தற்காத்தவா தற்காத்தவனே; வெகு நேர்த்தியது ஆம்-வெகு அழகியதாகிய; தமிழ்-தமிழுக்கு; மாகும்ப முனிபோல்-பெருமையுள்ள கும்பமுனிபோல; வந்து உதித்தவா - வந்து அவதரித்தவனே; கொற்றவா-அரசனே; வெங்கடேசுரெட்டேந்த்ரனே. எ-று.

கம்பமா சாதியடையடுத்து நின்றது; குடத்திற் பிறந்ததனல் அகத்தியர்க்கு கும்பமுனியென்னும் பெயருண்டாயிற்று,

பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் பாடல்.

திருக்குடந்தை ஈச்சுரர்மேற் பாடியது.

1 நின்றுபடியளக்குநீலக்கொடிகளிரண்
டென்றுமுளவாங்குடந்தையீச்சுரருக்-கொன்றுக்
குரைக்குமரையீந்தாரொன்றதனுக்கென்னோ
அரைக்குமரையீயாரவர்.

இ-ள். குடந்தை ஈச்சுரருக்கு - திருக்குடந்தையி லெழுந்தருளியிருக்கும்சிவபெருமானுக்கு, நின்று படியளக்கும்-நிலைத்திருந்து படியளக்கின்ற, நீலக்கொடிகள் இரண்டு-இரண்டு நீலக்கொடிகள், என்றும் உள ஆம்-எக்காலத்தும் உள்ளனவாம், அவர்-அந்தச் சிவபெருமானனவர், ஒன்றுக்கு-ஒருகொடிக்கு, உரைக்கும்அரை ஈந்தார்-சொல்லப்பட்ட அரைப்பங்கைக் கொடுத்தார், ஒன்றதனுக்கு - ஒருகோடிக்கு, என்னோ-யாதுகாரணத்தாலோ, அரைக்கும்அரை ஈயார்-அரைக்கரையையும் கொடார் எ-று.

நீலக்கொடிகள்இரண்டாவன-நீலநிறமுள்ள கொடிபோல்வாளாகியஉமாதேவியும் நீலநிறமுள்ளகொடியாகிய திருமாலும்,படியளத்தலாவது-முறையே ஈராழிநெல்லைக்கொண்டு முப்பத்திரண்டு தருமங்களையும் வழுவாமல்செய்து உயிர்களைக்காத்தலும், பூமியை யளத்தலும், குடந்தையீச்சுரர் கும்பேச்சுரர். அரையீந்தார்என்பதற்கு தமதுதிருமேனியில் அரைப்பாகத்தை யீந்தாரென்றும்; அரைக்குமரையீயார் என்பதற்குகாற்பங்கையும்கொடார்என்றும் காலையும்ஈயார் என்றும்பொருள்கொள்க. கால்-திருவடி இதனைஈயாதிருந்ததுவராகவுருக்கொண்டுநிலத்தைக்கிழித்துச்சென்றபோது.

சிதம்பரேச்சுரர்மீது பாடியது.

2. எடுத்தசனனங்கடோறுமீன்றெடுத்ததாய்மார்
கொடுத்தமுலைப்பாலனைத்துங்கூட்டில்-அடுத்தமணிப்
பைந்நாகணை துயின்மால்பாலாழியுஞ்சிறிதாம்
மன்னுசிதம்பரதேவா.

இ-ள். மன்னு-இறைவனே, சிதம்பரதேவா-சிதம்பரதேவனே, எடுத்த சநநங்கள் தொறும் - நானெடுத்த பிறவிகள்தோறும், ஈன்றெடுத்த தாய்மார்-என்னைப் பெற்றெடுத்த தாய்மார், கொடுத்த முலைப்பால் அனைத்தும் கூட்டில்-எனக்குக் கொடுத்த முலைப்பால் முழுதும் ஒன்றாகச்சேர்த்தால், அடுத்தமணிபைநாகணை துயில்மால் - ஏற்ற மாணிக்கமுள்ள படத்தையுடைய சர்ப்பசயநத்தில் நித்திரை செய்கின்ற திருமாலின், பால் ஆழியும் சிறிது ஆம்-பாற்கடலும் அளவில் குறைவாகும் எ-று.

நான் உண்டதாய் முலைப்பால் பாற்கடலினும் அதிகமாகும் என்பதற்கு நானெடுத்த பிறவிகளுக்கு ஒரெல்லையில்லை யென்பது கருத்து.

திருமறைக்காட்டுச் சிவபெருமான்மீது பாடியது.

தாய்கூறல்.

3. பாணியிலேபுள்ளிமான்பாகத்தேபச்சைமான்
வேணிதனிலேயோர்வெள்ளையான்-காணுமலர்ச்
செம்மானுலவுந்திருமறைக்காட்டீசரே
எம்மானுக்கெங்கேயிடம்.

இ-ள். காணும்-காணப்படுகிற, மலர்-தாமரைமலரில் வசிக்கிற, செம்மா-திருமகள், உலவும்-உலாவுகிற, திருமறைக்காட்டீசரே-வேதாரணியேச்சுரரே, (உமக்கு) பாணியிலே புள்ளிமான்-இடக்கையிலே புள்ளிமானிருக்கின்றது, பாகத்தே பச்சைமான் - பாகத்தில் பச்சைமா ...ருக்கின்றது, வேணியிலே ஓர் வெள்ளைமான்-சடையிலே ஒரு வெள்ளைமானிருக்கின்றது, (இப்படி யிருக்கிறபோது) எம்மானுக்கு இடம் எங்கே-எமது பெண்ணுக்கு இடம் எங்கேயமைப்பீர் எ-று.

புள்ளிமான்-யாகத்திலுண்டானமான், பச்சைமான்-உமாதேவி,வெள்ளைமான்-கங்கை. நீக்கும் நிறம் வெண்மையாதலால் வெள்ளைமான் என்றார். வெள்ளமான் என்றும் பாடம், பொருள் கங்கையாகிய பெண்.

சொக்கநாதர்மீது பாடியது.

4. வான்பணிந்தாலவனென்பேபுரைக்குமலரிலயன்
தான்பணிந்தாலதன்றன்றலையேசொல்லுந்தாரணியுண்
டான்பணிந்தாலவன்கண்ணேபரிந்துபரிந்துரைக்கும்
நான்பணிந்தாலெனக்கார்சொல்லுவார்சொக்கநாயகர்க்கே.

இ-ள். சொக்கநாயகர்க்கு-சொக்கநாயகரை, வான் பணிந்தால்-விண்ணுலகத்தார் வணங்கினால், (அதற்கு) அவன் என்பே உரைக்கும் - அவனணிந்திருக்கும் எலும்புமாலையே சாட்சிசொல்லும், மலரில் அயன் தான் பணிந்தால்-தாமரைமலரில் வசிக்கிறபிரமன்வணங்கினால், அவன்தன் தலையேசொல்லும் - அவனது தலையாகி கபாலமே சாட்சிசொல்லும், தாரணி உண்டான் பணிந்தால்-உலகத்தையுண்டவனாகிய திருமால் வணங்கினால்; அவன் கண்ணே பரிந்து பரிந்து உரைக்கும்-அவனது கண்ணேவிரும்பி விரும்பிச் சாட்சிசொல்லும்;நான் பணிந்தால்-யான் வணங்கினால்; எனக்கு ஆர்சொல்லுவார்-எனக்குயார் சாட்சிசொல்லுவார் எ-று.

சொக்கநாயகர் அணிந்திருக்கிறஎலும்புமாலையால் தேவர்களால்வணங்கப்படுதற் குறியனென்பதும்; கையிலுள்ள பிரமகபாலத்தால் பிரமனால்

வணங்கப்படுதற்குறிய னென்பதும், திருவடியிலுள்ள கண்மலரால் திருமாலினல் வணங்கப்படுதற்குரிய னென்பதும் விளங்காநின்றன. நான் வணங்குதலைவிளக்குவோர் யார் என்பது கருத்து.

இறைவனணிந்திருக்கும் பாம்புமுதலியவற்றை யிரத்தல்.

5. மெய்க்கேயணியும்பணியேயென்பேமுடிமேற்கிடந்த
கொக்கேவெண்கூன்பிறையேயரைசேர்ந்தகொடும்புலியே
அக்கேயுமக்குக்கிடைத்தவுபாயங்களாவெமக்குஞ்
சொக்கேசர்பாதத்தைக்கிட்டுமுபாயத்தைச்சொல்லுங்களே.

இ-ள். மெய்க்கே அணியும் பணியே - திருமேனியிலணியும் பாம்பே, என்பே-கழுத்திலணிந்த எலும்புமாலையே, முடிமேல்கிடந்த கொக்கே-சிரசின்மேல் தங்கிய கொக்கிறகே, வெள் கூன்பிறையே - வெள்ளியவளைவாகிய பிறையே, அரை சேர்ந்த கொடும்புலியே-அரையைச்சேர்ந்த கொடிய புலித்தோலே, அக்கே - அக்குமாலையே. உமக்குக் கிடைத்த உபாயங்கள் ஆ-உமக்குக் கிடைத்த உபாயங்கள் வியக்கத்தக்கன, சொக்கேசர் பாதத்தை-சொக்கநாதரது திருவடியை, கிட்டும்உபாயத்தை-சேருமுபாயத்தை, எமக்கும் சொல்லுங்கள்-எங்களுக்கும் சொல்லுங்கள் எ-று.

சொக்கநாதர்மீது நிந்தாஸ்துதியாகப் பாடியது.

6. தாண்டித்திரியும்விடையேறியோடொன்றுதாங்கிப்பிச்சை
வேண்டிக்கலியுககாலந்தள்ளாமல்விரும்பிச்சொக்கர்
ஆண்டித்தொழிலைவிட்டையோமதுரைக்கரசிருந்து
பாண்டித்துரைத்தனஞ்செய்தேபிரம்படிபட்டனரே.

இ-ள். தாண்டித்திரியும் விடையேறி-துள்ளித்திரிகின்ற இடபத்தின்மீதேறி, ஓடு ஒன்று தாங்கி-ஒரு ஓட்டையேந்தி, பிச்சைவேண்டி - பிச்சையேற்றுண்டு, கலியுக காலம்தள்ளாமல் - கலியுககாலத்தைக் கழிக்காமல், சொக்கர்-சொக்கநாதர், ஆண்டித்தொழிலை விட்டு-ஆண்டிவேலையைவிட்டு ஐயோ-அந்தோ; மதுரைக்கு அரசு இருந்து-மதுரைக்கரசனாயிருந்து, பாண்டிதுரைத்தனம் செய்து-பாண்டிதேசத்து, துரைத்தனம்பண்ணி, பிரம்படிபட்டனர்-பிரம்படியும் பட்டார், ஏ-இதென்ன பரிதாபம் எ-று.

திருக்களந்தைச் சிவபெருமான்மீது பாடியது.

7. ஆகத்திலேயொருபக்தியென்னம்மைக்களித்தவுடன்
பாகத்திலேயொன்றுகொண்டாயவண்மற்றைப்பாதியுமுன்
தேகத்திற்பாதியுஞ்சேர்ந்தாலிருவருண்டேசிவனே
ஏகத்திராமலிருப்பாய்களந்தையுமென்னெஞ்சமே.

இ-ள். சிவனே-சிவபெருமானே, ஆகத்திலே ஒருபாதி-திருமேனியில் ஒருபாதியை, என் அம்மைக்கு அளித்து-என்னம்மையாகிய உமாதேவிக்குக் கொடுத்து, அவள் தன்பாகத்திலே-அவளுடைய பாகத்திலே; ஒன்றுகொண்டாய் ஒருபாகத்தை வாங்கிக்கொண்டனை, அவள் மற்றைப்பாதியும் - அவளது மற்றைப்பாதியும், உன்தேகத்திலே பாதியும்-உன் திருமேனியிற் பாதியும், சேர்ந்தால்-கூடினால்; இருவர் உண்டே - இருவர் உளரே, (ஆதலால்) ஏகத்து இராமல்-ஒன்றாயிராமல், களந்தையும் என் நெஞ்சும்-களந்தப்பதியிலும் என்மனத்திலும், இருப்பாய்-வீற்றிருப்பாயாக, எ-று.

இதுவுமது.

8. துணையானநாரிபுவியையெல்லாம்பெறுந்தொல்லைவடிக்
கணையானதுபுவியெல்லாமெடுத்துண்ணுங்கைச்சிலைகல்
அணையாகநின்றுபுவியினைத்தாங்குமென்றாலினியான்
பணையார்களந்தைப்பதியார்செயலையென்பன்னுவதே

இ-ள். துணை ஆன நாரி-மனைவியாகிய உமாதேவி, புவியையெல்லாம் பெறும்-பூமிமுழுதையும் பெறுவாள், தொல்லைவடிக்கணை ஆனது-புவியெல்லாம் எடுத்துஉண்ணும் பழமையாகிய வடித்தலமைந்த அம்பானது பூமிமுழுதையும் எடுத்துவிழுங்கும், கைச்சிலை-கைவில்லானது, கல் அணையாக நின்று-கல்லணையாயிருந்து, புவியினைத்தாங்கும் என்றால்-பூமியைத்தாங்குமாயின், இனி-இனி, யான்-நான், பணைஆர்-கழனிகள்நிறைந்த, களந்தைப் பதியார் செயலை-திருக்களந்தைப்பதிச் சிவபெருமானரது செயலை, என்ப பன்னுவது-என்னென்றெடுத்துச் சொல்லுவது எ-று.

துணையானநாரி - மனைவியாகிய உமாதேவி, கணை - திருமால், கைச்சிலை-மேருமலை.

சொக்கநாதர் யானைவாகனமீதேறியுலாவரத்

தரிசித்துப்பாடியது.

9. முன்னானைகூப்பிடவோடிவந்தானைமுளரிமலர்ப்
பொன்னானையேறியிருப்பானைப்பூழியன்கைக்கரும்பைத்
தின்னானையென்றுகல்லானைக்கிட்டானைத்திருமதுரை
மன்னானைவீதியிலேறிவந்தானைவணங்குதுமே.

இ-ள். முன் ஆனை கூப்பிட ஓடிவந்தானை-முற்காலத்தில் (கஜேந்திரனென்னும்)யானையழைக்கஓடிவந்தவனும், முளரிமலர் பொன்னானை-தாமரைமலரில்வாழ்கின்ற திருமகளையுடையவனுமாகிய திருமாலாகியவாகனத்தின்மீது,எறியிருப்பானை-எறியிருப்பவனை,பூழியன்கைக்கரும்பை பாண்டியன் கைக்கரும்பை, ஆனதின் என்று-ஆனையேதின்பாயென்று, கல்லானை

க்கு இட்டானை-கல்லானைக்கு உண்பித்தவனை, திருமதுரை - திருமதுரையின் வீதியில் தெருவில், மன் ஆனை-எறிவந்தானை - நிலைபெற்ற யானைமீதேறி உலாவந்தவனை, வணங்குதும்-(கண்டு) வணங்குவோம். எ-று.

திருச்சீகாழிச்சிவபெருமானைநற்றாயிரத்தல்.

10 நமக்கின்றொருவரநீர்தரவேண்டுநலந்திகழ்குங்
குமக்கொங்கைபாகத்துக்கொச்சையுள்ளீர்கொடுங்கோளரவி
கிமைக்கும்பிறையையளித்தாலதற்குமிரும்பசிபோம் [ற்
உமக்குந்தலைச்சுமைபோமெங்கள்மானுமுயிர்பெறுமே.

இ-ள். நலம் திகழ்-அழகு விளங்குகின்ற, குங்குமக் கொங்கைபாகத்து-குங்குமக் குழம்பணிந்த தனங்களையுடைய உமாதேவியை ஒருபாகத்துக்கொண்டு, கொச்சை உள்ளீர் - திருச்சீகாழியி லெழுந்தருளியிருப்பவரே, இன்று-இப்பொழுது, நமக்குநீர் ஒருவரம் தரவேண்டும் - எமக்கு நீர் ஒருவரங்கொடுக்கவேண்டும், (என்னெனின்) கொடுங்கோள் அரவிற்கு-(உமது சிரத்திற் கட்டப்பட்டிருக்கிற) கொடுமையும் வலியுமுள்ள பாம்புக்கு, இமைக்கும் பிறையை அளித்தால்-பிரகாசிக்கிற பிறையைக் கொடுத்தால், அதற்கும் இரும்பசிபோம்-அதற்கும் மிகுந்த பசிநீங்கும், உமக்கும் தலைச்சுமைபோம்-உமக்கும் தலைப்பாரம் நீங்கும், எங்கள் மானும் உயிர்பெறும்-எங்கள் பெண்ணும் உயிர்பெறுவாள். எ-று.

உமது சிரத்திலிருக்கிற பிறைச்சந்திரனைப் பாம்புக்கு ஊட்டிவிடும் என்பது கருத்து, "அழல்வெண் மதியைத் தள்ளாதவனே முடிசூடெம்மாதுதருக்குறக்கே" என்றார் பிறரும்.

சொக்கநாதருக்குள்ள பாக்கியமெல்லாம்சொக்கநாயகியாரால்
வந்ததே யாமென்று பாடியது.

11. ஆனையுரித்துமதடனைப்போர்த்திட்டடியும்பட்டு
மானமழிந்தங்கிரந்தேதிரிந்தமதுரைச்சொக்கர்
ஞானமிகப்பெற்றுவாழ்வதெல்லாஞ்சொக்கநாயகியாள்
பானைபிடித்தமுகூர்த்தத்தினால்வந்தபாக்கியமே.

இ-ள். ஆனை உரித்தும்-யானையை யுரித்தும், அதன்தனை போர்த்திட்டு-அதின்தோலைப் போர்த்தும், அடியும்பட்டு-அடியுமுண்டு, மானம்அழிந்து-மானங்கெட்டு, அங்கு இரந்தே திரிந்த மதுரைச்சொக்கர் - அவ்வாறே இரந்துதிரிந்த மதுரைச் சொக்கநாதர். ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம்-ஞானத்தை மிகுதியாகப் பெற்று வாழ்வதெல்லாம், சொக்கநாயகியாள் பானைபிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே. எ-று.

அடிபட்டு என்றது வையையாற்றங்கரையில் மண்சுமக்க வந்தபோது பிரம்படி பட்டதைக் குறித்தது, சாக்கியர் கல்லாலெறிந்ததையும் குறிக்கும்.

திருநெல்வேலி வடிவாம்பிகையின்மீது பாடியது.

12. ஆய்முத்துப்பந்தரின்மெல்லணைமீதுன்னருகிருந்து
நீமுத்தந்தாவென்றவர்கொஞ்சும்வேளையினித்தநித்தம் [னால்
வேய்முத்தரோடென்குறைகளெல்லாமெல்லமெல்லச்சொன்
வாய்முத்தஞ்சிந்திவிடுமோநெல்வேலிவடிவன்னையே.

இ-ள். நெல்வேலி வடிவன்னையே-திருநெல்வேலியி லெழுந்தருளிய வடிவாம்பிகையே, ஆய்முத்துப் பந்தரில்-ஆராய்ந்தெடுத்த முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில், மெல் அணைமீது-மென்மையாகிய சயநத்தின்மீது, உன் அருகு இருந்து-உன்னருகே யிருந்து, நீ முத்தம் தா என்று-நீ முத்தந்தருகவென்று, அவர்கொஞ்சும் வேளையில் - அவர் கொஞ்சுகிற சமயத்தில், நித்தம் நித்தம்-நாள்தோறும், வேயமுத்தரோடு - விண்டுமுத்தரோடு, என் குறைகள் எல்லாம் - என்குறைகள் யாவும், மெல்லமெல்லச் சொன்னால்-பையப் பையச்சொன்னால்-வாய்முத்தம் சிந்திவிடுமோ - உன் வாய்முத் துதிர்ந்துவிடுமோ.

உயர்ந்தமாதர் கண்டத்தில் முத்துண்டா யிருக்குமென்பதுநூற்றுணிபாதலால், "வாய்முத்தஞ் சிந்திவிடுமோ" என்றார், "சரதமுடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே" "தந்திவராக மருப்பிப்பி பூகந்தனிக்கதலி, நந்து சலஞ்சல மீன்றலைகொக்கு நளினமின்னார், கந்தரஞ்சாலிகழை கன்னலாவின் பல்கட்டு செவிகார், இந்துவுடும்புகரா முத்தமீனுமிருபதுமே" என்றார் மேலோரும்.

சொக்கநாதர்க்கு இரக்கமில்லையெனப் பாடியது.

13. குதியால்நமனையுதைத்துள்ளங்காலினிற்கூனிமிர
மதியாகந்தேய்த்தவ்விலங்கேசன்மாமுடிபத்துநக
நுதியான்மிதித்துமுயலகன்மேனிநுறுங்கவின்னும்
மிதியாநின்றாலருளெங்கேசொக்கேசர்தம்மெல்லடிக்கே.

இ-ள். குதியால் நமனை உதைத்து-குதிக்காலினால் யமனை யுதைத்து, உள்ளங்காலினில்-உள்ளங்காலினால், கூன் நிமிர-வளைவு நிமிரும்படி; மதி ஆகம் தேய்த்து-சந்திரனது உடம்பைத்தேய்த்து, அ இலங்கேசன்மாமுடி பத்தும் - அந்தராவணனுடைய பெரிய மகுடங்கள் பத்தையும், நக நுதியால் மிதித்து-நக நுனியால் மிதித்து அழுத்தி, முயலகன்மேனுநுறுங்க-முயலகனுடப்பு நெரியும்படி, இன்னும் மிதியாநின்றால் - இன்னமும் மிதியாநிற்பின், சொக்கேசர் தம் மெல் அடிக்கு - சொக்கநாதரது மெல்லிய திருவடிக்கு, அருள் எங்கே-கிருபை யெவ்விடத்தது. எ-று.

யமனை யுதைத்தது மார்க்கண்டன் பொருட்டு, சந்திரனைத்தேய்த்தது தக்கன் யாகத்தில், ராவணனை யழுத்தினது கைலாயத்தையெடுத்தபோது.

சொக்கநாதர் பிரம்படிபட்டதற் கிரங்கிப்பாடியது.

14. மண்ணென்றமண்டலமெல்லாம்புரக்கும்வழுதிசற்றும்
தண்ணென்றநெஞ்சந்தரித்திலனே தனுவேடனெச்சில்
உண்ணென்றபோதுண்டவர்சொக்கர்பாதியுடலம்பச்சைப்
பெண்ணென்றறிந்துமடித்தானெவ்வாறுபிரம்புகொண்டே.

இ-ள். மண் என்ற-மண்ணுலகமென்று சொல்லப்பட்ட, மண்டலம் எல்லாம்-உலகமுழுதும், புரக்கும்-காக்கின்ற,வழுதி-பாண்டியன், சற்றும்-சிறிதும், தண் என்ற நெஞ்சம் தரித்திலனே - சாந்தமாகிய மனத்தைப் படைத்திலனே, தனுவேடன்-வில்வேடனாகிய கண்ணப்பன், எச்சில் உண் என்றபோது உண்டவர்-எச்சிலை உண்ணென்றபொழுது உண்டவராகிய, சொக்கர்-சொக்கநாதரது, பாதி உடலம்-பாதியுடம்பு, பச்சை பெண் என்று அறிந்தும்-பச்சைப்பெண்ணாகிய உமாதேவியது என்றுணர்ந்திருந்தும், பிரம்புகொண்டு எவ்வாறு அடித்தான்-பிரம்பால் எப்படி அடித்தான்எ-று.

தென்களந்தைப் பதியாளையடைதற்கு இருவினையொப்பு
என்றுண்டாகுமோவெனப் பாடியது.

15. இன்றொக்கவேண்டிலெவ்வாறொக்குமோவெழில்சேர்களந்தைக்
குன்றொக்குங்கோபுரங்கோபுரமொக்குமக்குன்றதுபோல்
அன்றொக்கவேண்டுமென்னல்வினை தீவினையாமிரண்டும்
என்றொக்குமோவினித்தென்களக்காடனையான்பெறவே.

இ-ள். இன்று ஒக்கவேண்டில் எவ்வாறு ஒக்குமோ-இன்றொத்திருக்க வேண்டினால் எப்படியொவ்வுமோ, எழில் சேர்-அழகுபொருந்திய, களந்தை-களந்தைப்பதியில், குன்று கோபுரம் ஒக்கும் - மலையானது கோபுரத்தை நிகர்க்கும், கோபுரம் அக்குன்று ஒக்கும்-கோபுரமானது அக்குன்றை நிகர்க்கும், அதுபோல்-அதுபோல, என் நல்வினை தீவினை ஆம் இரண்டும்-எனது நல்வினை தீவினைகளாகிய இரண்டும், அன்று ஒடுக்கவேண்டும் அந்நாளில் சமமாகவேண்டும், இனி தெனகளக் காடனையான் பெற என்று ஒக்குமோ-இனி தென்களந்தைப்பதியானை நான் அடையும்படி என்று நேரிடுமோ. எ-று.

சிவந்தான்மல்லைப் பல்லவன்மீது பாடியது.

16. மாதாம்படியுண்டுமெய்சிவந்தான்குழல்வைத்திசைத்துச்
சேதாம்பலங்கனிவால்சிவந்தான்செம்மலர்த்திருவின்
சூதாந்தனத்தைத்துரஞ்சிவந்தாளேவர்தூதுசென்று
பாதாம்புயஞ்சிவந்தான்சிவந்தான்மல்லைப்பல்லவனே.

இ-ள். சிவந்தான் மல்லைப்பல்லவன்-சிவந்தான் என்னும் இயற்பெயர் பெற்ற மல்லைப்பல்லவனென்பவன், மாதாம்பு அடியுண்டுமெய்சிவந்தான்-

பெரிய கயிற்றினடியுண்டு உடல்செவந்தான், குழல்வைத்து இசைத்துசே தாம்பல் அம்கனிவாய் சிவந்தான்-வேய்ங்குழலை வைத்தூதி செவ்வல்லி மலர்போலும் அழகு கனிந்தவாய் செவந்தான், செம்மலர் திருவின் சூது ஆம் தனம் தைத்து உரம் சிவந்தான்-செந்தாமரை மலரில் வாழ்கின்றதிரு மகளது சூதாடு கருவிபோன்ற தனங்கள் பதிந்துமார்புசெவந்தான், ஐவர் தூதுசென்று பாத அம்புயம் சிவந்தான்-பஞ்சபாண்டவர்க்குத் தூதாக நடந்து பாததாமரை சிவக்கப் பெற்றான். எ-று.

சிவந்தான் மல்லைப் பல்லவன் இரட்டைக்கடுக்கன்செய்து

போட்டதைக் குறித்துப்பாடியது.

17 பாடுந்தமிழுக்குச்சிவந்தெழுந்தான்மல்லைப்பல்லவர்கோன்
காடுஞ்செடியுந்திரியாதிரட்டைக்கன்புசெய்து
போடும்பொழுதென்னபூட்டகமோவற்பப்புல்லரைக்கொண்
டாடும்பொழுதிருக்கன்னத்திலேநின்றடிக்கின்றதே.

இ-ள். சிவந்தெழுந்தான் மல்லைப்பல்லவர்கோன்—.

பாடும் தமிழுக்கு-யான்பாடிய தமிழ்ப்பாடலுக்குப் பரிசிலாக, காடும் செடியும் திரியாது-காட்டிலும் செடிகளிலும் திரியாமல், இரட்டைக்கடுக்கன்செய்து போடும்பொழுது-இரட்டைக்கடுக்கன்செய்து போடும்போது, என்னபூட்டகமோ - என்ன பூத்தானமோ, அற்பப்புல்லரைக் கொண்டாடும்பொழுது-அற்பராகிய கீழ்மக்களைக் கொண்டாடும்போது, இரு கன்னத்திலே நின்று அடிக்கின்றது - இரண்டுதாடைகளிலும் நின்று அறைகின்றது.

மீனாட்சியம்மையைத் தரிசித்த செருக்காற்பாடியது.

18. கான்றெண்டனிட்டகனங்குழலாளையென்கண்மணியைத்
தேன்றொண்டைவாய்ச்சியைத்தென்கூடல்வாழ்சிறுபெண்பிள்ளை
யாறெண்டனிட்டபொழுதேயியமனெனக்குமடி [யை
யேன்றெண்டனிட்டவிண்ணப்பமென்றோலையெழுதுவனே.

இ-ள். கான் தெண்டனிட்ட கனங்குழலாளை-காடான கும்பிடுதற்குரிய அளகபாரத்தையுடையவளை, என்கண்மணியை- என்கண்மணிபோன்றவளை, தேன்தொண்டை வாய்ச்சியை - தேன்பொருந்திய கோவைக்கனிபோலும் வாயினை யுடையாளை, தென்கூடல் வாழ்சிறு பெண்பிள்ளையை-தென்மதுரையில் வாழ்கின்ற சிறுபெண்ணை, யான் தெண்டனிட்ட பொழுதே-நான் கும்பிட்டபோதே, இயமன்-யமன், எனக்கும்-எனக்கும், அடியேன் தெண்டனிட்ட விண்ணப்பம் என்று ஓலை யெழுதுவன். எ-று.

மீனாக்ஷி யம்மையைத் தரிசித்த எனக்கு யமன் அஞ்சுவா னென்பது கருத்து.

• மீனாட்சியம்மையின் மணக்கோலத்தைக் குறித்துப் பாடியது.

19. அண்டத்தமராருமாயனும்வேதனுமந்தணரும்
பண்டெத்தனைதவஞ்செய்தனரோமணப்பந்தலிலே
துண்டப்பிறையணிசொக்கர்கைத்தாலிக்குநீதுணிந்து
கண்டத்தைநீட்டினையேகூடல்வாழுங்கயற்கண்ணியே.

இ-ள். அண்டத்து அமரரும் - விண்ணுலகத்திலுள்ள தேவரும், மாயனும் - திருமாலும், வேதனும் - பிரமனும், அந்தணரும் - வேதியரும்; பண்டு முற்காலத்தில், எத்தனை தவம் செய்தனரோ - எவ்வளவு தவம்செய்திருந்தாரோ, மணப்பந்தலிலே - மணப்பந்தலின்கண், துண்டப்பிறை அணி - சந்திரகண்டத்தைச் சூடின; சொக்கர் - சொக்கநாதரது; கைத்தாலிக்கு - கையிலுள்ள மங்கலசூத்திரத்தின்பொருட்டு; நீ துணிந்து - நீ மனவுறுதிகொண்டு; கண்டத்தை நீட்டினையே - கழுத்தை நீட்டினையே; கூடல்வாழும் - மதுரையில் வாழ்கின்ற; கயல்கண்ணியே - மீனாக்ஷியம்மையே; எ-று.

மீனாக்ஷியம்மைக்குக் கன்னெஞ்சுண்டாயிருத்தற்குக்

காரணம் தோன்றப் பாடியது.

20. அற்பீன்றதாயென்றுனைப்பணிந்தாலென்னவதியெல்லாம்
பொற்பீன்றபூஷணம்போற்குறித்தாய்புகழ்க்கூடலில்வாழ்
கற்பீன்றகட்டிக்கரும்பேயுனக்குக்கன்னெஞ்சதுதான்
வெற்பீன்றவாசனையோவுள்ளவாறுவிளம்பெனக்கே.

இ-ள். அன்பு ஈன்றதாய் என்று - அன்புக்குப்பெற்ற தாயென்றுகருதி; உன்னைபணிந்தால் - உன்னைவணங்கினால்; என் அவதியெல்லாம் - என்துயரமெல்லாம்; பொற்பு ஈன்ற பூஷணம்போல் குறித்தாய் - அழகுபொருந்திய கர்ணபூஷணமாக எண்ணினாய்; புகழ் கூடலில்வாழ் - புகழையுடைய மதுரையில் வாழ்கின்ற; கற்புஈன்ற கட்டிக்கரும்பே - கற்பமைந்த கருப்புக்கட்டியே; உனக்கு - உனக்கு, கல்நெஞ்சதுதான் - கல்நெஞ்சாயிருப்பது; வெற்பீன்ற வாசனையோ - மலைபெற்ற வாசனைதானோ; உள்ள ஆறு - உள்ளபடி; எனக்கு விளம்பு - எனக்குச் சொல்வாய்; எ-று,

உன்மனம் கல்லாயிருக்கின்றதேயென்று மீனாக்ஷியைநோக்கிக் கூறியது.

21. பேயல்லவோவொருவேளைவரந்தந்துபேசிடுங்கல்
லாயல்லவோநின்மனங்கெட்டியானதுமற்புதந்தான்
நீயல்லவோமதுரேசர்பங்குற்றவணியெனக்குத்
தாயல்லவோபிள்ளைநானல்லவோசிவசாம்பவியே.

இ-ள். பேய் அல்லவோ-பேயுமல்லவோ; ஒருவேளை வரம்தந்து பேசி டும்-ஒருவேளை வரங்கொடுத்துப்பேசும்; கல்லாய் அல்லவோநின் மனம்கெட்டி ஆனதும் - கல்லைப்போலல்லவோ உன்மனம் வன்மையாய்விட்டதும்; அற்புதம் தான்-ஆச்சரியமே; மதுரேசர் பங்குஉற்றவள்-மதுரைச்சொக்கநாதர் பாகத்திற்பொருந்தியிருப்பவள்; நீயல்லவோ-நீயல்லையோ; நீ எனக்கு தாயல்லவோ-நீயெனக்கு மாதா அல்லையோ; நான் பிள்ளை அல்லவோ-நான்புதல்வனல்லவோ; சிவசாம்பவியே; எ-று.

மீனாக்ஷியம்மையைத் தரிசித்த செருக்கால் பாடியது.

22. பண்டோதரியமறைபாடுங்கூடற்பசுங்கிளியைக்
கண்டோதினேனென்கவலையெல்லாமினிக்காலன்றிண்டு
முண்டோதிவந்திடும்போதம்மைகோயின்முன்னேதிரியும்[னே
குண்டோதரன்கண்டுகொண்டாற்றொடை தட்டிக்கொள்ளுவ

இ-ள். பண்டு ஓது அரிய மறைபாடும் கூடல் பழமையாகிய சொல்லுதற்கரிய வேதங்கள் புகழ்ந்துபாடுகின்ற கூடலிலுள்ள; பசுங்கிளியை-பச்சைக்கிளிபோல்வாளாகிய உமாதேவியை; கண்டு-தரிசித்து; என் கவலை எல்லாம்-என் துயரமுழுதும்; ஓதினேன் - விண்ணப்பம் பண்ணினேன், இனி-இனி, காலன்-யமன்; திண்டுமுண்டு ஓதிவந்திடும்போது-திண்டுமுண்டுகள் பேசிவருங்காலத்தில்; அம்மைகோயில் முன்னேதிரியும் குண்டோதரன்-அம்மைகோயிலுக்கெதிரில் திரியும் குண்டோதரன்; கண்டுகொண்டால்-கண்டுகொண்டானாயின்; தொடைதட்டிக் கொள்ளுவன் - அந்தயமனோடு போர்செய்யத் தொடைதட்டிக்கொள்வான்; எ-று.

மீனாக்ஷியம்மையின் மூக்குத்தியைக்குறித்துப் பாடியது.

23. செகத்தாயெனவந்ததெள்ளமுதேதென்கயிலையெனு
நகத்தார்பணியுங்கயற்கணம்மேநின்னயநத்தினால்
மிகத்தான்கருநிறங்கொண்டமையாலவ்விளங்குதிரு
முகத்தாமரைக்கொருவண்டானதுமுத்துமூக்குத்தியோ.

இ-ள். செகத்தாய் எனவந்த தெள்ளமுதே-லோகமாதா என்று சொல்லவந்த தெளிவாகிய அமிர்தமே; தென்கயிலையென்னும் நகரத்தார்பணியும்-காளத்தி மலையிலுள்ளார் வணங்குகின்ற; கயல்கண் அம்மே-மீனாக்ஷியம்மையே; முத்துமூக்குத்தி-முத்து மூக்குத்தியானது; நின்நயநத்தினால்-உன்கண்ணொளியால்; மிகத்தான்கருநிறம் கொண்டமையால்-மிகவும் கருநிறத்தைத் தன்னிடத்திற் கொண்டிருத்தலால்; அவ்விளங்கு திருமுகத் தாமரைக்கு-அந்த விளங்குகின்ற திருமுகமாகிய தாமரைமலருக்கு ஒருவண்டு ஆனது-ஒருவண்டாயிற்று; எ-று.

இதுவுமது.

24. செகமதின்மிக்கமதுரையின்மாணிக்கஞ்செட்டியதாய்
மிகமதிரத்தினம்விற்றசொக்கேசரைமேவியன்பாச்
சுகமதிதந்தெனையாள்கயற்கண்ணிநின்சுந்தரமா
முகமதியீன்றகதிர்மணியோமுத்துமூக்குத்தியோ.

இ-ள். செகமதில் மிக்கமதுரையில் - உலகத்திற்சிறந்த மதுரைப்பட்டணத்தில், மாணிக்கஞ்செட்டியதாய் - மாணிக்கம் விற்கும் செட்டியாகி, மிகமதி-மிகவும் விலைமதித்தற்குரிய, ரத்திநம்விற்ற-மணிவிற்ற, சொக்கேசரை அன்பாய்மேவி-சொக்கநாதரை அன்பாகப்பொருந்தி, சுகமதிதந்து-நல்லபுத்தியைக்கொடுத்து, என்னை ஆள்கயல் கண்ணி-என்னை யாளுகின்ற மீனாக்ஷியம்மையே, முத்து மூக்குத்தி - முத்து மூக்குத்தியானது, நின்-உனது, சுந்தரம்-அழகாகிய, முகம்-முகமென்கிற, மாமதி ஈன்ற-பூர்ணசந்திரன்பெற்ற, கதிர்மணியோ-ஒளியுள்ளமுத்தோ. எ-று.

இதுவுமது.

25. பொன்னேமலயத்துசனாகியபுயலீன்றெடுத்த
மின்னேயுனதுவதனத்தையேவெண்மதியமெனத்
தன்னேயத்தாலொருதாரகையானதுதான்விரும்பி
முன்னேகிடந்தினம்பார்க்கின்றதோமுத்துமூக்குத்தியே

இ-ள். பொன்னே-சொர்னமே, மலயத்துசன் ஆகிய-மலயத்வஜனாகிய, புயல்-மேகமானது, ஈன்று எடுத்த-பெற்றெடுத்த, மின்னே-மின்கொடியே, முத்து மூக்குத்தி-முத்து மூக்குத்தியானது, உனது வதநத்தையே-உன் திருமுகத்தையே, வெள் மதியம்என-வெள்ளியசந்திரனென்றுகருதி, தன் நேயத்தால்-தன் விருப்பத்தால், ஒரு தாரகையானது - ஒரு நக்ஷத்ரமானது, தான் விரும்பி-தான் இச்சித்து, முன்னேகிடந்து இன்னம் பார்க்கின்றதோ-எதிரேகிடந்து இன்னம் பாராநின்றதோ. எ-று.

சொக்கநாதர் திருவடியை அடியார்கண்ட காலமிதுவெனப்பாடியது.

26. வடிகொண்டசெந்தமிழ்க்கூடலின்வாழ்சொக்கர்வந்திதரும்
பிடிகொண்டபிட்டுக்குமண்ணேசுமந்துபெருமகாக் [பால்
கொடிகொண்டவெற்றித்துரைப்பாண்டியன்கைக்கொடும்பிரம்
அடிகொண்டபோதிலடியாரவர்பொன்னடிகண்டதே.

இ-ள். வடிகொண்ட செந்தமிழ் - வடித்தலைக்கொண்ட செந்தமிழ்க்கிருப்பிடமாகிய, கூடலில்வாழ்சொக்கர் - மதுரையில்வாழ்கின்ற சொக்கநாதர் வந்திதரும்,(செம்மனச்செல்வியென்கிற) வந்தி தந்த, பிடிகொண்ட

பிட்டுக்கு-ஒருபிடியளவாகிய பிட்டின்பொருட்டு, மண்ணேசுமந்து - மண்ணைச் சுமந்து, பெருமகரக்கொடி கொண்ட-பெரியமீனக் கொடியைகொண்ட, வெற்றித்துரை-வெற்றிவேந்தனுகிய, பாண்டியன்கை-பாண்டியன் கையிலுள்ள, கொடுபிரம்பால்-கொடியதாகிய பிரம்பினுல், அடிகொண்டபோதில்-அடிபட்டபொழுதில், அடியார்-அன்பர், அவர்பொன் அடிகண்டது-அவரது பொன்னடியைக் காணப்பெற்றது. எ-று.

சொக்கநாதரைக் கண்டாலன்றிஎன்மனத்துன்பந்தீராதெனப்பாடியது.

27. அக்குவடம்புனையானந்தவெள்ளத்தையங்கயற்கண்
பக்கத்திருந்தபவளாசலத்தைப்பழம்பொருளை
முக்கட்கனியைக்கடம்பாடவிக்கண்முளைத்தெழுந்த
சொக்கைக்கண்டாலன்றித்தீராவென்னெஞ்சிற்றுயரங்களே.

இ-ள். அக்கு வடம்புனை - அக்குமாலையைத்தரித்த, ஆநந்தவெள்ளத்தை-இன்பக்கடலை, அம்கயல்கண்-அழகிய மீனுக்ஷியம்மையானவள், பக்கத்து இருந்த-தன்பாகத்தி லிருக்கப்பெற்ற, பவள அசலத்தை-பவளமலையை, பழம்பொருளை-அநாதிவஸ்துவை, முக்கண்கனியை - மூன்றுகண்களையுடைய பழத்தை, கடம்ப அடவிக்கண் முளைத்து எழுந்த-கடம்பவனத்தில் முளைத்தெழுந்த, சொக்கை-சொக்கேசரை, கண்டால் அன்றி-தரிசித்தாலல்லது, என் நெஞ்சில் துயரங்கள்-என்மனத்திலுள்ள துன்பங்கள், தீரா-ஒழியா. எ-று.

மீனுக்ஷியம்மை தம்மீதுவைத்த அன்பின்மிகுதியைக்குறித்துப்பாடியது.

28. பொன்போலுங்கூடற்பிராட்டியைச் சேவிக்கபோம்பொழுதில்
என்பால்வரவுமெதிர்நின்றுபேசவுமென்றலைமேல்
தன்பாதஞ்சூட்டவுங்கேட்டதெல்லாந்தந்தருளவுமே
அன்பாகவந்திடுவாள்கலிகாலமென்றஞ்சுவளே.

இ-ள். பொன்போலும்-பொன்போன்ற, கூடல்பிராட்டியை-மதுரை மீனுக்ஷியம்மையை, சேவிக்கப்போம்பொழுதில் - சேவிக்கப் போகும்போது, என்பால்வரவும்-என்னிடத்தில் வருதற்கும், எதிர்நின்று பேசவும்-எதிரேநின்று பேசுதற்கும் என்தலைமேல்-என் சிரசின்மீது, தன்பாதம் சூட்டவும் தன்திருவடியைச் சூட்டுதற்கும்; கேட்டது எல்லாம் - நான் கேட்டபொருள்களையெல்லாம், தந்தருளவும்-கொடுத்தருளுதற்கும், அன்பாகவந்திடுவாள்-அன்போடுவருவாள், கலிகாலம் என்று அஞ்சுவள் - கலிகாலமென்று அஞ்சாநின்ருள்.

யான் வினைக்கடலையெப்படிகடப்பேன் எனப்பாடியது.

29. உரையேனுன்பேரையுணரேனின்சீரையுனைக்கருதிக்
கரையேனெவ்வாறுகடப்பேன்வினையைக்கடந்தகுண
வரையேயருட்பெருவாரிதியேமதுராபுரிக்குத்
துரையேயழகியசொக்கேதமிழ்தந்தசுந்தரமே.

இ-ள். கடந்த குணவரையே - இயல்பாகவே பாசத்தை நீங்கிநின்ற குணமலையே, பெரு அருள்வாரிதியே - பெரிய அருட்கடலே, மதுராபுரிக்கு துரையே - மதுரைப்பட்டணத்துக்கு அரசே, அழகியசொக்கே-அழகிய சொக்கேசரே, தமிழ்தந்த சுந்தரமே-தமிழைக்கொடுத்தசோமசுந்தரக் கடவுளே, உன்பேரை உரையேன்-உன் திருநாமத்தைச் சொல்லேன், நின்சீரை உணரேன் - உன் மேன்மையை யறியேன், உன்னைக்கருதிக் கரையேன்-உன்னை நினைத்துருகேன், எவ்வாறு வினையைக் கடப்பேன்-எப்படி வினைகளைக் கடந்துய்யப்போகிறேன். எ-று.

மீனாட்சியம்மையை தரிசித்தவர் சொர்க்கலோகத்தை யடைவர்

எனப்பாடியது.

30. முக்கட்பராபரைசொக்கப்பிரானெனுமுன்னவனோ
டொக்கச்சிறந்தகயற்கண்ணிசந்நிதியுற்றுமிகச்
செக்கச்சிவந்தபொற்றாமரைப்பாததெரிசனைக்கே
பக்கத்தடுத்தவர்சொர்க்கத்தினையெட்டிப்பார்ப்பவரே.

இ-ள். முக்கண் பராபரை-மூன்று கண்களையுடைய பராபரை, சொக்கப்பிரான் என்னும் முன்னவனோடு ஒக்க - சொக்கநாதனென்கிற முதல்வனோடு சமமாக, சிறந்த-மேன்மை யடைந்திருக்கிற, கயல்கண்ணி-மீனாக்ஷியம்மை, (அவளது) சந்நிதி உற்று-சந்நிதியையடைந்து, மிகசெக்கச்சிவந்த மிகுதியாகச்செவந்த,பொன்தாமரை-பொற்றாமரை மலர்போன்ற,பாதம்-திருவடிகளின், தெரிசனைக்கு - சேவையின்பொருட்டு, பக்கத்து அடுத்தவர்-பக்கத்தில் அடுத்திருப்பவர், சொர்க்கத்தினை எட்டிப்பார்ப்பவர்-சொர்க்கலோகத்தை யெட்டிப்பார்ப்பவராவர். எ-று.

நட்டாற்றிற்கைவிடாதேயெனப் பாடியது.

31. மட்டார்குழலங்கயற்கணம்மேயிம்மட்டென்றுதொகைக்
கெட்டாதெனதுதுயரநின்பாற்சொல்லியேசலிக்க
ஒட்டாரநீசெய்யலாகாதுபாருன்னடிமைதன்னை
நட்டாற்றிற்கைவிட்டிடாதேபழிவெகுநாணிற்குமே.

இ-ள். மட்டு ஆர்குழல்-தேன்பொருந்திய கூந்தலையுடைய, அங்கயற்கண்ணம்மே-மீனாக்ஷியம்மே, எனது துயரம் - என்துன்பங்கள், இம்மட்டு என்று தொகைக்கு எட்டாது - இவ்வளவென்று தொகைப்படுத்துதற்கு எட்டாது, நின்பால்சொல்லி சலிக்க-உன்னிடத்துச் சொல்லிச் சலித்துக் கொள்ள, நீ ஒட்டாரம் செய்யலாகாது-நீ ஒட்டாரம் பண்ணத்தகாது,பார்-காண், உன் அடிமைதன்னை-உன்னடிமையாகிய என்னை, நடு ஆற்றில் கை

விட்டிடாதே-ஆற்றினடுவில் கைவிட்டுவிடாதே, (விடுவையாயின்) பழி வெகுநாள் நிற்கும்-பழியானது உன்னிடத்தில் வெகுநாள் நிலைபெற்றிருக்கும். எ-று.

சவுந்தரபாண்டியன் விஷயம்.

32. விரித்தான்சிகையைமகாமேருவாசுகிவில்லைவிட்டுச்
சிரித்தான்புரத்தையெரித்தான்பரகுருதேசிகன்முன்
உரித்தான்கரியையுடுத்தான்பகிரண்டத்துள்ளுலகும்
பரித்தான்மதுரைதரித்தான்சவுந்தரபாண்டியனே.

இ-ள். சவுந்தரபாண்டியன் - சவுந்தரபாண்டியனானவன், விரித்தான் சிகையை-சடையை விரித்தான், மகாமேருவாசுகி வில்லைவிட்டு - மகாமேருவாகிய வில்லையும் வாசுகியாகிய நாணையும்செலுத்தி. சிரித்தான்-சிரித்து புரத்தை எரித்தான் - முப்புரங்களையும் நீறுஆக்கினன், பரகுரு தேசிகன்-மேலாகிய குருநாதன், முன்கரியை உரித்தான் உடுத்தான்-முற்காலத்தில் யானையையுரித்து அதின் தோலையுடுத்தான்; பகிரண்டத்துள் உலகும்-பகிரண்டத்துள்ள உலகங்களையும், பரித்தான் - தாங்கினன், மதுரை தரித்தான்-மதுரையில் தங்கினன். எ-று.

மீனாக்ஷியம்மையின் சேவையால் சொர்க்கம் அடையலாம் எனப்பாடியது.

33 மைக்கார்குழற்பெண்வடிவாளைத்தென்னவன்மாமகளை
அக்காளையோன்பங்கிலாத்தாளைமாறங்கையானவளைத்
திக்கார்தொழுங்கயற்கண்ணளையோர்தினஞ்சேவைசெய்தால்
எக்காலமுமவர்சொர்க்காதிபோகத்திருப்பவரே.

இ-ள். மை - மேகம்போன்ற, கார் - கருநிறமுள்ள, குழல் கூந்தலையுடைய, பெண் வடிவாளை-பெண்ணுருக் கொண்டவளை, தென்னவன் மாமகளை-பாண்டியனது சிறந்தமகளை, அக்காளையோன்பங்கில் ஆத்தாளை-அந்த இடபவாகநனாகிய சிவபெருமான் பாகத்திலுள்ள உலகமாதாவை, மால் தங்கை ஆனவளை-திருமாலுக்குத் தங்கையானவளை, திக்கார்தொழும் கயல்கண்ணளை - திக்கிலுள்ளோர் வணங்குகின்ற மீனாக்ஷியம்மையை, ஓர்தினம் சேவைசெய்தால்-ஒருதினம் சேவித்தால், எக்காலமும் - எக்காலத்திலும், அவர்-அவர், சொர்க்காதிபோகத்து இருப்பவர்-சொர்க்கமுதலாகிய போகபூமிகளில் இருப்பவராவர். எ-று.

மீனாக்ஷியம்மையை வணங்கின செருக்காற்பாடியது.

34. வண்டிட்டகூந்தலும்வாரிட்டகொங்கைகரைகளுங்கற்
கண்டிட்டசொல்லுங்கயற்கண்ணிபாதத்தைக்கைதொழுதேன்
தண்டிட்டடிக்குமறலிவந்தாற்சன்னையிட்டுகைத்
துண்டிட்டுவாசிறுபிள்ளாயென்றாருக்கனுப்புவனே.

இ-ள். வண்டுஇட்ட கூந்தலும்-வண்டுகள்மொய்த்த கூந்தலையும்,வார் இட்ட கொங்கைவரைகளும்-கச்சணிந்த தனங்களாகிய மலைகளையும், கற்கண்டு இட்டசொல்லும்-கற்கண்டுபோன்ற சொல்லையுமுடைய, கயற்கண்ணிபாதத்தை-மீனாக்ஷியம்மையின் திருவடியை, கைதொழுதேன்-கைகூப்பி வணங்கினேன், தண்டு இட்டு அடிக்கும் மறலிவந்தால்-தண்டாயுதத்தைக் கொண்டு அடிக்கின்ற யமன்வந்தால், சன்னையிட்டு நகைத்து-சாடைசெய்து சிரித்து, சிறுபிள்ளாய்-சிறுபிள்ளையே, உண்டிட்டுவா என்று-உண்டுவாவென்று, ஊருக்கு அனுப்புவன்-ஊருக்கு அனுப்புவேன், எ-று.

மீனாக்ஷியம்மையைத் துதித்துப்பாடியது.

35 பொன்னேபொருந்தற்புதமேபொலிந்தமென் பூந்திருவே
தென்னேசிறந்தசெந்தேனேதிருந்தருட்சின்மயமே
அன்னேயமுதேயருளேயமரார்க்கரும்பொருளே
மின்னேவியன்சுடரேமதுராபுரிமீனம்மையே.

இ-ள். பொன்னே-சொர்னமே, பொருந்து அற்புதமே - பொருந்திய ஆச்சரியரூபமே, பொலிந்தமெல்பூந்திருவே-பொலிவுபெற்ற மெல்லியதாமரைமலரில்வீற்றிருக்கின்ற திருமகளே, தென்னே சிறந்தசெந்தேனே-அழகினனே சிறந்தசெந்தேனே, திருந்து அருள்சின்மயமே-திருத்தமாகியஅருளையுடைய ஞானவுருவே, அன்னே-தாயே,அமுதே-அமிர்தமே அருளே-அருளுருவமே, அமரார்க்கு அருபொருளே - தேவர்களுக்கும் அருமையாகிய பொருளே, மின்னே-மின்கொடியே, வியன்சுடரே-பெருஞ்சுடரே, மதுராபுரி-மதுராபுரியி லெழுந்தருளிய, மீனம்மையே-மீனாக்ஷியம்மையே எ-று.

மீனாக்ஷியம்மை விஷயம்.

36 தேட்டேதுமில்லைகொடுப்பாருமில்லைதிரத்துழவில்
பூட்டேருமில்லையிதெல்லாமெம்பாலிலைபூர்ணவரங்
கேட்டேனதற்குப்பிறிதில்லையேயினிக்கேட்கவுநான்
மாட்டேனுன்மேற்பழிபோட்டேன்மதுரைமனோன்மணியே.

இ-ள். தேட்டு ஏதும் இல்லை-தேடினபொருள் சிறிதுமில்லை, கொடுப்பாரும் இல்லை-கொடுப்பவரும்இல்லை, திரத்த உழவில்பூட்டு ஏரும் இல்லை-உறுதியாகிய உழுதொழிலில் பூட்டுதற்குரிய ஏரும் இல்லை, இது எல்லாம் எம்பால் இல்லை-இவைகளெல்லாம் எம்மிடத்தில் இல்லை, பூர்ணவரம்கேட்டேன்-முழுவரம்கேட்டேன், அதற்குபிறிது இல்லையே-அதற்கும் மறுமொழியில்லையே; நான் இனி கேட்கவும்மாட்டேன்-நான் இனி கேட்கவுமாட்டேன், உன்மேல் பழிபோட்டேன்-உன்மேல் நிந்தையைச் சுமத்தினேன், மதுரை மனோன்மணியே, எ-று.

இதுவுமது.

37. உள்ளக்கவலையெலாம்விள்ளும்போதுமுனதுமனம்
எள்ளத்தனையிரங்காதிருந்தாயெளியேனினிமேல்
தள்ளப்புறத்தினிலென்றாலும்போவதுதானிலைப்பொன்
வள்ளத்தமுதுண்ணுங்கிள்ளாய்கடம்பவனவல்லியே.

இ-ள். பொன்வள்ளத்து-பொற்கிண்ணத்திலுள்ள, அமுதஉண்ணும்-அமிர்தத்தை யுண்ணுகின்ற, கிள்ளாய்-கிளியே, கடம்பவன வல்லியே-கடம்பவனத்திலுள்ள கொடிபோல்வாளே, உள்ளக்கவலையெல்லாம் விள்ளும் போதும்-மனத்துன்பத்தையெல்லாம் சொல்லும்போதும், உனது மனம்-உன்மனமானது, எள் அத்தனை இரங்காது இருந்தாய் - எள்ளளவாயினும் இரங்காதிருந்தனை, எளியேன்-எளியேன், அப்புறத்தினில் தள்என்றாலும்-அப்புறத்தில் தள்ளென்று நிராகரித்தாலும், இனிமேல்போவதுதான் இல்லை-இனிப்போவதோ இல்லை, எ-று.

இதுவுமது.

38 எப்படியெப்படிச்சொன்னாலுநானிரங்கேனெனவே
அப்படியப்படிநீயிருக்கின்றவதிசயத்தை
இப்படியிப்படியென்றுகிலுமெனக்கேதெரியச்
செப்படிசெப்படியம்மாமதுரைச்சிவாநந்தியே

இ-ள். மதுரைச்சிவாநந்தியே-மதுரையிலெழுந்தருளியசிவாநந்தியே, எப்படியெப்படி சொன்னாலும்-எவ்வெவ்விதமாய்ச் சொல்லினும்நான்இரங்கேன் என-நானிரங்கமாட்டேனென்று, அப்படியப்படி நீயிருக்கின்ற அதிசயத்தை-பராமுகமாய்நீயிருக்கிறஅதிசயத்தை, இப்படியிப்படியென்றுஆகிலும்-இப்படியிப்படியென்று விவரித்தாயினும்; எனக்குத்தெரியச்செப்படி செப்படிஅம்மா-எனக்குத் தெரியும்படி சொல்லடிசொல்லடி அம்மா,எ-று.

இதுவுமது.

39. செப்பத்திலுன்னைத்தொழவாயிரங்கண்ணுஞ் செல்லும்பொல்
தப்பத்தவறத்தொழுதாலுஞ்சொக்கர் தடம்புயத்துக் [லேன்
நொப்பத்திரண்டகொங்காயுன்னவயவமொன்றுக்கொன்று
முப்பத்திரண்டுகண் வேண்டுங்கண்டாயென்முகத்தினுக்கே.

இ-ள். சொக்கர் தடம்புயத்துக்குஒப்ப-சொக்கநாதரது பெரியதோள்களுக்கேற்க,திரண்டகொங்காய்-திரண்டிருக்கிற தனங்களையுடையவளே செப்பத்தில் உன்னைத்தொழ-செப்பமாக உன்னைச் சேவிக்க,ஆயிரம்கண்ணும் செல்லும்-ஆயிரங்கண்ணிருந்தாலும் செல்லும், பொல்லேன் - தீயே

ன், தப்பத்தவறத் தொழுதாலும்-தப்பத்தவற வணங்கினாலும், உன் அவயவம் ஒன்றுக்கு ஒன்று ஆ-உன் அவயவம் ஒன்றுக்கு ஒருகண்விழுக்காடு, என்முகத்தினுக்கு—, முப்பத்திரண்டு கண்வேண்டும்-முப்பத்திரண்டுகண்கள் அமைந்திருக்கவேண்டும். எ-று.

சொக்கநாதர் துதி.

40. துடியார் கரத்து மதுரேசரே யும்மைத் துள்ளிமீசேற்
கொடியானடித்தது குற்றமன் றேகிழக் கோதையிவள்
அடியாளென் றேசுட்ட பிட்டையெல் லாமள்ளி யள்ளித்தின்று
வடியாத நீரிற் கரைத்துவிட் டீரவள் வல்வினையே.

இ-ள். துடி ஆர் கரத்து மதுரேசரே - உடுக்கைபொருந்திய கையையுடைய மதுரேசரே, உம்மை-உம்மை, துள்ளியமீசேல்கொடியான் அடித்ததும்-துள்ளிய மீனக்கொடியை யுடையவனாகிய பாண்டியன் அடித்ததும், குற்றம் அன்றே-குற்றமல்லவா, கிழக்கோதை இவள் அடியாள் என்றே-கிழப்பெண்ணாகிய இவள் நமது அடியவளென்று நினைத்தே, சுட்டபிட்டை யெல்லாம் அள்ளியள்ளித்தின்று-அவள் சுட்ட பிட்டையெல்லாம்வாரி வாரியுண்டு, அவள் வல்வினை - அவளது வலியவினைகளை, வடியாத நீரிற் கரைத்துவிட்டீர் - வடியாத வைகையாகிய நீரில் கரைத்துவிட்டீர். எ-று.

சிவகாமசவுந்தரி துதி.

41. கரஞ்சொன்னங் கண்டதெந் நாளோ தொடுத்தகலிக் கெவர்கள்
உரஞ்சொன்ன தோவந் திருந்ததிவ் வாயி லுதவுனக்கே
பரஞ்சொன் னேனின்னம் பராமுக மேதிது பத்துலட்சம்
தரஞ்சொன்ன தாவெண்ணு வாய்சிவ காமசவுந்தரியே.

இ-ள். சிவகாமசவுந்தரியே - சிவகாமசுந்தரியம்மையே, கரம்சொன்னம் கண்டது எந்நாளோ - கையானது பொன்னைக்கண்டது எந்தநாளிலோ, தொடுத்தகலிக்கு - பற்றியவறுமைக்கு, எவர்கள் உரம்சொன்னதோ-யாவர் உறுதி சொன்னதோ, இவ்வாயில் வந்து இருந்தது - இவ்வாயிலில் வந்து தங்கிற்று, உதவு - உதவிசெய்யவேண்டும், உனக்கே பரம்-உனக்கேபாரம், சொன்னேன் - சொல்லிவிட்டேன், இன்னம்பராமுகம் ஏது-இன்னம் பராமுகமென்ன, இது-இதையே, பத்துலக்ஷம்தரம் சொன்னதாய் எண்ணுவாய் - பத்துலக்ஷம்தரம் சொன்னதாகத் திருவுளம்பற்றுவாயாக. எ-று.

போஜனைநோக்கிச் கூறியது.

42. ஒருபாதிமால்கொள மற்றொருபாதியுமையவள்கொண்
டிருபாதியாலுமிறந்தான் புராரியிருந்திடமோ

பெருவாரிதியிற்பிறைவானிற்சர்ப்பம்பிலத்திற்
தருவானபோஜகொடையுன்கையோடென்கைதந்தனனே.

இ-ள். ஒருபாதி மால்கொள - ஒருபாதியைத் திருமால்கொள்ள, மற்றொருபாதி உமையவள் கொண்டு-மற்றொருபாதியை உமாதேவியார் கொள்ள, இருபாதியாலும்-இரண்டுபாதியையும் தந்ததனால், புராரி இறந்தான்-சிவபெருமான் இறந்துபோயினன், (ஆயினும்) இருந்த கங்காநதியையோ, பெருவாரிதியில் தந்தனன்-பெரிய சமுத்திரத்திலும், பிறைவானில் தந்தனன்-பிறையை ஆகாயத்தில்விடுத்தான், சர்ப்பம் பிலத்தில் தந்தனன் - பாம்புகளை புற்றில்விடுத்தான், கற்பதரு ஆனபோஜ கொடை உன்கைதந்தனன் - கற்பகமரம்போன்ற போஜராஜனே கொடைமையை உனகையிற் கொடுத்தான், ஓடு என்கைதந்தனன் ஓட்டை என் கையிற்கொடுத்தான். எ-று.

பிலம்-பாதாளம் எனினுமாம்.

தலைவிகூற்று-பாலனைப்பழித்தல்.

43 அரும்பாலகாமுனம்பூமணஞ்சொற்பொருளாகமுயிர்
கரும்பாஞ்சுவையெள்ளுமெண்ணையும்போலொத்த[illegible]
பெரும்பாலினல்லன்னங்கங்காசலத்தைப்பிரிப்ப[illegible]
சுரும்பாம்புலவர்யமனலசெக்கெனத்தோன்றினை[illegible].

இ-ள். அருபாலகா-அருமையாகிய பாலகனே, முன்னம் - முன்னே பூமணம்போல்-பூவும்மணமும் போலவும், சொல்பொருள்போல்-சொல்லும்பொருள்போலவும், ஆகம் உயிர்-உடலும்உயிரும்போலவும், கரும்புசுவைபோல்-கரும்பும் சுவையும்போலவும், எள்ளும் எண்ணெயும்போல-எள்ளும் மெண்ணெயும்போலவும், ஒத்த-என்னோடு ஒற்றுமைப்பட்டிருந்த, [illegible] ரை-பிராணநாயகரை, நல் அன்னம்-அழகிய அன்னப்பறவையானது, பெரும்பாலில்-மிகுதியாகிய பாலினின்றும், கங்காசலத்தை-கங்கைநீரை, [illegible] பதுபோல்-பிரித்தல்போல, சுரும்பு என - வண்டுபோலவும், ஆம்பு[illegible] என-நல்லபுலவர்போலவும், யமன் என-யமன்போலவும், [illegible] போலவும்,செக்கு என-செக்குப்போலவும், தோன்றினை-பிறந்தாய். [illegible]

இதுவுமது.

44 அரும்பாக்கியகொங்கைபாலாக்கியுமுங்களப்பனெஞ்[illegible]
இரும்பாக்கியென்னெஞ்சைப்பித்தனையாக்கியவ்வேக்[illegible]
சுரும்பாக்கியென்னையும்வேம்பாக்கிவ்வண்ணங்கண்டனே[illegible]
பெரும்பாக்கியமல்லவோமகனேயுனைப்பெற்றதுவே.

இ-ள். அரும்பு ஆக்கியகொங்கைபால் ஆக்கியும்-தாமரையரும்புபோன்ற தனங்களைப் பாலாக்கியும், உங்கள் அப்பன்நெஞ்சை உங்கள் [illegible]

அதிலே ஓர் வ் துவணும் - அதில் ஒரு துளிரும் இனும், பேசும் என்
பட்-து இல்லை - சொல்லப்பட்ட என்மீது பட்டுதில் , (எனெ
, என்வறுமை ன் தரித்திரமானது, பாரக்குடை ஆகி - பெரியகு
ாகி, முட்டக்கவித்திடுதல, முழுதும் மறைத்து விடுதலானேயாம்,

நாலை ண் புதைத்தல்.

காலையரவிந்தங்கழுநீருடல்கலந்தால்
மாலையரவிந்த மயக்காதோ—பாலைப்
பழிக்கின்றமென்மொழியீர்பாண்டியனூரை
அழிக்கின்றதென்னோவது.

ள். காலை அரவிந்தம்-உதயகாலத்துத் தாமரை-கழுநீருடன் கலந்
ளமலரோடுகூடினல், மாலை அரவிந்தம்-மாலைக்காலத்துத் தாம
க்காதோ-என்னை மயங்கப்பண்ணுதோ, பாலைப்பழிக்கின்ற - பா
வனப் பரிகசிக்கின்ற, மெல் மொழியீர் - மெல்லிய வசனத்தையு
கமீர, பாண்டியனூர் ஊரை - பாண்டியனுருடைய ஊராகிய மது
அது அழிக்கின்றது-அது கெடுக்கின்றது, என்னோ - இது என்ன
மா. எ-று.

ல-கூடல், இது புணர்ச்சியென்னும் பொருளதரும். வேலைப்ப
மென்முலையீர் என்றும்பாடம்.

விந்தம் கையையும், மாலை யரவிந்தம் தனத்தையும், கழுநீர்
ரித்தன: இந்தத்துறையை இடையூறுகிளத்தல் எனவும்

முற்றிற்று.